# புறப்பாடு - ஜெயமோகன்

## புறப்பாடு 1: 1 – சூழிருள்

எண்பத்திரண்டில் அப்பாவுடன் சண்டைபோட்டுவிட்டு நாகர்கோயில் வந்தேன். சண்டை என்றால் நேருக்குநேர் அல்ல. என்னைப்பற்றி அவர் சொன்ன ஒரு சொல் அவமதிப்பாக எனக்குத் தோன்றியது. 'இவனை புத்தகங்களுடன் சேர்த்து எரிக்கவேண்டும்' என்று சொன்னால் எப்படித் தாங்கிக்கொள்வது?

என் உடைகளை ஒரு துணிப்பையில் செருகிக் கொண்டு சென்று ஒரு புதருக்குள் வைத்தேன். வழக்கம்போல கல்லூரிக்குக் கிளம்பினேன். அம்மாவிடம் போய்விட்டு வருகிறேன் என்று சொன்னபோது என் கண்கள் கலங்கி தொண்டை அடைத்தது. வீடுதிரும்பாமலிருக்கும்போதுதான் அப்பா என் கோபத்தை உணரப்போகிறார். அந்த கணத்தை நூற்றுக்கணக்கான முறை கற்பனையில் ஓட்டிக்கொண்டேன். அது எங்கெங்கோ எரியும் தசைப்பரப்புகளில் தைலமாக குளிர்ந்து பரவியது. கல்லூரிக்குச் செல்லும்வழியில் பையை எடுத்துக்கொண்டேன். நடக்கும்போது வைராக்கியமாக கால்களை வலுவாக வைத்தேன். வேட்டியை இறுக்கமாகச் சுழற்றி மடித்துக்கட்டிக்கொண்டேன். இதோ வருகிறேன் உலகமே!

ஆனால் பகல் முழுக்க நகர்மன்ற நூலகத்திலும் மரத்தடிகளிலும் அமர்ந்திருந்து மதியம் கட்டுச்சோற்றை தேங்காய்த்துவையலுடன் கலந்து தின்று மாலையானபோது திகில் கவ்வியது எங்கே செல்வது? கையில் பணமில்லை. சாயங்கால உணவுக்கு வழியில்லை. எங்கே இரவு தூங்குவது? தெரிந்த எவரும் நகரில் இல்லை. என் பெரியம்மா மகள் நாகர்கோயிலில் இருந்தாள். ஆனால் அன்று எனக்கு அவளை அறிமுகம் இல்லை.

பூங்காவையே சுற்றிச்சுற்றிவந்தேன். குழாய்த்தண்ணீரைக் குடித்தேன். சினிமா சுவரொட்டிகளைப்பார்த்தேன். சட்டென்று வீட்டையோ ஊரையோ நினைத்துக்கொண்டு மனம் உருகிக் கண்ணீர் உகுத்தேன். பின்னர் வைராக்கியத்துடன் மனதை இறுக்கிக் கொண்டேன். மாலையானதும் பசி குடலை அமைதியிழக்கச் செய்தது. அது உறுமி நெளிந்தது. தண்ணீர் அவ்வளவு குமட்டலை உருவாக்குமென அப்போதுதான் அறிந்தேன்.

மாலை எட்டுமணிக்கு பூங்காவை மூடிவிடுவார்கள். அதன்பின் எங்கும் என்னால் தூங்கமுடியாது. நானறிந்த ஒரே இடம் பூங்காதான். சட்டென்று அடர்ந்த புதருக்குள் ஒளிந்துகொண்டேன். எட்டுமணிக்கு காவலர் விசில் அடித்து அங்கிருந்தவர்களை வெளியே செல்லும்படிச் சொன்னார். தொளதொளவென்று காக்கிச்சீருடை அணிந்த மெலிந்த கிழவர். விசில் பல இடங்களில் ஒலித்தது. என் அருகே நின்றுகூட அவர் விசில் ஒலி எழுப்பினார்.

சற்றுநேரத்தில் பூங்காவிளக்குகள் அணைந்தன. வெளியே இரும்புக்கதவு இழுத்துச்சாத்தப்படும் கிரீச் ஓலம். கிழவரின் இருமல். மேலும் சற்றுநேரம் மூச்சடக்கி அமர்ந்திருந்தேன். பின்பு நூலகத்தின் பின்பக்க வராந்தாவுக்குச் சென்றேன். மன்னர்காலகட்டத்து கட்டிடம். நான்கு பக்கமும் வராந்தாக்கள் உண்டு. பின்பக்க வராந்தாவின் ஓட்டுத்திண்ணையில் யாரும்காணாமல் தூங்கமுடியும் என நினைத்தேன்.

ஆனால் மூங்கில்தட்டிவைத்து மறைக்கப்பட்ட வராந்தாவின் கதவு திறந்திருப்பதைக் கண்டேன். தள்ளிப்பார்த்தேன். திறந்துதான் இருந்தது. உள்ளே சென்றேன். தூசுபடிந்த நீண்ட வராந்தா. காகித அட்டைகள் சிதறிக்கிடந்தன. ஒருவகை மருந்துவாசனை. வராந்தாவின் ஓரத்துக்குச் சென்றேன். அங்கே உடைசல் பொருட்கள் குவிக்கப்பட்டிருந்தன. அவற்றுக்கு அப்பால் ஓர் இடமிருந்தது. அந்த வராந்தாவுக்குள் காவலர் வந்து பார்த்தால்கூட விளக்கைப்போடாமல் என்னைக் கண்டுபிடிக்கமுடியாது.

அட்டைகளை எடுத்துப்போட்டுப் படுத்துக்கொண்டேன். நினைத்ததைவிட கொசு அதிகம். என் முகத்தையே அவை சுற்றிச்சுற்றி வந்து ரீங்காரமிட்டன. வெளியே படுத்திருந்தால் கொசுக்கடி தாளமுடியாமல் பூங்காவை விட்டு ஓடியிருப்பேன். பெருமூச்சுகளாக வந்தது. இந்த உலகில் ஓர் அனாதை என்று நினைத்துக்கொண்டேன். ஒரு வைக்கம் முகமது பஷீர் அல்லது சுவாமி விவேகானந்தர் என்பதில் எனக்கு ஐயமில்லை. ஆனால் அப்படி ஆவதற்குள் செத்துப்போய்விடுவேன் என்று தோன்றியது.

நான் செத்துப்போனால் ஒவ்வொருவரும் எப்படி எப்படி அழுவார்கள் என்று நினைத்துக்கொண்டேன். எனக்கே துக்கம் தாளாமல் கண்ணீர்வந்தது. தொண்டை கரகரவென்று இருந்தது. உப்பில்லாமல் விளாங்காய் சாப்பிட்டதைப்போல. ஆனால் என் உள்ளூர அது ஒன்றும் பெரிய விஷயமல்ல என்றும் தெரிந்திருந்தது. ஆகவே துக்கத்தைப் பெருக்க கற்பனைகளை ஊதிவிட்டுக்கொண்டே இருந்தேன்.

யாரோ வரும் ஒலி. ஒரு பெண்குரல். கூடவே ஒரு ஆண். ஆண் மெல்லியபோதையில் பேசிக்கொண்டிருந்தான். 'எனக்க கிட்ட பேசுதியா? ஆருகிட்ட? இல்ல கேக்கேன்-ஏல ஆருலா நீயி?'

அவள் உள்ளே வந்து 'வாரும்வே' என்றாள்.

அவன் உள்ளே வந்ததும் ஏப்பம் விட்டான். 'இது என்ன எடம் குட்டி?'

'சர்க்காரு எடமாக்கும்-ஆரும் வரமாட்டினும்-ரூவாய எடும்வே-'

'ரூவாயா? அத அந்த நொண்டிக்க கையில குடுத்தேம்லா?'

'அத பள்ளியில சென்னு சொல்லும்..பைதாவ எடுத்திட்டு முந்திய அவுரும்..''

''ஏட்டி உள்ளது..இந்தா இப்பம்தாலா குடுத்தேன்..அவன விளிச்சு கேளு..கண்ணாண ரூவா அஞ்சாக்கும் எண்ணிக்குடுத்தேன்'

'அப்ப, அவனுக்க கிட்ட போ ..எந்திரிலே தாயளி..கைய வச்சேண்ணாக்க தாக்கோல்கொத்த அரிஞ்சு கையில தந்துபோடுவேன்'

'இதென்ன அக்குரும்பா கெடக்குவு..என்ன வேணும் சொல்லு'

'அஞ்சு ரூவா எடும்'

'அப்பம் பத்து ரூவாயா? உனக்க சூத்தும் மூஞ்சியும் ஒண்ணு மாதிரில்லாட்டி இருக்கு'

'அஞ்சுரூவாய எடும்வே..'

'பைசா இல்ல'

'பின்ன?'

'நான் போறேன்'

அவள் உரக்க 'எங்கிணலே போற நாறக்கூதறப்பயலே? சோலிய முடிச்சுட்டு பைசா இல்லேண்ணா சொல்லுகே? ஏல நில்லுலே..லே'

அவன் சட்டென்று குரலைத்தாழ்த்தி 'ஏட்டி சத்தம்போடாத..நான் கௌரவக்காரனாக்கும்..முந்தியவிடு..முந்தியவிடு சொல்லுதேன்'

'அஞ்சுருவாய வச்சுட்டுப்போலே..தூக்கிட்டு வந்தேல்லா? ஏலே வையிலே பைசாவ'

'குடுக்கேன்..நீ பிடியவிடு'

'பைசாவ எடுலே..அந்தக்களி இஞ்ச வேண்டாம் கேட்டியா?'

'குடுக்கேன்..இந்தா..உனக்கக் கட்டப்பணம். போருமா? சாவு, போ..'

அவள் பிடியை விட்டிருக்கவேண்டும். அவன் வேட்டியை கட்டிக்கொள்ளும் சத்தம்.

'நாறத்தேவிடியாண்ணு சொல்லுகது செரியாத்தான் இருக்கு'

'மோந்துட்டுல்லா வந்தீரு?'

'சீ மாறுடீ தேவ்டியா'

'எனக்கு உம்ம ஓசி ஒண்ணும் வேண்டாம்..இருந்துட்டு போவும்'

'போடி'

'இல்லவே..உள்ளத்தச்சொல்லுதேன்..வந்திட்டீருல்லா?'

'அதிப்பம்..'

'இரும்வே..ஒண்ணும் பயராதியும்..'

'வல்லவனும் கண்டா..நான் குடும்பக்காரனாக்கும்'

'இஞ்ச ஆரும் வரமாட்டினும். வாரும்'

அசையாமல் படுத்திருந்தேன். பெருமூச்சுகள், அசைவுகளின் ஒலிகள். ஆனால் அதிகபட்சம் மூன்று நிமிடம்கூட ஆகியிருக்காது. அவன் எழுந்து அமர்ந்து பீடி பற்றவைத்துக்கொண்டான். அவள் ஆடையை அணிந்துகொள்ளும் ஓசை. எனக்கு அது புத்தகத்தைப்புரட்டும் ஒலிபோலக் கேட்டது.

'பீடி இருக்காவே?'

'இருக்கு'

அவளும் ஒரு பீடி பற்றவைத்துக்கொண்டாள். சிறு குருவி போல தீக்குச்சிச்சீறல். பீடிவாசனை.

'என்ன செய்தீரு?'

'நமக்கு தேங்கா ஏவாரமாக்கும்-சந்தையில போட்டுட்டு போற வளி-''

'வண்டி காலத்தயா?'

'ஓகாலத்த அஞ்சரமணிக்கு-நெடுமங்காடுபோற வண்டி-பஸ்ஸ்டாண்டிலே கெடக்கும்பளாக்கும் நொண்டி வந்து கேட்டான்'

'தேங்கா வேங்கி விப்பீரோ?'

'என்ன வேவாரம்? செத்தவேவாரம்- அந்தால தேங்கா வேங்கி தொலிச்சு தலைச்சுமையாட்டு கொண்டுவந்து இங்க வித்தா சுமட்டுக்கு நாப்பதுருவா நிக்கும். அது வச்சு கஞ்சியும் பற்றுமாட்டு குடும்பம் போவுது-பைசாவ அம்புரோஸுக்க சாயக்கடையிலே குடுக்கியது. போறப்பம் வேங்கிக்கிடுயது. கள்ளப்பயக்க சல்லியம் உள்ளதாக்கும்லா?'

'நீரு அண்டாயரிலே ரூவாய தைச்சு வச்சிருக்கத பாத்தேன்-'

'குட்டி, நீ- கண்ணாண-சத்தியமா-எனக்க ஜீவிதமாக்கும்!'

'சும்மா கெடயும்வே- உம்மபைசா எனக்கு என்னத்துக்கு? நீரு பிள்ளக்குட்டிக்காரன்லா?'

'உனக்க ஆளுக அறிஞ்சா என்னய கொண்ணு போட்டிருவானுக'

'நான் இருக்கும்பம் கைய வச்சிருவானுகளா? பயராதியும்'

'உனக்கு பிள்ளிய இருக்காட்டி?'

'கெடக்கு-ரெண்டு பொட்டைக-மூத்தது எட்டாம்கிளாஸு படிக்குது. சின்னவ நாலு'

'கெட்டினவன் உண்டா?'

'கெட்டினவன்னு ஆருமில்ல-இப்பம் இந்த நொண்டிய வச்சிருக்கேன்-ஆளுண்ணு ஒருத்தன் வேணும்லா?'

'உள்ளதாக்கும். எனக்க மவன் இந்த வரியம் பத்து எளுதுகான்-குட்டி ஓம்பது-நிண்ண நிப்பில வளந்துபோச்சு-கெட்டினவளுக்கு எப்பளும் தீனமாக்கும்-நடுவு தளந்துபோட்டா-ஆனா நல்லவளாக்கும். அவ வளக்குத ஆடும் கோளியும் உள்ளதுகொண்டு வீடு பட்டிணியில்லாம நிண்ணுபோவுது'

'எல்லா எடத்திலயும் கத ஒண்ணுதாலா?'

'குட்டிகளுக்கு வல்லதும் உருட்டி வச்சிருக்குதியா?'

'இருவத்தஞ்சுபவுனு இருக்கு-பேங்கில அடமானம் வச்சிருக்கேன்-வீட்டில வச்சிருந்தா நொண்டி எடுத்துப்போடுவான்-'

வெளியே ஒருவன் 'ஆச்சா?' என்றான்.

அவள் ' இந்தா' என்றாள்.

'அப்பம் நான் வாறேன்-'

'செரி-மறுக்கா வாறப்ப வாரும்'

'பாப்பம்' என்றபின் அவன் வெளியே சென்றான். அவள் பீடிக்கறையை காறித்துப்பியபின் வெளியே சென்றாள். இருட்டுக்கு அப்பால் ஓசைகள் கரைந்து கரைந்து மறைந்தன.

---

புறப்பாடு 1: 2 – அனலெரி

தாழ்த்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினருக்கான இலவசவிடுதி காவல்கண்காணிப்பாளர் அலுவலகம் அருகே இருந்தது. மஞ்சள்நிறமான அரசுக்கட்டிடம். மழைக்கறைபடிந்தது. ஒரு பழைய தபாலட்டை என்ற எண்ணம் அதை நினைக்குபோதெல்லாம் வரும். பிரியமான எதுவோ எழுதப்பட்டது. அது பழைமையாகும்தோறும், மூலைமடிந்து கிழியும்தோறும் இன்னும் பிரியமானதாக ஆகிறது.

அதன் அறைகள் அன்றைய கணக்குக்கு அகலமானவை. அறைக்கு இரண்டு இரும்புக்கட்டில்கள். ஒருகாலத்திய ராணுவநீலநிறம் துருப்பிடித்து மறைந்துபோனவை. சன்னல்களுக்கு கட்டளைகள் கிடையாது இரும்புச்சட்டங்கள்தான். அவை சுவரில் துருவேறி ஒட்டியிருக்க கதவுகள் கீல் கழன்று தொங்கி நிற்கும். பலர் அவற்றைச் சேர்த்து கட்டிவைத்திருப்பார்கள். பல சன்னல்களுக்கு கதவுகள் இல்லை. புத்தகங்கள் வைக்க அடுக்குப்பலகையாக பிறரால் பேர்த்து கொண்டுசெல்லப்பட்டிருக்கும். அந்த அறைவாசிகள் பழைய கைலிகளை சன்னல்திரையாக தொங்கவிட்டிருப்பார்கள்.

அறைகளுக்குள் சுவரில் கடப்பைக்கல் பதிக்கப்பட்டு உருவாக்கப்பட்ட அலமாரகளில் பெரிய 'எவர்சில்வர்' தட்டுகள், டம்ளர்கள், பழுப்புத்தாளாலோ சோவியத்நாடு இதழின் காகிதத்தாலோ அட்டைபோடப்பட்ட, நுனிசுருண்டு எழுந்த புத்தகங்கள். அறைமூலையில் கசிந்து சில்லிட்டிருக்கும் சிவந்த குடிநீர்ப்பானை மீது அறையை சுருட்டி நீளமான துளியாக்கி பிரதிபலித்துக்கொண்டிருக்கும் டம்ப்ளர்.

சுவர் முழுக்க விதவிதமான கறைகள். மாடியிலிருந்து வந்த மழைநீர் ஊறலில் பூசணம் படிந்து உருவாகும் கறை வளையம்வளையமாக அலங்காரத் திரைச்சீலை போலிருக்கும். மைக்கறைகள். சாப்பாட்டுக்கறைகள். மூக்குசிந்திய கறைகள். அந்தக்கறைகள் நடுவே ' உன்னைக் கைவிடுவதில்லை' என்று சொல்லும் ஏசுவும் 'யாமிருக்கப்பயமேன்' என்று கையருளும் செந்தூர் முருகனும்.

அறையுடன் கழிப்பறை இணைப்பு கிடையாது. பொதுக்கழிப்பறைகள் அறைவரிசைக்கு இரு எல்லைகளிலும் பக்கத்துக்கு இரண்டாக இருந்தன. அங்கே குழாயில் தண்ணீர் வராது. கீழே ஒரு சிமிட்டித்தொட்டியில்தான் தண்ணீர் நகராட்சிக்குழாய் வழியாக வந்து தேங்கும். அங்கே மொண்டு துணி துவைக்கும் தண்ணீரை திரும்ப இன்னொரு தொட்டியில் ஊற்றிவிடவேண்டும். அதை அள்ளிக்கொண்டுவந்து கழிப்பறைக்குப்பயன்படுத்தவேண்டும். ஒருவருக்கு ஒரு வாளித்தண்ணீருக்குமேல் எப்போதும் அனுமதிகிடையாது. ஞாயிற்றுக்கிழமை மட்டுமே துணிதுவைக்க அனுமதி.

அறைக்கு இருவர் தங்கலாம். ஆனால் எல்லா அறையிலும் நான்குபேருக்குக் குறையாமல் தங்கியிருந்தார்கள். அதிகாரபூர்வமாகத் தங்கியிருப்பவர்களின் உறவுப்பையன்கள்தான் அதிகமும். நாகர்கோயிலில் விதவிதமான பட்டறைகளில் வேலைசெய்பவர்கள், கடைகளில் எடுபிடிகளாக இருப்பவர்கள்.ஏராளமான 'முற்படுத்தப்பட்ட' பரமஏழைகள் கல்லூரியில் அறிமுகமான நண்பர்களின் கருணையால் அங்கே ஒண்டிக்கொண்டிருந்தார்கள். அதிகமும் தடிக்காரன்கோணம் போன்ற மலைப்பகுதியில் குடியேறியவர்களின் பிள்ளைகள். அங்கிருந்து வந்துசெல்ல முடியாது. இங்கே பணம்கொடுத்துத் தங்குமளவுக்கு நிலையும் இருக்காது.

அன்றெல்லாம் கல்லூரிகளில் தானாகவே தலைமைப்பொறுப்புக்கு வந்த சிலர் இருப்பார்கள். நெல்சனைப் போல. ஒருவன் சிரமப்படுகிறான் என்று கண்டால் 'லே இஞ்சவாலே..தாளி என்னல முளிக்கே?' என்று அன்புடன் 'பிடதி'யில் அறைந்து விசாரித்து பிரச்சினைக்குத் தீர்வு சொல்வார்கள். பொதுவாக அவர்களை எதிர்த்து கருத்துரைக்கும் வழக்கம் இருப்பதில்லை.

பத்தரை மணிக்கே போராட்டம் காரணமாக கல்லூரிக்கு விடுமுறை விட்டுவிட்டார்கள். கும்பல்கள் ஒருதலைராகத்துக்கு கிளம்பிச்சென்றன. அன்றெல்லாம் மீனாட்சி அரங்கில் அந்தப்படம் மட்டும்தான் ஓடிக்கொண்டிருந்தது வருடக்கணக்காக. நான் கல்லூரியில் சொங்கிப்போய் இருப்பதைக்கண்டு நெல்சன் என்னை அதட்டிவிசாரிக்க என் அப்பா என்னை வீட்டைவிட்டு துரத்திவிட்டதாகச் சொன்னேன். 'சொந்தக்காரனுவ ஆருமில்லியாலே?' என்றான் நெல்சன்.

இல்லை என்று தலையாட்டினேன்.

'கையில மோதிரமோ செயினோ மற்றோ உண்டால?'

அதுவும் இல்லை.

'அப்பம் கையிருப்பு மத்தது மட்டுமாக்கும். அது வெளையல்ல கேட்டியா?. வெளைஞ்சா நல்ல வெலைக்கு வித்துப்போடலாம். நாயம்மாருக்கு இப்பம் நல்ல ரேட்டுல்லா?

கூட்டச்சிரிப்பு. நடுவே தலைகுனிந்து கண்ணீர் மல்கினேன்

'செரிலே மக்கா..நீ நம்ம ஜான் பயலுக்க முறியிலே நில்லு..உனக்க அப்பன் ஒரு சமாதானத்துக்கு வரட்டு.. கிளவன்மார நாம அப்பிடி ஏத்தி விடப்பிடாதுல்லா?'

ஜான் செல்வக்குமாரின் அறையில் அவனுடைய சட்டபூர்வ அறைத்தோழனான நாகமணி தவிர மேலும் இருவர் ஏற்கனவே இருந்தார்கள். பனச்சவிளை சந்திரன். முள்ளங்கினாவிளை அருமைதாசன். என் பையுடன் தயங்கியபடி வர நெல்சன் அதிகாரத்துடன் விடுதிக்குள் சென்றான். சட்டைபோடாமல் லுங்கியுடன் நடமாடிய பையன்களிடம் 'மாப்ள என்னல ..என்ன சோலி'' என்றும் 'மத்தவள இப்பம் காணுகதுண்டா?' என்றும் 'வீட்டில லெட்டர் போடுகினுமா?' என்றும் நலம் விசாரித்தபடி உள்ளே சென்றான்.

நெல்சன் முழுக்கைச் சட்டைபோட்டு , கைகளை இறுக்கமாக புஜங்களில் சுருட்டிவைத்து அதில் ஒரு கைக்குட்டையை செருகியிருப்பான். ஜெ.ஹேமச்சந்திரன் அப்படி வைத்திருப்பார். அவனை தலைவனாக்கியது அந்தச் சிவப்புக்கைக்குட்டைதான். வேட்டியை தொடைவரை தூக்கிக் கட்டியிருப்பான். மீசை இல்லையென்றாலும் இருப்பதாக

அவன் நம்புவது பாவனைகளில் தெரியும். மார்த்தாண்டம்பகுதி நாடார்களுக்கே உரிய வகையில் பதினெட்டு வயதிலேயே முன்வழுக்கை ஆரம்பமாகியிருந்தது

ஜான் செல்வக்குமாரின் அறையில் அவன் கட்டிலில் படுத்திருந்தான். நாகமணி இல்லை. மற்ற இருவரும் தரையில் விரிக்கப்பட்ட பாய்களில் தூங்கிக்கொண்டிருந்தனர். நெல்சன் கட்டிலில் அமர்ந்து ஒரு சிகரெட்டை ஆசுவாசமாக பற்றவைத்துக்கொண்டு ‘என்னலே மக்கா-எப்டி போவுது காரியங்க?’ என்றான்

ஜான் ‘கர்த்தர் அருளாலே’ என்றான்

‘மத்தவனுக்க பிரச்சினை இப்பம் ஒண்ணுமில்லல்லா-இருந்தா சொல்லிப்போடு . தோளரிட்ட சொல்லி ரண்டு தட்டு தட்டி வைப்பம்’

‘இப்பம் அவன் காட்டில இல்லல்லா-டிரான்ஸ்பர் ஆயாச்சு’

‘எரப்பாளி-’ புகையை ஊதி ‘இது நம்ம பயலாக்கும். இவன் இங்கிண நிக்கட்டும்-’

‘ஓம்’ என்றான் ஜான். ஆனால் என்னை திரும்பிப்பார்க்கவில்லை.

‘பின்ன என்ன காரியங்க? இப்பம் சோலிகள் எங்கயாக்கும்?’

‘கன்யாகுமரியில கெட்டிடப்பணி நடக்குல்லா-அங்க’

‘காண்டிராக்டர் சொன்னத குடுக்கானுகளா? மேசிரி உறிஞ்சுகதுண்டா?’

‘ரெண்டுருவா எடுப்பான்’

‘ரெண்டுருவா கணக்காக்கும். அதுக்குமேலே எடுத்தாண்ணா சொல்லு-நவரக்கிளி பிளிஞ்சுபோடுவோம்- லே இவனுக ஏம்ல இப்பிடி உறங்குகானுக?’

‘ரெண்டாளும் மீனாச்சியில டிக்கெட்டு குடுக்கப்போறானுக’

‘சோ முடியது பன்னிரண்டுக்குல்லா?’

‘தியேட்டர தூத்து துடைச்சு, கக்கூசும் களுவிட்டு வரணுமாம்- வாறதுக்கு எப்பிடியும் மூணுமணி ஆவும்’

படுத்திருந்த அருமைதாசனை எட்டி உதைத்தான் நெல்சன் ‘லே தாயளி எந்திரிலே-செத்துல்லா கெடக்கான்’

அருமைதாசன் எழுந்து எச்சில்கோழையை துடைத்து ‘ஆரு?’ என்றான்

‘உனக்க அம்மைக்க கெட்டினவன்-எந்திரிலே எரப்பாளி’

‘சகாவாக்கும்’ என்றான் ஜான்

அருமை எழுந்து லுங்கியை சுற்றிக்கொண்டான். அவன் ஒட்டுமொத்தமாகவே வெளிறியிருந்தான். ‘வணக்கம் தோழர்’

‘லே மீனாச்சிக்காரன் பைசா மிச்சமில்லாம குடுக்கானா?’

‘அதுக்கு குறவில்ல’

‘பின்ன?’

‘நாறச்சொல்லுல்லா சொல்லுகான்? தோலு எரிஞ்சுபோற வார்த்தையாக்கும்’

‘அதிப்பம் அப்பிடி பேசாத எந்த மோலாளி இருக்கான்? கைய நீட்டினா சொல்லு, பாத்திருவோம்’

‘கைய ஒண்ணும் நீட்டமாட்டான்’

‘செரி- வாறேன்-இந்தப்பய இங்கிண நிக்கட்டு. நாயராக்கும்-புக்கு வாசிப்புகள் உண்டு. அடங்கி இருப்பான் கேட்டியா?’

நெல்சனை வழியனுப்ப எல்லாரும் எழுந்தனர். நெல்சன் என்னிடம் எதுவும் சொல்லாமல் நடந்து சென்று வராந்தா எல்லையில் படியிறங்கி மறைந்தான். திரும்ப அமர்ந்தேன். அப்போதுதான் பார்த்தேன். எல்லாரும் என்னைக் கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்தனர். ஆழமான அமைதி. முகங்களில் இருந்தது நட்பு அல்ல என்று தெளிவாகவே தெரிந்தது. பார்வையைத் திருப்பிக்கொண்டேன்.

அருமை என்னிடம் 'எந்தூருல?' என்றான். அப்போது அறை அவனுடையது என்று எனக்குத்தோன்றியது. மறுநாள்தான் அவனும் அங்கே அகதிதான் என்று புரிந்தது. ஜான் அதிகாரங்களை விரும்புவதில்லை. நாளில் பெரும்பகுதியை ஜெபம் செய்ய செலவழிப்பவன் அவன்

'திருவரம்பு'

'பைசா உண்டும்லா? பின்ன என்ன மயிருக்கு இங்கிண வாற?'

'அப்பா வீட்டுக்கு வராதேண்ணு சொன்னாரு'

'பின்ன வல்ல ஓட்டலிலயும் போயி எலையெடுலே..'

தலைகுனிந்து கண்ணீர் மல்கினேன்.

ஜான் 'ஏசுவே' என்றான்.

அருமை மீண்டும் படுத்துக்கொண்டான். படுத்தபடி 'இங்கிண உனக்கு பாயும் தலயணயும் ஒண்ணும் இல்ல பாத்துக்க..நூஸ்பேப்பர போட்டு படுத்துக்க..மத்தவன் பாய எடுத்தா அள்ளையில சவிட்டு விளும். கேட்டியாலே?'

'ம்ம்' என்றேன்

அப்படியே அமர்ந்திருந்தேன். ஜான் கையடக்க பைபிளை வாசிக்க ஆரம்பித்தான். எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. கட்டிலில் அமர்ந்திருப்பது அதிகப்பிரசங்கம் என்று பட்டது. ஆகவே தரையில் அமர்ந்துகொண்டேன். என் பையை மடிமீதே வைத்திருந்தேன்.

நாகமணி வந்தான். பீடியின் கடைசி நுனியை சுண்டி வராந்தாவிலேயே வீசிவிட்டு என்னைப்பார்த்தான். 'லே ஆருல நீ?'

நான் ஏறிட்டுப்பார்த்தேன். என்ன சொல்வதென்று தெரியவில்லை. ஜான் திரும்பிப்பார்த்தபின் மீண்டும் பைபிளில் நீடித்தான்

'தோளர் விட்ட ஆளா?'

'ம்'

'கேறிவந்திருதானுவ..' என முனகியபடி அவன் சட்டையைக் கழற்றி ஆணியில் மாட்டினான். கட்டிலில் படுத்துக்கொண்டான். உடனே அப்படியே தூங்கிவிட்டான். வெளியே மதியவெயில் நன்றாக ஏற ஆரம்பித்திருந்தது. விரிந்த முற்றத்தில் நாலைந்து வேப்பமரங்கள். அவற்றின் நிழல்கள் ஆடும் ஒளியசைவை அறைக்குள் உணரமுடிந்தது. கொடியில் கிடந்த நாகமணியின் மஞ்சள்நிறமான சட்டையின் நிறம் மேலும் பளிச்சிட ஆரம்பித்தது.

சட்டென்று மொத்த விடுதியே உயிர்பெற்றது. நூறு திரையரங்குகள் ஒரேசமயம் படம்விட்டு வாசல் திறந்தது போல ஆரவாரம். வராந்தா வழியாக கால்கள் திமுதிமுவென்று ஓடின. கூச்சல்கள், சிரிப்புகள்.

ஜான் பெரிய எவர்சில்வர் தட்டை எடுத்துக்கொண்டான். நாகமணி கீழே கிடந்த அருமையை மிதித்து 'லே போலே' என்றான்

'போலே..' என்று எரிந்துவிழுந்தபின் அவன் மறுபக்கம் திரும்பிக்கொண்டான்

நாகமணி 'லே நடுவு நோவுதுலே போலே' என்றான்

அருமை மீண்டும் தூங்கிவிட்டான்

நாகமணி எழுந்து லுங்கியை சுருட்டி ஏற்றிக்கட்டிவிட்டு இன்னொரு எவர்சில்வர் தட்டுடன் வெளியே சென்றான்.

சற்றுநேரம் கழித்து ஜானும் நாகமணியும் வந்தார்கள். இருவர் கையிலும் எவர்சில்வர் தட்டுகள் நிறைய சிவப்புநிறமான சோறு பெரிய குவியலாக இருந்தது. அதன்மீது ரத்தச்சிவப்பு நிறமான தேங்காய்க்குழம்பு ஊற்றப்பட்டிருந்தது. நான் முந்தைய தினம் மதியம் சாப்பிட்டதோடு சரி. நடுவே நெல்சன் வாங்கித்தந்த ஒரு டீயும் பருப்பு வடையும்தான்.என் வயிறும் வாயும் நாவும் உயிர்பெற்றன. உடலே எச்சிலாகச் சுரப்பதுபோல உணர்ந்தேன்

அருமையும் சந்திரனும் எழுந்துவிட்டார்கள். சந்திரன் என்னை பார்த்தபின் புருவம் தூக்கி யார் என அருமையிடம் கேட்டான். அருமை வாயை கோணலாக்கி காட்டினான். அவர்கள் சோற்றை தரையில் வைத்தார்கள். அருமையும் சந்திரனும் அவர்கள் தட்டுகளை எடுத்துக்கொண்டார்கள்.

அந்த விடுதியில் அரசு அளிக்கும் நிதியைக்கொண்டு சமையல் செய்யப்பட்டது. குழம்பு பொரியல் வாரந்தோறும்

மீன்,கறி என்றெல்லாம் சட்டம் உண்டு. ஆனால் விடுதிவாசிகளே அதை திருத்தியமைத்திருந்தனர். ரேஷனரிசியில் சமைத்த சோறும் , புளி வத்தல்பொடி உப்பு ஆகியவற்றை தேங்காய்புண்ணாக்குடன் சேர்த்து அரைத்துக்கொதிக்கவைக்கப்பட்ட நீர்த்த குழம்பும் மட்டும்தான். ஆனால் சோறு கொண்டுவரப்படும் தட்டு எதுவோ அது நிறைய அளிக்கப்பட்டாகவேண்டும்நான்குபேர் ஓரளவு நிறைவாகவே சாப்பிட முடியும்.

சோற்றை அவர்கள் பரிமாறினார்கள். நாகமணி 'லே வந்து தின்னுலே' என்றான்

நான் 'எனக்கு சோறு வேண்டாம்' என்றேன்

'ஏன்?'

'பசிக்கல்ல'

'என்ன கேடு?'

நான் உதட்டைக்கடித்து 'நான் பிறவு. வெளிய சாப்பிடுதேன்..' என்றேன்

'வேண்டாம்ணா போ' என்றான் அருமை.

மெல்ல எழுந்து வெளியே சென்று வராந்தாவில் நின்றுகொண்டேன். உடல் நடுங்கிக்கொண்டிருந்தது. பால்கனிச்சுவரை தாண்டி அப்படியே குதித்தாலென்ன என்று தோன்றியது. அழுகை வந்தது. தொண்டை நீர் துடித்தோடும் குழாய் போல அதிர்ந்தது.

ஐந்து நிமிடங்கள் ஆகியிருக்கும் நாகமணி வெளியே வந்தான். 'லே வந்து தின்னுலே' என்றான்

நான் திரும்பாமல் தலைகுனிந்து நின்றேன்

அவன் வந்து என் தோளைத்தொட்டான் 'செரி மக்கா..வா வந்து சோறத்தின்னு..நான்லா விளிக்கேன்?'

நான் கண்ணீர் மார்பில் கொட்ட தேம்பி அழ ஆரம்பித்தேன். அவன் என்னை தோளோடு அணைத்துக்கொண்டான். ஜானும் அருமையும் வந்து எட்டிபபர்த்தார்கள்.

நாகமணி என்னை அணைத்து உள்ளே இட்டுச்சென்றான். பிடித்து அழுத்தி சோற்றின் முன் அமரச்செய்தான். அவர்கள் நால்வரும் அதுவரை சோற்றில் கைவைத்திருக்கவேயில்லை. நான்கு தட்டுகளிலும் பானையின் மூடியிலுமாக சோறு காத்திருந்தது.

'தின்னுலே..பசியக் கண்டா எங்கிளுக்கு தெரியாதா?'

நான் சோற்றில் கையை வைத்தேன். அந்தச்சோறு என் தொண்டை வழியாக இறங்கும் என்று தோன்றவில்லை

அருமை கோபமாக 'அப்பிடி போயி நிண்ணா, மத்தவனுக இஞ்ச சோறு தின்னவேண்டாமா?' என்றான்

'செரி விடுலே..' என்றான் நாகமணி. அவன் தட்டிலிருந்து ஒரு கைப்பிடி அள்ளி என் தட்டில் வைத்து 'தின்னுலே பன்னத் தாயளி' என்றான்.

---

## புறப்பாடு 1: 3 – மணிவெளிச்சம்

நானும் வேலைக்குவருவதாகச் சொன்னேன். அருமை 'ஆரு நீயா? சோலீண்ணா என்னாண்ணு நெனைக்கே? அங்கிண இருந்து புக்குவாசிச்சா உனக்க கொட்டைய எடுத்து சுட்டு திம்பானுவ' என்றான்

வந்தேதீருவேன் என்றேன். சனி, ஞாயிறுகளில் விடுதியில் அனேகமாக யாருமே இருக்கமாட்டார்கள். எல்லாருமே வேலைக்குச் சென்றுவிடுவார்கள்.

அன்று நாகர்கோயிலைச்சுற்றி பெரும் கட்டிடங்கள் எழுந்துகொண்டிருந்தன. இரண்டுகாலில் எழுந்து நிற்கமுடிந்தால் வேலைக்கு கூப்பிட்டுவிடுவார்கள். அன்றைய சம்பளம் பதினைந்து ரூபாயும் மதியச்சாப்பாடும். காலை பதினொருமணிக்கும் மாலை மூன்றரை மணிக்கும் கடியும் குடியும் உண்டு.

மாணவர்களில் பெரும்பாலானவர்கள் மலைப்பகுதிகளைச் சேர்ந்தவர்கள். சனிஞாயிறு வேலைகள் போக மாலைநேரவேலைகளுக்கும் செல்வார்கள். பரோட்டக்கடைகளில் பாத்திரம் கழுவுவது பரிமாறுவது. கடைகளில் விற்பனையாள் வேலைக்குச் சம்பளம் குறைவு. ஆனால் நள்ளிரவு வரை நிற்கவேண்டும். நள்ளிரவுக்குமேல் சாமான்களை எடுத்து அடுக்கிவைத்து கடைவாசலைக் கூடிவிட்டுத்தான் கிளம்பமுடியும்

மாதம் நூற்றைம்பதுரூபாய் தேற்றிவிடுபவர்களே அதிகம். அதை இரண்டு மூன்று தவணைகளாக ஊருக்கு அனுப்பிவைப்பார்கள். ஊரில் அது பெருந்தொகை. ஒருகுடும்பமே பசியாறும்.இங்கே இவர்களுக்குச் செலவு என்று ஏதும்

இல்லை. பீடிக்கான சில்லறை தவிர. விடுதியில் இரவிலோ பகலிலோ படிப்பவர்களை நான் பார்த்ததே இல்லை. பகலில் கல்லூரி வகுப்புகளின் இடைவேளைகளில் அவசரமாக புரட்டிப் படிப்பதுடன் சரி.எல்லா பாடங்களிலும் தேர்ச்சி மதிப்பெண் பெறக்கூடியவர்கள் என அனேகமாக எவருமே அங்கிருக்கவில்லை

நான் மாலைநேரங்களில் சும்மாதான் இருப்பேன். ஒருகட்டத்தில் ஏராளமானவர்களின் திறனேடுகளை எழுதிக்கொடுக்கவேண்டியதிருந்தது. நான் அறிவியலின் அடிப்படைகளை அறிமுகம் செய்துகொண்டதே அப்போதுதான். அருகேதான் கவிமணி நிலையம் நூலகம். அங்கே சென்று மாலை இருள்வதுவரை வாசித்துக்கொண்டிருப்பேன். ‘என்னல அப்படி செத்து இருந்து படிக்கே?’ என்று கேட்பார்கள். ‘இத படிச்சா வாத்தி சோலி கிட்டுமாலே?’ என்பார்கள். நான் புன்னகைசெய்வேன்.

அருமையை ஒருமாதிரி புரியச்செய்து என்னையும் அவனுடன் கட்டிட வேலைக்குக் கொண்டுசெல்ல சம்மதிக்கச்செய்தேன். எங்களூரில் நான் சில்லறை விவசாயவேலைகளைச் செய்ததுண்டு ஆனால் கட்டிடவேலை அப்படி அல்ல. ஒரு சின்ன பதற்றம் இருந்தது. என்னை எவரும் அவமரியாதையாகப்பேசினால் பொறுத்துக்கொள்ளமுடியாது. ஆனால் விடுதிப்பையன்கள் சிறுவயதிலேயே அதற்குப்பழகியவர்கள். தலித் மாணவர்கள் மட்டுமல்ல அங்கிருந்த நாயர் பையன்கள்கூட. அதை நான் அருமையிடம் சொல்லவில்லை. சொன்னால் அதை வைத்தே என்னைத் தவிர்த்துவிடுவான்.

செட்டிகுளம் ஜங்ஷன் வந்தோம். ‘ஒரு சாய குடிச்சலாம்லே’ என்றான் அருமை. ஒரு டீக்குச் சொல்லிவிட்டு காத்திருந்தோம்

‘நீ இப்பம் என்னெளவுக்குச் சோலி செய்யுதே? கையில சாயைக்கு காசில்லெங்கி சொல்லிப்போடு. நான் தாறேன்’ என்றான் அருமை

அங்கே தங்க ஆரம்பித்தபின்னர் எனக்குச் சோறுபோட்டதுடன் அவ்வப்போது சில்லறையும் அவர்கள்தான் தந்தார்கள். நான் கல்லூரிக்குப்போக சட்டையை எடுக்கும்போது பையில் ஐம்பதுபைசாவோ ஒரு ரூபாவோ கிடக்கும். அதைப்போட்டது யார் என்று தெரிந்துகொள்ளமுடியாது. முதல்நாள் யாரோ தவறாகப்போட்டுவிட்டார்கள் என்று நினைத்து ‘இது ஆருக்க பைசா? எனக்க சட்டையிலே கெடக்கு?’ என்றேன்

‘கொண்டுபோயி வல்ல சாயையோ வெள்ளமோ குடிலே..கெடந்து சாமி ஆடுகான்..தாயளி’ என்றான் நாகமணி. அதன்பின் நான் அந்தப்பைசாக்களை இயல்பாக எடுத்துக்கொண்டேன். எப்போதாவது டீ குடிப்பேன். பொரிகடலை வாங்கித்தின்றபடி ஒழுகிணசேரி வழியாக காட்டுநாயக்கர் குடியிருப்புக்கு ஏறி வடிவீஸ்வரம் வரை நடப்பேன். என்னுடைய எதிர்கால மாபெரும் நாவல்களைப்பற்றி கற்பனைசெய்வேன்.

‘’எனக்கு பீசு குடுக்க பைசா இல்லல்லா?’’ என்றேன். அவர்களுக்கெல்லாம் பெரும்பாலும் கல்லூரிக் கட்டணங்கள் இல்லை. உதவித்தொகையும் உண்டு.

அருமை அனுதாபத்துடன் ‘’உள்ளதாக்குமே..இந்த சர்க்காருபயக்க பாவங்கெல்லாம் பைசா குடுத்தா என்னலே? தின்னுகானுகள்லா?’ என்றான்.

என் அப்பா இரண்டாம் திருமணம் செய்துகொண்டு சித்தி பேச்சுகேட்டு என்னைத் துரத்திவிட்டுவிட்டார் என்ற கதை அங்கே புழக்கத்திலிருந்தது. நெல்சனுக்கே அப்படித்தான் தெரியும்.

அருமை ஒரு பீடி பற்றவைத்துக்கொண்டான். புகையை மூக்குவழியாக ஆசுவாசமாக விட்டபடி ‘’நீ என்னவாக்கும் மக்கா இருந்து படிக்கே?’ என்றான்.

நான் ‘சும்மா..’ என்றேன்.

‘நேரம்போக்குக்காலே?’

‘இல்ல..இது அறிவாக்கும்’

அவன் என்னை ஓரமாகப் பார்த்து ‘அறிவுண்ணாக்க?’ என்றான்

‘அறிவுண்ணா..இந்த இது இருக்குல்லா..’

‘என்னல வச்சு சவிட்டுதே? என்னல அறிவு சொறிவு?’

நான் குழம்பி ‘அம்பேத்கரு கையிலே புக்கு இருக்குல்லா?’ என்றேன்.

ஒரே கணத்தில் அவனுக்கு எல்லாம் புரிந்துவிட்டது. ‘அறிவாக்கும், இல்லியா?’ என்றான் மென்மையாக.

‘ஆமா’

‘படிக்கியது கஷ்டமுல்லா?’

'பளகினா ஙஸியாக்கும்'

'எடைக்கிடை சாயை குடிக்கணும்லா?'

'ம்' என்றேன்

அருமை பீடியை ஆழ இழுத்தபடி 'அறிவு நல்லதாக்கும்' என்று சொன்னான்.

நாங்கள் கட்டிட இடத்துக்குச் சென்று சேர்ந்தபோது அங்கே வேலைக்கு ஆட்கள் வந்துவிட்டிருந்தார்கள். வேலை ஆரம்பிக்கவில்லை. கான்கிரீட் மிக்ஸரில் ஒருவன் கிரீஸ் போட்டுக்கொண்டிருந்தான். கூடைகள், மண்வெட்டிகள் , மண்கோரிகள் எல்லாம் சிமிண்ட் நிறத்தில் குவிந்து கிடந்தன. பெண்களும் ஆண்களும் அமர்ந்து வெற்றிலை போட்டு மென்றுகொண்டு சிரித்துப்பேசிக்கொண்டிருந்தார்கள். அத்தனை உல்லாசமாக இருக்கும் ஒரு மக்கள்கூட்டத்தை நான் அதுவரை பார்த்ததில்லை.

அருமை என்னை குஞ்சன்மேஸ்திரியிடம் அறிமுகம் செய்தான். அவர் என்னை ஏற இறங்கப்பார்த்து 'ஏமான்மாருக்கு இஞ்ச சிமிண்டுசோலி பிடிக்காது' என்றார்

'நான் செய்வேன்' என்றேன்

'செய்யுமுண்ணா செய்யும்.மத்தவனுக்கு பதினஞ்சு. உமக்கு பந்தரண்டு. சோலி திருப்தியானா கூட்டிக்குடுக்கேன். என்னங்கியேரு?'

அவர் என்னை மரியாதையாகப்பேசியது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. ஆனால் என்னைப்பார்த்ததுமே சாதியை ஊகித்ததை வைத்துப் பார்த்தால் அதில் ஆச்சரியப்பட ஏதுமில்லை.

குஞ்சன் மேஸ்திரி திரும்பி, 'ஏட்டி இந்நா ஒரு ஏமான் வந்திருக்காரு. காயும் தொளையும் இருக்கப்பட்டவளுக வளைச்சுபோடுங்கடீ' என்றார். பெண்கள் எல்லாரும் என்னைபபார்த்துச் சிரித்தார்கள்.

வேலை ஆரம்பித்தது. முதலில் எனக்கு அங்கே என்ன நடக்கிறதென்றே புரியவில்லை. நூற்றுக்கணக்கானவர்கள் தறிகெட்டு அங்குமிங்கும் அலைவதுபோலத் தோன்றியது. என்னிடம் செல்லப்பண்ணன் நான் செய்யவேண்டிய வேலையைச் சொன்னார். மணல் அரிப்பதற்கான வலை சாத்தி வைக்கப்பட்டிருக்கும். அதன் மீது மணலை அள்ளி அள்ளி வீசவேண்டியதுதான். அவ்வளவேதான்

'அவ்வளவுதானா?'

'செய்யி.பாப்பம்'

நான் முதல் மண்வெட்டி மண்ணை வீசியதுமே செல்லப்பண்ணன் 'வே, நீரு நம்மாட்டிக்காரருல்லா?' என்றார்

'அவருக்கு அங்க கொலேரம் பக்கமாக்கும். தொளிவேலை செய்யப்பட்டவரு' என்று ராபின்சன் கண்டுபிடித்தார்.

குலசேகரம்பக்கம் வயல் முழுக்க கருங்களிமண். வாழைக்கும் நெல்லுக்கும் மிக உகந்தது. ஆனால் எருமை மட்டும்தான் வயலில் இறங்கமுடியும். காளை இறங்கினால் கயிறுகட்டி எருமையை வைத்து இழுத்து கரைசேர்க்கவேண்டும். கால் புதைந்து தளைபாய்ந்துவிடும். வெட்டித் தாழ்த்திய மண்வெட்டியை மண் உதடுகளால் கவ்விப்பிடித்துக்கொள்ளும். இழுத்துப்பிய்த்து எடுத்து வீசி மறிக்கவேண்டும். மண் முனகியபடி கவ்வலை விட்டுக்கொடுத்தபின் சப்புகொட்டும். வெட்டுபள்ளத்தில் நீர் கசிந்து தேங்கும். எங்களூர் மண்வெட்டிக்காரர்கள் இளமையிலேயே குறைவான உடல்விசையில் மண்வெட்டியைக் கையாள்வது எப்படி என்று கற்றுக்கொண்டிருப்பார்கள்.மண்வெட்டி போடுவதே அழகிய நடனம் போலிருக்கும்.

பதினொருமணி இளங்குடிக்கு அமர்ந்தபோது நான் அவர்களில் ஒருவனாகிவிட்டிருந்தேன். 'கைய நீட்டும் வே' என்றார் ராபின்சன்

கையில் தோல் பிய்ந்துவரவில்லை. சற்றே சிவந்திருந்தது, அவ்வளவுதான்

'சோலி தெரியும்.செஞ்சு பளக்கமில்ல'' என்றார் ராபின்சன்

'எனக்க அண்ணனாக்கும் எல்லா வேலையும் செய்யுகது' என்றேன்

'செவந்துபோட்டே' என்று வடிவுடையா எட்டிப்பார்த்துச் சொன்னாள்.

'கொடுத்துச்சிவந்த கரம்லா'' என்றார் செல்லப்பண்ணன்

'பிள்ள இஞ்ச என்ன செய்யுது?' எசிலி ஆர்வமாக கேட்டாள்

'காலேஜிலே படிக்கேன்'

'அருவு செலவுக்கு இஞ்ச வாறது என்ன?'

'ஆமா' என்றேன்

எசிலியின் மகள் 'காலேசிலே ஏமான் என்ன படிக்குது?' என்று கேட்டாள். கரிய ஈறுகளில் பளிச்சிட்ட பற்கள். இரட்டை மூக்குத்தி கொண்ட சிறிய நாசி. சிரிக்கும் கண்கள். கரிய வட்டமுகம்

'லவ்வுக்காக்கும் படிக்கியது..உனக்கும் படிப்பிச்சு குடுப்பாரு..போறியாட்டீ?'

'லவ்வுகதுக்கு நான் சொல்லிக்குடுக்குதேன்..ஒரு வாரம் வரச்சொல்லுங்க'

சிரிப்பு. நான் அவள்பக்கம் திரும்புவதையே தவிர்த்தேன்.

பின்னர் என்னிடம் சிமிண்ட் சாந்தை சட்டியில் வெட்டிப்போடும் வேலை சொன்னார்கள். சட்டிக்கு மூன்று மண்வெட்டிச் சீந்து சிமிண்டு. பெண்கள் வரிவரியாக வந்து வாங்கிச் செல்வார்கள். குனிந்து சட்டி விளிம்பைப்பற்றி அவர்களின் தலையில் இருக்கும் சும்மாட்டில் ஏற்றி வைக்கவேண்டும்.

எசிலியின் மகள் பெயர் கிரேசி. அவள் சாந்து எடுக்கும்போது '' ஏமான் லவ்வுக்குப் படிச்சுதா?' என்றாள்

நான் பதறி பிடியை விடப்போனேன். அவள் சிரித்துக்கொண்டு தூக்கிச்சென்றாள். பின்னர் ஒவ்வொரு வருகைக்கும் என் கண்ணைச் சந்தித்து கண்களாலேயே சிரித்தாள். நாக்கை நீட்டி ஆட்டிக்காட்டினாள்.

அன்றுமாலை வேலை முடிந்தபோதுதான் நேரம் மிகவேகமாக ஓடி அடைந்திருப்பதை உணர்ந்தேன். ஒருநாள் என்பது அவ்வளவு குறுகியது என்பது அப்போதுதான் புரிந்தது. தகரப்பீப்பாயில் நிறைத்து வைக்கப்பட்ட தண்ணீரில் கைகால்களை கழுவிக்கொண்டு துண்டால் துடைத்தபின் வேட்டியைக் கட்டி சட்டையை போட்டுக்கொண்டேன். உடம்பு எடையே இல்லாமல் காற்று நிறைக்கப்பட்டதுபோலிருந்தது

வரிசையாக நின்று மேஸ்திரியிடமிருந்து ரூபாயை வாங்கிக்கொண்டோம். அருமை ரூபாயை பலமுறை எண்ணினான். நோட்டுகளை தூக்கி மாலைவெயிலில் காட்டி ஒளிஊடுருவச்செய்து பரிசோதனை செய்தபின் ஒருநோட்டை மாற்றிவாங்கிக்கொண்டான். எனக்கு இரண்டு ஐந்து ரூபாயும் இரண்டு ஒரு ரூபாயும். நான் ரூபாய்த்தாள்களை நீவி நீவிப்பார்த்தேன். ஐந்துரூபாய்த்தாள்கள் புத்தம்புதியவை.

'என்னல வச்சுகிட்டு மோந்துபாக்கே? வா'

நாங்கள் நடந்துசெட்டிகுளம் பஸ் ஸ்டாண்டை அடைந்தோம். 'லே அரும வாலே பரோட்டா திம்போம்'

'சும்மா கெடலே. பைசா கெடந்து உறுத்துகோ? வாலே'

பேசாமல் நடந்தேன். செட்டிகுளம் ஜங்க்ஷனில் மட்டும் இத்தனை கடைகளில் கோழி பொரித்து விற்கிறார்கள் என்ற தகவல் எனக்கு அப்போதுதான் தெரியவந்தது. எச்சில் ஊறியதை துப்பிக்கொண்டே இருந்தேன்.

'மேலு நோவுதாலே?'

எனக்கு உடல் வலிக்கவில்லை. ஆனால் ஒருமாதிரி மிதப்பாக இருந்தது. நடக்கும்போது நீருக்குள் நடப்பதுபோல கால்கள் எம்பின.

'சிமிண்டுசோலி கஷ்டமாக்கும். மேலுவேதனை உண்டு. அதுக்காக நேரா போயி நாறவெள்ளம் குடிப்பானுக. பின்ன கத்திபோயி வாலு வந்தது மாதிரித்தான். அங்க கிட்டுகத இங்க குடுக்கணும். பின்ன இங்க குடுக்கதுக்காக அங்க சோலி செய்யணும்.. செல்லப்பண்ணன் இன்னும் அரமணிக்கூறிலே பைசாவ தீத்துப்போடுவாரு. பிள்ளையளுக்கு ஆறிப்போன அஞ்சு பருப்புவட வேங்கிட்டுபோவாரு..அதாக்கும் குடும்பத்துக்குள்ள மொத்த வரவு'

விடுதிக்குச் சென்றதும் அருமை என்னிடம் 'சிமிண்டோட ரூமுக்குப் போவாத கேட்டியா? சிமிண்டு ரூமுக்குள்ள வந்தா போவாது..இங்கிண குளிச்சுட்டு மேல போவம்''

நான் 'சரி' என்றேன்

''துணிகள இங்கிண வச்சுக்க..நாளைக்கு போறப்ப எடுத்துக்கிட்டு போலாம்..' என்றான் 'சோப்பு இட்டு குளிக்காத கேட்டியா? தோலு எரிஞ்சுபோடும். துணிய வச்சு தேச்சுக்க..''

'செரி''

''ரூமில தேங்காயெண்ண இருக்கு..தேகத்தில பூசிக்கிட்டு ஒறங்கினா காலம்பற எரிச்சல் இருக்காது''

ஒரு பக்கெட் நீரில் குளித்தேன். நகக்கண்ணுக்குள் சிமிண்ட் ஏறியிருந்தது. தலைமுடி சிக்குபோல ஒட்டியது. மூக்கைச் சிந்தியபோது சிமிண்ட் வந்தது. துண்டை முறுக்கி உடம்பைத் தேய்த்தேன். நீரைவிட்டு குளித்துவிட்டு வந்தேன். குளிக்குமிடத்திலிருந்து படி ஏறி விடுதியறை வரைக்கும்கூட என்னால் நடக்கமுடியும் என்று தோன்றவில்லை. உடம்பு முழுக்க தூக்கம் நிறைந்து கனத்தது. அறை தொலைதூரத்தில் நீரில் நிற்கும் படகுபோல அசைந்துகொண்டிருந்தது. நான் வைக்கோற்போரில் நடப்பதுபோல கால்களை உந்தி உந்தி சென்றுகொண்டிருந்தேன்.

மணி ஏழுதான் ஆகியிருந்தது. நாகமணியும் சந்திரனும் அறைக்குள் இருந்தனர். நாகமணி கடிதமெழுதிக்கொண்டிருந்தான். சந்திரன் காதருகே சிறிய ரேடியோவை வைத்து பாட்டு கேட்டு காலாட்டிக்கொண்டிருந்தான். காலையில் நான் எழுந்துசென்ற பாயை அப்படியே விரித்து படுத்திருந்தான். அருகே என்னுடைய புத்தகம் குப்புறக்கிடந்தது. மார்க்ஸையும் எங்கல்ஸையும் பற்றிய நினைவுக்குறிப்புகள். நீலநிற அட்டைகொண்ட சோவியத் புத்தகம்.

'என்னலே, சோலி சொயம்பா? பாத்த நாநூறு மில்லி சாத்தினவன் மாதிரி இருக்கே?'

நாகமணி என்னைத் திரும்பிப்பார்த்துவிட்டு மீண்டும் எழுத ஆரம்பித்தான். ஆறாம்கிளாஸ் பையனைப்போல உருட்டி உருட்டி ஒவ்வொரு எழுத்தாக எழுதிக்கொண்டிருந்தான். மலைப்பகுதிப்பையன்கள் எல்லாரும் அப்படித்தான். அவர்கள் எழுதப்பழகியிருக்கவே மாட்டார்கள்.

ஏதாவது சொல்லவேண்டுமென்று நினைத்தேன். ஆனால் என் மனதில் சொற்கள் நனைந்து ஒட்டியிருந்தன. உதடுகள் களைத்து தூங்கியிருந்தன

அமர்ந்தபோதுதான் தரை என்பது எவ்வளவு இனியதென்று புரிந்தது. சமதளம். எதையும் தூக்கி நிறுத்தவேண்டிய பொறுப்பற்றது. எடையற்றது. விரிந்து பரந்தது. மெல்ல படுத்தபோது என் உடலுறுப்புகளெல்லாம் கழன்று தனித்தனியாக பாயில் படிவதுபோலத் தோன்றியது. சந்திரனிடம் நான் சொல்ல நினைத்த சொல் சூடான பானையில் நீர்த்துளி உலர்ந்து மறைவதுபோல அழிந்தது.

உலுக்கப்பட்டு விழித்துக்கொண்டேன். எங்கிருக்கிறேன் என்றே தெரியவில்லை. வாய் உலர்ந்திருந்தது. தொண்டையில் மணல் திரண்டிருப்பதுபோல வறட்சி. மேலே எரிந்த நாற்பதுவாட் பல்பு கண்கூசும்படி ஒளிவிட்டது

'லே..லே எந்திரிலே'

எழுந்து அமர்ந்து சொறிந்துகொண்டேன்

'சோத்தத் தின்னுட்டுப்படுலே.. தாயளி எடுத்துச் சாத்தின மாதிரில்லாலே உறங்குதான்'

அவர்கள் தட்டுகளுடன் அமர்ந்தார்கள். என் அலுமினியத் தட்டில் சோற்றுக்குவியல். ஆனால் என் மொத்த சுயமும் மணல்பொம்மை போல உதிர்ந்தபடி இருந்தது..

'எனக்கு வேண்டாம்..' என்றபடி திரும்ப பாயில் சரிந்தேன்.

அருமை எழுந்து என்னை ஓங்கி ஓர் உதை விட்டான். வலிதாளாமல் நான் அலறியபடி எழுந்து அமர்ந்து விட்டேன்

'தின்னுலே நாயே''

நான் அவனை அர்த்தமில்லாமல் பார்த்தேன். அறைக்காட்சி மெல்ல அலையடிப்பதுபோலிருந்தது. உதைபட்ட கணம் இப்போது அறுபட்டு வெகுவாக அப்பால் சென்றுவிட்டது. இந்தக்கணத்தில் என்னைச்சுற்றி நான்கு முகங்கள்.

''தின்னுலே''

''எளவு, சரக்கு வல்லதும் அடிச்சானாலே?''

''சோலி செய்த சீணமாக்கும்''

நகர்ந்து சோற்றின் முன் அமர்ந்தேன். ஒருவாய் அள்ளி வாயில் வைத்தேன். அக்கணம் வயிற்றுக்குள் இருந்து பல்லாயிரம் கைகள் முளைத்தெழுந்து அந்த கவளத்தைப் பிடுங்கி உள்ளே கொண்டு சென்றன. அள்ளிச் சாப்பிட சாப்பிட சோறு போதவில்லை என்ற எண்ணம் மட்டுமே மனதில் இருந்தது. இவ்வளவுதான் இருக்கிறது. இவ்வளவுதான் மிச்சம்.

தட்டை வழித்துச் சாப்பிட்டேன். நாகமணி அவன் தட்டிலிருந்து ஒரு பெரிய பிடி சோற்றை அள்ளி எனக்குப் போட்டான். நான் அதையும் அள்ளி விழுங்கினேன்

'இந்தப் பசிய வச்சுக்கிட்டாக்கும் வேண்டாம்னு சொல்லுதான்''

‘சோலி செய்தா வாற உறக்கம்லா’’

நான் கையை நக்கிவிட்டு அப்படியே விழுந்து மீண்டும் தூங்கிவிட்டேன்

கண்விழித்தபோது வந்த முதல் எண்ணம் மொத்தக்காட்சியும் நான் ஒருபோதும் உணராத துல்லியத்துடன் இருந்ததுதான். நிறங்கள் மணிவெளிச்சம் உமிழ்ந்தன. பரிமாணங்கள் துலக்கம் பெற்றிருந்தன. என்ன ஆயிற்று? எங்கே இருக்கிறேன்? முந்தைய நாள் மாலை நானும் அருமையும் செட்டிகுளம் வழியாக நடந்தே வந்த நினைவு மட்டும்தான் எஞ்சியிருந்தது. மறுகணம் அந்த பணத்தின் நினைவு

பாய்ந்தெழுந்து சட்டையை எடுத்து பையிலிருந்து ரூபாயை எடுத்துப்பார்த்தேன். இரண்டு புதிய ஐந்து ரூபாய். இரண்டு ஒருரூபாய்.என்னுடைய சொந்த ரூபாய். நானே ஈட்டியது. என்னுடையது மட்டுமேயான ரூபாய்

அந்த நோட்டுகளை மூக்கில் வைத்து முகர்ந்தேன். கன்னத்தில் தேய்த்துக்கொண்டேன். ரூபாய் அத்தனை அழகும் மணமும் கொண்டதாக ஒருபோதும் இருந்ததில்லை. அந்த ரூபாயை செலவுசெய்யமுடியும் என்றே தோன்றவில்லை. அதை இன்னொருவர் கையில் கொடுக்கக்கூட முடியாது

சந்திரன் தரையில் உருண்டுசென்று சுவர் ஓரமாக ஒண்டி தூங்கிக்கொண்டிருந்தான். கட்டிலில் நாகமணி தூங்கிக்கொண்டிருந்தான். அருமையும் ஜானும் இல்லை. ஜான் ஞாயிறு காலைகளில் ஆராதனையை தவறவிடமாட்டான். ரூபாயை மடியில் கட்டிக்கொண்டேன். அதை அறையில் சந்திரன் பெட்டிக்குள் வைத்து பூட்டலாம்தான்.ஆனால் என் உடலிலேயே அது இருக்கவேண்டும் என ஆசைப்பட்டேன்.

கோபால் பல்பொடி எடுத்து உள்ளங்கையில் கொட்டிக்கொண்டு பல்தேய்த்தபடி வராந்தா வழியாக நடந்தேன். காலையொளியில் வேப்பமரத்தின் பச்சையிலைத் தகடுகள் மின்னின. மணல்பரப்பில் உதிர்ந்த மஞ்சள் வேப்பிலைச்சருகுகள் பொன்னாலானவை போலிருந்தன. என் உடல் முழுக்க இனிய தினவு. இடுப்பில் தொடைகளில் புஜங்களில் இனிய உளைச்சல். நடக்கும்போது என் உடல் முழுக்க சுருள்வில்கள் இறுக்கமாக முடுக்கப்பட்டதாக, என் மூட்டுகள் முழுக்க எண்ணைபோட்டு செம்மையாக்கப்பட்டதாக உணர்ந்தேன்

படிகளில் இறங்கும்போது கிரேசி நினைவு வந்தது. புன்னகைசெய்துகொண்டேன். இன்று அவள் கண்களைத் தவிர்க்கக் கூடாது. அவள் கண்களை நேராக நோக்கி ‘சாயை குடிக்க வாறியாடீ?’ என்று கேட்கவேண்டும். அவளுடைய நாக்கு சிவப்பு அல்ல. மெல்லிய செந்நீலம். ஆனால் கண்பரப்புகளும் பற்களும் மட்டும் என்ன வெள்ளை. உப்புப்பரலின் வெண்ணிறம்

நான் பல்தேய்த்துவிட்டு மேலே வந்தேன். விடுதியில் காலையில் டீ கிடையாது. கருப்பட்டிக்காப்பிதான். பெரிய அண்டாவை கருப்பட்டியும் காபித்தூளும் போட்டு அனல் மேல் வைத்திருப்பார்கள். தளதளத்து மூடியைத் தள்ளிய காப்பியில் இருந்து நான்கு டப்ளர்களுக்குண்டானதை தகரப்போணியில் அள்ளிக்கொண்டேன். காப்பியுடன் அறைக்கு வந்தேன்

அருமை கண்ணாடி நோக்கி தலை சீவிக்கொண்டிருந்தான். நான் நாகமணியை காலைப்பிடித்து உசுப்பி எழுப்பினேன்

‘‘என்னல?’ என்றான்

‘காப்பி இருக்கு’’

அவன் எழுந்து காப்பியை டம்ளரில் விட்டு சூடாகவே குடித்தான். சந்திரனை நான் கூப்பிட்டதுமே எழுந்துவிட்டான். காபி வாசனை கிடைத்திருக்கும். காபியை அவனே ஊற்றிக்கொண்டான்

‘அருமை, லே காப்பி குடிக்கியாலே’’ என்றான் நாகமணி

‘நான் குடிச்சாச்சு’’

நான் சட்டையை எடுத்துபோட்டுக்கொண்டு அருமையிடம் ‘‘’போலாமா?’ என்றேன்

‘நீ வராண்டாம்’ என்றான் அவன் கண்ணாடியைவிட்டுத் திரும்பாமலே

‘ஏன்லே?’ என்று பதற்றத்துடன் கேட்டேன்

‘நீ வந்தா செரிவராது’’

‘‘ஏன்?’

‘வேண்டாம்னு சொன்னேன்ல? ’ என்று திரும்பிச் சீறினான்

‘ஏன்?’ என நான் தொண்டை அடைக்க கேட்டேன்

நாகமணி ''ஏம்லே? அவனுக்கு நாலு சக்கறம் கிட்டினா உனக்கென்ன கேடு?'

'லே நாகம், நீ உனக்க சோலியப்பாரு கேட்டியா? இது சங்கதி வேறயாக்கும்'

'குட்டிகளிட்ட வெளையாடுகானோ''

'இவன் அப்பிடிப்பட்ட ஆளொண்ணும் இல்ல''

'பின்ன?'

'லே, இவன் புக்கு படிக்கப்பட்ட ஆளாக்கும்..நீ கண்டியா..நேத்து இவன் கெடந்து ஒறங்கின ஒறக்கம்? அந்த புக்கப்பாரு. சப்பின பல்லி மாதிரியாக்கும் கெடக்குது'

நான் பார்த்தபோது என் புத்தகம் அழுந்திக்கிடந்தது. இரவு அதன் மேல்தான் தூங்கியிருக்கிறேன்

'நான் இனிமே..' என்று எதையோ ஆரம்பித்தேன்

'லே, இது செரிவராது பாத்துக்கோ. இது வேற ஏற்பாடாக்கும். அரக்கிலே ஈச்ச இருக்கது மாதிரியாக்கும் இதில கைய வைக்கியது. பின்ன எந்திரிச்சு பறக்கமுடியாது பாத்துக்க' அருமை சொன்னான் 'நீ புக்கு படிக்கணுமானா இனி இந்தமாதிரி சோலிக்கு வரப்பிடாது..'

'அவன் சொல்லுகதில நியாயம் உண்டும்' என்றான் நாகமணி

'எனக்கு பீசு அடைக்க பைசா?'

'ஏல பீசு பதினஞ்சு ரூவாதானே? நான் தாறேன்.. ' அருமை சொன்னான்

'நீ என்ன மயித்துக்கு குடுக்கே? நாலாப்பிரிச்சு குடுப்பம்' என்றான் நாகமணி

நான் சோர்ந்து போய் கட்டிலில் அமர்ந்தேன்

'ஆளறியாம வேற வல்ல எடத்திலயும் வேலைக்குப்போறதக் கண்டா வெட்டி வகுந்திருவேன்..கேட்டியாலே?'

'இல்ல' என்றேன் கண்ணீருடன்.

சிலகணங்கள் அமைதி. 'அறிவாக்கும்' என்றான் அருமை.

---

<u>புறப்பாடு 1: 4 – ஈட்டிநுனிக்குருதி</u>

நான் கல்லூரிக்குச் சென்றபோது அங்கே ஏதோ நிகழ்ந்திருந்தது. பத்துப்பதினைந்துபேர் என்னால் கலைக்கப்பட்டார்கள். இரண்டுபேர் என்னைநோக்கி வந்தார்கள். அருமை என் கையைப்பிடித்து 'லே, உனக்கு மணியார்டர் வந்திருக்கு' என்றான்

'எதுக்கு?' என்றேன். அம்மா அனுப்பியிருப்பார்களா என்ற எண்ணம்தான் முதலில் வந்தது. அவளுக்கு நீண்ட கடிதம் போட்டிருந்தேன். வீட்டைவிட்டுக் கிளம்பியதைப்பற்றி அப்பா அதிகம் அலட்டிக்கொள்ளவில்லை. அல்லது அப்படிக் காட்டிக்கொள்ளவில்லை

நாகமணி என்னை அவனை நோக்கி திருப்பி '' குமுதம்காரனுக்க பைசாவாக்கும்..நீ கதை எளுதினேல்லா?'

கல்லூரி நோக்கி ஓடினேன். நல்லவேளையாக போஸ்ட்மேன் போகவில்லை. ஏராளமான பதிவஞ்சல்களை கொடுத்துக்கொண்டிருந்தார். மூச்சிரைக்கச்சென்று அவர் முன் நின்றேன்

'என்னவாக்கும்?'

'மணியார்டர்'

'நீராவே செயமோகன்?'

'ஆமா'

'அடையாளம் இருக்கா?'

என் புத்தகங்களைக் காட்டினேன். அன்றெல்லாம் அடையாள அட்டை என்றொரு வழக்கம் இல்லை. அவர் என் பெயரைப்பார்த்துவிட்டு 'பதினஞ்சு ரூவா உண்டு' என்றார்.

தலையசைத்தேன்.

'அம்பதுபைசா கம்மீஷன் கட்டு-அது எப்பமும் உள்ள பதிவாக்கும்'

அதற்கும் தலையசைத்தேன்

பதினைந்து ரூபாயை பிரமையுடன் வாங்கிக்கொண்டேன். முதலில் அந்தக்கதை என்ன என்றே நினைவுக்கு வரவில்லை. குமுதத்தில் அது வெளியாகியிருக்கிறது. கல்லூரி விலாசத்துக்கு இதழும் வந்திருக்கிறது. நேராக நூலகம் சென்றிருக்கும். அப்போதெல்லாம் குமுதம் வாசிப்பதில்லை. எனக்கு மலையாள இலக்கிய ருசி கிடைத்த காலம் அது.

திரும்பிவந்தபோது எல்லாரும் சூழ்ந்துகொண்டார்கள். 'மக்களே என்னலே கத?' என்றான் ராஜு

எவ்வளவு யோசித்தும் என்ன கதை என்று நினைவுக்கு வரவில்லை. வாரம் இரண்டுகதை எழுதுவேன். அஞ்சல் செலவைக் குறைப்பதற்காக ஒரே உறையில் நாலைந்து கதைகள்கூட அனுப்புவேன். சின்னவயதில் நிறையவே எழுதினேன். பணமும் அவ்வப்போது வரும் . நடுவே கதை எழுதுவது நின்றுவிட்டிருந்தது. விடுதிக்கு வந்தபின்புதான் மீண்டும் எழுத ஆரம்பித்தேன். முன்பு எழுதி மறந்துபோன கதைகளை எல்லாவற்றையும் திரும்ப எழுதிக்கொண்டிருந்தேன்.

ஆனால் கதையை ஏன் யாருமே வாசிக்கவில்லை? கல்லூரியில் முதல்வருடம் எழுதிய கதைகளை மங்கள ஆண்டணி சுரேந்திரா வாசித்து பாராட்டினாரே? அவர்கூட கவனிக்கவில்லையே?

'மாப்ள பைசாவ என்னல செய்யப்போறே?' ராஜூ கேட்டான்

'பரோட்டா திம்போம்' என்று சொல்லி அருமை என் பையில் இருந்து பணத்தை எடுத்துக்கொண்டான். 'ஆருலே வாறது?'

'லே இன்னைக்கு மனோகரன் கிளாஸாக்கும்'

'மனோகரன மண்ணத்திங்கச்சொல்லு-நாங்க கெளம்பியாச்சு'

ஏழுபேர் கொண்ட கும்பல் பரோட்டாசால்னாவுக்காக கிளம்பியது. பேருந்துக்கு பணத்தை வீணடிக்கக்கூடியவர்கள் அல்ல. ஆகவெ பின்பக்கம் வேலி ஏறிக்குதித்து முந்திரிமரங்கள் அடர்ந்த தோப்புகள் வழியாக ஜெயசேகரன் ஆஸ்பத்திரிக்கு சென்றோம். அப்பகுதியில் நாலைந்து பரோட்டாக்கடைகள் உண்டு.

'லே, நல்ல பாட்டு போடுத கடைக்குப்போவம்லே' என்றான் முருகேசன்

'பாட்டயா பிச்சு திங்கப்போறே? நல்ல சகாயவெலைக்கு பரோட்டா கிட்டணும்-வாலே'

மொத்தக்கடையே கரிபிடித்திருந்த ஒரு ஓலைக்கூரைக்குச் சென்றோம். கல்லாவில் இருந்தவரும் கரி மூடியிருந்தார். பின்னால் கரிபடிந்த ஏசு, தூய இதயத்துடன் அருள்புரிந்தார். அப்பால் அவரது கரிமூடிய மனைவி.

'மரியண்ணா, இஞ்சேரும், மொத்தம் ஏளு இல்ல எட்டு ஆளு. ரொக்கம் பதினஞ்சுரூவா-பரோட்டா சகாயமாட்டு வேணும்' என அருமை பேரத்தை ஆரம்பித்தான்.

'இங்கிண எப்பமும் சகாயவெலையாக்கும்லே-வேணுமானா அங்க கேட்டுப்பாரு'

ஒருபரோட்டாவுக்கு அன்று ஐம்பது பைசாதான். ரூபாய்க்கு மூன்று என மரியண்ணன் இறங்கி வந்தார். மொத்தம் நாற்பத்தைந்து பரோட்டா. சால்னாவுக்கும் பச்சைத்தண்ணீருக்கும் விலை கிடையாது. மாட்டுக்கறிக்குழம்பில் துண்டு கிடையாது. கேட்கக்கூடாது. பேரம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

கீற்றிலைகள் விரிக்கப்பட்டன. தண்ணீர் தெளித்து அழுத்தமாக நீவுகையில் அருமை ஒரு பிரபுவைப்போல கம்பீரமாக இருந்தான்.

''அண்ணா ரேடியோவப் போடுங்க, கேப்பம்' அருமை கொடுத்த காசுக்கான நுகர்வின்பத்தைச் சற்றும் குறைக்கத் தயாராக இல்லை.

'பாட்டு இந்நேரம் இருக்காதுல்லா?'

'எல்லாம் ரேடியோதானே? போடுங்க'

ரேடியோ கரகரவென முனகியபின் ஏதோ பேச ஆரம்பித்தது. யாரோ இருவர் யாழ்ப்பாணத்தமிழில் பேசிக்கொண்டிருந்தனர். 'இங்காலை வருவினமெண்டு நிண்டனான்-'' எங்களூர் பகுதியில் யாழ்ப்பாணத்தமிழ் சுத்தமாகப்புரியும். நாங்களும் அதே நாதத்துடன் பேசக்கூடியவர்கள். விசர், பஞ்சி போன்ற சில அரிய சொல்லாட்சிகள்

மட்டுமே வேறுபாடு. அவர்களுக்கும் நீக்கம்பு அம்மிங்கிருபோன்ற எங்கள் சொல்லாட்சிகள் இல்லைதானே.

பரோட்டா புதியதாகப் போடப்படவில்லை, சூடுபண்ணப்பட்டது. மரியண்ணன் பரோட்டாமேல் சினம் எழுந்தவர்போல இரு கைகளாலும் அழுந்தப்பற்றி தாறுமாறாகப் பிய்த்து இலைகளில் குவித்து வைத்தார். அதன் மேல் செந்நிறமாக இருந்த மாட்டிறைச்சி சால்னாவை ஊற்றினார். அதுவும் கொதிக்கவைக்கப்பட்டதுதான். கொஞ்சம் புளித்திருந்தாலும் சூடாக்கப்பட்டபோது நல்ல வாசனையை விட்டுக்கொண்டிருந்தது. அனைவரும் ஆவேசத்துடன் சாப்பிட ஆரம்பித்தனர்

மென்றபோது என் மூளையில் அந்த அசைவு தட்டியிருக்கவேண்டும். எனக்கு கதை நினைவுக்கு வந்தது. ஜெயப்ரியா என்றபேரில் கதை பிரசுரமாகியிருந்தது. ஒரே இதழுக்கு பலகதைகளை அனுப்புகையில் பல பெயர்களில் அனுப்பும் வழக்கமிருந்தது எனக்கு. 'லே அந்தக்கதை இப்பம் ஓர்மை வருது'

'என்னல கதை?' என்றான் அருமை முகமே இறுகி நெகிழ மென்றபடி

'ஒரு பிள்ளைக்க கதையாக்கும்'

'பிள்ளைக்க கதைண்ணா?'

கதையைச் சொன்னேன். கிராமத்திலிருந்து சின்னப்பெண்களை ஒரிசாவுக்கு இறால்மீன் தொழிற்சாலைக்காக கூட்டிச்செல்கிறார்கள். பெண்களின் வீட்டினருக்கு ஆளுக்கு ஐந்தாயிரம் ரூபாய் முன்பணம் கொடுக்கப்படுகிறது. ஏற்கனவே கிராமத்தில் இருந்து ஒரிசா சென்று அங்கே இறால்பண்ணையில் வேலைபார்க்கக்கூடிய திரேஸக்காள்தான் வீடுவீடாகச் சென்று பெற்றோரிடம் பேசி பெண்களைச் சேர்க்கிறாள். அவள் இறால் உரித்து பணம்சேர்த்து இலைத்தண்டுபோல செயினும் அஞ்சுகல் கம்மலும் போட்டு பளபளப்பாக இருக்கிறாள்.

அக்காளின் சிரிப்பையும் ,அவள் போட்டிருக்கும் நகைகளையும், குளப்பட்டியின் பச்சைப்பாசி போன்ற அவள் புடவையின் மென்மையையும் கண்டு மோகம் கொள்ளும் லிஸியின் கதை நான் எழுதியது. அக்காளைப்போல அவளிடம் ஆசையாக யாருமே பேசியதில்லை. அவளுக்கு உண்மையில் என்ன பிடிக்கும் என்று கேட்டதுமில்லை. திருவனந்தபுரம் வரை அக்காள் பஸ்ஸில் கூடவே வருகிறாள். லிஸி அக்காளின் உருண்ட மென்மையான கைகளை பிடித்து தன் மடியிலேயே வைத்திருக்கிறாள்.

ஆனால் திருவனந்தபுரம் ரயில்நிலையத்தில் தெரிகிறது அக்காள் கூட வரப்போவதில்லை என. அக்காள் இறங்கும்போது லிஸி பதறியபடி 'அக்கா நீங்க வரல்லியா?' என்கிறாள். ஆனால் அக்காள் வேறு ஆளாக இருந்தாள். 'கைய எடுட்டீ சவமே' என்றாள். ரயில் கிளம்பியது. அதுவரை அறிந்த அனைத்துமே மாறிப்போயிருக்கும் இன்னொரு உலகைநோக்கி லிஸி சென்றுகொண்டிருந்தாள்.

அருமை சாப்பிட்டுமுடித்து ஏப்பத்துடன் எழுந்து சென்று எச்சில்இலையைப் போட்டான். அவன் கைகள் மரக்கட்டையாலானவை போலிருக்கும். கைகளை உரசிக்கழுவும்போது கட்டை உரசும் ஒலி கேட்கும். ஏப்பம் விட்டபடி என்னிடம் 'பிறவு?' என்றான்

'கதை அம்பிடுதான்' என்றேன்.

அருமை பத்து பைசா வைத்திருந்தான். அதற்கு வெற்றிலை போட ஆரம்பித்தான். தளிராகப்பார்த்து ஒரு வெற்றிலையைப் பொறுக்கி எடுத்து நரம்புகளை உரித்து நுனி கிள்ளி அதை பக்குவப்படுத்தியபின் தூணில் தொங்கிய குடுக்கையில் இருந்து சுண்ணாம்பை தொட்டு அதில் நீவினான். கடை வைத்திருந்த ஒற்றைக்கை ஆள் கொடுத்த களிப்பாக்குத் துண்டுகளை வைத்துச் சுருட்டி வாயில் அதக்கிக் கொண்டான். தாடை இறுக மென்றான். சுட்டு விரலில் கொஞ்சம் சுண்ணாம்பும் மற்ற இரு விரல்களில் ஒரு துண்டு பாக்கும் வைத்துக்கொண்டான். பதம் அமைவதற்காக மேற்கொண்டு சேர்ப்பதற்கு.

அருமையை அந்த அளவுக்கு சொகுசான இதமான மனிதனாக பார்த்ததில்லை. அவன் என்னைப்பார்த்து தாடையை மேலே தூக்கி எச்சில் சிந்தாமல் 'பொறவு?' என்றான்.

'என்ன பொறவு?'

'இல்ல, அந்தக்குட்டி என்ன ஆனா? ரெச்சப்பட்டாளா?'

'கதைய அங்க நிப்பாட்டிட்டேன் அருமை'

அருமை வாயைத்திறந்து என்னைப்பார்த்தான். சிலகணங்களுக்கு அவனுக்கு ஒன்றும் புரியவில்லை.

'அது எப்பிடி? அவ பாவப்பெட்ட குட்டியில்லா?'

'ஆமா அருமை.ஆனால் அதுக்குமேலே கதை இல்லியே'

'லே தாயளி, அது நீ எளுதின கதையில்லாலே?'

'ஆமா'

'பின்ன நீ எப்டிலே அந்தப்பாவப்பெட்ட குட்டிய கேற்றிவிட்டு சூத்தையும் திருப்பிக்கிட்டு வந்தே?'

கோபமாக 'பின்ன நான் என்னசெய்யணும்?' என்றேன்

'அநத தேவ்டியாள பிடிச்சு வண்டிக்கெடையிலே சாத்தணும்லா? அந்த நாயிகளுக்கு அள்ளையிலே ரெண்டு சவிட்டுகுடுத்திட்டு குட்டி வெளிய எறக்கணும்'

'ஆரு நானா?'

'நீயில்லேண்ணா கதையில உள்ள வேற ஆராவது. லே திருவனந்தபுரம் ரெயிலிலே கைக்கு உறப்புள்ள ஆணாப்பொறந்தவன்மாரு இல்லாம ஆயிட்டானுகளா?'

'லே அரும, இது கதையில்லா?'

'கதைண்ணாலும் ஒரு நாயம் வேண்டாமா?' அருமை கொதித்தான் 'எரப்பாளி நாயே -அந்த பாவப்பெட்ட குட்டிய அனாதையா சீரளிய விட்டுட்டா நீ கதைய எளுதுகே? சீவிருவேன் தாயளி'

இது என்ன பிரச்சினை என்றே எனக்குப்புரியவில்லை

'அது தப்புண்ணுதானே சொல்லுதேன்'

'தப்புண்ணு நீ சொல்லி தெரியணுமாலே நாறத்தேவ்டியாமோனே?'

'லே வாய விடாதே'

'வாய விட்டா நீ என்னல செய்வே? லே நீ என்னல செய்வே?'

ராஜு வந்து எங்களை பிடித்து விலக்கினான். 'லே அருமை நீ அடங்குலே-லே செயா, நீ அந்தால போலே'

'அந்தப் பாவப்பைசாவக்கொண்டாக்கும் இவன் பரோட்டா வேங்கி குடுத்திருக்கான்- பீயத்திண்ணது மாதிரி இருக்கு தூ- தூ-'

'லே அரும அடங்குலே'

'இந்த நாயி எனக்க வாய நாறவச்சிட்டானே'

'லே சண்ட போடாதியலே வாலே'

நாங்கள் மீண்டும் முந்திரித்தோப்புக்குள் நுழைந்தோம். கண்கலங்கி அழும் நிலையில் இருந்தேன்.

ராஜு 'என்னல காரியம்? 'என்றான்.

நான் சொன்னேன்.

'இந்த நாய இங்கிண போட்டு அடிக்கணும்' என்று அருமை நடுவே என் மேல் பாய பிறர் பிடித்து விலக்கினர்

முழுக்கக் கேட்டபின் ராஜு 'அருமை சொல்லுகதிலயும் நியாயம் உண்டு-அப்டி விட்டுப்போடப்பிடாதுல்லா?' என்றான்

எனக்கு அவர்கள் சொல்வதே புரியவில்லை. 'அது ஒரு கதையாக்கும்- நடக்காத விசயம்-' என்றேன்.

'கதைண்ணு தெரியும்லே-ஆனா கதையிலயும் முத்தாலம்மனுக்க நீதிண்ணு ஒண்ணு வேணுமா இல்லியா?'என்றான் ராஜு.

என்ன சொல்வதென்று அறியாமல் மாறி மாறிப்பார்த்தேன். எல்லா முகங்களும் என்னை கடுமையாகப் பார்த்துக்கொண்டிருந்தன. பலவீனமாக 'கதையெல்லாம் அப்டித்தான் எழுதணும்' என்றேன்.

யாரும் ஒன்றும் சொல்லவில்லை. முந்திரி நிழலில் செம்மண் பரப்பில் அமர்ந்திருந்தோம். சட்டென்று லிஸியை நினைத்தேன். எனக்கு மனம் பொங்கிவிட்டது, கண்ணீர் விட ஆரம்பித்தேன்.

'லே என்னல? லே'

'தெரியாம எளுதினதாக்கும்' என்று தொண்டை இடறச் சொன்னேன்

'செரிலே மக்கா.விடு.லே அருமை, விடுலே. அவன் ஏமான்வீட்டுப்பயல்லா.அவனுக்கு பாவங்களுக்க துக்கம் தெரியாதுல்லா?'

அருமை தலையசைத்தான்.

---

## புறப்பாடு 1: 5 – கருத்தீண்டல்

சாயங்காலம் கல்லூரியிலிருந்து திரும்பி வந்தபோது விடுதியறை வாசலில் ஒரு கரியபெண் அமர்ந்திருந்தாள். என்னைக்கண்டதும் பூனைபோல சத்தமில்லா நாசூக்குடன் எழுந்தாள். பார்த்ததுமே அவள் ஜானுக்கு உறவு என்று புரிந்துகொண்டேன். பதினாறுவயதிருக்கும். பெரிய கண்கள். கலைந்துபறக்கும் கூந்தல். கையில் ஒரு சிறிய பை.

அறையைப்பூட்டி சாவியை கட்டளைக்குமேலேயே வைத்துவிட்டுச் செல்வோம். அறைக்குள் எவருக்கும் திருட்டுபோகுமளவுக்கு உடைமைகள் ஏதும் இல்லை. சாவியையெடுத்து திறந்தபடி 'ஜானுக்க தங்கச்சியா?' என்றேன்.

'ஓம்.அம்ம சொல்லிச்சு.' என்று மெல்லிய குரலில் இழுத்தாள். ஐந்துவயதுப்பெண்ணின் குரல்.

'ஜான் வாறதுக்கு நேரமாவும்லா? அவன் சோலிக்குப்போயிட்டுதான் வருவான்'

அவள் ஒன்றும் சொல்லவில்லை

அறைக்குள் சென்று கட்டிலில் அமர்ந்தேன். அவள் வெளியே சுவரோடு ஒட்டியவள்போல நின்றிருந்தாள். நீலநிறமான சட்டையும் பாவாடையும் அணிந்திருந்தாள். மிகமெலிந்த பெண். மலைப்பகுதிகளில் ஆணும்பெண்ணும் குழந்தைகளும் எல்லாருமே மெலிந்துதான் இருப்பார்கள். மாடுகள் மட்டும்தான் கொழுத்திருக்கும்

'உள்ள வந்து இருக்கியாட்டீ?' என்றேன்

'வேண்டாம்' என்றாள்

அவளை பார்ப்பதை தவிர்த்தேன். 'உனக்க பேரு என்ன?'

'மேரி'

'எத்தனாம் கிளாஸு படிக்கே?'

'படிக்கேல்ல'

'ஏன்?'

'அங்கிண பெரிய பள்ளிக்கூடம் இல்லல்லா?'

'சின்னப்பள்ளிக்கூடம் தீருத வரைக்கும் படிச்சியோ?'

'ம்'

'பைபிளு படிப்பியா?'

அவள் ஒன்றும் சொல்லவில்லை

'ஏம்டீ?'

அதற்கும் பதில் சொல்லவில்லை

அவளைப்பார்த்தேன். உடம்பும் முகமும் தெரியவில்லை. நீலச்சட்டையின் விளிம்பு மட்டும்தான் தெரிந்தது

'படிக்க நேரமில்லியோ?'

'மலையில உள்ள பள்ளிக்கூடத்திலே உப்புமாவு மட்டும்தான் குடுப்பாவ.படிக்கச் சொல்லிக்குடுக்கமாட்டாவ'

குழம்பி 'ஏன்?' என்றேன்

'அங்கிண வாத்திமாரு இல்லல்லா??'

'ஓ'

'அப்புக்குட்டி மட்டும்தான் அங்கிண இருப்பாரு.அவருக்கும் வைவிளு படிக்கத்தெரியாது'

மலைப்பகுதிகளிலும் உள்பகுதி கிராமங்களிலும் உள்ள பள்ளிகளைப்பற்றி அப்போது எனக்கு ஒன்றும் தெரியாது. பிறகு சேவைநிறுவனங்களுடன் அலைந்து திரிந்து நேரில் அவை செயல்படும் விதத்தை அறிந்துகொண்டேன். அங்கே அனேகமாக எந்தப்பள்ளியிலும் ஆசிரியர்கள் செல்வதில்லை. சம்பளத்தில் ஒருபகுதியை மேலதிகாரிகளுக்குக் கொடுத்துவிட்டால் வருகைப்பதிவேட்டில் கையெழுத்திட அனுமதிப்பார்கள். மதிய உணவு ஒழுங்காகக் கொடுக்கப்பட்டால் மக்கள் ஆசிரியர்கள் பள்ளிக்கு வராததைப்பற்றி கேட்கமாட்டார்கள். ஐந்தாம் வகுப்புவரை படிக்காத பிள்ளைகள் மலையில் கிடையாது. ஆனால் அ எழுதத்தெரிந்த ஒரு பிள்ளைகூட இருக்காது.

காரணம் ஆசிரியர்பயிற்சி பெற்று வேலைக்குள் நுழைபவர்களில் பெரும்பாலானவர்கள் நாகர்கோயில் 'டவுண்'காரர்கள். அவர்களுக்கு மலைப்பகுதி என்பது நினைத்துப்பார்க்கமுடியாத அளவுக்கு தொலைவானது. சென்றகாலங்களில் மலேரியாவும் காலராவும் ஆட்சிசெய்த பகுதிகள். ஆகவே மலை என நினைத்தாலே குலைநடுங்குவார்கள். நாகர்கோயிலில் நின்று பார்த்தால் விஷநீலத்தில் மேற்கிலும் தெற்கிலும் எழுந்து தெரியும் மலைகள் அவர்களை எப்போதுமே அச்சுறுத்தும். 'மலைவெள்ளம் ஆத்தில வந்தா வெந்நி வச்சு வீட்டிலயே குளிக்குத ஆளுக. பின்னல்லா மலையில செண்ணு சோலி செய்யுகது?' என்று ஒரு கல்வியதிகாரி சொன்னார்

'..பின்ன ஜான் எப்பிடி படிச்சான்?'' என்றேன்

'அவனுக்கு பாதரு சொல்லிக்குடுத்தாருல்லா?' என்றாள் மேரி

நேரமாகிக்கொண்டிருந்தது. விடுதியில் எட்டுமணிக்குமேல்தான் கொஞ்சமாவது மனித நடமாட்டம் இருக்கும். நானேகூட புத்தகத்தை வைத்துவிட்டு நூலகம் போகத்தான் வந்தேன். ஆனால் இந்தப்பெண்ணை இங்கே தனியாக விட்டுவிட்டு எப்படிப் போவது என்று தெரியவில்லை.

'சும்மாதான் வந்தியா?'

'அம்மை சொன்னா..'

'எதுக்கு..'

அவள் மிகவும் குரலைத்தாழ்த்தி 'ரூவா' என்றாள்.

'எம்பிடு?'

'அம்பது..' என்றபின் 'அம்மைக்கு மேலுசொகமில்ல' என்றாள்

'என்ன?'

'துள்ளப்பனி..மிசனுக்கார ஆசுபத்ரி மருந்தாக்கும் குடிச்சியது'

எழுந்து என் பாண்ட் பாக்கெட்டில் இருந்து ஐந்து பத்துரூபாய்களை எடுத்தேன். 'இந்தா இத கொண்டுட்டுப்போயி குடு'

'அய்யோ..'

'இங்கபாரு குட்டி, நீ இங்க ராத்திரி நிக்கமுடியாது. கேட்டியா?'

அவள் பேசாமல் நின்றாள்

'ஜான்கிட்ட சொல்லுதேன். நீ போ. அவன் வாறதுக்கு ராத்திரி ஆவும்'

அவள் மெல்ல உள்ளே வந்து பணத்தை வாங்கிக்கொண்டாள். மிகமெலிந்த கைகள். உள்ளங்கை வாழைப்பூ நிறமாக இருந்தது

'அம்மைக்கிட்ட சொல்லு ஜான் நல்லா இருக்கான் எண்ணு..என்னட்டி?

'சொல்லுதேன்'

சட்டென்று அவள் கண்கள் என் கண்களைச் சந்தித்தன. என் மனம் அதிர்ந்தது. இரு கூரிய கத்திமுனைகள் நுனியில் மட்டும் உரசிச்சென்றதுபோல. அவள் சிறுமி அல்ல என்று அறிந்தேன். நான் சிறுவன் அல்ல என்றும்.

அந்தசிந்தனைகளின் நுனியில் அவள் எப்படி எந்நேரத்தில் சென்று சேர்வாள் என்ற எண்ணம் எழுந்தது. 'ஏம்டீ நெடுமங்காட்டு பஸ்ஸிலெயா போவே?'

‘ஓம்’

‘அது வெலக்குக்குபோறப்ப எட்டுமணி ஆயிருமே. அதுக்குமேலே ஏழெட்டு கிலோமீட்டர் நடக்கணும்லா?’

‘வெலக்கிலே கோயிலு இருக்குல்லா? அங்கிண தங்கிட்டு காலம்ப்ற போவேன்-’

சர்ச்சில் அப்படி நிறையபேர் தங்கியிருப்பார்கள். ‘பைசவா பத்திரமா வச்சுக்கோ’ என்றேன்.

‘ஓம்’

‘எங்க வப்பே?’

மீன்கொத்தி தொட்டெழுந்த தடாகம்போல கண்கள் அதிர்ந்தன. ‘உள்ளுக்கு’ என்றாள்

‘ஓ’ என்றேன்

அவள் வெளியே சென்று அதேபோல நின்றாள். இப்போது எனக்கு அறை கனமான புழுக்கமான காற்றால் நிறைந்திருப்பது போலிருந்தது.

‘சாயை குடிச்சுதியா?’

‘வேண்டாம்’

‘செரி அப்பம் போ’

அவள் ‘வாறேன்’ என்றாள்.

அவள் வராந்தாவைத்தாண்டிச் செல்வதை பார்த்தேன். அவள் மறைந்ததும் ஆசுவாசம் கொண்டேன். கட்டிலில் படுத்துக்கொண்டேன். கூரையில் மழைநீர் வளையங்கள் காட்டுமரத்தில் சப்பைக்காளான்கல் பூத்திருப்பது போல உலர்ந்திருந்தன. அவற்றையே பார்த்துக்கொண்டிருந்தேன்.

ஜான் இரவு எட்டுமணிக்கு மேல்தான் வந்தான். நடை சரியில்லாமல் இருந்தது. வந்ததுமே நாற்காலியில் அமர்ந்துகொண்டு பைபிளை எடுத்து பிரித்தான்

‘ஏம்லே?’ என்றேன்

‘ஏசு சோதிக்காரு’

‘என்னலே ?’

காலைக்காட்டினான். அழுக்குத்துணியால் கட்டு போட்டிருந்தான்.

‘என்னல ஆச்சு?’

ஆணியை மிதித்துவிட்டானாம். சாயங்காலம் வகுப்பு முடிந்ததும் சிமிண்ட் வார்ப்பு முடிந்த கட்டிடம் ஒன்றுக்கு தண்ணீர்விடுவதற்காகச் சென்றிருக்கிறான். கீழே கிடந்த பலகையில் நீட்டியிருந்த ஆணி ஏறிவிட்டது

‘ரெத்தம் வந்ததா?’

‘உள்ள ரெத்தம் எல்லாம் போயாச்சுலே-இனி ஊறினாத்தான் உண்டு’

‘காலக்காட்டுலே’’

‘லே நோவுதுலே’

கட்டை மெல்ல அவிழ்த்தேன். உடனே என் கையெல்லாம் ரத்தம்

‘கெட்டுலே-லே கெட்டு கெட்டு’

இறுக்கிக் கட்டினேன்

‘என்ன மருந்துலே வச்சே?’

‘கெட்டுமேலே ஒண்ணுக்கடிச்சேன்-பொறுத்திரும்’

மலையில் அது ஒருவழக்கம். எந்தக்காயம் மீதும் உடனே சிறுநீர் கழித்துவிடுவார்கள்

‘நீவா நாம கோட்டாறு ஆசுபத்திரிக்கு போவம்..’

‘இதுக்கு என்னத்துக்கு மருந்து..நான் படாத முள்ளா? போலே’

மீண்டும் மீண்டும் சொன்னேன். துரு ரத்தத்தில் கலந்தால் உயிருக்கே ஆபத்து என்றேன்.

‘பைசா கேப்பாவனுகளா?’

‘சர்க்கார் ஆசுபத்திரில்லா, கேக்கமாட்டாவ. கேட்டா குடுக்கேன். எனக்க கையிலே ரூவா இருக்கு’

அவன் கிளம்பினான். படி இறங்கும்போது அவனால் நடக்கமுடியவில்லை என்று கண்டேன். ‘ஏசுவே ராசாவே’ என்று முனகிக்கொண்டே இருந்தான்

குறுக்குவழியாக கோட்டாறுக்கு நடந்தோம். மூன்று கிலோமீட்டர் தூரம் இருக்கும். அவனை தோளோடு தாங்கிக்கொண்டேன். ஒவ்வொரு அடிக்கும் ‘ஏசுவே ராசாவே’ என்று சொன்னான்

கோட்டாறு ஆஸ்பத்திரிக்குச் சென்று சேரும்போது பத்துமணி. அந்நேரத்திலும் அங்கே கூட்டம் நிறைந்திருந்தது. அதிகமும் நடுவயதுப்பெண்கள். தூக்குவாளிகள் ஒயர்கூடைகள் புட்டிகளுடன் அலைந்துகொண்டிருந்தார்கள்.

ஒரு நர்ஸ் ‘அய்யய்ய. இங்க என்ன ரெத்தம்? லே அந்தால போலே..அந்தால போ’ என்றாள்

‘எங்க?’ என்றேன்

‘எங்கியாம் போ..லே போலே’ என்றபடி சென்றுவிட்டாள்

இன்னொரு நர்ஸிடம் கேட்டேன். அவளும் ‘அந்தால போலே..இஞ்ச நிக்கப்பிடாது’ என்றாள்

சட்டென்று எழுந்த கோபத்துடன் ‘எங்கபோணும். அதச் சொல்லுங்க’ என்றேன்

‘என்னலே?’ என்று அந்த நர்ஸ் கோபமாக நிமிர்ந்தாள்.

‘கேட்ட கேள்விக்கு பதிலச்சொல்லுங்க. ஓப்பி எங்க?’ என்றேன்

அவள் கண்கள் மாறின. அவள் என் சாதியை ஊகித்துவிட்டாள். ‘ஓப்பி அங்க..அங்க மாணிக்கம்னு ஒரு ஆளு உண்டு..கேளுங்க’ என்றாள்.

‘நீங்க வந்து சொல்லுங்க’ என்றேன் அவள் முகத்தை கூர்ந்து பார்த்தபடி.

‘வாறேன்’ என்றாள் கண்களை திருப்பியபடி.

அவளுக்குப்பின்னால் சென்றபோது ஜான் ‘நீ வரேல்லண்ணா என்னைய நாய தொரத்துகது மாதிரி தொரத்துவா’ என்றான்

‘பேசுத மாதிரி பேசணும்லே’

‘பேசணும்லா? லே, அதுக்கு நம்ம கையில பைசா இருந்தா மட்டும்போராது. நம்ம அப்பன் தாத்தன் கையிலயும் பைசா இருந்திருக்கணும் கேட்டியா?’

நர்ஸே புண்கட்டுமிடத்திலிருந்த மாணிக்கத்தை கூப்பிட்டு புண்ணை கழுவி கட்டும்படிச் சொன்னாள். அவள் என்னைத்தான் சுட்டிக்காட்டினாள். மாணிக்கம் என்னைப்பார்த்து வந்து ‘ஆருக்காக்கும் புண்ணு?’ என்றான்

‘இவனுக்கு..காலிலே ஒரு ஆணி குத்திப்போட்டு’

‘ஆணிகுத்தாத ஆளுண்டா நாட்டிலே? இவனாரு? வீட்டு சோலிக்காரனா?’

‘இல்ல சேந்து படிக்கோம்’

‘ஓ’ என்றார். அந்த ஓவுக்கு என்ன பொருள் என்று தெரியவில்லை

ஜான் தரையில் அமர்ந்துவிட்டான். காலை நீட்டிக்கொண்டு ‘ஏசுவே ஏசுவே’ என்று சொல்லிக்கொண்டிருந்தான்.

'நான் மாணிக்கமாக்கும். ஏசுவில்ல' என்றபடி மாணிக்கம் துணிச்சுருளை எடுத்தார். அவர் ஒரு புட்டியைத்திறந்தபோது சாராயவீச்சம் எழுந்தது. ஜானின் கட்டை அவிழ்த்துவீசினார். ரத்தம் வழிய வழிய காயத்தைத் துடைத்து கிரீஸ்போன்ற ஒரு திரவத்தை பஞ்சில் நனைத்து அதில் வைத்து அழுத்திக்கட்டினார். ஜான் 'ஏசுவே எனக்க ஏசுவே!' என்று கூச்சலிட்டான்.

'ஆணிகுத்துகது பாம்பு கடிக்கப்பட்டது மாதிரியாக்கும்..வெசமெறக்கணும்' என்றார் மாணிக்கம்

ஒரு சின்னவயசு நர்ஸ் வந்து 'கையக்காட்டுலே' என்றாள்

ஜான் 'வேண்டாம்' என்றான்

'லே கையக்காட்டு' என்றார் மாணிக்கம்

ஜான் முகத்தைத் திருப்பிக்கொண்டு புஜத்தைக்காட்டினான். அவள் அதில் ஒரு ஊசியைப்போட்டாள். வழக்கமாக ஊசி போடுவது போல அல்ல. ஊசியை கிட்டத்தட்ட புஜம்மீது எறிந்தாள். அதன்பின் ஒரே அழுத்து. பஞ்சை வைத்துவிட்டு 'பிடிச்சுக்கோ' என்றபின் போய்விட்டாள்

'போலாமா?' என்றேன்

'போலாம்..பளுப்பு வராது. வந்தா மறுக்கா வந்து காட்டுங்க'

ஜானைப்பிடித்து எழுப்பினேன்

'ஏமானே, வெள்ளம்குடிக்கதுக்குச் சில்லற?'

பையிலிருந்து இரண்டுரூபாய் எடுத்து மாணிக்கத்துக்குக் கொடுத்தேன்.

திரும்பி வரும் வழியில் நாலைந்து இடங்களில் ஜான் நின்றான். 'லே தலையச் சுத்துது கேட்டியா?'

'ரெத்தம் போயிருக்குலே..'

'பாவங்கள ஏசு சோதிப்பாருலே' ஜான் மூச்சிரைத்தான். 'சுத்திச் சுத்தி வருதுலே'

'ஆஸ்டலுக்குப்போயி சோறு திண்ணா செரியாயிரும்' என்றேன்

மீனாட்சிபுரம் தாண்டவே ஒருமணி நேரம் ஆகிவிட்டது. 'லே ஜான் உனக்க தங்கச்சி வந்திருந்தா கேட்டியா?' என்றேன் . சாலை இருட்டில் மின்கம்பத்தைப்பிடித்தபடி நின்றிருந்தான்

'என்னத்துக்கு வந்தா ?'

'உனக்க அம்மைக்குச் சுகமில்லியாம்..அம்பது ரூவா வேணும்னு சொன்னா'

'லே, அது கிளவிக்க அடவாக்கும்..அவளுக்கு ஒரு தீனமும் இல்ல. நான் இஞ்ச டவுணிலே சம்பாதிச்சு ஜாளியடிக்கேண்ணாக்கும் அவ நினைக்கா..'

'அம்பது ரூவா குடுத்தேன்'

'அம்பது ரூவாயா?'

'எனக்க கதையெளுத்துபணம் கையில இருந்தது'

'கிளவி பொன்னு சேக்குகாலே..மொவள கெட்டிக்குடுக்கதுக்கு. தின்னமாட்டா நல்ல துணி எடுக்கமாட்டா. கிறிஸ்மஸுக்கு கூட மனசறிஞ்சு கஞ்சி குடிச்சமாட்டா'

'ஆர கெட்டிக்குடுக்கதுக்கு?'

'இந்தக்குட்டிய..இவளுக்கு இப்பம் பதினாறுல்லா? அடுத்த வருசம் அனுப்பிப்போடணும்னு சொல்லுதா'

விடுதிக்கு வந்தபோது ஜானுக்கு குமட்டல் இருந்தது. அறைக்குள் சந்திரனும் அருமையும் இருந்தனர். அவர்கள் தூங்க ஆரம்பித்த நேரம். ஜானைக்கண்டதும் எழுந்து வந்தனர்.அருமை, ஜானுக்கு சோற்றை நீர்விட்டு பிசைந்து கஞ்சியாக்கி ஓரிருவாய்கள் ஊட்டினான். ஜான் குமட்டியதும் விட்டுவிட்டான்.

நானும் ஜானும் தரையில் படுத்துக்கொண்டோம். ஜான் படுத்துக்கொண்டு 'லே அரும, வைவிள எடுத்து தலையணைக்கு அடியிலே வையிலே' என்றான்

பைபிளை ஒரு கையால் வருடிக்கொண்டே இருந்தபின் ஜான் தூங்கிவிட்டான். சிறிதுநேரம் இருட்டுக்குள் தெரிந்த அடிக்கூரையை பார்த்துக்கொண்டிருந்தேன். வெளியே வேப்பமரம் சிலிசிலுத்தது. பின்னர் கனவில் மேரியைக் கண்டேன். நானும் அவளும் ஒரு மலையடிவாரத்தில் நடந்துகொண்டிருந்தோம். ஆனால் அந்த நடை காற்றில் நீந்திச்செல்வதுபோல இலகுவாக இருந்தது. மேரி கையில் ஒரு பெட்டி வைத்திருந்தாள்

'அதுக்குள்ள என்னட்டீ?' என்றேன்

'வடைசுறுக்கா பணியாரம் எல்லாம் இருக்கு'

'தருவியா?'

'இல்ல. ஏசுவுக்கு குடுக்கதுக்காக்கும்'

காற்று சுழன்றடித்தது. என் கை எதிலோ மாட்டிக்கொண்டது. இல்லை, என் கையை யாரோ பிடித்து இழுத்தார்கள். விழித்துக்கொண்டேன். ஜான் என் கையைப்பிடித்திருந்தான்.

'ஏம்லே?' என்றேன்

ஜான் சொன்னது புரியவில்லை. கொளகொளவென்று ஒரு சத்தம் குரலுடன் கலந்துவிட்டதுபோல

எழுந்து விளக்கைப்போட்டு திரும்பியவன் அலறியபடி பின்னால் நகர்ந்தேன். என்னருகே புதிய ஒருவன் படுத்திருந்தான்.

அருமை பாய்ந்து எழுந்து ''என்னலே?' என்றான்

'இவன்...' என்று பீதியுடன் சுட்டிக்காட்டினேன்.

அருமை 'ஆருல இவன்? இஞ்ச எப்டி வந்தான்?' என்றதுமே புரிந்துகொண்டு 'லே, இவன் ஜான்லே' என்றான்

ஜான் இருமடங்காக இருந்தான். முகம் உப்பி வெளிறி உருண்டிருந்தது. சீனர்களைப்போல இடுங்கிய கண்கள். மூக்குபரந்து செம்புள்ளிகளுடன் இருந்தது. உதடு தடித்து தொங்கியது. தாடைத்தசை கீழிறங்கி கழுத்து இடுங்கி உடம்பே உப்பி ஒரு பூதாகரக் குழந்தை போலிருந்தான். விரல்கள்கூட உப்பி உருண்டிருந்தன. குழந்தைபோலவே கைகால்களை ஆட்டி ததும்பிக்கொண்டிருந்தான். கொளகொளவென வாயிலிருந்து ஒரு குரல் ஒலித்தது

சந்திரன் எழுந்து அருமையிடம் 'லே...என்னலே'' என்றான். ஜானை அருமை சுட்டிக்காட்டியதும் 'அய்யோ' என்று கதறினான்

அருமை ''இது மலைவாதையாக்கும்லே...பேயி' என்றான்

'இல்லலே, இண்ணைக்கு அந்த நர்சு குடுத்த ஊசி தப்பிப்போச்சு...வாறப்பமே தலை சுத்துதுண்ணு சொன்னான்'

'செத்திருவானாலே?' என்றான் சந்திரன் அழுகையின் விளிம்பில் நின்று.

'நெல்சன் சகாவு இப்பம் எங்கல இருப்பாரு?'

'நாகராஜாகோயிலுக்கு அந்தால கம்மூணிஸ்டு ஆப்பீஸுண்டு...அங்கிண இருந்தாலும் இருப்பாரு' அருமை இறங்கி ஓடினான்.

அதற்குள் அறைமுழுக்க பையன்கள் குழுமிவிட்டார்கள். 'இது தடிக்காரன்கோணம் சாயிப்புக்க பேயாக்கும்...நான் ஆளைக்கண்டிட்டுண்டு...இதுமாதிரித்தான் இருப்பாரு...ஆனை சவிட்டிச் செத்தாரு' என்றான் ஒருவன்

நெல்சன் வரும் ஒலி தொலைவிலேயே கேட்டது. 'லே வெலகுங்கலே...ஒற்ற ஒருத்தன் இங்கிண நிக்கப்பிடாது...லே மாறுலே'

நெல்சன் வந்து எட்டிப்பார்த்ததுமே 'லே, இது அலெர்ஜியாக்கும்...மருந்து மாறிப்போச்சு...லே இங்கிண போண் எங்க இருக்கு?' என்றான்

'வார்டன் ரூமிலே போண் உண்டும்'

வார்டன் சாம்ராஜ் ஒரு களியக்காவிளைககாரர். நடுநிலை ஆசிரியர் வேலை. பகுதிநேர பெந்தெகொஸ்செதே ஊழியம். கூடவே வார்டன் பொறுப்பு. ஆகவே வார்டன் வேலையை சமையற்கார அந்தோணிக்கே கொடுத்துவிட்டிருந்தார். அவருக்குண்டான பங்குப்பணத்தை நாலாம்தேதி பள்ளிக்குக் கொண்டுசென்று கொடுக்கவேண்டும். வார்டனின் அறையை நேசையன் என்ற இன்னொரு ஆசிரியருக்கு சகாய வாடகைக்குக் கொடுத்திருந்தார். கட்டில், கொசுவலை

,மேஜை, நாற்காலி இணைக்கப்பட்ட கழிவறை எல்லாம் உடைய வசதியான அறை. நேசையன் மாலை ஐந்துமணிக்கு வந்து கதவைமூடிக்கொண்டால் ரேடியோவின் எட்டரை மணி வரை பாட்டு கேட்பார். ஒன்பதுக்கெல்லாம் தூங்கிவிடுவார். எக்காரணம் கொண்டும் கதவைத்திறப்பதில்லை

நெல்சன் வார்டன் அறைமுன் சென்று நின்று 'வே கதவத்தெறவும்வே' என்றான்.

சன்னலைத் திறந்து நேசையன் 'லே, இஞ்சவந்து சல்லியம் செய்யப்பிடாது..போலீசிலே சொல்லுவேன்' என்றார்

'வே, ஒருத்தன் சாவக்கெடக்கான்வே..வேற எங்கயும் போண் இல்ல ..கதவத்தெறவும் வே'

'எனக்கு இதில காரியமில்ல' என்றபடி நேசையன் ஜன்னலைமூடிக்கொண்டார்

நெல்சன் ஆவேசமாக பாய்ந்து கதவை ஓங்கி மிதித்தான். கதவு அதிர்ந்தது. மீண்டும் இரண்டு உதை 'லே ஒரு பெஞ்ச நவுத்திக்கொண்டாங்கலே..ஒடைப்போம்'

நேசையன் கதவைத்திறந்து 'போக்கிரித்தனம் செய்யப்பிடாது-' என ஆரம்பிப்பதற்குள் நெல்சன் அவரது கன்னம் கண் காது எல்லாவற்றையும் சேர்த்து பளாரென்று ஓர் அறை விட்டான். அவர் 'எக்கம்மோ..என்னைய கொல்றாண்டோ' என்று அலறியபடி அப்படியே அமர்ந்துவிட்டார். மொத்தக்கூட்டமும் ஆரவாரம் செய்தது

திரும்ப ஜானைநோக்கி ஓடினேன். ஜான் கைகளை குழந்தைபோலவே ஆட்டினான். அவன் கையைப்பிடித்தேன். அவன் கொளக் கொளக் என்று சொன்னது என்ன என்று எனக்குப்புரிந்தது. என்பெயரை. என் உடம்பு குளிர்ந்தது.

நெல்சன் ஆஸ்பத்திரிக்கு போன் செய்து ஆம்புலன்ஸை வரச்சொன்னான். முதலில் அங்கே தூங்கிக்கொண்டிருந்த சின்னடாக்டர் ஏதோ சமாளிப்பாகப் பேசியதாகவும் ஐந்து நிமிடத்தில் ஆம்புலன்ஸ் வரவில்லை என்றால் எம்.எல்.ஏ ஹேமச்சந்திரன் அங்கே வருவார் என்று சொன்னதும் டாக்டர் பதறியடித்து ஆம்புலன்ஸ் அனுப்புவதாகச் சொன்னதாகவும் பிறகு அறிந்தேன்.

இருபது நிமிடங்களில் ஆம்புலன்ஸ் வந்துவிட்டது. சிவப்பு விளக்கு தலைக்குமேல் சுழல அது முற்றத்தில் நின்றது. தூளிக்கட்டிலைத் தூக்கிவந்த இரு சிப்பந்திகள் மேலே வந்து 'எங்க பேசண்டு?' என்றார்கள்.

நெல்சன் "இந்நா கெடக்கான்..பாத்து செய்யுங்க..பயலுக்கு வல்லதும் ஆனா பிறகு ஒற்ற ஒருத்தன் டாக்டர்னு சொல்லி நடக்கமாட்டான் இஞ்ச' என்றான்

'பென்சிலின் அலர்ஜியாக்கும்.. டெஸ்ட் டோஸு குடுக்காம ஏத்திப்பிட்டாவ' என்றார் முதிய சிப்பந்தி

'லே செத்திருவானால? ' என்றான் அருமை என் கையைப்பிடித்தபடி.

'சின்னவயசுதாலா?'

ஜான் அருகே அந்த தூளிக்கட்டிலை வைத்து அவனை இயல்பாகப் புரட்டி அதில் ஏற்றி தூக்கிக்கொண்டு இறங்கினார்கள். வண்டிக்குள் அவனை ஏற்றிக்கொண்டார்கள்.

'லே ஜெயா நீயும் கேறு..நாங்க பொறத்தால வாறம்' என்றான் நெல்சன்

ஏறிக்கொண்டேன். ஜான் கையை நீட்டி துழாவிக்கொண்டே இருந்தான். அவன் கையைப்பிடித்துக்கொண்டேன். வண்டி மிகையாகக் குலுங்கியது. இரு சிப்பந்திகளும் சாதாரணமாக ஏதோ பேசிக்கொண்டார்கள்.

ஜான் நேராக உள்ளே கொண்டுசெல்லப்பட்டான். சற்று நேரத்தில் நெல்சனும் சகாவு திவாகரனும் நான்கு ரப்பர்த்தொழிற்சங்க ஊழியர்களும் வந்து சேர்ந்தனர். பெரிய டாக்டரை அவரது வீட்டுக்கே சென்று கூட்டிவந்தார்கள்.

நான் என்ன செய்வதென்று தெரியாமல் பெர்ஞ்சில் அமர்ந்திருந்தேன். அங்கே ஏற்கனவே இருந்த ஒரு கிழவி என்னிடம் 'அடிபிடிக்கேஸா மக்கா?' என்றாள் ஆவலாக.

பெரியடாக்டர் வழுக்கையும் தொப்பையுமான குண்டு மனிதர். வெள்ளைவெளேரென்று இருந்தார். வெளியே வந்து திவாகரனிடம் 'முறிமருந்து போட்டாச்சு..ஒண்ணும் பிரச்சினையில்ல..நாளைக்குச் செரியாயிருவான்' என்றார்

'அந்த ஊசிபோட்ட தேவ்டியாள பாக்கணுமே' என்றான் நெல்சன். திவாகரன் அவனை தோளைத்தொட்டு அடக்கினார்.

'அவ நல்லதுக்காகத்தான் போட்டிருக்கா..டெஸ்ட் ஊசி போட்டு பாத்திருக்கணும்..அது அவ நெனைப்புல வரல்ல..இந்த ஊசியும் பென்சிலின் மாதிரியாக்கும். ஆனால் பென்சிலின் இல்ல. கேட்டா பென்சிலின் ஊசிக்குமட்டும்தான் டெஸ்டுன்னு நினைச்சேன்னு சொல்லுதா..நல்ல குட்டிதான்' என்றார் டாக்டர்

டாக்டர் சென்றபின் மேலும் அரைமணிநேரமாகியது அனைவருக்கும் நிலைமையை விளக்க.

'ஈ நேரத்தில் இவிடே சாயை கிட்டுமோடா?' என்றார் தோழர் திவாகரன்

'பஸ் ஸ்டாண்டுக்கு போனா குடிக்கிலாம் தோளர்'

நெல்சன் என்னிடம் 'லே நீ இங்க இரி-' என்றான். தலையசைத்தேன். அவர்கள் கூட்டமாகக் கிளம்பிச்சென்றார்கள். ஆஸ்பத்திரி வளாகம் மெல்ல அமைதி அடைந்தது. காலை நீட்டிக்கொண்டேன். சற்று நேரத்தில் நான்குபக்கமிருந்தும் பிசின் மாதிரி தூக்கம் வந்து மூடியது. கைவிரல்கள் ஒட்டிக்கொண்டன. கால்கள் சிக்கிக்கொண்டன. உதடுகளைக்கூட அசைக்கமுடியவில்லை. ஆனால் ஆஸ்பத்திரியை மூடிய கண்களுக்குள் உணர்ந்துகொண்டிருந்தேன். என்னருகே அமர்ந்திருந்த மேரி 'என்னைய கெட்டிக்குடுக்க பொன்னு வேணும்லா?' என்றாள்.

மறுநாள் காலையில் நர்ஸ் ஏதோ விசாரிப்பதை வெகுதொலைவிலிருந்து கேட்டேன். ஜான் என்ற சொல் பலமுறை காதில் விழுந்ததும் பதறி எழுந்து வாயைத்துடைத்து 'நானாக்கும்..நானாக்கும் ஜானுக்க ஆளு' என்றேன்

'சாயையோ காப்பியோ வாங்கிக்குடுங்க..போதம் வந்தாச்சு'

உள்ளே சென்றேன். உள்ளே தீவிர சிகிழ்ச்சைக்கு உள்ளாகும் நூற்றுக்கும் மேற்பட்ட நோயாளிகள் படுத்திருந்தனர். விழித்திருந்தவர்கள் சிலர்தான். ஒரு பெண்மணி அர்த்தமில்லா வெறிப்பு கொண்ட கண்களால் என்னை பார்த்தாள். என் நடையை அவள் கண்ணசைவு தொடர்ந்துவந்தது. ஜானை பார்ப்பது பற்றி நினைத்தபோது இதயம் துடித்தது

ஜான் வீக்கமெல்லாம் வடிந்திருந்தான். முகத்தில் ஒரு அதைப்பு மிச்சமிருந்தது. வாய்க்கு இருபக்கமும் அழுத்தமான கோடுகள். கண்களுக்குக் கீழே சுருக்கம். தோல்முழுக்க கொசுக்கடிபோன்ற புள்ளிகள். ஜானேதான். ஆனால் பெருவெள்ளம் வந்து வடிந்த ஆறுபோல சேறும் குப்பையும் படிந்திருந்தான் என்று பட்டது

'லே ஜான்' என்றபடி கட்டில் விளிம்பில் அமர்ந்தேன். ''பயப்படுத்திப்போட்டேலே'

'சர்க்காரு ஊசி வேண்டாம்ணுல்லா சொன்னேன்..நீயில்லா கூட்டிட்டுவந்தே?'

'ஒரு தப்பு நடந்ததாக்கும்லே..அந்த நர்சுக்கமேலே தப்பில்ல கேட்டியா? புதிய மருந்த குத்திவச்சுப்போட்டா'

'ஏசு சோதிக்காரு' என்றான் ஜான் 'லேநீ ஹாஸ்டலுக்குப்போயி எனக்க வைவிள எடுத்திட்டுவா'

'சாயை வேங்கிக்குடுக்கச் சொன்னா தொப்பிக்காரி..சாயையா காப்பியா?'

'லே இங்கிண ஹார்லிக்ஸ் கிட்டும் கேட்டியா?'

'வேங்கிட்டு வாறேன்' என்றேன் 'நல்லகாலம்லே, ராத்திரி கொண்டுவந்ததனால தப்பினே. காலம்பற பாத்திருந்தா இந்நேரம்--'

'எனக்கு வெள்ளத்தில முங்கிப்போற மாதிரி இருந்தது. சூடான வெள்ளம். மூக்கும் வாயும் எல்லாம் வெள்ளம் கேறிப்போச்சு. அப்பமாக்கும் கைய நீட்டி உனக்க காலைப் பிடிச்சேன்.. தலைக்குமேலே நீங்க ரெண்டாளும் நீந்தி போனிய..'

'ரெண்டாளும்னா? ஆரு?'

ஜான் குழம்பி அவன் சொன்னதை அவனே கவனித்து என்னைப்பார்த்தான். பின் பார்வையைத் திருப்பி. 'நீயும் மேரியும்' என்றான்.

---

## புறப்பாடு 1: 6 – தூரத்துப்பாலை

வடசேரி ராஜேஷும், நாகராஜாகோயில் ராஜாவும், சின்ன யுவராஜும் கொஞ்சம் மிதப்பு. கட்டுப்படியாகாது. மீனாட்சியும், தங்கமும், முத்துவும்தான் சகாயம். ஆனால் ஒழுகிணசேரி சரஸ்வதி போல வராது. அங்கே தரைடிக்கட்டுக்கு இருபதே பைசாதான். பிரிட்டிஷ் காலகட்டத்தில் நாடகக்கொட்டகையாக ஆரம்பிக்கப்பட்டது. அக்காலத்தில் ஓலை வேய்ந்திருந்தார்கள். பிறகு ஓடு. ஓட்டுக்கூரைக்கு அடியில் பனம்பிரம்பு வேயப்பட்டிருக்கும். அது கர்ப்பமான மாட்டின் அடிப்பகுதிபோல வளைந்து தொய்ந்திருக்கும்.

மேலடுக்கில் ஒரு ஐம்பது கைவைத்த நாற்காலிகள். அவற்றில் அனேகமாக திரையரங்க உரிமையாளரின் நண்பர்கள் மட்டுமே வந்து அமர்வார்கள். மூட்டைப்பூச்சிநிலையங்கள். அடுத்து நூற்றுக்கணக்கான பெஞ்சுகள். கடைசியாக மணல்தரை. வெண்மணல் வருடத்துக்கு ஒருமுறை ஆடிக்கு மாற்றப்படும் அது வெற்றிலைச்சாறால் செந்நிறமாக உருப்பெறும். திரை சின்னதுதான். வசனங்கள் தெளிவாகக் கேட்க இருபக்கமும் இரண்டு கோளாம்பி ஒலிப்பெருக்கிகள். சரஸ்வதியை போதும் என்று சொல்லவைக்க எம்ஜியாராலகூட முடியாது. கதாநாயகனின் அன்புத்தங்கை கற்பழிக்கப்பட்டு அவன் வஞ்சினம் எடுத்துக்கொண்டிருக்கும்போதுகூட ஆட்கள் டிக்கெட் கிழிக்கப்பட்டு உள்ளே வந்து திரையைப்பார்த்துக்கொண்டே நடந்து அமர்ந்திருப்பவர்கள்மேல் முட்டி அவர்களால் கெட்டவார்த்தைகளுடன் பிடித்து அமரச்செய்யவைக்கபப்டுவார்கள்.

திரையரங்குகள் நமக்குப்பிடித்தமானவையாக ஆவது அவற்றில் நாம் பார்த்த படங்களின் நினைவுகளால்தான். நான் கல்லூரிக்கு வந்ததுமே சினிமாவையும் நூலகத்தையும் இரு கண்ணென கருத ஆரம்பித்தேன். சரஸ்வதி பிற திரையரங்குகளில் ஓடிமுடிந்த படங்கள் மீண்டும் ஓடும் அரங்கு. அங்கே இருபதுபைசா செலவில் தினமொரு படம் வீதம் இரண்டு வருடம் படங்கள் பார்த்தபின்னர் எனக்கு ஓர் உண்மை தெளிவாகியது. சினிமாக்களில் நல்ல படங்கள், நல்லவை அல்லாத படங்கள் என இரு வகை உண்டு. இரண்டாம் வகைப் படங்களைப் பார்க்காமலிருப்பது ஒன்றும் பெரிய தவறல்ல.

பைசாதான் பிரச்சினை. குலசேகரம்பகுதி பையன்களுக்கு ரப்பர். ரப்பர்ஷீட்டை புத்தகங்களுடன் சேர்த்து மடித்து வைத்துக்கொள்ளலாம். ஒரு ஷீட் எப்படியும் மூன்று ரூபாய்க்குக் குறையாது. ஒரு வாரம் சினிமா பார்த்தாலும் குறையாத செல்வம். அந்தப்பையன்கள் சரஸ்வதி பக்கம் வரமாட்டார்கள். ஈத்தாமொழி நாடார்பையன்கள் மாலையில் தோப்புகளுக்கு தண்ணீர் பாய்ச்சச் செல்லும்போது அந்தி இருளில் சொந்தத் தோட்டத்திலேயே தேங்காய் திருடி தொலித்து நார்சேர்த்து வாகாகக் கட்டி ஊருக்கு வெளியே கைதைப்புதர்களில் போட்டுவிடுவார்கள். காலையில் குளித்து முத்தாலம்மன் கோயிலில் கும்பிட்டு குங்குமம் போட்டு வரும் வழியில் தேங்காய்களை சூட்கேஸ்போல தூக்கிக்கொண்டு வந்து கடையில்போட்டு காய்க்கு அறுபது பைசா மேனிக்கு பணம்பெறுவார்கள்.

மற்றவர்களைப் பொறுத்தவரை இருபது பைசா சேர்க்கமுடிந்தால் சினிமா. விசித்திரமான கல்லூரிக்கட்டணத்தை அப்பாவுக்குத்தெரியாமல் அம்மாவிடம் சொல்லி நம்பவைத்தல், ரப்பர்கொட்டை பொறுக்குதல், தோப்புத்தேங்காய் ரோட்டில் விழுந்து கிடைக்கப்பெறுதல், அம்மன்கோயில் உண்டியலில் தார்போட்ட குச்சியை நுழைத்தல் என அதற்குப் பல வழிகள் . கல்லூரியில் வெவ்வேறு குழுக்களாக இருந்தாலும் திரையரங்கில் பார்த்தால் ‘லே தாயளி-மாப்ள லே, மத்தவ சிரிக்காளாலே?’ என்று நலம் விசாரித்துக் கூச்சலிடுவோம். ‘ஒரு பத்து பைசா இருந்தா எடுலே-நாளைக்குத்தாரேன்-அர்ஜெண்டாக்கும்’ என்று சொல்லி வாங்கி சுக்குப்பாலைஸ் சாப்பிடுவோம். படம்முடிந்ததும் கண் பஞ்சடைந்து வெளியே வரும்போது ஒருவரை ஒருவர் பார்த்து ஈனஸ்வரத்தில் ‘பாப்பம்லே’ என்று சொல்லி வியர்வை வழிய பிரிவோம்.

நான் விடுதிக்கு வந்தபிறகு சினிமாவே பார்க்கவில்லை. அங்கே உள்ள பையன்களில் எனக்குத்தெரிந்து ஸ்டீபன்ராஜ் மட்டும்தான் சினிமா பார்க்கக்கூடியவன். சினிமாக்கொட்டகையில் வேலைபார்ப்பவர்கள் கூட சினிமா பார்ப்பதில்லை. பார்க்க வசதிப்படாது. கல்லூரியில் படிப்பவர்களில் பெரும்பாலும் எல்லாருமே மிச்சநேரமெல்லாம் வேலைதான்செய்தார்கள். வேலையும் இல்லாத நேரத்தில் தூங்கிக்கொண்டிருப்பார்கள். அதிக பணத்தை விடுதியில் வைப்பதற்கு பயந்தோ அல்லது குடும்பத்தேவைகளுக்காகவோ நாலைந்துநாள் வருமானம் கையில் திரண்டதும் மணியார்டர் செய்துவிடுவார்கள். எல்லார் கையிலும் மணியார்டர் அட்டைகள் இருக்கும். அதை அப்படி வாங்கி சேமித்துக்கொள்வார்கள் என்பதை என்னால் கற்பனைசெய்யவே முடியவில்லை. ஒருமுறை தட்டுப்பாடு வந்திருக்கிறது என்றான் ஜான். எங்கள் அறையில் ஜானிடம்தான் எல்லாரும் வாங்கிக்கொள்வார்கள். அவன் ஐந்துபைசா விலையை வாங்கிக்கொள்வான்

கடைசிவருடம் எனக்கும் சினிமா ஆர்வம் போய்விட்டது. மலையாள நாவல்களாக வாசித்துத் தள்ளிக்கொண்டிருந்தேன். பொற்றேக்காட்டின் சமூக நாவல்கள். வைக்கம் சந்திரசேகரன் நாயரின் சரித்திரநாவல்கள். தகழியின் வறட்சியான நீண்ட யதார்த்தவாத நாவல்கள். நகத்தைக் கடித்துக்கடித்து உரித்துக்கொண்டே படிப்பேன்.‘கீள ஒரு ஊசி விளுந்தா எப்டிலே எடுப்பே?’ என்று அருமை கேட்பான். இடைவிடாது நாட்கணக்காக என் கண்ணுக்குள் ஓடும் சினிமாதான் நாவல் என நான் கண்டுகொண்டிருந்தேன். நாவல் நடுவே சிறுநீர் வந்து உச்சபுள்ளியை அடையும்போது கையால் பிடித்துக்கொண்டு வெளியே ஓடுவேன்.

சந்திரனின் முதலாளி அவனுக்கு பத்து இலவச பாஸ் கொடுத்தபோதுதான் ஒரு இரண்டாம் ஆட்டம் படம் பார்ப்பது முடிவாகியது. ‘பாஸ்ணா அது எப்பிடி? சம்பளத்தில களிக்குத மாதிரியா?’ என்று நாகமணி தெளிவாக விசாரித்தான்.

‘இல்லல மக்கா-சும்மா-பத்து பாஸு பாத்துக்க’

‘சும்மாண்ணா-பெஞ்சா தரையா?’ என்றேன்

‘தாயளி அவன அடிலே-ஒருத்தன் கிறுக்கெடுத்து சும்மா குடுக்கான். எளவு வெளிய நிண்ணு பாத்துக்கோண்ணு சொன்னா பாக்க மாட்டியா? வாறான் பாரு’

நான் அருமையை சமாதானப்படுத்த ‘அப்பம் நீ வாறியா?’ என்றேன்

‘நான் சினிமா பாத்து வருசமொண்ணு ஆவுதுலே-போன கிறிஸ்துமஸுக்கு ஞானசௌந்தரி பார்த்தேன்’

ஞானசௌந்தரி மலைப்பகுதியில் இலவசமாக ஓடும் படம். எம்.எஸ்.பி பீடி கம்பெனி எங்களூர் திருவிழாக்களில் இலவசப்படம் போடுவார்கள். மலைப்பகுதிகளில் அவர்கள் செல்வதில்லை. அங்கே எப்படியும் பீடி விற்றுவிடும்.

பாஸ் என்று சந்திரன் சொன்னது ஒரு சிகரெட் அட்டை. அதில் ஒன்றுமே இல்லை, ஒரு கையெழுத்து மட்டும்தான்

‘லே இதில நம்பர் இல்லல்லா?’

‘பத்தாளுண்ணு மொதலாளி சொன்னாரு’

நான் மேல்விசாரணை செய்தேன். 'பத்துபேருண்ணு சொன்னாரா? செரியாச் சொல்லணும்'

சந்திரன் யோசித்து 'உனக்க பயக்க ஒரு பத்தாள கொண்டுவாலே, பாஸ்குடுக்கேன் எண்ணாக்கும் பணிக்கரு சொன்னது' என்றான்

சரிதான். பத்துபேரை திரட்டினோம். 'லே போட்டு கொட்டிப்பிடாதே.வந்து அம்மிருவானுக. மயமா பேசி ஒரு ஆறாள தேத்துவோம்'

நானும் சந்திரனும் குமுதத்தில் வெளிவந்த பட்டாம்பூச்சி நாவலில் சிறையில் இருந்து தப்பும் செய்தியை பகிர்ந்துகொள்ளும் கைதிகள் போல கிசுகிசுத்தபடி உலவினோம். மாலையில் பதினாறு பேர் இருந்தார்கள்.

'தாயளி நீ என்னலே கணக்கு வச்சே? பதினாறுபேரு என்னத்துக்கு? உனக்க அம்மைக்க பதினாறு அடியந்தரத்துக்கா?'

'நீயும் எண்ணினேல்லா? அப்பம் உனக்க கணக்கு எங்க இருந்தது? சுண்ணியில சுருட்டி வச்சிருந்தியோ?'

'சண்டை போடாதியலே.எளவு இந்த சினிமாவாலே இங்கிண கொலையில்லா நடக்கப்போவுது'

அந்தியானது. பதினாறில் ஆறுபேரை கழிக்கவேண்டும். அவர்களிடம் எஸ்பி ஆபீஸ் முக்குக்கு வரச்சொல்லிவிட்டு மறுபக்கம் வழியாகச் சென்றுவிடலாம் என்றேன். 'சேச்சே அதெல்லாம் கடவுளுக்கு பிடிக்காது.நான் சொல்லுகேன் அவனுகள்ட்ட'

சந்திரன் பம்மி 'என்னையில்லா அடிப்பானுக?' என்றான்.

'அடிச்சிருவினுமா? லே கைய வச்சிருவானுகளா?' அருமை கொதித்தான்.

உண்மையில் சந்திரன் மேலும் பலரிடம் சொல்லியிருந்தான். முதலாளியே கூப்பிட்டு பாஸ் கொடுத்த செய்தியை அவனால் அடக்கமுடியவில்லை. மாலை ஏழரை மணி அளவில் சினிமாவுக்காக கிட்டத்தட்ட இருபதுபேர் குளித்துக்கொண்டிருந்தார்கள். 'லே என்ன சினிமாலே?' என்று அப்போதுதான் சிமிண்ட் வேலை முடிந்து வந்த அன்பரசன் ஜன்னல்வழியாக எட்டிப்பார்த்து கேட்டான்.

சந்திரனுக்குத்தெரியவில்லை. 'அங்க வெள்ளிக்கிளம படம் மாத்துவான். இது வேளன்லா?'

'லே சவத்துமுதி, படம் என்னலே?'

சந்திரன் படம் என்ன என்று கவனிப்பதேயில்லை. போனதும் அரங்கை சுத்தப்படுத்தி தண்ணீர் பிடித்துவைத்து டிக்கெட் கொடுத்து பணத்தை முதலாளியிடம் ஒப்படைத்துவிட்டு கிடைக்கும் இடைவெளியில் ஒருமணிநேரம் பெஞ்சில்படுத்து தூங்கிவிடுவான். எழுந்து மீண்டும் டிக்கெட் கொடுத்து மீண்டும் ஒரு தூக்கம். கடைசி ஆட்டம் முடிந்ததும் ஓடிச்சென்று அரங்கைக் கூட்டி கக்கூஸ்களில் தண்ணீரை அள்ளி இறைத்துக் கழுவிவிட்டு ஒருமணிக்கு கிளம்பி விடுதிக்கு வந்து படுத்து மறுநாள் காலை விழித்து பாயிலிருந்தே கல்லூரிக்குச் செல்வான்.

'என்ன சினிமாவானா என்னலே மக்கா? எதுவானாலும் நாம பாக்காத படம்தான்' என்றான் நாகமணி. அவன் தன் நோட்டுக்குள் ஒரு சின்ன தாளில் பௌடர் பொதிந்து வைத்திருந்தான். அபூர்வ தருணங்களுக்காக. அது வாசனை இழந்து மாவு மாதிரி இருந்தது.

சந்திரன் 'லே எனக்கு.லே மக்கா' என்றான். இருவரும் பௌடர் போட்டு முடியை நெற்றியில் சுருட்டிக்கொண்டார்கள். வேட்டியை ஏற்றிக்கட்டி கைகளை புஜங்களில் சுருட்டிவிட்டபோது கெத்தாக இருந்தது. மேலதிக நாகரீகத்துக்காக நாகமணி ஒரு கர்சீபை எடுத்து சட்டைக்காலருக்குப்பின்னால் வைத்துக்கொண்டான்.

'பத்து டிக்கெட்டுதாலா இருக்கு?' என்றேன்

'லே, போயி சொல்லிப்பாப்பம்.நாங்க இம்பிடுபேரும் ஒருசெற்று. வேணுமானா விடும்.இல்லேண்ணா மிச்ச ஆளுகளுக்கு டிக்கெட்டு எடுத்துப்போடுதோம்னு சொல்லுவோம்' என்றான் அருமை.

அதுசரிதான் என்று எனக்குப்பட்டது

'ரொக்கமா குடுக்கதனால ஒரு டிக்கெட்டுக்கு பத்து பைசா போடட்டு. ஏம்ல?'

அருமை எங்கும் விலைகுறைக்கக்கூடிய திறன் கொண்டவன் என நான் அறிவேன்.

ஆனால் கிளம்பும்போது பத்துபேர் திரளவில்லை. வருவதாகச் சொன்ன பலர் ஏற்கனவே தூங்கிவிட்டிருந்தார்கள். அனைவரும் சினிமாவுக்குக் கிளம்பும் கோலத்தில்தான் தூங்கிக்கொண்டிருந்தார்கள். ஐசக்கையும் பாலனையும் நானே உசுப்பிப்பார்த்தேன். 'லே ஐசக்கு, லே, சினிமாவுக்கு வாறியா இல்லியா?'

'போலே.உறங்கவிடுலே நாறி' எல்லாரும் தூக்கவெறியில் இருந்தார்கள்

கிளம்பும் கடைசித்தருணத்தில் ஜான் சொன்னான் 'லே மக்கா. சினிமா கர்த்தருக்கு பிடிக்காத காரியமாக்கும்'

'செருப்பால அடிப்பேன்-லே பத்தாளு திகையல்லண்ணா என்னலே நெனைப்பாரு மொதலாளி?'

'நான் வரல்ல-' என்று சொன்னபின் ஜான் சுவரிலிருந்த திருசொரூபம் நோக்கி ஜெபம் செய்ய ஆரம்பித்தான்

'இவன் செய்யுத ஜெபத்துக்கு ஒருநாளு ஏசு வந்து மண்டையில போடத்தான் போறாரு'

எதற்கும் இருக்கட்டும் என அருமை இன்னொருமுறை கழிப்பறைக்குச் சென்றுவந்தான். நாங்கள் கிளம்பி ஆலமரத்தடிமுக்கை அடைந்தபோது அருமை சொன்னான் 'லே, ஒராளு குறையுதுல்லா? சகாவ விளிப்போம்'

'லே சகாவையா? நீ என்ன நெனைக்கே அவரப்பத்தி?'

'இல்லல-சும்மால்ல இருப்பாரு?'

'சும்மா இல்லாம துள்ளிக்கிட்டிருப்பாரா? அவருக்கு ஆயிரம் சோலிகள் கிடக்கும். நீ கம்முனூஷ்டு ஆபீஸுக்குள்ள போயி பாத்திருக்கியாலே?'

நான் பலமுறை போய்ப் பார்த்திருக்கிறேன். போஸ்டர்கஞ்சி வாசனையும் பீடிப்புகையுமாக இருக்கும். எல்லாமூலைகளிலும் கொடிகள் சாய்த்துவைக்கப்பட்டிருக்கும். செய்தித்தாள்கள் தரையில் விரிக்கபப்ட்டு படுக்கப்பட்ட கோலத்தில் காணப்படும்.

'நீ என்னலே நினைக்கே?'

'தோளர விளிச்சுப்பாக்கலாம். வரமாட்டாரு'

'ஏன்?'

'அவருக்கு இந்தமாதிரி சினிமால்லாம் பிடிக்காது'

'ஏன்லே பிடிக்காது?'

ஏன் பிடிக்காது என்று சொல்லத்தெரியவில்லை. ஆனால் பிடிக்க நியாயமில்லை என்றே பட்டது. ஏன் என்று உடனே நாகமணி சொன்னான் 'தோளர்லாம் ஃபாதர் மாதிரியாக்கும். சினிமாவுக்கு வரப்பிடாது'

ஆனால் அருமை விடாப்பிடியாக சினிமாவுக்கு தோழரை அழைத்தேயாகவேண்டும் என்று சொன்னான். நல்ல விஷயம் ஒன்றை அவருக்குக் கொடுக்காமல் எப்படி தானே அனுபவிப்பது என்ற எண்ணம்தான்.

நாங்கள் சென்றபோது தோழர் சுடலை பெஞ்சில் படுக்கையை விரித்திருந்தார். தலைமாட்டில் மேஜைமேல் பீடிக்கட்டு. அருகே சிறிய ரேடியோவில் செய்தி ஓடிக்கொண்டு இருந்தது கதவு திறந்துதான் இருந்தது. வேறு எவரும் இல்லை.

எங்களைக் கண்டதும் எழுந்து 'ஏம்ல? என்ன பிரச்சினை?' என்றார்.

'சினிமாவுக்குப்போறம் தோளர்'

'நல்லது-போய்ட்டு வாங்க-நேரமாச்சுல்லா?'

'நீங்க வாறியளா? ' என்றான் அருமை

'நானா? நான்-' தயங்கி 'நான் சினிமா பாத்து ரொம்பநாளாச்சு'

'வாங்க தோளர், நான்ல விளிக்கேன்?'

ஆச்சரியமாக தோழர் 'வாறேன்-இருங்க' என்றார். ஆணியில் இருந்து சட்டையை எடுத்து மாட்டி ரேடியோவை அணைத்து பீடிக்கட்டை கையில் எடுத்துக்கொண்டு கிளம்பிவிட்டார்.

'பூட்டல்லியா?'

'பூட்டுறதுக்கு இங்க என்ன இருக்கு? ராமச்சந்திரன் சிலசமயம் வருவான்- கடைசி வண்டி கிட்டாத மலைக்காரங்களும் வாறதுண்டு'

தோழர் கிளம்பி வருவார் என எவரும் எதிர்பார்க்கவில்லை. மொத்த மனநிலையே பக்திபூர்வமாக மாறிவிட்டது. எல்லாரும் அடக்க ஒடுக்கமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். நாகமணியும் சந்திரனும் கைகளை மார்பில் கட்டியிருந்தனர்.

தோழருக்கு சங்கரன்கோயில்பக்கம். சுசீந்திரம் கோயில் கோபுரத்தில்தான் அவரை மாதிரி மனிதர்களைப்பார்த்திருக்கிறேன். கன்னங்கரிய ஆறடி உடல். படர்ந்த முகம். இடைவெளியுடன் பரவிய பெரிய பற்கள். தெறித்து நிற்கும் உருண்ட கண்கள். சுருட்டி கன்னத்தில் வைக்கப்பட்ட பெரிய மீசை. அவரும் கைச்சுருளில் கைக்குட்டை வைக்கக்கூடியவர். வேட்டியை மடித்துக்கட்டி கனமான தோல்செருப்பில் கூழாங்கற்கள் நசுங்க நடந்துவந்தார்

'என்ன மாதிரி படம் தோளர்?' என்றார் தோழர்

'சினிமா' என்றான் அருமை

'நல்ல சினிமாதானே?'

வேறுவகை சினிமா இருப்பதை அருமை அறிந்திருக்க வாய்ப்பில்லை. சுருக்கமாக 'படம்படமாட்டு காட்டுவான்' என விளக்கினான்.

'தொளிலாளர் வர்க்கத்துக்க வாள்க்கையை காட்டுவானா?'

'நீங்க சினிமா பாத்திருக்கியளா தோழர்?' என்றேன்

'நாலஞ்சுபடம் பாத்திருக்கேன்-பிறவு ஃபுல்டைமரா வந்தாச்சுல்லா?'

'ஃபைட் உண்டுமாலே?' என்றான் நாகமணி

'என்ன படம்னு தெரியல்லியே'

'சரசதியிலேதான் படம்' என்றான் இருதயம். 'பெரிய மாடமாக்கும். பெஞ்சு உண்டு'

அப்போதுதான் எனக்கு உறைத்தது. நான் சந்திரனை அருகே கூப்பிட்டு 'லே பாஸு பெஞ்சுக்கா தரைக்கா?' என்றேன்

'ஏம்ல''

'லே தோளர எப்டிலே தரையிலே இருத்துகது?'

'லே மக்கா லே பெஞ்சு அம்பது பைசாலே. சும்மா குடுப்பானா?'

பீதியாகியது. மெல்ல நாகமணியிடம் 'அம்பது பைசா இருக்காலே?' என்றேன்

'இருக்கு'

'தோளருக்குமட்டும் பெஞ்சு எடுப்போம்'

அவன் புரிந்துகொண்டான். ரகசியமாக தலையசைத்தான்.

சரஸ்வதி அரங்குக்கு முன் சென்றபோதுதான் எனக்கு இலவச பாஸின் ரகசியம் ஓரளவு பிடிகிடைத்தது. புராதனமான படம். பக்த குசேலா. அதெல்லாம் தியேட்டரிலேயே ஸ்டாக் வைக்கப்பட்டிருக்கும் படங்கள். படம் இல்லாதபோது சும்மா ஒருநாளுக்குப்போட்டுவிடுவார்கள். போஸ்டர் படம் எல்லாம் கிடையாது. கையாலேயே கரிமையால் எழுதிய போஸ்டர்தான். யார் நடித்தது யார் இயக்கியது என்பதெல்லாம் ஒன்றும் இல்லை.

நான் தோழரைப்பார்த்தேன். அவர் உற்சாகமாக ஒரு பீடியைப்பற்றவைத்தார். என்னைத்தவிர எவரும் உற்சாகமிழந்ததுபோலத் தெரியவில்லை.

'சூடா டீ சொல்லுங்க தோழர்' என்றார் தோழர்

அருமை தலை எண்ணிவிட்டு டீக்குச் சொன்னான். டீக்கடைக்காரர் 'சினிமா பாக்கதுக்கா பிள்ள?' என்று ஒருமுறை சந்தேகத்தை தீர்த்துக்கொண்டார்

அந்தசினிமாவுக்கும் நாலைந்து பெண்கள் வந்திருந்தார்கள். திரையரங்குக்கு அப்பாலுள்ள பழையாற்றங்கரை காட்டுநாயக்கர்ச் சேரியிலிருந்து வந்தவர்கள். வாசல் திறக்குமிடத்தில் சேலையால் தலையைப்போர்த்துக்கொண்டு அமர்ந்திருந்தனர். நாலைந்துபேர் ஆங்காங்காகச் சிதறி நின்று பீடி இழுத்தார்கள்.

சாக்கடையோரம் ஒதுங்கி சிறுநீர் கழித்தபோது ஒருவன் ஆவலாக நெருங்கி 'பொணை வேணுமா சார்?' என்றான்.பீதியுடன் பாய்ந்து தோழர் அருகே வந்து நின்றுகொண்டேன்.

உள்ளே பாட்டுபோட்டார்கள். 'வினாயகனே வினை தீர்ப்பவனே'

அமர்ந்திருந்த பெண்கள் எல்லாரும் எழுந்து நின்றார்கள். பீடிக்கொள்ளிகள் வாசலைநோக்கிக் குவிபட்டன. கதவு கொடக் என்று திறக்க ஒரு குள்ளமான கிழவர் தோணி மாதிரி வளைந்த காலுடன் நின்றார்

சந்திரன் 'சாமிப்பாட்டாவாக்கும்_நான் சொல்லுகேன்' என்றான்

'லே இந்தமாதிரி பாஸு உண்டுண்ணு சொல்லு_ பெஞ்சா தரையாண்ணு கேளு_தரைண்ணு சொன்னாருண்ணாக்க தோளருக்கு பெஞ்சு எடு' என்றேன்

'என்ன தோளர்?' என்றார் தோழர்

'இல்ல_தரைன்னாக்க உங்களுக்கு மட்டும் பெஞ்சு எடுக்கலாமுண்ணு_'

'வே, நானும் பாட்டாளிதான்வே_எனக்கும் தரை போரும்_'

'இல்ல அதுக்கில்ல'

'நான் சொன்னத கேட்டா போரும்'

ஆனால் கிழவர் பாஸையே பார்க்காமல் எங்கே வேண்டுமென்றாலும் போய் அமரும்படிச் சொல்லிவிட்டார். நாங்கள் உற்சாகத்துடன் உள்ளே சென்றோம். சரஸ்வதி கர்ப்ப வயிறு தொய்ய, அரை இருட்டில் தூண்களின் நிழல்கள் சரிய , நடுவே காயப்போட்ட வேட்டிபோன்ற திரையுடன் இருந்தது. உள்ளே வவ்வால்கள் பறந்தன.

சரஸ்வதியில் அவ்வளவு பெஞ்சு உண்டு என்பதை நான் அப்போதுதான் உணர்ந்தேன். எல்லா பெஞ்சுகளிலும் அமர்ந்துவிடவேண்டும் என்ற வெறி எழுந்தது. அமர்ந்து அமர்ந்து பளபளப்பான புராதன பெஞ்சுகள். அவற்றில் விளக்கு பிரதிபலித்தது. பெஞ்சில் அமர்ந்து முன்பெஞ்சுமீது காலை நீட்டிக்கொண்டோம்.

'சினிமாவிலே மக்கள் வாழ்க்கையை காட்டணும்' என்றார் தோழர்.

நான் ஓரக்கண்ணால் பார்த்தேன். அருமை கைகளை நன்றாகச் சுருட்டிவிட்டு ஒரு நல்ல குஸ்திக்குத் தயாராகிறவன் போலிருந்தான். நாகமணி அவன் வாங்கிவந்திருந்த பட்டாணிக்கடலைப்பொட்டலத்தை அவிழ்த்து அனைவருக்கும் பகிர்ந்தான். தோழரும் கோயில்பிரசாதம் வாங்குபவர் போல இருகை குவித்து வாங்கிக்கொண்டார்

'தோழர் நீங்க என்ன படிச்சீங்க?' என்றேன்

'என்னத்த படிப்பு? தோளர் நம்ம பக்கமெல்லாம் வெங்காடு_ காஞ்சிபோயி கெடக்கும். ஓடமுள்ளுதான். அங்க ஆணு பொண்ணு புள்ள குட்டின்னு ரெண்டுகாலுள்ள எல்லா சீவனுக்கும் வேலை ஆடுமேய்க்கிறதுதான்_ஆடுக முள்ளை மென்னு தின்னு வளரும்_'

'ஸ்கூலுக்கே போகலியா?'

'இல்ல. மில்லுல சேந்து பதினெட்டுவருசம் வேலசெஞ்சேன்_ தொளிற்சங்கத்தில சேத்தவரு வி.பி.சிந்தன் தோளர். அப்டியே இந்தால வந்தாச்சு_தோழர் சிந்தன் வந்திருங்க தோளர்னார்_ வந்திட்டேன்'

'ஊரிலே யாரு இருக்கா?'

'பலபேரு_ ரெண்டு அண்ணனுங்க ஆடுதான் மேய்ங்கிறானுங்க'

'ஊருக்குப்போறதில்லியா?'

'அம்மா செத்தப்ப போனது_இப்ப ஒரு பத்து வருசம் இருக்குமா?' என்று என்னைக் கேட்டார்.

தடாரென்று படம் ஆரம்பித்தது. யாரோ ஆக்ரோஷமாக ஏதோ சொல்ல யாரோ எங்கோ அதற்கு எதையோ வாசிக்க படம் ஓட ஆரம்பித்தது. தலைப்பு, பங்களிப்புப்பெயர்கள் எதுவுமே இல்லை. ஆரம்பக்காட்சிகள்கூட இல்லை.

குசேலர் மிக மங்கலாகத்தான் தெரிந்தார். கிருஷ்ணர்கூட அதைவிட மங்கலாக இருந்தார். குசேலர் முதியவர். கிருஷ்ணருக்கு நடுவயது. தொப்பையெல்லாம்கூட இருந்தது. அவரது மனைவிகளுக்கும் தொப்பை இருந்தது.

நான் அருமையைப்பார்த்தேன். மனக்கிளர்ச்சியில் அவன் கைகளை பெஞ்சில் இறுகப்பற்றியிருந்தன. வாய் திறந்து கண்களை சற்றே சுருக்கி திரையை கூர்ந்து பார்த்தான். திரையில் இருந்து பாய்ந்து வரப்போகும் எதையோ பிடிக்கத் தயாரானவன் போல.

மீண்டும் படத்தைப்பார்த்தேன் என்ன நடக்கிறதென்றே தெரியவில்லை. குசேலனுக்கு நிறைய குழந்தைகள் என்று

தெரிந்தது. பலகுழந்தைகள் ஒரேவயதில் இருந்தன. அவர் மனைவி அவரை திட்டியதும் அவர் உச்சஸ்தாயியில் பாட ஆரம்பித்தார்.

நான் ஒருமாதிரி படத்தை அனுமானித்து இலகுவானேன். கால்களை நன்றாக நீட்டிக்கொண்டேன். சில கணங்களுக்குள் நன்றாகவே தூங்கிவிட்டேன். என் தூக்கத்திற்குள் யார் யாரோ ஏதேதோ பேசிக்கொண்டிருந்தார்கள். எங்களூர் அச்சு ஆசாரி வசனம்பேசி நடிக்கும் நாடகம். பாத்திரங்கள் உருண்டு விழுகின்றன. யாரோ மீண்டும் பாடுகிறார்கள்.

விழித்துக்கொண்டபோது தோழர் என் தோளைப்பிடித்து அசைத்துக்கொண்டிருந்தார். நான் அவர் தோளில்தான் தூங்கியிருந்தேன். ‘இடவேளை விட்டுட்டான் தோளர்’ என்றார் ‘எல்லாரும் தூங்கிட்டானுக.பாவம், உளைக்கும் வர்க்கம்!’

அருமை நன்றாக நீட்டி பெஞ்சில் படுத்து கைகளை வயிற்றின்மீது வைத்து வாய்பிளந்து அசந்து தூங்கிக்கொண்டிருந்தான்.

‘எளுப்பவா?’ என்றேன்

‘பரவாயில்லை.நாம ஒரு பீடி இளுப்போம்’

நாங்கள் வெளியே வந்தோம். தோழருக்கு நான் ஒரு டீயும் பீடிக்கட்டும் வாங்கிக்கொடுத்தேன். அவர் பீடியை ஆழ இழுத்து டீயை கூடவே குடித்தார்.‘தோளருக்கு கொலசேகரம்பக்கமா?’

’ஆமா’ என்றேன்

‘ஒருவாட்டி ஜேஎச்சைப் பாக்க வந்திருக்கீங்க’

’ஆமா’ என்றேன் ‘உங்க ஊருப்பக்கம் வெவசாயமே இல்லியா?’

‘மளை பெஞ்சாக்க முளகு பருத்தின்னு போடுறது. பெய்யணுமே. வானம்பாத்த பூமி தோளர். இங்கமாதிரி இல்ல’ அவர் பெருமூச்சுவிட்டார் ‘பிள்ளைக எல்லாம் கூளுக்கு அலந்து திரியும்’

மீண்டும் படம்போட்டார்கள். ‘படம் பாக்கணுமா?’ என்றேன்

‘வந்தாச்சே’ என்றார் தோழர்

மீண்டும் படம். நான் இம்முறை படுத்து காலை நீட்டியே தூங்கினேன்

படம் முடிந்ததும் தோழர் எங்களை எழுப்பினார் ‘போலாமா?’

வாயைத்துடைத்துக்கோண்டேன். ஏராளமான அருவிகள் என்னைச்சுற்றிக்கொட்டிக்கொண்டிருந்தனவே, என்ன ஆயிற்று என்று பார்த்தேன். தோழரின் பெரிய கரிய பற்கள்தான் தெரிந்தன.

நாங்கள் வெளியே செல்லும்போது அருமை அப்போதும் தூக்கத்தில் இருப்பதாகத் தோன்றியது. கடைவாயை இறுக இறுக கடித்துக்கொண்டிருந்தான். அப்பாலிருந்து சாமிப்பாட்டா கப்பையாக அகலக்கால் வைத்து வந்து ‘லே சந்திரா உன்னை மோலாளி விளிக்காரு’ என்றார்

சந்திரன் ‘இந்நா வாறேன்’ என்று சென்றான். நாங்கள் வட்டமாக நின்றுகொண்டிருந்தோம். தோழர் ஒரு பீடியை தலைகுனிந்து ஆழ இழுத்தபடி சற்று அப்பால் விலகி நின்றார்

பணிக்கர் சந்தனநிற ஜிப்பாவும் தழையும் வேட்டிம் தங்கச்சங்கிலியுமாக வெளியே வந்தார். கூடவே சந்திரனும் பணிவாக வந்தான்

சந்திரன் ஓடி வந்து என்னிடத்தில் ‘லே மக்கா மோலாளி சொல்லுகாரு நாலு சோபாவ தூக்கி உள்ள போட்டுட்டு போணுமாம். காலம்பற ஆப்பீசர்மாருக்கு சோ இருக்காம்.’

‘சோபாவா?’

’ஆமாலே. வெயிட் இருக்காது பாத்துக்க.நாம பத்தாளு பிடிச்சா பிடிபீடீண்ணு போட்டுரலாம்.’

அருமை வேட்டியை இறுகக் கட்டி ‘லே வாலே’ என்றான்

ஆனால் உண்மையில் செய்யவேண்டியிருந்தது முதல் வகுப்பிலிருந்த எல்லா நாற்காலிகளையும் ஓரமாக அடுக்கி விட்டு அங்கே பஞ்சடைத்த பத்து சோபாக்களைப் போடுவதைத்தான். மறுநாள் நகராட்சி ஊழியர்களுக்கு மேலதிகாரிகள் சுகாதாரம் பற்றிய ஏதோ படம் காட்டுகிறார்கள். அதிகாரிகள் அமர்வதற்காகத்தான் சோபாக்கள். நாற்காலிகளை

பெஞ்சுகள் இருக்குமிடத்துக்குக் கொண்டு செல்லவேண்டும்

முடியும்போது ஒன்றரை மணி ஆகிவிட்டது. நாங்கள் நன்றாகவே வியர்த்திருந்தோம். வெளியே வந்தபோது முதலாளி சென்றுவிட்டிருந்தார். சாமிப்பாட்டா கையில் பெரிய சாவிக்கொத்துடன் காத்து நின்றார்

'பாட்டா ,மோலாளி வெள்ளத்துக்கு வல்லதும் குடுத்தாரா?'

'இல்லியே மக்கா_'

அருமை அங்கிருந்த தொட்டியில் கை கழுவ ஆரம்பித்தான். கை கழுவுவது பற்றிய பிரக்ஞை அனைவருக்கும் வந்து அவர்களும் கழுவிக்கொண்டார்கள். நாற்காலிகளின் அடியில் அவ்வளவு தூசு எப்படிச் சேர்கிறதென்றே புரியவில்லை

தோழரை அணுகினேன். 'போலாம் தோழர்' என்றேன்

தோழர் மூக்கை உறிஞ்சினார். கமறி காறித்துப்பி இன்னொரு பீடியை உருவினார்

'ஏன் தோழர் சளி பிடிச்சுப்போட்டோ?'

'இல்ல தோளர்_ஒண்ணுமில்ல' பீடியை அவரால் பற்றவைக்கமுடியவில்லை. கைகள் நடுங்கின.

'ஏன் தோழர்?'

'இல்ல தோளர்' தோழரின் குரல் அடைத்தது 'படத்தப்பாத்து நான் அளுதுட்டேன் தோளர்'

'ஓ' என்றேன்.

'என்னா படம் தோளர்!' தோழர் பெருமூச்சுவிட்டார் 'ம்ஹம் ம்ஹம்' என்று கமறினார்.அவரால் பேச முடியவில்லை

'தோளர் போலாமா?' என்றான் நாகமணி

'பன்னிரண்டு பிள்ளைங்கன்னாக்க கஷ்டம்ல தோளர்?' என்றார் தோழர் 'அதுகளுக்கு ஒருவாய் அன்னந்தண்ணி நெறைவா குடுக்கமுடியுமா? அதுகளுக்க சட்டியில என்னண்ணு அள்ளி வைப்பா அந்தப்பொம்பிளெ?'

சட்டென்று ஏதோ ஒரு சத்தம். அரைக்கணம் முடிந்துதான் நான் அது தோழர் என்பதை கவனித்தேன். அவர் கேவிக்கேவி அழுதுகொண்டிருந்தார். கப்படா மீசையில் கண்ணீர் விழுந்து துளிவிட்டு நிற்பதை விளக்கொளியில் கண்டேன்.

ஆனால் அதை அங்கிருந்தே அவர்கள் அனைவரும் உணர்ந்துகொண்டதை அவர்களின் உடல்கள் விறைப்படைவதிலிருந்து, ஆர்வமற்றவர்கள்போல வேறெங்கோ பார்ப்பதிலிருந்து அறிந்தேன்.

---

## புறப்பாடு 1: 7 – கையீரம்

'லே, கிறிஸுமஸுக்குப்போவல்லியாலே?' என்று அருமை கேட்டான். மலைப்பகுதிப் பையன்கள் ஒருமாதம் முன்னரே கிறிஸ்துமஸுக்கான முன்னேற்பாடுகளை ஆரம்பித்துவிட்டிருந்தனர். சீட்டுகள் பிடிக்கப்பட்டன. பலநாட்கள் சீட்டு பிடிப்பதைப்பற்றியே பேசிக்கொண்டிருந்தார்கள். ஜான் ஒரு காகிதத்தில் எல்லாருடைய சீட்டுக்கணக்கையும் எழுதிவைத்திருந்தான். சீட்டு நடத்திய வூர்தும் ஞானமணியும் காதில் பென்சிலும் கையில் நோட்டுமாக புருவங்களை கவலையுடன் தூக்கியபடி வராந்தாவில் நடக்க சீட்டு பிடிக்கவேண்டியவர்கள் அதைவிடக் கவலையுடன் பணிந்து பின்னால் சென்றார்கள்.

அருமை சீட்டை எடுத்த அன்று மிதந்து அலைந்தான் 'என் ஏசுவுக்குச் சொல்வேன் துதி மங்களம்!' என்று திரும்பத்திரும்பப் பாடிக்கொண்டிருந்தான். ஜான் பைபிளுக்குள் இருந்து ஏராளமான சிறிய துண்டுத்தாள்களை எடுத்து அவற்றின் ஒட்டுமொத்தத்தை இன்னொரு துண்டுத்தாளில் குறித்தான். அதை மேலுமொரு தாளில் அவன் குறிப்பான் என்பதில் ஐயமில்லை. சந்திரன் கணக்குவைத்திருக்கும் பொறுப்பை ஜானிடம் விட்டுவிட்டவனாதலால் எதைப்பற்றியும் கவலைப்படாமல் கிடைத்த நேரமெல்லாம் தூங்கிக்கொண்டிருந்தான்.

நவம்பர் வாக்கில் வடசேரி சாலியத்தெருவுக்கு அருமை ஒரு குழுவையே வழிநடத்திச்சென்றான்.போகிறவழியில் அண்ணாசிலை முன்னால் ஒரு வடை டீ அவனுடைய கணக்கில். சாலியத்தெருவில் சாமியப்பனின் தறியில்தான் அருமை வழக்கமாகத் துணி எடுப்பது. மொத்தமாகப் பேசி வேட்டிகள் துண்டுகள் மற்றும் கண்டாங்கிச் சேலைகளுக்கு முன்பணம் கொடுத்தோம். எனக்கு மட்டும் ஒரு வேட்டிக்குச் சொன்னேன். 'ஆலிலைபோருமா இல்லேண்ணா கொடி வேணுமா?' என்றார் சாமியப்பன். எனக்கு அது புரியவில்லை

''கொடி போரும்வே_அவன் அறிவுள்ள ஆளாக்கும்' என்றான் அருமை. வேட்டியின் கீழ்நுனி சுட்டிதான் பேசப்பட்டது என திரும்பும்போது அறிந்தேன். அருமை மொத்தமாக தேவைகளை குறித்து அனைவரிடமும் சிறு தொகையும் வசூல் செய்திருந்தான். அருமையின் பேரம் பேசும்திறன் முன் பலமுறை சாமியப்பன் கண்கலங்கிவிட்டார்.

அருமை வேட்டியின் குணநலன்களை நுணுக்கமாக ஏற்கனவே ஆராய்ச்சி செய்திருந்தான். குண்டஞ்சிண்ணாக்க அது குண்டஞ்சியாட்டு இருக்கணும்-சும்மா ஒருமாதிரி ஓலைமுடையுத மாதிரி இருந்தா போராது''

'' தொளிலுகாரனாக்கும்-'' என்றார் சாமியப்பன்

அருமை '' துணி நிண்ணு ஒளைக்கணும்-அங்கிண நல்ல முள்ளுள்ளதாக்கும்-கிளிஞ்சா பிறவு நீரு கிளிவீரு, மனசிலாச்சா?' என்றான்

'அதிப்பம் கிளியாம துணி உண்டா?'

'கிளியப்பிடாதுவே-சோலிசெய்து உண்டாக்கின காசாக்கும்- கிளியாத துணி நெய்யும்வே'

'செரி, நெய்யுதேன்-திருச்செந்தூரான் தொணை'

'என்னது?'

'இல்ல , செந்துரான்தானே தொணை'

நாள் நெருங்க நெருங்க, அருமை அனேகமாக தினமும் சென்று சாலியத்தெருவையே பதற்றத்துக்குள்ளாக்கி மீண்டான். சாமியப்பன் சொல்லப்பட்ட நாளை பலமுறை நீட்டினார்.'பாவு காயல்ல கேட்டுதா?' அதன்பின் 'வீட்டிலே ஒரு இடுப்பு நோவு- ரெண்டுநாள் கெடந்துபோட்டா' உண்மையில் கிறிஸ்துமஸுக்கும் தீபாவளிக்கும் வரும் வரும்படியைக்கொண்டுதான் அவரே வாழவேண்டும்.

கடைசியில் ஒருநாள் அவரே அழுக்குத்துணியில் கட்டப்பட்ட ஐவுளிப்பொதியுடன் விடுதிக்கு வந்தார். வராந்தாவில் அவர் அதை வைத்ததும் ஏராளமான முகங்கள் சூழ்ந்து கொண்டு பார்த்தன. 'லே துணிவந்திருக்குலே'

அவர் மந்திரப்பொட்டலத்தை அவிழ்ப்பதுபோல மர்மமான மென்மையுடன் அவிழ்த்து துணிகளை எடுத்து பரப்பினார். வேட்டிகள், துண்டுகள் எல்லாம் செங்கோறை நிறமானவை. பாவாடைத்துணிகளும் கைலிகளும் நீலமும் சிவப்பும் கலந்தவை. பச்சைத்துணியின் மரச்சீனிக்கிழங்குப்பசையின் வாசனையுடன் கலந்த வேப்பிலை வாடை.

சாமியப்பா ஒவ்வொரு துணியாக பார்த்து எடுத்து வைத்தார். அவற்றில் அவர் நூலால் சில அடையாளங்கள் தைத்திருந்தார். தலையில் கட்டிய முண்டாசை நீக்கி முகத்தைத் துடைத்தபின் துண்டுத்தாளில் இருந்து பெயர்களை வாசித்து அவர்களுக்கு துணிகளைக் கொடுத்தார். அவர்கள் அதை வாங்கிக்கொள்ளும் முகபாவனை எனக்கு ஆச்சரியமூட்டியது. மகிழ்ச்சியே இல்லை. பயத்துடனோ துக்கத்துடனோ குழப்பத்துடனோ வாங்கிக்கொள்வதுபோல. அவர்களில் பலருக்கு சிறுவயதில் புதிய துணி அணிந்த அனுபவமே இருக்காது. புதிய துணி என்பது சற்றே தகுதிக்கு மேற்பட்டது என்று நினைத்தார்கள் என்று நினைத்துக்கொண்டேன். அதில் ஏதோ தவறு அல்லது பாவம் இருக்கிறது என்று எண்ணினார்கள் என்றும் பட்டது

ஜான் துணிகளை முகத்துடன் சேர்த்துக்கொண்டான். 'ஏசுவே ராசாவே' என்றான்

''அப்பம் காரியங்க மொறபோலே-புத்தனுடுத்து புள்ளகுட்டிகளோட கொலம் வெளங்கி வாளணும்'' என்றார் சாமியப்பா. ''-மிச்சம்பைசாவ குடுத்தா நானும் என் பிள்ளையளுக்க காரியங்கள பாப்பேன்''

அருமை 'இரும்வே-பாக்காண்டாமா?' என்றான். துணிகளை அங்கேயே பிரிந்த்து உதறி சோதனைசெய்தான்.

'லே புத்தன் துணியிலே' என்றான் நாகமணி.

'பாக்கணும்லே-தறியில சிக்கி அருவு கிளிஞ்ச துணியானா பின்ன இவருகிட்ட சொல்ல முடியுமா?''

'அதெல்லாம் குடுப்பமா?' சாமியப்பா சொன்னார்.

ஆனால் அனைவரும் அவரவர் துணிகளை சோதனைசெய்ய ஆரம்பித்தனர். கையால்நீவிப்பார்த்தனர். முகர்ந்து பார்த்தனர்.

அருமை மின்விளக்குக்கு முன் துணியை பிடித்துப்பார்த்தான் 'வே, பாவு நெருக்கம் குறவுபோல இருக்கே-ஒளைக்குமா?'

'கண்ணாணை-திருச்செந்தூரு தேருமாதிரி ஒளைக்கும்'

''அப்பனுக்காக்கும் இந்த துணி-'' என்றான் அருமை. 'கொறேநாளாட்டு சொல்லுகாரு புத்தன் குண்டஞ்சி வேட்டி வேணுமுண்ணு''

'நெறம் நிண்ணா யோகமாக்கும்-' என்றான் நாகமணி ஒரு கண்டாங்கியை பார்த்தபடி.

*‘மலையிலே என்னத்துக்குலே நெறம்? அங்கிண காட்டில இல்லாத நெறமா?’*

*‘பிள்ளையளே, எனக்க பைசா மிச்சத்த குடுத்தியள்னா போவேன்லா?’*

*‘செரி ,கடசியா என்னவே கேக்கேரு?’ என்றான் நாகமணி*

*‘அது சொல்லி உறப்பிச்சதாக்குமே..இப்பம் என்ன பேச்சு?’*

*‘இப்பம் ரொக்கமுல்லா குடுக்கம்..பாத்து சொல்லும்’ நாகமணி சொன்னான்.*

*அருமை ‘லே..பேசின பணத்த குடுக்கப்பட்டதாக்கும் யோக்கியம்..’ என்றான் ‘இந்தாரும்வே..பிள்ளையளுக்கு கொண்டுபோயி வல்ல நல்லதும் வேங்கிக்குடும்..கர்த்தரு பிறப்புல்லா?’’*

*‘செந்தூரான் தொணையிருப்பான்’ என்று அவர் வாங்கி கண்ணில் ஒற்றிக்கொண்டார்.*

*அருமை தன் மடியை அவிழ்த்து ஒரு ஐந்து ரூபாய்த்தாளை எடுத்து நீட்டினான் ‘வச்சுக்கிடும்..பிள்ளையளுக்கு நாலு வடை வேங்கிட்டுபோவும்’ என்றான்*

*‘புண்ணியமுண்டு’ என்றார் சாமியப்பா*

*அன்று அறையில் சுவர்கள் ததும்பும்வரை கிளர்ச்சி இருந்தது. அருமை உரக்க ‘பொன்னேசு திருவடிக்கு சுபமங்களம்‘ என்று பாடியபடி அர்த்தமில்லாமல் சுற்றிச்சுற்றி வந்தான். அவனால் தன்னுடைய டிரங்குப்பெட்டியை ஒழுங்காக அடுக்கமுடியவில்லை. பரபரவென்று துணிகளை அள்ளி உள்ளே போட்டான். திரும்ப அள்ளி வெளியே வைத்தான். சரிதான் என்று கழிப்பறை சென்றுவந்தான். நானும் நாகமணியும் கட்டிலில் படுத்துக்கொண்டு அதை வேடிக்கைபார்த்தோம்.*

*சந்திரன் ‘லே, இவன் கடசியிலே வெறும்பெட்டிய கொண்டுட்டுப்போவான் பாத்துக்க’ என்றான்*

*‘உனக்க அம்மைக்க தாலிய அறுக்க..செள்ளைய நவுத்திருவேன் பாத்துக்க’*

*ஜான் பொறுமையாக எல்லா துணிகளையும் நீவி அடுக்கினான். அவற்றின் நடுவே பொருட்களை செருகி கச்சிதமாக எல்லா இடத்தையும் நிரப்பினான். ஆனால் கொஞ்ச நேரத்திலேயே தெரிந்துவிட்டது அருமை அடுக்கி முடித்தாலும் ஜான் முடிக்கப்போவதில்லை என்று. அவனுக்கு திருப்தியே வரவில்லை.*

*துணிக்காகத்தான் அதுவரை காத்திருந்தார்கள். மறுநாளே அருமையும் ஜானும் கிளம்புவதாகச் சொன்னார்கள். அதற்கு அடுத்தநாள் சந்திரனும் நாகமணியும்.*

*ஜான் ஒரு பெரிய சாக்கு நிறைய ஏதோ வாங்கி வைத்திருந்தான். பாத்திரங்கள் என்றுதான் நினைத்தேன். ஆனால் நாகமணி ‘லே இத எங்கிணயாம் தூக்கி வைலே. தட்டிட்டுல்லா இருக்கு’ என்று நகர்த்தியபோது டப்பா ஒலிவந்தது*

*‘அது என்னது பாத்திரமா?’ என்றேன்*

*‘லே இதெல்லாம் டப்பா..மலைக்கு கொண்டுட்டுப்போறான்..’*

*‘என்ன டப்பா?’*

*‘பல எடங்களிலே சொல்லி வச்சு வேங்கியிருக்கான். மருந்துடப்பா’*

*அந்த சாக்கை அவிழ்த்துப்பார்த்தேன். பலவகையான மாத்திரைடப்பாக்கள். பிளாஸ்டிக் டப்பாக்களும் தகரடப்பாக்களும். சாதாரண கோப்பை அளவுள்ள டப்பாக்கள் அடியில் இருந்தன*

*‘மலையில இதுக்கு பொன்னுவெலையாக்கும்’ என்றான் நாகமணி.*

*‘‘ மளை பெய்யுத ஊருல்லா.. ரூவாயும் தீப்பெட்டியும் ஈரமடிக்காம போட்டுவைக்க டப்பாவேணும்லா?’*

*‘’வீட்டுக்குள்ளயா?’ என்றேன்.*

*அதற்கு யாரும் பதில் சொல்லவில்லை. ஜான் ‘எல்லாருக்கும் ஓரோண்ணு குடுக்கணும்..நாகருகோயிலிலே இருந்து வாறேண்ணு சொல்லி சொந்தக்காரனுக பாக்கவந்திருவானுக’ என்றான்.*

*‘லே நீ கிறிஸூமஸுக்கு போவல்லியாலே?’*

*‘அவனுக்கு ஓணமுல்லா..ஏமான்மாரு ஓணத்துக்கு எலையிட்டு பாயசம் குடிப்பானுக’*

''நானும் போறன்-சந்திரன் போனதும் போறேன்' என்றேன்.

'எங்க?'

'இங்க ஒரு அக்கா வீடு இருக்கு-அங்க நிப்பேன்'

விடுதி ஐந்துநாட்களுக்கு விடுமுறை. சமையல் இருக்காது. ஓட்டலில் சாப்பிட காசு வைத்திருந்தேன்.

அன்றிரவு முழுக்க ஜானும் அருமையும் தூங்கவில்லை. அருமை பெருமூச்சுவிட்டுக்கொண்டு புரண்டு புரண்டு படுத்தான். பிறகு எழுந்து பெட்டியைத் திறந்து துணிகளை எடுத்துப்பார்த்தான். கண்ணை திறந்து பார்த்தேன். முற்றத்து விளக்கின் ஒளி சன்னல்வழியாக வந்தது. அதில் ஜான் பைபிள் படித்துக்கொண்டிருந்தான். அருமை பெட்டியிலிருந்து ஒவ்வொரு துணியாக எடுத்து மெல்ல வருடிக்கொண்டிருந்தான். மென்மையாக. கைக்குழந்தையை வருடுவதுபோல.

என் பார்வையை அருமை உணர்ந்தான். திரும்பிப்பார்த்தான். 'லில்லிக்குட்டி' என்றான். முகம் மலர்ந்திருந்தது. கண்களில் விளக்கின் ஒளி.

பெருமூச்சுடன் மூடிவிட்டு என்னருகே வந்து படுத்தான் அருமை. 'சின்னவயசிலே எப்டி இருப்பா தெரியுமா? ஆத்துக்குள்ள கருங்கல்லு கிடக்கும்லா? கறுப்பா மொளமொளண்ணு உருண்டையாட்டு. தூக்கிட்டு அலைவேன்.'

அவர்கள் எவருமே தங்கள் குடும்பங்களைப்பற்றிச் சொன்னதே இல்லை என்பதை நினைவு கூர்ந்தேன். என்னிடம் சொல்லவில்லை என்றல்ல. எவரிடமும் சொல்வதில்லை. வீட்டைப்பற்றி ஒருவருக்கொருவர் சொல்லிக்கொள்வதேயில்லை. சொன்னால் பிரச்சினைகளைப்பற்றி மட்டும்தான் சொல்லவேண்டியிருக்குமோ என்னவோ.

அருமை 'வீட்டில அம்மையும் மூணு தங்கச்சிகளும் உண்டுலே. அப்பன் பனையிலே இருந்து விளுந்து கெடப்பாக்கும். ஏளுவரியமாச்சு.' என்றான்.

என்ன சொல்வதென்று யோசித்துக்கொண்டிருந்தேன். அருமை 'கர்த்தராகிய ஏசுவே ' என ஆரம்பித்து அதிவேகத்தில் ஒரு ஜெபத்தைச் சொன்னான். கண்ணை மூடிக்கொண்டான். ஆனால் பிறகெப்போதோ கண்விழித்தபோது அவன் மீண்டும் அந்த பெட்டியை துழாவி துணிகளைப்பார்த்துக்கொண்டிருப்பதைக் கண்டேன்.

மறுநாள் கிளம்பும்போது அருமை என்னிடம் 'லே வாறியாலே? எங்கிளுக்க ஊரிலே கிறிஸ்மஸுக்கு சவிட்டுகளி உண்டு' என்றான்.

'சவிட்டுகளிண்ணா?'

'அது ஒரு நல்ல களியாக்கும். அடிமுறையா களியாண்ணு சொல்லமுடியாது.வாறியா?'

'இங்க -'

''நீ இங்க இருக்கவாக்கும் பிளான் போடுதே. இங்க தனியா இருந்தா செரிவராது.வாறியா?'

''செரி வாறேன்'' என்றேன்.

''குடிலு வீடாக்கும்''

நான் ஒன்றும் சொல்லவில்லை. உள்ளே சென்று என் உடைகளை பைக்குள் எடுத்து வைத்துக்கொண்டேன். செல்லும்வழியில் கிரேட்டஸ்ட் பேக்கரிக்குச் சென்று என்னிடமிருந்த பதினைந்து ரூபாய்க்கு தின்பண்டங்கள் வாங்கிக்கொண்டேன். அன்றெல்லாம் சாதாரண மாடர்ன் பிரட் அபூர்வமான தின்பண்டமாக கிராமப்புறங்களில் கொண்டாடப்பட்டது. மூன்று பிரட்டும் ஒரு பெரிய கேக்கும் வாங்கினேன்.

'லே என்னத்துக்குலே?' என்றான் அருமை

'இருக்கட்டும்லே.ஒரு வீட்டுக்குப்போறதுல்லா?'

முள்ளங்கினாவிளைக்கு கருங்கல் சென்று அங்கிருந்து மேலே செல்லவேண்டும். கருங்கல்லே ஒரு கிராமம். ஆனால் அருமையின் கிராமத்துக்கு முள்ளங்கினாவிளையின் பேருந்து நிறுத்துமிடம்தான் 'டவுன்'அங்கிருந்து ஒற்றையடிப்பாதையில் நான்கு மைல் நடந்தால்தான் அவனுடைய குடியிருப்புப்பகுதி.

நெடுங்காலம் வெறும் மேட்டுப்பொற்றையாகக் கிடந்த செம்மண்நிலம். செம்மண் என்றால் முட்டம் பகுதியிலுள்ளது போன்ற மென்மையான மண் அல்ல. கூழாங்கற்கள் செறிந்த சொறிப்பாறைப்பொடி போன்ற மண். வெறும் மரச்சீனிவிளைகள்தான் அங்கெல்லாம். பத்திருபது வருடங்களாகத்தான் மக்கள் குடியேறி குடிசைகட்டி அதன்பின் மண்சுவர்கள் எழுப்பி குடியிருப்புகளாகப் பெருகிக்கொண்டிருந்தார்கள்.

முள்ளங்கினாவிளை புனித அந்தோணியார் ஆலயத்தில் ஆளுயரமான நட்சத்திரம் செய்து வைத்திருந்தார்கள். பெரிய கட்டுமரங்களை சிலுவைபோல வைத்து போலிருந்தது அந்த நட்சத்திரம். கோயிலுக்கு முன்னால் திருப்பிறப்புக் குடில் கட்டப்பட்டிருந்தது. கியாஸ்விளக்குகள் வந்து இறங்கியிருந்தன. சட்டை போடாத மெலிந்த சிறுவர்கள் அப்பகுதியில் மனக்கிளர்ச்சியுடன் விளையாடிக்கொண்டிருந்தனர்.

மரச்சீனிவிளை நடுவே சென்ற ஒற்றையடிப்பாதை வழியாகச் சென்றோம். 'பாம்பு இஷ்டத்துக்கு உண்டு பாத்துக்கோ–இந்நேற்றுகூட ஒரு பயல கடிச்சுப்போட்டு'’; என்றான் அருமை.

'பிறவு?'

'பிறவு என்ன? போக்குதான்–கடிச்சா ஒண்ணும் செய்யமுடியாது'

'ஆஸ்பத்திரி?'

'ஆஸுபத்திரி கருங்கல்லிலே இருக்கு–''

கருங்கல் தலைக்குமேல் எங்கோ, மேகங்களுக்குள் இருப்பதாகப் பட்டது.

சீக்கிரத்திலேயே இருட்டிவிட்டது. மரச்சீனிவிளைகள் இருட்டுக்குள் கடல்போலத் தெரிந்தன. நடுவே பனைகள் காற்றில் உறுமிக்கொண்டிருந்தன.

''இங்க தெங்கு இல்லியா?'

'தண்ணி குறவில்லா? சானலுவெள்ளம் உள்ள இடங்களிலே தெங்கும் வாளையும் உண்டு-இங்கிண பனைதான் கூடுதலு''

நாங்கள் அருமையின் வீட்டுக்குச் சென்று சேர்ந்தபோது ஏழுமணிகூட ஆகியிருக்காது. ஆனால் அங்கே அது நள்ளிரவு. அருமையின் வீட்டுத்திண்ணையில் கண்ணாடிக்குப்பியில் துணியைத் திரியாகப்போட்டு ஏற்றப்பட்ட ஒரே ஒரு மண்ணெண்ணை விளக்கு மட்டும் எரிந்துகொண்டிருந்தது. அதன் சுடர் காற்றில் நடனமாட குடிசை திரைச்சீலைபோல ஆடியதாகத் தோன்றியது. முதலில் ஆடுதான் எங்களை அறிந்தது. ப்ர்ர்ர் என்று சொல்லி காதுகளை படபடவென்று அடித்தது

அருமையின் அம்மா விளக்குடன் முற்றத்துக்கு வந்தாள். ''ஆரு?'

'எடி அம்மா–இது நானாக்கும்''

அருமையின் அம்மா முன்னால் வந்தாள். அவளுக்கு பின்னால் வருவது திகிலைக்கொடுத்தது.

'இவன் எனக்க கூட்டுகாரனாக்கும். ஒப்பரம் காலேஜிலே படிக்கான்'

'ஓ–வா பிள்ள''

அவன் அம்மா என்னை கூர்ந்து பார்ப்பதைக் கண்டேன். என்னை அவர்களால் மதிப்பிடமுடியவில்லை.

திண்ணையில் அமர்ந்தேன். தென்னந்தடிகளை நட்டு கட்டப்பட்ட சற்றே பெரிய குடிசை அது. திண்ணை மண்ணால் செய்யப்பட்டு சாணி மெழுகப்பட்டது. சுவர்களும் மண் குழைத்து செய்யப்பட்டவை. மொத்த வீட்டையே அருமையின் அம்மாவும் அப்பாவும் அவர்கள் கைகளால் செய்திருக்கலாம் என்று தோன்றியது. மறுஎல்லையில் ஆடு ஓட்டுத்திண்ணையில் ஏறி நின்றுகொண்டிருந்தது. அதன் கண்களில் விளக்குச்சுடர்கள்.

திண்ணையில் அருமையின் அப்பா படுத்திருந்தார். அவரிடமிருந்து எண்ணைவாடையும் சிறுநீர்வாடையும் கலந்து வந்தது. ''ஸ்தோத்திரம் பிள்ள'' என்றார் அவருக்குப்பின்னால் கதவினருகே மூன்று முகங்கள் தெரிந்தன. அருமையின் தங்கைகள். கடைசிப்பெண்ணுக்கு எட்டுவயதிருக்கும்.

'அப்பா, இவன் ஏமானாக்கும். நாயரு''

அருமையின் அப்பா ''ஆரானாலும் கர்த்தருக்க கருணை வேணுமில்லா'' என்றார்.

அருமையின் அம்மா என்னை புரிந்து கொண்டார். அவர் ஏதோ கண்ணைக்காட்டியிருக்கவேண்டும். மூன்று முகங்களும் சுனைக்குள் மீன்கள் அமிழ்வதுபோல இருட்டுக்குள் மறைந்தன. கொண்டுவந்திருந்த பலகாரங்களை அருமையின் அம்மாவிடம் கொடுத்தேன்.

அவர் முகத்தில் அனிச்சையாக வந்த சுளிப்பு என்னை உள்ளூரச் சுருங்கச் செய்தது. ''என்னத்துக்கு?' என்றார். கைகூட நீளவில்லை.

'பிள்ளியளுக்கு குடுடீ'' என்றான் அருமை

அருமையின் அம்மா வாங்கிக்கொண்டார்கள். முகம் இன்னும் அதிகமான சங்கடத்துடன் இருந்தது. பெரிய ஒரு அவமதிப்புக்கு ஆளானவள்போல.

அவர் உள்ளே சென்றதும் நானும் அருமையும் திண்ணையில் கால்நீட்டி அமர்ந்துகொண்டோம். அருமையின் அப்பா ''ஏமான் ஒப்பரம் படிக்குதா?' என்றார்

'இல்ல அவன் வேற.. என்க்க படிப்பு பீஏல்லா?' என்றான் அருமை

'பிள்ளேன்னு சொல்லணும்..ஏமான்னு சொல்லாண்டாம்'' என்றேன்.

அவர் ஒன்றும் சொல்லவில்லை. அருமை 'இங்கிண் ஒரு நல்ல விஷயம் உண்டுண்ணா கொசு கெடையாது.. மேட்டுப்பொற்றையானதினாலே தண்ணி நிக்காதுல்லா? நல்ல காத்தும் வரும். நான் இங்கிண உறங்குத உறக்கம் எங்கியும் உறங்குகதில்ல'' என்றான்.

'வயறு நெறைஞ்சா வாளக்குளியிலயும் கெடந்து ஒறங்கிலாம்'' என்றார் அருமையின் அப்பா.

''லே, நீ சோறு தின்னியாலே?'அருமையின் அம்மா கடுமையான குரலில் கேட்டாள்.

'இல்ல..என்ன இருக்கு?'

'மீனும் கெளங்கும் இருக்கு..நீ வாறேண்ணு செல்லி குட்டியவிட்டு சூரமீன் வேங்கினேன்..கஞ்சியுமுண்டு''

''எடு''

அவள் என்னை கண்காட்டியிருக்கவேண்டும். அருமை ''தின்னுவான்.. நீ கொண்டு வாடீ'' என்றான்.

சற்று நேரத்தில் இரு மண்பாத்திரங்களில் கஞ்சியும் வாழையிலைக்கீற்றில் மீனும் மயக்கியகிழங்கும் வந்தன.

''அப்பா சாப்பிட்டாச்சா?' என்றேன்.

' ராத்திரி ஒண்ணும் குடிக்கியதில்ல..வயிறு கலங்கினா எந்திரிக்கக் கஷ்டம் பாத்துக்கிடுங்க''

கஞ்சியைக் குடிக்க ஆரம்பித்தேன். குமரிமாவட்டத்தின் உணவின் சுவை எல்லா சாதியிலும் ஏறத்தாழ ஒன்றுதான். நெடுநாட்களுக்குப் பின்னர் சுவையான உணவு . அது என்னை முழுமையாக ஆட்கொண்டது.

ஆனால் தற்செயலாக கண்ணைத் தூக்கியபோது அருமையின் அம்மாவின் கண்களைப்பார்த்தேன். அதில் தெரிந்த உணர்ச்சி என்னை கூச்சம் கொள்ளச்செய்தது. அவருக்கு என்னை பிடிக்கவில்லை என்று தெரிந்தது. ஆனால் எதற்காக?

அருமை பேசிக்கொண்டே இருந்தான். சவிட்டுகளி பற்றி. இளமைக்கால கிறிஸ்துமஸ் கொண்டாட்டங்களைப்பற்றி. சட்டென்று மெல்லிய பேச்சொலிகளை உள்ளே கேட்டேன். அவன் தங்கைகள் துணிகளைப்பார்க்கிறார்கள். மிகமிக மெதுவாக பேசிக்கொள்கிறார்கள். அக்கணம் எனக்கு எல்லாமே தெளிவாகியது. அவர்களின் அந்தரங்கமான உலகுக்குள் வந்து அமர்ந்திருக்கிறேன். இந்நேரம் அவர்கள் அருமையை கட்டித்தழுவியிருக்கலாம் கஷ்டங்களைச் சொல்லி அழுதிருக்கலாம். துணிகளைக் கொண்டாடியிருக்கலாம். சண்டைகள்கூட வெடித்திருக்கலாம்.

காலையிலேயே கிளம்பினாலென்ன என்று யோசித்தேன். அது மரியாதையாக இருக்காது. அருமை புண்படுவான். ஆனால் அவன் அம்மாவும் அப்பாவும் உள்ளூர மகிழ்ச்சிதான் அடைவார்கள். அருமையிடம் பின்னர் சொல்லிக்கொள்ளலாம். அருமை எதையும் புரிந்துகொள்ளக்கூடியவன்தான். ஆனால் எப்படிக்கிளம்புவது? அருமை எங்காவது போயிருக்கும்போது மெல்ல சொல்லிக்கொண்டு கிளம்பிவிடலாம்.

அன்றிரவு மரவள்ளித்தோட்டம் நடுவே உயரமாக கட்டி எழுப்பப்பட்டிருந்த மாடக்குடிலில் நானும் அருமையும் தங்கினோம். டிசம்பர் மாதக் குளிர் கொஞ்சம் கொஞ்சமாக எழ ஆரம்பித்தது. அருமை வீட்டிலிருந்து கொண்டுவந்திருந்த இரு போர்வைகளை எடுத்தான். அதில் குறைவான ஓட்டை உள்ளதை என்னிடம் கொடுத்தான்.

'விடியவிடிய பேசிக்கிட்டே இருக்கணும்லே' என்றான் அருமை. ஆனால் ஐந்தே நிமிடத்தில் அவன் தூங்கிவிட்டான்.

காற்று அலையடித்த மரவள்ளித்தோட்டத்தையும் மெல்லிய நிலா நின்ற வானத்தையும் பார்த்துக்கொண்டிருந்தேன். சரியாகப்புரியாத ஒரு அவமானத்துக்கு ஆளானதுபோல ஒருகணமும் தெரியாமல் ஒரு பெரிய தவறைச் செய்துவிட்டதுபோல மறுகணமும் தோன்றிக்கொண்டே இருந்தது. அன்று முதல்முறையாக என் பிறப்பின் பாரத்தை உணர்ந்தேன். ஒருவன் ஒரு சாதியில் பிறந்துவிட்ட ஒரே காரணத்தாலேயே பாரமுள்ளவன் ஆகிவிடுகிறான். பாவத்தின் பாரம்தான். முன்னோர்கள் செய்த பாவங்கள். சலுகையுள்ளவனாக, பரிசீலிக்கப்படுபவனாக, பாரபட்சத்தின் பலனை அனுபவிப்பவனாக இருப்பதன் பாவம். அவற்றை அவன் நிராகரிக்கமுடியாது. இல்லை என பாவனைசெய்ய முடியாது.

வாழ்நாளெல்லாம் அதற்காக மன்னிப்பு கோரியபடியேதான் இருக்கவேண்டும். அதுதான் நியாயம். நான் கம்யூனிஸ்டு வகுப்புகளில் மட்டும்தான் அந்த பாரத்தை சிலசமயம் உணர்ந்திருக்கிறேன். அதை ஒருமுறை ஜே.ஹேமச்சந்திரன் சொல்லவும் செய்தார்.ஆனால் ஜே.ஹேமச்சந்திரனும் திவாகரனும் மன்னிப்பு கோரவேண்டியதில்லை. அவர்கள் அதற்கான பிராயச்சித்தத்தைச் செய்துவிட்டார்கள்.

என்னதான் யோசித்துக்கொண்டிருக்கிறேன் என்ற வியப்பு ஏற்பட்டது. தர்க்கபூர்வச் சிந்தனை சலிக்கையில் பகற்கனவுகளுக்குச் செல்வது என் வழக்கம். ஜே.ஹேமச்சந்திரனை விட எம்.என்.கோவிந்தன்நாயரை விட சாகசங்கள் செய்தேன். என்னை போலிஸ் துரத்தியது. சுட்டுக்கொன்றது. தூக்குமரத்தில் ஏறினேன்.

காலையில் என்னருகே அருமை இல்லை. கண்விழித்து எழுந்தேன். மரவள்ளிச்செடிகள் காலையில் சின்னப்பிள்ளைகள் போல புத்துணர்ச்சியுடன் இருப்பவை. மிட்டாய்க்காக நீட்டப்பட்ட பல்லாயிரம் குழந்தைக்கரங்கள் போல இலைகள். மாடத்தில் இருந்து குதித்து மெல்ல வீட்டை நோக்கி நடந்தேன். அங்கே யாருமில்லை என்றால் பையை எடுத்துக்கொண்டு அப்படியே கிளம்பிவிடலாம் என்று நினைத்தேன்.

திண்ணையில் அருமையின் அப்பா இல்லை. என் பையும் இல்லை. திண்ணை அருகே நின்று உள்ளே பார்த்தேன். உள்ளே ஒரே அறைதான். பக்கவாட்டில் ஒரு சிறிய சாய்ப்புதான் சமையலறை. கருகிய கூரை ஆங்காங்கே பிய்ந்து உரச்சாக்கால் அடைக்கப்பட்டிருந்தது. கூரைநுனி என் நெற்றியைவிட தாழ்ந்திருந்தமையால் குனிந்துதான் பார்க்கவேண்டியிருந்தது ''அருமை! அருமை!' என்று கூப்பிட்டேன்.

அருமையின் தங்கை எட்டிப்பார்த்தாள். உடனே உள்ளே ஓடிவிட்டாள். அவள் கண்களிலும் அதே வெறுப்பைத்தான் பார்த்தேன். வெறுப்பா? இல்லை. ஒரு தள்ளுதல். போ என்ற சொல்லை ஒரு பார்வையாக ஆக்கினால் அப்படி.

சற்று நேரம் கழித்து அருமையின் அம்மா பக்கவாட்டில் வந்து நின்றார்கள். ''என்ன?' என்றார்

'இல்ல...'

''அருமை அவன் அப்பன குளிப்பாட்டக் கொண்டு போயிருக்கான்...''

அது அங்கே இருந்த கிணற்றடியாகத்தான் இருக்கும். திரும்பும்போது அருமையின் அம்மா ''கருப்பட்டிக்காப்பி இட்டிருக்கு'' என்றார்.

''நான் இப்பம் வாறேன்' என்று சொல்லிவிட்டுச் சென்றேன்

அருமையின் அம்மாவின் பார்வை எனக்குப்பின்னால் இருந்தது. போ என்ற பார்வை. அப்படி என்னதான் செய்துவிட்டேன்?

அருமையின் அப்பா கிணற்றடியில் ஒரு பெரிய கல்லில் கோவணத்துடன் அமர்ந்திருந்தார். அருமை கமுகுப்பாளை கோட்டிச் செய்த தோண்டியால் நீர் இறைத்து அவர் மீது ஊற்றிக்கொண்டிருந்தான்.

'வாலே..காலம்பற பாத்தேன். நல்ல ஒறக்கம்'' என்றான் அருமை.

'இங்க நல்ல ஊத்து என்ன?' என்றபடி சட்டையைக் கழற்றினேன்.

'தண்ணியக் குடிச்சுப்பாரு..இனிக்கும்'

நான் அருகே சென்றதும் அருமையின் அப்பா என்னை சிறிய கண்களால் கூர்ந்து பார்த்தார். அவரது ஒருகையும் காலும் சூம்பி வளைந்திருந்தன.

'அப்பன் சோப்பு போடுகதில்ல..செம்மண்ணு போட்டு கழுவுவாரு..சோப்பு போட்டா தோலு பொரிஞ்சு வரும்'' என்றான் அருமை ''அந்த செம்மண்ண அவருக்க முதுகில தேயிலே''

குனிந்து செம்மண்ணை அள்ளியபோது அருமையின் அப்பாவின் கண்களைப்பார்த்தேன். திடுக்கிட்டு மண்ணை தரையில் போட்டேன்.

'ஏம்ல?'

'இல்ல தண்ணி எறைக்கேன்...''

'ஏன்?'

இல்ல இது நரம்புரோகமாக்கும். பயமா இருக்கு''

'செரி இந்தா''

நீர் இறைத்து ஊற்றினேன். என்னுடைய நீருக்குக்கூட அவரது உடம்பு எதிர்ப்பு தெரிவிப்பதை உணர்ந்தேன்.

அருமை அவரை துடைத்தபின் அப்படியே தூக்கிக்கொண்டான். 'லே நில்லு.. இப்பம் வாறேன். குளிப்பம்''

அவன் திரும்பி வரும்போது நீரை அள்ளி அள்ளி விட்டுக்குளித்துக் கொண்டிருந்தேன். அந்த தண்ணீர் என்னுடைய சஞ்சலத்தைப் போக்கிவிடும் என்பதுபோல அந்த கேக்குகளையும் ரொட்டிகளையும் வாங்கிக்கொண்டு வந்திருக்கக்கூடாது என்று தோன்றியது.

அருமை திரும்பி வந்தான். 'குளிச்சிட்டு வாலே..ஒரு நல்ல சுத்து போவம். இங்கிண பல எடங்க இருக்கு. கள்ளடிப்பியா?'

''குடிப்பேன்''

''கள்ளுகுடிச்சா தெற்றில்ல.. சாராயம் கெடுதலாக்கும்'' என்றான் அருமை ''உச்சைக்கு கோளி அடிக்கச் சொல்லியாச்சு.. கோளிக்குளம்புக்கு மருச்சீனிமயக்கினது பஸ்டு சோடியாக்கும்''

அருமை உற்சாகமாக இருந்தான். உடம்பை மண் போட்டு தேய்த்ததில் நீரை அள்ளி விட்டுக்கொண்டு தலையை ஆட்டியதில் வாயில் நீர் விட்டு வாழையை நோக்கி சீறி துப்பியதில் எல்லாம் உற்சாகம் தெரிந்துகொண்டிருந்தது. அந்த உற்சாகத்தில் என் மனநிலை மாற்றத்தை அவன் கவனிக்கவில்லை.

ஈரத்தலையுடன் வீட்டுக்குச்சென்றோம். அருமையின் அப்பா திண்ணையில் பாயில் கோவணத்துடன் இருந்தார். அவன் அம்மா கையில் புதுத்துணிப்பையுடன் நின்றிருந்தாள். என்னைப்பார்த்ததும் துணிப்பையை அருமையின் அப்பாவின் அருகே வைத்துவிட்டு பின்னகர்ந்து உள்ளே செல்லும் வாசலில் நின்றாள்.

''வேட்டி குண்டஞ்சியாக்கும்..வடசேரியிலே சொல்லி வேங்கினது'' என்றான் அருமை.

அருமையின் அப்பா பையை எடுத்து உள்ளிருந்து வேட்டியை உருவினார். சற்று முன்னகர்ந்து வேட்டியை பார்த்தேன். அதை அப்போதுதான் நல்ல வெளிச்சத்தில் பார்க்கிறேன். மயில்கழுத்து நிறத்தில் சுட்டியும் கரையும் போட்ட மென்மையான வேட்டி. அந்த மயில்கழுத்துநிற கரையில் இருந்து கண்களையெ எடுக்கமுடியவில்லை என்னால்.

அருமையின் அப்பா கையில் விரித்த வேட்டியுடன் என்னைப்பார்த்தார் 'பிடிச்சிருக்கா?' என்றார்.

முகம் மலர தலையாட்டினேன். அதை வருடிப்பார்க்கவேண்டும் என்ற எண்ணம் மட்டுமே என் மனதில் அப்போது இருந்தது.

'வேணுமா?'

நான் இரண்டாவது மகனாகப்பிறந்தவன். ஒருபோதும் ஒருவருக்கும் கொடுத்துப் பழகியவனல்ல. உலகமே எனக்குக் கொடுக்கவேண்டுமென்று நினைத்து வளர்ந்தவன். பிடித்த எதையும் எவருடையதானாலும் அடம்பிடித்து அழுது மன்றாடிப் பெற்றுக்கொள்பவன். எங்கள் வம்சத்திலேயே பெரிய 'பக்கி' நான்தான் என்பாள் அம்மா. நான் மேலும் முகம் மலர்ந்து 'ஆமா' என்றேன்.

'இந்தா பிள்ள' என்று அவர் அதை நீட்டினார்.

மறுகணம்தான் அய்யோ என்ன செய்திருக்கிறேன் என்ற திகைப்பு வந்தது. அதிர்ச்சியுடன் நிமிர்ந்து அருமையின் அம்மாவைப்பார்த்தேன். அவர்கள் முகம் முழுமையாக மலர்ந்திருப்பதைக் கண்டேன். அருமையும் சிரித்துக்கொண்டிருந்தான்.

அந்த வேட்டியை வாங்கிக்கோண்டேன். அதைத்தான் அன்று கிறிஸ்துமஸுக்குக் கட்டிக்கொண்டேன். மதியம் அருமை வீட்டில் கறிக்குழம்பு சாப்பிட்டேன். அருமையின் அம்மா கறியையும் கிழங்கையும் கையால் பிசைந்து என் தட்டில் வைத்தார்கள். கோழியின் கால் எலும்பை ஊதி உள்ளிருப்பதை எடுத்துத் தந்தார்கள். அவர்கள் குடும்பத்துடன் நானும் தேவாலயம் சென்றேன்.

கிறிஸ்துமஸ் முடிந்து திரும்பும்போது மரச்சீனிவிளை எல்லை வரை அருமையின் அம்மாவும் வந்தார்கள். என் கையைப்பிடித்து 'அம்மையாக்கும்னு நினைச்சுக்க பிள்ளை..இடைக்கிடை வரணும் கேட்டியா?' என்றபடி என் கையில் ஈரமான வெம்மையான அரைரூபாய்நாணயத்தை வைத்தாள்.

---

## புறப்பாடு 1: 8 – விழியொளி

ஜெஸ்ஸி அப்போதுதான் அறிமுகமாக ஆரம்பித்திருந்தது. சூஸா என்றொரு வகை, கழுதையுடன் அதற்கு ஏதோ உதிர உறவுண்டு என்று நம்பப்பட்டமையால் சிலர் அதன் பாலை குடிக்கமாட்டார்கள். அதன் குரல் உடைந்த சர்ச் ஆர்கனின் கட்டைகளை அழுத்தியதுபோல சம்பந்தமில்லாத சுருதிகளில் இருக்கும். 'அது ஒரு சாதிகெட்ட சென்மமுல்லா'' என்பார் போற்றி. அந்தப்பாலை அபிஷேகம் செய்யக்கூடாதென்று ஒரு விதியை அவரே உருவாக்கினார்.

ஆனால் ஜெஸ்ஸிக்கு கம்பீரம் உண்டு. 'எளவு நீலாண்டன்கோயில் மாகாளைக்க கெட்டினவ மாதிரில்லா இருக்கா'

என்று வேலாயுதநாடார் அப்பாவிடம் சொன்னார். நல்ல உயரம். அதற்கேற்ற எடை. உயர்ந்த திமில். அழகிகளுக்கே உரிய செருக்கு. ஜெஸ்ஸி, சூஸா அளவுக்கு பால் தருவதில்லை. பிள்ளைகள் பக்கத்தில் போகமுடியாது. என்றாலும் அதைத்தான் விரும்பினார்கள்.

நாட்டுப்பசுக்கள் வேகவேகமாக வழக்கொழிந்துகொண்டிருந்தன. ஜெஸ்சிக்கும் சூஸாவுக்கும் தொழுவத்தில் மின்விசிறி வைத்தவர்கள் உண்டு. கோடைக்காலத்தில் நன்றாக நனைத்த வைக்கோல் பரப்பிய மரநிழலில்தான் கட்டவேண்டும். பச்சைப்புல் பருத்திக்கொட்டை புண்ணாக்குடன் மரவள்ளிக்கிழங்குமாவு வாங்கி காய்ச்சி கலக்கிக் கொடுக்கவேண்டும். நாட்டுப்பசுக்களை, பசு வளர்ப்பதை மதக்கடமையாகச்செய்த அய்யர்கள் மட்டும்தான் வளர்த்தார்கள். ஒரு கட்டத்தில் அவர்களும் நிறுத்திக்கொண்டார்கள், பால் கறக்க ஆள்கிடைக்காமல் ஆனபோது.

நாகர்கோயில் தெருக்களில் பசுக்கள் அதிகமாகத் தென்பட ஆரம்பித்தது அதன்பிறகுதான். நாட்டுப்பசுக்களை வளர்ப்பதற்கான மிகச்சிறந்த வழி என்பது அவற்றை அடித்து பத்தி தெருவில் விட்டுவிடுவதுதான். வீட்டுப்பக்கம் காலைநேரம் ஒரு தொட்டி கழுநீர் கொடுத்தால்போதும். கருவுற்றதும் பிடித்துக் கட்டிவிடவேண்டும். குட்டிவந்ததும் மீண்டும் துரத்திவிடலாம். காலை ஐந்து ஐந்தரைக்கு நமக்கு தோதுபட்ட நேரத்தில் வந்து பால் கறந்து தந்து பிள்ளையையும் நக்கிவிட்டு கிளம்பிச்செல்லும். காளைக்குட்டி என்றால் அதை கசாப்புக்குப்போட்டுவிட்டு வைக்கோல்குட்டியை தயாரித்துவைத்துக்கொண்டால் ஒன்றரை வருடம் வரை பால் கிடைக்கும்.

விஸ்வகர்மா தெரு அய்யப்பன் அதை அடுத்தபடிக்குக் கொண்டு சென்ற நிபுணன். மொண்டி அவனுடைய பசுதான். காலையில் சரியாக அவன் வைக்கோல் கன்றுக்குட்டியுடன் மணிகண்டா டீ அன்ட் காபி ஷாப் பக்கத்தில் வரும்போது 'சோலி கெடக்குல்லா' என்ற பாவனையில் அது அங்கே நின்றிருக்கும். அவன் கறந்துவிட்டு சைக்கிளில் வைக்கோல் கன்றுக்குட்டியை காரியரில் ஏற்றிக்கட்டி சாலைவழியாக மணியடித்தபடி சென்று மீனாட்சிபுரம் சாலையில் ஹமீது மரைக்காயரின் பிஸ்மில்லா டீ வாசலில் நிற்கும்போது செட்டிமுடுக்கு வழியாக பிதுங்கி நுழைந்து இரண்டு சாக்கடைப்பாலங்களில் கவனமாக நான்குகால்களையும் எடுத்துவைத்து வந்து சேர்ந்துவிடும்.

''நம்ம வளப்பு அப்பிடியாக்கும் அண்ணாச்சி. குடும்பத்துக்குள்ள பொட்டைகள வளக்குததுண்ணா அதுக்கொரு நேக்கு இருக்கணும்பாருங்க.சொன்னா நம்ப மாட்டிய. நம்ம கோலப்பனுக்க செவலை முத்து தியேட்டர் பக்கமா நிண்ணுட்டு பாலு குடுக்கு. ஆருக்கு. சொல்லுங்க பாப்பம். அண்ணாச்சி. பன்னிக்குட்டிக்கு! பன்னிக்குட்டி குடிக்கியதுக்காக இது கிடந்து குடுக்குது. எளவு அந்தக் கருமாந்திரத்த நக்கவும் செய்யுது. அந்த பாலைத்தாலா படுபாவி கறந்து கடைகடையாட்டு ஊத்துகான்.நான் சொன்னேன்லா. சொல்லாம விடுவமா. ஏல குடும்பத்தில பொறந்தவுக வாய வச்சு குடிக்கப்பட்ட டீயில்லாலேண்ணு. கேளுங்க நம்ம அக்னிலிங்கேஸ்வரர் கோயிலு போத்தி அவரு ஆரு? ரிசியில்லா ரிசி. பாத்தா பச்ச எல எரிஞ்சுல்லா போவும். அவரு நிண்ணு ஊதி ஊதி குடிக்காரு. பின்ன நாட்டில எப்டி மளை பெய்யும்? சொல்லுதேண்ணு நினைக்காதிய.''

அய்யப்பனால் பேச்சை நிறுத்தமுடியாது. ''அண்ணாச்சி அவன் வாயக் கிண்டீட்டீயள்லா? அது வாயில்லண்ணாச்சி வாகையடிமுக்கு ஊத்தாக்கும்.பத்துமுப்பது வரியமாட்டு ஒளிகிட்டு கெடக்கு'' மணிகண்டன் சொன்னான்.

மொண்டி சிவந்த குள்ளமான நாட்டுப்பசு. எந்நேரமும் கர்ப்பமாக இருக்கும் பாவனை கொண்டது. 'நான்லாம் பொறுப்பாக்கும்' என்ற முகபாவனை எப்போதும் உண்டு. கழுத்தில் மூக்கில் எதுவும் கிடையாது 'டே அந்த பசுவுக்கு ஒரு மூக்கணைய போட்டு விடுலே.வீட்டுல பொண்டுகள மொட்டையாப்பாத்த மாதிரில்லாடே இருக்கு''

''அண்ணாச்சி சொல்லாதிய.ஒரு கவுறப்போட்டுவிட்டா அப்பிடியே நவுத்திக்கொண்டுபோயி கறந்துபோடுவானுக. நாட்டில நீதி நாயம்ணு ஒண்ணுமில்ல பாத்துக்கிடுங்க. மாடு ஆருக்க மொதலுண்ணு ஒரு பார்வ கெடையாது. கவுறில்லேண்ணாக்க அருவில வர யோசிப்பானுக. மொண்டி கிட்டத்தில விடவும் மாட்டாண்ணு வையுங்க. அவளுக்கும் ஒரு இது இருக்குல்லா. பசுவுண்ணா காமதேனுவாக்கும். நம்ம பசுவுக்க பாலு நறுநெய்யில்லா. சத்தியமா அண்ணாச்சி நாகலிங்கம் கேக்காரு ஏல அய்யப்பா, உனக்க பசுவுக்க பாலு காச்சும்பம் பாத்திரவிளிம்பிலே நெய்யா வந்து உருகுதுலேண்ணுட்டு''

'' உருகாதா பின்ன?நல்ல நாட்டு நெய்யில்லா நக்கிநக்கி திங்குது''

அய்யப்பனின் குழாய் கப்பென்று அடைய அவன் உடனே கிளம்பி சென்றுவிட்டான்.

என்கையில் காசு ஓட்டம் ஆரம்பித்தபின் நானும் அருமையும் இரு டீக்கடைகளிலும் கணக்கு வைத்துக்கொண்டோம். டீயை ஊதி ஊதிச் சுழற்றிக் குடிப்பதில் அருமைக்கு தனி ஆனந்தம் இருந்தது. பாதிக்காசுக்கு வெறும் டம்ளரைச் சுழற்றிக்கொள் என்று கடைக்காரன் சொன்னால்கூட சம்மதித்துவிடுவான் என்றான் நெல்சன். மொண்டி கறக்க வரும் நேரம் நாங்கள் டீ குடித்துக்கொண்டிருப்போம்.

நெய்யின் ரகசியம் என்ன என்று அருமை கேட்டான். 'லே போங்கலே. கச்சோடம் நடக்குத எடத்தில நிண்ணு நாறப்பேச்சு பேசாம' என்று பாய் கையை தூக்கி கத்தினார்.

நான் அதன்பின் மொண்டியை கவனிக்க ஆரம்பித்தேன். மொண்டி மணிமேடைமுதல் எஸ்பி ஆபீஸ் வரையிலான இடங்களில் மட்டுமே வாழக்கூடியது. பால்கொடுக்கும் கடமைக்காகத்தான் அது மீனாட்சிபுரம் வருவது. அவ்வளவு தூரத்துக்குள் இருபதுக்கும் மேற்பட்ட பரோட்டாக்கடைகளும் டீக்கடைகளும் இருந்தன. நான்கு குப்பைமேடுகள். எஸ்பி ஆபீஸுக்கு நேர் எதிரில் உள்ள குப்பைமேடு மிகப்பெரியது. பெரும்பாலான பகல்நேரம் அங்குதான் இருக்கும். கூடவே கறுப்பாக ஒரு தோழி.

மொண்டியின் ஒரு கொம்பு உடைந்திருக்கும். இன்னொரு கொம்பு கண்ணை நோக்கி வளைந்திருக்கும், கொம்பிலிருந்துதான் அதற்கு அப்பெயர் கிடைத்திருக்கும் என்று தோன்றியது. குப்பைக்கூடையில் கொட்டப்படும் எதுவும் மொண்டிக்கு உணவுதான். புளித்துப்புழுத்த தோசைமாவு. நாறிப்போன சட்டினி. ஆனால் ஒருநாள் அதிகாலையில் அவள் ஆலமரத்தடிமுக்கில் உள்ள சாக்கடையோரம் பிள்ளைகள் போட்டுவிட்டுப்போன மலத்தை அவர்கள் எழுவதற்காகக் காத்திருந்து நக்கி உண்பதைப்பார்த்தேன்.

அருமையிடம் சொன்னபோது 'பாவம்ல அதுக்க கும்பிச்சூடு அதுக்கு' என்றான்.

இருந்தாலும் ஒரு பசு இதையெல்லாம் தின்பதென்றால். 'ஏ பத்துநாள் சங்குவெந்தா நீயும் திம்பே நானும் திம்பேன்-சீவனுண்ணா என்னாண்ணு நினைக்கே? வைவிளு என்ன சொல்லுது? சீவ அக்கினியிண்ணில்லா? அக்கினி அப்பிடியாக்கும். எரிச்சுப்போடும் பாத்துக்கோ'

அதன்பின் மொண்டியைப்பார்த்தபோது பாவமாகத்தான் இருந்தது. ஆனால் மொண்டி நன்றாக கொழுத்து உருண்டு இருக்கும். வயிறு எப்போதும் ஒருபக்கம் பெரியதாக இருப்பதனால் நடையே சற்று குடைசாய்ந்திருக்கும். அது வீட்டுமுன்பு வந்து நின்றாலே கல்லைத் தூக்கி வீசுவார்கள். எறி பட்டால்கூட மெல்ல காதை ஆட்டிவிட்டு பெருமூச்சுடன் திரும்பி நடக்கும்.

மரக்கடையில் ஃபர்னிச்சர் தூக்கி லாரியில் ஏற்றும் உடனடி வேலைக்குச்சென்று எட்டு ரூபாய் கூலி பெற்று நள்ளிரவில் நானும் அருமையும் திரும்பிவந்தோம். சாரல் மழை இருந்ததனால் கடைகள் எல்லாமே மூடப்பட்டுவிட்டன. கடைக்காரர் வீட்டிலேயே சுக்குக்காபி போட்டு எடுத்துவந்து தந்து சமாளித்துக்கொண்டதனால் கடியும் குடியும் அமையவில்லை. பசியில் குமட்டல் வரும் என்பதை அப்போதுதான் உணர்ந்தேன்.

மழைபிடித்துக்கொண்டது அருமை 'லே ரூவா நனைஞ்சிரும்லே' என்று சொல்லி ஓடிப்போய் கடைகளின் ஓட்டுத்திண்ணையில் ஏறி நின்றான். கடைகளின் ஓட்டுத்திண்ணைகளில் எவரும் அமரவோ படுக்கவோகூடாதென்று செய்யப்பட்டிருந்த விசித்திரமான ஏற்பாட்டை அப்போதுதான் பார்த்தேன். செங்குத்தான ஆணிகள் பதிக்கப்பட்ட பலகைகளை வரிசையாகப் பதித்து வளையம் வழியாக கம்பிபோட்டு ஓரத்தில் பூட்டி வைத்திருந்தார்கள். இரு கம்பிகள் நடுவே இருந்த இடைவெளி இடத்தில் கால்களை வைத்துக்கொண்டு அருமை நின்றான்.

'லே அந்தால எடமிருக்குலே'

அதை கண்டுபிடிப்பதற்குள் நனைந்துவிட்டேன். அங்கே நின்றபோது முதல் ஒருநிமிடத்துக்கு சௌகரியமாக இருந்தது. அதன்பின் தொடையிடுக்கு வலிக்க ஆரம்பித்தது.

மொண்டியும் தோழியும் மழையில் உடல் சிலிர்க்க வந்தன. அவை வருவது நாங்கள் நிற்கும் இடத்தை நோக்கி என்று தெரிந்தது. 'லே இதுக இங்கிணயாக்கும் பதிவாட்டு நிக்கப்பட்டதுண்ணு நினைக்கேன்- '' அருமை சொன்னான்.

''இங்கிண எப்டிலே நிக்கும்''

'' நீயும் நானும் கால வச்சிருக்கம்லா-இந்த எடவெளியில நிக்கும்ணு நினைக்கேன்''

'' இதிலயா-இதில எப்டிலே பசுவு நிக்கும்? நாலு காலு எடவெளி வேணும்லா? ''

''நிக்கும்-இல்லேண்ணா இங்க எதுக்குலே வருது?''

மொண்டி அருகே வந்து எங்களைப் பார்த்தது. இருளில் அதன் கண்கள் மின்னின. அத்தனை குளிர்ந்த ஒளியை நான் ஒருபோதும் கண்டதில்லை.

'கண்ணப்பாத்தியாலே?' என்றேன்.

ஒரு கணம் அவை கண்களல்லாமல் ஆயின. அதன்பின் பசு உடல் சிலிர்த்துக்கொண்டது. குனிந்து மூச்சுவிட்டபோது கெட்ட வாசனை அடித்தது.

'பசுவு ஏம்லே இப்டி நாறுது?'

'கெதிகெட்டா எல்லாம் நாறும்லே-நீ வா-இது அதுக்குண்டான எடம்லா-'

'ரூவா?''

'இந்தா இதில வச்சுக்கோ ' அருமை ஒரு பிளாஸ்டிக் தாளை எடுத்து அதற்குள் ரூபாயைச் சுருட்டி வைத்தான். வேட்டியை இழுத்துக்கட்டிக்கொண்டு 'கர்த்தருக்கு ஜெயமேய்' என்று கூச்சலிட்டுக்கொண்டு மழையில் ஓடினான். நான் ஒருகணம் தயங்கிவிட்டு ஓடினேன்.

சற்றுக்கழித்து நின்று திரும்பிப்பார்த்தேன். இருபசுக்களும் அந்த முள்பரப்பில் நிற்பதைக் கண்டேன். 'லே அரும ரெண்டும்

கேறி நிக்குதுலே'

'அதுக்கு ஒரு கொளம்பு வைக்குத எடம்போரும்லே. மனுசனுக்குண்டான எடம் அதுக்கு வேண்டாம்லா?'

அன்று இரவு வெளியே பெய்யும் மழையை கேட்டபடி அதை நினைத்துக்கொண்டிருந்தேன். அப்படி முள்ளைப்போட்டு வைக்கும் எண்ணம் யாருக்கு வந்திருக்கும்? எப்படி அதைப்பற்றி யோசித்திருப்பான். ஆசாரியை வைத்து முள்ளை அடித்து பத்திரமாக வைத்திருக்கிறான். அந்தப்பலகைகளை நாள்தோறும் எடுத்து அடுக்கி சேர்த்து பூட்டி வைத்துவிட்டுப்போகிறான். ஆச்சரியம்தான். அதைப்பற்றி ஒரு கதை எழுதமுடியும் என்று தோன்றியது. ஆனால் அதை எங்கே கதையாக்குவது என ஒரு வடிவமும் கிடைக்கவில்லை. தூங்கிவிட்டேன்.

விடுதியில் பல பையன்கள் பாலே குடிப்பதில்லை. ஜான் எப்போதுமே பாலில்லாத டீதான். ஏன் என்று கேட்டேன். மலைச்சாதிக்காரர்கள் பால் குடிக்கமாட்டார்கள் என்றான் அருமை. ஏன் என்று கேட்டால் அவர்கள் எருமையை தெய்வமாக நினைப்பவர்கள், எருமைக்குட்டியின் பாலைக் குடிப்பது பெரிய பாவம் என்று நினைக்கிறார்கள் என்றான்.

அது உண்மைதான் என்று கண்டுகொண்டேன். மலைக்கார மாணவர்களில் எவருமே பால் குடிப்பதில்லை. அதனால்தான் விடுதியிலேயே பால் கிடையாது.

ஜானிடம் 'நீ பாலு குடிச்சதே இல்லியா?' என்றேன்.

'பாலு மாட்டுக்க சலமாக்கும்' என்றான். எனக்கே குமட்டியது. மேற்கொண்டு பாலைக்குடிக்க என்னாலும் முடியாது என்று பட்டது.

'பாலு பசுவுக்க கண்ணீராக்கும்' என்றான் நாகமணி.

'ஆரு சொன்னா?'

'அப்பன். பாலைக்குடிச்சா மலங்கூளியம்மையும் குளிகன்சாமியும் சபிச்சுப்போடும்'

'பிள்ளியளுக்கு பால் நல்லதாக்கும்'

'பிள்ளியளுக்கு அன்னப்பாலு இருந்தா பின்ன என்னத்துக்குலே மத்தபாலு?'

மேற்கொண்டு பாலை நியாயப்படுத்தும் சொற்றொடர்கள் எனக்குத் தோன்றவில்லை. ஆனால் நானும் பால் இல்லாத டீ குடிக்க பழகிக்கொண்டேன். முக்கியமான காரணம் மொண்டியின் சாப்பாட்டுப்பழக்கம்தான். மொண்டி போல பதவிசான, அறிவான பசுவே அதையெல்லாம் சாப்பிடுகிறதென்றால் எருமையா பசுவா என்று அதற்கே சரியாகத் தெரியாத கறுப்பி எதைத்தான் தின்னாது?

அய்யப்பனிடம் நான் 'உம்ம பசு கண்டதையும் தின்னுதுவே' என்றேன்.

'கண்ணுபோட்டாச்சா? சீவிக்க விடமாட்டியளாலே? ஏல சீவிக்க விடமாட்டியளாலே? உம்மாண கேக்கேன். நான் நாலு சக்கரம் சுருட்டி முந்தியில வச்சா உமக்கென்னவே குண்டியில வத்தல தேச்ச மாதிரி இருக்கு? இல்ல கேக்கேன்.. கண்ணப்போட்டு கண்ணப்போட்டு அதும் வாயிமண்ணாப்போச்சா.. இன்னி அது திங்குதத நானும் எனக்க பிள்ளையளும் வாரித்திங்குதோம். அப்பம் நெறையுமாலே உனக்கெல்லாம்? வாறானுக..ஏலே மனுசன் தின்னுகான்லே.. ஏலே நான்லாம் தவிடு திண்ணு வளந்த பயலாக்கும்.. ஓணத்துக்கு தவிடு தின்னிருக்கேன்லே.. இப்பம் சூடுகஞ்சியிலே ஊறுகாய தொட்டுட்டு குடிக்கோம்லா.. உனக்கெல்லாம் எரியுமே..'

அரைமணிநேரம் கழித்து அவன் போனபின்னர் அருமை 'ஏன்வே கெடந்து கொமையுதாரு?' என்றான்.

'மொண்டி கறவ நிப்பாட்டிப்போட்டுல்லா?' என்றார் பாய்.

'ஓ'

'அது இவனுக்கு அடிச்ச ஒரு லாட்டறியாக்கும்..அது கறக்கத் தொடங்கி வரிசம் நாலாச்சு'

'உள்ளதா?'

'பின்ன நல்ல நயம் புண்ணாக்குல்லா திங்குது? ரெண்டுமாசத்தில குட்டிய கசாப்புக்கு போட்டுட்டான். அண்ணைக்கு முதல் இந்நா இந்த வாரம் வரை அந்த பிஞ்சுபோன வைக்கோலுகுட்டிக்காக்கும் பாலு ஊத்திக்கிட்டிருக்கு.. சட்டுண்ணு இது செரிப்படாதுண்ணு மனசிலாக்கிப்போட்டு போல'

'வாறதில்லியா?'

'வரும்.. வந்து நிண்ணு நல்லா மாறி மாறி நக்கும். இவன் தண்ணிய அடிச்சு அடிச்சு உரிச்சு உரிச்சு பாப்பான்.. ஊத்து இல்ல.. அதுக்கும் ஒரு கணக்கு உண்டுல்லா? பசுவுண்ணா பாலுதொட்டிண்ணு நினைச்சுப்போட்டான் அய்யப்பன்.

அவனுக்க பெஞ்சாதி இப்பம் மினுமினுண்ணாக்கும் இருக்கா- சில சங்கதிகள் நம்ம காதுக்கும் வந்து விளுந்துச்சு- பின்ன நமக்கென்னத்துக்கு ஊரு காரியம்? நாம உண்டு நம்ம தொளிலுண்டு -ஏது?'

அய்யப்பனை மறுநாள் மணிமேடையில் பார்த்தபோது பக்கவாட்டில் காறித்துப்பிவிட்டுச் சென்றான். அவனுக்கு உலகம் மீதே கடும் கோபம் இருப்பது தெரிந்தது.

அருமை 'பாவம்லே-அந்த அளவுக்கு அறிவில்ல-அவனுக்க சீவிதம் தெளிஞ்சுபோச்சு-அப்படியே கடைசிவர பால வித்துட்டு சீவிக்கலாமுண்ணு நினைச்சுப்போட்டான்' என்றான்.

நாலைந்து நாட்கள் கழித்து ஒருநாள் கவனித்தேன். மொண்டி அப்பகுதியில் காணப்படவில்லை. கறுப்பி மட்டும் நடந்து சென்று குப்பைத்தொட்டிக்குள் தலைவிட்டது.

'லே, மத்தவன் கசாப்புக்கு புடிச்சு வித்துப்போட்டானாலே?'

'சேச்சே-அது இனியும் குட்டிபோடும்லா:?

'இவன் மோணையனாக்குமே'

மாலையில் அருமை அவனே 'உள்ளதுபோல இந்த மொண்டி எங்கல போச்சு?' என்று கேட்டான்.

'எடத்த மாத்தியிருக்குமோ?'

'அப்பிடி எடத்த மாத்தாதுல்லா?'

ஒரு சுற்று அப்பகுதியைச் சுற்றி வந்தபோது கண்டுபிடித்தோம். எம்.எஸ்பி பங்களாவின் பூட்டிய இரும்புவாசலின் அருகே பலவகையான ஜவுளிக்கடைக் குப்பைகள் குவிக்கப்பட்ட பெரிய சிமிண்ட் தொட்டிக்கு முன் மொண்டி நின்றிருந்தது. அந்தப்பகுதியையே சொந்தமாக வைத்திருந்த செட்டியார் ஒருவரின் பங்களா அது. இருபது வருடங்களாக வாரிசுரிமைப்போரில் பூட்டியே கிடந்தது. பெரிய இரும்பு கிராதிக் கதவு மீது குத்துக்கம்பிகள் வேல் வேலாக நீட்டி நின்றன. அது பாதி மண்ணில் புதைந்து நின்றது. சைக்கிள் சங்கிலி போட்டு பூட்டிய பூட்டு துரும்பேறியிருந்தது. ஆனால் கீழே இரண்டுகம்பிகள் உடைக்கப்பட்டு உள்ளே குனிந்துபோக வாசலிருந்தது. பெரிய மரச்சன்னல்களில் கண்ணாடிகள் எல்லாமே உடைந்திருந்தன.

மொண்டி எதையோ தின்றுகொண்டிருக்கும் அசைவு தெரிந்தது. ஆனால் மெலிந்திருந்தது. வயிறு ஒட்டி கடைப்பள்ளங்கள் தெளிவாகத் தெரிந்தன. பின்பக்க எலும்பு மேடாக நின்றது.

'இஞ்ச என்னல திங்குது?'

அருகே போனபோது தெரிந்தது. அது தின்றுகொண்டிருக்கவில்லை. நக்கிக்கொண்டிருந்தது. அய்யப்பன் கொண்டு அலைந்த அந்த வைக்கோல்கன்றுக்குட்டி. கால்களை காணவில்லை. உரச்சாக்கை பைபோல தைத்து உள்ளே வைக்கோலைத் திணித்துச் செய்திருந்தான். தொழில்நுட்பத்திறனுடன் முதுகுப்பகுதியில் பழைய ரெக்ஸின் வைத்திருந்தான். அதைத்தான் மொண்டி ஆசையாக நக்கிக்கொண்டிருந்தது.

'அப்பம் அதாக்கும் காரியம்- இது இங்கிண நிண்ணு ராப்பகலாட்டு நக்குது' என்றான் தொம்மை.

'மேயப்போவாதா?'

'கண்டா அறியிலாமே-எப்பிடியும் மூணுநாளா ஒண்ணும் தின்னிருக்காது-இதுக்கெல்லாம் தலைக்குள்ள இருக்கப்பட்டதும் பச்சப் பாலாக்கும்'

அருமை, மொண்டியின் பின்பக்கம் கையால் அறைந்து 'போ ஏ போ-போ சவமே-போ' என துரத்தினான். அந்த கன்றுப் பொம்மையை கையில் எடுத்தான் 'நல்லாத்தான்ல செய்திருக்கான். அய்யப்பன் ஆளு கிண்ணனாக்கும்' சுற்றுமுற்றும் பார்த்தபின் எம்.எஸ்பி பங்களாவின் கம்பிவேலிக்கு அப்பால் தூக்கிப்போட்டான்.

'லே அங்க போடுதே?'

'அங்கிண எத்திப்பாரு-காந்திக்க காலத்திலே உள்ள குப்பையாக்கும் உள்ள-'

திரும்பும்போது அருமை அந்த பங்களாவைப்பற்றிச் சொன்னான். 'ராத்திரி ஒரு பன்னிரண்டு மணி களிஞ்சா இங்கிண இல்லாத ஆட்டமும் களியும் இல்ல பாத்துக்க. நயம் எலை கிட்டும்'

மறுநாள் காலை நான் கண்விழித்ததே ஞானராஜ் ஓடிவந்து விடுதியில் சொன்ன செய்தியைக் கேட்டுத்தான். பதறியடித்து ஓடியபோதே நான் அழுதுகொண்டிருந்தேன். எம்.எஸ்பி பங்களாவின் முன்பக்கம் சிமிண்ட் குப்பைத்தொட்டி மீது மிதித்து ஏறி மறுபக்கம் குதிக்கமுயன்ற மொண்டி, இரும்பு வேல்களில் ஒன்றில் கழுவேறி அமர்ந்திருந்தது.

## புறப்பாடு 1 : 9 – கோயில்கொண்டிருப்பது

அருளை எல்லாரும் ஏற்கனவே சாமி என்றுதான் அழைத்தார்கள். ‘பாவம்லே அவன்.. இந்தக் கடப்பொறத்துகாரனுகளுக்கு உள்ள ரோகமாக்கும் இது.. வல்ல காற்றோகோளோ வந்தா ஒடனே வீட்டுல இருக்கப்பட்ட பையன்மார சாமிக்கு நேந்துவிட்டுப்போடுவானுக..பின்ன அந்தப்பயலுக்க நரகமாக்கும்’ என்றான் அருமை.

திருச்சபைக்கு என உத்தேசிக்கப்பட்ட அருள் மீசையை நன்றாக மழித்து சட்டைக்காலரிலும் கைகளிலும் பித்தான்களைச் சரியாகப்போட்டு அதை கால்சட்டைக்குள் இழுத்துவிட்டுக்கொண்டு கச்சிதமாக நடந்து கல்லூரிக்கு வருவான். அமைதியாக வரிசையின் ஓரத்தில் அமர்ந்திருப்பான். கவனமாக குறிப்புகள் எடுப்பான். கட்டக்கடைசியில் அத்தனைபேரும் அவனுடைய குறிப்பேட்டை வாங்கித்தான் பிரதி எடுத்தாகவேண்டும். அவனே பாதிப்பேருக்கு எழுதியும் கொடுப்பான்.

கல்லூரியில் ஒவ்வொரு நாலாவது சொற்றொடருக்கும் கெட்டவார்த்தை சொல்லாத ஒரே மாணவன் அவன்தான். யாரையும் லே போட்டுவிடும் சுப்ரமணிய நாடார் கூட ‘அருள், நீங்க சொல்லுங்க’ என்றுதான் சொல்வார். அதை எவரும் தவறென உணரவில்லை. யாராவது மரியாதைக்குறைவாக அவனைப்பற்றிச் சொல்லியிருந்தால்தான் கொந்தளித்துக்கிளம்பியிருப்பார்கள். அதற்கும் அருள்தான் அவனுக்கே உரிய சாந்தமான குரலில்,‘சண்டை போடாதீங்கடே..சமாதானமாட்டு பேசுவம். எதுக்குச் சண்டை?’ என்று சமரசம் செய்யவேண்டியிருக்கும்.

அருளின் கடல்புறம் கேரள எல்லையில் கொல்லங்கோட்டுக்கு அப்பால். மற்ற கடல்புறம் பையன்கள் போல அவன் சைக்கிளில் வரவில்லை. முதலிரண்டு வருடங்களும் அவன் வெட்டூர்ணிமடம் சர்ச்சில் இருந்தே கல்லூரிக்கு வந்துகொண்டிருந்தான். அதன்பின் ஒருநாள் என்னிடம் வந்து ‘நான் உங்க ஆஸ்டலிலே நிக்க முடியுமா?’ என்று கேட்டான். ‘ரூவா எப்டியாம் குடுத்திடுதேன்..’

‘ஏன் சர்ச்சுல நிக்கல்லியா?’

‘அங்க சில பிரச்சினைகள்..என்னால அங்க நிக்கமுடியாது’

தவறு சர்ச்சைச் சேர்ந்தவர்களிடம்தான் என முடிவுசெய்தேன். ஆகவே அருளை முழுவீச்சாக ஆதரிப்பது என் கடமை. நானே விடுதியில் ஒட்டுண்ணியாக இருந்தாலும் ஒன்றரைமாதத்தில் அதை முற்றாக மறந்து விடுதியில் கலந்துவிட்டிருந்தேன். ‘என்னத்துக்கு பயருதேரு? பேசாம வாரும்..எல்லாம் நம்ம பயக்களாக்கும்’ என்றேன். ஜான் அருளின் முன்னால் உடகாரவே தயங்குவான். அருள் மீதான மதிப்பில் சபை வேறுபாடில்லை.

அருமையிடம் ஓடிப்போய் நடந்ததைச் சொன்னேன். ‘நீரு வாரும்வே சாமி.. எடம் சுத்தமாக்கித் தாறேன். திண்ணுட்டு இரியும்’ என்றான் அருமை.

அன்றே தன் டிரங்குப்பெட்டியுடன் அருள் வந்துவிட்டான். எனக்கு ஒரு உண்மை தெரியவந்தது/ அருளிடம் இரண்டே சட்டைகள்தான். அவன் எப்போதுமே வெண்ணிறச் சட்டையும் கறுப்புநிற கால்சட்டையும் போடுவதனால் அவன் நிறைய ஆடைகள் வைத்திருப்பதாக ஒரு பிரமை எனக்கு இருந்தது. அருளின் பெட்டி மிகச்சிறியது. உள்ளே பைபிள் தவிர வேறுசில கிறித்தவநூல்களும் இருந்தன. அவன் கொண்டுவந்திருந்த அந்தோணியார் சொரூபத்தை எடுத்து சுவரில் மாட்டிவைத்தான். சுற்றுமுற்றும் பார்த்தபின் வெளியே சென்று துடைப்பத்தை எடுத்து அறையைக்கூட்ட ஆரம்பித்தான்.

ஜான் பாய்ந்துபோய் துடைப்பத்தை வாங்கப்போனான் ‘விடுங்க சாமி, தூக்கேன்’ என்றான்.

’நாளைக்கு நீ செய்யும்வே’ என்றான் அருள் புன்னகையுடன்.

அவன் கூட்டி முடிப்பதை நாங்கள் சங்கடமாகப் பார்த்து நின்றோம். எல்லாவற்றையும் ஒழுங்காக அடுக்கிவைத்தான். எங்கள் அறையை பலநாட்களுக்கு ஒருமுறைதான் கூட்டிவந்தோம். நிறைய ஆட்புழக்கம் இருந்ததனால் தூசு அடைவதில்லை. படுக்கும்போது அந்த இடத்தில் உள்ள குப்பைகளை பொறுக்கி வீசுவோம். எல்லா இடத்திலும் யாராவது படுப்பதனால் குப்பைக்கு கிடக்க இடமில்லை.

கூட்டிமுடித்ததுமே அருள் சென்று கொல்லைப்பக்கத்தில் அவனுடைய ஆடைகளை துவைக்க ஆரம்பித்தான். அவன் தினமும் துவைக்காமல் அப்படி எந்நேரமும் வெண்மையாக இருக்கமுடியாது.

ஜார்ஜ் அவனிடம் ‘இங்க ஞாயித்துக்கிளமையாக்கும் துணி துவைப்பு..மத்தநாளிலே தண்ணி இல்ல’ என்றான். மோட்டாருக்கு அவன்தான் பொறுப்பு.

‘நாளையிலே இருந்து ஆத்திலே போய் துவைக்கிறேன்’ என்றான் அருள் புன்னகையுடன்.

‘அதுக்குச் சொல்லல்ல..இப்பம் எல்லாரும் இப்பிடி தொடங்கினா செரியாவாதுல்லா?’

‘சரிதான்.. ‘ என்றான் அருள்.

மறுநாள்முதல் அவன் தினமும் காலையில் பழையாற்றுக்குச் சென்று குளித்து துவைத்து வர ஆரம்பித்தான். அவன் அதிகாலையிலேயே எழக்கூடியவன். வெளியே நல்ல இருட்டாக இருக்கும்போதே எழுவான். பூனைபோல சத்தமே

இல்லாமல் சென்று முகம்கழுவி வந்து முழந்தாளிட்டு நின்று ஜெபம்செய்வான். அதன்பின் இருட்டுக்குள் நடந்து குளிக்கச் செல்வான்.

ஒரே ஒருமுறை நானும் சென்றேன். அதிகாலையில் அத்தனை பறவைகள் தூங்கி எழுந்திருக்கும் என்பது ஆச்சரியமாக இருந்தது. அதைவிட அத்தனை பறவைகள் நகரில் இருக்கின்றன என்பது. அவை கூட்டமாகச் சேர்ந்து எதையோ சொல்லிக்கொண்டிருப்பதுபோலத் தோன்றியது. ‘இதுகள்லாம் இங்கயா இருக்கு?’

‘நம்ம கண்ணுக்கு என்ன தெரியும்? ஒவ்வொண்ணுக்கும் ஒவ்வொரு வளிய கர்த்தாவு உண்டாக்கியிருக்காரு’ என்றான் அருள்

நல்ல குளிர். கையை கட்டிக்கொண்டு தோள் குறுக்கி நடந்தேன். அருள் குளிருக்குப் பழகியவன். நிமிர்ந்து கைவீசி நடந்தான். எஸ்பி ஆபீஸ் முக்கில் குவிக்கப்பட்ட குப்பைமலையில் மொண்டியும் கருப்பியும் மேய்ந்துகொண்டிருந்தன.

மொண்டியின் பின்பக்கம் அடித்து அதை விலக்கி வழி ஏற்படுத்தி பழையாற்றுக்கு நடந்தோம். ஒழுகிணசேரியில் ஒரே ஒரு டீக்கடை திறந்திருந்தது. வெற்றிலைக்கட்டுகளுடன் நாலைந்துபேர் காத்திருந்தார்கள்.

‘ஒரு சிங்கிள் சாத்துவமா?’ என்றேன்.

‘டீ காப்பி குடிக்கியதில்ல’

அப்போதுதான் அதையும் கவனித்ததில்லை என்று புரிந்தது. தனியாகக் குடிக்கத் தோன்றவில்லை.

பாலத்துக்கு அப்பால் எங்கோடி கண்டன்சாஸ்தா கோயில். நடைதிறக்கவில்லை. முற்றத்தில் நாலைந்து பசுக்கள் படுத்திருந்தன. சாலையில் இருந்து சாஸ்தாகோயில் முடுக்குவழியாகத்தான் பழையாற்றுக்கு இறங்கமுடியும். அங்கே இறங்கியபோது சாலை கொஞ்சம் வெதுவெதுப்பாக இருப்பதாகப்பட்டது. அந்தப்பாதையே மாடுகள் செல்லக்கூடியது. சாணிமீது குளம்புகள் மிதித்த தடங்கள். பச்சைச்சாணியின் தழைவாசனை எனக்கு எங்கள் வீட்டு தொழுவை நினைவூட்டியது.

எங்கோடி கண்டன்சாஸ்தாவின் போற்றி தோளில் செம்புக்குடத்துடன் பின்னால் வந்தார் ‘என்னவே, சாமி, இதாரு புதிய சாமியாவே?’ என்றார்.

அருள் ‘என்கூட படிக்கான்’ என்றான்.

‘சாமியாப்போறதுக்கு என்னவே படிப்பு? நானும்தான் சாமி. என்னத்த படிச்சேன்? பூவிந்தா நீரிந்தா நான் போறேன் கோவிந்தா – அதாக்கும் நம்ம மந்திரம்- உம்ம வேதக்கோயிலிலயும் பாதருமாரு அப்பிடித்தான் மந்திரம் சொல்லுவாவ- வேண்டாம் நீரு ஒண்ணும் சொல்லாண்டாம். எல்லாம் எனக்கும் தெரியும்-வே எல்லாம் ஒரே கூட்டம்தாலா’ என்றபடி பின்பக்கம் நடந்துவந்தார்.

அருள் என்னை நோக்கிப்புன்னகை செய்தான்.

‘வே, நீரும் இவர மாதிரி சாமியா?’

‘இல்ல’

‘நல்ல காரியம்- பெண்ணு கெட்டும்வே. இல்லேண்ணா இந்தால வாரும்-இந்துவா மாறினா எம்பிடு பெண்ணு வேணுமானாலும் கெட்டலாம். வாறேரா?’

‘அவன் இந்துவாக்கும்’ என்றான் அருள்.

‘சொயம்பு காரியமா போச்சு- பின்ன என்னத்துக்குவே காலம்பற இவரு கூட வாறேரு?’

‘சும்மாதான்’

போற்றியின் பெரிய பற்கள் முழுக்க வெற்றிலைக்கறை. வாயில் வேப்பங்குச்சியை மென்றுகொண்டு வந்தார். குடத்தை வைத்துவிட்டு குச்சியால் பல்லைத்தேய்த்தார். அருள் துண்டை நிதானமாக உடுப்பதற்குள் பல்தேய்த்து வாய் கொப்பளித்து நீரில் மூழ்கிவிட்டார். நீர் மீது மெல்லிய ஆவி தவழ்ந்தது. விடியாவிட்டாலும் நீருக்குள் இருந்து மென்வெளிச்சம் எழுந்துகொண்டிருந்தது. போற்றியின் அலைகள் என் காலைத் தொட்டன. பின்னால் நகர்ந்தேன்.

போற்றி துண்டை உருவி நீரில் சுழற்றி எடுத்து உடலைத் தேய்க்க ஆரம்பித்தார்.

‘விடியக்காலையில குளிக்கப்பட்டது கொத்தும்கொலையுமா நிண்ணு குளிக்கியதுக்காக்கும். துண்ட கட்டிட்டு குளிக்கணுமானா என்னத்துக்கு காலம்பற வாறீரு?’ என்றார் போற்றி.

அருள் ‘‘பளகிப்போச்சு’ என்றான்.

'உம்ம கர்த்தரு காலம்பற குளிக்கச் சொல்லுதாராவே?'

அருள் புன்னகை செய்தான்.

'சாஸ்தா சொல்லுதாரா?' என்றேன்.

'சொல்லமாட்டாரு. ஆனா பூசாரி குளிக்கியது நல்லதாக்கும்.ரெண்டுதடவண்ணா ரெண்டு. ரெண்டாயிரம் தடவண்ணா ரெண்டாயிரம் தடவ'

'எதுக்கு?'

'ஒரு அஞ்சு அஞ்சரைக்கு கோயிலுக்கு வாரும்.வருவானுவ, மூணுசீட்டு முடிச்சவிக்கி, முந்திமாத்தி எல்லா மூஷிகவர்க்கமும். நல்லா பட்டையும் கொட்டையுமா போட்டுட்டு சம்போ சிவசம்போண்ணு.தினம் அந்த மூஞ்சிகளிலே முளிக்கதினாலத்தானே சாஸ்தாவ பளையாத்துத்தண்ணிய கோரிக்கோரி விட்டு குளிப்பாட்டுதோம்.வரட்டாவே?'

அருள் புன்னகைசெய்தான்.

போற்றி நீரை குடத்தில் அள்ளி தோளில் வைத்துக்கொண்டு ஏதோ மந்திரத்தை முணுமுணுத்தபடி சென்றார்.

'நல்ல மனுஷன்' என்றான் அருள் பல்தேய்த்தபடி.

'பூசாரிகள் எல்லாருக்குமே ஒரு கசப்பு உண்டு' என்றேன்.

'உண்டாவும்போல இருக்கு' அருள் நீரில் இறங்கினான் 'ஏசுவே கர்த்தரே' என்று முனகியபடி நீரை அள்ளி ஜெபம் போல ஏதோ சொன்னபடி மூன்றுமுறை அள்ளி தெளித்தபின் வாய் கழுவினான்.

''இந்துமதத்திலே பைசா கிடைக்காது.அதாக்கும்' என்றேன்.

'எங்க ஊரிலே அம்ப்ரோஸான்னு ஒரு உபதேசியார் இருந்தாரு. இதேமாதிரித்தான் இருப்பாரு. குளிக்கல்லியா?'

'வேண்டாம்'

'ஆறுவரை வந்தாச்சு'

'குளிருது' என்று விலகி நின்றேன்.

அருள் சிறிய பார்சோப்பால் தன் சட்டையையும் பாண்டையும் துவைத்தான். கல்லில் அடிக்கவில்லை, கையாலேயே கசக்கி துவைத்தான். அவன் அவற்றை நீரில் அலசிய விதம் புதுமையாக இருந்தது. சட்டையின் இரு தோள்களிலும் பிடித்து சட்டையின் முழு வடிவமும் தெரியும்படி விரித்து நீரில் முக்கி அலசினான். பாண்டையும் அப்படித்தான். அதன்பின் அவற்றை படார் படாரென்று ஏழுட்டுமுறை உதறிவிட்டு சலவைமடிப்பு போல கச்சிதமாக மடித்து கல்மேல் வைத்தான்.

'ஈரமாட்டுல்லா இருக்கு?'

'அங்கபோயி காயப்போடலாம்'

அவன் நிரில் மூழ்குவதை, பார்சோப்பால் உடலை தேய்ப்பதை பார்த்துக்கொண்டிருந்தேன். அவனைப்போல எல்லாவற்றையும் கச்சிதமாக, சரியாகச் செய்ய ஆசைப்பட்டேன். ஆனால் அது இந்த ஜென்மத்தில் எனக்கு கைவராது என்றும் தோன்றியது.

அருள் தலை துவட்டியதும் வித்தியாசமாக இருந்தது. முரட்டுத்தனமாக துடைக்காமல் எப்படி முடியைச் சீவி வைப்பானோ அதே கோணத்தில் துணியால் அழுத்தி நீவிக்கொண்டான்.

'வே அருளு'

'சொல்லு'

'நீரு சாமியா?'

' இப்பம் ஸ்டூடன்டுல்லா?''

'இல்ல, நீரு சாமியா போவப்போறீரா?'

அருள் சில கணங்கள் கழித்து ‘கர்த்தர் அருளிருந்தா’ என்றான்.

‘எதுக்கு?’

‘எதுக்குண்ணு கேட்டா? அதாக்கும் நல்ல மார்க்கம்னு தோணுது’

’நீரு எப்பம் சாமியா போவீரு?’

‘அதிப்பம் சொல்லப்போனா எஸ்ஸெல்சி பாஸானப்பமே போயிருக்கணும்.. ஆனால் அப்பம் வீட்டில பைசா இல்ல. இங்க நாகர்கோயிலிலே வேலைசெய்து அனுப்புத பணமாக்கும் வீட்டிலே..இந்தவருடம் தம்பி பாஸாகி நாகர்கோயிலுக்கு வந்திருவான்.. பாஸானதும் போவ வேண்டியதுதான்’

மேலும் என்னென்னவோ கேட்க நினைத்தேன். ஆனால் அருளை எவரும் ஓரளவுக்கு மேல் நெருங்க முடியாது.

அருள் சட்டையையும் கால்சட்டையையும் ஆற்றிலிருந்து கொண்டு செல்வது சலவைக்கடையில் இருந்து கொண்டுசெல்வது போலிருந்தது. அவற்றைப் பிரித்து மடிப்பு கலையாமல் காயப்போட்டான். சட்டைக்குள் ஒரு குச்சியை விட்டு அந்தக்குச்சியின் நடுவே கட்டிய கயிற்றை காலர் வழியாக எடுத்து கொடியில் கட்டினான். அது ஹேங்கர் போலவே இருந்தது.

நான் என் நாக்கை ஒருநாளும் கட்டுப்படுத்தியதில்லை ‘அருள் நீரு பொண்ணுகள பாப்பேரா வே?’

அருள் என்னை சட்டென்று திரும்பிப்பார்த்தான். பின்பு நேராக உள்ளே சென்றுவிட்டான்.

நடுங்கியவன் மாதிரி நின்றேன். பின்பு அறைக்கு வந்து ஓரக்கண்ணால் ஜன்னல் வழியாகப்பார்த்தேன். அவன் மீண்டும் ஜெபம் செய்துகொண்டிருந்தான்.

வழக்கம்போல அருள் ஆறரை மணிக்கே வேலைக்குக் கிளம்பிச்சென்றான். கல்லூரி விட்டபின் மீண்டும் வேலைக்குச் சென்றுவிட்டு பத்து மணிக்குத் திரும்பிவந்தான். அரைமணிநேரம் ஜெபம் செய்துவிட்டு சாப்பிட்டுத் தூங்கினான். அவ்வளவு குறைவான நேரம் தூங்கியும் அவனிடம் பகலில் தூக்கக் கலக்கமே இருப்பதில்லை என்பதை கவனித்தேன்.

‘அவன் கர்த்தரிட்ட செபிக்கியதே உறக்கம் வரப்பிடாதுன்னாக்கும்’ அருமை சொன்னான்.

‘ஏன்?’

‘உறங்கினா நல்லநல்ல குட்டிகளாட்டு சொப்பனத்திலே வருவாளுகள்லா?’

‘சீ போலே..அவன் சாமியாக்கும்’

‘லே ஏது சாமிக்கும் சாமானுண்டு பாத்துக்கோ. சொப்பனத்திலே குட்டிக வாறது ஒரு அனுக்ரகமாக்கும்.. நான் சோலிக்குப்போயிட்டு வந்து கிடக்கிறதனால கிடந்தபாடே ஒறக்கம். பின்ன எங்கிண சொப்பனம்? ஊருக்குப்போயி மாடத்தில கெடந்தா பூலோகசுந்தரிமாராக்கும் ஒண்ணு ரண்டு மூணுண்ணு நம்பரு போட்டு வந்து நிக்கப்பட்டது..’

‘பின்ன என்னத்துக்குலே இவன் சாமியாவுதான்?’

‘லே இவனுக சாமியாட்டு ஆவுறது இவனுகளுக்க அப்பனம்மைக்க கணக்குகள் கொண்டுல்லா? சாமிக்கு படிக்கியது கஷ்டமாக்கும். படிச்சு வெள்ளத்துணி கிட்டியாச்சுண்ணு சென்னா காசாக்கும். குடும்பம் வச்சடி வச்சு மேலே கேறிப்போடும்..கடப்பொறத்திலே பாரு, எல்லா பாவப்பெட்ட குடும்பத்திலயும் சாமிமாரு இருப்பானுக..பத்துவருசத்திலே அவனுக வீட்ட எடுத்துக்கெட்டிப்போடுவானுக. அதைக்கண்டு கர்த்தாவே எனக்க பயல நானும் அனுப்புகேன்னு இந்தால ஒரு கிளவி நேந்துக்கிடுவா..’ அருமை சொன்னான்.

என்னை அப்படி ஒருவர் நேர்ந்துவிடுவதைப்பற்றி நினைக்கவே பீதியாக இருந்தது.

‘நேந்துவிட்டா ஒக்காதுண்ணு சொல்லப்பிடாதா?’

‘சொல்லலாம். ஆனா பாவி பாவீண்ணு ஊருல ஏசுவானுக. அம்மையும் அப்பனும் சொந்தக்காரனுகளும் மண்ணவாரி தூத்துவானுக. பின்ன வல்ல தீனமோ ஆக்ஸிடெண்டோ வந்தா இதுகொண்டாக்கும்னு வருத்திவைப்பானுக..’

என்னால் அதன் பின் அருளை ஏறிட்டும் பார்க்கமுடியவில்லை. அவன் தொலைவில் வரும்போதே மறுபக்கமாக நழுவினேன். ஆனால் அவனை எதிர்கொள்ளும் தருணங்கள் மிக அபூர்வமாகவே அமைந்தன. அவனுடைய நேரமும் என்னுடைய நேரமும் ஒத்துவரவில்லை. அவன் படிப்பதும் வேறு பாடம்.

கல்லூரிவிட்டு வந்தபோது யாரோ ஒருபையன் ‘அவந்தான் கூட்டுகாரன். அவனிட்ட கேளுங்க’ என்று சொல்லி ஒரு கிழவியை என்னை நோக்கி ஏவினான். கிழவி அங்கிருந்தே கும்பிட்டபடி வந்தாள். கடற்கரைக்காரி என்பது புடவையை பின்பக்கம் செருகியிருப்பதில், கூந்தலைச் சுருட்டி கொண்டைபோட்டிருப்பதில் தெரிந்தது.

மிக பவ்யமாக என்னை அணுகி கும்பிட்டபடியே நின்றாள். யார் என ஊகிக்கமுடியவில்லை 'ஆராக்கும்?'

'அருளு இருக்கானா?'

'நீங்க ஆரு?'

'அருளுக்க அம்மையாக்கும்'

அருளின் அம்மா அத்தனை வயதானவளாக இருப்பாள் என நினைக்கவில்லை. வாயில் பற்கள் நிறைய உதிர்ந்திருப்பதனால்தான் அந்த வயது தோன்றுகிறது என்றும் உடனே தோன்றியது. அருளின் அம்மாவைப்பற்றி விதவிதமாக கற்பனைசெய்திருந்தேன். என் கற்பனைக்கு அப்பால் பரிதாபமான கிழவியாக இருந்தாள். ஆனால் சில கணங்களிலேயே என் கோபத்தை மீட்டுக்கொண்டேன்.

'என்னவாக்கும்?'

'வீட்டுக்கு வாறதில்ல பிள்ள_'

கோபத்தை அடக்கி ''பைசா அனுப்புகானா?' என்றேன்.

'போனவாரம் அனுப்பினான்'

அதுசரி, அடுத்த தவணையை வாங்கிக்கொண்டு போவதற்கான வருகை. 'அவன் ராத்திரிதான் வருவான்_வந்தா சங்கதி சொல்லுதேன். அதுவரை இங்கிண இருக்கமுடியாது' என்று கறாராகச் சொன்னேன்.

'அவன் இப்பம் சர்ச்சில சோலி செய்யேல்லண்ணு சொன்னாவ'

'ஆமா அவன் தடிக்கம்பெனியிலயாக்கும் சோலி செய்யுகது'

'அங்கிண போறதுக்கு வழிதெரியுமா பிள்ள?'

வழியை தவறாகச் சொல்லி திருப்பிவிட்டாலென்ன என்று நினைத்தாலும் அதை என்னால் செய்யமுடியவில்லை. 'சேல்வேசன் ஆர்மி ஸ்கூளு இருக்குல்லா?'

'ஓம் பிள்ள_' என்றபின் 'எங்கிண இருக்கு?' என்றாள்.

'கேட்டுப்பாருங்க_சேல்வேசன் ஆர்மி ஸ்கூலுக்கு பொறத்தால நேசனல் டிம்பர் மார்ட்டுண்ணு ஒரு மரக்கட இருக்கு'

'என்ன மரக்கட?'

'நேஷணல்'

'நேசமணி மரக்கட'

இது சரிவராது என்று ஒரு தாளில் சேல்வேஷன் ஆர்மி ஸ்கூல் பின்பக்கம் நேஷனல் மரக்கடை என்று எழுதி கையில் கொடுத்தேன். 'இத காட்டி கேளுங்க. சொல்லிக்குடுப்பாவ'

'செரி பிள்ள_கர்த்தரு தொணைப்பாரு' கிழவி அந்த தாளைச் சுருட்டி மடியில் கட்டிக்கொண்டு 'பிள்ள அருளுக்க கூட்டுகாரனா?' என்றாள்.

'ஆமா'

'அவனுக்க கிட்ட பிள்ள சொல்லணும் கேட்டுதா_என்னத்துக்கு சாமியாப்போவணுமிண்ணு சொல்லுதான்? மனசில வல்ல துக்கமும் உண்டாண்ணு கேக்கணும்_அருமந்த குட்டியா பெத்த பிள்ளையாக்கும். சாமியாப்போவணுமிண்ணு அவன் சொன்ன நாளிலே இருந்து சங்கில தீயாக்கும் பிள்ள_ஒருநாள் மனசறிஞ்சு கஞ்சி குடிச்சதில்லை_கோயிலுக்கு போயி சாமியாருகிட்ட சொன்னேன். அவரு விளிச்சு லே இந்தமாதிரி உனக்க அம்மை கண்ணீரு விடுதா, அம்மை கண்ணீர பாக்காம நீ சாமியா வரப்பிடாதுண்ணு சொல்லிப்போட்டாரு_கேக்க மாட்டேன்னு சொல்லுதான்' அவள் கண்களிலிருந்து கன்னச்சுருக்கங்கள் வழியாக கண்ணீர் தயங்கி பிரிந்து பரவியது 'பிள்ள சொன்னா கேப்பான், ஒப்பம் வயசுப்பிள்ளையள்லா?'

'அவனுக்க அப்பன் என்ன சொல்லுகாரு?'

'பிள்ள என்ன சொல்லுது? அவனுக்க அப்பன் கடலிலே செத்து இப்பம் பதினஞ்சு வருசம் ஆயாச்சுல்லா?'

பெருமூச்சுவிட்டேன். அருள் அதைச் சொன்னதே இல்லை.

‘எனக்கு ஒரு சமாதானமில்ல பிள்ள..இப்பம் எனக்க கண்ணடைஞ்சு மேல போனா எனக்க எஜமானுக்கு என்ன உத்தரம் சொல்லுவேன்? பிள்ளைய வித்தாடி தேவ்டியா கஞ்சிகுடிச்சேண்ணு கேட்டு துடுப்பத் தூக்கிப்பிடுவாருல்லா? பிள்ள நல்ல வாக்கு சொல்லணும்..’

‘நீங்க சொல்லப்பிடாதா?’

‘அவனுக்க முகத்தப்பாத்தா சாமியாரு முகமாக்குமே பிள்ள. சாமியாரு முகத்தப்பாத்து பேசுகதுக்கு எனக்கு சங்குறப்பில்ல’

அதன்பின் அருளின் முகம் முற்றிலும் மாறிவிட்டிருப்பதாகத் தோன்றியது எனக்கு. அவன் தன் அம்மா வந்ததைப்பற்றி ஒன்றும் என்னிடம் சொல்லவில்லை. நாங்கள் சந்தித்துக்கொள்ள நேரவுமில்லை. ஆனால் சிலநாட்கள் கழித்து வயிறு கலங்கி காலையில் கழிப்பறை சென்றுவிட்டு வந்தபோது அவன் குளிப்பதற்காகச் செல்வதைக் கண்டு நின்றேன்.

‘சொகமில்லியோ?’ என்றான் அருள்.

‘ரெண்டு மட்டம் போச்சு’ என்றேன்.

‘குளிக ஒண்ணும் திங்காண்டாம். அப்டியே விட்டிரு..செரியாப்போவும்’ என்றபடி அருள் நடந்தான்.

அரைக்கணத்தில் முடிவெடுத்து அருள் பின்னால் சென்றேன். ‘நானும் குளிக்க வாறேன்’

‘குளிக்கமாட்டேருல்லா?’ என அவன் புன்னகைசெய்தான்.

‘சும்மா வாறேன்’

‘வாரும்’

ஒழுகிணசேரி வரை என்னால் ஒன்றும் பேசமுடியவில்லை. பிறகு ‘அம்மைய பாத்தேன்’ என்றேன்.

‘சொன்னா’

‘சாமியா போவ வேண்டாம் எண்ணு சொல்லணும்னு சொன்னா’

‘அது அவ ஆரைப்பாத்தாலும் சொல்லுவா’ என்றான் அருள் ‘அவளுக்கு சாமியாரு வேணும்..அவளுக்க பிள்ள சாமியாரா போவப்பிடாது’

‘பின்ன என்னத்துக்குச் சாமியா போறீரு?’

‘ சொன்னேன்லா? அதாக்கும் எனக்க பாத’

‘ஓ’

எங்கோடி கண்டன் சாஸ்தா கோயிலில் இருந்து குடத்துடன் போற்றி இறங்கி வந்தார் ‘வே, மத்தவனுக்க காரியம் சொன்னேன்லா அதாக்கும் ரைட்டு ..கேட்டு நாளைக்கு விவரமாட்டு சொல்லுதேன்’ என்றார்.

அருள் ‘ பிரச்சினை உண்டா?’

‘என்ன பிரச்சினை? பைசா உள்ளவனுக்கு பல பிரச்சின. பைசா இல்லாதவனுக்கு ஒரே பிரச்சினதான்..’ அவர்கள் எதைப்பேசிக்கொள்கிறார்கள் என்று புரியவில்லை. போற்றி தாண்டிச்சென்றார்.

‘நீரு கேட்டேருல்லா பொம்புள நினைப்புண்டான்னு?’

‘அய்யோ அது என்னைய வச்சு கேட்டதாக்கும்’

‘நெனைப்பிருக்குவே ..பயங்கரமா நெனைப்பிருக்கு. அடக்க அடக்க அக்கினி மாதிரியாக்கும் வளருகது. பாவத்திலே பிறந்த வம்சம்னு ஆதமுக்க சந்ததிகளப்பத்தி ஏன் சொல்லுதாவண்ணு இப்பம் எனக்கு நல்லா தெரியும்’

ஒன்றும் சொல்லாமல் பார்த்தேன்.

‘ஆனா கர்த்தர் அருளாலே மீண்டிரலாம்னு நம்பிக்கை இருக்கு..எனக்கு வேற வழி இல்லவே..என்னால வேற மாதிரி முடியாது’

‘ஏன்?’

'எனக்க அப்பன் கடலுக்குப்போயாக்கும் செத்தாரு தெரியுமா?'

'ஆமா'

'அப்பனுக்க ஒப்பரம் போயி செத்தது ஏழாளாக்கும். அந்தக்காலத்திலே அது எங்க கடப்பொறத்திலே பெரிய சாவு' அருள் சொன்னான். 'முணாம்பக்கம் கடலு துப்பிப்போட்டு. ரெண்டாம் பொழிவளவிலே பிரேதம்கெடக்குண்ணு தெரிஞ்சு ஓடிப்போனம். எல்லாருக்கும் முன்னால ஓடினது நானாக்கும். எனக்க அம்மை அலமொறையிட்டு பொறத்தால ஓடி வாறா. ஓடிப்போயி பாத்தேன். மணலிலே பிடிச்சுப்போட்ட பால்சுறா மாதிரி எனக்க அப்பன் கெடந்தாரு.எனக்கு முதல்ல அவர பாத்தப்பம் தோணினது ஆசுவாசமாக்கும். மூணுநாளா பொறங்கடலுக்கு போனவங்க என்ன ஆனாங்கண்ணு தெரியாம கெடந்து எரிபிரி கொண்டோம். இந்நா அப்பன் வந்தாச்சுண்ணு முதல்ல நினைச்சேன். அப்படியே நின்னேன். பொறத்தால வந்தவளுக அலமொறையிட்டு நெஞ்சில அடிச்சு அளுறத கண்டப்பமாக்கும் அப்பன் செத்தாச்சுன்னு எனக்க ஆன்மாவுக்கு மனசிலானது'

போற்றி குடத்துடன் வந்து 'செரி பாப்பம். பதமாட்டு சொல்லிப்பாக்கேன். கேக்கல்லண்ணா அவனுக்க விதி.என்னவே' என்றபடி கடந்து சென்றார்.

அருள் என்னிடம் 'அப்பம் பர்னபாஸுக்க அம்மை ஏசுவடியா ஓடி வந்தா.ரெண்டு கையாலயும் நெஞ்சில அடிச்சு ஏசுவே என்னைய சதிச்சுப்போட்டேரேண்ணு கதறிட்டாக்கும் வாறா. வந்து பிரேதங்கள பாக்கா. மொத்தம் நாலு பிரேதங்க அங்கயுமிங்கயுமா மணலிலே பாதி மூடிக்கெடக்கு. அவ ஓரோ பிரேதமா பாத்துட்டு ஓடுதா. அவளுக்கு அவ மகனுக்க பிரேதமுண்டான்னு மட்டுமாக்கும் பார்வ. போறவளியிலே எனக்க அப்பனுக்க கையிலே ஏறி மிதிச்சுட்டு அந்தால ஓடுதா. அப்பனுக்க கை மணலிலே புதைஞ்சுது. அவரு தலைய ஆட்டுத மாதிரி இருந்தது. எனக்கு ஆத்மாவில ஒரு கல்ல தூக்கி ஆரோ போட்டது மாதிரியாக்கும் அப்பம் தோணினது'

எனக்கு மூச்சுத்திணறியது. மிகக்குறைந்த சொற்களில் சொல்லப்பட்ட சித்திரம் வழியாக மங்கிய சாம்பல் மேகங்களுக்குக் கீழே மழைக்கால மங்கல்நிறம் கொண்ட கடலை, வெண்நுரை கக்கும் அலைகளின் சீற்றத்தை, சிறுதூறல் பரவி ஒளிர்ந்த காற்றை, மென்மணலில் புதைந்துகிடந்த சடலங்களை, கூடிநின்றவர்களின் பதற்றம் மிக்க குரல்களை கதறல்களை எல்லாம் கேட்டேன்.

'அண்ணைக்கு எனக்க அப்பன சவிட்டிப் போனவ ஒரு அம்மையாக்கும்.பெத்த தீயாலத்தான் அப்பிடி ஓடினா.அவ அண்ணைக்கு என்ன ஜெபிச்சிருப்பா? ஏசுவே தேவனே எனக்க பிள்ளைய தந்துபோடும்னு கேட்டிருப்பா. ஓலகமே அளிஞ்சாலும் அவளுக்கு ஒண்ணுமில்ல.இல்லியா? வே, அது எனக்கு மறக்கமுடியாத காரியமாக்கும். அப்பிடி ஏசுகிட்ட போயி எனக்கு எனக்குண்ணு கேக்குதது பெரியபாவம்ணு தோணிப்போச்சு.கர்த்தருக்கு அது பிடிக்காதுண்ணுதான் இப்பமும் நினைக்கேன்'

'அதுக்கா சாமியாட்டு போறீரு?'

'இல்லேண்ணா நானும் அப்படி கேப்பேன்லா?'

ஜானை நினைத்துக்கொண்டேன். ஒவ்வொருகணமும் அவன் தனக்காகவும் தன் குடும்பத்துக்காகவும்தான் ஜெபித்தான். தனியாக இருக்கும்போதெல்லாம் 'ஜான் ஜெபிக்குதது பாவம்னா சொல்லுதேரு?'

அருள் என்னைப்பார்த்தான்.

'எனக்கு என்ன தோணுது தெரியுமா? அவனையும் உம்மையும் கர்த்தருக்கு ஒரேமாதிரித்தான் பிடிக்கும்'

அருள் ஒன்றும் சொல்லவில்லை. நாங்கள் மேலே வந்தபோது எங்கோடி கண்டன் சாஸ்தா கோயில் நடை திறந்திருந்தது. தீபங்கள் எரிய சாஸ்தா உள்ளே எழுந்தருளியிருப்பது சாலையில் இருந்தே தெரிந்தது. கும்பிட்டுக்கொண்டேன்.

'நீரு சொன்னது செரியாக்கும்' என்றான் அருள்.

---

## புறப்பாடு 1: 10 – கரும்பனையும் செங்காற்றும்

அவ்வளவு தொலைவிலிருந்து ஒருவன் வந்து படிக்குமளவுக்கு எங்கள் கல்லூரியில் என்னதான் சொல்லிக்கொடுத்தார்கள் என்று தெரியவில்லை. மாரிமுத்து அவன் ஊருக்குச் செல்ல இரண்டு பேருந்துகள் ஏறவேண்டும். திருச்செந்தூர் பஸ்ஸில் ஏறி குண்டல் என்ற ஊரில் ஓர் அத்துவானக்காட்டில் இறங்கி, அங்கேயே ஒருமணிநேரம் நின்று இன்னொரு பேருந்தில் ஏறி எங்கோ இறங்கி மேற்கொண்டு நடந்து செல்லவேண்டும்.

ரத்தச்சிவப்பான மண்ணை திருச்செந்தூர் பயணத்தில் பார்த்ததுண்டு என்றாலும் அங்கே இறங்குவது அதுவே முதல் முறை. நீலியம்மன் கோயிலில் ஆடறுத்த மறுநாள் களம் அப்படித்தான் கிடக்கும். பனைமரங்கள் எல்லாம் நல்ல கரிக்கறுப்பு. கூட்டம் கூட்டமாக பல்லாயிரக்கணக்கில் நின்ற பனைமரங்கள் தலைவாரி சீவப்படாத கிறுக்குப்பெண்கள் போல நின்றன. காற்றில் அனைத்தும் சேர்ந்து ஓலமிட்டன.

சிவந்த தரையில் பெரிய அரைவட்டங்களை வரைந்தபடி காற்றிலாடி நின்றன உடைமுட்செடிகள். நடுவே சிவந்த ரத்தகாயம்போல பாதை. செம்மண் மென்மையாக பசும்சதைபோலவே இருந்தது. அதில் காலடிகளே இல்லை. அலையலையாக காற்றின் பதிவுகள்தான். மாரிமுத்து 'இன்னும் கொஞ்ச தொலைதான்' என்றான்.

'எப்டிலே நீ வளி கண்டுபிடிக்கே?' என்றேன்.

'ஏன்? இங்க வளி நல்லாத்தானே இருக்கு. எரட்டப்பனைக்கு அந்தால லெஃப்டுல திரும்பினா நேரே போகவேண்டியதுதான்''

'அந்தாலயா?'

'ஆமாலே-பாத்தா கண்ணுதெரியல்லியா?'

'எனக்கு எல்லாமே ஒண்ணுமாதிரில்லா தெரியுது''

'வெளங்கிரும்-இந்த வெட்டவெளியிலே கண்ணு தெரியல்ல- உங்கூர்ல எங்க பாத்தாலும் மரம்தாலா-எனக்கு காட்டுக்குள்ள நிண்ணதுமாதிரில்லா இருக்கும்'

கல்லூரியில் எலிகளைப்போல கூசி முதுகு வளைத்து ஓரமாக ஒதுங்கி மேலே கண் தூக்காமலேயே செல்கிறவர்கள் அவர்கள் சொந்த ஊரில் வேறுமாதிரி இருப்பதைக் கண்டேன். அருமை அவனுடைய ஊரில் ஒரு குட்டி இளவசரசன் மாதிரி இருந்தான். மாரிமுத்து தேரிக்காட்டில் வந்திறங்கியதுமே தன் கைகால்கள் மீதிருந்த கட்டுகளை பட் பட்டென்று அறுத்தெறிந்து நிமிர்ந்து கால்வீசி நடந்தான். அவன் சுதந்திரமாக இருக்கிறான் என்பதற்கான ஆதாரம் அவ்வப்போது அவன் நான்கு பக்கமும் அனிச்சையாக துப்பிக்கொண்டது.

கல்லூரி ஒரு விசித்திரமான வட்டம். அங்கே வரக்கூடியவர்களில் தொண்ணூறுசதவீதம் பேரின் தன்னம்பிக்கையை நிரந்தரமாக முறித்துவிடுகிறது. அவர்களால் எந்த கண்களையும் ஏறிட்டுப்பார்த்துப் பேசமுடிவதில்லை. எந்த இடத்திலும் எழுந்து தன்னை முன்வைக்கமுடிவதில்லை. அதிலும் அன்றெல்லாம் கல்லூரிகளில் வந்து அமர்ந்து பெஞ்சில் பின்பக்கச்சூடு படியும் முன்னரே நேரடியாக ஆங்கிலத்தில் வகுப்பெடுக்க ஆரம்பிப்பார்கள். ஆங்கிலத்திலேயே கேள்வி. ஆங்கிலத்திலேயே பதில். ஆங்கிலத்திலேயே திட்டு.

நாகர்கோயில் மாணவர்கள் மட்டும்தான் ஆங்கிலத்தில் பதில் சொல்லமுடியும். செல்வின்ராஜ் சாதாரணமாகவே ஆங்கிலத்தில்தான் பேசுவான். உயர்தர மூக்குக்கண்ணாடி போட்டிருப்பான். கண்ணாடி போட்ட அனைவருமே ஆங்கிலம் பேசினார்கள். அவர்கள் அனைவருமே கிரிக்கெட் அல்லது டென்னிஸ் விளையாடினர். கல்லூரிக்கே டென்னிஸ் ராக்கெட்டுடன் சைக்கிளில் வந்தார்கள். கல்லூரி முடிந்ததும் மைதானத்தில் பந்தை ஓடி ஓடி அடித்தனர். தவறியபோது 'கிறைஸ்ட்!' என நாசூக்காக சலித்துக்கொண்டு ராக்கெட்டை வீசி தலையாட்டினர். அவர்களுடன் எங்கள் பிரின்ஸிபாலும் ஆங்கிலத்துறைத் தலைவரும் சேர்ந்து விளையாடினர்.

ஆனால் ஒரு நாளில் ஏழுமணிநேரம் ஆங்கிலத்தில் படித்துக்கொண்டிருக்கும் என்னால் நான்குவார்த்தை ஆங்கிலத்தில் சொல்லிவிடமுடியாது. ஆங்கிலத்தை ஒரு பகட்டான வெள்ளைக்காரியாக நினைத்துக்கொண்டேன். 'சோ நைஸ்-தேங்க்யூ' என்று சொல்லக்கூடியவள். ஆனால் அதற்கு அர்த்தம் தள்ளிப்போடா கறுப்புநாயே என்பதுதான்.

கல்லூரியில் உள்ள மௌனப்பெரும்பான்மை ஆங்கிலத்தை வெறுத்தது. கல்லூரியில் எஸ்எஃப்ஐ கிளையை ஆரம்பிப்பதற்காக வந்த தோழர் டானியல், கார்ல்மார்க்சைப்பற்றிச் சொன்னபோது 'அந்த தாடிமயிரான் இங்கிலீஸுகாரனாலே?' என்று என்னருகே அமர்ந்து மெல்லியகுரலில் கேட்டான் மாரிமுத்து. அவனும் விடுதியில்தான் தங்கியிருந்தான். ஊரில் நாங்கள் மலைத்தீ வந்து முடிந்தபின் மலைக்குச்சென்று பொறுக்கிவரும் கரிக்கம்பு மாதிரித்தான் இருந்தான். கருகி எரியாமல் எஞ்சிய குச்சி எங்களூர் மழையையும் ஈரத்தையும் தாங்கி நெடுநாள் உழைக்கும். தொளியில் ஊன்றி குழை சவிட்ட மிக உதவிகரமானது.

வருடக்கடைசியில் ஆங்கிலப்பாடங்களை அப்படியே ஒன்றாக்கினார்கள். பொருளியல், வணிகவியல் மாணவர்களைச் சேர்த்த அவியல் வகுப்பில் மாரிமுத்துவும் நானும் திடீரென்று ஒரே வகுப்புக்குரியவர்களானோம். அன்றைக்கும் ஷேக்ஸ்பியர் நாடகம் படிக்காமல் பட்டம்பெற முடியாது. எங்களுக்கு இருந்தது வெனிஸ் வணிகன். அதை கல்லூரி முதல்நாளே வாசித்துவிட்டேன். மற்றவர்கள் கடைசி வரை வாசிக்கவில்லை.

சரம்சரமாக பேராசிரியர் பொழிந்துகொண்டிருந்த வகுப்பில் மதியநேர மயக்கம். ஆங்கிலமும் தமிழும் எப்போதுமே சோற்றுக்குமேலேதான். அவ்வளவு கவனமாக கற்கவேண்டியவை அல்ல என்பது கல்லூரிக்கணக்கு போல. சட்டென்று 'நண்பா இது படுக்கை நேரம் அல்லவே?' என்றார் பேராசிரியர். திடுக்கிட்டு வாயைத்துடைத்தேன். ஆனால் பேராசிரியரின் சாக்பீஸ் சென்று விழுந்தது மாரிமுத்து மீது. அவன் பதறி எழுந்தான்.

''ஆகவே போர்ஷியா என்ன செய்தாள் என்று தயைகூர்ந்து விளக்க முடியுமா நண்பனே ?' என்றார் பேராசிரியர்.

'அவள் ஆணின் உடைகளைப் போட்டாள்' என்று மாரிமுத்துவின் ஆன்மா உத்தேசித்ததை நானும் அங்கிருந்த வாயுள்ள ஊமைகள் அனைவரும் உணர்ந்தனர். ஆனால் அவன் ''ஷி புட்டு புட்டு' என்றான்.

''வாட் புட்டு? கொழாய் புட்டு?' என்றார் பேராசிரியர். முன்வரிசையில் கண்ணாடிக்காரர்கள் பயங்கரமாக வெடித்துச்

சிரித்தனர். எஞ்சிய வகுப்பு திகைத்து அமர்ந்திருந்தது.

பேராசிரியர் கரும்பலகையில் ஒரு குழாய்ப்புட்டின் படத்தை வரைந்தார். ''திஸ் இஸ் குழாய்ப்புட்டு..ஸோ வாட் யூ வாண்ட்? சம்பா ரைஸ் புட்டு ஆர் வைட் ரைஸ் புட்டு?'

சிரித்தாகவேண்டுமென்பதை புரிந்துகொண்டு மொத்த வகுப்பும் சிரித்தது. பேராசிரியர் அவரும் மகிழ்ந்து சிரித்தார். 'ஸிட் டவுன் பிளீஸ்'

மாரிமுத்து அமர்ந்துகொண்டான். பேராசிரியர் போஷியாவின் சாகஸங்களில் இறங்கினார்.

வகுப்பு முடிந்து பேராசிரியர் சென்றதும் முன்வரிசைப்பையன்கள் எழுந்து பின்னால் திரும்பிப்பார்த்தார்கள். ஸ்டீபன் 'ஹல்லாவ்' என்று அழகிய ஓலியுடன் சொன்னான் 'ஸோ யுர் நேம் இஸ் புட்டு ஹியரா்ஃப்டர்'

மற்றவர்கள் சிரித்தார்கள். அவர்கள் சென்றபின் ஊமையர்களும் ஒவ்வொருவராக அடுத்த வகுப்புக்குச் சென்றார்கள். மாரிமுத்து அருகே அமர்ந்தேன். அவன் என்னை பார்க்காமல் புத்தகத்தில் எதையோ எழுதிக்கொண்டிருந்தான்.

''லே விடுலே, அந்தாளு அப்டித்தான்'

அவன் முரட்டுத்தனமாக 'போலே தாயளி' என்றான்.

'லே' என எதையோ ஆரம்பிப்பதற்குள் அவன் சீறி அழ ஆரம்பித்தான்.

அந்த அழுகையை என்னால் புரிந்துகொள்ளவே முடியவில்லை. இதற்குப்போய் அழுகையா? வகுப்பில் சுசீந்திரம் கோபுரச்சிலை மாதிரி பெஞ்சுமேல் ஏறி நின்றவர்கள் உண்டு. கோழி வந்து மேலே விழுந்தது போல புத்தகத்தால் எறியப்பட்டவர்கள் உண்டு. எவரும் எதையும் பொருட்படுத்தியதேயில்லை. பொருட்படுத்த ஆரம்பித்தால் கட்டுப்படியாகாது.

அவன் அழுது முடித்தபின் ''லே நம்ம கிளாஸு மாடியிலயாக்கும்..போலாமா' என்றேன்.

அவன் கண்ணீரை முழங்கையால் துடைத்தபடி 'லே, நான் போறேன் நான் இனிமேக்கொண்டு படிக்கல்ல' என்றான்.

'எங்க?'

'தேரிக்காட்டுக்கு'

'போயி?'

'போயி பனமட்ட வெட்டுதேன்.. முள்ளு சொமக்கேன்..இங்க நிண்ணு நாறுகதுக்கு அது மானமுள்ள சீவிதமாக்கும்.. லே, இந்த நாயிங்க நம்மள எதுக்குலே கடிக்க வருது? செறுக்கிவிள்ளைய இனி என்னமாம் சொன்னா அப்படியே கல்ல எடுத்து தலமண்டைய பேத்திருவேன்''

'லே அவனுக பெரியாளுக..வேண்டாம் கேட்டியா?'

'என்னல பெரியாளுக? பெரியாளுகண்ணு சொன்னா என்ன தங்கத்தில உருட்டியா வச்சிருக்கானுவ? நல்ல மண்டயடி குடுத்தா தானா அடங்குவானுக..'

'அதெல்லாம் அடிக்கமுடியாதுலே..அவனுகளாக்கும் ராச்சியம் ஆளுகது'

''என்னல மயிரு ராச்சியம்? லே நாங்க ஆருண்ணு நினைக்கே? ஆருண்ணுலே நெனைக்கே? நாங்க பாண்டிய வம்சமாக்கும். வடுகப்பட நாட்டை பிடிச்சப்ப நாங்க அவனுகளுக்கு கப்பம் குடுக்கமுடியாம தேரிக்காட்டில குடியேறினோம். அங்கிண ஒருத்தனுக்கும் தலவணங்காம மானமா வாழ்ந்தோம்..லே, தேரிக்காட்டு பனைய பாத்திருக்கியா? உங்கூரு தென்னமரம் இல்ல பாத்துக்க.. நிமுந்து நிண்ணா கருங்கல் தூணாக்கும்..'

'அதுசெரி.. ஆனா இது நாகருகோயிலாக்கும்''

'எங்கியானாலும் பாளையருவாளுக்கு கருக்கு ஒண்ணுதாம்ல..சீவினா சீவினதுதான் பாத்துக்க..தாயளி இனி எவனாவது வாயில சிரியும் கொண்டு வரட்டு.. அப்பம் நீ பாப்பே'

ஆனால் நாங்கள் மாடிப்படி ஏறும்போதே ஹரிஹரசுப்ரமணிய அய்யர் வந்தான். கண்ணாடிக்கும்பலில் இருக்கும்போது பெரிய குரல்வளையும் சோடாப்புட்டியுமாக கோமாளியாக இருப்பவன் தனியாக வரும்போது ஒரு பிரபுவாகத் தெரிந்தான். வழி விட்டு ஒதுங்கினேன்.

'ஹாய் புட்டு.. வாட்ஸ் யுர் க்ளாஸ் மேன்?'

*மாரிமுத்து ‘திஸ்அப்…’ என்றான். பதறி ‘டாப் கிளாஸ்’ என்று திருத்திக்கொண்டான்.*

*ஹரிஹரசுப்ரமணிய அய்யர் சிரித்துக்கொண்டே ‘ஃபனி’ என்றபடி கீழிறங்கிச் சென்றான். அங்கே சிவதாணுப்பிள்ளை அவன் ஆஸ்டின் காரை கிளப்பி இவனுக்காக காத்திருந்தான்.*

*மௌனமாக மேலே சென்றோம். என்ன பேசினாலும் மாரிமுத்து என்னை அடிப்பான் என்று அறிந்திருந்தமையால் ஒன்றுமே சொல்லவில்லை. மாரிமுத்து தனக்குள் ஆழ்ந்தவனாக வந்தான். வகுப்பை அடைந்ததும் பெருமூச்சு விட்டு ‘வாறன் மக்கா…ஆஸ்டலிலே பாப்பம்லே’ என்றான்.*

*ஆங்கிலப்பேராசிரியர் மறுநாள் வகுப்புக்கு வந்ததும் ‘வெல் அவர் புட்டு இஸ் ஹியர்’’ என்று சொல்லி சிரித்தபடி கண்ணாடிக்காரர்களின் சிரிப்பை எதிர்பார்த்தார். அவர்கள் சிரிக்க ஆரம்பித்ததும் மற்றவர்களும் சிரித்தோம். பேராசிரியர் வகுப்பை கலகலப்பாக நடத்த மாரிமுத்துவை பயன்படுத்திக்கொண்டார். ‘கமான் மேன், வாட் யூ மீன் பை புட் இட் ஆஃப்?’*

*மாரிமுத்து எழுந்து நடுநடுங்கினான். கைகள் டெஸ்க்நுனியில் பற்றி அதிர்ந்தன. தொண்டைக்குழி ஏறி இறங்கியது. ஒரு கண் விசித்திரமாகச் சிமிட்ட தலை வெட்டுக்கிளி போல ஆடிக்கொண்டிருந்தது. முதல்வரிசை ஆரவாரம் செய்தது. பேராசிரியர் ‘’சைலன்ஸ் ப்ளீஸ் ‘ என அடக்கியபின் ‘கமான்’ என்றார்.*

*‘புட்டு மீன்…’*

*‘மை குட்னெஸ்…நவ் ஹி இஸ் ஈட்டிங் புட்டு வித் ஃபிஷ்!’*

*ஹரிஹரசுப்ரமணிய அய்யரும் ராஜப்பாவும் செல்வினும் கிட்டத்தட்ட எழுந்து பின்னால் திரும்பிப்பார்த்துச் சிரித்தார்கள். மாரிமுத்து தலைகுனிந்து நின்றான். அழக்கூடாது என அவன் தன்னை இறுக்கிக்கொள்வது தெரிந்தது. அவன் சட்டென்று வெறிகொண்டு கத்துவான் என்றும் ஒருவேளை அவன் இடுப்பில் பாளையரிவாளே இருக்கும் என்றும் கற்பனை செய்தேன்.*

*‘ஃபைன்…மிஸ்டர் புட்டு …ஸிட் டவுன்…ஓக்கே, வி கேன் ஸ்டார்ட் நவ்’’ பேராசிரியர் வகுப்புக்குத் திரும்பினார்.*

*அதன்பின் மாரிமுத்து கல்லூரி வட்டாரத்தில் புட்டு என்றே அழைக்கப்பட்டான். ஆசிரியர்களிடையே பரவி எல்லா ஆசிரியர்களும் அவனை புட்டு என்றார்கள். எங்களில் எவரேனும் புட்டு என்று சொன்னால் மாரிமுத்து வெறிகொண்டு அங்கே அப்போது அவன் கையில் என்ன கிடைக்கிறதோ அதைக்கொண்டு தாக்கவருவான். ஒருமுறை சதானந்தனும் அவனும் வேட்டிகள் உரிந்து விழ கட்டிப்புரண்டு சண்டையிட்டார்கள்.*

*ஆனால் இரண்டுமாதங்களுக்குள் தன்பெயர் புட்டு என்று மாரிமுத்துவே நடைமுறையில் ஒப்புக்கொண்டான். பாம்பே சர்க்கஸின் ஒரு புலிக்கு ஜண்டுபாம் என்று பெயரிட்டிருந்தார்கள். எப்படி அது ஒப்புக்கொண்டது என்று நினைத்ததுண்டு. ஆனால் பெயர்களை பிறர்தான் போட்டு நம் மீது சுமத்துகிறார்கள் என்று புரிந்துகொண்டேன்.*

*விடுதியில் அலக்ஸாண்டர் டூமாவின் த்ரீ மஸ்கெட்டீர்ஸ் வாசித்துக்கொண்டிருந்தபோது மாரிமுத்து அருகே வந்து அமர்ந்து ‘லே இங்கிலீஸாலே?’ என்றான்.*

*‘ஆமா’*

*‘இம்பிடு பேஜையும் நீ வாசிப்பியா?’*

*‘ஆமா…இந்தா இது வரைக்கும் வாசிச்சாச்சு’*

*‘’பின்ன ஏன்ல நீ இங்கிலீசு பேசுகதில்ல?’*

*‘எனக்கு இங்கிலீஷ் தெரியும்லே…ஆனா வாயில வரல்ல பாத்துக்க’*

*‘வாயில வரல்லண்ணா?’*

*நான் ஒரே ஒருமுறைதான் கல்லூரியில் ஆங்கிலம் பேசினேன். மதன்குமாரிடம் ‘ஹூ இஸ் ஃபார் ஃபர்ஸ்ட் பீரியட்?’ என்று கேட்டேன். அவன் என்னை கண்ணாடிச்சில்லுவழியாக நோக்கி ‘வெல்ல்…’என இழுத்து ‘உச் பீயியேட்?’ என்றான். திகைத்து நின்றபின் ‘அயாம் ஸாரி’ என்று சொன்னேன். ‘தட்ஸ் ஃபைன் யஹ்’’ என்று சொல்லிவிட்டுச் சென்றான். அதன்பின் ஒருவருடம் அவனை எங்கே கண்டாலும் பதுங்கிக்கொள்வேன்.*

*மாரிமுத்து கொஞ்சம் அந்தரங்கமாக ‘’ இங்கிலீசு வாயில வர என்னல செய்யணும்?’ என்றான்.*

*உன் அப்பனுக்கு பணம் இருக்க வேண்டும் என்று நினைத்துக்கொண்டேன். ‘’வீட்டில இங்கிலீசு பேசணும்…’ என்றேன்.*

*‘வீட்டிலயா?’ என்றபின் சிரித்து ‘எங்க ஆயா நல்லா இங்கிலீஷ் பேசுவா…ஒருநாள் வீட்டுக்கு வா’ என்றான். ‘லே இவனுக பேசுத இங்கிலீசு நல்ல இங்கிலீசாலே?’*

‘சிலரு நல்லா பேசுகானுக.ஆனா கன்யாகுமரிக்கு வாற இங்கிலீஷ்காரனுக வேறமாதிரி பேசுகானுக’ என்றேன்.

மாரிமுத்து ‘அவனுக இங்கெ என்னத்துக்குலே வாறானுக? வெயிலுல நிண்ணு தோலு புண்ணாப்போவுதுல்லா?’ என்றான்.

‘லே அது அவனுகளுக்க தோலுக்க நெறமாக்கும்’

‘செவல நெறமா?’

‘ஆமா’’

‘லே செவலநெறத்திலயா மனுசன் இருப்பான்?’

‘ஆமாலே.அவனுக அதைத்தான் சாதியிலே கூடின நெறமுண்ணு நெனைக்கானுக’

‘அவனுக கூடின சாதிதானே? சாதிகூடின செவல பாசையில்லா பேசுகானுக?’

பனைமரங்கள் ஆரோக்கியமான எருமைக்கூட்டங்கள் போலத் தோன்றின ‘லே இதில கள்ளெடுப்பிகளா?’

‘இதெல்லாம் சர்க்காரு பனையாக்கும். கள்ளெடுத்தா நம்ம எல்லெடுத்துப்போடுவானுக’’

’பின்ன?’

‘’என்னலே பின்ன?’

‘இல்ல வேஸ்டுல்லா?;

‘அதிப்பம் காட்டிலே காட்டெருமை கெடக்கு. அதுக்கெல்லாம் பாலுகறந்துட்டா இருக்கானுவ?’

நான் அந்தக்கோணத்தில் யோசித்ததே இல்லை.

பனைமரங்களுக்கு அப்பால் வீடுகள் தெரிந்தன. ஆனால் அவற்றை வீடுகள் என ஒரு கணம் கழித்தே உணரமுடிந்தது. பனை ஓலைக்கூரைகள் போட்ட குட்டையான சிறிய குடிசைகள் அவை. அவற்றின்மீது செம்மண் படலம் மூடியிருந்ததனால் சிறிய குன்றுகள் என்றுதான் பட்டது. அங்கிருந்து நான்கு நாய்கள் ஓடிவந்தன. சின்ன நாய்கள். பெரிய காதுகளும் செம்மண்நிறமான உடலும் கண்ணாடிக்கற்கள் போன்ற கண்களும் கொண்டவை. சில்லென்ற சத்தம். சள் சள் சள் என்று.

அவை மாரிமுத்துவை அடையாளம் கண்டுகொண்டன. ஒன்று என்னைப்பார்த்து உர்ர்ர் என்றது. மாரிமுத்து ‘ம்ம்’ என்றதும் அவனைநோக்கித்திரும்பி வாலை ஆட்டியது. நான்கு நாய்களும் அவனைச் சூழ்ந்துகொண்டு நடனமிட்டன. ஒருநாய் அவன் முன்னால் சென்று பக்கவாட்டில் நின்று வாலை ஆட்டியபடி நடுங்கியது.

‘இங்க மொத்தம் பத்து வீடாக்கும்’ என்றான் மாரிமுத்து. ‘’எல்லாம் நம்ம சொக்காரனுகளும் அருவக்காரனுகளும்.ராப்பகலா சண்டைதான்’

மாரிமுத்துவின் வீட்டில் யாருமே இல்லை. வீட்டுக்கு பனைமட்டையால் படல்செய்து கதவு அமைத்திருந்தார்கள். அதை கயிறால் கட்டிவைத்திருந்தது. அவன் அதைத்திறந்து உள்ளே சென்றான். சிறிய சதுர வடிவ அறைக்குள் ஒரு ஓரத்தில் பனம்பாய்கள் சாய்க்கப்பட்டிருந்தன. அடுக்கடுக்காக பானைகள் நின்றன. ஒரே ஒரு லாந்தர் விளக்கு. வேறு எதுவுமே இல்லை.

‘பைய இங்க வச்சுக்கோ’ என்றான்.

‘இங்க யாருமில்லியா?’

‘காட்டுக்குப்போயிருப்பாவ. அந்திவெட்டு உண்டுல்லா?’

எந்த வீட்டிலும் ஆளில்லை. அக்கானிகாய்ச்சும் பெரிய தகர டின்கள் பல இடங்களில் வைக்கப்பட்டிருந்தன. பனைமட்டைகள் குவிக்கப்பட்டிருந்தன. அருகே சாம்பல் அணைந்த கல்லடுப்புகள்.

மாரிமுத்து உள்ளிருந்து தண்ணீர் கொண்டு வந்தான். தகரப்பாத்திரத்தில் ஒரு செம்பு தண்ணீர். ‘இங்க தண்ணி கொஞ்சம் தட்டுப்பாடாக்கும். கொஞ்சமா குடிச்சுக்க’’ என்றான்.

’முகம் கழுவ?’

'உனக்க முகத்தில என்ன காக்கா பேண்டுச்சா? இப்பம் என்னத்துக்கு களுவுதே?'

அதுவும் சரிதான். தண்ணீரைக்குடித்தேன். தண்ணீர் மிகக் கனமாக இருந்தது. இரும்பை நக்கியதுபோன்ற ஒரு நாக்கூசல்.

'இங்க உள்ள தண்ணியிலே கரண்டுசத்து உண்டும்-குடிச்சா தொண்டையிலே குளிரு நிக்கும்' என்றான் மாரிமுத்து.

அவன் சட்டையைக் கழற்றிவிட்டு அங்கே கிடந்த விறகுகளை எடுத்து அடுக்கினான்.

பனைமரங்கள் நடுவே ஒரு பெரிய சாம்பல்நிற நாய் நடந்துவருவதைக் கண்டேன். தனியாக தலையைத் தொங்கப்போட்டபடி வந்தது. நீளமான நாய். வால் பின்பக்கம் கிடையாக நீட்டப்பட்டிருந்தது. ஒட்டிய வயிறு, நீளமான கால்கள். தலை கனத்து நீண்டு தெரிந்தது. சிறிய மடிந்த காதுகள். அருகே இன்னொரு அதே வகை நாய்.

'லே மாரி அதென்னலே நாய்?'

'அது காரியும் கறுப்பனும்-அப்பனுக்க நாய்களாக்கும்-அப்பன் வாறாரு''

''அது என்ன நாய்?'

'கோம்பை-நீ பாத்ததே இல்லியா?'

'இல்லல''

இருநாய்களும் தொங்கிய தலையுடன் வீட்டை நெருங்கின. பின்பக்கம் மாரியின் அப்பா தோளில் காவடிபோல முருக்குத்தடியை வைத்து அதன் இருபக்கமும் தகரபீப்பாய்களை தொங்கவிட்டுக்கொண்டு பக்கவாட்டில் உடல்திருப்பி சிறிய ஓட்டமாக வந்தார். அவருக்குப்பின்னால் அவன் அம்மா பெரிய விறகுச்சுமையுடன் வந்தாள்.

நாய்கள் வந்தபோது நான்கு செவலைகளும் அவற்றை நோக்கி ஓடின. செல்லமாகக் குரைத்தபடி அவற்றின் மோவாயை முகர்ந்து வாயோரமாக நக்கின. ஆனால் கோம்பைகள் செவலைகளை பொருட்படுத்தவேயில்லை. செவலைகள் பின்னால் வந்துகொண்டிருந்தவர்களை நோக்கி ஓடின.

கோம்பைகள் பேசாமல் வந்து ஓர் உடைந்த பானையில் வைக்கப்பட்டிருந்த நீரை ளக் ளக் ளக் என்று குடித்தன. மோவாயில் நீர்வழிய ஓரமாகச்சென்று அமர்ந்துகொண்டன. என்னை அவை பொருட்டாக நினைக்கவில்லை. அவை அருகே வந்ததும் பயத்துடன் எழுந்து குடிசைவாசலில் நின்ற நான் அவை திரும்பிக்கூட பார்க்கவில்லை என்பதைக் கண்டு திரும்பவந்தேன்.

மாரியின் அப்பா நெருங்கி வந்தார். அவரது மூச்சொலிகூட கேட்கவில்லை. நிழல் வருவதுபோல அவ்வளவு சத்தமில்லாமல் வந்து அந்த இரு பீப்பாய்களையும் இறக்கிவைத்தார். இரண்டிலும் அந்திச்செத்து அக்கானி பூச்சிகள் மிதக்க வெண்கலங்கலாக நுரைத்து நின்றது. சுண்ணாம்புவீச்சம் வந்தது. மாரியின் அம்மா பின்னால் வந்து விறகை போட்டுவிட்டு ''ஆருலே மாரி?' என்றாள்.

'கூட்டுகாரனாக்கும்'

'ஓ' அவள் என்னை நெருங்கி 'வாங்க தம்பி' என்றாள். மாரியின் அம்மா அவ்வளவு இளமையாக இருப்பாள் என எதிர்பார்க்கவில்லை. என்னைவிட அரையடி உயரம் குறைவு. பனைமரத்தின் நிறம். மெலிந்த தோள்கள். கரிய நரம்போடிய கைகள்.

மாரியின் அப்பா முருக்குத்தடி கிடுக்குபெட்டி சுண்ணாம்புபெட்டி எல்லாவற்றையும் குடிசையின் எரவாணத்தில் தொங்கிய கயிற்றில் மாட்டினார். முற்றத்தில் வந்து இடுப்பிலிருந்த துண்டைக்கழற்றி சத்தமாக ஏழெட்டுமுறை உதறினார். அழுக்கான கோவணம் மட்டும் உடுத்திருந்தார். உடலெங்கும் கரிய மயிர். துண்டை முறுக்கி உடம்பை உரசி உரசித் துடைத்தார். முதுகுவழியாகப்போட்டு இழுத்தார். அதுதான் அவரது குளியல் என ஊகித்தேன்.

அதன்பின் அருகே சாய்க்கப்பட்டிருந்த நார்க்கட்டிலை எடுத்து முற்றத்தில் போட்டுக்கொண்டார். அது அவரே பனைமரப்பிளாச்சுகளை பனைநாரால் கட்டி செய்தது என தெரிந்தது. அதில் கால்களை ஏற்றிவைத்து அமர்ந்துகொண்டு பாளைஅரிவாளால் தன் காலைச் செதுக்க ஆரம்பித்தார். மரத்தைச் செதுக்கித்தள்ளுவதுபோல குதிகாலை செதுக்கி வீசினார். செருப்பு போடாமல் இந்த முள்காட்டில் நடப்பதற்கான கால்கள்.

மாரியின் அம்மா வீட்டுக்குள் சென்று சட்டிகள் பானைகளை எடுத்துக்கொண்டு சென்று அடுப்பருகே வைத்தாள்.

'சொல்லிட்டு வரப்பிடாதா மக்கா? முசலு பிடிக்கச்சொல்லியிருப்பேனே-'

'சட்டுண்ணு தோணி வந்தேன்' என்றான் மாரி.

மாரியின் அப்பா பாளை அரிவாளை வைத்துவிட்டு கட்டிலில் அமர்ந்து வானத்தை பார்த்துக்கொண்டிருந்தார்.

அப்பால் மேலும் பலர் பனையேறிவிட்டு திரும்புவது தெரிந்தது. ஒரு கிழவி நன்றாகக் குனிந்து கூன்முதுகின்மீது விறகுடன் வந்துகொண்டிருந்தாள். அவள் மாரியின் வீட்டுக்கு முன்வந்து விறகைப்போட்டுவிட்டு என்னிடம் 'ஆருலே?' என்று கண்மேல் கை வைத்து கேட்டாள்.

'ஆயா, நாகருகோயிலுகாரனாக்கும். நம்ம கூட்டாளி'

'ஓ; என்றாள் கிழவி.

'எனக்க அப்பனுக்க அம்மை' என்றான் மாரி. 'வயசு எம்பது தாண்டியாச்சு'

'வாற சித்திரைக்கு எம்பத்தேளு' என்றாள் ஆயாள். 'இந்தப்பனையெல்லாம் நாம்பாத்து வளந்ததுல்லா? எங்க ஓடையோனுக்க கையப்பிடிச்சு இங்கிண வந்தப்ப இதெல்லாம் செம்மண்ணுத்தேரி- தெனம் காலம்பற பனங்கொட்ட பொறுக்கி செம்மண்ணிலே நட்டு நட்டு வைப்போம்-'

அன்றைக்கு அங்கே அவர்களுடைய ஒரே ஒரு குடிசைதான். அன்றைக்கு தேரிக்காட்டில் பனை குத்தகைக்கு எடுக்கமுடியும். கருப்பட்டியாக்கி சந்தைக்கு கொண்டுபோய்விற்று வாழ்க்கை. தன்னந்தனியாக பனங்காட்டில் வாசம்.

' நான் பனமுட்டு எசக்கி மாதிரியாக்கும் பிள்ள' என்றாள் ஆயாள். ''பாளயருவா இருக்குறப்ப நமக்கென்ன பயம்?'

ஆயாள் என்னிடம் என்னுடைய குடும்பம் பற்றி விரிவாக விசாரித்தறிந்தாள். சாராயம் குடிப்பது தவறு என அறிவுறுத்தினாள்.

'நான் குடிக்கியதில்ல ஆயா''.

ஆயாள் 'பிள்ள வந்திருக்கு- நேரம்காலத்துக்கு ஒரு கஞ்சிய காச்சுதாளா பாரு- நிண்ணு சில்ப்பட்டமுல்லா காட்டுதா தட்டுவாணி நாயி' என்று மருமகளை கண்டித்துவிட்டு குனிந்துகொண்டு உள்ளே சென்றாள்.

'ஆமா-இங்கிண அவுத்துப்போட்டு ஆடுதாவ-காத அறுத்து நாய்க்குப்போட்டிருவேன்-அறுவாணி' என்று மிக மெல்ல முணுமுணுத்தாள் மாரியின் அம்மா.

பத்து குடிசைகளுக்கும் ஆள்வந்துவிட்டதை கண்டேன். எல்லா கொல்லைகளிலும் அடுப்புகள் எரிய ஆரம்பித்தன. பனைமண்டைகளுக்கு அப்பால் சிவந்து தெரிந்த வானம் அணைந்தபோது தழலின் வெளிச்சம் அதிகரித்தது.

பத்துவீடுகளில் மனிதர்கள் வாழும் சத்தமே இல்லை. ஓரிரு பேச்சுகள், சில முணுமுணுப்புகள். அனேகமாக எல்லா ஆண்களும் நார்க்கட்டில்களை தூக்கி முற்றத்தில்போட்டுக்கொண்டு பேசாமல் அமர்ந்திருந்தார்கள். சிலர் பீடிபிடித்தார்கள். அவர்களின் முகங்கள் அந்த செவ்வெளிச்சத்துளிக்கு அப்பால் மெலிதாக எழுந்து அணைந்துகொண்டிருந்தன. கைக்குழந்தைகள் இரண்டுமூன்று முற்றத்தில் விளையாடின. இளம்பெண்கள் சிலர் நடமாடினார்கள்.

ஆயாள் வெளியே வந்தாள். என்னிடம் ஒரு பெரிய பொருவிளங்காயை தந்து 'தின்னு மக்கா' என்றாள்.

'அய்யய்ய என்ன அத வந்தவருக்கு குடுக்கே? தம்பி அது வேண்டாம்-கஞ்சி இந்நாண்ணு கொதிச்சிரும்' என்றாள் மாரியின் அம்மா.

'என்னது ?'என்றேன்

'லே இது ஈசலாக்கும்-பனங்கா தவுண கருப்பட்டி போட்டு இடிச்சு சேத்திருக்கு' மாரி சொன்னான்.

முகர்ந்துபார்த்தேன். வசீகரமான மணமாக இருந்தது. ' நான் தின்னுதேன்' என்றேன்.

'முன்ன தின்னிருக்கியளா தம்பி?'

'ஆமா' என்று பொய் சொன்னேன். ஆனால் அவர்கள் கற்பனைகூட செய்யமுடியாதவற்றை எல்லாம் எங்களூர் காட்டில் தின்றுபார்த்தவன் நான்.

அதை முதலில் கொஞ்சம் தயங்கித்தான் கடித்தேன். பிறகு விரும்பிச் சாப்பிட்டேன். நல்லெண்ணையும் தேங்காயும் கலந்ததுபோல இருந்தது. மழைக்காலம் எழுந்ததும் தேரிக்காடே ஈசலால் மூழ்கிவிடும். ஈசல் மேகம். ஈசல் மழை. ஈசல்புயல். சாலையில்செல்லும் பேருந்துகள் முன்னகர முடியாது. அப்போது விளக்கு கொளுத்தி வைத்து வலைபோட்டு ஈசலைப்பிடிப்பார்கள். சிறகுகளை உதிர்த்து நன்றாகவெயிலில் காயவைத்து எடுத்துக்கொள்வார்கள். பனங்கொட்டைக்குள் உள்ள வெண்பருப்பை துருவி அதனுடன் வறுத்த கேப்பையைச் சேர்த்து இடித்த மாவை பனைவெல்லத்துருவல் சேர்த்து உருட்டி பானையில் சேமித்தால் வருடம் முழுக்க உணவாகும்.

'பிடிச்சிருக்காலே?'

'ஆமா' என்றேன்.

'இன்னொண்ணு திங்குதியா?'

'ஓ'

இன்னொன்றைத் தின்றுகொண்டிருந்தேன். ஆயாள் 'பளங்காலத்திலே எட்டுருண்டயும் ஈட்டியும் இருந்தா யுத்தம் ஜெயிச்சுப்போடலாம்ணு பேச்சு' என்றாள்.

அக்காலத்தில் போர்வீரர்களுக்கு அதுதான் ரேஷன் ஒரு உருண்டை ஒருநாள் உணவு. மடியில் கட்டிக்கொண்டு போருக்குச் செல்வார்களாம்.

கஞ்சி தயாராகியது. சுட்ட கருவாட்டுடன் அதைச் சாப்பிட்டோம். மாரியின் அப்பா அதே கட்டிலில் அப்படியே அமர்ந்து கஞ்சியை குடித்தார். மாரி பக்கத்துவீட்டுக்குச் சென்று ஒரு நார்க்கட்டில் இரவல் வாங்கி வந்தான். அதை வீட்டின் மறுபக்கம் போட்டுக்கொண்டோம்.

அங்கிருந்து பார்க்கையில் இரு கோம்பைநாய்களும் மாரியின் அப்பாவும் அப்படியே அமர்ந்திருப்பதைக் கண்டேன். செவலைகள் செம்மண்ணில் பறித்த குழிகளில் சுருண்டு தூங்கிவிட்டன.

'அப்பா ஏன் எங்கிட்ட பேசல்ல?' என்றேன்.

'அவரு பேச மாட்டாரு'

'ஏன்?'

'இங்க எல்லாரும் அப்பிடித்தான். பேச்சு கொறைவு_' என்றான் மாரி சுருக்கமாக.

அதற்குமேல் அதை விளக்கமுடியாது என்று எனக்கும்பட்டது.

''அப்பன் கோவக்காரராக்கும்_ எப்பம் அடிப்பாருண்ணு தெரியாது.பாளையருவாளால ஒருத்தன வவுந்திருக்காரு'

'பிறவு?

'ஆளு சொக்காரன்தான்_நாலுவருசம் பாளையங்கோட்ட பாத்துட்டு வந்தாரு_ '

நான் கோம்பையைப் பார்த்தேன். இரண்டும் ஒன்றையொன்று பார்த்துக்கொள்ளக்கூட இல்லை. ஆனால் அவற்றுக்குள் சரியான செய்தித்தொடர்பும் இருந்தது.

'இந்த கோம்பைநாய் நம்மூர்லே வளருமா?'

'அங்க என்னத்துக்கு? இது வேட்டைநாய்லா?'

கோம்பைநாய் கடிக்கவே கடிக்காது என்றான் மாரி. குரைக்கவும் செய்யாது. வீட்டுக்காவலுக்கு கொஞ்சம்கூட உதவாது. முயல்வேட்டைக்கான நாய் அது. அதை தேரிக்காட்டில் வளர்ப்பது பாம்புபயத்தால்தான்.

'இங்க பாம்பு உண்டா?' என்று காலை மேலே தூக்கினேன்.

'பெரும்பாம்புகூட உண்டு_சத்தம்போடாம வரும்_எட்டடி மூர்க்கன்னு ஒரு பாம்பு உண்டு. ஆனையைக்கொல்லுத வெஷமாக்கும்'

'கோம்பை பாம்பை பிடிக்குமா?'

'பின்ன? நூறு எரநூறடி தூரத்திலே வந்தாலே மோப்பம் பிடிச்சுப்போடும். ஒருநாய் நேரா போய் முன்னால நிக்கும். பாம்பு அதைப்பாக்குறப்ப மத்தநாய் சங்கப்புடிச்சிரும்.''

எழுந்து கோம்பைகளைப் பார்த்தேன். நாய்களா நாய்ப்பொம்மைகளா என்று ஐயம் வரும்.

மல்லாந்து படுத்துக்கொண்டு வானத்தையே பார்த்தேன். பனைமண்டைகள் நடுவே அரைவட்டமான சாம்பல்நிற வெளி. பனையோலைகள் அசைய மென்மையான காற்று. அப்பால் என்னென்னவோ பறவைகள் ஏதேதோ ஒலிகளை எழுப்பிக்கொண்டிருந்தன. டுட்டுட்டுப் என்று பனைமரத்தில் பனைமட்டையால் அடிப்பதுபோலக்கூட ஒரு பறவை ஒலியெழுப்பியது.

மறுநாள் விழிக்கும்போது என் மீது மெல்லியபடலமாக செம்மண் பரவியிருந்தது. எழுந்து உடலை உதறியபோது சுத்தமாக மண் உதிர்ந்தும் விட்டது. ஆனால் வாயில் மண் இருந்துகொண்டே இருந்தது. பல்லை சேர்த்தபோதெல்லாம்

நரநரவென்று மண் கடிபட்டது. துப்பிக்கொண்டே இருந்தேன்.

அந்தப்பிராந்தியத்தில் நான்கு செவலை நாய்களும் நானும் தவிர எவருமே இல்லை. செவலைகள் என்னை நோக்கி கள்!கள்!கள்! என்று குரைத்தன. பின்னர் ஒருநாய் ஐயத்துடன் வந்து முகர்ந்து பார்த்தது. ஒருமாதிரி பரதேசித்தனமான மூக்கு. ஓங்கி அள்ளையில் ஓர் உதை விடலாமா என நினைக்கச்செய்யும் நெளிவுகுழைவு.

கட்டிலிலேயே அமர்ந்திருந்தேன். அத்தனைபேரும் விடியற்காலையில் எழுந்து தேரிக்காட்டுக்குள் பனைஏறவும் விறகு பொறுக்கவும் கிளம்பிவிட்டிருக்கிறார்கள் போல. வீட்டுக்குள் ஒரு பனைநார்பெட்டி மூடி வைக்கப்பட்டிருந்தது. அதைத் திறந்தேன். உள்ளே இரண்டு ஈசலுருண்டைகள். ஒரு அலுமினியச்செம்பில் ஆறிப்போன கருப்பட்டிக் காப்பி.

அதைச்சூடுபண்ணி குடித்து உருண்டைகளைத் தின்றேன். பனைமரக்காட்டுக்குள் கொஞ்சதூரம் சென்றேன். செவலைகள் கூடவே வந்தன. எதைப்பார்த்தாலும் கள்கள்கள். போ போ என்று துரத்தினேன். கையைத் தூக்கியதை ஒருவகை விளையாட்டு என்று கொண்டு எம்பிக்குதித்தன.

கொஞ்சதூரம் சென்றபோது வழிதவறினால் என்ன செய்வதென்ற ஐயம் எழுந்தது. தேரிக்காட்டில் குடிக்கத்தண்ணீர் இல்லாமல் பல்லிபோல சப்பி பாடமாக கிடப்பதைப்பற்றி கற்பனை வந்ததுமே திரும்பிவந்து அமர்ந்துகொண்டேன். அந்தச் செவலை நாய்களை பிடித்து வாயைக்கட்டி எங்காவது போடவேண்டும்போலிருந்தது. ஒரே மாதிரி கள்கள்கள். ஒருநாய் கொஞ்சம் சமனப்பட்டதும் அடுத்தற்கு கடமையுணர்ச்சி பீறிட்டுவிடும்.

நாய்கள் குரைத்தபடி ஓடின. கூடவே வாலையும் சுழற்றின. எழுந்துபார்த்தபோது சைக்கிளில் இருவர் வருவது தெரிந்தது. ஒருவர் காக்கிச் சீருடை அணிந்திருந்தார். சைக்கிள்கள் மிகமெல்ல மண்ணில் புதைந்துதான் வந்தன. சிலகணங்கள் அவை அப்படியே நிற்பதுபோல இருந்தது.

சைக்கிளை சீருடைக்காரர் நிலை போடும்போது மற்றவர் அப்படியே சாய்த்துவிட்டு என்னை நோக்கி வந்தார். நாய்கள் கூட்டமாக குரல்கொடுத்தபடி அவரை நோக்கி ஓட அவர் பின்னடைந்தார். சைக்கிளை நிறுத்தியவர் கீழே கிடந்த கல் ஒன்றை எடுக்க நான்கு நாய்களும் ஊளை போட்டுக்குரைத்தபடி என்னை நோக்கி வந்து எனக்குப்பின்னால் நின்றபடி எம்பிக்குதித்து ஆக்ரோஷமாக குரைக்க ஆரம்பித்தன. ஊளையும் உறுமல்களும் கலந்த குரைப்பு. ஏதோ குழறிக்குழறிச் சொல்வதுபோல, மன்றாடுவதுபோல. கூடவே அதட்டலும் எச்சரிக்கையும் வசைகளும் கலந்ததுபோல.

செவி அடைத்தது. திரும்பி அங்கே கிடந்த ஒரு குச்சியை எடுத்து அவற்றை துரத்தினேன். சிதறி ஓடி நாலா பக்கமும் நின்று மேலும் உக்கிரமாகக் குரைத்தன. சீருடைக்காரர் கையில் கல்லுடன் வர, மற்றவர் அருகே வந்து ''ஆருவே வீட்டில?' என்றார்.

'இங்க இப்ப ஆளில்ல' என்றேன்.

'நீரு ஆருவே?'

'நான் வெளியூரு'

'இங்கென்ன செய்யுதீரு?'

'சும்மா.. இங்க ஃப்ரண்டப்பாக்க வந்தேன்'

'இது சர்க்காரு எடமாக்கும் தெரியும்ல?' அவர் அரசதிகாரி என ஊகித்திருந்தேன் '..இது ஃபாரஸ்டு நெலமாக்கும்'

'இல்ல' என்றேன். 'இங்க என் ஃப்ரண்டு மாரி..' என்ன சொல்வதென்று தெரியவில்லை.

'ம்ம் ம்ம் ..எடத்தக்காலிபண்ணும்..இங்கெல்லாம் வரப்பிடாது'

'ஃப்ரண்டு இப்ப வந்திருவான்'

'எங்க போயிருக்காவ?' என்றார் சீருடைக்காரர். அவரது மேல்வரிசைப்பற்கள் நீட்டி நின்றன. கொஞ்சம் இதமான ஆள் என்று தோன்றியது.

'எனக்கு ஒண்ணும் தெரியாது.. இப்பதான் எந்திரிச்சேன்..'' இதையெல்லாம் ஏன் சொல்கிறேன் என்று தோன்றியது.

'அந்த நாயிங்கள தொரத்தும்வே..செவியடைச்சுல்லா போவுது' என்று அந்த அதிகாரி என்னை அதட்டினார்.

'போ..ஏ போ' என்று குச்சியை சுழற்றினேன். இன்னும் ஓசை அதிகரித்தது.

மறுபக்கம் அக்கானிடப்பாக்களை காவடியாகக் கட்டியபடி இரண்டுபேர் வந்தார்கள். வெள்ளைச்சட்டைக்காரரைப் பார்த்ததும் ஒருவர் சுமையை தரையில் வைத்து அங்கேயே நின்றுவிட்டார். ஒருவர் கொஞ்சதூரம் வந்து டப்பாக்களை வைத்துவிட்டு தலையில் கட்டிய துண்டை அவிழ்த்து முகம்துடைத்தபடி அருகே வந்தார்.

‘நீரு இங்க இருக்கேரா வே?’

‘ஆமா’

‘உமக்க பேரு என்னவே?’

‘அணஞ்சபெருமாளு.’ அவர் அதிகாரியின் பார்வையைச் சந்திப்பதை தவிர்த்தார்.

‘இது ஃபாரஸ்டு எடமாக்கும்-இங்க இருக்கிறது சட்டவிரோதம்-தெரியும்ல?’

அவர் ஓரக்கண்ணால் தொலைவில் நிற்பவரைப் பார்த்தார்.

‘குடிலுகிடிலு ஒண்ணும் இங்க இருக்கப்பிடாது-மனசிலாச்சா?’

தூரத்தில் நின்றவர் வேகமாக அருகே வந்தார். அவரால் பேச முடியவில்லை. கையை பலமாக ஆட்டி விக்கி விக்கி ‘‘அது -இஞ்ச இது நாங்க குடிகெடக்குத எடமாக்கும்-பத்துநாப்பது வருசமா-நாங்க-ரூலு இருக்கு நாங்க’ என்றார்.

‘ரூலு பேசுதீரா வே? நேத்து காட்டுல தீயப்பத்தவச்சது நீருல்லாவே?’

‘இல்ல இல்ல’ என்றார் அவர்.

‘நீருண்ணு சொல்லுதேன்-கோர்ட்டுல வந்து இல்லேண்ணு சொல்லும்-ரூலா வே பேசுதீரு? வே ரூலுண்ணா என்னாண்ணு தெரியுமாவே? வே, சுயம்பு கேட்டேரா வே ரூலுபேசுதான் காட்டான்-ரூலு பேசுவோமா வே? பேசுமா வே?’’

நான் மெல்ல பின்னகர்ந்து எனக்குச் சம்பந்தமில்லாதது போல குடிசைவாசலை அடைந்து நின்றேன். நாய்கள் என்னைச்சூழ்ந்து நின்று குரைத்தன. அவர் அந்த அளவுக்கு கோபம் கொண்டு சமநிலை இழக்க நாய்களின் நிறுத்தாத குரைப்பும் காரணம் என்று தோன்றியது.

தொலைவில் அக்கானி டப்பாக்களை தோளில் காவடி கட்டி தூக்கியபடி மாரி வருவதைக் கண்டேன். அவன் அங்கிருந்தே கவனித்துவிட்டான். நாய்கள் அவனை நோக்கி ஓடின. அவன் அவற்றை நோக்கி ஏதோ சொல்ல அவை அமைதியாகி வாலாட்டியபடியும் துள்ளிக்குதித்தபடியும் வழிமறித்து குழைந்தபடியும் வந்தன.

மாரி அருகே வந்தான். தலையில் கட்டிய துண்டை எடுத்து அக்குளைத் துடைத்தபடி ‘‘வாட் இஸ் ஹியர் தி பிராப்ளம்?’ என்றான்.

அதிகாரி அரைக்கணம் தடுமாறிவிட்டார். அவர் பார்வை என்னை வந்து தொட்டுச்சென்றது. ‘ஹூ ஆர் யூ?’’

‘திஸ் இஸ் அவுர் லேண்ட். ஹூ ஆர் யூ? ப்ளீஸ் டெல் மீ’

அதிகாரி ‘அயம் ஃபாரஸ்டு ஆபீசர்’ என்றார். ’சீனியர்’ என்று சேர்த்துக்கொண்டார்.

‘ஐயம் மாரிமுத்து-ஐயம் ஸ்டடியிங் நாகர்கோயில். கையிலே பேப்பர் என்னமாம் இருக்காவே?’

‘என்ன பேப்பர்?’

‘எங்க கையிலே சொசைட்டி பேப்பர் இருக்கு-இது நாங்க சட்டபூர்வமா குடிகெடக்குத மண்ணாக்கும்.’

‘இது சர்க்காரு லேண்டு’

‘அதுக்குண்டான பேப்பரோட வாரும்-சும்மா ஆளில்லாதப்ப வீட்டுக்குள்ள ஏறி பைசாவ எடுத்தீருண்ணு சொன்னா கம்பி எண்ணுவீரு’

’ஆருலே பைசாவ எடுத்தது? லே’ .

’பி கேர் ஃபுள் டாக்’ என்றான் மாரி கறாராக. ‘இவன் எனக்க ஃப்ரண்டாக்கும். நாகர்கோயிலிலே எனக்க கூட படிக்கான். இவனாக்கும் சாட்சி’

‘வே சுயம்பு வாரும்வே-இவனுகளிட்ட நமக்கென்ன பேச்சு?’அதிகாரி சட்டென்று திரும்பி நடந்தார். ‘‘படிச்ச திமிருலே ஆடுதானுக-ரூலு என்னாண்ணு நாம காட்டிக்குடுப்பம்வே’’:

‘பேச்சு வேண்டாம்னுதான் சொல்லுதேன்-இனிமே கேறி வந்தேருண்ணு சொன்னா பொம்புள கேஸாக்கும்-’’ மாரி பின்னால் கூவிச்சொன்னான்.

அதிகாரி ஒன்றும் பேசாமல் சைக்கிள் பக்கம் சென்றுவிட்டார். சுயம்பு. மாரியைப்பார்த்து ரகசியமாகப் புன்னகை செய்துவிட்டு அவர் பின்னால் சென்றார்.

அவர்கள் சைக்கிளில் ஏறிச் செல்வதை மாரி சிலநிமிடங்கள் பார்த்துக்கொண்டிருந்தான். திரும்பி என்னிடம் 'முப்பத்தாறு வருசம் கைவசம் வச்சிருந்த அவகாசத்துக்கு எல்லா பத்திரமும் இருக்கு_வாறானுக' என்றான்.

விக்கிப்பேசியவர் 'அப்பன் எங்க பிள்ள?' என்றார் பிரியமாக.

'வாறாரு' என்றபின் மாரி என்னிடம் 'லே அப்பன் உனக்கு முசல் பிடிக்கவாக்கும் போயிருக்காரு'' என்றான்.

---

## புறப்பாடு 1: 11 – துறக்கம்

'நான் வாழவைப்பேன்' என்று விதிவசத்தால்தான் அந்தப்படத்துக்குத் தலைப்பு இருந்திருக்கவேண்டும். சிவாஜிகணேசனும் ரஜினிகாந்தும் நடித்தபடம். ரஜினிகாந்த் அந்தப்படத்தில் மைக்கேல் டிசூசா என்ற பேரில் நடித்தார். கொள்ளைக்கூட்டத்தலைவன். எனக்கு பொதுவாக கொள்ளைக்கூட்டங்கள் மீது விசேஷ ஈர்ப்பு இருந்த நாட்கள். கொள்ளைக்காரர்களின் தலைமறைவு வாழ்க்கையை நானும் அந்தரங்கமாகக் கனவுகண்டேன். மீண்டும் சரஸ்வதியில் திரையிட்டிருந்தார்கள். மாட்டினிக்கு டிக்கெட் எடுப்பதற்காக வரிசையில் நின்றுகொண்டிருந்தேன்.

முன்னால் நின்ற மனிதர் தலையில் துண்டைபோட்டிருந்தார். நிறைய சினிமா பார்ப்பவராக இருக்கும். இந்த மாதிரி திரையரங்குகளில் இந்தமாதிரி ஓடியடைந்த படங்களைப்பார்க்கவருபவர்கள் இரண்டுவகை. சினிமா எதானாலும் எப்படியும் பார்த்துக்கொண்டே இருக்கக்கூடியவர்கள். சினிமாவே பார்க்காமல் ஆட்டுக்கு குழையொடிக்கவோ வாழைக்குலை விற்கவோ வந்த இடத்தில் தவறிப்போய் சபலப்பட்டுவிடுபவர்கள். இவர் முதல்வகையாகத் தோன்றினார்.

பாட்டா உள்ளே பதமாக டிக்கெட் கிழித்து நிதானமாகக் கொடுத்துக்கொண்டிருந்தார். ரூபாய்நோட்டின் மதிப்பை அவர் உள்ளுணர்வாலேயே மதிப்பிட்டுக்கொண்டிருக்கிறார் என்று தோன்றியது. அப்போதுதான் நாகமணி ஓடிவருவதைப் பார்த்தேன். வேட்டியை தூக்கிக் கட்டியபடி லேசாக விந்தியவன்போல ஓடி வந்தான். ஆனால் என்னையும் தாண்டி அவன் சென்றபோதுதான் அவன் என்னைப்பார்க்கவரவில்லை என உணர்ந்தேன்.

'லே நாகு_லே '

அவன் என்னைப்பார்த்தான். அப்போதும் அவன் என்னை அடையாளம் கண்டுகொள்ளவில்லை.

'லே நாகு இஞ்சலே_லே'

நாகமணி சட்டென்று என்னை நோக்கி ஓடிவந்து என்னருகே நின்றான். மூச்சிரைத்தான்.

'என்னலே?'

'ஆஸ்டலுக்குப்போறேன்ல'

'எதுக்கு ? இப்பம் உனக்கு சோலி இல்லியா?'

' நான் அடிச்சுப்போட்டேன்'

'யார?'

'கண்ட்ராக்க'

எனக்கு பெரிதாக உறைக்கவில்லை. முன்னால் நின்றவர் டிக்கெட் வாங்கிவிட்டிருந்தார். என் முழு சிந்தனையும் அதில்தான் இருந்தது. சட்டென்று முடிவெடுத்தேன் 'நீ உள்ள வா பேசுவம்'

'எங்க?'

'லே நாம தியேட்டருக்கு உள்ள போயி இருந்து பேசுவம்லே_இங்கிண எதுக்கு நிக்கோம்? வெயிலுல்லா?'

நாகமணி பிரமைபிடித்தவன் போல ஒப்புக்கொண்டான். இரண்டு ஐம்பது பைசா டிக்கெட்டுகள் எடுத்தேன். உள்ளே சென்று கடையைப்பார்த்தேன். அங்கே ஒரு சின்னப்பையன் அமர்ந்திருந்தான்.

'பொரிகடல இருக்கா?' என்றேன்.

'சர்பத்து இருக்கு'

அது என்ன பதில் என யோசிக்கும்போது நாகமணி 'லே அடிச்சுப்போட்டேம்ல!' என்றான்.

'யார?'

'கண்ட்ராக்க'

சிலகணங்கள் கழித்து எனக்கு கடும்பீதி உருவாகியது ''ஆர?' என்றேன் அழுத்தமாக.

'என்னைய அடிச்சாம்லே..ஒரு ஒயறு பாத்துக்க..இந்தா இம்பிடு தடியுள்ள ஒயற ஒரு கம்பில கெட்டி வச்சிருக்கான். அதக்கொண்டாக்கும் பயக்கள அடிக்கியது.. என்னை எம்பிடுநாள் அடிச்சிருக்கான் தெரியுமா? இந்நா கண்டியா?'

பூரான் பூரானாக சிவந்து தடித்திருந்த புஜத்தைக்காட்டினான். 'உள்ள குறுக்கில பெரிய தளும்பு இருக்குலே..வேணுமானா காட்டுதேன்'

'வேண்டாம்'

'இன்னைக்கு நான் ஒண்ணுமே செய்யல்ல.. மத்தபயலாக்கும். கண்ட்ராக்கு வந்து கேட்டப்பம் அவன் சறுவிப்போட்டான். அவரு ஒயறு சாட்டைய எடுத்து என்னைய அடிக்கத் தொடங்கிப்பிட்டாரு.. மோலாளி வேண்டாம் மோலாளி வேண்டாம் மோலாளி கண்ணுல பட்டிரும் மோலாளீண்ணு கெடந்து நெலவிளிக்கேன். கேக்கல்ல..பொறத்தால நீங்கினப்ப மிசினிலே காலுபட்டு மலந்து விளுந்துபோட்டேன். கீள போட்டு அடிக்காரு..தொடையில அடிய பாத்தியா?'

'நீ என்ன செய்தே?' என்றேன்.

'கீள விளுந்தப்பம் எனக்கு என்னண்ணோ கேறி வந்துபோட்டுலே.. எந்திரிச்சு கைய ஓங்கி ஒரு அடிவச்சுகுடுத்தேன்..செள்ளையில..அப்பிடியே நிண்ணுபோட்டாரு.. அந்தால எறங்கி ஓடிவந்தேன்'

அவனைப் பார்த்து உள்ளே இழுத்துக்கொண்டது யாருக்காவது தெரியுமா என்ற எண்ணம்தான் முதலில் வந்தது. 'நீ எங்கியாக்கும் ஓடினே?'

'ஹாஸ்டலுக்கு'

'வெளங்கிரும்..லே அவனுக உன்னையப்பிடிக்கதுக்கு அங்கல்லா முதல்ல போவானுக?'

'ஆமா'

' சொல்லுகதக்கேளு.. நாம இப்பம் நேராட்டு கம்முனிஸ்டு ஆப்பீசுக்காக்கும் போகணும்'

'அதுக்கு அங்க தோளர் இருக்கமாட்டாருல்லா?'

அவரு ராத்திரிதான் வருவாரு..ஆனா அங்க அதுக்குள்ள வந்து அடிக்க மாட்டானுக..லே, அவரு பெரிய காண்டிராக்டராக்கும். அடியும் வேங்கிட்டு சும்மா இருப்பாருண்ணு நெனைக்கியா?'

'இப்பம் என்னல செய்யியது? அறிவுகெட்டுப்போயி அடிச்சாச்சு.. லே கொண்ணு போட்டிருவானுகளாலே?'

'பாப்பம்..இப்பம் நீ வெளியே எறங்கினா ஆபத்தாக்கும்..' என்ன செய்வதென்று தெரியவில்லை.

அதற்குள் உள்ளே பாட்டு போட்டார்கள்.

'வா உள்ள போயி இருப்பம்'

'என்ன சினிமா மக்கா? சிவாஜி படமா'' என்றான் நாகமணி ஆவலாக.

'சினிமாவால பாக்கப்போறே? லே, அவனுக இப்பம் எங்கிண வாறானுகண்ணு தெரியல்ல.. உனக்க பொறத்தால எறங்கியிருப்பானுக'

நாகமணி 'லே, எனக்கு நீ அஞ்சுருவா குடு.. நேராட்டு ஊருக்குப்போறேன்..நாலுமணிக்கு பஸ்ஸு இருக்கு' என்றான்

'பைசா தாறேன். ஆனால் அவனுக பஸ்சில பாக்கமாட்டானுகளா?'

சட்டென்று நாகமணி விரைப்படைந்தான் 'லே..அவனுகளாக்கும்'

தெருவில் இருவர் சைக்கிளில் வந்திறங்கி அந்தப்பகுதியை கண்சுழற்றிப் பார்ப்பதைக் கண்டேன்.

'இவனுகளாலே?'

'ஆமாலே..இவனுக கண்டிராக்குக்க சோலிக்காரனுகளாக்கும். சுமடு எடுக்கப்பட்டவனுக'

‘ஓடாதே’ என்று பிடித்துக்கொண்டேன். ‘ஓடினாத்தான் திரும்பிபாப்பானுவ’

அவர்கள் மீண்டும் சைக்கிளில் ஏறி மிதித்துச்சென்றார்கள். பின்னால் செல்பவனின் வேட்டிக்குள் வெட்டுகத்தி கிடப்பதை காணமுடிந்தது

‘வாலே’ என்று மூச்சிரைக்க உள்ளே ஓடினேன். நாகமணி பெஞ்சில் இருந்ததும் வெடவெடவென நடுங்க ஆரம்பித்தான். திரையரங்கில் ஏழெட்டுபேர்தான். பெஞ்சில் நான்கே பேர்.

‘நல்லகாலம்லே நீ அப்பிடியே போயிருந்தா இந்நேரம் பிடிச்சிருப்பானுவ’ என்றேன்.

சட்டென்று நாகமணி விசும்பி அழ ஆரம்பித்தான்.

‘ஏல..என்னல? லே வேண்டாம்..லே வல்லவனும் பாப்பானுகள்லே..லே’ என்று அவனைச் சமாதானப்படுத்தினேன்.

‘என்னைய கொண்ணு போட்டிருவினும்லே..கொண்ணு போட்டிருவினும்லே..எனக்க அப்பனுக்கு ஆருமில்ல மக்கா..பாவப்பட்ட குடும்பமாக்கும்..மலைகேறி பட்டினி கெடக்கப்பட்ட சாதியாக்கும்லே’

‘லே என்ன.. அப்பிடிக் கொண்ணுபோடுவானுகளா? அடிச்சா பாப்பம்லே’

அவன் மேலும் விசும்பினான். ‘கொண்ணு போட்டிருவினுமே..எனக்க மலமுத்தம்மோ கொண்ணு போட்டிருவானுகளே..எனக்க அப்போ என்னைய கொண்ணு போட்டிருவானுகளே’

‘லே இரு..என்னாண்ணு சொல்லு..லே ஏன் பயருதேண்ணு சொல்லு’ நான்குபக்கமும் பார்த்தபின் ‘லே ஆளுபாக்குகானுகலே’

அவன் அடக்கிக்கொண்டான். கையால் மூக்கையும் கண்களையும் துடைத்தான். விசும்பலை அடக்கினான்.

‘என்னல சொல்லு’

‘ அடிச்சப்பம் கண்டிராக்கு என்ன சொன்னான் தெரியுமா?’ என்றான்

‘என்ன?’

‘லே நான் பெலையப் பயல்லா..’

‘ஓ’

‘ஈனச்சாதிக்காரன் கைய வச்சுப்போட்டாம்லேண்ணு சொல்லிட்டு பொறத்தால ஓடிவந்தாம்லே.. நான் சாடி ரோட்டில ஏறினப்ப லே உன்னைய எங்க போனாலும் கொண்ணு போட்டுட்டு திருச்செந்தூர் போயி மொட்டைய போடுவேன்லேண்ணு சத்தம்போட்டான்’

கொஞ்சம் கொஞ்சமாக எனக்கும் தெளிவு வந்தது. எங்களூரிலும் அடிதடி எப்போதும் நடப்பதுதான். ஆனால் ஒரு தீண்டாச்சாதியினன் பிறரை திட்டினால் ஊரேகூடி அவனை வேட்டையாடி கொண்டுவந்து கட்டிப்போட்டு அடிப்பார்கள். கைநீட்டிவிட்ட ஒருவன் ஆனைக்கயத்தில் செத்து மிதந்திருக்கிறான்.

எனக்கு வந்த முதல்சிந்தனையே எப்படியாவது நாகமணியை அங்கேயே விட்டுவிட்டு வெளியே போய் விடுதியை அடைந்து போர்த்திக்கொண்டு சுருண்டு படுத்துவிடவேண்டும் என்பதுதான். ஆனால் மறுகணம் அப்படிச் செய்யக்கூடாது என்று பட்டது. நான்குமாதம் முன்பு இங்கே விடுதிக்கு வருவதற்கு முன்னால் என்றால் அப்படித்தான் செய்திருப்பேன். இப்போது வளர்ந்துவிட்டேன் என்று தோன்றியது. மேலும் இந்தமாதிரி சாகஸங்களைச் செய்யவேண்டும் என்றுதான் ஆசைப்பட்டுக்கொண்டிருந்தேன்.

என்னை அடிக்கமாட்டார்கள். நான் உயர்ந்த சாதிதான். ஆனால் அதைச் சொல்ல அவர்கள் நேரம் தரவேண்டுமே. நாகமணியின் சாதியில்கூட சிலர் வெள்ளையாக இருக்கிறார்கள். மேற்கொண்டு சிந்திக்கமுடியாமல் என் மூளையின் எல்லா சக்கரங்களும் இறுகி நின்றன.

சினிமாவில் ரஜினிகாந்தின் தலை அநியாயத்துக்கு கலைந்திருந்தது. அதைமேலும் மேலும் கலைத்தபடி வசனம் சொல்லிக்கொண்டிருந்தார். சிவாஜியின் முடி ஒரு பெரிய டெலிஃபோனை அவரது தலைமேல் வைத்ததுபோல உறுதியாக இருந்தது. அவர் தலைகீழாக பல்டியடித்தால்கூட அது கலையாது. ஆனால் என்ன கதை என்று எந்த பிடியும் கிடைக்கவில்லை.

நாகமணி எழுந்தான் ‘லே எங்கல போறே?’

‘பாத்துட்டு வாறேன்ல’

விசாரித்தவர்கள் திரும்பிவந்து பக்கவாட்டில் இருந்த சைக்கிள் பஞ்சர்கடைகளில் விசாரித்தால் திரையரங்குக்குள் வந்துவிடமுடியும் என்று பட்டது. விசாரிக்கவும் செய்வார்கள். ஏனென்றால் மேலும் கொஞ்சதூரம் சென்றால் நாகராஜாகோயில் விலக்கு. எதிர்பக்கம் மீனாட்சிபுரம் பேருந்துநிலையச்சாலை.

நாகமணி ஓடிவந்து 'லே முன்னால நிக்கானுவ' என்றான்

'உள்ள வாறானுகளாலே?'

'இல்லலே..வெளிய நிக்கானுக..இப்பம் நாலுபேரு இருக்கானுக'

என் மூச்சு குளிர்ந்த திரவம் போல நெஞ்சுக்குள் கனமாக இருந்தது. அதை முழு விசையாலும் உந்தி வெளியேவிட வேண்டியிருந்தது.

நாகமணி 'லே என்னல செய்யுகது?' என்றான்.

'உள்ள விடமாட்டானுகலே..இது தியேட்டருல்லா?'

'லே அம்பதுபைசாவுக்கு டிக்கெட்டு எடுத்தா ஆரையும் உள்ள விட்டுருவான்லா''

அது எனக்கும் சரியாகப்பட்டது. அப்படியென்றால் ஏன் வெளியே நிற்கிறார்கள்? சட்டென்று தெளிவாகியது. அவர்களில் ஒருவன் சென்று மறுபக்கம் கடைகளில் விசாரிக்கிறான். அவன் வருவதற்காக இவர்கள் காத்திருக்கிறார்கள்.

'லே நாகம் வாலே'

இருவரும் பாய்ந்து மறுபக்கம் சென்றோம். பெண்கள் அமர்வதற்கான பகுதி. அங்கே யாருமே இல்லை. அதற்கு அப்பால் மூங்கில்தட்டிக்கதவு மூடப்பட்டிருந்தது. தார்பூசப்பட்ட தட்டி. அதைப்பிடித்துத் தள்ளினேன். திறந்துகொண்டது. மறுபக்கம் வெயில் கண்ணைக்கூசியது.

'பெண்கள் களிப்பரை' யின் மீது ஒரு பெண்ணை கரிய பெயிண்டால் வரைந்திருந்தனர். இரண்டு வட்டமாக முலைகள். அப்பகுதி முழுக்க பல பதங்களில் மலம். நாலைந்து காகங்கள் எழுந்து பறந்து மதில் மேல் அமர்ந்தன.

'லே எங்கல போறே?' என்றான் நாகமணி

'முன்பக்கமாட்டு போக முடியாதுலே..இப்பிடியே அந்தால சாடிருவோம்'

மலம் மீது கால்வைக்காமல் விதவிதமாக நடனமிட்டு கழிப்பறையை அடைந்தோம். அப்பகுதியே கைவிடப்பட்டு கிடந்தது. செங்கல்லாலும் காரையாலும் கட்டப்பட்ட உயரம் குறைவான கழிப்பறை. கதவு இல்லை, ஸ்வஸ்திக வடிவ பாதை. உள்ளே எருக்கு முளைத்திருந்தது. முழுக்க முழுக்க மலக்காடு. இரவு தாத்தா தியேட்டரைப்பூட்டிக்கொண்டுசென்றபின் உள்ளே யார்யாரோ வந்து தங்குகிறார்கள் என்று தோன்றியது. விதவிதமான குப்பைகள். உடைந்த குப்பிகள். மட்காமல் மண்ணோடு கலந்த துணிகள். காகிதங்கள். ஏராளமான நிரோத் உறைகள் நிறம்வெளிறி தொய்ந்துகிடந்தன. கிழட்டு ஆட்டின் முலைக்காம்புகள் போல. குடல் துண்டுகள் போல.

மறுபக்கம் சுவர் கொஞ்சம் உயரமானது. 'லே வளி இல்லலே' என்றான் நாகமணி

'ஏறிக்குதிலே..கண்ணாடி பதிச்சிருக்கானாண்ணு பாரு'

கண்ணாடி பதிக்கப்படவில்லை. நாகமணி மேலே பிடித்து ஒரே எம்பில் தொற்றி ஏறினான். மறுபக்கம் குதித்துவிட்டான்.

எம்பியபோது என்னால் மதில் விளிம்பைப் பிடிக்கமுடியவில்லை. மூன்றுமுறை எம்பியபின்புதான் பிடித்தேன். காலை மதிலில் ஊன்ற இடம் கிடைக்கவில்லை. அதற்கு பின்பக்கம் பேச்சொலி கேட்டது. நாங்கள் செய்த பிழை உடனே மண்டையை அறைந்தது. அந்த தட்டிக்கதவை சரியாக திரும்பி மூடாமல் வந்துவிட்டோம்.

மதில்மேல் ஏறி கீழே பார்த்தேன். அகலமான சாக்கடை கரிய நதிபோலச் சுழித்து ஓடிக்கொண்டிருந்தது. மொத்த நாகர்கோயிலின் சாக்கடையும் நாகராஜாகோயில் வழியாக திரண்டு சரிந்து வந்து முத்து தியேட்டரின் முன்பாகத் திரும்புவதைக் கண்டிருக்கிறேன். அது இந்தவழியாகத்தான் வளைந்து செல்கிறது என்று புரிந்தது.

'லே ஆளமில்லலே..சாடு' என்றான் நாகமனி. அவனுடைய தொடை வரை கரிய சாக்ஸ் போட்டதுபோல இருந்தது.

கண்ணைமூடிக்கொண்டு குதித்தேன். சளக் என்று சேற்றில் கால்கள் மாட்டின. சரிந்து ஓடைக்குள் கிடந்த எருக்குச்செடியை பற்றிக்கொண்டு காலைத் துழாவி வைத்து மறுபக்கம் ஏறிக்கொண்டேன். நாகர்கோயிலில் பெரும்பாலான வீடுகளில் கழிப்பறை என்பது ஒரு துளைதான். மலம்கழித்து அதன் மேல் நீரூற்றி தள்ளி வெளியே சாக்கடையில் விட்டுவிடுவார்கள். அதெல்லாம் வீட்டுக்குப் பின்னாலும் முன்னாலும் நொதித்து வெயிலில் காய்ந்து கருகி ஒழுகி வந்து பெரும்சாக்கடையில் கலக்கும்.

ஆனால் சாக்கடை வேறு எதுவோ போல வாசமெடுத்தது. அதில் யாரோ ஒரு புட்டிச்சாராயத்தையும் ஊற்றிக்கலந்ததுபோல. மறுபக்கம் நாகமணி நின்றுகொண்டு 'லே வாலே..வந்திருலே' என்றான்.

புதர்கள் வழியாக மறுபக்கம் சென்றேன். சில்லென்று நிழலாக இருந்தது. அந்த நிலமே தாழ்வானது. குட்டையாக புன்னைமரங்களும் வேறு சிலமரங்களும் படர்ந்திருக்க சாக்கடையின் ஈரம் மண்ணெல்லாம் ஊறிப்பரவியிருந்தது. அந்தப்பகுதி எங்கும் பன்றிகள். பெரிய பெரிய சினைப்பன்றிகள். உற்சாகமான குட்டிகள். கண்களில் மதமும் வாயில் கோரைப்பல்லும் கொண்ட ஆண்பன்றிகள். ஆகாயத்தாமரை மண்டிய பள்ளமான சேற்றுப்பகுதி முழுக்க பன்றிகள் புதைந்து கிடந்தன. நெளிந்தன.

கன்னங்கரிய ஈர மண். ஒரு பெரிய பன்றி மேல் நடப்பதுபோலிருந்தது. அந்த மண்ணே எழுந்து நடப்பதுபோல பன்றிகள் எழுந்து வால் சுழற்றி ஓடின. அவை நாங்கள் வருவதை உணர்ந்து விட்டதுபோல. பின்பக்கம் சுவர் மீது ஒருவன் ஏறி எங்களைப்பார்த்துவிட்டான். 'லே அந்நா போறான்லே..அவந்தாம்லே..'

வேறு குரல்கள் மெல்ல கேட்டன.

'கூட இன்னொருத்தனும் இருக்கான்லே..'

'ஒளுகிணசேரிக்குப்போறானுகலே'

நானும் நாகமணியும் ஓட ஆரம்பித்தோம். பன்றிவிட்டைகளைப் பொறுக்கி சிறிய சிறிய குவியல்களாக வைத்திருந்தார்க்ள். அவற்றைச் சிதறடித்தபடி ஓடி மறுநுனியில் தெரிந்த குடிசை வரிசைகளுக்குள் சென்றோம்.

உண்மையில் அவை குடிசைகள் என்பதை அங்கே சென்றபோதுதான் புரிந்துகொண்டேன். செத்தையும் குப்பையும் குவித்திருப்பதாகவே தோன்றியது. இடுப்பளவுக்குக் கூட உயரமில்லாத குடிசைகள். இரண்டுகைகளையும் விரிக்குமளவுக்குக் கூட அகலமற்றவை. பாலிதீன்தாள்கள், சினிமாபோஸ்டர்கள், பழைய தகரங்கள் என எல்லாவற்றையும் கூரையாகப்போட்டிருந்தார்கள். குடிசைகளுக்கு வரிசையும் இல்லை. எல்லாகுடிசைகளுக்கு நடுவிலும் கரிய சாக்கடை ஓடியது. அந்தப்பெரிய சாக்கடை பரவித்தேங்கி ஊறிய பெரிய சதுப்பு அது.

கரியசேற்றில் பிள்ளைகள் விளையாடிக்கொண்டிருந்தன. சொறி பிடித்த உடலும் சிக்கான தலையும் கொண்டவை. எல்லா பிள்ளைகளுக்கும் மூக்குக்கு கீழே சளி வழிந்த தடம் சிவந்த புண்ணாக மாறி கொதகொதத்திருந்தது. குடிசைகளில் மனிதர்கள் இருப்பதுபோலத் தெரியவில்லை.

'லே இந்த வளி எங்கபோவுதுலே?' என்றான் நாகமணி

'தெரியல்ல..இது தோட்டிகளுக்க எடமாக்கும்..அந்தால பளையாறு போவுதுண்ணு நினைக்கேன்'

எனக்கு உண்மையில் அங்கே எந்த திசையும் புரியவில்லை. மொத்த நாகர்கோயிலும் தலைக்குமேல் எங்கோ இருப்பதாகப்பட்டது. ஒருமுறை எங்கோ விருந்தாளியாகச் சென்றபோது விசித்திரமான கழிப்பறையில் மலம் கழிக்கச் சென்றேன். பத்தடி ஆழமான பெரிய குழிக்குமேலே இரண்டு தென்னைமரத்தடிகளை போட்டிருந்தனர். ஆழத்தில் நொதித்த கரிய மலம் குமிழியிட்டது. இரண்டு தடியிலும் கால்வைத்து அமர்ந்தபோது கிச் கிச் என்று சத்தம் கேட்டு கீழே பார்த்தேன். ஏராளமான எலிகள் கீழே மலத்தில் திளைத்துக்கொண்டிருந்தன. அந்தப்பகுதிக்கு மேலே நகரத்தின் குதம் தெரிவதுபோல தோன்றியது.

ஒரு குடிசைமுன் அந்தக்கரிய மண்ணையே அள்ளிச்செய்ததுபோன்ற ஒரு கிழவி அமர்ந்திருந்தாள். பீளைபடிந்த கண்கள் அவள் நெடுநாள்முன்னரே செத்துவிட்டாள் என்று எண்ணச்செய்தன. அதன்பின்புதான் பல குடிசைகளுக்குள்ளும் அப்படி கிழங்கள் கிடப்பதைக் காணமுடிந்தது. சாக்கடை கசிந்தோடிய தெருவும் குடில்களின் உட்பகுதியும் ஒரே உயரத்தில் இருந்தன. நாய்கள் ஏதும் கண்ணுக்குப்படவில்லை. ஒருவேளை பகலில் அங்கே நாய்கள் இருக்காது போல.

தலைக்குமேலே ஒழுகிணசேரி பாலம் சென்றதைக் கண்டேன். பேருந்துகள் இரைச்சலுடன் சென்றுகொண்டே இருந்தன. ஏதோ டீக்கடையில் சினிமாப்பாட்டு ஒலித்தது. தளதளவென நாலைந்து பன்றிகள் சாக்கடையில் இறங்கி நீந்திச்சென்றன. இரண்டு குழந்தைகள் வந்து எங்களைப் பார்த்து நின்றன.

'லே மேலே போனா கொண்ணு போட்டிருவானுக..ஒளுகிணசேரிக்கு போறதால்ல அங்கிண சொன்னானுவ?'

நாகமணியின் கண்கள் இரு சிப்பிகள் போல இருந்தன. அதிகமாகப் பேசினால் அவன் அங்கேயே படுத்து அழ ஆரம்பித்துவிடுவான் என்று தோன்றியது. எனக்கு அப்பகுதியின் வரைபடமே மனதில் வரவில்லை. அப்படி ஒரு நிலப்பகுதி நகரத்துக்கு நடுவே இருப்பதை அங்கே வாழ்பவர்கள் அன்றி வேறு எவராவது அறிந்திருப்பார்களா என்றே சந்தேகமாக இருந்தது. சர்க்காருக்கோ போலீஸுக்கோ கூட தெரிந்திருக்காது.

எப்படியானாலும் மேலே செல்லாமல் பக்கவாட்டில் சென்றுகொண்டே இருப்பதுதான் நல்லது என்று முடிவுசெய்தேன். ஆகாயத்தாமரை மண்டிய பிரம்மாண்டமான ஓடையில் கரிய நீரைக்கடக்க ஒரு தென்னந்தடி போடப்பட்டிருந்தது. அதன் வழியாக மறுபக்கம் சென்றோம். ஓடைக்கரை முழுக்க சிறிய குடிசைகள். சில குடிசைகள் சிதைந்து செத்து உதிர்ந்த வௌவால் போல தரையில் ஒட்டிக்கிடந்தன. நகரத்துக்குள் அத்தனை பன்றிகளா என்ற பிரமிப்பு

தோன்றியது.

அப்பால் நாலைந்து தென்னைமரங்கள் நின்ற ஒரு மேடு தெரிந்தது. அதில் ஏறி நின்றால் அந்த இடம் எது என்ற ஒரு எண்ணம் வரும் என்று தோன்றியது. அதை நோக்கிச் செல்ல பல சிறு சாக்கடை ஒழுக்குகளைத் தாண்டவேண்டியிருந்தது. அங்கே வெயிலே இல்லை. சூரியனே வராத இடம்போல. இருட்டு நிரந்தரமாகக் குடியிருக்கும் இடம்போல. ஒரு துளி ஒளி விழுந்தாலும் கரியசேறு அதை உறிஞ்சிக்கொண்டுவிடும்போல.

மேட்டில் நின்றுபார்த்தபோது ஒரு அபாரமான காட்சியைக் கண்டேன். மொத்த நகரையும் பின்பக்கம் நின்று பார்த்துக்கொண்டிருந்தேன். நூற்றுக்கணக்காக வீடுகளின் பின்பகுதிகள். கதவோ சன்னலோ அற்ற சிமிண்ட் பரப்புகள். செங்கல்பரப்புகள். ஓலைத்தட்டிப்பரப்புகள். எல்லா வீடுகளும் அப்பகுதியை அருவருத்து திரும்பிக்கொண்டவை போலிருந்தன. வீடுகளின் அந்தரங்கக் கழிவுறுப்புகள் போல ஓட்டைகள் திறந்திருந்தன, குழாய்கள் கரிய நீரைக்கொட்டிக்கொண்டிருந்தன. இடுக்குகள் வழியாக குப்பைகள் பிதுங்கி வழிந்துகொண்டிருந்தன. அந்தக் குப்பைகளின் அருகே மனிதர்கள் தென்பட்டனர்.

ஊமத்தை போல ஊதாப்பூ பூத்த சேற்றுச்செடி வழியாக மறுபக்கம் சென்றோம். அங்கே குப்பையில் இரு கிழவிகள் காகிதம் பொறுக்கி சாக்குகளில் போட்டுக்கொண்டிருந்தனர். எந்த உணர்ச்சியும் இல்லாமல் ஏறிட்டுப்பார்த்த கிழவியிடம் நாகமணி 'ஆயா..இந்தால போனா வடசேரிக்கு போலாமா?' என்றான்.

கிழவி எங்களை ஏதும் புரியாமல் பார்த்தாள். வாய்க்குள் கரிய பல் ஒன்று தென்பட்டது.

மீண்டும் கேட்டேன் 'வடசேரி..வடசேரி இங்கயா இருக்கு?'

கிழவி 'டவுனு' என்றாள் கை நீட்டி சுட்டிக்காட்டியபடி.

'லே நேராட்டு ரோட்டில கேறீராத..அங்கிண நிக்கப்போறானுக' என்றேன். 'அவனுகளுக்கு நம்மளக்காட்டிலும் இந்த எடம் தெரியும் கேட்டியா?'
ஒ
'பின்ன?'

'இந்த சந்து வளியாட்டுபோவம்..இது வடசேரியாக்கும்.. வஞ்சியாதித்தன்தெருவுக்குள்ளார போனா அங்கிண கச்சியாப்பீஸு இருக்கு..அங்க போவம்'

நாகமணி சட்டென்று விசும்பி அழ ஆரம்பித்தான். 'நான் போறேன்.. போயி சாவுதேன்..என்னைய கொண்ணு போட்டிருவினும்..என்னைய கொல்லாம விடமாட்டானுக..மலையம்மோ எனக்கு வய்யாமே..என்னைய கொண்ணு போட்டிருவானுகளே'

'லே நாயே..இங்க நிண்ணு அளுதா வல்லவனும் பாப்பானுவலே..வாலே'

அவனைப்பற்றி சந்துக்குள் ஏற்றிக்கொண்டேன். குப்பைகள் மண்டிய சாக்கடைச்சந்துக்குள் தொடர்ச்சியாக மலம் பிதுங்கிய ஓட்டைகள் திறந்திருந்தன. ஆனால் அந்நேரத்தில் கண்ணாடிச்சில்லுகளில் கால் படாமல் தாவித்தாவிச்செல்வதைத்தவிர எதைப்பற்றியும் சிந்திக்கவில்லை. அப்போதுகூட நாகமணியை அப்படியே விட்டுவிட்டு நழுவிவிட்டாலென்ன, நமக்கெதற்கு வம்பு என்ற எண்ணம் அவ்வப்போது எழுந்துகொண்டிருப்பதை நானே ஆச்சரியத்துடன் பார்த்தேன். ஆனால் அபாயம் விலகிவிட்டது, நம்மை எவரும் அடிக்கப்போவதில்லை என்ற எண்ணமும் உள்ளூர இருந்தது.

அப்பால் வெளிச்சமாக திறந்திருந்த நீள்சதுரத்தில் இருந்து ஓர் ஒற்றையடிப்பாதை உள்ளே வந்தது. சாக்கடையில் விழாமல் ஓரமாக, சுவரைப்பற்றிக்கொண்டுதான் அதில் நடக்கமுடியும். அந்தப்பாதை ஒரு வீட்டுவாசலில் முடிந்தது. அங்கே நான்கு வாசல்கள். ஓடுபோட்ட மிகச்சிறிய வீடு. முன்பக்கம் வாசல் இருந்த பெரிய பழைய வீட்டின் கொல்லைப்பக்கத்து தொழுவத்தை வீடாக ஆக்கி வாடகைக்கு விட்டிருந்தார்கள்.

வாசல் வழியாக உள்ளே பார்த்தேன். உள்ளிருந்து ஒரு தாவணிபோட்ட பெண் எட்டிப்பார்த்தாள்.

'ஆரு?' என்று பயத்துடன் கேட்டாள். உள்ளிருந்து ஒரு கிழவி அமர்ந்தபடியே சாய்ந்து கவனித்தாள்.

'இங்கிண வஞ்சியாதித்தன் தெருவுக்கு எப்படி போறது?'

'நேராட்டு போனா கொளமாக்கும். அத வளைஞ்சு போவணும்' அவளுக்கு நாங்கள் யார் என்ற பயம் மறையவில்லை. மெலிந்து உலர்ந்த பெண். அந்தச் சிறிய இடத்தில் ஜன்னலுக்கு மேலே தொங்கிய பாசிமணி சித்திரத்தை அவள்தான் செய்திருக்கவேண்டும்.

'கொளமிருக்குலே..களுவிட்டு போலாம்' என்றேன்.

'லே உனக்க காலிலே ரெத்தம்!' என்றான் நாகமணி.

என் குதிகால் வெட்டுபட்டு பிளந்திருந்தது. நின்ற இடத்தில் ரத்தம் பரவிக்கொண்டிருந்தது. ரத்தத்தின் வெம்மையை மட்டும் மெலிதாக உணர்ந்தேன். என்னுள் இருந்து மிக அந்தரங்கமாக அது ஒழுகிச்செல்வதாகத் தோன்றியது.

'வாலே பாப்பம்' என்று மெதுவாகச் சென்று சாலையைப்பார்த்தேன். ஒளி பரவி சலனம் நிறைந்து ஓசைகள் பெருகி கொப்பளித்துக்கொண்டிருந்தது தெரு. எனக்கு கண்கள் கூசி கண்ணீர் வழிய ஆரம்பித்தது.

---

## புறப்பாடு 12 – இருந்தாழ்

August 30, 2013

கதவைத்திறந்து அண்ணா வாசலில் நின்றபோது, எழுந்தோடி மறுபக்கம் சன்னலோரமாகச் சென்றுவிட்டிருந்தேன். சென்று எந்தப் பயனுமில்லை. சன்னலுக்கு கம்பி ஒன்றும் இல்லை என்றாலும் அப்பால் ஆழம்தான். கீழே பலவகையான துருப்பிடித்த கார் பகுதிகள் கிடக்கும் ஒரு சின்ன முற்றம்.

அண்ணா 'டேய் ஜெயா-டேய்! ' என்று கூவியபோது திகைத்து நின்றேன். என் கைப்பிடியில் சிக்கிய ஜன்னல்கதவு ரீ என்றது.

அண்ணா 'எந்தடா மயிரே? நின்னே எவிடெல்லாம் தேடானாணு'' என்றார். வேட்டியை மடித்துக்கட்டி திடமாக நடந்து உள்ளே வந்தார். தரையாகப் போடப்பட்டிருந்த மரப்பரப்பு திம் திம் என அதிர்ந்தது. நடுங்கியபடி அப்படியே பெஞ்சில் அமர்ந்துவிட்டேன்.

அண்ணா என்னருகே வந்து தோளைப்பிடித்தார். 'எந்தெடா?'

அவர் என்னைத் தொடும்வரைதான் என்னால் அடக்க முடிந்தது. தேம்பி அழ ஆரம்பித்தேன்.

அவர் என் தோளை அழுத்தி 'செரி போட்டு போட்டு' என்றார். ஐந்து நிமிடங்களில் சமாதானமாகி மூக்கையும் கண்ணையும் துடைத்தேன்.

அண்ணா என்னைத்தேடி விடுதிக்குச் சென்றிருக்கிறார். அங்கே எவருக்கும் எங்கிருக்கிறேன் என்றே தெரியவில்லை. எல்லாரும் அவரைப்பார்த்து பயந்து ஒளிந்திருக்கிறார்கள். அதன்பின் கட்சியலுவலகம் சென்றிருக்கிறார். அங்கே லட்சுமணனுடன் இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

லட்சுமணனின் சித்தப்பாவின் அறை அது. அவருக்கு கல்யாணம் ஆகவில்லை. குடிப்பழக்கமும் உண்டு. அவர் கொஞ்சநாளாக ஊரில் இல்லை. எங்கோ விழுந்து அடிபட்டு திருவனந்தபுரம் மெடிக்கல் காலேஜில் கிடந்தார். பூட்டுசாவி என ஏதுமில்லாத அந்த அறையில் என்னை தங்கிக்கொள்ளும்படிச் சொன்னான்.

'எந்தெடா காரியம்?' என்றான் அண்ணா.

என்ன நடந்தது என்பதை எப்படி அண்ணாவிடம் சொல்வது என்று சிந்தனை செய்தேன். எங்கிருந்து ஆரம்பிப்பது என்று தெரியவில்லை.

'நீ ஹாஸ்டலிலெ நிக்கேண்ணு சகாவு சொன்னார்-செரி நாலு எடம் நக்கி ஜீவிதம் படிக்கட்டும்ணு நானும் ஒண்ணும் சொல்லல' என்றார் அண்ணா.

'என்னை ஒருத்தன் கொல்லவாறான்' என்றேன்.

ஆனால் அண்ணா அதை ஒரு பொருட்டாகவே நினைக்கவில்லை 'ஆமா கொல்லுதான்-போடா' என்றபின் 'செரி நீ வா, வீட்டுக்குப்போவம்' என்றார்.

'இல்ல- அவன் பெரிய ஆளு- பணக்காரன்- அவனுக்கு ஆளும்பலமும் உண்டு'

'ஆராக்கும் அவன்? என்ன சங்கதி?'

நான் சொல்ல ஆரம்பித்தேன்.

அன்று வடசேரி கம்யூனிஸ்டு ஆபீசில் இருந்து நாகமணியை ஒரு எஸ்டேட் லாரியில் ஏற்றி நேராக அவன் ஊருக்கே அனுப்பிவிட்டார்கள். நான் மட்டும் அங்கேயே இருந்தேன். என்னை பலவாறாக விசாரித்தார்கள். விதவிதமான ஆட்கள் வந்து பல கோணங்களில் கேள்விகள் கேட்கக் கேட்க எனக்கு பயம் அதிகரித்தபடியே வந்தது. நாகமணி கிளம்பிச்சென்றதும் ஒரு நிம்மதி ஏற்பட்டது.'சரி நீ ஹாஸ்டலுக்குப்போ' என்றார்கள்.

'அய்யோ'

'ஒண்ணுமாகாது- டேய் கொண்டு விடு'

சைக்கிளில் ஏறி மாலையில் விடுதிக்குச் சென்றேன். என்னைக்கண்டதும் விடுதியே தேனீக்கூடு போலக் கலைந்து அதிர்ந்தது. பலர் ஓடிவந்து சூழ்ந்துகொண்டார்கள். 'லே நாகம் எங்கலே-நாகம் எங்கலே மக்கா?''

'பத்திரமாட்டு போயாச்சு' என்று மட்டும் சொன்னேன்.

மதியம் பத்துப்பதினைந்து ஆட்கள் கம்புகளும் வெட்டுகத்திகளுமாக விடுதிக்குள் புகுந்து எல்லா பையன்களையும் மிரட்டி நாகமணியைப்பற்றி கேட்டிருக்கிறார்கள். எங்கள் அறையில் ஜான் மட்டும்தான் இருந்திருக்கிறான். அவனை ஒருவன் மாறிமாறி கன்னத்தில் அறைந்து பிடித்து தள்ளியிருக்கிறான். ஸ்டீபனுக்கு மண்டையில் நல்ல அடி. ஏகப்பட்டபேருக்கு அடி விழுந்ததாகச் சொன்னார்கள். நாகமணி கிடைக்கவில்லை என்றால் மொத்த விடுதியையும் இடித்துத் தரைமட்டமாக ஆக்கிவிடுவோம் என்று சொன்னார்களாம்.

எங்களைத் துரத்தி வந்தவர்கள் மீண்டும் மாலையில் வந்திருக்கிறார்கள். மீண்டும் அறைதோறும் போய் மிதித்து உடைத்து கண்ணில்பட்டவர்களை எல்லாம் அடித்திருக்கிறார்கள். இம்முறை என்னைப்பற்றிக் கேட்டார்கள். சந்திரன் பயந்து என் பெயரை சொல்லியிருக்கிறான். அவனை இழுத்துச்சென்று வைத்து விசாரித்தார்களாம். நாகமணி சிக்கவில்லை என்றால் என்னை பொலி போடப்போவதாகச் சொன்னார்களாம்.

இவ்வளவுக்கும் ஒரு டம்ளர் தவறி விழுந்தால் கேட்கும் தூரத்தில் காவல் கண்காணிப்பாளரின் அலுவலகம் இருந்தது. அந்த வாசல்வழியாகத்தான் பைக்கில் வந்திருக்கிறார்கள். அவர்கள் திரும்பிச் சென்றபின்னர் இரண்டு போலீஸ்காரர்கள் உள்ளே வந்து என்ன ஏது என்று கேட்டிருக்கிறார்கள். அடிபட்ட பையன்களெல்லாம் அழுதபடி சென்று சூழ்ந்துகொண்டு முறையிட்டிருக்கிறார்கள்.

'லே, நீ கைய நீட்டினா அவனுக்கு வெறிவரத்தானே செய்யும்? வந்தமா சோலிசெய்து நாலு சக்கறத்த பாத்தமா இருக்கமாண்ணு இல்லாம ஏம்லே கைய நீட்டுதிய? நீயெல்லாம் என்னலே பெரிய சண்டியனா? தாயளி நாலஞ்சுபேர கொண்டு வச்சு தட்டினாத்தான்ல ஒளுங்குக்கு வருவிய' என்றாராம் மூத்த கான்ஸ்டபிள்.

'லே நிக்காத, போயிரு-எங்கிணயாம் போயி ஒளிஞ்சுகிடு கேட்டியா? கொன்னிருவானுகலே-அவனுக வெறி மூத்தாக்கும் அலையுதானுக-போயிரு' என்று எல்லா பையன்களும் என்னைச்சூழ்ந்துகொண்டு ஒரேசமயம் சொன்னார்கள். யார் என்ன சொல்கிறார்கள் என்றே புரியவில்லை. என் தலைசுற்றியது. என்னைச்சுற்றி பீதியில் வெறித்த வெள்ளைநிறமான கண்கள் விசித்திரமான மீன்கள்போலத் தெரிந்தன.

'லே சிற்றி முளுக்க தேடுதானுவலே-பெரிய கூட்டம் எறங்கியிருக்கு'

பையை எடுத்துக்கொண்டு நேராக காலேஜுக்குத்தான் போனேன். விடுமுறைநாளானாலும் டென்னிஸ் ஆடுவதற்காக வந்திருந்தார்கள்.நாலைந்து பேராசிரியர்களும் ஆடிக்கொண்டிருந்தார்கள். ஓட்டு மாமரத்தடியில் நின்றுகொண்டு அவர்களையே பார்த்துக்கொண்டிருந்தேன். என் மனம் முழுக்க அவர்களின் நினைவுதான். தேடிவந்துவிடுவார்களா? ஆனால் அவர்களால் கல்லூரிக்குள் நுழைய முடியாது. பேராசிரியர்கள் இருக்கிறார்கள். கண்ணாடிக்காரப்பையன்களும் பணக்காரர்கள்தான்.

ஆனால் அவர்களும் பணக்காரர்கள் அல்லவா? உள்ளே வந்து கண்ணாடிக்காரர்களிடம் பேசிவிட்டு என்னைப் பிடித்துக்கொண்டு போனால்கூட ஆச்சரியமில்லை. ஐந்துநிமிடத்துக்கு ஒருமுறை ஆழத்தில் விழும்போது வயிற்றுக்குள் உருவாகும் பிம்ம் என்ற உணர்ச்சி உருவானது.

ஒரேவழி ஊருக்கு ஓடிப்போவதுதான். அங்கே என் அப்பாவும் அண்ணாவும் உண்டு. எங்கள் சொந்தங்கள் உண்டு. அப்பாவிடம் சொல்லமுடியாது. மெதுவாக அண்ணாவிடம் சொல்லலாம். கண்டிப்பாக ஏதாவது வழி செய்வார். ஆனால் வீட்டுக்குப்போக எனக்குத் தயக்கமாக இருந்தது. தீபாவளிக்குப் பட்டாசுச்சத்தம் கேட்டு ஓடிப்போன நாய் நாலைந்துநாள் பட்டினிக்குப்பின் திரும்பி வருவதுபோல போய் வீட்டுமுன் நிற்கவேண்டும். வீட்டிலிருந்து கிளம்பி நான்கு மாதம் ஆகிவிட்டது. என் வீட்டிலிருந்து எந்த விசாரிப்பும் அது வரை வரவில்லை. அப்படியென்றால் செத்துப்போனால் போதும் என்று நினைக்கிறார்கள்.

அப்படி நினைத்ததுமே கண்ணீர் கொட்டியது. தனிமையில் நின்று விசும்பி விசும்பி அழ ஆரம்பித்தேன். அனாதை என்று மீண்டும் மீண்டும் நினைத்துக்கொண்டேன். அழுது முடித்தபோது உலகம் சுத்தமாக பிரகாசமாகத் தென்பட்டது. என் சடலத்தை கல்லூரி வளாகத்தில் எப்படியெல்லாம் கண்டுபிடிப்பார்கள் என்று கற்பனை செய்ய ஆரம்பித்தேன்.

ஆனால் அந்தக்கற்பனை கொஞ்சநேரத்தில் சலித்தது. அதன்பின் மாற்று வழிகளைப்பற்றி யோசிக்கத் தொடங்கினேன். லட்சுமணன் நினைவு அப்போதுதான் வந்தது. அவனுக்கு என்னைப்போல கொஞ்சம் வாசிப்புப் பழக்கம் உண்டு. அதேசமயம் என்னை தூரத்திலேயே வைத்திருப்பான். காரணம் அவன் குடும்பம் வசதியானது.

நினைத்ததுபோல லட்சுமணன் என்னை நிராகரிக்கவில்லை. 'தல்காலம் நீ இங்க நில்லு-மிச்சத்த பிறவு பாப்பம்'' என்று சொல்லி அந்த மாடியறைக்குக் கொண்டுவந்து சேர்த்தான்.

''கையில சில்லற இருக்கா?'' என்று கேட்டான்.

''இருக்கு'' என்றேன்.

'கீள சாயக்கடை உண்டு கேட்டியா?''

மேலே வந்தபின் இருட்டில் மட்டுமே கீழே போனேன். குமரேசனின் டீக்கடைக்குச் சென்று சாப்பிட்டுவிட்டு வந்து அறைக்குள் படுத்துக்கொள்வேன். கீழே உள்ள டயர் ஒட்டும் இடத்திலிருந்து ஒரு சிறுவனை மேலே அழைத்து குமரேசன் கடையிலிருந்து பரோட்டா வாங்கி வரச்சொல்லி தின்றபடி மேலேயே படுத்திருந்தேன். பின்பக்க சன்னல்வழியாகத் தெரிந்த தென்னைமரங்களையும் அப்பால் தெரிந்த முந்திரிக்காட்டையும் பகல் முழுக்க பார்த்துக்கொண்டிருப்பேன்.

இரண்டாம்நாளிலேயே என் மனம் அதைப்பற்றியே பயப்பட்டுக்கொண்டிருப்பதை விட்டுவிட்டது. எழுதப்போகும் நாவல்களைப்பற்றி யோசித்தேன். பயணம் செய்யப்போகும் ஊர்களைப்பற்றி கற்பனை செய்தேன். ஆனால் ஏதாவது சிறிய சத்தம் கேட்டாலும் திடுக்கிட்டேன். கதவை மூடியே வைத்திருந்தேன். ஆனால் அதை பூட்டமுடியாது. தாழிட்டாலும் உந்தினால் திறந்துகொள்ளும்.

அண்ணா என்னிடம் 'டேய் நீ வா போவோம்' என்றார்.

'இப்பமா?'

'பின்ன இப்பமில்லாமா? நேரம் காலம் பாக்கணுமா? வாடா ''

அண்ணா அவரே என் பைக்குள் எல்லாவற்றையும் எடுத்துப்போட்டுக்கொண்டார். அதை கையில் எடுத்துக்கொண்டு 'எறங்குடா எரப்பாளி'' என்று ஆணையிட்டார்.

அவரை மறுத்துப்பேசி எனக்குப் பழக்கமில்லை. அவர் பின்னால் மெதுவாக சாலைக்கு வந்தேன். மதியவெயிலில் சாலை பளிச் என்று வெறித்துக்கிடந்தது. பேருந்தின் சிவப்பும் கார்களின் வெண்மையும் எல்லாம் கண்களை கூசச்செய்தன. சாலையில் எல்லோரும் என்னை ஓரக்கண்ணால் பார்த்துக் கொண்டிருப்பதுபோலத் தோன்றியது. வயிறு பகீர் பகீர் என்றது. ஓடிப்போய் அறைக்குள் புகுந்து கதவைச் சாத்திக்கொள்ளவேண்டும் என்று மனம் தவித்தது. கதவுகளும் சுவர்களும் மூடாத வெற்றிடத்தில் நின்றபோது மேலே ஒரு கனத்த பொருள் ஆடும்போது தலையில் ஏற்படும் பதைப்பு உடம்பெங்கும் ஏற்பட்டது.

நாகமணி வேலை செய்த இடம் கொஞ்சம் சிக்கலான ஆசாமிகள் என்று நெல்சன் சொன்னான். கூப்பில் பழைய மரங்களை வெட்ட காண்டிராக்ட் எடுத்து மொத்த மரங்களையும் வெட்டிக்கொண்டு வந்து அறுத்து விற்கும் கூட்டம். சந்தனமும் தேக்கும்தான் உண்மையான வியாபாரம். அந்த மரங்களை ஆரல்வாய்மொழியிலிருந்தும் தோவாளையிலிருந்தும் பூதப்பாண்டியிலிருந்தும் கொண்டு வந்து சேர்க்கும் வண்டிகளும் அதற்கான ஆசாமிகளும் அங்கு உண்டு.

நாகமணியிடம் அவர்களிடமிருந்து தப்பவேண்டுமென்றால் அவன் திரும்ப நாகர்கோயிலுக்கே வராமலிருப்பதுதான் நல்லது, அவனுக்கு நிரந்தரமான பாதுகாப்பைத் தர கட்சியால் முடியாது என்று சொல்லிவிட்டார்கள். அவன் அவனுடைய ஊரில் இருந்தாலும் ஆபத்துதான். நேராக நெடுமங்காடுப்பக்கம் கேரளத்துக்குப் போய்விடுவதுதான் நல்லது. அதற்கு கட்சி வழியாகவே ஏற்பாடு செய்தார்கள். ஒருவருடம் கழித்து எல்லாம் ஆறியபிறகு வேண்டுமானால் கல்லூரிக்கு வரலாம். ஆனால் அவன் மீண்டும் படிக்க முடியாதென எல்லோருக்கும் தெரிந்திருந்தது. உயிர் தப்பியதே பெரிய அதிருஷ்டம்தான்.

'அவனுக மேல இவனுக கைய வைக்க முடியுமாலே? வச்சுட்டா பின்ன இங்க அவனுகளுக்க ராச்சியம் நிக்குமா?' லட்சுமணன் சொன்னான். 'விடமாட்டானுக'

ஓய்வான மத்தியானம். வெயிலுக்கு கடற்பக்கமிருந்து அடித்த காற்று இதமாக இருந்தது. சிறிய ஓட்டு வீட்டு முன்பக்கங்களில் பெண்கள் படுத்து தூங்கிக்கொண்டோ குந்தி அமர்ந்து பேசிக்கொண்டோ இருந்தார்கள். நிழலில் பன்றிகள் கூட்டமாகக் கிடந்தன. பன்றிகளின் கண்களைப்பார்க்க முயன்றேன். பன்றிகளை எவருமே கவனிப்பதில்லை. நம்மைப்பற்றி பன்றிகளுக்கு என்னதெரியும் என்பது எவருக்கும் தெரியாது. பன்றிகளின் உலகம் நகரம் முழுக்க இருக்கிறது. பன்றிகளுக்குமேல்தான் நகரமே இயங்கிக்கொண்டிருக்கிறது. இந்தப்பன்றி இங்கே குதித்து அப்படியே பழையாறு வரை ரகசியமாகவே சென்றுவிடமுடியும்.

சட்டென்று ஒருவன் 'லே' என்றான். பாய்ந்து அண்ணாவின் கைகளைப்பிடித்துக்கொண்டேன்.

அவன் வேறு ஒரு சிறுவனைத்தான் அழைத்திருந்தான். ஆனால் அதற்குள் ஓரிரு துளி சிறுநீர் கழித்திருந்தேன். என் கைகள் நடுங்கிக்கொண்டிருந்தன.

அண்ணா ஒன்றும் சொல்லவில்லை. என் பிடியை விலக்கி விட்டு நடந்தார். பஸ்ஸுக்காக காத்து நின்றபோது தெருவையே பீதியுடன் பார்த்துக்கொண்டிருந்தேன். எக்கணமும் அவர்கள் பாய்ந்துவந்துவிடுவார்கள். வேட்டிக்குள் புடைத்துத் தெரியும் வெட்டுகத்திகள். கண்களில் இரக்கமில்லாத ஒரு கூழாங்கற்தன்மை.

'அப்படி உன் மேல கைய வச்சிர மாட்டானுக' என்றார் அண்ணா திடீரென்று.

அவரைப் பார்த்தேன்.

*'டேய் அடீண்ணா சும்மாவா இருக்கு? அடிச்சிட்டு அவன் தைரியமா நடந்திருவானா? அவனுக்கும் பிள்ளையும் குட்டியும் இருக்கும். டேய் வந்து எறங்கிர மாட்டமா? அவன் சங்க பிடிச்சிரமாட்டமா? ஒரு அடி அடிக்கப்பட்டதுண்ணா சும்மாவா? நூறு அடி வாங்கதுக்கு ரெடியா இருந்தாத்தான் ஒரு அடி அடிக்கணும்.. கள்ள வியாபாரம் செய்யுதவன் அதுக்கு துணிய மாட்டான்.. நான் பாக்காத அடியாடே?'*

*'அவன் கேடியாக்கும்' என்றேன்.*

*'புத்தியுள்ளவன்தான் கேடியாக முடியும் பாத்துக்க. புத்தியுள்ளவனுக்கு எந்தச் சாதிமேல கைய வைக்கலாம் எங்க ஒதுங்கிரணும்னு நல்லா தெரிஞ்சிருக்கும்.. உனக்கு பயமிருந்தா சொல்லு. நேரா அவன் கடைக்கே போவம். போயி பேசுவம். அடிக்கானா பாப்பம். வா'*

*'இல்ல'*

*'வாடா..போய் அவன்கிட்ட பேசுவம்'*

*'வேண்டாம் அண்ணா'*

*'செரி பிறவு போய் அவன்கிட்ட பேசுதேன்..ஆரு அவன்? எமதர்மன் ஒண்ணும் இல்லியே''*

*நான் பெருமூச்சுவிட்டேன். என் மனம் சற்று எடையை இழந்தது.*

*பஸ்ஸில் ஏறி அமர்ந்தபோது மேலும் நிதானமடைந்தேன். கால்களை நீட்டிக்கொண்டேன். அண்ணா என்னருகே அமர்ந்திருந்தார். சட்டென்று புன்னகை புரிந்தார்.*

*'அவன்..உனக்க ஃபிரண்டு, அவனுக்க பேரு என்னவாக்கும்?'*

*'நாகமணி'*

*'சுணையுள்ள பயலாக்கும்..ஆணாப்பெறந்தவன்.. '*

*ஓடி ஒளிந்துகொண்டிருக்கிறானே என நினைத்தேன். கையில் கிடைத்தால் தலையல்லவா போகும்?*

*நான் நினைப்பதை உணர்ந்ததுபோல அண்ணா சொன்னார் 'டே பயந்து கிடக்கது இவனாக்கும். இந்த அளவுக்கு சத்தம் போட்டு காடெளக்குதான்னா நல்ல பயம் எலும்பிலே கேறியாச்சுண்ணாக்கும் அர்த்தம்.' கண்களை சிமிட்டியபடி 'அந்த பயலுக்கும் அது ஒருநாலஞ்சுநாள் கழிஞ்சா தெரியும்..அவன் வேட்டிய தூக்கிக்கட்டிட்டு திரும்பி வருவான்..ஒருத்தனும் கைய வைக்க மாட்டான்...'*

*வீட்டுக்குச் சென்றபோது இரவு ஆகிவிட்டிருந்தது. அப்பா திண்ணையில்தான் இருந்தார். முற்றத்தில் ஏறியபோது ஈஸி சேரில் அமர்ந்தபடி பார்த்தார். வீசிக்கொண்டிருந்த விசிறி ஒரு கணம் நின்றபின் மீண்டும் அசைய ஆரம்பித்தது. பக்கவாட்டு வாசல் வழியாக உள்ளே சென்றேன்.*

*அம்மா 'டேய் மகாபாவி' என ஏதோ ஆரம்பித்தாள்.*

*'எல்லாம் நாளைக்கு. இப்பம் அவனுக்கு வல்ல கஞ்சியோ கிளங்கோ குடு' என்றார் அண்ணா.*

*பெரிய தட்டு நிறைய சம்பா அரிசிக்கஞ்சி. மயக்கிய மரவள்ளிக்கிழங்கு. வாளைமீன் குழம்பு. கையை கழுவிவிட்டு வந்து அமர்ந்தேன். மூன்று நாட்களாக பெரிதாக ஏதும் சாப்பிடவில்லை என்பதை அப்போதுதான் உணர்ந்தேன். சிலநிமிடங்களுக்குப்பின் உணவின் ருசி தவிர ஏதும் என் மனதில் இருக்கவில்லை.*

*கைகழுவினேன். அம்மா என் அறையில் கட்டில் மீது பாயை விரித்தாள். 'போயி படுடா'*

*நான் பேசாமல் நின்றேன்.*

*அம்மா போகும்போது 'பொறப்பட்டு போறான் சோத்துப்பக்கி..உனக்கு நாளைக்கு வச்சிருக்கு' என்றாள்.*

*தலைகுனிந்து சென்று கட்டிலில் அமர்ந்தேன். நாலைந்துமுறை பெருமூச்சு விட்டேன். பின்பு படுத்துக்கொண்டேன். ஆனால் என் உடம்பும் மனமும் பதைத்துக்கொண்டே இருந்தன. என்னைச்சுற்றி ஏதோ இருப்பதுபோல ஓர் உணர்வு. பின்பு எழுந்து அமர்ந்தேன். அறைக்கதவு திறந்திருந்தது. எங்கள் வீட்டில் எந்த அறைக்கதவையும் மூடுவதில்லை.*

*எழுந்துசென்று அறைக்கதவை மூடித்தாழிட்டேன். திரும்ப வந்து படுக்கையில் அமர்ந்தேன். மூடியகதவை பார்த்துக்கொண்டிருந்தேன். இனிமேல் தூங்கமுடியும் என்று பட்டது. பதற்றம் வடிந்துகொண்டிருந்தது.*

*[புறப்பாடு முதற்பாகம் நிறைவு]*

## புறப்பாடு II – 1, லிங்கம்

ராதாகிருஷ்ணனை முதன்முதலாகப்பார்க்கும்போது அவன் ஒரு மொட்டைத்தென்னையில் ஏறிக்கொண்டிருந்தான். இடிவிழுந்து அதன் மேல்நுனி கருகி மொண்ணையாகிருந்தது. மூத்த கனத்த தென்னை. ஆகவேதான் முழுக்க எரிந்தழியவில்லை. விசித்திரமான ஒரு சுட்டுவிரல்போல அது வானத்தைக் காட்டியது. துண்டை முறுக்கி கால்களில் தளைப்பாகக் கட்டி அவன் அதில் பாதிவரை ஏறியிருந்தான்

நானும் அப்பு அண்ணனும் அப்பா திருவரம்பில் புதியதாக வாங்கிய தோட்டத்தைப்பார்ப்பதற்காக வந்திருந்தோம். ஆச்சரியமாக மேலே இருந்த ராதாகிருஷ்ணனை அண்ணாந்து பார்த்தேன். 'டேய் ராதா என்னடா அங்க செய்யுதே?' என்றார் அப்பு அண்ணா

'எமன் வந்துட்டான் அண்ணா, அதாக்கும் சிவலிங்கத்திலே கேறுதேன்' என்றான் அவன். கீழே அவனுடைய எருமை நின்றது.

எனக்கு அந்தப்பதிலில் இருந்த கற்பனை ஆச்சரியமூட்டியது. பத்தாவது படித்துக்கொண்டிருந்தேன். பஷீரும் ஓவி.விஜயனும் ஹெமிங்வேயும் அறிமுகமாகியிருந்தனர். மற்ற இளைஞர்கள் எல்லாம் கற்பனையும் சொல்நயமும் இல்லாத ஒரு தட்டை உலகில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் என்ற மிதப்பு இருந்தது. அந்த ஒரேவரியில் ராதாகிருஷ்ணன் என்னை விட ஒரு படி மேலானவன் என்று எண்ண ஆரம்பித்தேன்.

ராதாகிருஷ்ணன் இறங்கினான். தளைப்பை எடுத்து உதறித் திரும்ப தலையில் கட்டிக்கொண்டான்.

'எதுக்கு கேறினே?' என்றேன்

'சும்மா' என்று சிரித்து 'அப்புவண்ணா இவன் யாரு? கரடி தங்கப்பன்நாயருக்க மகனா? மூத்தவனா?'

'எளையவன். பத்தாம்கிளாஸ் படிக்கான்' என்றார் அப்பு அண்ணா

'எந்த ஸ்கூல்?' என்று ராதாகிருஷ்ணன் கேட்டான்

'அருமனை நெடியசாலை ஸ்கூல்.நீ?'

'இவனா? இவன் திருவட்டாறு பள்ளிக்கூடம்'

'எத்தனாம் கிளாஸ்?' என்றேன். ராதாகிருஷ்ணன் அதற்கு பெரிய வெண்பற்களைக் காட்டிச் சிரித்தான்.

'ஏன் சிரிக்கே?'

'அவனுக்கு சிரிப்புல்லா? எட்டாம்கிளாஸில மூணுமட்டம் தோற்றா அவனுக்க ஒடையனுங்க இல்ல கரையுவானுவ.அவனுக்கென்ன? வட்டிலிலே சோறு, விரிச்சிட்ட பாயி..'

'பிடிக்கியதுக்கு பிரேக்கு'

'லே போலே.சவிட்டினா கொடலு வெளிய வந்திரும் பாத்துக்க'

உண்மையிலேயே ராதாகிருஷ்ணன் எட்டாம் வகுப்புதான் படித்துக்கொண்டிருந்தான். அந்தவருடமும் தோல்வி. அதைப்பற்றி அவனுக்கு கவலையே இல்லை. எருமையை கொண்டுசென்று ஆற்றுமணலின் ஓரம் இறக்கினான். அது புதர்களை மேய ஆரம்பித்தது

'மொட்டைத்தெங்கிலே எதுக்கு ஏறினே?'

'குஞ்சு எடுக்கிறதுக்கு'

'என்ன குஞ்சு?' என்றேன்

'அருமந்தக்குஞ்சு.ஆராம்புளிக்குஞ்சு.பாக்குறியா?'

' ஆமா' என்றேன். அவன் தன் சாயவேட்டியின் மடியை காட்டி 'இங்கிண வச்சு கட்டியிருக்கேன். பிரிச்சுப்பாரு..' என்றான் 'பாத்து ..கடிச்சுப்போடும்'

அவன் மடியைப்பிரித்தேன். உள்ளே சிவப்பாக ஏதோ இருந்தது. அடுத்த கணம் பாய்ந்து பின்னகர்ந்தேன். அவன் தன் குறியை இழுத்து மேலே கொண்டுவந்து அதன் நுனி அங்கே தெரியும்படி கட்டியிருந்தான்

நான் பாய்ந்தோடுவதைக் கண்டு ராதாகிருஷ்ணன் கூவிச்சிரித்தான். 'படிப்பாளி ஓடுதான்லே-கூ'

அதன்பின் அவனைக்கண்டாலே விலகி நடந்தேன். அவனை தூரத்தில் பார்த்தாலே எனக்கு கைகால்கள் உதற ஆரம்பிக்கும். ஆனால் அவன் என்னை விடவில்லைஅருமனை சாலைவழியாகச் செல்லும்போது சைக்கிளில் வந்து என் பின்னால் காலை ஊன்றி பெல்லடித்தான். அவன் சட்டைபோட்டிருந்ததனால் எனக்கு முதலில் அடையாளம் தெரியவில்லை.

'வாறியா? அளப்பங்கோடு சாஸ்தா கோவிலுக்குப் போவம்'

'இல்ல-ஸ்கூலு உண்டு'

'டே வாடே' என்று என் தோளைப்பிடித்தான். மறுக்க நினைத்தாலும் பின்னால் கம்பி இருக்கையில் ஏறிக்கொண்டேன். என் புத்தகப்பையை தூக்கி ஒரு டீக்கடையில் கடாசினான். ' சுப்பண்ணோ, ஆளுக்கொரு கடுப்பச்சாயா' என்று உத்தரவிட்டான்

'எங்கிட்ட பைசா இல்ல'

'எங்கிட்ட இருக்குடே'

பணம் கொடுத்தபின் கிளம்பினோம். மேல்பாலை அருகே ஆலமரத்தடியில் கோயில்கொண்டிருக்கும் அளப்பங்கோடு சாஸ்தா எங்களூரில் பிரபலம். எதற்கெடுத்தாலும் வேண்டிக்கொள்வார்கள். வேண்டுதலுக்காக அவ்வளவுதூரம் செல்லவும் முடியாது. ஆகவே ஏதாவது பையன்களைப்பிடித்து வழிபாட்டுக்கு கொடுத்தனுப்புவார்கள். அது மூலையம்வீட்டு பங்கிப்பாட்டியின் வேண்டுதல். ராதாகிருஷ்ணனின் சைக்கிள்முன்னால் பையில் உருளியும் அரிசியும் வெல்லமும் தேங்காயும் இருந்தன. விறகுக்கும் போற்றிக்கான தட்சிணைக்கும் பைசா கொடுக்கப்பட்டிருந்தது.

அளப்பங்கோடு கோயிலை சைக்கிள் தாண்டிச்சென்றதும் 'அளப்பங்கோடு இங்கயாக்கும்?' என்றேன்

'அங்க போகல்ல'

'ஏன்?'

'சாஸ்தாவுக்கு சுகமில்ல'

'ஏன்?' என்றேன்

'குந்தி இருக்காருல்லா? அண்டி மண்ணிலே புதைஞ்சு ஆனியாடி மழையிலே முளைச்சு வேரோடிப்போச்சு'

எனக்குச் சிரிப்பு வந்தது. 'பிறவு?'

'ஆவணியில இன்னொரு சாத்தா முளைச்சு பொந்திருவாருண்ணாக்கும் பேச்சு. அவராக்கும் இனி அஜிஸ்டெண்டு சாஸ்தா'

குழித்துறையில் ஒரு மளிகைக்கடையில் பச்சரிசி, வெல்லம், தேங்காய் ஆகியவற்றை சகாயவிலைக்கு எடுத்துக்கொண்டார்கள். ராதாகிருஷ்ணன் திரும்பி 'அளப்பங்கோட்டப்போ தொணையா நின்னுக்கப்போ' என்றான்

ஒருவாறாக ஊகித்துவிட்டிருந்தேன். இருந்தாலும் கேட்டேன் 'நாம எங்க போறம்?'

'வழிபாட்டுக்கு'

'என்ன வழிபாடு?'

'வெடி வழிபாடு-குழித்துறை கண்டன் சாஸ்தா கோயிலிலே பாத்திருப்பியே அதுதான்-டமால்-பும்'

படம் ஐவி.சசி இயக்கிய 'இதா இவிட வரே' . எம்ஜி.சோமன் ஜெயபாரதியின் வெற்றுமுதுகை முகர்ந்து பார்க்கும் போஸ்டர் ஒட்டப்பட்டிருந்தது. ஜெயபாரதி அழுவதுபோல எனக்கு தெரிந்தது.

'இவளாரு?' என்றேன். அதற்கு முன் மொத்தமாக பத்து சினிமாக்கள் கூட பார்த்ததில்லை. எல்லாமே பக்திப்படங்கள். எல்லாமே அருமனை கொட்டகையில். அதை ஏழாம் வகுப்பு படிக்கும்போது மூடிவிட்டார்கள்.

'வெடி' என்றான் ராதாகிருஷ்ணன். இரும்புக்கம்பிக்குகை வாசலில் நல்ல கூட்டம். எல்லாருமே வேட்டியை டப்பாக்கட்டு கட்டிய இளைஞர்கள். காட்டாத்துறை காரக்கோணம் என்று உள்கிராமங்களில் இருந்து வந்தவர்கள். பலர் செழிப்பாக வெற்றிலை குதப்பியிருந்தனர். காலடியிலேயே துப்பி எல்லார் காலும் எருமைபலிகொடுக்கும் இடத்தில் நிற்பவர்கள் போலிருந்தன. உச்சி வெயிலில் வியர்வையும் தேங்காயெண்ணையும் சேர்ந்து ஆவியாகும் வாடை. அருகே ஓடும் சாக்கடையில் குமிழிகள் வெடிக்கும் வாடை.

சட்டென்று ர்ர்ர்ர் என்ற ஒலியுடன் 'கணபதியே'. கடகட என்று இரும்பு அழி திறந்தது. உள்ளே அதைத் திறந்தவன் திரும்பி ஓடினான். மதகுவழியாக அணைநீர் பெருக்கெடுப்பதுபோல உள்ளே மனிதக்கூட்டம் பீரிட்டது. ராதாகிருஷ்ணன் பின்னால்தான் நின்றிருந்தான். 'அளப்பங்கோட்டு சாஸ்தாவே சரணமய்யப்பா!' என்று கூச்சலிட்டபடி பிதுங்கிப்பாய்ந்து சில கணங்களில் உள்ளே போய் ஓடிக்கொண்டிருந்தான்

நான் பின்னால் நின்றேன். எனக்குப்பின்னால்நின்றவர்கள் என்னைத்தள்ள முன்னகர்ந்து கம்பிவாயை அணுகி அக்கணத்தில் மாயவிசை ஒன்றால் வெளியே தள்ளப்பட்டேன். இரண்டுமுறை. அந்த நெரிசலில் யாரோ என்னுடைய விதைப்பையை பிடித்துப்பார்த்தனர். அதிர்ந்து திரும்பிப்பார்த்தேன். அருகே பிதுங்கிக்கொண்டிருந்த கோடுமீசை ஒல்லியாள்தான் அது என அவர் முகம் காட்டியது.

பீதியுடன் வெளிவந்து விலகி நின்றேன். உண்மையில் திரையரங்கு நோக்கி பலபகுதிகளில் இருந்தும் மழைநீர் போல ஆட்கள் வந்து சேர்ந்துகொண்டிருந்தனர். அப்பகுதியில் தலைகள் கொப்பளித்தன. என்னசெய்வதென்று தெரியவில்லை. வீட்டுக்குத்திரும்பிப்போக பேருந்துக்கு பணமில்லை. சைக்கிளை ராதாகிருஷ்ணன் வைத்து பூட்டியிருந்தான்.

எனக்குப்பின்னால் கதவு திறந்தது . 'இவராலே?'

'மொதலாளி..டிக்கெட்டு வாங்கியாச்சு மொதலாளி..வாங்க' என்றான் ராதாகிருஷ்ணன்

கதவிடுக்கு வழியாக உள்ளே சென்றேன். ராதாகிருஷ்ணன் 'வாடா' என்றபடி பெஞ்சுபகுதி நோக்கி விரைந்தான்

'ஆராக்கும் மொதலாளி?'

'நீதான்..மொதலாளி வெளியே நிக்காருண்ணு வாச்சுமேன்கிட்ட சொன்னேன்'

படம் ஆரம்பித்து ஐ வி சசி பெயர் வந்ததும் ராதாகிருஷ்ணன் எழுந்து நின்று வாய்க்குள் எட்டுவிரல்களைப்போட்டு விசிலடித்தான். அவன் கையில் பை இருந்தது

'இது என்னடே?'

'உருளி..சைக்கிளிலே வைச்சா அடிச்சுமாத்திருவானுக'

படம் ஆரம்பித்தது. எனக்கு படம் தலைகால் புரியவில்லை. எம்ஜி.சோமன் ஊருக்கு வருகிறார். அவருக்கும் மதுவுக்கும் விரோதம். மதுவின் மகள் ஜெயபாரதி

'டேய் கதை என்ன?'

'நீ என்ன மயித்துக்கு கதையப்பாக்குதே? அவளுக்க சந்தியப்பாருடே'

'ஏன்?'

'அதாக்கும் கலை..கலையே என் வாழ்க்கையின் திசை மாத்தினாய்!'

ராதாகிருஷ்ணன் பரவச நிலையில் இருந்தான். குளியல். புஜங்கள், பிதுங்கல்கள், இடைவெளிகள். ஆழ்ந்த அமைதி கொண்டவனானேன்

'வெண்ணையோ வெண்ணிலாவுதிச்சதோ வெளுத்தபெண்ணே நின்றே பூமேனி' பாடல் முழுக்க அவர்கள் பலவகையான பொருட்களில் பாதி மறைந்து தழுவிப்புரண்டார்கள். அரங்கு மூச்சடக்கி இருந்தது. மிகச்சரியாக பாட்டு முடிந்ததும் ராதாகிருஷ்ணன் பாடலின் முதலெழுத்தை மாற்றி உரக்கப்பாடினான். அரங்கே உச்சக்குரலில் வெடித்துச் சிரித்தது.

திரும்பும் வழியில் ராதாகிருஷ்ணன் பாடிக்கொண்டே சைக்கிளை மிதித்தான். மேல்புறம் சந்தைவிட்டுச் சென்றுகொண்டிருந்த ஒரு பெண்ணை நோக்கி உரக்கப் பாடினான்.

அவள் 'வாரியலாலே அடிப்பேன்..தெருநாறி' என்றாள். பாதிதான் காதில் விழுந்தது.

'அவ ஆளை விளிச்சுகூட்டிருவாடே'

'டேய், சைக்கிள் இறக்கத்திலே போறப்பமாக்கும் அந்தப்பாட்டை பாடணும்-ஏற்றத்திலே பாடினா அடி உறப்பு கேட்டியா?'

போகிறவழியில் கடையில் ஒரு ரூபாய்க்கு ஒரு பொட்டலம் மஞ்சள்தூள் வாங்கிக்கொண்டோம். அதை ஓடைநீரில் குழைத்து வாழையிலையில் பொதிந்து கொண்டான். சாஸ்தாபிரசாதம்.

'ஜெயபாரதீஸ்வர பூசைண்ணு ஒண்ணு பண்ணினாரு போத்தி-சிலுத்துப்போச்சு அம்மச்சியே-இங்கபாருங்க ரோமம் எந்திரிச்சு நிக்குது-' என்று முழங்கையை காட்டினான்.

மூலையம் வீட்டில் அப்போதுதான் விளக்கேற்றியிருந்தார்கள். பங்கிப்பாட்டி பொக்கைவாய் மேல் கையை வைத்து 'அய்யோ-அளப்பங்கோட்டீஸ்வரா காத்து ரட்சிக்கணே' என்றாள்

'அதுக்குமேலே சோமேஸ்வர அர்ச்சனைண்ணு ஒண்ணு-அடடடா! கண்ணு நிறைஞ்சுபோச்சு'

'புண்ணியம்! புண்ணியம்!' என்றாள் பாட்டி

'போற்றிக்க பேரு சசி-அவரு ஆராக்கும் வித்வான்- அடிச்சு கொலுத்திட்டாருல்லா?'

அப்பால் தையல் எந்திரத்தில் தைத்துக்கொண்டிருந்த தேவகியக்கா ஓரக்கண்ணால் என்னைப்பார்த்தாள். எனக்கு உள்ளங்கால் வேர்த்து அதிலெயே வழுக்கிவிழுந்துவிடுவேன் என்று தோன்றியது. கண்களின் நுனி இந்த அளவுக்கு கூர்மையாகவா இருக்கும்

'வல்லதும் திந்நிட்டு போடா மோனே-சைக்கிளு சவிட்டி போயதல்லியோ?- தேவகீ'

'ஒண்ணும் வேண்டாம் அம்மச்சி-வயறு நிறைஞ்சாச்சு'

கிளம்பும்போது தேவகி அக்கா 'வயறு நிறைஞ்சாச்சாடே?' என்றாள்

'ஓ என்ன நிறைவு? இதெல்லாம் ஒரு கிளாஸு தண்ணி குடிச்ச மாதிரில்லா?'

'கொஞ்சம் கூடித்தான் போவுது கேட்டியா?' என்றாள் அவள் ராதாகிருஷ்ணன் கண்களைப்பார்த்து.

'போனதுமே குறைச்சிருதேன் அக்கா' என்றபின் 'ராமண்ணன் எப்பம் பட்டாளத்திலே இருந்து வாறாரு?'

'போடா' என்று சிரித்தபின் உள்ளே சென்றுவிட்டாள். அவர்கள் என்ன பேசிக்கொண்டார்கள் என்று எனக்குப்புரியவில்லை.

ஒருவருடம் தாண்டுவதற்குள் நன்றாகவே புரிந்துகொள்ள ஆரம்பித்துவிட்டேன், பலசமயம் அவன் சொல்வதற்குள்ளாகவே. அவன் கதகளி ஆசான் சங்குப்பிள்ளை பெண்வேடமிடும் இடத்துக்குச் சென்று முருக்கமரத்தில் செய்து வண்ணம்பூசி வைக்கப்பட்டிருந்த முலைகளை வருடிப்பார்த்தபோதும் நாடகநடிகை பாறசாலை ராஜம்மா வேடம்போடும் அறைக்கு மேலே மாமரம் வழியாக ஏறி ஓட்டை இளக்கி உள்ளே பார்த்தபோதும் [பிராவுக்குள்ள துணி சுருட்டி வைக்குதாடே ] அணஞ்சபெருமாள் வாத்தியார் கோலப்பன் மனைவியை ரகசியமாக மரச்சீனி விளைக்கு கூட்டிச்செல்லும்போது மரத்தில் ஏறி பார்த்தபோதும் [காத்து அடிக்கான்] அருகிலேயே நின்று தவித்தேன்.

வனயட்சி கோயிலில் 'பாண்டவ வானப்பிரஸ்தம்' நாடகத்தில் நடிக்கையில் அவன் பீமன். தோளில் பஞ்சால் செய்த மாபெரும் புஜங்கள். தேங்காய்நாரில் அவனே செய்து மூக்கில் மாட்டிக்கொண்ட பெரிய கப்படா மீசை. கையில் காகிதம் ஒட்டிய கதாயுதம். அர்ஜுனன் 'அண்ணா அந்த குதிரையைச் சற்று பிடி' என்று சொன்னதும் கதாயுதத்தை தொடை நடுவே இடுக்கிக்கொண்டு குதிரையைப்பிடித்தான். கூட்டம் மொத்தமும் எழுந்து நின்று கூச்சலிட்டுச் சிரிக்க அரங்கிலிருந்த தர்மரும் அர்ஜுனரும் விழித்தனர்

'அண்ணா என்ன இது-டேய் நகுலா, குதிரையைப்பிடி'

அதையும் அடுத்தகட்டத்துக்குக் கொண்டுசென்றான் ராதாகிருஷ்ணன் 'டேய் நகுலா அண்ணன் ஆணையிடுகிறேன். நீ இந்தக் கதையைப்பிடி .நான் குதிரையைப் பார்த்துக்கொள்கிறேன்'

மறுநாள் ஆற்றில் பெண்கள் குளிக்கையில் அவ்வழியாக எருமையுடன் சென்றான். பெண்கள் சிலர் திரும்பிப்பார்த்துச் சிரித்தார்கள். மடியிலிருந்து மீசையை எடுத்து ஒட்டவைத்துக்கொண்டான். இருவர் சிரிப்பு தாளாமல் தண்ணீரில்

பாய்ந்து விட்டார்கள்

'டேய் ராதா, அந்த கதை உனக்கு கொள்ளாம் கேட்டியா?' .

'அது பத்திரமா இருக்கு தங்கம்மக்கா.. காணணுமா?'

'வச்சுக்கோ மக்கா..அடகுவச்சா கஞ்சிக்கு பணம் தெகையும்லா?'

அவ்வழிச் சென்ற பரமண்ணனிடம் 'பரமண்ணா உனக்க மச்சினி கதையில்லா கேக்கா?' என்றான் ராதாகிருஷ்ணன்

'சொல்லிக்குடுலே..அவளுக்கு கதைண்ணா இஷ்டமாக்கும்'

வெட்கமின்மை ஒரு மாபெரும் ஆற்றல் என நம்பினேன். அதை என்னால் அடையமுடியவில்லையே என ஏங்கினேன். என்ன படித்து, என்னென்னவோ கற்பனைசெய்து என்ன புண்ணியம்? இப்படி மண்ணாந்தை மாதிரி நின்று வாயைத்திறந்து பார்ப்பதுதான் என்னால் முடிந்தது.

அதை 'குடம்' தங்கமே சொன்னாள். ராதாகிருஷ்ணன் அவளிடம் 'என்னடீ குடமே? குடவோலைமொறை நடக்குதா?' என்று கேட்டான். பள்ளிப்பாடங்கள் அவனுக்கு இம்மாதிரி தருணங்களில் அபாரமாக கைகொடுக்கும்.

'ஏமான் சில்லறையும் கொண்டு வரணும்..காட்டித்தாறேன்'

'வாறேன். இன்னும் சில்லறை தேறல்ல கேட்டியா?'

'ஏமானுக்க சித்தப்பன்மாரு வாறதுண்டு . ஒப்பம் சேந்து வரணும்..இதாரு மயக்கின கிளங்கு மாதிரி நிக்குதாரு?'

'இது நம்ம கரடிக்க மகன்'

'ஓ அப்பி வீட்டுக்குப்போணும்..இது விளைஞ்ச வித்தாக்கும். அப்பிக்க அப்பன் கையில கிட்டினா சவிட்டி எல்ல உருவிப்போடுவாரு..'

குடம் செல்லும்போது ராதாகிருஷ்ணன் 'நடையா இது நடையா ஒரு தாடகையல்லோ நடக்குது' என்றான்

ஆனால் என் வீட்டிலும் சரி அவன் வீட்டிலும் சரி எங்கள் நட்பை தவறாக எவரும் சொல்லவில்லை. காரணம் அவன்தான். பால்வடியும் முகத்துடன் 'மாமியே வெறகு கீறி வைக்கட்டா? வெள்ளிக்கிழமை நெல்லு வேவிக்கணுமில்லா?' என்பான்.

ஒருகட்டத்தில் அவனிடமிருந்து விலக ஆசைப்பட்டேன். குறிப்பாக கல்லூரிக்குச் செல்ல ஆரம்பித்தபோது. என் கனவுகளும் நடைமுறைகளும் திசைமாறிவிட்டிருந்தன. இந்தியாவை விரும்பும்படியாக மாற்றியமைக்க ஆசைப்பட்டேன். விவேகானந்தர் ஆகவேண்டுமா பகத்சிங் ஆகவேண்டுமா இல்லை ஜெயகாந்தன் ஆனாலே போதுமா என்று தீர்மானிக்க முடியவில்லை. அதெல்லாம் ராதாகிருஷ்ணனுக்கு அப்பாற்பட்டவை.

'நீ என்னடே இருந்து படிக்கே?' என்று எட்டிப்பார்ப்பான். 'படம் உண்டாலே மக்கா?'

'இல்ல'

'பின்ன? மத்தது உண்டா?'

'இல்லடே..இது வேறயாக்கும்'

'எருமைய குளிப்பாட்டப்போறேன் வாறியா?'

'இல்ல நீ போ'

'ஓ நீ இப்பம் படிப்பாளியாக்குமே.டேய் படிப்பாளிக்கு கெட்டினவ தங்கமாட்டா கேட்டியா?'

'போடா'

தினமும் எருமையை குளிப்பாட்டி கட்டி புல்பறித்து வைத்துவிட்டு பள்ளிக்குச் செல்லவேண்டும். பள்ளிக்கு வீட்டிலிருந்து பத்துமணிக்குத்தான் கிளம்பிச்செல்வான். நான் பி.காம் முதல்வருடம் படிக்கும்போதுதான் அவன் பத்தாம் வகுப்புக்கே வந்துசேர்ந்தான்.

*‘நீ நேரமே பள்ளிக்கு போனா என்னடே?’*

*‘டேய் இந்த எருமை என்னை அவளுக்க கெட்டினவன்னு நினைக்குது கேட்டியா? இவள சிங்காரிச்சு வச்சுகிட்டு போறதுக்குள்ள அங்க ஒண்ணாம் பீரியடு முடிஞ்சிரும்’*

*பத்தாம் வகுப்பில் தேறிவிடுவதென்று முடிவெடுத்தான். என்னிடம் விரிவாக பள்ளிப்பாடங்களை அளித்து விளக்கி என்னென்ன கேள்விகள் வரக்கூடுமென்பதை அறிந்துகொண்டான். கோயிலுக்குள் ஒளிந்து அமர்ந்து நுட்பமாக துண்டுத்தாள்களில் மொத்த பாடத்திட்டத்தையுமே எழுதிவிட்டான். என்ன செய்தான் என்றே தெரியவில்லை. பத்தாம் வகுப்பில் ஜெயித்துவிட்டான்*

*‘இனி பட்டாளத்துக்கு போனா எடுப்பாண்டே’*

*ராதாகிருஷ்ணனின் இலட்சியமாக இருந்ததே ராணுவம்தான். மாமரக்கிளையில் தொங்கி நூறு முறை எம்பி எழுவான். கயிறு கட்டி அதில் தொற்றி மேலே ஏறுவான். ‘பட்டாளத்துக்கு ஆளெடுக்கிறப்ப லெஃப்ட் ரைட்டு போட்டு காட்டச்சொல்லுவானுகளாடே?’*

*‘சேச்சே-அதை அவனுகள்லா கத்துக்குடுப்பானுக’*

*‘பட்டாளத்திலே சேர்ந்தா துவக்கு குடுப்பானுகடே-நல்ல உறப்புள்ள துவக்கு. நூறு குண்டு’*

*‘அதை வச்சுகிட்டு ஆரையும் சுட முடியாதுல்லா?’*

*‘என்னத்துக்குச் சுடுகது? டேய் ஆம்பிளைக்கு துவக்கு இருந்தாப்போரும்டே-’*

*அவன் ராணுவத்தை கனவுகாண ,நான் புரட்சியை கனவு காண ஆரம்பித்தேன். நான் புரட்சிபப்டைத்தலைவனாக பகத்சிங் தொப்பியுடன் இமாலயக் காடுகளில் இருக்க அவன் துப்பாக்கியுடன் என்னைச் சுட வருவதாக ஒரு கதையை கற்பனை செய்தேன். அந்த மாதிரி ஒரு படம்கூட வந்திருந்தது. ஹரிஹரன் இயக்கிய படம். நசீரும் ஜெயனும் நடித்தது.*

*‘என்னடே எழுதுகே?’*

*‘கதை’*

*‘ஆருக்க கதை?’*

*‘மனுசனுக்க கதை-ஆணுக்க கதை பெண்ணுக்க கதை’*

*‘டேய் மக்கா ஆணுக்கு என்னடே கதை? கதை கிடக்குதது பெண்ணுக்காக்கும். அதை எந்த மயிராண்டியும் எழுத முடியாது பாத்துக்க. அவளுக எழுதவும் மாட்டாளுக’*

*நான் வாசிக்கும் கதைகளை அவனுக்குச் சொல்வேன். ஜெயகாந்தனின் யாருக்காக அழுதான், அக்கினிப்பிரவேசம், தகழியின் வெள்ளப்பொக்கத்தில். எந்தக்கதையைக் கேட்டாலும் சட்டென்று ‘இது என்ன கதைடே மக்களே? நம்ம பொன்னுப்பெருவட்டனுக்க மூத்தமோன் பிறாஞ்சிக்க கதை தெரியுமா? அவனுக்கு சுகேசினிண்ணு ஒரு வெடி-குற்றிவெடியாக்கும்-’ என்று ஆரம்பித்துவிடுவான்.*

*ஆனால் சம்பந்தமில்லாமல் சொன்ன ஒரு கதையில் அவன் செயலிழந்து அமர்ந்துவிட்டான். அது ஹாம்லெட்டின் கதை. கதையின் தொடக்கத்தில் இறந்துபோன ஹாம்லெட் மன்னரின் ஆவி டென்மார்க்கின் எல்ஸினோர் அரண்மனையின் வாசலில் வந்து நின்றபோதே அவன் முகம் பிரமித்துவிட்டது. கிளாடியஸால் கொல்லப்பட்ட மன்னர். அவரது மனைவியை கிளாடியஸ் மணந்துகொண்டிருக்கிறான். அவளுடைய மகன் இளவரசன் ஹாம்லெட்*

*‘அவனுக்க பேரென்னெடே?’*

*‘ஹாம்லெட் இளவரசன்’*

*‘செறுப்பமா?’*

*‘ஆமா’*

*கொல்லவேண்டும். சிற்றப்பனையும் துரோகம் செய்த அன்னையையும். To be or not to be. ஹாம்லெட்டால் முடிவெடுக்க முடியவில்லை.*

கதை முடிந்ததும் ராதாகிருஷ்ணன் பேசாமல் புல்லுக்கட்டைத் தூக்கிக்கொண்டு சென்றுவிட்டான். அவனுடைய நடத்தையை புரிந்துகொள்ளாமல் கொஞ்ச தூரம் பின்னால் சென்றேன். ஓடையை கடந்து வீட்டுக்குச் சென்றுவிட்டான்.

நான் விடுதியிலிருந்து திரும்பி வந்த மறுநாள் ராதாகிருஷ்ணனைப் பார்த்தேன். இளவெயிலில் மினுமினுத்தான். 'டேய் என்னடே?' அழுகிய கணவாய்மீன் மாதிரி ஒரு நாற்றம் வேறு

'பட்டாளத்திலே தேமலிருந்தா எடுக்க மாட்டானுகண்ணு சொன்னானுக மக்கா'

ஃபோட்டோ கழுவ பயன்படுத்தும் திரவம் தேமலை போக்கும் என்ற நம்பிக்கை நிலவியது. பலன் தந்தது என்றும் நினைக்கிறேன். ராதாகிருஷ்ணன் பொதுவாகவே கழுவப்பட்ட கறுப்புவெள்ளை படத்தின் வாசனையுடன் நடமாடினான். அவனுடைய எருமை அவனைக் கண்டபோதெல்லாம் மூக்கைச்சுருக்கி மடித்து 'ம்றே?' என்று கேட்டது.

அதிகாலையில் கோயிலில் இருந்து காதில் துளசி இலையும் நெற்றியில் சந்தனமுமாக எங்கள் வீட்டுக்கு வந்தான். 'என்னடே ராதா? என்ன விசேஷம்? உனக்க பிறந்தநாளா?'

'இல்ல மாமி- நாகருகோயிலுக்கு போறேன்-பட்டாளத்துக்கு ஆளெடுக்கானுக'

'நல்லா வா மக்கா-உன்னை கண்டிப்பா எடுப்பானுக'

' நான் நல்லா தேறியாக்கும் போறது. அவனுக சொல்லுகதுக்குள்ள எல்லாத்தையும் செஞ்சிருவேன்'

உற்சாகத்துடன் ஒன்பது மணிக்குக் கிளம்பினான். முதன்முதலாக குலசேகரத்தில் வாங்கிய ரப்பர் செருப்பை அணிந்திருந்தான். 'ஈர வரப்பில நடக்குத மாதிரி இருக்குடே'. மஞ்சள் பையில் சான்றிதழ்கள். காலையில் குளிரக்குளிர பழையதும் முந்தையநாள் மரச்சீனியும் சாப்பிட்டிருந்தான். முகம் முழுக்க பற்களாகத் தெரிந்தன.

ஊரிலிருந்து பதினேழு பையன்கள் கிளம்பிச்சென்றார்கள். கூட்டிச்சென்றவர் எட்வர்டு மாணிக்கம். ஓய்வுபெற்ற ராணுவ வீரர். அவர் வந்து ஏழெட்டுவருடமிருக்கும். வருடம்தோறும் ராணுவத்துக்கு ஆளெடுக்கையில் அவர் தன் பெட்டியில் இருந்து பழைய சீருடையை எடுத்து அணிந்துகொள்வார். ஊரிலிருந்து பையன்களை திரட்டி , கூட்டிக்கொண்டு செல்வார். அங்கே உள்ள உயர் அதிகாரிகள் அவரை தனியாகச் சந்திக்க ஒப்புக்கொள்வார்கள். சொல்லிப்பார்த்தால் நாலைந்துபேரை எப்படியும் எடுப்பார்க்ள். எட்வர்டு அதில் சாதிமதம் பார்ப்பதில்லை.

'நானெல்லாம் அண்ணைக்கு சாவுகதுக்காகல்லா பட்டாளம் போனேன். சியாச்சினிலே ஐஸிலே கெடந்து ஏசுவேண்ணு விளிச்சு கரைஞ்சிட்டுண்டு-இண்ணைக்கு பயக்க பட்டாளம் போறதுக்காக நோம்பு எடுக்கானுக' என்று அப்பாவிடம் சொல்வார் 'செரி, படிச்ச பயக்க. இங்கிண கெடந்து சாணி சுமந்தா என்ன கிட்டும்? பெல்ட்டு கொண்டு அடியும் கூட்டியிட்ட சப்பாத்தியும் கிட்டினாலும் மீசையும் கோலுமா ஊருக்க வந்தா ஆணாப்பிறந்தவனா தலை தூக்கி நடக்கலாமே'

'லே வரியா ஏறுங்கலே-பட்டாளத்துக்கு போறவனுக எச்சிலு கண்ட நாயி மாதிரி சாடுகானுக' என்று எட்வர்டு அவர்களை அதட்டி கோதையாறு வண்டியில் ஏற்றிக்கொண்டார்.

இரவு ஒன்பது மணிக்குத்தான் கல்லூரியில் இருந்து வந்தேன். அங்கே அரசியல்கூட்டம் ஒன்றுக்குச் சென்றிருந்தேன். இந்தியாவில் புரட்சிக்குப் பதில் இந்து சாம்ராஜ்யம் வருவது சிறப்பு என்ற முடிவுக்கு வந்து ஒருவருடம் ஆகிவிட்டிருந்தது.

'டேய் ராதா வந்திருக்கான்'

வெளியே வந்து 'என்னடே?' என்றேன்

'டேய் ராதா பட்டாளத்திலே உன்னை எடுக்கல்லியாடே?' என்றாள் அம்மா

'எடுப்பாங்க மாமி-நாளைக்கு வாறதுக்குச் சொல்லியிருக்கானுக-டேய் வாடா'

நானும் அவனும் வெளியே சென்றோம். கோயில் முகப்பில் ஒரு மண்மேடை. வருடாந்தர உற்சவத்துக்கு நாடகம்போடும் இடம். மற்ற நாளில் மண்மேடாக புல் அடர்ந்து கிடக்கும். அதில் அமர்ந்துகொண்டோம்

'டேய் என்னடே சொன்னானுக?'

'எல்லா டெஸ்டிலேயும் பாஸு'

‘ஓ’

‘மொட்டைத்தெங்கு மாதிரி ஒரு பெரிய இரும்புத்தூணு..அதில தொத்தி ஏறச்சொன்னானுக. பாதிப்பேரு விளுந்தாச்சு. நமக்கு அனுபவமிருக்கே. கைய மண்ணிலே தூத்துட்டு சரசரன்னு கேறிட்டேன். இறங்கிப்பாத்தா எனக்கே ஆச்சரியம். மைதானம் மலந்து கெடக்குதது மாதிரியாக்கும் அது நிக்குதது’

‘பின்ன?’

‘டேய் இந்த தடவை வந்த மேஜரு பணம் கேக்குதாரு’

‘எதுக்கு?’

‘பட்டாளத்துக்கு நாநூறு பேர எடுக்கணும்..வந்தவனுக பதினஞ்சாயிரம்பேரு..பாத்தாரு.. டெஸ்ட்லே ஜெயிச்சவனுக ஆளுக்கு ஆயிரம் ரூபாயோட நாளைக்கு வந்திருங்கன்னு சொல்லிட்டாரு’

‘ஆயிரம் ரூவாயா?’

‘அம்மாவன்கிட்ட கேட்டேன். உனக்க அம்மைய ரெண்டாவது கெட்டிக்குடுத்து அனுப்பினப்பம் எல்லாம் பங்குபோட்டு குடுத்தாச்சு. அவளிட்ட போயி கேளுன்னு சொன்னாரு..’

டேய்’ என்றேன்

‘நீ என்னத்துக்குடே பயருதே? நாளைக்கு மருதங்குழி போயி அம்மையைப் பாக்குதேன். தெக்கடி வயல ஒத்தி வச்சு இப்பம்தான் பைசாவோட போனா. தருவா. தராம இருக்க முடியாதுல்லா..நமக்கும் சேத்து உரிமைப்பட்ட முதலாக்குமே’

‘அந்தாளு சம்மதிப்பானா?’

‘அந்தாளுக்க பைசாவையா நான் கேக்கேன்?’

நான் பேசாமல் இருந்தேன்

‘நாளைக்குக் காலம்பற போயிருவேன். அதாக்கும் உன்னை இப்பமே விளிச்சது. பெட்டியெல்லாம் கெட்டி வச்சாச்சு.. துணியெல்லாம் அடுக்கியாச்சு. ஷேவிங் செட்டு கண்டிப்பா வேணும்னு சொன்னானுக. அம்மாவனுக்க பழைய செட்ட எடுத்து வச்சிருக்கேன்’

‘வேட்டி கெட்டிக்கிட்டு போலாமா?’

‘ஆளெடுத்ததுமே அவனுக பேன்டும் சட்டையும் பூட்ஸும் குடுப்பானுக’

‘துவக்கு?’

‘அது உடனே குடுப்பானுகளா? ஒருவருசம் டிரெயினிங் முடியணும்லா? டேய் துவக்கு கிட்டினதும் நேராட்டு ஜெயபாரதிய போயிப் பாக்கணும்’

’என்னத்துக்கு?’

’சும்மா ஒரு சல்யூட்டு வச்சிட்டு வந்திரணும் கேட்டியா?’

‘என்னத்துக்குடே?’

‘டேய் நீ சல்யூட்டு அடிக்கத பாத்திருக்கியா? நல்லா விரைச்சு உறைச்சு நிக்கணும் அதுக்கு..அப்பிடி நிக்கிறவனாக்கும் ஆம்புள ..’

நள்ளிரவில் அம்மா ‘டேய் வாறியா இல்லியா? ‘ என்றாள்

‘டேய் வாறேன்’ என்றேன்

அவன் சட்டென்று என்னை ஆரத்தழுவிக்கொண்டான். வியர்வை நெடியும் உடல்வெம்மையும் என்னைச் சூழ்ந்தன

'நாம பாக்க மாட்டம்டே இனிமே'

'நீ லீவிலே வருவேல்ல?'

'வருவேன்…ராத்திரியிலே சத்தம் காட்டாம வந்து உனக்க வீட்டுக்கு பக்கத்திலே தென்னை மரத்துக்குமேலே கேறி இருந்து உன்னை விளிப்பேன்…கூ கூ ஜெயா கூண்ணுட்டு…எறங்கி வந்திரப்பிடாது'

'ஏன்?'

'வந்தா உன்னையும் கூட்டிட்டு போயிருவேன்'

'டேய் ஜெயா வாறியா இல்லியா?'

அவன் கையை பற்றி 'பாப்பம்டே' என்று சொல்லிவிட்டு திரும்பிச்சென்றேன்.

அவன் சட்டென்று என் பின்னால் வந்து என்னை மீண்டும் கட்டிப்பிடித்தான். 'என்னடே?' என்றேன்

'ஒண்ணுமில்லடே…நீ என்னை மறக்கப்பிடாது'

'இல்ல'

நான் படுத்து ஒருமணிநேரமாகியிருக்கும். நாராயணன் போற்றி வந்து எங்கள் வீட்டுமுன் நின்று கூச்சலிட்டார். 'ஜெயா…தங்கப்பா ஜெயா…டேய் ஜெயா'

விளக்கைப்பொருத்தி கதவைத் திறந்தால் வெளியே தென்னைஓலைப் பந்தம் எரிய போற்றி நின்றிருந்தார்

'டேய் ஜெயா ஓடிவாடா…ராதாகிருஷ்ணன் என்னத்தையோ குடிச்சுட்டு விளுந்துகிடக்கான்…'

நான் உடனே நினைத்தது அவன் மிலிட்டரி ரம்மைக் குடித்துவிட்டிருப்பான் என்றுதான். அவனுக்கு அது தீராத கனவு. 'நம்ம கள்ளு கொடம் தங்கம் மாதிரி. ரம்மு ஜெயபாரதி மாதிரியாக்கும்'

வைக்கோல்போருக்கு அருகே அவன் விழுந்துகிடந்தான். அவன் மாமனும் தங்கையனும் அவனைத் தூக்கி மல்லாக்க வைத்திருந்தனர். சுற்றி நின்ற வீட்டுப்பெண்கள் கதறிக்கொண்டிருந்தனர். விளக்கொளியில் விசித்திரமான அசைவுகளின் நிழல்கள் தென்னையோலைகளின் அடிப்பக்கத்தில் அலையடித்தன

நான் சிரித்துக்கொண்டே சென்று 'எங்கே அவன்?' என்றேன். அக்கணமே என் சிந்தனைகள் உறைந்தன. அவன் எரியும் டயர் போல நெளிந்துகொண்டிருந்தான். வெந்த ரப்பர் போல விசித்திரமான வீச்சம் அங்கே நிறைந்திருந்தது.

'இவன் எங்க இருந்து ரப்பர்ஆசிட்ட எடுத்தான்?' என்றார் லாந்தருடன் வந்த நேசமணிப்பெருவட்டர்

'சாயங்காலம் தாமஸுக்க கடையில போயி வேங்கியிருக்கான்'

'பேசிட்டு நிக்காம ஒரு வண்டிய கெட்டுங்க…பயல ஆஸ்பத்திரியில எடுப்போம்'

இனி என்னத்துக்கு எடுக்க? கரளுல்லா பிய்ஞ்சு வருது'

'செலப்பம் கெடப்பான்வே நம்ம பாலாமணிக்க மொவ பிளைச்சள்ளா?'

'அவ ரப்பரு ஒறகுத்த வச்சிருந்த வெள்ளம் சேத்த ஆசிட்டுல்லா குடிச்சா? இது தீ மாதிரி எரிப்பனாக்குமே'

'வண்டிகெட்டிபோனா நடக்குமா? டாக்ஸி பிடியுங்க'

'அதுக்கிப்பம் காறுக்கு எங்க போவ?'

'செல்வினுக்க முன்னால நிப்பான். விளிச்சு சொன்னா விடுவான்…போஸ்டாபீஸிலே போணு இருக்குல்லா?'

அக்கணமே திரும்பி ஓடினேன். இருட்டில் தவளைகளை மிதித்தபடி கூழாங்கற்களை சிதறடித்துக்கொண்டு ஓடி போஸ்டாபீஸ் அய்யரின் தோட்டத்துக்குள் நுழைந்து கதவை வெறியுடன் தட்டினேன்

'என்னடே?' என்றார். மின்விளக்கில் என் கண்கள் கூசின. மூச்சு வாங்கியது

'ராதா..ஆசிடடிச்சுப்போட்டான்..ராதா'

'ஆரு..மாதவிக்க மோளா?'

'ராதாகிருஷ்ணன்..'

'அய்யோ நல்லோரு பயல்லா? தாயும் தந்தையுமில்லா பிள்ள'

'போனு செய்யணும்'

'அதிப்பம் போஸ்டாபீஸ–'

'போன் செய்யணும்' என்று கூச்சலிட்டேன்

அவர் திகைத்தபின் உள்ளே சென்று ஒரு தடியையும் டார்ச் விளக்கையும் எடுத்துக்கொண்டு வந்தார். துண்டை தலையில் கட்டிக்கொண்டார். 'எளம்பனியாக்கும். சளிபிடிச்சாக்க ஒருமாசம் கெடத்திப்போடும்'

இருளில் தடுமாறி விளக்கை அடித்து கூர்ந்து நோக்கி கால்வைத்து நடந்தார்.

'சர்க்கார் பணம் வச்சிருக்கப்பட்ட எடம்..சட்டப்படி தப்பு..பின்ன நம்ம மனசு கேக்கல்ல' போஸ்டாபீஸை திறந்தார். விளக்கைப்போட்டு போனை எடுத்து காதில் வைத்துக்கொண்டு காத்திருந்தார். 'எடுக்க மாட்டானுக..எக்ஸேஞ்சில அவனுக உறங்குத நேரம்..அலோ..ஆமா..அர்ஜெண்டு..செல்வின் ஆசுபத்திரி..ஆமா..'

மீண்டும் காத்திருப்பு. ஒரு நிமிடத்தில் வாழ்க்கை அலையடித்து அலையடித்து அலையடித்து— 'அலோ'

மறுபக்கம் நர்சின் குரல்

'ஆமா..அர்ஜெண்டு..ஆசிட்டு அடிச்சுபோட்டான்..ஒரு பய..இங்க திருவரம்பு போஸ்டாபீஸுக்க முன்னால நிக்கம்..'

இருபது நிமிடங்களில் உலகம் உருகி வழிந்து திரவமாகி அர்த்தமற்ற சொற்களாகி அமைதியின் இருளாகிவிட்டிருந்தது. இருளுக்குள் இருந்து ஒளிச்சட்டங்கள் பீரிட்டு வந்து கட்டிடச்சுவர்களை வருடிச் சென்றன. விளக்குக்கம்பத்தின் நிழல் சுழன்று சென்றது. இரு ஒளிக்கண்கள் விழித்து வந்த டாக்ஸி மெல்ல வேகம் குறைந்து விழியணைந்தது

'ஆராக்கும் வே விளிச்சது?''

'நாஙகதான்'

'கேறுங்க'

ஒளியில் கூழாங்கற்கள் பரவிய சாலை மின்னி பின்னால் சுருண்டது. மரங்கள் இலையடிப்பரப்புகள் ஒளிவிட்டுச் சுழன்று பின்நகர்ந்தன
'இதாக்கும் எடம்'

'காறுவந்தாச்சு..பயல தூக்குங்க..'

இறங்கி ஓடினேன். ராதாகிருஷ்ணனைப் பிடித்துத் தூக்கினார்கள். அவன் முறுக்கி நெளிந்து அதிர்ந்துகொண்டிருந்தான். மனித உடலைப்பற்றிய ஒரு புரிதல் நம் கைகளில் உள்ளது. அதை மீறும் மனித உடலை நம்மால் கையாள முடிவதில்லை. துள்ளும் கைக்குழந்தையைக்கூட. அவன் உடல் கைகளை விட்டு நழுவியது

'டேய் பிடிடா'

காருக்குள் அவனை நானும் நேசமணிப்பெருவட்டரும் மடியில் போட்டுக்கொண்டோம். அவன் மாமன் முன்னால் ஏறிக்கொண்டார். அவர் அழுதபடி ' எறும்புக்கண்ணனுக்க கிட்ட அஞ்சுவட்டிக்கு பணமெடுத்து வச்சிட்டுல்லா வந்து படுத்தேன்..நாசமாப்போற பாவி.. இப்பிடிச்செஞ்சுப்போட்டானே..எனக்க மகாதேவா..வந்து நிப்பாளே..அந்த பத்ரகாளிக்கு என்ன பதில் சொல்லுவேன்..'என்றார்

'சும்மா இருக்கணும் பிள்ள அனத்தாம' என்றார் பெருவட்டர்

ராதாகிருஷ்ணன் என் மடியில் கிடந்து நெளிந்து வளைந்துகொண்டிருந்தான். அது அவன் உடலென்றே நம்ப முடியவில்லை. அவன் வாய் வீங்கி உப்பி மூடியிருந்தது. வாய்க்குள் எதையோ நிறைத்துக்கொண்டதுபோல. கழுத்து இறுக்கப்பட்ட கன்றுக்குட்டிபோல, சுழலும் செக்குக்குள் பாத்திரம் விழுந்து அரைபடுவதுபோல விசித்திர ஒலியுடன் மூச்சு பீரிட்டது. அப்போது திப்பிதிப்பியாக ஏதோ தெறித்தது. அமிலத்தில் வெந்த சதை. அது பட்ட என் கைகளும் சட்டையற்ற மார்பும் எரிந்தன.

'டேய் ராதா-டேய்-' என்றார் பெருவட்டர்

'ம்ம்-ம்ம்' என்றான். அவன் கேட்கிறான் என்பதுதான் அந்த உடலுக்குள் அவன் இருக்கிறான் என்பதைக் காட்டியது.

நாகக்கோடு தாண்டுவதற்குள் ராதாகிருஷ்ணன் மெல்ல அடங்க ஆரம்பித்திருந்தான். பற்றியிருந்த அவன் கையில் விரல்கள் அசைவிழந்து விரிந்தன. ஒரு கால் மட்டும் மின்சாரம் பட்டதுபோல இழுத்து இழுத்து அசைந்தது

செல்வின் ஆஸ்பத்திரிக்கு முன்னால் சென்றதுமே ஸ்டிரெச்சர் கொண்டுவந்து அவனைத் தூக்கி அதில் போட்டார்கள். அவனை வெள்ளையாடை அணிந்த கரிய மனிதர்கள் இருவர் எந்த விதமான உணர்ச்சியும் இல்லாமல் திறமையாக அள்ளி உருட்டி அதில் ஏற்றி இலகுவாக தூக்கிக்கொண்டு சென்றனர். செல்லும்வழியிலேயே ஒருவர் என்னிடம் 'படிக்கானா பய?' என்றார்

நான் பதில் சொல்லவில்லை. என் மனம் வேறெங்கோ அர்த்தமற்ற சொற்பெருக்காக ஓடிக்கொண்டிருந்தது. என் உடம்பெங்கும் தவிட்டுநிறத்தில் அமிலச்சதைத்திப்பிகள். முகம் நெஞ்சு தொடை எல்லாம் எரிந்தன

அவனை மார்பளவு உயரமான ஒரு தகரக்கட்டிலில் படுக்கசெய்தனர். அவன் கை கீழே சரிந்து தொங்கி ஆடியது. அதை மெலிந்த கழுத்துள்ள ஒல்லியான நர்ஸ் எடுத்து அவன் மார்பின் மீது வைத்தாள்.

'டாக்டர் கிட்ட சொல்லியாச்சா குட்டி?' என்றார் பெருவட்டர்

'வாறாவ-அப்பமே சொல்லியாச்சு'

வெளியே பெஞ்சில் ராதாகிருஷ்ணனின் மாமன் படுத்துவிட்டார்.

ஒரு தொடர்பும் இல்லாமல் To be or not to be என்ற சொற்கள் நினைவுக்கு வந்தன. பேச்சிப்பாறை அணை துல்லியமான ஞாபகத்தில் இருந்து எழுந்து வந்தது. மெல்லிய மழையில் செடிகள் நனைகின்றன. ஏன் இந்நேரத்தில் பேச்சிப்பாறை நினைவுக்கு வருகிறது என இன்னொரு மூலையில் நானே வியந்து பார்த்துக்கொண்டிருந்தேன்

டாக்டர் செல்வின் சட்டைக்கையை சுருட்டிவிட்டபடி வந்தார். 'ஆராக்கும் பையனுக்க ஆளுக?'

'நானாக்கும்-எனக்க பேரு நேசமணி-பஞ்சாயத்து மெம்பராக்கும்'

'போலீசுகேசாக்கும் வே

'அது பாத்துக்கிடலாம். எங்க தோளருக்கு ஆளு அனுப்பியிருக்கு-நீங்க இப்பம் பயல ரெட்சிக்க முடியுமாண்ணு பாருங்க'

செல்வின் உள்ளே சென்றார். பார்த்ததுமே தயங்கினார். அவன் கையைப்பிடித்து நாடி பார்த்தார். நெஞ்சில் கையை வைத்தார். பிறகு திரும்பி 'வே-பையன் அப்பமே செத்துட்டானே' என்றார்

'நல்லாப்பாக்கணும்'

'இதில என்னவே பாக்க? சூடு அடங்கிட்டிருக்கு-போயி பதினஞ்சு நிமிசமிருக்கும்'

சன்னல்கம்பிகள் வழியாக உள்ளே பார்த்துக்கொண்டிருந்தேன். எனக்கு அவர்கள் பேசிய சொற்கள் கேட்டன. ஆனால் அதற்கும் என் மனதுக்கும் தொடர்பில்லை. ராதாகிருஷ்ணன் உடனே எழுந்துவிடுவான் என எதிர்பார்த்துக்கொண்டு நின்றேன்

செல்வின் பெருவட்டருடன் பேசியபடி வெளியே சென்றார். நர்ஸ் அவருடன் செல்ல ராதாகிருஷ்ணன் தனியாக கட்டிலில் அசைவில்லாமல் கிடந்தான். ஸ்டிரெச்சர் தூக்கிய கரிய மனிதர் வந்து கையில் இருந்த வெண்ணிறமான பெரிய போர்வையை அவன் மேல் விரித்து முகத்தையும் உடலையும் முழுமையாக மூடினார்

அவன் மறைந்த கணத்தில் எல்லாவற்றையும் என் சிந்தை புரிந்துகொண்டது. என் உடம்பு நடுநடுங்கி சரியப்போக இரு கைகளாலும் கம்பிகளை இறுகப்பிடித்துக்கொண்டேன். அவனுடைய உடலின் நடுவே ஆண்குறி விரைத்து எழுந்து

நிற்க அதன்மேல் வெண்போர்வை கூடாரமாக பரவியிருந்தது

நான் ஓசையே இல்லாமல் இறங்கி இருண்ட சாலையில் இறங்கி ஊரை நோக்கி ஓட ஆரம்பித்தேன்.

---

## புறப்பாடு II – 2 எள்

மூடிய அறைக்குள் மண்ணெண்ணை விளக்கு எரிந்துகொண்டிருந்தது. பழையபாணி விளக்கு. பித்தளையாலானது. ஒயின்கோப்பை போன்ற ஒற்றைக் காலுக்கு மேலே சங்குபோன்ற எண்ணைக்குடுவை. மேலே ஒரு திரி. அதில் கருநிறக்கூந்தல் விரித்து நின்றாடும் செந்நிற யட்சிபோல சுடர். பகல்முழுக்க அந்த கரும்புகை வெளியேறிக்கொண்டே இருந்தது. இருட்டு கெட்டியாகி ஒரு சரடாக ஆனதுபோல. அந்தச்சரடு மேலே மச்சின் மரக்கூரைப் பரப்பில் படிந்து விழுதுகளாக மாறித் தொங்கியது. இருட்டைக் கடைந்து எடுத்த வெண்ணை

தீயில் இருந்து அவ்வளவு இருட்டு வெளியேற முடியுமா? அத்தனை இருட்டையும் வெளியேற்றித்தான் அது ஒளிவிடுகிறதா? நான் எழுதுவதை நிறுத்தி மேலே பார்த்தேன். தேனடை போல தொங்கியது கரி. அறைக்குள் எல்லா கதவுகளையும் மூடி சன்னல்களை இறுக்கியடைத்து தன்னந்தனிமையில் அமர்ந்து எழுத ஆரம்பித்து ஒருமாதத்துக்கும் மேலாகிறது.

வெளியே பகல் எரிந்து அணைந்தது. இரவு குளிர்ந்து சொட்டி அடங்கியது. விடியற்காலையில் அம்மா வந்து கதவைத்தட்டும்போது அஞ்சிநடுங்கி எழுந்து அறைச்சுவரை ஒட்டியபடி நிற்பேன்.

'என்னடா? டேய் ? என்ன செய்யுது உனக்கு?'

'ஒண்ணுமில்லை' என் உதடுகள் எந்நேரமும் உலர்ந்து ஒட்டியிருந்தன. எச்சிலை விழுங்க மூச்சைக்கொடுத்து உந்தவேண்டியிருந்தது. உடம்பு உச்ச அழுத்த நீர் ஓடும் ரப்பர்குழாய்போல எந்நேரமும் அதிர்ந்தது. கைவிரல்கள் நடுங்கின. உதடு நடுங்கியது. மூச்சு நடுங்கியது. சொற்கள் நடுங்கின. எண்ணங்கள் நடுங்கிக்கொண்டிருந்தன

அம்மா எனக்குத் துணைவருவாள். தோட்டத்தில் கட்டப்பட்ட ஓலைப்புரைக்குள் நான் மலம் கழிக்கும்போது ஓலைக்குமேல் அவள் தலை தெரிந்துகொண்டிருக்கவேண்டும். கொல்லைப்பக்கத்தில் பல்தேய்க்கும்போது அவள் அருகே இருக்கவேண்டும். ஓடிப்போய் அறையைச் சாத்திக்கொள்வேன். கதவுகளின் இடுக்குவழியாக பகலின் ஒளி உள்ளே நுழையும் பழைய சாக்குகளை விரித்து அதை மூடுவேன். சன்னலிடுக்குகளில் காகிதங்களை வைத்து அடைப்பேன். அத்தனைக்குப்பின்னும் நான் வெட்டவெளியில் நிர்வாணமாக நின்றிருப்பதான உணர்வு என் உடலில் எஞ்சியிருந்தது.

முதல் ஒருவாரம் தாண்டியதும் அம்மா கவலைப்பட ஆரம்பித்தாள். அக்கரையில் இருந்து வைத்தியரான பெரியப்பா வந்து என்னை பார்த்தார். 'வெயிலுபடாத கல்லுத்தேரை மாதிரியில்லா இருக்கான். டே,உனக்கு என்ன செய்யுது?'

நான் அவரை வெறுமே பார்த்தேன். அவரது தலைக்குப்பின்னால் சுவர் திரைபோல நெளிந்தது.

'உறக்கம் உண்டா?'என்றார் பெரியப்பா அம்மாவிடம்

'உறங்குதான்..ஆனால் அதுக்கொரு சிட்டை இல்லை. பகலிலே கிடந்து உறங்குதான். ராத்திரி நேரமெல்லாம் வௌக்கும் வச்சு முழிச்சு இருக்கான்..'

'சாப்பாடு?'

'ருசியில்ல..கொண்டுவச்சா திம்பான்'

'நரம்புதீனமாக்கும். ஆலிலைமாதிரி நாடிகள் நடுங்கிட்டிருக்கு. ஜீவசக்தி காத்தில தீபம் மாதிரி படபடக்குது..'

'அய்யோ'

'பயமில்லை. எளம்பிள்ளையில்லா.. நல்ல நஸ்யமும் தைலமும் எழுதித்தாறேன். போட்டுக்குடு..உக்ர மனக்ஷோபம் இருக்கு..'

'அந்தப்பாவிப்பெய அவனும் செத்து இவனையும் கொண்டுட்டுப்போறதுக்கு நிக்கானே' என்றாள் தங்கம்மா பின்னால் நின்று
'ஏட்டி நீ உன் சோலியப்பாரு..ஆமா, கொண்டு போறான்..குடுக்காஹ' அம்மா சீறினாள்

தைலம் பச்சை நிறத்தில் மயில்துத்தம் வெந்த வாசனையுடன் இருந்தது. அதை அம்மா தலையில் பொத்தி அரக்கித்தேய்ப்பாள். நஸ்யம் குருமிளகு பொடித்ததுபோல. அதை மூக்கில் வைத்து 'இழுடா' என்பாள்.
அதை இழுத்ததும் சில கணங்கள் மூக்கிலும் தலையிலும் உள்ள எல்லா தசைகளும் திகைத்து நிற்கும். அதன்பின் ஓர் உலுக்கல். தும்மல்கள் கைத்துப்பாக்கி வெடிப்பதுபோல வந்தபடியே இருக்கும். அரைமணிநேரம் கழித்து மூக்குவழி

துல்லியமாக திறந்திருப்பதை உணரலாம். மூச்சை இழுக்க இழுக்க நுரையீரல் சுகமாக நிறையும்.

அம்மா என்னை கொல்லைப்பக்கம் அமரச்செய்து இளம்வெந்நீரை அள்ளி அள்ளி விட்டு குளிப்பாட்டுவாள். உடம்புக்கு பயறுப்பொடி. மஞ்சளும் சந்தனமும் சேர்த்து அரைத்தது. தலைக்கு சிகைக்காய். குளித்து தலைதுவட்டியதுமே தூக்கம் வந்து சொக்கும். வாய் குளற ஆரம்பிக்குமளவுக்கு தூக்கம்.

'சாப்பிட்டுட்டுப்படு-சாப்பிடாம படுக்கக்கிடாது-இந்தா ஒரு நிமிஷம்'

நெய் விட்டு பிசைந்த சோறு. அதில் தேய்ங்காய் சுட்டு அரைத்த மணமுள்ள குழம்பு. சாப்பிட ஆரம்பித்தால் அதை நிறுத்துவதில்லை. சோறு சென்றபடியே இருக்கும். சாப்பிட்டுக்கொண்டிருக்கும் என்னில் நான் இருப்பதில்லை

'போரும் மக்கா-போயிப் படு'

சென்று படுப்பேன். கட்டில் விரிந்து மெத்தென்று என்னை கைநீட்டி அழைப்பதுபோலத் தோன்றும். உடலை இதமாக பரப்பி மச்சைப்பார்த்துக் கிடக்கும்போது கீழே மென்மையாக இளம்சூடாக திரவம்போல தூக்கம், அப்படியே தூக்கத்தில் விழுந்து விழுந்து சென்றபடியே இருப்பேன்.

சட்டென்று ஒரு குரல் 'டேய் எனக்குச் சோறு?'

'எதுக்குடா தென்னைமரத்திலே கேறி இருக்கே?''

'கீழே வரமுடியாதுல்லா?'

'அங்க எப்டிடே இருக்கே?'

'டேய் எனக்கு பசிக்குது-சோறு எங்கடா?'

சோறு. எவ்வளவு சோறு. மலைமலையாக. வெண்மணல் குவியலாக. உருட்டி உருட்டி உண்கிறான். சோறு அவன் வழியாக எங்கோ சென்றுகொண்டே இருக்கிறது. தட்டு காலியாகிவிட்டது. என்னை அவன் திரும்பிப்பார்த்தான். 'டேய் சோறு எங்கடா?'

'இப்பம் சோறுதானேடா தின்னே மயிரே?'

'சோறு கொண்டாடா-டேய் சோறு-சோறுடா-'

விழித்துக்கொண்டு உடல் அதிர இருட்டுக்குள் கிடப்பேன். சட்டென்று பாய்ந்தெழுந்து விளக்கை ஏற்றுவேன். அறைக்குள் ஏதாவது இடுக்கு திறந்திருக்கிறதா என்று பார்ப்பேன். இல்லை. கருக்குழி போன்ற அறை.

மூச்சு வாங்கியபடி அமர்ந்திருப்பேன். அறைக்கு வெளியே ஓசையே இல்லாமல் ஒரு இருப்பை உணரமுடியும். சுவர் ஒரு மெல்லிய தோல்படலம். அதற்கப்பால் நிற்கிறான். விரலால் அழுத்தித் தொட்டால் அந்தப்பக்கம் அவன் உடலில் அது படக்கூடும்

மெல்லிய ஒலி. மரத்தில் இருந்து சுள்ளி விழுந்திருக்கலாம். என் உடல் காற்று பட்ட சுடர்போல அலைபாய்ந்து துடித்து மெல்ல சமநிலை கொள்கிறது.

பின்னர் எழுத ஆரம்பித்தேன். விஜியின் பழைய நோட்டுப்புத்தகம் மேஜைக்குள் இருந்தது. பேனாவை தேடி எடுத்து எழுதினேன். சோறு. சோற்றின் மலைகள். சோற்றாலான வீடுகள். சோறு ஒழுகும் ஓடைகள். 'டேய் சோறுடா-பசிக்குதுடா மயிரே'

ராதாகிருஷ்ணனுக்கு அவ்வளவு பசி இருந்திருக்கிறது என்று அதுவரை நான் அறிந்திருக்கவில்லை. எந்நேரமும் எதையாவது தின்னும் வேகத்துடன் இருப்பான். 'டேய், மேலயட்சி கோயிலிலே ஆலும்வீட்டு வழிபாடு. இப்பம்தான் கொதும்பும் அரிசியும் போயிருக்கு-' என்று அப்பக்கமாக புல்பறிக்கச் செல்வான். கரடி எஸ்டேட்டில் நுழைந்து கொஞ்சம் ஒட்டுகறை ரப்பரை பொறுக்கி புல்லுடன் போட்டுக்கொண்டு வந்து அணைஞ்சபெருமாள் கடையில் போட்டு இரண்டு வடையும் டீயும் சாப்பிடுவான்.

காட்டுக்குள் சென்றால் அவன் கண்ணுக்கு தீனியாகவே தென்படும். 'கொக்குமுட்டை நல்லதாக்கும் கேட்டியா? சின்னதா இருந்தாலும் திங்கலாம்' அன்னாசிச்செடியின் ஓலையின் அடியில் உள்ள வெண்குருத்தை பிடுங்கி கடித்துத் தின்பான். விடலிப்பனையின் ஓலைக்குருத்தை மென்று சக்கையைத் துப்புவான். உதிர்ந்து கிடக்கும் பனம்பழங்களை சருகு கூட்டி சுட்டுத்தின்பான். குளத்தில் மீனைப்பிடித்து சேற்றால் பொதிந்து சுட்டு சேற்றை உதிர்த்துவிட்டு தின்று வாயிலிருந்து முள்ளை உருவுவான். கெணிக்கோல் வைத்து கொக்கையும் கௌதாரியையும் பிடித்து இறகுகளைப் பிய்த்துவிட்டு சுள்ளிகூட்டி சுட்டு தின்பான்.

அம்மாவுக்குத்தெரியும். அவன் வந்ததுமே ‘டேய், பளஞ்சி இருக்கு குடிக்கியா?’

‘வேண்டாம் மாமி-இந்நா இப்பம்தான் கஞ்சி குடிச்சேன்’

‘டேய் குடிடே’

பேசாமல் அமர்ந்து சாப்பிட ஆரம்பிப்பான். கும்பா நிறைய பழையது. தொட்டுக்கொள்ள வெறும் மாங்காய் ஊறுகாய். சாப்பிட்டு எழுந்ததும் அவனே வேலை எதையாவது ஆரம்பிப்பான்.’மாமி பெரிய எருமைக்கு கழுத்துக்கயிறு மாத்தணும்லா?’
இரவில் பெருவட்டர்களின் தென்னந்தோப்புகளில் ஏறுவோம். தேங்காயை செங்குத்தாக பாறையில் அறைந்தால் பிளந்து வழிவிடும். உரித்து உடைத்து தின்பான். இரண்டு தேங்காய்களைக்கூட அவனால் தின்ன முடியும். மட்டையை கவனமாக ஆற்றில் ஒழுக்கி விட்டுவிடவேண்டும். காலையிலேயே பெருவட்டரின் தோப்புக்குச் சென்று புல்பறிக்கவும் வேண்டும். கால்தடங்கள் கிடப்பதை நியாயப்படுத்த.

வீட்டுக்கு வந்து கதவைத்தட்டியபோது கையில் சிமினியுடன் அம்மாதான் திறந்தாள். ‘டேய் என்னடா?’
உள்ளே சென்று குப்புற கட்டிலில் விழுந்தேன். உலகம் ரீ என்ற ஒலியுடன் என்னைச்சுற்றிச் சுழன்றது. பிரம்மாண்டமான இசைத்தட்டு போல சுழலும் இரவின் மையத்தில் கிடந்தேன்.

’என்னடா? டேய்-என்ன ஆச்சு அவனுக்கு?’

விக்கினேன். ஒன்றும் சொல்ல முடியவில்லை.

அதற்குள் கார் திரும்பி வந்த ஒளி எங்கள் வீட்டையும் வருடிச்சென்றது. கதறல்கள் எழுந்தன. பந்தங்களுடன் ஆட்கள் ஓடிச்சென்றார்கள்.

விழித்துக்கிடந்தேன். நிழல்கள் தலைகீழாக என் மச்சின் மீது ஆடிக்கொண்டிருந்தன. விதவிதமான நிழல்கள்.
வீட்டில் யாருமே இல்லை. ஊரே அங்கே சென்று கூடியிருந்தது. இரவின் ஓசைகள் எல்லாம் அடங்கி ஊரையே ஆழமான நீருக்குள் மூழ்கடித்து வைத்தது போன்ற அமைதி. அழுந்திமயங்கிய ஓசைகள், குரல்கள் எங்கோ கேட்டன. சிறுநீர் கழிப்பதற்காக எழுந்தேன். தலைசுழன்று குமட்டிக்கொண்டு வந்தது. சுவரைப்பிடித்துக்கொண்டு ஒரு கணம் நின்றேன். கண்களைமூடியபோது நின்ற நிலம் பறப்பதை உணர்ந்தேன்.

பின்பு வெளியே சென்று மாமரத்தடியில் மரத்தடியைப்பிடித்துக்கொண்டு நின்றேன். தென்னைமரம் காற்றில் ஓலைகளை வீசியது. மெல்லிய கிசுகிசுப்பு ‘டேய் ஜெயா-டேய்’ நான் தலைதூக்கவில்லை .’டேய்-டேய்’

உடல் குளிர்ந்து சிலிர்த்தது. மறுகணம் அந்த மரமே என் மேல் விழும் என சருமம் உணர்ந்தது போல. ஆனால் நிமிரவில்லை. ‘டேய் பசிக்குதுடா’

ஓடிச்சென்று கதவைமூடிக்கொண்டேன். சன்னல்களை மூடினேன். இடுக்குகளை விரிசல்களை மூடினேன். கட்டிலில் போர்த்திக்கொண்டு படுத்தேன். கதவின் சிறிய துளை வழியாக வெளியே இருந்து ஒளிவந்து எதிர்ச்சுவரில் விழுந்தது. தலைகீழாக ஒரு தென்னை மரம். ஓலைகளை வேர்களாக பரப்பி மொட்டை நுனியுடன் நின்றது அது. இல்லை, அது வேறு. ஓலைகள் அல்ல ரோமவட்டம்.

மாலையில் அம்மா வந்து கதவைத்திறந்து எட்டிப்பார்த்தாள்.

‘செதையேத்துறதுக்கு முன்னால கொச்சன் ஒண்ணு காணுகது நல்லதுல்லா?’

‘அவன் கண்டது போரும்-நீ போடி’

சிதையின் சாம்பல் வாசனை. ஆற்றுக்கரையில்தான் குழி எடுத்திருப்பார்கள். எட்டடி நீளம் மூன்றடி அகலம் ஆறடி ஆழம் கொண்ட குழி. அதுதான் கணக்கு. கீழிருந்தே நெருக்கமாக தேங்காய்நார்மட்டைகளை அடுக்குவார்கள். அதன்மேல் ஒரே ஒரு அடுக்கு மட்டும் நல்ல கறையுள்ள மாமர விறகு. அதன்மேல் வைக்கோல் பரப்பிய மென்படுக்கை. அவர்களின் தோட்டம் ஆற்றில் இறங்குமிடம் எங்கள் வீட்டுக்கு தெற்கேதான்.

நள்ளிரவில் கொண்டு வைத்திருப்பார்கள். மெல்லிய வைக்கோல் படுக்கைமீது.மெதுவாக சரித்துப்பரப்பி மேலே தென்னைஓலைச்சருகும் வைக்கோலும் கலந்து மூடுவார்கள். இரவின் குளிருக்கு இதமாகத்தான் இருக்கும். அதன் மீது மண்ணைக்குழைத்து மூடி மூன்று சிறு துவாரங்கள் மட்டும் விட்டுவிடுவார்கள்.

‘எதுக்குடே மூணு துவாரம்?’

’தீய வைக்கிறதுக்கு ஒண்ணு-கேசு அம்மாவன் வாயால காத்துவிடுகதுக்கு ஒண்ணு-கீழ்வாயால காத்து விடுகதுக்கு

இன்னொண்ணு-மாமா கீழ ஓட்டை இன்னும் கொஞ்சம் பெரிசா இருக்கணும்லா?'

'ஏண்டே?' என்றார் வெடக்கு ராமன்

'கேசு அம்மாவன் நமக்கு நல்ல வேண்டப்பட்டவராக்கும்-கீழ் சுவாசம் கொஞ்சம் கனம்'

'ச்சீ-நாறி- உனக்கெல்லாம் சாவுண்ணா சிரிப்பாக்கும்-டேய் உன் தந்தையானை இதேமாதிரி கதம்பையும் தொண்டும் அடுக்கி ஏற்றி கெடத்தினவன் நானாக்கும்'

முதலில் தீக்கொழுந்துகள். தேங்காய்மட்டையில் தீ தொற்றிக்கொண்டதும் தீ அணைந்து கரும்புகை. வெம்மை ஏறியதும் பின்பு புகை இல்லை. செந்நிறக் கங்குகளினாலான படுக்கை. 'நல்ல சிவப்பு வீராளிப்பட்டு விரிச்சிட்ட கட்டிலு மாதிரியாக்கும் அம்மணி- ரோகமும் தீனமும் வலியும் துக்கமும் கவலையும் கண்ணீரும் எல்லாம் அப்படியே உருகி எரிஞ்சு வானத்துல கேறிரும்' என்றார் வெடக்கு ராமன். அவர்தான் ஊரின் மூத்த நாவிதர். 'ஆயிரம் துக்கம் வச்சாலும் மனுஷனுக்கு அந்த ஒரு யோகத்த ஆண்டவன் மிச்சம் வச்சிருக்கான்-என்ன நான் சொல்லுகது?'

சட்டென்று எழுந்து அமர்ந்தேன். கோரைக்காட்டு அம்முக்குட்டி தூக்கில் தொங்கி இறந்தபோது அவள் எரிய ஆரம்பிப்பது வரை நானும் கூடவே இருந்தேன். வெடக்கன் புதிய பனையோலை கடவத்தில் இருந்து பலவகையான பொருட்களை எடுத்துப்பரப்பினார். அவளைப்போர்த்துவதற்கான புதிய துணி. மலர்மாலைகள். புதிய கலத்தில் புதிய நெல். வெற்றிலை பாக்கு.

'டேய் அது என்னத்துக்கு?' என்றேன்

வெடக்கன் ஒரு மூன்றுகண் கொட்டாங்கச்சியை எடுத்து சிதையின் இடப்பக்கம் விரித்த வாழையிலையில் வைத்தார். மஞ்சள்பையை திறந்து அதிலிருந்து இருகைகளாலும் மூன்றுமுறை எள்ளை அள்ளி குவித்து வைத்தார். கரியபளபளப்புடன் திரவம்போல அவர் கையில் இருந்து வழிந்தது அது.

'வெடக்கண்ணா அது என்னத்துக்காக்கும்?'

'பிள்ளே, செத்தவ ஆயுசு தெகையாமல்லா போனா? மேலே போறதுக்கு குறே காலமாகும்லா? அது வரை இங்கதான் சுத்திச்சுத்தி வருவா பாத்துக்கிடுங்க- ஆன்மாவுக்கு நல்ல பசியிருக்கும்ணாக்கும் மூப்பிலான்மாரு சொல்லியிருக்கது-பசிச்சு தேடி செதையச் சுத்திச்சுத்தி வருவா- வாறப்ப இந்த எள்ளை பாப்பா. பசி தாங்காம இதை இந்த ஓட்டைச்சிரட்டையிலே வாரி எடுத்து தின்னப்பாப்பா- நயம் எள்ளுல்லா? ஓட்டையில ஓடி அம்பிடும் கீள போயிரும். சிரட்டை நிறையாது. நிறையாச்சிரட்டைய வாயில வைக்க அவளுக்கும் மனசு வராது. இங்கியே இருந்து ராப்பகலா மாசக்கணக்கா வருசக்கணக்கா சிரட்டைய நிறைக்கப்பாத்துக்கிட்டே இருப்பா-'

'மூத்த பேயிமாருகிட்ட கேட்டா வெரலு வச்சு ஓட்டைய அடைக்க சொல்லமாட்டாவளா?' என்றேன்

'சிரிப்பாக்கும் இல்லியா? எளம்புள்ளையளுக்கு சீவிதமும் மரணமும் எல்லாம் சிரிப்பாக்கும்-பிள்ளே. மனுஷ உடம்பு இந்தா இந்தமாதிரி ஓட்டையுள்ள சிரட்டையில்லா? பத்து எளுபது வருசம் நாம சோத்த வாரி இதிலேயில்லா போடுகோம்? ஒன்பது ஓட்டையுள்ள ஓடல்லோ உமையொரு பாகனே? நின்பதம் அணைகையில் இரந்திடும் ஓடல்லோ உமையொரு பாகனே?'

'டேய்-எதுக்குடா கரையுதே?'

'ம்ம் ம்ம்' என்று ராதாகிருஷ்ணன் விம்மினான். தலையில் கட்டிய துண்டை எடுத்து முகத்தைத் துடைத்துக்கொண்டான். 'பிள்ளே போகணும்-மயானத்திலே கண்ணீருக்கு இடமில்லை. சுடலைமாடனுக்கு கண்ணீரைக்கண்டா கலியிளகும்-போகணும்'

போகும் வழியில் 'டேய் எதுக்குடா?'

'அந்த எள்ளை அவ எம்பிடுநாள்டா அள்ளுவா? பாவம்தானே?'

'போடா மயிரே'

எழுந்து கதவை மெல்லத்திறந்து வெளியே சென்றேன். குளிர்த்துளிகள் மரங்களில் இருந்து மெல்லிய தாளத்துடன் சொட்டிக்கொண்டிருந்தன. இலையசைவுகள் இல்லாமல் மரங்கள் குளிரை குடித்துக்கொண்டு நின்றன. முற்றத்தில் ஒரு வேட்டியை விரித்ததுபோல இளம்பிறையின் வெளிச்சம்

தோட்டத்தில் இறங்கிச்சென்றேன். ஒற்றையடிப்பாதையில் விழுந்துகிடந்த சருகுகள் வெள்ளியாலானவை போலிருந்தன. மெல்லியஓடை போல சத்தமே இல்லாமல் ஒரு சாரை வழியைக் கடந்துசென்றது. ஆற்றின் நீராவியை உணர முடிந்தது. நீரின் மெல்லிய களகளம் கேட்டது. அதன்பின் நான் தென்னை ஓலைகளின் அடியில் நெருப்பின்

செம்மையைக் கண்டேன். பலாவின் இலைகளின் அடியில் தென்னைத்தடிகளின் மறுபக்கம் செம்மை மின்னிப்படர்ந்திருந்தது

சரிவில் இறங்கியபோது செந்நிறம் ஒளிக்குமிழியிட்டு மெல்ல வெடித்து ததும்பிக்கொண்டிருந்த நீள்சதுரத்தைப் பார்த்துவிட்டேன். அது ஒரு வாய்போலிருந்தது. அடக்கமாட்டாமல் சில விம்மல்கள். விசும்பல்கள். அதற்குள் அவன் இல்லை. நெருப்பு அவனை உள்ளே இழுத்து மூழ்கடித்துவிட்டிருந்தது.

அருகே சென்றேன். மெல்லிய காற்றோட்டம் அதனருகே இருந்தது. அந்தக்குழி ஒரு கண்ணாக மாறியது. காற்றசைவில் அது என் வருகையை உணர்ந்ததுபோல நெருப்பில் ஒரு சலனம். உடலைக்குளிரச்செய்த ஆற்றங்கரைக் காற்று. சீண்டப்பட்ட நாய்போல சிதைக்குழி மெல்லச் சீறியது.

அங்கே வாழையிலையில் கண்ணன்சிரட்டை கிடந்தது. அதனருகே எள்ளின் குவியல். பாதி அள்ளி மறுபக்கம் குவிக்கப்பட்டதுபோல தோன்றியது. இல்லை மூட்டைப்பூச்சிகள் போல எள் அதுவே திரண்டு கொட்டாங்கச்சித்துளை வழியாக மறுபக்கம் சென்றுகொண்டிருக்கிறதா? அவன் சற்றுமுன் எழுந்து விலகிவிட்டானா? அங்கே மரங்களின் மறைவில் நின்று என்னைப்பார்த்துக்கொண்டிருக்கிறானா?

என்னை பின்னாலேயே வந்து எடுத்துக்கொண்டு வந்து கிடத்திவிட்டார்கள். கண் விழித்ததும் திடுக்கிட்டு எழுந்து 'எள்ளு' என்றேன்.

'என்னடா?' என்றாள் அம்மா

'எள்ளு.நெறைய எள்ளு.ஆனைமலை மாதிரி எள்ளு'

'பேசாம படு'

வாய் கசக்க உடல் உதறிக்கொள்ள எழுந்தமர்ந்து எழுத ஆரம்பித்தேன். எழுதிக்குவித்த பக்களை கீழே அடுக்கி வைத்திருந்தேன். எழுத எழுத பொங்கி வந்துகொண்டே இருந்தது. எழுதியவை சிறு துளியாக எஞ்ச எழுதாதவை கடலாக அலையடித்தன. இன்னும் இன்னும் என அகத்தின் வேகம் உந்த கைகள் சோர்ந்து மேஜைமேல் தலைவைத்து படுத்துக்கொள்வேன். எவரோ தொட்டதுபோல சருமம் சிலிர்க்க திடுக்கிட்டு எழுந்து உடனே எழுத ஆரம்பிப்பேன். எரிந்து எரிந்து கரிவிட்டுக் கரிவிட்டு- எத்தனை இருட்டு.

அப்பா கதவைத்திறந்து உள்ளே வந்தார். 'டே இந்த நாயி உள்ள என்ன செய்யுதான்? இவன இங்க பழுக்கிறதுக்கு உறைபோட்டு வச்சிருக்கா? கதவைத்திறடா நாறி'

நான் எழுந்து சுவரோடு சாய்ந்து நின்று நடுநடுங்கினேன். சிறுநீர் வரும் உணர்வு வர கைகளால் வேட்டியைச் சேர்த்து பிடித்துக்கொண்டேன்.

அப்பா கதவுகளை தடால் படாரென்று திறந்தார் சன்னல்களை எல்லாம் திறந்து வைத்தார். எல்லா மதகுகளில் இருந்தும் ஒளி பீரிட்டு அறையை நிறைத்துச் சுழன்று மச்சில் முட்டியது. கண்களை மூடிக்கொண்டேன். இடுக்குகள் வழியாக கண்ணீர் கொட்டியது

'இனிமே இந்த வீட்டிலே கதவுகளை மூடி வச்சா வெட்டி பொலிபோட்டிருவேன்- நாடகமா ஆடுதே? நாயே?'

அப்பா சென்றபின்னும் கண்களைத் திறக்கமுடியவில்லை. இரண்டுமுறை திறந்து பார்த்தபோது கூச்சம் தாளாமல் கண்ணிமைகள் அதிர்ந்து மூடிக்கொண்டன. சுவரை நோக்கி திரும்பி நின்றுகொண்டேன். பின்னர் கண்களைத் திறந்து சுவரைப்பார்த்தேன்

திரும்பி வந்து மேஜைமுன் அமர்ந்தேன். கண்ணீர் உலர்ந்த கண்களும் கன்னங்களும் ஒட்டின. குமட்டல் இருந்துகொண்டே இருந்தாலும் உடலின் அதிர்வு குறைந்திருந்தது. என் முன் அடுக்கடுக்காகத் தாள்கள். நீலமையில் எழுதப்பட்டவை.
பேனாவை எடுத்து ஒருமுறை உதறிவிட்டு தாளில் வைத்ததுமே கை தானாக எழுத ஆரம்பித்தது. துணுக்குற்று நிறுத்திக்கொண்டேன். எழுதியதை வாசித்தேன். மிக நன்றாகத் தெரிந்த ஒரு வாசகம். மீண்டும் பேனாவை வைத்ததும் குழியானைப்பூச்சி மண்ணில் அரைவட்டம் போடுவதுபோல அதையே எழுதியது என் கை.

பரபரப்புடன் நான் எழுதிக்குவித்த தாள்களை எடுத்துப்பார்த்தேன். நூற்றுக்கணக்கான பக்கங்கள். எல்லாமே ஒரே சொற்றொடர். அச்சம் தாளாமல் நெஞ்சைப்பிடித்துக்கொண்டேன். நான் எழுதியவை தானா? அல்லது அறைக்குள் புகுந்து என் பின்னல் நின்று என் கைகளைப்பற்றி வேறு எவரேனும் எழுதுகிறார்களா?

பாய்ந்து அறையைவிட்டு வெளியே வந்தேன். வராந்தவில் ஓடி முற்றத்திற்குத் தாவினேன். வெளிறிய நிறத்தில் எரிந்துகொண்டிருந்தன வைக்கோல்போரும், தொழுவத்துக்கூரையும், செம்மண் முற்றமும். பாய்ந்து முற்றத்தைத் தாண்டி நின்றேன். பின்னர் மூச்சிரைக்க திரும்பிவந்து கொடியில் கிடந்த சட்டையை எடுத்துபோட்டுக்கொண்டேன். கோயில்

முற்றத்தில் இறங்கி கோயில் மதிலைச்சுற்றிக்கொண்டு மறுபக்கம் சென்றேன். குருவிக்காடு சாலைக்குச் செல்லும் மண்பாதையில் மூச்சிரைக்க நடந்தேன்

'ஏன் மலையாளத்துச்சாமி, அப்பிடி என்னவாக்கும் எளுதினிய?' என்றார் சாமிக்கண்ணுபாவா

கோயில்முன் நின்றிருந்தேன். உள்ளே கருவறைக்குள் ஒற்றைவிளக்கின் சுடர் எரிய அலங்காரமே இல்லாத வெற்று லிங்கம் கரிய மொழுமொழுப்புடன் பள்ளத்தில் அமர்ந்திருந்தது. அதன்மேல் கரிய குடுவை தொங்கியது. அதிலிருந்து மெல்லிய கண்ணாடிச்சரடு போல தைலதாரை லிங்கத்தின் தலைநடுவே தொட்டு ஓசையே இல்லாமல் வழிந்து பரவி இறங்கிக்கொண்டிருந்தது.

அர்ச்சகரோ கோயில்பணியாளர்களோ எவரும் இல்லை. மடைப்பள்ளியில் அரிசிவேகும் வாசனை. பரதேசிகளுக்கு அன்னம் கிடைக்க இன்னும் ஒருமணிநேரமாவது ஆகும்.

நான் பாவாவிடம் 'அது என்னவாக்கும் தைலம்?' என்றேன்

'நல்லெண்ணையும் தண்ணியும் கலந்து வைப்பாஹ..' பாவா சொன்னார். 'இந்த அய்யனைக்கேட்டா சாமியக் குளுரவைக்கிறேன்னு சொல்லுவான். அவன் என்ன கண்டான்? சோத்துப்பாப்பான்.திரிபுரமெரித்த கனலை அணைக்க இவனோட நல்லெண்ணைக்கு குளிருண்டா என்ன?'

'பின்ன?'

'சாமி இது மகாகாலமுல்லா? குறையாத குடுவையிலே இருந்து நிறையாத குடுவைக்கு சத்தமில்லாம போய்ட்டே இருக்கு.. லிங்கத்துக்கு அதுல்ல அபிஷேகம்? அவன் காலாதீத மகாகாலனல்லோ..'

நான் அந்த ஓசையற்ற வழிவை பிரமித்துப்பார்த்துக்கொண்டிருந்தேன்.

'சரி, கேட்டதுக்கு பதில் சொல்லுங்க சாமி..என்னவாக்கும் எளுதினிய? சித்தாந்தமா?'

'நல்லெண்ணைன்னா? எள்ளு அரைச்சு புழிஞ்சு எடுக்கிறதுல்ல?' என்றேன்

'ஆமா, பின்ன? சரிதான் நீங்க எப்ப கேட்டதுக்கு பதில் சொன்னிய? அய்யன் அங்கிண என்ன எளவெடுக்குறான்? சட்டுன்னு சாதத்த சட்டியில போட்டா சாமிக சோலியப்பாப்பம்ல?' என்றார் பாவா

'என்ன சோலி?'

'சிவசோலிதான், வேறென்ன?' என்றார் பாவா 'சிந்தையடக்கிச் சும்மா இருத்தலே சுகம் பராபரமே'

---

## புறப்பாடு II- 3-பாம்பணை

வட இந்தியாவில் ரயில்நிலையங்களை விட்டால் தூங்குவதற்கு இடமே இல்லை. அங்கே உள்ள கோயில்கள் சற்றுப்பெரிய டீக்கடை பாய்லர்கள் என்றுதான் எனக்குத்தோன்றும். உட்கார்ந்து கால்நீட்ட முடியும் என்றால் அங்கே ஒருவர் கடைபோட்டிருப்பார். சைக்கிள்ரிக்‌ஷாக்காரர்கள் அதன் பின்னிருக்கை முதல் கைப்பிடிக்கம்பி வரை ஒரு பலகையைப்போட்டு அதில் படுத்திருப்பார்கள். லாரிகளில் இருந்து பெற்ற பழைய தார்ப்பாயை வெட்டி சிறிய போர்வைகளாக ஆக்கி அதைக்கொண்டு போர்த்தியிருக்க வெளியே கடும் பனியும் மழையும் எல்லாம் கொட்டிக்கொண்டிருக்கும். அந்தச்சிறிய பலகைகளில் தூங்க அவர்களுக்கு தூக்கத்திற்குள்ளும் பெரும் சமநிலை தேவைப்பட்டிருக்கும்.

ரயில்நிலையங்கள் பிரம்மாண்டமானவை. மாதவராவ் சிந்தியா ரயில்வே அமைச்சராக இருந்தபோது வட இந்திய ரயில்நிலையங்களை எல்லாம் சலவைக்கல் போட்டு உருண்ட பெரிய தூண்களுடன் எடுத்துக்கட்டிவிட்டிருந்தார். பனியில் தெருக்களும் சுவர்களும் உலோகப்பரப்புகள் அனைத்தும் சில்லிட்டு விரைத்திருக்கையில் சலவைக்கல் தரை மெல்லிய வெதுவெதுப்புடன் இருப்பது ஓர் ஆச்சரியம். அதன் மேல் விரித்துக்கொள்ள ஏதும் தேவையில்லை. பையை தலைக்கு வைத்துக்கொண்டு கால்நீட்ட முடிந்தால்போதும். காலைநீட்டக்கூட வேண்டியதில்லை. அமரமுடிந்தாலே போதும், எப்படியோ சற்று காலை நீட்டிவிட முடியும்.

ஆனால் அதுவே கடினம். குவாலியரிலும் ஜான்சியிலும் ரயிலகம் எத்தனை பிரம்மாண்டமானதோ அதைவிட பெரியது அங்கே அந்தியுறங்க வரும் கிராமவாசிகளின் கூட்டம். பலவகையான மூட்டைமுடிச்சுகள். அந்த ஊர் மக்கள் பெட்டிகளை அனேகமாகப் பயன்படுத்துவதில்லை. அழுக்கால் வண்ணம் மங்கிய துணிகளை விரித்து பொருட்களை அதில் பரப்பி நான்குமூலைகளையும் பிடித்துச்சேர்த்துக் கட்டி அப்படியே தூக்கி தலையில் வைத்துக்கொள்வார்கள். அதற்குள் நாலைந்து நாட்களுக்குரிய உலர்ந்த சப்பாத்திகளும் தேவையென்றால் மீண்டும் சுட்டுக்கொள்வதற்கான கோதுமை மாவும் இருக்கும். அலுமினியச்சட்டிகள் சந்தைகளில் வாங்கப்பட்ட பொருட்கள்.. பெரும்பாலானவர்கள் உப்பு வாங்கி பாலிதீன் தாளில் சுற்றிக்கட்டியிருப்பார்கள். புகையிலைச்சுருள்கள், பிளாஸ்டிக் பாத்திரங்கள். புதியதுணிகளைக்கூட இறுக்கமாக முறுக்கி சுருட்டி பந்துகளாக ஆக்கியிருப்பார்கள்.

ஆரம்பத்தில் அது ஆச்சரியமாக இருந்தது. பின்பு தோன்றியது நம்மூரில் நாம் அனைத்தையும் சதுரங்களாக ஆக்குகிறோம். காரணம் நாம் வைத்திருக்கும் பெட்டி சதுரமானது. இவர்கள் அனைத்தையும் உருண்டையாக்குகிறார்கள். காரணம் இவர்களின் மூட்டை உருண்டையானது. பல இடங்களில் இவர்களின் வீடுகளே வட்டவடிவமானவை. கூம்புகள் போல. ஆமாம், அவர்கள் நீண்டு படுப்பதில்லை. சுருண்டுதான் படுக்கிறார்கள்.

எங்கும் அந்த மூட்டையை போடுவார்கள். எந்த இடத்திலும் தோளில் போட்டிருக்கும் கம்பிளியை விரித்து படுத்துக்கொள்வார்கள். கம்பிளிகள் அவற்றின் கருமையை இழந்து அவர்களின் ஒட்டகங்கள் , கழுதைகளின் செஞ்சாம்பல்நிறத்தை அடைந்திருக்கும். ஆனால் அதுவும் சந்துசந்தாக ஆறு ஓடும் நிலத்தைச்சேர்ந்த என்னுடைய தயக்கமாக இருக்கலாம். இந்த வரண்ட நிலங்கள் முழுக்கவே புழுதிக்கடல். புழுதியலைகளுக்குள் புழுதியாலான வீடுகளில் இவர்கள் வாழ்கிறார்கள். புழுதியில்லாமல் இருந்த கணமே வாழ்க்கையில் இருந்திருக்காது. சப்பாத்தியில் கூட புழுதி கலந்திருக்கும். அவர்கள் புழுதியை ஏன் தவிர்க்கவேண்டும்?

ஆனால் அவர்கள் நடுவே படுப்பது சற்றுச் சிரமமானது. பாலைநில மக்கள். குளிரை அறிந்தவர்கள். அவர்கள் சிறிய காட்டுயிர்கள்போல கொத்துக்கொத்தாகவே வாழ்கிறார்கள். அவர்களைத் தனியாகப்பார்க்கவே முடியாது. ஒருவரோடு ஒருவர் சண்டையிட்டுக்கொள்வார்கள். மாறிமாறி கைவீசி வசைபாடுவார்கள். ஆனால் எழுந்து விலகிச்செல்வதேயில்லை. ரயில்நிலையத்தின் தரையில் படுக்கும்போது ஆணும்பெண்ணும் குழந்தைகளும் கிழவர்களும் ஒருவரோடொருவர் உடல் ஒட்டி கைகால்களால் அணைத்துக்கொண்டு மேலே போடப்பட்ட கனத்த கம்பிளிக்குள் தூங்கிக்கொண்டிருப்பார்கள்.

இடைவெளி தேடி கால்களை இடுக்குகள் வழியாகத் தூக்கிவைத்து நான் நடந்தேன். மிகப்பெரிய நடைமேடை. அதன் விளிம்பில் ரயில்பிடிக்கச்செல்பவர்கள் ரயிலுக்காக ஓடினார்கள். மூட்டைகளுடன் வந்திறங்கி சுமைதூக்கிகளுடன் பேரம்பேசினார்கள். அடியில் கனல் எரியும் தூக்குவாளியை ஒருகையால் சுமந்து, மறுகையால் ரயில்பெட்டியை தட்டியபடி, சாய் சாய் என்று கூவியபடி செல்பவர்களிடம் மண்கிண்ணங்களில் டீ வாங்கி குடித்தார்கள். பான்பராக்கை மென்று தண்டவாளங்களில் நீட்டித் துப்பினார்கள். அவர்களுக்கு அருகே சுவரில் இருந்து நடைமேடையில் பாதிவரை முற்றிலும் வேறு உலகம். பல கிராமங்கள் அங்கே பரவி விரிந்து கிடந்தன.

குளிர் நடுக்கிக்கொண்டிருந்தது. அக்டோபர்தான் ஆகியிருந்தது. ஆனால் நான் நாகர்கோயில் குளிருக்கு அப்பால் குளிரை அறிந்தவனே அல்லஎன்னிடம் குளிருக்கான உடைகளும் இல்லை. பைக்குள் ஒரு சங்குமார்க் லுங்கி மட்டுமே இருந்தது. லினன் கலந்தது. போர்த்திக்கொண்டு நின்றால் தோளைவிட்டு நழுவியபடியே இருக்கும். ஆனால் ஓரளவு குளிர்தாங்கும். நின்றுகொண்டிருந்தால்தான் குளிர். உடல் காற்றை எதிர்கொள்ளவேண்டியிருக்கிறது. படுத்துக்கொண்டால் உடலை நன்றாகச் சுருட்டிக்கொள்ளமுடியும். என்னுடைய வெப்பத்தை நானே வைத்துக்கொள்ளமுடியும்.

எங்கே காலை வைப்பதென்று பார்த்துக்கொண்டே நடந்தேன். சிறுவயதில் நாங்கள் விளையாடும் ஒரு விளையாட்டு மொத்தத் தீக்குச்சியையும் குப்புறக்கொட்டி ஒரு குச்சிகூட அசையாமல் ஒவ்வொன்றாக எடுப்பது. அந்த விளையாட்டின் கவனம். எவரையும் அசைக்கக்கூடாது. கால் எவர் மீதும் பட்டுவிடக்கூடாது.வாரங்கல் நிலையத்தில் கால் ஒருவன் மீது பட்டதற்காக நான் ஓங்கி அறையப்பட்டிருக்கிறேன்.

ஊரில் இருந்து கிளம்பியதும் திருவட்டாறு வரை நடந்தே சென்றேன். மாரியம்மன் கோயில் திண்ணையில் சோர்ந்து களைத்து அமர்ந்திருந்தேன். பசித்தது, தாகமெடுத்தது. என் கண்முன்னால் எனக்குச் சம்பந்தமில்லாத உலகம் ஓடிக்கொண்டிருந்தது. செந்நிறமான பேருந்துகள் புகை விட்டு உலோகமுனகல்களுடன் சென்றன. சைக்கிளில் யாரோ எதையோ கூவி விற்றுக்கொண்டு சென்றனர். இரு மீன்காரிகள் காலிக்கூடையுடன் வெற்றிலை வாயால் சிரித்தபடி சென்றனர். யாரோ சிலர். ஏதோ சில. எனக்கு குமட்டல் இருந்துகொண்டே இருந்தது. பசியில் அப்படி குமட்டுமென்று நான் அறிந்திருக்கவில்லை

என்னசெய்வதென்று யோசித்துச் சலித்த தருணத்தில் திருவட்டாறு கேசவனின் வாட்ச் கடை நினைவுக்கு வந்தது. அங்கேதான் என்னுடைய வாட்சை அண்ணா சரிசெய்யக் கொடுத்திருந்தார். வெள்ளிநிற முன்வட்டம் கொண்ட எச்.எம்.டி வாட்ச் அக்காலத்தில் கொஞ்சம் விலை அதிகமானதுதான். மழையில் உள்ளே தண்ணீர் புகுந்துவிட்டது. அதை திரும்பி வாங்கவே இல்லை. எழுந்து கேசவனின் கடைக்குச் சென்று வாட்சை வாங்கிக்கொண்டேன். அண்ணா வந்து பணம் தருவார் என்று சொன்னபோது அவன் மறுபேச்சு பேசவில்லை. வாட்ச் கையில் வந்ததுமே நான் செல்லவேண்டிய நெடுந்தூரம் நினைவில் விரிந்துவிட்டது. காசி, கங்கை, இமயமலை.

வாட்சை வெண்ணைக்கடை ராமக்கோனாரிடம் நூற்றைம்பது ரூபாய்க்கு விற்க முடிந்தது. தேங்காயைக்குலுக்குவது போல நாலைந்து தடவை காதில் வைத்து ஆட்டிப்பார்த்துவிட்டு அவர் வாங்கிக்கொண்டார். காசு தந்தபின் 'ஒரிஜினலாக்குமா?' என்று கேட்டார். நான் தலையசைத்தேன். தாணுஆசாரி கடையில்சென்று கண்ணாடிப்பெட்டியில் மிச்சமாகக் கிடந்த காலையில் சுட்ட தோசைகளில் நான்கை வாங்கி நீர்த்த தேங்காய்ச்சட்டினியுடன் சாப்பிட்டேன்.

இருட்டிவந்தது. எங்கே செல்வது என்று குழப்பமாகவே இருந்தது. ஆதிகேசவன் கோயிலில் காவல்காரர் பரமண்ணன் தெரிந்தவர். அச்சுவண்ணன் அதைவிடக்குறைவாகத் தெரிந்தவர். ஆகவே கோயிலுக்கே செல்லத் தீர்மானித்தேன். கோயில்நடைசாத்த இரவு ஒன்பது மணி ஆகும். அதுவரை படிக்கட்டுகளிலேயே அமர்ந்திருந்தேன். ஆற்றிலிருந்து வந்த காற்றில் இருந்த நீராவியின் வெக்கையை முன்பக்கமும் கோயிலின் நடை வழியாக வந்த குளிர்காற்றை பின்பக்கமும்

உணர்ந்தேன்.

நடைசாத்தும் ஒற்றை மணி ஓசை. பெருமாளை உள்ளே வைத்து போற்றி வாசலைப்பூட்டுகிறார். அவரது பேச்சொலி. பின்பு அவரும் அவரது மகனும் என்னைத்தாண்டி இறங்கிச்சென்றார்கள். நான் எழுந்து உள்ளே சென்றேன். பரமண்ணன் மடைப்பள்ளி , அலுவலகம் என ஒவ்வொரு வாசலாக மூடிக்கொண்டிருந்தார்

'வாடே..என்ன கோயிலிலே களவாங்க வந்தது மாதிரி பம்முதே?'

'அண்ணா நான் இங்க ராத்திரி தங்குதேன்'

'ஏன்? பொடிநடையாப்போனா உனக்க வீட்டுக்குப்போயி அந்திக்கஞ்சி குடிக்கிலாமே'

என் மூளை ஓரடி முன்னால் பாய்ந்தது. 'பரிச்சையிலே தோத்துட்டேன்'

'சாவுகதுக்கொண்ணும் ஐடியா இல்லல்லா?'

'இல்லண்ணா..இப்பம் போனா பிரச்சினையாக்கும்..நாளைக்கு சமாதானமாட்டு போறேன்'

'செரி கிடந்துக்க..' என்றார் அண்ணா 'சோறு தின்னியாடே?'

'தோசை தின்னேன்'

'இங்க உண்டக்கட்டி உண்டு..வேணுமானா தாறேன்'

'வேண்டாம்ணா'

முகப்பில் அலங்கார மண்டபத்தில்தான் படுக்கை. அங்கே ஏற்கனவே இரண்டுபேர் படுப்பதற்காக வந்திருந்தார்கள். கோபாலகிருஷ்ணன், வீரபத்ரன் சிலைகளுக்குப்பின்பக்கம் கோரைப்பாய்கள் வைக்கப்பட்டிருந்தன. அவற்றை எடுத்து உதறி விரித்து மரக்கட்டைத்தலையணைகளைப்போட்டார்கள்.

அலங்கார மண்டபம் வரைக்குமான எல்லா கதவுகளையும் அண்ணா மூடினார். பித்தளைக் குமிழ் வைத்த கனத்த கதவுகள். பெரிய சாவிகள்.

'தாழ்க்கோலை எடுக்குகதுக்கே ஆளுவேணுமே' என்றேன்

'மக்கா இது மகாராஜா காலத்து தாக்கோலாக்கும். அப்பம்லாம் தாக்கோலுக பெரிசாக்கும்'

'கதவுகளும் நின்னு ஓளைக்கும்லா? என்றார் தெற்றுப்பல் ஆசாமி

அவர்கள் சிரித்தார்கள்.

நான் ஒரு பாயைப்போட்டு படுத்துக்கொண்டேன். காலை நீட்டிக்கொண்டபோது முதுகில் ஒரு நிம்மதி. கீழிருந்து குளிர்ந்த காற்று ஏறிவந்து தழுவி கடந்துசென்றது. பாசிமணம் கொண்ட காற்று.

'இங்கிண அதிகம் எடமில்ல பாத்துக்க. காலம்பற வாளைவெட்ட போறவன் செகண்ட்ஷோ சினிமா பாத்துட்டு வாறவன் எல்லாம் இங்கதான் வந்து கட்டைகளை சாய்ப்பானுக. காலம்பற பாத்தா சாளைமீன் அடுக்கினமாதிரி கிடந்து உறங்குவானுக'

'மனுஷ்யபுத்திரனு தலைசாய்க்கான் மண்ணில் இடமில்லா..ஆ.. மண்ணில் இடமில்லா' என்று ஒல்லி ஆசாமி பாடினார். 'ஹாவ்' என்று கொட்டாவிவிட்டார்.

என் தலைக்குமேல் வீரபத்ரனின் கால் தூக்கி நின்றது. இரண்டாள் உயரமான கரிய சிலைகள் எல்லாம் என்னைக்குனிந்து பார்ப்பதுபோல உணர்ந்தேன். செத்தநாய்க்குச் சுற்றும் கூடி நின்று வேடிக்கைபார்ப்பவர்கள் போல அவர்கள் கல்விழிகளால் என்னைப்பார்த்தனர்.

'என்ன பார்வ?'

'இல்ல வீரபத்ரரு மிதிப்பாரோண்ணு தோணுதே'

'பாவங்கள எல்லாரும் சவிட்டுவானுக..' என்றார் இருளில் இருந்து ஒல்லி. 'வே, இந்த ஊரிலே கால்நீட்டி

கிடக்குததுக்கு வீட்டிலே எடமுள்ள எம்பிடு ஆளுகவே இருக்காஹ? இந்நா அப்பூட்டன் வாழைத்தோட்டத்திலே ஏறுமாடம் கெட்டியிருக்கான். நாலடி நீளம். லே, இதில எப்டிலே ராத்திரி காவல்கெடப்பே, கால நீட்டாண்டாமாலேண்ணு கேட்டப்பம் சொல்லுதான் , அண்ணா எனக்க குடிலும் இந்த நீளம்தானேண்ணு.என்ன சொல்லுகது?'

'அந்நா கெடக்கானே அம்பதடிக்கு நீட்டி விரிச்சு.ஆதிகேசவனுக்க கெடப்பாக்கும் கெடப்பு. ஊரில ஒருத்தன் அப்பிடிக் கெடந்தா போரும்வே'

அவர்கள் பேசிக்கொண்டே இருக்க நான் தூங்கிவிட்டேன். என்னை யாரோ மிதித்தார்கள். அதிர்ந்து கண்விழித்தேன். கால்தூக்கி நின்றிருந்த வீரபத்ரன்தான்.

சிலகணங்கள் கழித்துத்தான் என்னைச்சுற்றி நிறையபேர் கிடப்பதை உணர்ந்தேன்.யார்யாரோ கால்களும் கைகளும் பின்னி தூங்கிக்கொண்டிருந்தனர்

இருளுக்குள் ஒரு கிழவரின் குரல் 'கர்ப்பகிருஹம்னா என்னடே? அம்மைவயிறாக்கும். அங்கிணயாக்கும் ஆதிகேசபவன் கெடக்குதது.அவனுக்க அந்த கெடப்பாக்கும் இந்த யுகம். ஒரு யுகம் தாண்டினாக்க அவன் அப்டியே திரிஞ்சு கெடப்பான்.கேட்டீராவே?'

'நீரு திரிஞ்சு கிடந்து எனக்கமேல கைய போட்டா அடிச்சு ஒடிச்சிருவேன் பாத்துக்கிடும்'

'ஆதிகேசவன் கெடக்கப்பட்டது மூணடுக்கா மடங்கின காலத்திலயாக்கும். காலரூபனாக்கும் ஆதிசேஷன்.'

'இங்கிண நானும் ஒருக்கா பாம்புக்க மீத்த கெடந்திட்டுண்டு.கேறி வந்துபோட்டு. காலம்பற பாத்தா ஒப்பரம் கெடக்கு. பின்ன சாரையானதுகொண்டு நான் சாவல்ல'

'உம்ம கிட்ட சொன்னேன் பாத்துக்கிடும்.போயில இருக்காவே?'

நான் மீண்டும் தூக்கத்தில் ஆழ்ந்தேன்.

காலை யாரோ தட்டினார்கள். திடுக்கிட்டு எழுந்தேன். ஒருவர் இரு கைகளையும் ஊன்றி என்னருகே வந்தார்

'அந்தால நீங்கி கிட மக்கா.அண்ணன் நடுவ சாய்க்கேன்'

'வே போயில இருக்காவெ?'

மீண்டும் தூக்கத்தின் ஆழம். சேறால் ஆன ஓர் அறை. நெளிந்து சுருங்கும் சுவர்கள். நெளிந்துகொண்டிருக்கும் கட்டில். உயிருள்ள கட்டில். மீண்டும் யாரோ காலை அசைத்தார்கள்

'இல்லமக்கா.உறங்கு கேட்டியா? நான் வாளைக்கு வெள்ளம்கோரப்போவணும்' என ஒருவர் எழுந்து சென்றார்.

மீண்டும் யாரோ காலை பிடித்து இழுத்தனர். ஆத்திரத்துடன் கண் விழித்தேன். 'டேய்.எந்திரி.இது பிரம்ம முகூர்த்தமாக்கும்.இதுக்குமேலே இங்க கிடக்கமுடியாது.டேய்'

ஒவ்வொருவராக எழுந்தனர். தூக்கம் எஞ்சிய கண்கள், உடல்கள். வியர்வை வாசனை, எச்சில்வாசனை, சிறுநீர் வாசனை. 'லேய் நெல்சா. லே, எந்திரிலே'

அன்று காலை கோயிலிலேயே கட்டிச்சோறு சாப்பிட்டுவிட்டு கன்யாகுமரி சென்றேன். செல்வதற்கு விசேஷ காரணம் ஒன்றும் இல்லை. அந்த ஊர்தான் முதலில் ஞாபகம் வந்தது. ஒருநாள் பகலும் இரவும் அங்கே சுற்றிக்கொண்டிருந்தபோது நான் செல்லவேண்டியது காசிக்கும் இயமமலைக்கும்தான் என்று தோன்றியது.

திருவனந்தபுரத்திலிருந்துதான் அன்றெல்லாம் வட இந்தியா செல்ல ரயில் இருந்தது. நான்குவருடம் முன்னால் துறவியாகி வடதிசை சென்ற பிரேமன் அண்ணன் திருவனந்தபுரம்வழியாகச் சென்றதாகவே சொன்னார்கள்

கன்யாகுமரியில் திருவனந்தபுரம் பேருந்தில் ஏறினேன். ஆனால் ஏதோ தோன்றி பாறசாலையில் இறங்கிவிட்டேன். கோயில்வரைக்கும் சென்றேன். ஆளில்லாத பிராகாரங்களில் சுற்றி வந்தேன். எதற்காக இறங்கினேன் என்று தெரியவில்லை. மீண்டும் பேருந்தில் ஏறி திருவனந்தபுரம் வந்தேன்.

மக்கள்நடுவே இருக்கவேண்டும் என்று தோன்றியது. தனித்த இடங்கள் அச்சமூட்டின. சாலை பஜாரில் சைக்கிள்களும் கூடைக்காரிகளும் சுமைதூக்கியவர்களும் சாமான்கள் வாங்கவந்தவர்களும் இடித்து முட்டி மோதினார்கள். பத்மநாபசாமி கோயில் முதல் காந்தஊர் கோயில்வரை நடந்தேன். திரும்பநடந்தேன். மதியவெயிலில் வியர்வை வழிய வழிய. பின்பு

களைந்து அமர்ந்து ஒரு தட்டுகடையில் பிளாஸ்டிக் தட்டில் சோறும் தேங்காய்க்குழம்பும் சாப்பிட்டேன்

ரயில்நிலையம் வந்தேன். கார்கள் வந்து நிற்க உயர்தர உடையணிந்தவர்கள் இறங்கினர். பெட்டிகளுடன் உள்ளே சென்றனர். பளபளப்பான சருமம் கொண்ட பெண்கள். தொந்திகளும் தாடைகளும் தொங்கும் ஆண்கள். மழுங்கலான ஒலிபெருக்கிக் குரல். நடுவே பிரம்மாண்டமான இரும்புக்கோபுரமொன்று இடிந்து சரிவதுபோல ரயில் ஒன்று வந்து நின்றது. நூற்றுக்கணக்கான உலோகக்கிரீச்சிடல்கள். உலோக விம்மல்கள். உலோகப்பெருமூச்சுகள்.

அந்த ஒலிகள் என்னை அச்சுறுத்தின. என்னால் ஒரு ரயிலில் ஏறிக்கொள்ளமுடியுமா என்றே தெரியவில்லை. ரயிலுக்கு டிக்கெட் கொடுக்குமிடத்திற்குச் சென்றேன். வார இதழ்களை வாசித்துக்கொண்டு வரிசையில் நின்றார்கள். நானும் வரிசையில் நின்றேன். நகம் கடித்து உரித்து கைநுனிகள் சதைத்துண்டுகளாக ஆகிவிட்டிருந்தன. கால்மாற்றி நின்றேன். கூண்டுக்கு முன் சென்றபோது மொத்த மூச்சும் உள்ளே இறங்கிவிட்டிருந்தது.

'எந்தா வேண்டே?'

என்னால் பேசமுடியவில்லை.'

'ஏது ஸதலத்தேக்கா டிக்கட்?'

'செவிகேட்டூடே? ஊமையாணோ?'

சட்டென்று திரும்பி வேகமாக ஓடி வெளியே சென்றேன். பின்பக்கம் மெல்லிய சிரிப்பைக் கேட்டேன்.

மனம் படபடக்க தம்பானூர் பேருந்துநிலையத்தில் சுற்றிவந்தேன். ஏதாவது சினிமாவுக்குச் செல்லலாம் என்ற எண்ணம் வந்தது. ஆனால் என்னிடம் இருந்த பணம் குறைவு, அது அதிகநாள் தங்காது என்ற அச்சமும் எழுந்தது. பேருந்துநிலையத்தைச் சுற்றி வந்தேன். வெளியே இறங்கி பட்டம் வழியாக மிருகக்காட்சிசாலைக்குச் சென்றேன். அங்கே புல்வெளியில் அமர்ந்திருந்தேன். மெல்ல மெல்ல நகரம் இருட்டியது. விளக்குகள் மின்னி மின்னி எரிய ஆரம்பித்தன. முகவிளக்குகள் சீறி விழிக்க கார்கள் தெருக்களில் உறுமிச்சென்றன.

மாலையில் பத்மநாபசாமி கோயிலுக்குச் சென்றேன். பத்மதீர்த்தம் குளத்தில் முகம் கழுவிவிட்டு உள்ளே சென்று சுற்றிவந்தேன்.இந்த மாபெரும் நகரத்திலும் நட்டநடுவே ஒரு தெய்வம் நீட்டிப்படுத்திருக்கிறது. வண்டிகளும் மனிதர்களும் கால்நடைகளும் அலையும் நகரில் அசையாமல் நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக படுத்திருக்கும் ஓர் உருவம். தொலைவில் நின்று அனந்தபத்மநாபனைப் பார்த்தேன். கன்னங்கரிய உருவம். அதன்முன் வைக்கப்பட்ட விளக்குகள் மட்டுமே தெரிந்தன.

இரவின் ஒலிகள் அடங்குவதன் அச்சத்தை நான் உணர்ந்த முதல்தருணம் அதுதான். வண்டிகளின் ஓசைகள் ஓய்ந்தன. நாய்க்குரைப்புகள் எழுந்து கேட்க ஆரம்பித்தன. தெருக்களில் அதுவரை இல்லாத அசைவுகள். பத்மதீர்த்தக்கரையில் அத்தனை பெருச்சாளிகள் சாலையைக் கடக்குமென நான் அறிந்திருக்கவில்லை. கிழக்குக்கோட்டை பேருந்துநிலையம் காலியாகக் கிடந்தது. விளக்குகள் அணைக்கப்பட்ட சில பேருந்துகள் முகக்கண்ணாடியில் தெருவிளக்குகளைப்பிரதிபலித்தபடி அசைவிழந்து நின்றன. அசைவுகளே இல்லாத வண்டிச்சக்கரங்கள் ஏன் அத்தனை அமைதியின்மையை உருவாக்குகின்றன?

சாலையோரமாகப் பார்த்துக்கொண்டே வந்தேன். எந்தக்கடைக்கும் வராந்தா இல்லை. இருந்த ஓட்டுத்திண்ணைகளில் மோட்டார்கள் , பலவகை இரும்புச்சாமான்கள் போடப்பட்டு சங்கிலியால் கட்டிவைக்கப்பட்டிருந்தன. கிருபா திரையரங்குக்கு அருகே ஒரு திண்ணை சற்றே அகலமாக இருந்தது. அதில் நான் அமர்ந்த கணமே சிறிய இரும்பு வாசலுக்கு அப்பாலிருந்து கையில் நீளமான பிரம்புடன் காக்கிச்சட்டை அணிந்த மெலிந்த மனிதர் ஒருவர் வெளியே வந்தார்.

'ஆராணு? டா'

'இல்ல சும்மா இவிடே'

'இவிடே இரிக்கான் பாடில்லா..ம்ம் போ..பொய்க்கோ '

நான் பேருந்துநிலையம் வரும்போது மெல்லிய தூறலாக மழை ஆரம்பித்திருந்தது. தெருவிளக்குகளின் மஞ்சள்நிற ஒளியில் தூசுபோல மழை இறங்கியது. தம்பானூர் பேருந்துநிலையத்தில் இரண்டு டீக்கடைகள் சிவந்த மின்விளக்கு ஒளிக்கு கீழே இயங்கிக்கொண்டிருந்தன. பாய்லரின் ஆவியும் புகையும் மேலே எழுந்து ஒளியில் நனைந்து மின்னி மறைந்தன. டீக்கடை அருகே இருவர் சுருட்டிய தினசரியுடன் நின்றனர். மூட்டைகளும் பெட்டிகளுமாக சிலர் அமர்ந்திருந்தனர். பெஞ்சுகளில் எல்லாம் மனிதர்கள் பெட்டிகளை மடியில் வைத்துக்கொண்டு அமர்ந்திருந்தார்கள். ஒரே ஒரு பேருந்து நெற்றியில் விளக்குடன் உதறிக்கொண்டிருந்தது. அப்பால் இருளுக்குள் பேருந்துகளின் கண்ணாடிகள் நீர்ப்பரப்புகள் போல இருளுக்குள் மெல்லிய ஒளியுடன் தெரிந்தன.

பேருந்துநிலையம் வழியாக நடந்தேன். பெரும்பாலான இடங்கள் நனைந்திருந்தன. மிதிபட்டு மிதிபட்டு சேறு படர்ந்த சொரசொரப்பான சிமிண்ட்தரை. சுவரோரமாக எஞ்சிய ஈரமில்லா இடங்களில் மனிதர்கள் படுத்திருந்தனர். சுருண்டு ஒடுங்கி சப்பி நசுங்கிய உடல்கள். இவ்வளவு இடமே எனக்குப்போதும் என்று சொல்பவை போல. இவ்வளவு இடத்தையாவது கொடுங்கள் என்று யாரிடமோ மன்றாடுபவை போல. அந்த உடல்கள் எப்போதுமே அப்படித்தான் இருக்குமா? நிரந்தரமாகவே ஒரு மன்னிப்புகோரும் பாவனை அவர்களிடம் இருந்துகொண்டிருக்குமா?

ஒரு சந்தில் நான் அமர்ந்துகொண்டேன். என்னிடம் துணியோ பையோ ஒன்றும் இருக்கவில்லை. ஆனால் என் கைகளை பாரமாக உணர்ந்தேன். முழங்கால்மீது அவற்றை வைத்துக்கொண்டேன். சுருண்டு அமர்ந்தவன் அதேவாக்கில் மெல்லச்சரிந்து படுத்தேன். தரையின் சில்லிப்பு உடலை அணுகியது. நரம்புகளில் ஊடுருவி குருதியைக் குளிரச்செய்து எங்கும் பரவியது. இன்னும் சற்று நேரத்தில் உடலின் வெம்மை மண்ணில் பரவிவிடும். இந்தக்குளிர் குறைந்துவிடும். ஆனால் மண் பூமியின் ஆழத்தில் இருந்து மொத்தக்குளிரையும் திரட்டி என்னுள் செலுத்திக்கொண்டிருந்தது.

ஒரு கட்டத்தில் நான் நடுங்க ஆரம்பித்தேன். எழுந்து அமர்ந்து பார்த்தபோது சுவரில் 'மஞ்ஞில் விரிஞ்ஞ பூக்கள்'ன் நூறாவதுநாள் போஸ்டரைக் கண்டேன். பீங்கான் முகத்துடன் மோகன்லால் சிரித்துக்கொண்டிருந்தார். அதை சுவரிலிருந்து பெரும்பாலும் பிய்த்தெடுக்க முடிந்தது. பின்பக்கம் பசையும் சுண்ணாம்புமாக கெட்டியாகவே தெரிந்தது. அதைவிரித்துப்படுத்தபோது குளிரில் விரைத்த தோள்கள் இதமான வெம்மையை உணர்ந்தன. என் பிரக்ஞையில் இருந்து ஒவ்வொன்றாக உதிர்ந்தன. எனக்குக் கீழே தரை உயிருள்ள ஒரு தசைப்பரப்பு போல அசைவதாகப் பட்டது. பாம்புமீது படுத்திருப்பது அவ்வளவு சுகமாகவா இருந்திருக்கும்?

காலில் சுளீரென்ற அடி விழ எழுந்து அமர்ந்து நடுநடுங்கினேன். 'டேய்..இதெந்து சத்ரமா..ஓடுடா..எரப்பாளி'

இரண்டு கான்ஸ்டபிள்கள் லத்தியால் படுத்திருந்தவர்களை ஓங்கி ஓங்கி அறைந்து எழுப்பிக்கொண்டிருந்தனர். 'எழிக்கெடா நாயேடா'

அறைகள் எலும்பிலும் சதையிலும் விழும் ஒலி. தூக்கத்தில் திடுக்கிடுபவர்களின் அலறல். நான் எழுந்து நின்று மார்பில் கையை கட்டிக்கொண்டேன்.

'டா..ஓடிக்கோ' கான்ஸ்டபிள்கள் அடித்துக்கொண்டே சென்றார்கள். அப்போதுதான் அந்த இருண்ட சந்துகளுக்குள் அத்தனைபேர் தூங்கிக்கொண்டிருப்பதை நான் அறிந்தேன். அடிபட்டு எழுந்தவர்கள் மேலும் அடிக்கு தப்பி விலகிச் சென்றார்கள். காகிதங்களையும் துணிகளையும் பொறுக்கிக்கொண்டு ஈரத்தில் நடந்து அப்பால் நின்று கான்ஸ்டபிள்களைப் பார்த்தனர். பின்பு புதிய இடங்களில் அவற்றை விரித்து படுக்க ஆரம்பித்தனர்.

நான் என்ன செய்வதென்று அறியாமல் அங்கே நின்றேன். எல்லாரும் படுத்துவிட்டார்கள். என் கால்கள் கடுத்தன. தூக்கம் வந்து தலையை தண்ணீர் நிறைந்த தவலை போல உணரச்செய்தது. தண்ணீர் ஒருபக்கமாகத் தளும்பி தலையைச் சரித்து சுவரில் முட்டியது. அப்படியே படுத்துக்கொண்டேன். எலிகள் என் கால்களை கவ்வுவதுபோல உணர்ந்தேன். எலிகள் என்னை இழுத்துச்சென்றன. இருண்ட சந்துகள். சாக்கடைப்பொந்துகள்.

மீண்டும் தோளில் சுளீரென்று அடி விழுந்தது. எழுந்து அப்படியே அமர்ந்திருந்தேன். என்னால் எதையும் புரிந்துகொள்ள முடியவில்லை. 'டேய் எரப்பாளி..போடா..எணீற்று போடா'

தாறுமாறாக அடிகள் விழுந்தன. அடிபட்டவர்கள் அப்படியே உடலைச்சுருட்டிக்கொண்டு சிலகணங்கள் அசைவில்லாமல் அமர்ந்து அந்த வலியை அனுபவித்தனர். அசைவில்லாமல் அதை வாங்கிக்கொள்வது மட்டுமே அவர்கள் அறிந்த ஒரே தற்காப்பு. பின்னர் எழுந்து ஓடி விலகிச்சென்றனர். நான் எழுந்து சென்று ஒரு பெஞ்சுக்கு அப்பால் சென்றேன். அடித்த காவலர்கள் எந்த முகத்தையும் பார்க்கவில்லை. அவர்கள் தங்கள் கடமையை பற்றின்றிச் செய்பவர்கள் போல அடித்து எழுப்பிக்கொண்டே சென்றார்கள்.

மீண்டும் அனைவரும் கலைந்து தூங்க ஆரம்பித்தபோது என்னால் படுக்கமுடியவில்லை. நான் சற்று அப்பால் சென்று குந்தி அமர்ந்துகொண்டேன். தூக்கம் வருமென நினைக்கவில்லை. ஆனால் அடுத்த அடி தலையில் விழுந்தபோது நான் தூக்கத்திலிருந்துதான் விழித்தேன்.

அதிகாலையில் போலீஸ்காரர்களுடன் இரண்டு துப்புரவுப்பணியாளர்களும் சேர்த்து தூங்கியவர்களை அடித்து எழுப்பினார்கள். காலால் உதைத்தும் எச்சில்துப்பியும் வசைபாடினார்கள். துப்புரவுப்பணியாளர் பெரிய பிளாஸ்டிக் பக்கெட்டுகளில் குளிர்ந்த நீரைக்கொண்டுவந்து தரையில் ஊற்றினார். மொத்த பேருந்துநிலையமும் ஈரமாகியது. தாள்களும் சாக்குப்பைகளும் பாலிதீன்காகிதங்களுமாக உறங்கியவர்கள் எழுந்து சென்றார்கள். அது அங்கே ஒவ்வொருநாளும் நிகழக்கூடியதென்று தெரிந்தது. அதனூடாக தூங்குவதற்கான எல்லா பயிற்சியும் அவர்களுக்கிருந்தது. ஆனால் அவர்களின் கண்கள் பீளையடிந்து மட்கியவை போலிருந்தன. கண்கள் சேற்றில் ஆழப்புதைந்த கூழாங்கற்கள் போல. சேறு சுருங்கி கூழாங்கல்லை உள்வாங்கியிருப்பதுபோல. நூறுபேருக்குக் குறையாத கூட்டம். ஆனால் ஒவ்வொருவராகவே வந்தார்கள். ஒவ்வொருவராகவே சென்றார்கள்.

அன்றிரவு நான் ரயில்நிலையத்திற்குப் படுக்கச்சென்றேன். கடைசி ரயில் பதினொன்றரைக்குச் சென்றது. ரயில்நிலையம் அடங்கியதும் நான் ஒரு பெஞ்சுக்குப்பின்னால் படுக்கப்போனேன். என்னை தொலைவிலிருந்தே ஒரு காவலர் கவனித்துக்கொண்டிருந்தார்போல. படுத்ததுமே அடி விழுந்தது. 'ஓடுடா தெண்டி..போ..போய் பஸ்ஸ்டாண்டில்

செந்து கிடபோடா'

பேருந்துநிலையத்துக்குச் செல்லாமல் நான் நகரில் சுற்றியலைந்தேன். எந்நேரமும் சாரல்மழை பெய்யும் நகரம் பிரம்மாண்டமான ஒழுகும்கூரை கொண்ட வீடுபோலிருந்தது. சட்டிகள் பானைகள் பாத்திரங்கள் என அனைத்தையும் தூக்கி மழைத்தாரைக்கு வைத்தது போல கட்டிடங்கள். ஈரமான பாசிபிடித்துக்கறுத்த சுவர்கள். ஈரம்பளபளக்கும் சாலைகள். ஈரத்தில் நடுங்கி கால்தூக்கி ஒண்டி நிற்கும் தெருநாய்கள். ஈரம் வழிய மரங்களுக்கு கீழே நின்று உடல் சிலிர்க்கும் பசுக்கள்.

திரையரங்குக்கு அப்பால் பாலம் மேலேறியது. அப்படியென்றால் பாலத்துக்கு அடியில் நனையாத இடமிருக்கும். அங்கே எப்படிச் செல்வதென்று தெரியவில்லை. ரயில்வேயின் இரும்புவேலியைப்பார்த்துக்கொண்டு நடந்தேன். ஓர் இடத்தில் இடைவெளி தெரிந்தது. உள்ளே புகுந்துவிட்டேன். பல்வேறு இரும்புச்சாமான்கள் மழையில் புல்லடர்வின் உள்ளே துருப்பிடித்துக்கிடந்தன. பாலிதீன்குப்பைகள். சிக்னலின் கம்பிகள் இறுகிச்சென்றன.

பாலத்தின் அடியில் இருட்டுதான். நான் மெல்ல உள்ளே சென்றதுமே அங்கே ஆட்கள் படுத்திருப்பதை உணர்ந்துகொண்டேன். என் கால்கள் ஒரு மென்சதையை மிதித்தன. மிதிபட்ட உருவம் எழுந்து தலைமயிரை அள்ளிச்செருகியபடி 'ஆரு?' என்றது

நான் பேசாமல் நின்றேன். என்ன சொல்வதென்று தெரியவில்லை.

அவள் முந்தானைபோல போட்டிருந்த துண்டை சரியாக அமைத்துக்கொண்டு 'ரெண்டு ரூவாய்க்கு ஒத்தபைசா குறையாது..இருக்குண்ணா குடுத்திட்டு இரு' என்றாள்

நான் மெல்ல 'நான்..நான் படுக்க வந்தேன்'

'செரி படும்வே..பைசா இருக்கா?'

'நான் படுக்க இடம்தேடி வந்தேன்..மழையிலே'

அவள் என்னை கூர்ந்து பார்த்தாள். 'எந்த ஊரு?'

'வெளியூரு'

'சிக்கு அடிச்சீராவே?'

'இல்ல..ஊரவிட்டு ஓடி வந்ததாக்கும்..பஸ் ஸ்டான்டிலே கெடக்க விடுதானுக இல்ல'

'நல்ல கத..இங்கிண கெடக்க விடுதானுகளாக்கும்..' என்றாள் . வாய்நாற்றத்துடன் கொட்டாவி விட்டு 'அந்தால கெடவும்வே' என்றபின் படுத்துக்கொண்டாள்

புழுதிவாடை. சிறுநீர் வீச்சம். மட்கிய துணிகளுக்கே உரிய நாற்றம். ஆனால் புழுதி மெல்லிய வெம்மையுடன் இருந்தது. ஈரமில்லை. ஈரமில்லாத ஓர் இடம். நான் சிறிய இடைவெளியில் அமர்ந்தேன். கால்களை மெல்ல நீட்ட முயன்றேன். அங்கே ஒரு சதை மிதிபட்டது

அவன் எழுந்து 'ஆருவே?' என்றான்

அவள் 'நம்மாளுதான்..' என்றாள்

அவன் இருட்டுக்குள் என்னை கூர்ந்து கவனிக்க முயன்றான். ஆனால் சரிதான் என்று திரும்பப் படுத்துக்கொண்டான்.

நான் அந்த இடத்தை மனதுக்குள் வரைந்துகொள்ள முயன்றேன். மேலே ஏதோ லாரி இரைந்தபடி சென்றது. ஆனால் அங்கே வெளிச்சமில்லை. ரயில்நிலையம் வெகுதூரத்தில் வரிசையான விளக்குகளாகத் தெரிந்தது . சூடு போட்டுக் காய்ந்த தழும்புபோல தண்டவாளம் பளபளத்தது

காலை யாரோ பிடித்து இழுத்தபோது விழித்துக்கொண்டேன். இரண்டுபேர் ஒவ்வொரு காலாகப்பிடித்து அசைத்து அழைத்துக்கொண்டிருந்தார்கள் 'லே..ஆருலே..டேய் கணாரா..டேய் கணாரன் அல்லேடா?'

எனக்குக் கீழே படுத்திருந்தவன் இரு கால்களும் இல்லாதவன்போல. அவனை அவர்கள் கண்டுபிடித்துவிட்டார்கள். நான் இருட்டில் மெல்ல மெல்ல உருண்டு சுவர் ஓரமாகச் சென்றுவிட்டேன். அங்கே துணிமூட்டைகள்தான் இருந்தன.

'மோலாளி ..முடியல மோலாளி..ரத்தப்போக்கு இருக்கு மோலாளி' என்றான் கணாரன்

‘டே, அவனோடு எந்தரு வர்த்தமானம்-தூக்குடே’

இருவரும் கணாரனை அப்படியே தூக்கினார்கள். அவன் கால்கள் இரு சிறிய கைகள் போல தொங்குவது நிழலாகத் தெரிந்தன.

‘மோலாளி வேண்டாம் மோலாளி-உறங்க விடுங்க மோலாளி’

அவர்கள் அவனை தூக்கிக்கொண்டு அப்பால் சென்றார்கள். என் நடுக்கம் ஓய்வதற்காகக் காத்திருந்தேன். வாயால் மூச்சு விட்டுக்கொண்டிருந்தேன். அதன்பின்னர்தான் கவனித்தேன். அங்கே மேலும் மூன்றுபேர் இருந்தார்கள். ஆணா பெண்ணா தெரியவில்லை. கண்கள் மட்டும் கருங்கல்சில்லிகள் போல மின்னிக்கொண்டிருந்தன.

நான் எழுந்துசெல்வதா என்று யோசித்தேன். ஆனால் வெளியே அவர்கள் கணாரனுடன் இருந்தார்கள். வினோதமான சத்தங்கள். படீர் படீரென அடிக்கிறார்கள். ‘டா-இவிட நில்லுடா’

‘மோலாளி-அய்யோ ஆ’ பிடித்து தள்ளும் ஒலி. அடிகள். விதவிதமான குழறல்கள். கால்கள் மண்ணில் மிதிபடும் சத்தம். மூர்க்கமான ஒரு மல்யுத்தம் சத்தமில்லாமல் நடப்பது போல.

என்னருகே இருந்தவள் ஒரு சிறுமி . ‘முணுசீட்டு மலத்துகவனுகளாக்கும்- நாறவெள்ளம் அடிச்சா இங்கிணதான் வருவானுக’ என்றாள்.

உள்ளே ஒருபெண் வந்தாள். அவள்தான் என்னை முதலில் பார்த்தவள் என்று தோன்றியது. வந்ததுமே படுத்து சுருண்டு தூங்க ஆரம்பித்தாள்.

சற்று நேரத்தில் கணாரனைக் கொண்டு வந்து போட்டார்கள். மூட்டை விழுவதுபோல அவன் விழுந்த ஒலி கேட்டது ‘அம்மே என்றெ அம்மே-அம்மே’

‘டே அனத்தாம கெடப்பியா? மனுசன உறங்க விடாம-சவத்து மூதி’

‘அம்மே-அம்மே’ என அவன் மெல்லிய குரலில் அழுதுகொண்டிருந்தான்.

ஒருவன் தனிமையில் அழும்போது எவரிடம் முறையிடுகிறான் என்று எனக்கு புரிந்ததே இல்லை. தனிமையில் நான் முழுமையான நிராதரவை மட்டுமே உணர்ந்திருக்கிறேன். அவனுடைய அழுகையைக் கேட்டுக்கொண்டே இருந்தேன். சில கணங்களில் ஒரு பெரிய கல்லைத்தூக்கி அவன் தலையில் போட்டுக்கொன்றுவிடவேண்டும் என்று தோன்றியது.

லாரிகள் என் தலைமேல் சென்றுகொண்டே இருந்தன. ஒரு பெரிய உலோக ஓசை கேட்டது. எங்கோ ஒரு நாய் அடிபட்டு கதறியது. என் கண்கள் மேல் ஒளி விழுந்தது. நான் விழித்து ஆனால் அசையாமல் படுத்திருந்தேன்.

‘கல்லுடீ கல்லு உண்டோடி-’

அவள் எழுந்து ‘ஆரு ராமனா?’ என்றாள்

‘பார்ட்டி நிக்குந்நு- சந்தைக்காரனானு-’

‘வராம்’

‘மூநாளு வேணும்-’

‘அம்மிணி உண்டு-பின்ன மற்றவள் உண்டு’

‘கையும் காலும் இல்லாத்தவளு வேண்டா’

‘அவளே உள்ளூ’

‘ச்சே’ என்றான் அவன் மீண்டும் டார்ச்சைச் சுழற்றியபடி. என்னை நோக்கி விளக்கு நின்றது

‘அதாரு-ஆணா பெண்ணா?’

‘அதொரு தீனக்கார பையனா-தலைக்கு சுகமில்ல’

அவர்கள் சென்றார்கள். மீண்டும் அப்பகுதி இருண்டது. நான் எழுந்து சென்றுவிட ஆசைப்பட்டேன். ஆனால் என்னால் எழமுடியுமென தோன்றவில்லை. இரண்டுநாட்கள் தூங்கவில்லை. தூக்கம் சேர்ந்து சேர்ந்து என் மயிர்க்கால்களில் நகநுனிகளில் தூக்கம் தேங்கி ஊறிச் சொட்டிக்கொண்டிருந்தது.

மீண்டும் ஓசைகள் இம்முறை நான்குபேர். அவர்கள் குச்சிகளால் தரையில் கிடந்தவர்களை அடித்து அடித்து எழுப்பினார்கள். ஒருவன் அப்பால் நின்று பீடி இழுத்தான். நான் அமர்ந்தவாறே பின்னால் நகர்ந்தேன். பாலத்துக்கு மறுபக்கம் பள்ளமாக இருந்தது. அதில் இறங்கி விட்டேன். கீழே நொதித்த சாக்கடை. அதனருகே சிமிண்ட் தூண் அதன்பின் நின்றுகொண்டேன்

'மோலாளி-வேண்டாம் மோலாளீ'

'இது மற்றவனா மாதவா'

'எல்லாற்றினெயும் எடுக்கடே'

'மோலாளி-வய்ய மோலாளி-செத்திருவேன் மோலாளி'

அவர்கள் அங்கிருந்த அனைவரையும் கொண்டு சென்றார்கள் . 'மோலாளி ஒந்து கண்ணடைச்சோட்டே மோலாளி-'

ஆனால் அதன்பின்னும் ஒரு சிறுமி எஞ்சுவதை மூட்டைகளுக்குள் கண்டேன். அவள் என்னைத்தான் பார்த்துக்கொண்டிருந்தாள். பின்பு உணர்ந்தேன். சிறுமி அல்ல. கிழவியாகக்கூட இருக்கலம். ஒட்டியகன்னங்கள் சூம்பிப்போன உடல்.

'கண்ணடைச்சு காலுநீட்டி உறங்கணுமானா சீவன் போகணும்' என்றாள்

நான் ஒன்றும் சொல்லாமல் நின்றேன். பெரிய ஒலியுடன் ஒரு லாரி கடந்துசென்றது.

'என்ன சொல்லுகியோ? நான் கண்ணடைச்சு உறங்கின ஓர்மையே இல்ல'

'நல்ல ஒரு பாம்பு கிட்டினா அதுக்குமேலே கிடந்து உறங்கிலாம்' என்றேன்

'பாயா?'

'பாம்பு-அதுக்கு வெஷமுண்டு இல்லா?'

அவள் என்னை புரிந்துகொண்டு 'ஓ- தலைக்கு வட்டாக்கும் இல்லியா?' என்றாள்

கல்லு வந்து எதுவுமே பேசாமல் அப்படியே படுத்து அக்கணமே தூங்கிவிட்டாள். நான் சாக்கடை ஓரமாக அமர்ந்திருந்தேன். மூன்றுபேர் திரும்பி வந்தார்கள்

'மொண்டி எங்க?'

'அங்கிண போட்டுட்டு போனாவ-நம்மால தூக்க முடியுமா?'

இருட்டுக்குள் இருந்து ஒரு பறவை சிறகடித்து பாலத்தடி வழியாக கடந்து சென்றது. வௌவாலாக இருக்கும். அத்தனை பேரும் தூங்க ஆரம்பித்தனர்.

நான் காலை நீட்டலாமா என யோசித்தேன். நீட்டினால் உருண்டு சாக்கடைக்குள் விழுந்துவிடுவேன். ஆனால் காலை நீட்டாமல் தூங்கினால் நாளைக்காலை நடக்கமுடியாது. காலை நீட்டி-

சற்றே என் எண்ணங்கள் தேய்ந்த கணத்தில் உரத்த குரலில் பாடல் ஒலிக்க ஆரம்பித்தது ' சாந்தாகாரம் புஜங்க சயனம் பத்மநாபம் சுரேசம்-'

நான் மறுநாள் ரயிலேறிவிட்டேன். பின்பு ரயில் என் சொந்தக்கிராமம் போல ஆகியது. இரும்பு ஒலிக்காத இரவுகள் இல்லை. நகரங்களினூடாக கோயில்களினூடாக ஆற்றங்கரைகளினூடாக. காலைநீட்டாமல் தூங்கப்பழகிக்கொண்டேன். அமர்ந்தும் நின்றும்கூட தூங்கமுடியும். முடிந்தவரை குறைவான இடத்தை எடுத்துக்கொண்டு அதற்காக உலகத்திடம் மன்னிப்பு கேட்டுக்கொண்டே உறங்குபவனாக ஆனேன்.

குவாலியர் மகாராஜா இந்த சலவைக்கல் ரயிலகத்துக்குப் பதிலாக ஒரு மாபெரும் கொட்டகையை கட்டியிருக்கலாம்.

அத்தனைபேரும் நீட்டி விரித்துப் படுத்துக்கொள்ளும்படியாக. இந்த சிறிய இடத்தில் ரயில்வேயின் நூற்றுக்கணக்கான பெட்டிகள், இறக்கிப்போடப்பட்ட சரக்குப்பொதிகள், இரும்புவண்டிகள், ஓடும்செருப்புக்கால்கள் நடுவே வாணலியில் இட்டு வதக்கியதனால் நீரிழந்து சுருங்கிச் சுருண்டது போன்ற மனித உடல்கள்.

ஒரு பெண் சற்றே விலகிக் கொண்டாள். அங்கே அவர்களின் கனத்த கம்பிளியும் சற்று விலகியிருந்தது. அங்கே அமர்ந்துகொண்டால் போதும் மெதுவாக என் இடத்தை எடுத்துக்கொள்ளலாம். என் உடலே சிறிது. என் உடலில் பாதி இடம்கூட எனக்குத்தேவை இல்லை. போபாலில் இருந்து நான்குநாட்களாக அரைத்தூக்கத்தில் ரயிலில் இறங்கி ஏறி கக்கூஸ் அருகே அமர்ந்தும் நின்றும் வந்திருந்தேன். அரை இரவுக்கு தூங்கினால் போதும். தூக்கம், அந்த வார்த்தையையே நினைக்கக்கூடாது. அதன் பின் உடலும் மூளையும் ஒரு அடிகூட முன்னால் எடுத்துவைக்காது.

கால்களை நீட்டிக்கொண்டேன். ஆனால் எச்சரிக்கையாக இருந்தும் அது அவள் மேல் பட்டுவிட்டது. அவள் விழித்து 'கியா?' என்றாள். நான் ஒன்றும் சொல்லவில்லை.எனக்கு இந்தி ஒரு சொல்கூட தெரியாது.

அவள் என்னை கூர்ந்து பார்த்தாள். ஒட்டிய முகம். செம்புழுதியாலானதுபோன்ற மூக்கும் வாயும் கன்னங்களும் எல்லாம் சுருக்கங்கள். கன்னங்களில் குத்தப்பட்ட பச்சைகூட சுருங்கியிருந்தது. மூக்கில் அலுமினிய வளையம். அவள் புன்னகைத்து மேலும் விலகி இடம் விட்டாள். என்னிடம் அவள் படுத்துக்கொள்ளச் சொல்கிறாள் என புரிந்தது

புன்னகையில் பதில் சொல்லிவிட்டு என் கால்களை அந்த இடைவெளியில் வைத்தேன். முதுகை வைக்க இடமிருந்தது. முதுகு தரையை அறிந்ததும் அத்தனை நரம்புகளும் அவிழ்ந்தன. கட்டுவிட்ட சுள்ளிமூட்டை போல நான் கலைந்து தரையில் பரவினேன்.

அரைமணிநேரத்தில் என் காலில் அடிவிழுந்தது. 'சாலா..உட்டோவ்ரே..உட்டோவ்..'

---

[புறப்பாடு II- 4,இரும்பின்வழி]

என்னை ஜோலார்ப்பேட்டையில் ரயிலில் இருந்து இறக்கிவிட்டார்கள். டிக்கெட் எடுக்கவில்லை. டிக்கெட் எடுக்கக் கூடாதென்று நினைக்கவில்லை. எங்கே செல்வது என்ற திட்டமில்லாமல் திருவனந்தபுரம் ரயில் நிலையத்தில் நின்றேன். மூன்றுநாள் திருவனந்தபுரத்தில் அலைந்தபின் ரயில் நிலையம் என்னுடைய இடமாக ஆகியது. நிறுத்திவைக்கப்பட்ட ரயில்களில் ரகசியமாக இரவு தூங்கமுடியுமென்பதை கற்றுக்கொண்டேன்

ரயிலில் எனக்கு ஓர் ஆறுதல் இருந்தது. தண்டவாளத்திலும் இரும்புச்சக்கரங்களிலும் இரும்பாலான கனத்த பெட்டிகளிலும் எல்லாம் ஓர் உறுதி இருந்ததை உணர்ந்தேன். ரயிலின் விசில், அதன் நெற்றியில் சுடரும் வெளிச்சம், அதன் நிதானமான தாளம் திட்டவட்டமாக அதிகரிக்கும் விதம் அனைத்துமே எனக்குப்பிடித்திருந்தது. ரயில் ஒரு கறாரான அப்பா. அல்லது தலைமை ஆசிரியர். அனைத்தையும் விட ரயில் நகரத்துக்குள் ஓடுவதில்லை. கேரளத்துக்குள் ஓடுவது கூட இல்லை. அது காசியில் இருந்தும் டெல்லியில் இருந்தும் வருவது. இந்தியாவை முழுக்க ஓடி அளந்துகொண்டிருப்பது

அன்றெல்லாம் ரயில்நிலையத்தில் எந்நேரமும் கூட்டம். திருவனந்தபுரம் ரயில்நிலையத்திற்குள் நுழைய பிளாட்பாரம் டிக்கெட் எடுக்கவேண்டியதில்லை. தண்டவாளத்தின் எல்லாப்புறங்களும் திறந்து கிடந்தன. முக்கால்வாசிப்பேர் ரயில்நிலையத்திற்குச் சம்பந்தமில்லாமல்தான் உள்ளே வருவார்கள், வெளியே செல்வார்கள். ரயில்நிலையம் முழுக்க எந்நேரமும் பெரும் கூட்டம் . இரைச்சலுடன் வந்து நின்ற ரயிலைக் கண்டதும் திறக்கப்பட்ட மடைகள் நோக்கி செல்லும் ஏரித்தண்ணீர் போல அத்தனைபேரும் ரயிலின்கதவுகளை நோக்கி குவிந்து உந்திப்பெருகிச்சென்றனர். அக்கணத்தில் நானும் முடிவெடுத்து அவர்களுடன் சென்று ஏறிக்கொண்டேன்.

சேலம்வரை என்னுடன் அந்த ரயில்பெட்டியில் பயணம்செய்தவர்களில் பாதிப்பேரிடம் டிக்கெட் இருந்திருக்காது என்பதில் சந்தேகமே இல்லை. பலவகையான கூலித்தொழிலாளர்கள், சிறுவணிகர்கள், பிறவகைத் தெருவுயிரிகள்தான் அதிகம். டிக்கெட் பரிசோதகர் உள்ளே வந்து வெளியே செல்லமுடியாது. அந்த அளவுக்குக் கூட்டம். ஆணும்பெண்ணும் அனைத்துப்பண்பாட்டுச்சுவர்களையும் தாண்டி பிதுங்கி ஒன்றாக மாறிய உடல்தொகுதி. பல அடுக்குகளாக மக்கள். தரையில் ஓர் அடுக்கு. பெஞ்சுகளில் அமர்ந்திருப்பவர்கள் இன்னொரு அடுக்கு. மேலே தட்டுகளில் அமர்ந்திருப்பவர்க்ள் மூன்றாம் அடுக்கு. முகங்களும் கால்களும் வயிறுகளும் எல்லாம் ஒன்றுகலந்த தசைப்பரப்பு

அன்று வளைகுடாப்பணத்தின் வருகையால் கேரளம் முழுக்க கட்டிடங்கள் கட்டிக்கொண்டிருந்தார்கள். மேற்குமலைக்கு இந்தப்பக்கம் தமிழகம் தொடர்ந்து மழையில்லாமல் கிடந்தது. திருப்பூரும் ஈரோடும் மக்களைக் கைவிட்டன. நாமக்கலும் கரூரும் உருவாகி வரவில்லை. தமிழகத்தின் வறண்டபகுதிகளில் இருந்து கூட்டம் கூட்டமாக மக்கள் பஞ்சம்பிழைக்கக் குடிபெயர்ந்துகொண்டிருந்தனர். கேரளத்தின் தெருக்கள் முழுக்க தமிழர்கள் வாழ்ந்தனர். கட்டப்படும் கட்டிடங்களின் அடியில் செங்கல்லடுக்குகளுக்கும் மணலுக்கும் சிமிண்ட்மூட்டைகளுக்கும் நடுவே சாக்குப்படுதா கட்டி குடும்பங்கள் தங்கியிருந்தன. நடைமேடையில் சமைத்து உண்டு தார்ப்பாய்களுக்கு அடியில் தூங்கினர்.இந்தியாவின் அனைத்து நகரங்களிலும் தமிழர்கள் மழைநீரில் வண்டல் வந்து படிவதுபோல சாலையோரங்களில் சேர்ந்துகொண்டிருந்தனர்.

தென்கேரளத்தில் ராமநாதபுரம் கோயில்பட்டிக்காரர்கள் அதிகம். வடகேரளத்தில் அதிகமும் சேலம் மாவட்டத்தினர். வேலூர்மாவட்டத்தினர் பெங்களூரில். மும்பையில் எல்லாருமே கலந்திருந்தனர். ஒவ்வொருவருக்கும் ஒருவகைத் தோற்றமிருந்தது. வடதமிழகத்தினருக்கு வழுக்கை அனேகமாக இருப்பதில்லை. முன்நெற்றியில் செம்பட்டை ஓடிய முடி கொத்தையாக துருத்தி நிற்கும். பெண்கள் கனத்தகூந்தலை பெரிய சுருளாகச் சுருட்டி வைத்திருப்பார்கள்.

தென்தமிழகத்தினர் பெரும்பாலும் வழுக்கை. பெண்கள் பசுவின் வாலளவுக்கே கூந்தல் கொண்டவர்கள். வடதமிழகத்தில் ஆண்கள் சிவந்தபட்டி போட்ட காடாத்துணி அண்டர்வேர் போட்டிருகக் தென்தமிழகம் முழுக்க நீலநிற கெட்டிக்கால்சட்டைதான் அடியில். வடதமிழகத்தினருக்கு உடலில் உப்புவீச்சம் என்றால் தென்தமிழகத்தினருக்கு வெடிமருந்துகலந்த உப்புவாடை.

ரயிலின் பொதுப்பெட்டிகளில் எல்லாம் மெலிந்த கரிய உடலும், அழுக்கு உடையும், கறைபடிந்த பற்களும், வறண்டபுல் போல பரட்டைத்தலைமயிரும்கொண்ட கிராமத்துமக்களின் உரத்தபேச்சுகள், கூச்சல்கள். அலுமினியப்பானைகளையும் பிளாஸ்டிக்சாமான்களையும் வெள்ளையாகப்பிய்ந்து நூல்வழியும் நைலான் உரச்சாக்குப்பையில் போட்டு கட்டி எடுத்துக்கொண்டு ஆண்கள். பிய்ந்த தோள்பைகளிலும் துருப்பிடித்த டிரங்குப்பெட்டிகளிலும் துணிகளைத்திணித்து தலையிலும் தோளிலும் தூக்கிக்கொண்டு இடுப்பில் கைக்குழந்தைகளுடன் பெண்கள். அக்காக்களின் இடுப்பிலும் அண்ணாக்களின் பிடியிலும் அம்மாக்களின் அதட்டல்களும் கட்டுப்பட்டு எண்ணை ஒட்டிய தலைமயிரும் , மூக்குப்பீ பக்கவாட்டில் தீற்றப்பட்ட கன்னங்களும், பெரிய சோழிக்கண்களும் கொண்ட குழந்தைகள் ஆர்வமிரட்சியுடன் ஒவ்வொன்றையும் பார்த்துக்கொண்டு ஐந்துபைசா வெல்லமிட்டாய்களை சப்பின. அனேகமாக கிழவிகளோ கிழவிகளோ பெரும்பாலும் கண்ணில்படுவதில்லை. அவர்களை எல்லாம் எப்படி எங்கே விட்டுவிட்டு இவர்கள் கிளம்பினார்கள்?

கழிப்பறைகளைத் திறந்து உள்ளேயும் ஆட்கள் குந்தியிருந்தார்கள். இறுக்கிச்செருகப்பட்ட கூட்டத்தில் இருந்து எழுந்திருக்கமுடியாமையால் ஆட்கள் தரையிலேயே மௌனமாக சிறுநீர் கழித்தனர். இருமி இருமி கீழேயே காறித்துப்பினர் சிறுநீரும் சளியும் பெட்டிமுழுக்க மிதிபட்டன. எவரும் சாப்பிடுவதுபோலவோ தண்ணீர்குடிப்பதுபோலவோ தெரியவில்லை. அவர்களெல்லாருமே வேலைசெய்து சேர்த்த சிறிய தொகைகளுடன் ஊருக்குச் செல்பவர்கள். கல்யாணங்கள், சாமிகும்பிடுதல்கள், திருவிழாக்கள் ஏதாவது இருக்கும். எல்லாருக்கும் ஏதோ ஒரு போதை இருந்தது. பெண்கள் நார்நாராக புகையிலையை கிழித்து கடைவாய்க்குள் செருகிக்கொண்டனர். ஆண்கள் பாக்கைத்தட்டி கசக்கி வாய்க்குள் போட்டு அதக்கினர். கன்னங்கள் குழிந்து இழுபட பீடி இழுத்தனர். மூக்குப்பொடியை மூக்கிலும் ஈறுகளிலும் தடவிக்கொண்டனர். பசிக்காமல், தாகமெடுக்காமல் இருக்க அது உதவுகிறதா என்ன?

அன்றுதான் அவர்களில் ஒருவனாக ஆனேன். மிக எளிதாக என் உடல் அவர்களுடன் கலந்து அடையாளமிழந்தது. உண்மையில் என் உடலை வேறு மனித உடல்கள் நான்குபக்கமும் நெருக்கியபோது ஓர் ஆழ்ந்த நிம்மதியை உணர்ந்தேன். என் உடல் பலபக்கங்களிலும் சிதறி பரவுவதாக ஒரு பிரமை என்னை துரத்தியிருந்தது அன்று. அது இனிமேல் சாத்தியமில்லை. என்னை இவர்கள் அழுத்திப்பிடித்து நானாகவே வைத்திருப்பார்கள். வெம்மையான மென்மையான உடல்கள். மனிதவாடை

பெஞ்சை ஒட்டி நின்றிருந்தவன் கால்கடுத்தபோது அமர்ந்தேன். தூக்கம் வந்து உடலை பெரிய எடையாக உணரச்செய்தபோது சாய்ந்துகொண்டு கண்ணயர்ந்தேன். அதன்பின்பு காலடியில் இடமிருப்பதை கண்டேன். மர இருக்கைகளுக்கு அடியில் அமர்ந்திருப்பவர்களின் கால்களுக்கு அப்பால் ஆட்கள் தூங்கிக்கொண்டிருந்தனர். காலைநீட்டி உள்ளே சென்றேன். சில கணங்கள் அந்த தூசும் நாற்றமும் சூழ்ந்துகொண்டாலும் முதுகு அபாரமான இதத்தை உணர்ந்தது. என்னைச்சுற்றில் கால்களால் ஆன புதர்க்காடு. ரயிலின் அதிர்வு நேரடியாகவே உடலுக்கு வந்தது.

ரயில் ஏதோ சொல்லிக்கொண்டிருந்தது. உறுதியாக, திட்டவட்டமாக. ஆளப்புடி ஆளப்புடி என்று அது சொல்வதுபோல முதலில் தோன்றியது. பின்னர் டெல்லிட்டக்கு டெல்லிட்டக்கு என்று தோன்றியது. அதிவேகமான டெல்லிட்டக்கு. பின்பு எங்காவது வேகம் குறைகையில் டெல்ல்லி ட்ட்டக்க்கு என்று அழுத்தமாக. நிலையத்தில் நிற்கையில் ஒரு பெரிய இரும்புமுனகலுடன் டெல்ல்லீ.. பின்பு ஓர் உக்கிரமான பெருமூச்சு. மீண்டும் ஒரு சீறல். டெல்லீ டாக்கூ..இரும்புப்பாலங்களில் ஏறும்போது அந்த உச்சரிப்பு ராட்சதனின் அலறலாக ஆகிறது. டெல்லீ டக் டெல்லிட் டக்.

டெல்லி. அது எங்கே இருக்கிறது. இந்தியாவின் தலைநகரம். இந்தியாவில் ஓடும் எல்லா ரயில்களும் டெல்லியைப்பற்றிச் சொல்லிக்கொண்டிருக்கின்றன. டெல்லி வெள்ளைக்காரனின் நகரம். ரயிலும் வெள்ளைக்காரன் போட்டது. 'வாழைக்கொலைய மணிப்பொச்சம்கயிறு போட்டு கட்டுறமில்லாலே? அதமாதிரி ரயில்பாதைய போட்டு வெள்ளக்காரன் இந்தியாவ ஒண்ணா கட்டினான்' தங்கையாநாடார் சாரின் வகுப்பு. அதன்பின் சுதந்திரம் கிடைத்தது. காந்தி நேரு சர்தார் வல்லபாய்பட்டேல் அம்பேத்கர்.செங்கோட்டை டெல்லியில்தான் இருக்கிறது. குதுப்மினார் டெல்லியில்தான் இருக்கிறது. டெல்லி..டெல்லி டக் டெல்லி டக்அதன்பின் தூங்கிவிட்டேன்

ஈரோட்டிலேயே பாதிக்கூட்டம் இறங்கிவிட்டது. சேலத்தில் மிச்சம்பேரும் சென்றுவிட்டார்கள். சேலத்திலிருந்து வேறுவகையான மக்கள் வண்டிகளில் ஏறியிருப்பதை குரல்கள் வழியாக உணரமுடிந்தது. அதிகமும் வேலைகளுக்குச் செல்லக்கூடியவர்கள். கல்லூரிமாணவர்களின் சிரிப்புகளும் கேட்டன. கால்களில் தொட்டபோது இருவர் பதறி எழுந்தார்கள். ஊர்ந்து வெளியே வந்தேன்

'இவன் யார்ரா? உள்ள போயி படுத்திருக்கான்'

'டேய் டிக்கெட் இருக்காடா?'

பதில்சொல்லாமல் சற்று நகர்ந்து அமர்ந்து அவிழ்ந்த கால்சட்டையை இறுக்கியபின் எழுந்துகொண்டேன். காலை எட்டுமணி ஆகியிருக்கும். நல்ல வெயில் வெளியே. வெயில்குளித்த மரங்களும், வெயிலில் சாயம்போன மண்சாலைகளும், வெயிலைப்பிரதிபலித்த ஓட்டுக்கூரை வீடுகளும் சென்றுகொண்டிருந்தன. கழிப்பறைக்குச் சென்றபின் வாசலருகே நின்றுகொண்டேன். தாகமெடுத்தது. கழுவுதொட்டிநீரைக் குடித்தேன்.

டிக்கெட் பரிசோதகர்கள் ரயில்நிறுத்ததில்தான் ஏறுவார்கள் என்று நினைத்துக்கொண்டிருந்தேன். அவர்கள் உள்ளே

உள்ள வழியிலூடாக வருவார்கள் என்பது அதிர்ச்சியூட்டக்கூடியதாக இருந்தது. கரிய உருண்ட முகமுள்ள நடுத்தரவயது பரிசோதகரைப்பார்க்க வழக்கறிஞர் போலிருந்தார்.அவரைப்பார்க்காமல் மெல்ல நடுங்க ஆரம்பித்தேன். அவர் நேராக என்னைப்பார்த்து 'டிக்கெட் இருக்காடா?' என்றார். பேசாமல் நின்றேன்

'எடுடா ஃபைன எடு'

ஒருகணம் அனிச்சையாக பணத்தை எடுக்கப்போனேன். உடனே கட்டுப்படுத்திக்கொண்டேன். எச்சிலை விழுங்கிவிட்டு பேசாமல் நின்றேன்

'வித்தவுட்டுன்னா இப்பல்லாம் ஆறுமாசம் ஜெயில், தெரியும்ல? வக்காளி, வந்து ஏறிடுறானுங்க'

வெளியே குதித்துத் தப்பி ஓடமுடியுமா என்று பார்த்தேன். ரயில் அத்தனை வேகத்தில் ஓடக்கூடியதென்பதை அப்போதுதான் புரிந்துகொண்டேன். ஓரத்து கம்பித்தூண்கள் விம் விம் என பறந்து பறந்து சென்றுகொண்டிருந்தன

'பணம் இருக்காடா?'

'இல்ல'

'பின்ன உங்கப்பன் ஊட்டுச் சொத்துன்னா ஏறினே?'

பேசாமல் நின்றேன்

'என்னடா தாளி லுக்கு உடறே?'

அவர் அடிக்க கை ஓங்க அனிச்சையாக உடலைக்குறுக்கிக் கொண்டேன்

'பேசாம பணத்த வை-இல்லேன்னா நேரா ஜெயிலுக்குப்போ-என்னடா?'

என்னருகே நின்ற வேறு இருவரிடமும் டிக்கெட் இல்லை என தெரிந்தது. அவர்களும் தலைகுனிந்து சுவரோடு ஒண்டி நின்றார்கள்.

அவர் திரும்பி 'இருடா உனக்கெல்லாம் இருக்கு-டேய் நீ வித்தவுட்டா?'

அவரும் டிக்கெட் இல்லாதவர்தான். ஐம்பதுவயதான அழுக்குச்சட்டை மனிதர். நரைத்த தலை நீர்க்காவி பிடித்த வெள்ளைத்துண்டு போலிருந்தது. காரை படித்த பற்கள். செத்துப்போனவை போன்ற கண்கள்.

'நாயே நாயே நாயே-மானம்கெட்ட நாயே-எதுக்குடா வண்டியிலே ஏறுறே? காசில்லேன்னா போயி தண்டாளத்திலே தலைய வைக்கவேண்டியதுதானே? கருமாந்தரம்-இவனுகள நாம கட்டிமேய்க்கவேண்டியிருக்கு'

பரிசோதகர் உள்ளே சென்று டிக்கெட் இல்லாத கும்பல்களை ஓரமாக சென்று நிற்கச்சொல்லிக் கத்திக்கொண்டிருந்தார்.

பத்திருபதுபேர் என்னுடன் வந்து கக்கூஸ் அருகே நின்றுகொண்டிருந்தனர். ஒருபெண் வயிறுவரை தொங்கி வந்த முலையை தூக்கி இடுப்பிலிருந்த பிள்ளை வாயில் வைத்தாள். அது துப்பிவிட்டு கையால் காலை உதறி அழுதது. மூக்குச்சளி இளம்பச்சை நிறத்தில் உதடுவரை வழிந்து உறைந்து நின்ற குழந்தை. சுள்ளிபோன்ற கைகால்கள்.

நரைத்தலைக்காரர் என்னிடம் 'எந்தூருக்கு போறே?' என்றார்

'திருப்பதி' என்றேன்

'இந்த ரயிலு திருப்பதி போகாது-ரேனிகுண்டா போயி அங்கிட்டு போட்டுருவான்-நா முச்சூடும் அங்கிட்டுதான் கிடக்கும்-மறுக்காநாள் ராத்திரிதான் எடுப்பான்'

'நீங்க எங்க போறீங்க?'

'பாம்பே பக்கமா போறேன்-அங்கதான் சோலி-வீடு செவாசி பக்கம்-பொண்ணு வயசுக்குவந்துட்டானு வந்துட்டு போறேன்'

'டிக்கெட் எடுக்கலியா?'

'எங்க எடுக்க? எடுத்தா கூலி அதுக்கே போயிரும்- இந்தமட்டும் குட்டிக்கு ஒரு சீலையும் சாக்கெட்டும் வாங்கி ஆயிரம் ரூவாய ஊட்ல குடுத்திட்டு வந்ததுக்கே இன்னும் நாலுமாசம் பீயத்திங்கணும்-செரி-ஏதோ இந்தமட்டுக்கும் சோறுதண்ணியோட சீவன் நிண்ணுபோவுதுல்ல- நீ திருப்பதிக்கு ஏன் போறே?'

'தெரிஞ்சவுங்கள பாக்க'

'பைனு குடுக்க பைசா இருக்கு இல்ல..பாக்கெட்ட தொட்டுப்பாத்தப்பம் தெரிஞ்சுது..'

'ம்'

'குடுக்கவேண்டாம்.. ஒண்ணும்செய்ய மாட்டான் பாத்துக்க..அப்டியே ஜொலார்பேட்டிலே எறக்கி விட்டிருவான்..ஒரு மணிநேரத்திலே அடுத்த ரெயிலு வந்திரும்.. ரேனிகுண்டாவிலே இந்த ரயிலயே மறுக்கா புடிச்சிருவேன்'

'பாம்பேயிலே வேல பாக்கிறீங்களா?'

'பாம்பேண்ணு இல்ல.. பூனாவுக்கும் பாம்பேக்கும் நடுவிலே..லோனாவாலாண்ணு ஒரு எடம்..அங்கிட்டு இப்ப புதிசா ரயிலும் ரோடுமெல்லாம் போடுறான். நம்மாளுகதான் வேலை முச்சூடும் செய்றது..ஆயிரக்கணக்கிலே இருக்கானுக'

'ஓ'

அதற்குள் கக்கூஸ் அருகே நிற்க இடமில்லாமல் கும்பல். எல்லாருமே அழுக்கும் தூசியும் வியர்வையுமாக இருந்தனர்

'முக்காவாசிப்பேரு லோனாவாலாவுக்கு போறவுகதான்..'

'எப்பிடித்தெரியும்?'

'பாதிப்பேரு புள்ள குட்டிகளோட சும்மா அப்டியே ரயிலிலே ஏறுவானுக. ரயிலிலே லோனாவாலா போறகும்பல்கிட்ட பேசுறது. சேந்துக்கிறது..'

'கேரளத்துக்கு போற மாதிரியா?'

'கேரளத்துக்குப் போறதானா தொளில் தெரிஞ்சிருக்கணும்..மண்ணுவேல கல்லுவேல கொலுத்துவேல..இந்தமாதிரி வத்தல்வதங்கலை எல்லாம் எடுக்கமாட்டான். அங்க மேஸ்திரிகள் பயங்கர கெத்தாக்கும். லோனாவாலாவிலே எவன் போனாலும் வாடான்னுருவான்..மண்ணும் கல்லும் அள்ளிப்போடுற வேல தானே?'

அவர் பீடிபற்றவைத்த அதே கணம் பரிசோதகர் வந்தார். அவர் பீடியை தரையில் போட்டு மிதித்துவிட்டு உறைந்த முகத்துடன் நின்றார்

'உங்க அம்மாவ ஓளுறவனாடா வண்டிய விட்டுருக்கானுங்க? தாயளி எங்க தாலிய அறுக்கிறதுக்குண்ணு ஏண்டா வாறிங்க? ஏய் எந்தூருடீ ஒனக்கு?'

அந்தப்பெண் 'வடக்கூரு' என்று ஏதோ சொன்னாள். சத்தம் எழவில்லை

'பைசா இருக்காடி ஃபைனு கட்ட?'

அவள் தலையசைத்தாள்

'கூதி வச்சிருக்கேல்ல? உள்ள போயி நாலுபேருக்கு விரிச்சுக் குடுத்து கொண்டு வந்து கட்டுடீ..தேவ்டியா நாயி' அவளருகே நின்ற கரிய மனிதனிடம் 'நீ யார்ரா?'

அவன் பேசாமல் நின்றான்

'யார்ரா நீ? இவளுக்கு யாரு?'

'என் ஊட்டுக்காரிங்க'

'நீயும் அவ கூட போயி ஊம்பு..போடா'

அவன் பேசாமல் நின்றான்

'பைன் கட்டலீண்ணா ஜெயிலுதான்.. எங்கள என்ன கேனையன்னு நெனைச்சுட்டீங்களாடா? மானங்கெட்ட சென்மங்க.. ஆய் த்தூ..' அவன் முகமெல்லாம் அவரது எச்சில் வழிந்தது. அவன் தலைகுனிந்தான்.

அவர் இன்னொரு வட்டம் சென்றுவிட்டு வந்தபோதும் நாங்கள் அப்படியே நின்றிருந்தோம். ரயில் ஜோலார்பேட்டையை அடைந்தது. அவ்வளவு சின்ன ஊரில் அவ்வளவு பெரிய ரயில் நிலையம் என எதிர்பார்க்கவில்லை

'டேய் தேவ்டியா புள்ளைங்களா..எல்லாரும் எறங்குங்கடா..நேரா ஸ்டேஷனுக்கு நடங்க'

*‘சாமி..அய்யா..ஏழைச்சனம் அய்யா..பஞ்சம் பொழைக்க போறம்யா’*

*‘பஞ்சம் பொழைக்கிறதனா போயி எங்கியாம் பிச்ச எடுங்கடா நாயிங்களா..இங்க ஏறி எதுக்குடா என் தாலிய அறுக்கிறீங்க’*

*‘அய்யா சாமி..தொரை..சார்’ எல்லாரும் சேர்ந்து விதவிதமான குரலில் முனக அந்த கூட்டமே நிறையகால்களும் நிறைய கைகளும் கொண்ட ஒரு விசித்திர மிருகம் போல ஓலமிட்டது.*

*நரைத்தலைக்காரர் என்னிடம் சும்மா என்று உதட்டைக்குவித்துக்காட்டினார்*

*ரயில் ஊதியது. பரிசோதகர் ரயிலில் தொற்றி ஏறிக்கொண்டார்*

*‘உங்களையெல்லாம் போலீஸிலே ஒப்படைச்சு முட்டிய ஒடைக்கத்தெரியாம இல்ல.. பிச்சக்காரத்தாயளிங்களா..இப்ப எனக்கு வேற வேலை இருக்கு.. போயிச்சாவுங்கடா’*

*ரயில் வேகமெடுத்தது. ஒருபெரிய மிருகம் நின்று மலம்கழித்துவிட்டுச் செல்வதுபோல. அதன் பின்பக்கம் மறைந்தது. மலக்குவியல் நீரில் பிரிவதுபோல மெல்ல கூட்டம் கலைந்து நீளமாக ஆகியது.*

*ரயில் ஒலி மறைந்ததும் எல்லாரும் இலகுவாகிக் கலைந்தனர். பிள்ளையை வைத்திருந்தவள் மெல்ல விசும்பி அழுதுகொண்டிருந்தாள்*

*‘த புள்ள எதுக்கு அழுறே? அவன் என்ன கையைப்புடிச்சா இளுத்தான். அவன் ரயிலுக்கு அதிகாரி.. சர்க்காரு ரயிலு அவனுக்க சொத்து..அவன் நாலு வார்த்த சொல்லத்தான் செய்வான்..ஓசியில ஏறி வந்தேல்ல..சும்மா கெட’ என்றார் நரைத்தலையர்*

*அவள் முந்தானையால் மூக்கையும் கண்ணையும் துடைத்தாள். அவள் கணவன் அவளிடமிருந்து குழந்தையை வாங்கிக்கொண்டான்.*

*நரைத்தலையர் ‘ஒரு மணிநேரத்திலே திருப்பதி பாசஞ்சர் வரும். அதிலே செக்கர் ஏறமாட்டான்..கூட்டமும் பெரிசா இருக்காது..’ என்றார்*

*அத்தனைபேரும் அமர்ந்துகொண்டார்கள். அருகிலேயே சிமிண்ட் பெஞ்சுகள் இருந்தபோதும் எல்லாரும் தரையில்தான் அமர்ந்தார்கள். இருகிழவிகள் தரையில் நன்றாக காலை விரித்து சப்பணமிட்டு அமர ஆண்கள் குந்தி அமர்ந்தனர். ரயில்நிலையம் மிகப்பெரியது. ஆனால் அங்கே அதிகம்பேர் இறங்கவோ ஏறவோ இல்லை. சில நிமிடங்களிலேயே மொத்த நடைமேடையும் காலியாக விரிந்து கிடந்தது. ஆனால் அவர்கள் ரயிலுக்குள் இருந்ததுபோல குறுகி ஒடுங்கி ஒருவரோடொருவர் ஒண்டிக்கொண்டு அமர்ந்திருந்தார்கள்.நடைமேடையில் விதவிதமான பொருட்கள் குவிந்துகிடந்தன. அவற்றைப்போல ஒரு மனிதக்குவியல்*

*எனக்கு ஒரு டீ குடிக்கவேண்டும் போலிருந்தது. ஆனால் தனியாகவிலகிச்சென்று டீ குடிக்கவும் தயக்கமாக உணர்ந்தேன். உண்மையில் நான் அவர்களில் ஒருவனாக அங்கே இருப்பதை விரும்பவில்லை. நான் வேறு என்றுதான் என் மனம் எண்ணியது. ஆனால் அவர்களுடன் சென்றால் தைரியமாக டிக்கெட் இல்லாமல் எங்கும் செல்லமுடியும். எங்கே எங்களை பிடித்தாலும் துணைக்கு அத்தனைபேர் இருப்பார்கள்.*

*அதேசமயம் நான் உயர்ந்த சாதி என்பதை காட்டிக்கொள்ள விரும்பினேன். அங்கே தள்ளி நின்று எவரோ எங்களைப்பார்த்துக்கொண்டிருப்பதுபோல ஓர் அர்த்தமற்ற கற்பனை. அவர் என்னைப்பார்த்தாலே இவன் உயர்ந்தசாதிக்காரன் என்று நினைக்கவேண்டும். இந்த பஞ்சத்துக்கூட்டத்தில் இவன் எப்படிச் சேர்ந்தான் என்று வியக்கவேண்டும். அந்த எண்ணம் என்னையறியாமலேயே என் உடலில் ஒரு அலட்சியபாவனையை உருவாக்கியது. அது ஒரு கோணலாக என் இடுப்பில் வெளிப்பட்டது. எப்போதும் என் வாழ்க்கையை யாருக்கோ நடித்துக்காட்டிக்கொண்டிருப்பதுபோன்ற பிரமை என் பதின்பருவம் முழுக்க கூடவே இருந்துகொண்டிருந்தது.*

*நரைத்தலையர் என்னிடம் ‘தம்பி வா..’ என்றபின் நடந்தார். அவரை பின் தொடர்ந்தேன்*

*‘ஒரு டீயப் போடுவமா?’*

*‘அவங்க?’*

*‘அதுகளுக்கு பைசா இருந்தா அதுக குடிக்கும்ங்க..அதெல்லாம் பாத்தா வயிறு காஞ்சிரும் தம்பி..தம்பியப்பாத்தா ராத்திரி பட்டினின்னு தெரியுதே’*

*‘எப்பீடீ?’*

*‘நானும் ராத்திரி பட்டினி..அதனாலத்தான்’ என்று சிரித்தார்.*

ரயிலில் டீ விற்பவர் கூடையை பெஞ்சில் இறக்கியிருந்தார். ஒரு பெரிய வட்டி நிறைய பொறையும் இருந்தது

‘சாமி ரெண்டு டீ,ரெண்டு பன்னு’

அவர் டீயில் பன்னை நனைத்து தின்ன ஆரம்பித்தார். பலர் அப்படிச் செய்வதைக் கண்டிருந்தாலும் ஏன் என்பது பன்னைத் தின்றதும் புரிந்தது. பன் என் பசித்து வறண்ட தொண்டையைத் தாண்டி இறங்கவில்லை. மேலே டீயை உறிஞ்சி விழுங்கினேன்.

அவர் டீ குடித்தபோது மெல்லிய கழுத்தில் நரம்புகளும் குரல்வளையும் நெளிந்தன. மீனை விழுங்கும் கொக்குபோல ஓர் அசைவு. ‘பசி செத்துப்போச்சு தம்பி..அந்தக்காலத்திலே எங்கூர்ல நாந்தான் பெரிய தீனிக்காரன். மாரியம்மன் கோயில் திருளாலே கூளு குடிக்கிற போட்டி உண்டு. ஒரு வெங்காயம் பச்சமுளகா எடக்கையிலே வச்சுட்டு நாலுபோணி கூளை எடுத்து சாத்திருவேன்ல..கைகாலெல்லாம் சும்மா கரணை கரணையா இருக்கும்..அப்ப ஊர்ல வெள்ளாமையும் இருந்தது. புஞ்சையிலே வத்தலு நல்லா வரும். கம்மாய் வரண்டாக்கூட ஒரு சாரலு அடிச்சுச்சுன்னா சோளம் கம்புண்ணு போட்டிருவோம்..’ பெருமூச்சுடன் டீயின் கடைசி மிச்சத்தை நாக்கில் விட்டுக்கொண்டார்.

டீ குடித்தபோது எனக்கு குமட்டியது. இன்னொரு டீ குடித்தால்தான் பசித்த வயிறு அடங்குமென தோன்றியது. ஆனால் அடக்கிக்கொண்டேன். டீக்கு நான்தான் பணம் கொடுத்தேன்

‘ஒரு பன்னு குடு சாமி’

டீக்கடையில் இருந்து ஒரு பன் மட்டும் வாங்கிக்கொண்டார். திரும்பி நடக்கும்போது ‘தம்பிக்கு எங்கிட்டு?’ என்றார்

சட்டென்று அப்போது தோன்றிய ஒரு கதையைச் சொன்னேன். ஊரில் யாரும் இல்லை. அனாதை. தாய்மாமன் வீட்டில் நின்று வளர்ந்தேன். அவர் அடித்துத் துரத்திவிட்டார்

‘படிப்பு உண்டா?’

‘எட்டாம் கிளாஸ் படிச்சேன்’

‘எட்டாம் கிளாஸுக்கெல்லாம் இப்ப என்ன தம்பி வேல? ஒண்ணும் பேராது’ என்றார் ‘நம்ம பேரு சின்சாமி. அந்தக்காலத்திலேயே நாலாப்பு பாஸ்..தந்திப்பேப்பரு படிப்பேன் அப்பல்லாம்..இப்ப படிக்கிறதில்ல..படிச்சு என்னத்துக்கு? நம்ம பொழப்பு நாறிக்கெடக்கு’

கும்பலை அணுகியதும் அந்த பன்னை குழந்தையிடம் நீட்டி ‘இந்தாடா..தின்னு’

குழந்தை பாய்ந்து ஓடிவந்து பன்னை வாங்கிக்கொண்டது. அதை எவரேனும் பிடுங்கிவிடுவார்களா என்பது போல மார்போடணைத்துக்கொண்டு உதட்டைத்துருத்தி சந்தேகத்துடன் பார்த்தது. அதிக சந்தேகம் என்மீதுதான்

‘தின்னுடா..தண்ணிலே தொட்டு தின்னு’

அந்தப்பெண் குழந்தையை தூக்கிக்கொண்டு குழாயடிக்குச் சென்றாள். அதை நிறுத்திவிட்டு அந்த பன்னை கேட்டாள். அது கொடுக்காமல் திரும்ப முயல பிடித்துத் திரும்பச்செய்து அதைப்பிடுங்கினாள். குழந்தை ‘ஆ ஆ’ என்று கைநீட்டி காலை மாறி மாறி உதைத்துக்கொள்ள குழாயைத் திறந்து அந்த பன்னை அதில் நனைத்தாள். அவள் பன்னைப் பிய்த்து குழந்தைக்குக் கொடுக்க அதை வாய்க்குள் போட்டுக்கொண்டு மிச்சத்துக்காக கைநீட்டி துள்ளியது. அவள் மறுபக்கம் திரும்பிய கோணத்தில் சட்டென்று பாதி பன்னைத் தன் வாய்க்குள் திணித்துக்கொள்வதை கவனித்தேன்.

ஒன்றரை மணிநேரத்தில் அடுத்த ரயில் வந்தது. அதில் சின்னச்சாமி சொன்னதைப்போல அல்லாமல் நல்ல நெரிசல் இருந்தது. ஆனால் பெரும்பாலானவர்கள் திருப்பதி செல்லும் பக்தர்கள். பலவகையான பாத்திரங்கள்,பெட்டிகள். நாங்கள் ஏறிக்கொண்டு கழிப்பறை அருகிலேயே கூட்டமாக அமர்ந்துகொண்டோம்

‘ஒண்ணும்பெரிய கஸ்டமில்ல தம்பி..வண்டி அப்டியே ஓடீரும்..மாசமானா கையிலே கொஞ்சம் காசும் நிக்கும்..எல்லாம் ஊருலே பட்ட கஸ்டம்தான்..வெய்யக்காலம் தாண்டியாச்சுண்ணா ஒருமாதிரி மப்பும்மந்தாரமுமா வேலைசெய்ய ஏத்தமாதிரித்தான் இருக்கும்..’

‘வெயிலிலே?’ என்றேன்

‘அதெல்லாம் நாம பாத்ததுதானே? நம்மூரு கரிசக்காட்டுல அடிக்காத வெயிலா? கெந்தகமாக்குமே’

அவர் சொல்லிவர வர எனக்குள் ஒரு சித்திரம் உருவம்பெற்றது. அந்தமனிதர்களுக்கு நடுவே சென்று சேர்கிறேன். அவர்களுடன் உழைக்கிறேன். அவர்களுடன் வாழ்கிறேன். அவர்களுக்கு உரிமைகளைக் கற்றுத்தந்து அவர்களை ஒருங்கிணைக்கிறேன். அவர்கள் என்னை தலைவனாகக் கொண்டாடுகிறார்கள்! நினைக்கவே உற்சாகமாக இருந்தது. எனக்கு நன்றாகவே ஆங்கிலம்வாசிக்கவும் எழுதவும் தெரியும் என்றும் பட்டப்படிப்புவரை படித்தவன் என்றும் தெரியாமல் என்னை அங்கே வேலைக்கு வைத்துக்கொள்கிறார்கள். நான் பொதுவுடைமைதான் என்ன வாசித்திருக்கிறேன். மார்க்ஸின் வாழ்க்கை வரலாற்றையும் இ.எம்.எஸ்சின் புத்தகங்களையும் வாசித்திருக்கிறேன். சகாவு

பி கிருஷ்ணபிள்ளை நெய்யூரில் அப்படி அடிமைவிவசாயியாக வேலை பார்த்தார். சே குவேரா கரும்புவயல்களில் வேலைபார்த்தார் என்று ரவீந்திரனின் புத்தகத்தில் வாசித்திருக்கிறேன். கிருஷ்ணபிள்ளை வேண்டாம். ஆம், சே!

'நானும் வாறேன்'

'வேல செஞ்சுபளக்கமுண்டுதானே?'

'வெவசாயவேலைகள் செய்வேன்'

'அது போரும்_ ' என்றார். 'பின்ன அங்கிட்டு ஔச்சங்கள்ளு கிடைக்கும். குடிக்க ஆரம்பிச்சா ஒண்ணும் மிஞ்சாது'

ஆந்திரத்தில் இன்னொரு ரயிலில் ஏறிக்கொண்டோம். அங்கிருந்து போபால். அங்கிருந்து பூனா. அங்கிருந்து ஒரு ஒரு டிரக்கில் லோனாவாலா. சின்னச்சாமியுடன் ஒரு நூறுபேர் சேர்ந்துகொண்டார்கள். அவர் அங்கே எப்படி இருக்கும் என்பதைச் சொல்லிக்கொண்டே இருந்தார். 'பஞ்சம்பொளைக்கண்ணு கௌம்பிட்டோமுண்ணா பின்ன மானம் மரியாத பாக்கப்படாது. இந்த பண்ணிய காட்டுல பாத்திருக்கிங்களா? பண்ணி காட்டுக்கு அரசனாக்கும். சிறுத்தை அதைக்கண்டா வால கவட்டையிலே செருகிப்போடும். ஊருக்குள்ள கொண்டு வந்து வளத்தானுங்க. தீனி இல்லாம அது பீயத்திண்ண ஆரம்பிச்சுப்போட்டு-இப்ப பண்ணி கடிச்சு செத்த எவனையாவது கேள்விப்பட்டிருக்கீங்களா? இல்ல-ஏன் இல்ல? பீயத்திங்கிற ஜென்மத்துக்கு என்னத்தை கடிக்கத்தோணும்-என்ன நான் சொல்றது?'

ரயிலுக்கு வெளியே மெல்லச் சுழன்றுகொண்டிருந்த பிரம்மாண்டமான நிலவிரிவையே பார்த்துக்கொண்டிருந்தேன். நிலக்காட்சிகளில் இருந்து என் கண்களை விலக்கவே முடியவில்லை. நான் அதுவரைக்கும் சென்ற அதிகபட்ச வெளியூர் கிழக்கே மதுரை. மேற்கே திருவனந்தபுரம். தமிழகப்பெருநிலத்தையே அப்போதுதான் பார்த்தேன். வெட்டவெளியாக வெயில் தேங்கிக்கிடந்த ராயலசீமாவைக் கண்டு சொற்களை இழந்தேன். உருட்டி உருட்டிக்கூட்டி வைக்கப்பட்ட பெரும்பாறைக்குவியல்களாக மலைகள். பாறைகள் அவற்றின் நிழல்களின் மீது காலத்தில் பிரமித்து அமர்ந்திருந்தன. அவற்றினூடாக ஓரிரு தளர்ந்த ஆடுகளுடன் கிழிசல் உடையணிந்த மேய்ப்பர்கள் சென்றனர். இந்தியாவே இப்படி காலியாக இருக்குமென நான் நினைத்திருக்கவில்லை. மிகப்பெரும்பாலான நிலம் வறண்டு கைவிடப்பட்டு வானத்தைப்பார்த்து மல்லாந்து விரிந்து கிடந்தது. வானிலிருந்து கைப்பிடிப் பசுமையை அள்ளி வீசியதுபோல அவ்வப்போது சில பசுமைத்தீற்றல்கள். அங்கே தாள்களையும் குப்பைகளையும் கசக்கி வீசியதுபோல சின்னஞ்சிறு வீடுகள். சின்னஞ்சிறு மனிதர்கள். மனிதர்களை இத்தனை சிறியவர்களாக ஆக்குபவை எவை? பூமி. இல்லை வானம்

ரயில் சென்றுகொண்டே இருந்தது. மெல்லிய சிறகுகளுடன் அந்த வெற்றுநிலங்கள் மேல் மிதந்துபறந்துகொண்டிருந்தேன். இந்தியா என்பதுதான் எவ்வளவு பெரியது. முடிவேயில்லாத மண். அதன்மீது பளபளக்கும் இரும்புப்பட்டைபோல தண்டவாளம். அது இல்லாவிட்டால் இந்த நிலங்கள் உடைந்து பிரிந்து விலகிவிடக்கூடும்தான். மேலே சென்றுகொண்டிருக்கிறது இரும்புக்கிராமம் ஒன்று. அதற்குள் மனிதர்கள். அந்த நிலங்களுடன் தொடர்பில்லாத வேறுவகை மனிதர்கள்.

எங்கும் மனிதர்கள் ரயிலைக்கண்டதும் நின்று விழிவிரிய பார்த்தார்கள். ஆடுமேய்க்கும் குழந்தைகள். முள்ளைவெட்டிச் சுமந்துசெல்லும் ஆண்கள். மாடுகளை ஓட்டிச்செல்பவர்கள். தலையில் குடங்களுடன் செல்லும் பெண்கள். அத்தனைபேரும் ரயிலில் என்னதான் பார்க்கிறார்கள்? எவரும் கையசைக்கவில்லை. சிரிக்கவில்லை. வெறித்த கண்கள். வெண்ணிறப் பற்கள். சுருங்கிய நெற்றி. படபடக்கும் உடைகள். அத்தனைபேரும் ஒரே பார்வையைக் கொண்டிருந்தார்கள். அவர்கள் ரயிலைப் பயப்படவில்லை. ரயிலை வெறுப்பதாகவும் தெரியவில்லை. சும்மா வெறித்துப்பார்த்தார்கள். ஏன்?

லோனாவாலா என்ற ஊர் ஒரு மலையடிவாரம் என்பதை சின்னச்சாமி பலமுறை சொல்லியிருந்தாலும் அங்கே சென்றபோது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. பசுமையான உயரமற்ற மலைகள் சூழ்ந்த நிலம். மரங்கள் குட்டையானவை. நெருக்கமற்றவை. சாலையோரமாக ஒரு சிறிய அருவி யாருமே இல்லாமல் கொட்டிக்கொண்டிருந்தது. 'சைட்டு' என்று சின்னச்சாமி சொன்ன இடத்தை நெருங்கியபோதே வேலை நடக்கும் ஓசைகள் கேட்க ஆரம்பித்தன.

பின்பு அந்த இடத்தைக் கண்டேன். மலையைக் குடைந்து ஒரு பெரிய செந்நிறமான புண்ணை உருவாக்கிக் கொண்டிருந்தார்கள். கரிய புழுக்கள் போல மனிதர்கள் அந்தப்புண்குழியை தோண்டிக்கொண்டிருக்க நூற்றுக்கணக்கான சிறியவகை லாரிகள் வண்டுகள் போல ரீங்கரித்தபடி சுற்றிவந்தன. செந்நிறமான ஓடைகள்போல சாலைகள் வளைந்து வளைந்து மேலேறின. அவற்றில் லாரிகள் உறுமி நின்று அதிர்ந்து பின் மேலேறின. வேலையிடத்தின் பக்கவாட்டில் புதர்க்காடுகள் முழுக்க தகரக்கூரை போடப்பட்ட மிக நீளமான கொட்டகைகள். சுவர்களும் தகரம்தான். தகரத்தாலான கோட்டைச்சுவர் போலத் தோன்றின அவை. முதல் பார்வையிலேயே சோர்ந்து தனிமைப்பட்டுவிட்டேன். ஆனால் என்னுடன் வந்த அத்தனைபேரும் வினோதமான கிளர்ச்சியையும் உற்சாகத்தையும்தான் அடைந்தார்கள்.

சின்னச்சாமி சென்று ஒரு தொப்பிபோட்ட ஆசாமியை அழைத்துவந்தார். காந்தித்தொப்பியை மூக்குப்பொடிநிறத்தில் போட்டதுபோலிருந்தது. வாயில் பான்பீடா அதக்கிய குண்டு மனிதர். பாண்டுக்குமேல் தொப்பையின் பிதுங்கல் தெரிந்தது. இந்தியில் அவர் சரசரவென்று பேச சின்னச்சாமி உதிரி உதிரிச் சொற்றொடர்களில் ஏதோ சொன்னார். சில நிமிடங்களில் எங்களை வேலைக்கு எடுத்துக்கொண்டார்கள். சாமான்களையும் பிள்ளைகளையும் எல்லாம் ஓரமாக வைத்துவிட்டு நேரடியாகவே அங்கிருந்தே வேலைக்குள் புகுந்தோம்.

அது அக்டோபர். லோனாவாலாவில் வெயிலடித்தாலும் காற்று குளிராக இருந்தது. மண்வேலைசெய்பவர்கள் சட்டை

போட்டிருப்பதை அங்கேதான் முதல்முறையாகக் கண்டேன். டயர்களை பிய்த்து தைத்த மண்கூடைகளையும் குனிந்து மட்டுமே மண்ணை அள்ளமுடிகிற மண்வெட்டிகளையும் அப்போதுதான் பார்த்தேன். பெரிய இயந்திரங்கள் மண்ணை வெட்டிக்குவிக்க அவற்றை அள்ளி கொண்டு வந்து சிறிய மர ஏணிகளில் ஏறி லாரிகளில் கொட்டவேண்டும். எப்படியும் இரண்டாயிரம்பேர் அங்கே மண்ணை அள்ளிக்கொட்டிக்கொண்டிருந்தார்கள்.

என்ன செய்யப்போகிறார்கள் என்றே புரியவில்லை. அந்த மலையை குடைந்து ஏதோ செய்யப்போகிறார்கள் என்றார்கள். அவ்வழியாக ரயிலை திருப்பிவிடப்போகிறார்கள் என்று ஒரு தரப்பும் இல்லை சாலைதான் மலைக்குள் சென்று மறுபக்கம் போகப்போகிறது என்று இன்னொரு தரப்பும் சொன்னது. எவருக்கும் அதைப்பற்றி பெரிய அக்கறை இல்லை. நான்குவருடத்துக்கும் மேலாக வேலை நடக்கிறது. பலர் ஆரம்பகாலத்தில் இருந்தே பணியாற்றக்கூடியவர்கள். திரும்பத்திரும்ப ஒரே வேலைதான். மண்ணை அள்ளிக்கொண்டுவந்து லாரியில் கொட்டிக்கொண்டே இருக்கவேண்டியதுதான்.

சிலநிமிடங்களில் நான் மண்ணுடன் கலந்தேன். அங்குள்ள அனைவர் மேலும் மண். அந்த வேலையின் உண்மையான சிக்கல் கொஞ்சநேரத்திலேயே தெரியவந்தது. இயந்திரங்களில் இருந்து வரும் மென்மையான தூசு மூச்சடைக்கவைக்கும். கமறிக்கமறித் துப்பிக்கொண்டே இருந்தேன். மேலும் சற்று நேரத்தில் மூச்சடைத்தது. எவ்வளவு இழுத்தாலும் மூச்சு போதவில்லை. ஆனால் நிற்கமுடியாது. அத்தனை மனிதர்களும் சேர்ந்து ஒரே இயந்திரமாக ஆகிவிட்டிருந்தனர். ஒரு தனி உறுப்பு எந்த முடிவையும் எடுக்கமுடியாது. நிற்கவோ வேகம் குறைக்கவோ முடியாது. ஓடிக்கொண்டே இருக்கவேண்டியதுதான்

மதியம் அத்தனைதொழிலாளர்களும் இரு பெரும்பிரிவாகப் பிரிந்தனர். ‘சோறா சப்பாத்தியா?’ என்று ஒருவன் இந்தியில் கேட்டான். ‘சாவல்’ என்று சொன்னேன். பெரிய ஈச்சஓலைப்பாயில் சோற்றை இடுப்பளவு உயரத்துக்கு கொண்டுவந்து கொட்டிக்குவித்திருந்தனர். சன்னரக வெள்ளை அரிசி. அந்தக்காலத்தில் எங்களூரில் ரேஷன் அரிசி சிவப்பாக சாக்குவாடையுடன் இருக்கும். சோற்றில் மட்டுமல்ல பழையதிலும்கூட சாக்குவாடை இருக்கும். பாதிக்குப்பாதி சோளமும் கோதுமையும் போட்டார்கள். இங்கே அரிசி நன்றாகவே இருந்தாலும் சோற்றை குவித்துவிடுவதனால் உள்ளே இருக்கும் பகுதி வெந்து களியாக ஆகியிருந்தது. ஆனால் மேலே உள்ள கெட்டித் தோலுக்கு களி எவ்வளவோ மேல்.

நாலைந்து நாட்களுக்குப்பின் வயிறு புடைக்கச் சாப்பிட்டேன். பருப்பும் கத்தரிக்காயும்போட்டு காய்ச்சப்பட்ட குழம்பும் சோறும் மட்டும்தான். ஆனால் சாப்பிடச்சாப்பிட நிறுத்தவே தோன்றவில்லை. ஒரு கட்டத்தில் குமட்டலே வர ஆரம்பித்தது. தலைசுழல்வதுபோலிருந்தது. ‘இங்க சோறு நல்லாவே போடுவான்..அதுல ஒண்ணும் குத்தம் சொல்லமுடியாது’ என்றார் சின்னச்சாமி. ‘நாம வேற என்னத்தைக் கண்டோம்? என்னதம்பி?’

மாலையில் வேலைமுடிந்தபோது மண்ணாலான சிலைகள் போல பெரும்கூட்டம் கொட்டகைகளை நோக்கிச் சென்றது. மேலிருந்து பார்த்தபோது செம்மண்ணின் ஒருபகுதியே ஒழுகிச்செல்வதுபோலத் தெரிந்தது. அதற்குள் நல்ல குளிர் ஆரம்பித்துவிட்டிருக்க கைகளை மார்புடன் கட்டிக்கொண்டு நடந்தேன்.

‘ஒத்தக்கட்டைகளுக்கு தனி ரூம்பு கடையாது தம்பி..எல்லாரும் சேந்து ஒத்தக்கொட்டாய்லதான் படுத்துக்கணும்..நீ அந்தால போ’

‘நீங்க?’

‘நமக்கு இங்க ஒரு தொடுப்பு உண்டு..குடும்பமாத்தான் இருக்கம்..வந்த எடத்தில ஒண்ணுண்ணா ஆளு வேணும்ல? பாவம் அதுவும் கால்கை வெளங்காத புருசனையும் புள்ளிங்களையும் உட்டுட்டு இந்தா தொலைவு வந்திருக்கு..வாறன்’

சற்று திகைத்து நின்றேன். சுற்றிலும் நீளமான கொட்டகை. அதை தனித்தனியாக பிரித்து நூற்றுக்கணக்கான குடியிருப்புகளாக ஆக்கியிருந்தனர். ஒற்றை அறைதான். உள்ளே குழந்தைகள் தெரிந்தன. சில குழந்தைகள் பெற்றோரை நோக்கி ஓடிவந்தன. எவரும் குளிப்பதுபோலத் தோன்றவில்லை. மண்மூடிய உடையை கழற்றி வேகமாக உதறினார்கள். அதை சுருட்டிக்கொண்டு இன்னொரு உடையை அணிந்துகொண்டார்கள். ஒரு துண்டைவைத்து உடலில் உள்ள மண்ணைத் துடைத்துக்கொண்டு முகத்தை மட்டும் குடியிருப்பு முற்றத்துப் பானையில் இருந்து மொண்ட நீரால் கழுவிக்கொண்டார்கள்.

தொப்பி போட்ட ஒருவன் என்னிடம் வந்து ஒரு கொட்டகையைக் காட்டி அங்கே போகச்சொன்னான். அவர்கள் அனைவருமே பீடா போட்டிருப்பதைக் கண்டேன். பீடாச்சிவப்பு வாய்கள் புண்கள்போலிருந்தன. பலருக்கும் வாயின் ஓரம் வெள்ளையாகக் கிழிந்திருந்தது.

கொட்டைகையில் இருந்தவர்களில் பாதிப்பேர் பீகாரிகள். நான் உள்ளே நுழைந்ததும் அவர்கள் என்னைப்பார்த்தார்கள். அத்தனைபேரும் உடைமாற்றிக்கொண்டிருந்தார்கள். சொரசொரப்பான சிமிண்ட் தரைமுழுக்க மண். ஓரமாக பாய்கள் சுருட்டி அடுக்கப்பட்டிருந்தன. இன்னொரு ஓரத்தில் தகரடப்பாக்கள்.

ஒருவன் என்னிடம் இந்தியில் ஏதோ கேட்டான். அவனை விழித்துப் பார்த்தேன். அவன் இன்னொருவனிடம் ஏதோ சொல்ல அவன் ‘டேய் எந்தூருடா?’ என்றான்

‘நாகருகோயில்’

‘பெட்டி எங்க?’

‘இல்ல’

‘பீடாக்காரன் பைசா குடுத்தானா?’

‘இல்ல பேரு எளுதிக்கிட்டான்’

‘இங்க வாரம் ஒருக்காதான் அரிசி பருப்பு குடுப்பான். காலம்பற ராத்திரி ரெண்டுவேளையும் சமைச்சுக்கிடணும்.. இப்ப இங்க சாப்பிடு..உன் ரேசன் வந்ததும் கடன முட்டிடு..என்ன’

தங்கவேல் அன்பாக இருந்தான். என்னைப்பற்றி அதிகம் கேட்கவில்லை. ‘நமக்கு சேலம். ஆத்தூருக்குப்பக்கமா ஊரு. ஊட்ல அம்மாவும் தங்கச்சியும் இருக்காங்க’என்று மட்டும் சுருக்கமாகச் சொன்னான்.

அன்றிரவு அங்கே சப்பாத்திதான் செய்தார்கள். ‘ராத்திரியே சப்பாத்திய உருட்டிக்கிட்டா காலம்பற மிஞ்சுறத சுட்டுத்தின்னுட்டு ஓடலாம் பாத்தியா?’ சப்பாத்தி மிகத்தடியாக இருந்தாலும் இட்லி போல மென்மையாக மென்றுதின்னும்படி இருந்தது.

சாப்பிட்டுவிட்டு படுத்துக்கொண்டேன். தங்கவேல் எனக்கு ஒரு ஈச்சம்பாயை தந்தான். ‘கொஞ்சம் குளிரும்..இந்தா’ என்று சணல்சாக்கை வெட்டித்தைத்த ஒரு போர்வையையும் தந்தான். ‘சாமிக்கண்ணுன்னு ஒரு பய இருந்தன். அவனோடது. ‘

‘அவன் எங்க?’

‘அவன் திரும்ப வரல்லை’

இரவில் மேலே தெரிந்த தகரக்கூரையை பார்த்துக்கொண்டே படுத்தேன். ஒற்றைக்குண்டுவிளக்கு எரிந்தது. கூரைக்குமேல் நீர்த்துளிகள்சொட்டுவதுபோல ஒலி. காற்றில் தகரங்கள் எழுந்து வளைந்து அமுங்குவதன் உலோக முனகல். பிகாரிகள் ஒருவருக்கொருவர் உரக்க இந்தியில் கத்திப்பேசிக்கொண்டிருந்தனர். சண்டைபோடவில்லை என்பது அவ்வப்போது அவர்கள் சிரிப்பதிலிருந்து தெரிந்தது.

வெளியே விசில் ஒலி. இந்தியில் ஏதோ கூச்சல்

ஒருவன் விளக்கை அணைத்தான். தங்கவேல் என்னிடம் ’பீடாக்காரனுக..இங்க எட்டுமணிக்கு வௌக்க அணைச்சு உறங்கிடணுமுன்னு ரூலு’

‘ஏன்?’

’காலையிலே வேலை செய்யணும்ல?’

விசில் ஒலியும் வசைக்குரலும் தொலைவில் மீண்டும் கேட்டன.

‘தங்கவேலு’

‘ஏண்டா?’

’இங்க குளிக்கமுடியாதா?

‘நல்லா குளிரும்..மாசத்துக்கு ஒருவாட்டி குளிச்சா போரும்..’

‘அதில்ல..’

‘குளிச்சுட்டு மறுபடியும் மண்ணுல தானே போயி விளணும்?’

பெருமூச்சுடன் உடம்பை இலகுவாக்கிக் கொண்டேன். ஊரிலிருந்து எவ்வளவு தூரம். அந்த தூரத்தை நினைவில் திரும்ப ஓட்டிப்பார்க்கவே முடியவில்லை. எங்கள் ஊரே மறந்துவிட்டதுபோல. காலாகாலமாக இந்த வெற்றுமண்வெளியிலேயே வாழ்ந்து வருவதைப்போல. ’தங்கவேலு’

‘ஏன்?’

‘இங்க சவுரியமா இருக்கியா?’

‘என்னத்த சவுரியம்? எங்க போனாலும் இதே வேலைதானே?’ அவன் திரும்பிப்படுத்துக்கொண்டான்.

தகரம் அதிர்ந்தது. குளிர்காற்று உள்ளே வந்தது. நன்றாகப்போர்த்திக்கொண்டேன். மண்ணில் வேலைசெய்த

சட்டைபாண்டை உதறி திரும்பப் போட்டிருந்தேன். ஆனாலும் உடம்பெல்லாம் மண் இருப்பதுபோலவே உணர்ந்தேன். சாக்கு உடம்பில் பட்ட இடமெல்லாம் அரிப்பு.

அதேசமயம் எனக்குள் ஓர் உற்சாகமும் நிறைவும் இருந்தது. நான் பெரிய ஒரு விஷயத்தைச் செய்யப்போகிறேன். அந்த இரவை நன்றாக நினைவில் நிறுத்திக்கொள்ளவேண்டும். அது நான் எதிர்காலத்தில் எழுதப்போகும் ஒரு நூலின் முதல் அத்தியாயம். உலகம் முழுக்க அதை மொழியாக்கம் செய்து வாசிப்பார்கள். இவன் பெயர் தங்கவேல். மற்ற பையன்கள் பெயரையும் விசாரித்துத் தெரிந்துகொள்ளவேண்டும்..நினைவுகளில் எல்லாம் துல்லியமாக இருக்கவேண்டும்

விசித்திரமான சூழல்தான். தகரக்கூரை. குளிக்காமல் மண்ணோடு மண்ணாக வாழும் மனிதர்கள். சற்றுப்பெரிய மண்புழுக்கள். நல்ல தலைப்பு. மண்புழுக்கள். சற்றுப்பெரிய மண்புழுக்கள்தானே இவர்கள்? மண்ணைத்துளைப்பதுதான் வாழ்க்கை. ஒரு நாவலாகக்கூட எழுதலாம். பெரியநாவல்..ஆனால் கூட்டுப்புழுக்கள் என வேறு யாரோ நாவல் எழுதியிருக்கிறார்கள். ஆங்கிலத்தில் எழுதலாம். எர்த்வார்ம்ஸ்..

மறுநாள் காலையிலேயே விசிலும் வசையும் ஒலித்தது. நான் எழுந்தபோது மற்றவர்கள் எழுந்து பரபரவென்றிருந்தனர். தங்கவேலுவைக் காணவில்லை. இருவர் சப்பாத்திகளை நெருப்பில் சுட்டுக்கொண்டிருந்தார்கள். நான் வெளியே சென்றபோது மறுகொட்டகைக்குப்பின்னால் ஓர் இளம்பெண் இடுப்புக்குமேலே உடையை முழுமையாக விலக்கி துணியால் துடைத்துக்கொண்டிருந்தாள். கரிய இளம் முலைகள். என்னைக் கண்டதும் கண்களில் ஒரு சிறிய சுருக்கம். மறுபக்கம் திரும்பிக்கொண்டாள்

தக்கவேலு உள்ளே வந்தான் 'எங்கே கொல்லைக்குப் போறது?' என்றேன்

'நேரா அந்தப்பக்கமா போனா பெரிய காடுதான்..எங்க வேணுமானாலும் போலாம்..'

'தண்ணி?'

'அங்க ஓடை உண்டு'

செம்மண் மேட்டை ஏறி மறுபக்கம் சென்றேன். இடுப்பளவுக்கு உயரமாக புதர்கள் வளர்ந்த காடு. சில கணங்களுக்குப்பின்னால் கவனித்தேன். நிறைய பெண்கள் அங்கே இருந்தார்கள். அவர்கள் எழவில்லை. அந்தப்பக்கமாகத் தள்ளிப்போ என்று ஒருத்தி கையைக் காட்டினாள். மற்றவர்கள் வேறு கவனத்தில் இருப்பவர்கள்போலிருந்தார்கள்.

சப்பாத்தி சாப்பிட்டுக்கொண்டிருக்கும்போதே விசில் ஒலி வசையுடன் ஒலித்தது. தங்கவேலு 'சீக்கிரம் சாப்பிடு' என்றான்

'இங்கே வேலைநேரம் எப்ப?'

'அப்டீல்லாம் ஒண்ணுமில்லை..விடிஞ்சா இருட்டுற வரைக்கும்தான்..சீக்கிரம்'

இருவரும் வெளியே வந்தோம். பீடாக்காரர்கள் நால்வர் கையில் லத்திகளுடன் விசில் ஊதியபடி கொட்டகைகளில் இருப்பவர்களைக் கிளப்பிக்கொண்டிருந்தனர். பெண்கள்தான் தாமதமாகக் கிளம்புவதாகப் பட்டது. அதிலும் கைக்குழந்தை உடைய பெண்கள். பீடாக்காரர்கள் அவர்களை புட்டத்திலும் தோளிலும் லத்தியால் மெல்ல அடித்து கெட்டவார்த்தை சொல்லி துரத்தினார்கள். குழந்தைகளை இன்னும் பெரிய குழந்தைகளின் கையில் கொடுத்துவிட்டு அடிக்கு உடலைக்குறுக்கி குனிந்து ஓடி முன்னால் செல்லும் கூட்டத்துடன் கலந்துகொண்டார்கள்

என் முன்னால் சென்ற ஒரு பெண்ணின் கையை பீடாக்காரன் பிடித்து நிறுத்தினான். அவள் இழுத்துத் திமிறியபடி வளைய அவன் சிரித்துக்கொண்டே இன்னொருவனிடம் ஏதோ சொன்னான். அவனும் சிரித்தான். மெலிந்த கரிய பெண். கூரிய சிறிய முகமும் பெரிய அழகிய எருமைக்கண்களும் கொண்டவள். அவன் அவள் சிறிய முலையைப்பிடித்து கசக்க அவள் ஓசையில்லாமல் வலியில் வாயைத்திறந்தாள். அவன் விட்டதும் கையால் மார்பைப்பிடித்துக்கொண்டு முன்னால் ஓடி அவளுடைய தோழிகளுடன் சேர்ந்துகொண்டாள்

நான் திகைத்துப் பதறி நின்றுவிட்டேன். என் இதயத்துடிப்பு உடம்பெங்கும் எதிரொலித்தது. 'வா' என்றான் தங்கவேலு

'என்ன இப்டி செய்யானுக?'

'இங்க அப்பிடித்தான்..எல்லாத்துக்கும்தானே வாறாளுக..வா'

என்னால் நடக்கவே முடியவில்லை. கால்கள் ரப்பரால் ஆனவை போலிருந்தன. நான் என்ன செய்யவேண்டும்? முஷ்டி சுருட்டி உரக்க கூவி அவர்களிடம் பேசினேன். விலங்குவாழ்க்கையை உதறி மனிதர்களாக வாழவேண்டுமென அறைகூவினேன். அவர்கள் எனக்குப்பின்னால் சேர்ந்து நின்றார்கள். கை சுருட்டி ஆட்டிக்காட்டி கூச்சலிட்டார்கள். ஆனால் நான் அந்தக்காட்சியை எங்கோ ஆழத்தில் பார்த்துக்கொண்டு நடந்து சென்றேன். பேசிச்சிரித்துக்கொண்டு கூடைகளை எடுப்பவர்களுடன் சேர்ந்துகொண்டேன்

மதியமானபோது எனக்கான நியாயங்களை உருவாக்கிக் கொண்டேன். உடனடியாக ஏதும் செய்துவிடமுடியாது. அந்த

மக்களுடன் நெருங்கவேண்டும். அவர்களுள் ஒருவனாக ஆகவேண்டும். அவர்கள் நம்பிக்கையைப்பெற்று அதேசமயம் அவர்களை விட மேலானவன் என்ற மதிப்பையும் அடைந்தபின் அவர்களுக்குத் தலைமை ஏற்கவேண்டும். சே குவேரா அப்படித்தான். புரட்சியாளர்கள் எல்லாருமே அப்படித்தான்.

நான் அவர்களைக் கவனிக்கிறேன் என்று எனக்குநானே சொல்லிக்கொண்டேன். அங்கே நான் உண்மையில் வேலைசெய்யவில்லை, அவர்களை ஆராய்ச்சிதான் செய்கிறேன். அவர்களை நான் புரிந்துகொள்ள சற்றுக் காலமாகலாம். அதன்பின் அவர்கள் என்னைப்புரிந்துகொள்ளவேண்டும். ஆகவே ஒவ்வொன்றையும் ஓர் அழுத்தத்துடன் செய்ய ஆரம்பித்தேன். நான் கூடையில் மண்ணை எடுத்து தலையில் வைக்கும்போது வேலைசெய்யவில்லை, அச்சூழலை அவதானிக்கிறேன். ஒவ்வொரு மனிதனையும் கவனிக்கிறேன். அங்கே வாயில் பீடாவுடன் நடமாடும் ஒவ்வொரு குண்டனையும் கணக்கிட்டுக்கொள்கிறேன்

திரும்பத்திரும்ப ஒன்றே நிகழும் வாழ்க்கை அது. வேறு எதற்கும் இடமே இல்லை. மண்சுமந்து திரும்பும்போதே கால்கள் படுக்கைக்காக கெஞ்சும். சாப்பிடும்நேரம் வரை மட்டுமே தூங்காமல் விழித்திருக்க முடியும். அதிகபட்சம் சில சொற்கள் பேசிக்கொள்ளலாம். காலையில் கண்விழித்த கணம் முதல் கிளம்புவது வரை அவசரம். ஆண்கள் வேலைசெய்யாத நேரமெல்லாம் தூங்கினார்கள். பெண்கள் மாலையில் வந்தபின் சமைத்தனர். குழந்தைகளை கவனித்தனர்.

தங்கவேலுவிடம் ஓரிருசொற்கள் பேசுவதை விட்டால் எனக்கு பேச்சே அற்றுப்போய்விட்டது. சின்னச்சாமியையோ பிறரையோ பின்பு பார்க்கவேயில்லை. பகல்களில் மண்சுமையும் காலமும் ஒன்றேயாக ஆனதுபோல. மண்கூடைகள் வழியாக நிமிடங்கள் மணிகள் கடந்துசென்றன. எங்கே இருக்கிறேன், என்ன செய்துகொண்டிருக்கிறேன் என்று சிலசமயம் தோன்றும்

மண்வேலைக்காக அடுத்த இடம் சென்றபோது அருகே ரயில்பாதை சென்றது. மும்பைக்குச் செல்லும் ரயில்.வேலைநடுவே எங்கோ ரயிலின் கூக்குரல் கேட்கும். மெல்ல தண்டவாளம் அதிரும். டெல்லி டக் டெல்லி டடக் என்ற ஓசையுடன் காற்றில் ஏறிச்செல்வதுபோல ரயில் கடந்துசெல்லும். சுமைகளுடன் கூடைகளுடன் அத்தனைபேரும் ரயிலை நோக்கி திரும்பி நிற்பார்கள்.ரயிலில் இருப்பவர்கள் எங்களைப்பார்ப்பார்கள். ஆனால் எங்களுக்கு அவர்களின் முகங்கள் தெரிவதில்லை. பறக்கும் முகங்கள் இணைந்து ஒன்றாகி விட்டிருப்பதுபோலத் தோன்றும்

பெட்டிகள் ஒன்றை ஒன்று துரத்திக்கொண்டு சென்று மறைந்து தண்டவாளம் மெல்ல டெல்லி டக் டெல்லி டடக் என்று அதிர்ந்து அடங்குவது வரை அத்தனைபேரும் பார்ப்பார்கள். பின்பு காற்று புதரில் ஊடுருவுவதுபோல ஓர் அனைவரிலும் அசைவு கடந்துசெல்லும். ஒருநாளைக்கு ஏழெட்டு ரயில்கள் வரை செல்லும். ஒவ்வொருமுறையும் அனைவரும் பார்க்கத்தவறுவதில்லை.

ரயிலைப்பார்த்து நின்றபின் மீண்டும் கலைவதற்குள் பீடாக்காரன் ஒருவனை தோளில் அடித்து வேலையைப்பார் என்று சொல்லியிருக்கிறான். அவன் தடுமாறி மறுபக்கம் இருந்த இரண்டடி ஆழத்து பள்ளத்தில் விழுந்தான். இளைஞன். சட்டென்று அனிச்சையாக சீறி எழுந்து கையில் அகப்பட்ட மண்கட்டியை எடுத்து அந்த பீடாக்காரனை அடித்துவிட்டான்

பீடாக்காரன் உடைந்த குரலில் கிரீச்சிட்டபடி லத்தியைச் சுழற்ற அவன் லத்தியை பிடித்துக்கொண்டான். நாலைந்து பீடாக்காரர்கள் அவனை நோக்கி ஓடினார்ர்கள். அவன் லத்தியுடன் பீடாக்காரனை சுழற்றி தரையில் போட்டபின் எங்களைநோக்கித் திரும்பி 'தாயளிகளே..அம்மைவயித்திலே பொறக்காத்த நாயிங்களே.. டேய் பீயத்திங்காதீங்கலே..டே' என்று கூச்சலிட்டான். குரல் உடைந்து கம்மி விசித்திரமாக ஒலித்தது

எல்லாரும் அமைதியாகப் பார்த்து நின்றார்கள். பீடாக்காரர்கள் அவனைச்சூழ்ந்துகொண்டு கீழே கிடந்த கற்களைப்பொறுக்கி அடித்தார்கள். அவன் திருப்பி அடிக்கவில்லை . கூட்டத்தை நோக்கி 'டேய் தாயளிங்களே..டேய் டேய்' என்று கைவீசிக்கூச்சலிட்டுக்கொண்டிருந்தான். அவனுடைய முகத்தில் புருவங்கள் சுருங்கி கண்கள் இடுங்கி வாய்கோணி எச்சில் நுரைக்க அச்சொற்கள் வருவதை துல்லியமாக, மிகமிக அருகில் என்பதுபோல, பார்த்துக்கொண்டிருந்தேன்.

பீடாக்காரர்கள் அவனை வீழ்த்திவிட்டார்கள். அவன் மண்ணில் சரிந்ததும் லத்தியால் மூர்க்கமாக அடிக்க ஆரம்பித்தனர். தூரத்தில் நின்று பார்க்கையில் மௌனமாக ஏதோ நடப்பதுபோலிருந்தது. கீழே அவன் கைகால்கள் அசைந்தன. அவர்கள் வாயைத்திறந்து ஏதோ கூச்சலிட்டபடி அடித்தனர்

பின்பு அவர்கள் பின்னகர்ந்தனர். ஒருவன் அவன் மீது பீடாவைத் துப்பினான். ஒருவன் எங்களை நோக்கி ஏறிட்டு இந்தியில் கூச்சலிட்டான். வேகத்தில் உடைந்து சிதறிய குரல். பதறியதுபோல அத்தனைபேரும் ஏதேதோ செய்ய ஆரம்பித்தனர். கூடைவைத்திருந்தவர்கள் ஓடினார்கள்.பிறர் மண்ணை வேகமாக அள்ளிப்போட்டனர்.

அவனை அவர்கள் சாக்குமூட்டையை கொண்டுசெல்வதுபோல கைகால்களைப்பிடித்து தூக்கி கொண்டு சென்றார்கள். இருவர் எங்களை நோக்கி லாத்திகளை வீசி கத்திக்கொண்டே இருந்தார்கள்.

நான் அதன்பின்னர்தான் என்னை உணர்ந்தேன். என் தொடை தன்னிச்சையாக நடுங்கிக்கொண்டிருந்தது. நெஞ்சின் அறைதலை காதில் கண்ணில் உணர்ந்தேன். முச்சை இழுத்து இழுத்து விட்டு என்னை மெல்ல மீட்டுக்கொண்டேன்.

நான் என்ன செய்திருக்கவேண்டும்? ஓடிச்சென்று அவர்கள் நடுவே நின்றிருக்கவேண்டும். அந்த அடிகளை நானும் வாங்கிக்கொண்டிருக்கவேண்டும். அந்த மக்களை நோக்கி அறைகூவியிருக்கவேண்டும். ஆம், அதைத்தான்

செய்யவேண்டும். ஆனால் இப்போதல்ல..

முட்டாள்தனம். பச்சைக்கோழைத்தனம். இதுதான் அந்த இடம். இந்த இடத்தில் அதைச்செய்பவனே அதைச்செய்யக்கூடியவன்.. இல்லை. எதையுமே என்னால் செய்ய முடியாது. நான் நினைப்பவன் அல்ல நான். ஆம். அதுதான் உண்மை.

மேலும் எட்டுநாட்கள் கழித்து நான் இரவில் அங்கிருந்து தப்பி ஓடினேன். குறுங்காடுவழியாக தண்டவாளம் வந்து தண்டவாளம் வழியாகவே இரவெல்லாம் நடந்து ரயில்நிலையத்தை அடைந்து அங்கிருந்து ஒரு ரயிலில் ஏறி மும்பைக்குச் சென்றேன்.

மிகப்பெரிய இரும்பொலியுடன் ரயில் மும்பையில் நுழைந்தது. கீழே நூற்றுக்கணக்கான சேரிகள் , குப்பைமலைகள் ,மனிதர்கள்.

---

## புறப்பாடு II – 5, எண்ணப்பெருகுவது

தாராவியில் நாணப்பண்ணனின் மதராஸ் மெஸ்ஸில் காத்திருக்காமல் சாப்பிட முடியாது. அதிகாலையில் நாணப்பண்ணன் கடைதிறக்கும்போதே எழுபது எண்பதுபேர் காத்திருப்பார்கள். அதன்பின் நூறுபேருக்குக் குறையாமல் எந்நேரமும் வெளியே நின்றிருப்பார்கள். சட்டென்று பார்த்தால் இருபதுபேர் காத்திருப்பதாகத் தோன்றும். பக்கத்திலுள்ள கடைகள் முன்னாலும் சாக்கடையை ஒட்டி போடப்பட்டிருந்த பெரிய சிமிண்ட் குழாய் மேலும் அமர்ந்திருப்பவர்களும் அந்த வரிசையில் உண்டு என அங்கே செல்லக்கூடியவர்களுக்குத்தெரியும்.

வரிசை என்று ஏதும் இல்லை. ஆனால் யார் முன்னால் வந்தார்கள் என அடுத்து செல்லவேண்டியவருக்குத் தெரியும். ஒவ்வொருவரும் வந்துசேர்பவர்களை ஓரக்கண்ணால் பார்ப்பார்கள். தெரிந்தவர்கள் என்றால் ஒரு புன்னகை. மிகத்தெரிந்தவர் என்றால் 'ஊரிலே மழை உண்டுமா?' என்பது போல ஒரு விசாரிப்பு. பீடிக்கு தீ பகிர்தல். பீடியையே ஒடித்துப்பகிர்வதும் உண்டு. ஒரு மணிநேரம் வரைக்கும்கூட காத்திருக்கவேண்டியிருக்கும்.

கடும்பசியில் காத்திருக்கும்போது காலம் ராவணன்பெட்டி போல ஆகிவிடுகிறது. பெட்டிக்குள் பெட்டிக்குள் பெட்டிகள். ஒரேநிமிடம் அவ்வளவு நினைவுகளை , எண்ணங்களை, உணர்ச்சிகளை தன்னுள் கொண்டிருக்குமா என்ன? நிமிடங்கள் கொசு போல விசிறி விரட்ட விரட்ட நீங்காமல் ரீங்கரிக்கும். கற்பாறை போல எத்தனை உந்தினாலும் அசையாமல் நின்றிருக்கும். வெண்ணைமலைபோல அள்ள அள்ள பிய்ந்து வந்துகொண்டிருக்கும்

உள்ளே இருபதுபேர் இருந்து சாப்பிடலாம். எந்நேரமும் நாற்பதுபேர் வெளியே காத்திருப்பார்கள். பிளாஸ்டிக் தட்டின்மீது பாலிதீன் தாளை விரித்து அதில் சாப்பாடு பரிமாறும் வழக்கத்தை நாணப்பண்ணன்தான் அறிமுகப்படுத்தியிருந்தார். சாப்பிட்டபின் அப்படியே பிளாஸ்டிக் தாளை எச்சிலுடன் ஒரு பெரிய பிளாஸ்டிக் வாளியில் கவிழ்த்துவிட்டு அடுத்த பிளாஸ்டிக் தாளை அதன்மேல் பரப்பி அடுத்த சாப்பாட்டை பரிமாறிவிடுவார். பிளாஸ்டிக்தாள் பல்வேறுவகையான பைகளையும் உறைகளையும் சேகரித்து சராசரியான அளவில் வெட்டப்பட்டது. அவரது கடையில் ஒருபோதும் சோறு சூடாக இருப்பதில்லை. பலவண்ண தாள்கள். பல அச்சுகள். ஒருமுறை நான் ஹேமமாலினியின் முகத்திலேயே அவியலை வழித்தேன்.

எப்போதுமே அங்கிருக்கும் ஓர் அலுமினியக்கிண்டியில் ஒரு கிண்டி சோறு. செந்நிறத்தில் நீர்த்த தேங்காய் மீன்குழம்பு, கீரைக்கூட்டு, எலுமிச்சை வாசனை கொண்ட புளித்த மோர், எலுமிச்சைவினிகர் ஊறுகாய். அக்காலத்தில் ஒரு ரூபாய்க்கு அந்தச்சாப்பாட்டை அவர் கொடுத்துவந்தது ஆச்சரியம்தான். நாகர்கோயிலிலேயே அளவுச்சாப்பாடு அன்று மூன்றுரூபாய். அங்கே குடிக்கக் கிடைக்கும் நீர் விட்டுத் தேற்றி உப்பு போடப்பட்ட வடித்த கஞ்சித்தண்ணீர் பிரபலம். அத்தனைபேரும் அதை மீண்டும் மீண்டும் வாங்கி குடிப்பார்கள்.

சாப்பிடுபவர்களில் பெரும்பாலானவர்கள் என்னைப்போலத்தான் இருந்தார்கள். ஒட்டிய உடலும் முகமும் வரண்ட உதடுகளும் மெல்லிய தாடிமீசையும் தொளதொளப்பான பழைய உடைகளும் கொண்டவர்கள். அதிகமாகப்பேசாதவர்கள். ஒருமுறை சாப்பிட்டுக்கொண்டிருக்கும்போது அனிச்சையாக கண்களை தூக்கி அந்த அறையைப்பார்த்து திகைத்தேன். அங்கே சாப்பிட்டுக்கொண்டிருந்த அத்தனைபேரும் பலிச்சோறு எடுக்க வந்த ஆவிகள் போலிருந்தனர். விழித்துப்பிதுங்கிய கண்கள் ,விரியத்திறந்த வாய் ,ஆவேசமாக அள்ளித்திணிக்கும் கை அதை வாங்குவதற்காக முன்னால் சாய்ந்த உடல். அவர்கள் எவருமே மெல்லுவதைப்போலத் தெரியவில்லை.

ஐந்து நிமிடம் சாப்பிடுவதற்குக்கூட இருக்காது. ஆனால் உள்ளே சென்றவர்கள் எளிதில் வெளிவருவதில்லை. வெளியே நிற்கையில் உள்ளே தட்டுகளும் டம்ளர்களும் ஓசையிட, சோறும் குழம்பும் மோரும் சேர்ந்த வாசனை பெரிய வதை. உள்ளே சென்றபின் அதில் திளைத்து விளையாட ஆரம்பிப்பார்கள். எழுந்து வரவே மனமில்லாதது போல வழித்து வழித்து நக்குவார்கள். 'மக்கா ஒரு கிளாஸு கஞ்சிவெள்ளம் குடுடே' என்பார்கள்.

ஒருரூபாய் சாப்பாடு ஒருபோதும் எனக்கு போதுமானதாக இருந்ததில்லை. சோறு அப்படி பரப்பி வைக்கப்படாவிட்டால் அதை சாப்பாடு என்றே சொல்லமுடியாது. என் அம்மா கோழிக்குச் சோறு அள்ளி வீசும்போதுகூட அதைவிட அதிகமாக அள்ளுவாள்.

சாப்பிட்டு முடித்ததுமே ஓர் இழப்புணர்வுதான் ஏற்படும். தாளில் எஞ்சிய பருக்கைகளை பொறுக்கி வாயில்போடவேண்டுமென்று தோன்றும். அதைச்செய்யக்கூடாதென்ற இறுக்கமும் வரும். ஆனால் பலர் நன்றாக வழித்து வழித்துச் சாப்பிட்டு கைகளையும் சுத்தமாக நக்கிக்கொண்டிருப்பதைக் கண்டிருக்கிறேன். மாதவன் அண்ணா 'அந்தால அந்த கையையும் தின்னிருடே.தீ அடங்கட்டு' என்று சொன்னார். நான் அவன் கேட்டுவிட்டானா என்று பீதியுடன்

பார்த்தேன்

அங்கு வருவதற்கு வெகுநேரம் முன்னரே பசி ஆரம்பித்திருக்கும். சாப்பிடுவதற்கான காசு அதற்குப்பிறகுதான் ஈட்டப்பட்டிருக்கும். சிலர் வெகுதொலைவில் இருந்துகூட நடந்து வந்தார்கள். நாணப்பண்ணனுக்கு அவரது வாடிக்கையாளர்கள் பற்றித்தெரியும். வெளியே சாக்கடைக்குமேலே ஒரு பெரிய அலுமினியத்தொட்டியில் குடிநீரும் சங்கிலி போட்டு கட்டப்பட்ட அலுமினிய டம்ளரும் இருக்கும். அனேகமாக அனைவருமே நாலைந்து டம்ளர் தண்ணீர் குடிப்பார்கள். தண்ணீர் இறங்கும் தொண்டைகள் அசைவது அந்த நீரை உடல் ஆவலுடன் வரவேற்பதுபோலிருக்கும். இன்னும் இன்னும் என்று அசையும் குரல்வளை நின்றதும் தாடியில் நீர்த்துளிகளுடன் குவளையை இன்னொருவருக்கு நீட்டுபவன் முகத்தில் களைப்புதான் மிஞ்சியிருக்கும்.

காத்திருப்பவர்களுடன் சேராமல் வெளியே சாலைக்கு அப்பால் பஜ்ரங்பலி சன்னிதி அருகே வரிசையாக ஐம்பதுபேர் வரை காத்திருப்பார்கள். அவர்களிடம் ஒருரூபாய் கூட இருக்காது. யாராவது எதிரே இருக்கும் பாபாகோயிலில் இருந்து வந்து சாப்பாட்டுக்கு நாணப்பண்ணனிடம் பணம் கொடுப்பார்கள். அண்ணனின் மகன் சுதீரன் ஐந்தாறு தட்டுகளை மேலே மேலே அடுக்கியபடி வெளியே வந்து அந்தவரிசையில் இருப்பவர்களுக்கு கொடுப்பான். அவர்களில் சிலர் எழும்போது மற்றவர்கள் உணர்ச்சியற்ற முகத்துடன் பார்த்துக்கொண்டிருப்பார்கள்.

நாங்கள் காத்திருப்பதை விட மோசம் அவர்கள் காத்திருப்பது. எங்கள் காத்திருப்புக்கு முடிவு உண்டு என்று தெரியும். பையில் ஒரு ரூபாய் இருப்பது வரை பிரச்சினையே இல்லை. நாணப்பண்ணன் இரவு பன்னிரண்டுவரை கடைமுடுவதில்லை.ஒவ்வொருவராக எழுந்து செல்கிறார்கள். இதோ இந்த குர்தா ஆசாமிக்குப் பிறகு நான். அவனுக்கு முன்னால் அந்த பச்சைச்சட்டை ஆசாமி. அவருக்குப்பின்னால் அந்த ஒல்லியான மருமுகத்தவன். அவனுக்கு முன்னால்_

அவன் எழுந்து ஒன்றும் நடக்காதது போல உள்ளே செல்கிறான். உள்ளே செல்பவனை அனைவரும் மௌனமாகத் திரும்பிப்பார்க்கிறார்கள். ஐந்து நிமிடங்களுக்குள் அடுத்தவன். இன்னும் ஒருவன் மட்டும்தான் எனக்கு முன்னால். அக்கணங்களில் அவன் மீது உருவாகும் இனம்புரியாத கசப்பை நாமே திரும்பப்பார்க்கமுடிந்தால் புன்னகைதான் வரும்

ஆனால் எதிர்ச்சாரியில் இருப்பவர்கள் அப்படி அல்ல. ஒருவேளை பகல் முழுக்க ஒருவருக்குக் கூட சாப்பாட்டுக்கு அழைப்பு வராமல் போய்விடலாம். முன்னால் இருவருக்கு தட்டுவந்தபின் மூன்றாவது ஆளுக்கு பலமணிநேரம் கழித்து தட்டு வரலாம். வராமலேயே போகலாம். எந்த நம்பிக்கையில் அவர்கள் காத்திருக்கிறார்கள் தெரியவில்லை. அனேகமாக எல்லாருமே நம்பமுடியாத அளவுக்கு மெலிந்த காசநோயாளிகள். மேலும் மெலிந்து வற்றுவதை தடுப்பது எலும்புக்கூடு மட்டும்தான். சிலர் கைகால்கள் இல்லாதவர்கள். ஒருமுறை ஒரு வெள்ளை ஆடைப் பெண்மணியையும் ஒரு சிறுமியையும்கூட அவ்வரிசையில் பார்த்தேன்.

அங்கே பணம் கொடுத்துச் சாப்பிட வரக்கூடியவர்கள் எல்லாருமே மலையாளிகள்தான். மிக அபூர்வமாகவே தமிழர்கள் வந்தனர். குழம்பில் இருக்கும் மீன்வாடைக்காகவே மலையாளிகள் தேடிவந்தனர். அவர்களால் தமிழர்கள் சாப்பிடும் அய்யர்மெஸ்களை தாங்கிக்கொள்ளமுடியாது. தமிழர்களுக்கு குழம்பில் மீன்செதும்பல் கிடப்பது குமட்டலை உருவாக்கும். நாணப்பண்ணன் முதல்நாள் மீன்குழம்பு வைத்து இறக்கியதும் மீனை எல்லாம் பொறுக்கி மறுநாள் மீன்குழம்பில் போடுவதற்காக வைத்துவிடுவார் என்றுசொன்னார் மாதவண்ணன். நான் ஒரே ஒருமுறை ஒரு மீன்முள் கிடைக்கப்பெற்றேன். மத்திச்சாளை மலிந்த காலம் அது.

மும்பையில் அன்று தினம் இரண்டு ரூபாய் கிடைப்பது ஒன்றும் பெரிய வேலை அல்ல. கையும் காலும் உடைய யாருக்கும் தினம் பத்து ரூபாய் கூலி உண்டு. பதினொன்றாம் வகுப்பு பாஸ் ஆகியிருந்தால் மாதம் முந்நூறு ரூபாய் கொடுக்க பல்வேறு சேட்டுகள் தயராக இருந்தார்கள். அங்கே மிகப்பெரிய செலவினமே தங்குமிடம்தான். எங்கள் ஊரிலிருந்து மட்டும் பதினைந்துபேர் மும்பையில் இருந்தார்கள். நான் மாதவண்ணனின் அறையில் பங்காளியாக தங்கியிருந்தேன்

மாதவண்ணன் ஒரு வயலுக்கு அப்பால் ஆண்டிப்பொற்றையில் குடியிருந்த பாகீரதிமாமியின் மகன். இரண்டு வருடத்துக்கு ஒருமுறை ஊருக்கு வருவார். ஊரில் இருந்த காலங்களில் அவர்தான் கோயில் விழாக்களில் ‘தேவீ ஸ்ரீதேவீ தேடிவருந்நூ ஞான்’ பாட்டை உருக்கமாக பாடுவார். நாலைந்து வருடங்களாகவே மாமி அவருக்கு பெண் பார்த்துவந்தாள். ‘என்னெடி விசாலமே_ அவனுக்கு பாம்பேயிலே கம்பேனியிலே நல்ல உத்தியோகம். மாசம்பிறந்தா கையிலே காசு_இவளுகளுக்கு என்ன திமிரு பாத்துக்கோ. குந்தம்தூக்கி பட்டாளத்துகாரனுகளை கெட்டுவாளுக. கம்பேனிக்காரனை கெட்டமாட்டாளுக.அவளுகளைச் சொல்லி குற்றமில்லை. அவளுகளுக்க தந்தையான்மாரைச் சொல்லணும்.விவரமில்லாத கூட்டம்’ மாமி சொன்னாள்.

மும்பையில் ரயிலில் வந்திறங்கியதும் அவரைத்தான் நினைத்தேன். மும்பைக்குள் நுழைந்தபோது நான்குபக்கமிருந்தும் மலையிறங்கிவந்த பாறைகளைப்போல கட்டிடங்கள் என்னை சூழ்ந்துகொண்டன. எல்லாமே மழையில் கறுத்த சுவர்களும் குப்பைகள் தொங்கும் பால்கனிகளும் கொண்ட பலமாடிக் கட்டிடங்கள். எல்லா கட்டிடங்களுக்கு முன்னாலும் மனிதர்கள் கூடிக்கிடந்தார்கள். எருமைகளுக்குப்பின்னால் சாணியும் முன்னால் தீனியும் கிடப்பதுபோல. அவர்கள் எல்லாரும் காத்திருந்தார்கள். எஞ்சியவர்கள் காத்திருப்பதற்காக சாலைகளில் ஓடிக்கொண்டிருந்தார்கள்.

ஒருமணிநேரம் சாலையோரத்தில் சொல்லிழந்துபோய் நின்றிருந்தேன். அந்தப் பரபரப்பில் எங்கே செல்வது என்ன செய்வது என்றே புரியவில்லை. வெளியே ஓடிய பேரோசையில் என்னுடைய உள்ளே ஓடிய சொல்லோடை வழிதவறி அவ்வப்போது உதிரிச்சொற்களாக மீண்டு வந்துகொண்டிருந்தது. ஒவ்வொரு முறை மீண்டும் வரும்போதும் வேதாளம் போல என் மீது ஏறி அமர்ந்து என்னை வதைத்த அதனிடமிருந்து அவ்வளவு நேரம் விடுதலை பெற்று இருக்கிறேன் என்று ஆறுதலுடன் எண்ணிக்கொண்டேன். மும்பையிலேயே இருந்துவிடுவது என்று முடிவெடுத்தேன். நான்

எப்போதுமே நாடிய மக்கள்கூட்டம் அங்கே எல்லா சந்துபொந்துகளிலும் இருந்தது.

மேலே செய்யவேண்டியது என்ன என்று சிந்திக்க ஆரம்பித்து பின்பு சலித்து விலகிய கணமே மாதவண்ணன் நினைவு எழுந்தது. அவர் வேலைசெய்யும் கம்பெனியின் பெயர் மோதி ஆண்ட் மோதி மெஷின் டூல்ஸ் என்ற நினைவு எங்கோ ஆழத்தில் இருந்து கிளம்பி வந்தது. அந்த கம்பெனியை விசாரித்துச் சென்றேன். பகல் முழுக்க தேடி மாலை நாலரை மணிக்கு கண்டுபிடித்துவிட்டேன். நான் நினைத்ததைவிட பெரிய நிறுவனம். வெளியே இருந்த கூர்க்கா என்னை உள்ளே விட மறுத்துவிட்டார். அவரிடம் பேசிப்புரியவைக்க என்னிடம் மொழி இல்லை. வாசலிலேயே நின்றேன். இருட்ட ஆரம்பிக்கும் நேரத்தில் வெளியே வந்த கும்பலில் மாதவண்ணாவைப்பார்த்தேன்.

என் குரல் கேட்டு திரும்பிப்பார்த்தவர் சாதாரணமாக 'நீயா?' என்றார். நான் வேலைதேடி ஊரைவிட்டு வந்தேன், வந்த இடத்தில் என் பெட்டியை எவரோ திருடிவிட்டார்கள் என்றேன். அவர் அதிகம் ஆச்சரியப்படவில்லை. அப்படி சொந்தக்காரர்களோ ஊர்க்காரர்களோ வந்துகொண்டே இருப்பது வழக்கம் என்று பின்னால் தெரிந்துகொண்டேன். செல்லும் வழியில் 'உன்னிடம் எவ்வளவு பணம் இருக்கிறது?' என்று கேட்டார். எட்டு ரூபாய் இருந்தது.

'சரி அது இருக்கட்டும்-' என்று என்னை கூட்டிச்சென்றார். பஸ் ஏறி இறங்கி நடந்து இருட்டு பரவிய சந்துக்குள் நுழைந்து நாணப்பண்ணன் கடையை அடைந்தோம். அந்த முதல் சாப்பாடு எனக்கு மிகவும் ருசியாகத்தான் தெரிந்தது. அதன் விலை ஒரு ரூபாய்தான் என்று தெரிந்தபோது இன்னொன்றும் சாப்பிடலாமென நினைத்தேன். ஆனால் மாதவண்ணன் ஒரே சாப்பாட்டுடன் எழுந்திருந்ததனால் நானும் எழுந்தேன். அவரே பணம் கொடுத்தார்.

மாதவண்ணன் ஒரு பீடி பற்றவைத்துக்கொண்டார். புகை விட்டபடி தலைகுனிந்து நடந்தார். ஊரில் மாதவண்ணன் ஒளிந்து மறைந்துதான் புகைபிடிக்கமுடியும். இங்கே தெருவழியாக கவனமே இல்லாமல் புகையை ஊதிக்கொண்டு சென்றார். ஊரில் தன்னந்தனியாக இடைவழிகளில் நடக்கையில்கூட நடையும் முகமும் அவருடன் பலர் இருப்பதுபோலிருக்கும் . அடிக்கடி தோள்களை முட்டி முட்டி வழி எடுத்துச்சென்றபோதும்கூட இங்கே அவர் தன்னந்தனியனாக இருந்தார்

மாதவண்ணனின் அறை உண்மையில் ஒரு குடிசை. தகரக்கூரைக்குக் கீழே ஒருவகை அட்டையைக்கொண்டு சுவர்கள் கட்டியிருந்தனர். ஒரே அறை. கதவும் தகரம்தான். அதில் நுழைவதற்கு இரு செங்கற்கள் போடப்பட்டிருந்தன. அந்தத்தெருவிலேயே சாக்கடையும் ஓடியது. சாக்கடைக்குள் போடப்பட்ட கற்களை தாவித்தாவி மிதித்துத்தான் நடமாட முடியும். எதிரே வருபவர்கள் மிகத்துல்லியமாக வேறு கற்களை மிதித்துத் தாண்டிச்சென்றார்கள். சாக்கடை முழுக்க விதவிதமான பாலிதீன் தாள்கள் மிதந்தன. ஒரு கார் இருக்கையின் நுரைரப்பர் பரப்பு நீர் ஊறி பன்றியிறைச்சி போல ஒதுங்கிக்கிடந்தது.

மாதவண்ணனுடன் மேலும் நான்குபேர் அந்த அறையைப் பகிர்ந்துகொண்டிருந்தனர். நான்கு கொடிகளில் போடப்பட்ட விதவிதமான வேட்டிகள் பாண்டுகள் சட்டைகள் குர்த்தாக்கள் முழு அறையையும் அடைத்துக்கொண்டிருந்தன. ஒவ்வொருவருக்கும் ஒரு தகரப்பெட்டி. சிவப்பு அல்லது நீலநிறம் பூசப்பட்டவை. சிலபெட்டிகள் நிறத்தை முழுமையாக இழந்திருந்தன. அவை ஒரு மூலையில் மேல் மேலாக அடுக்கப்பட்டிருந்தன. ஓரமாக ஒரு கள்ளிப்பெட்டி. அதன்மீது ஒரு ஸ்டவ் மட்டும் இருந்தது. சுவர்களில் குருவாயூரப்பன் ,அய்யப்பன் படங்களுடன் பிரேம்நசீர், மது, ஜெயன் , ஜெயபாரதி, ஷீலா படங்களும் ஒட்டப்பட்டிருந்தன.

நாங்கள் போகும்போது நான்குபேர் விரிக்கப்பட்ட பாயில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். மாதவண்ணன் என்னை அறிமுகமெல்லாம் செய்யவில்லை. 'வேலைக்கு வந்திருக்கான்' என்றார். அவர்கள் என்னை கூர்ந்து பார்த்தார்களே ஒழிய ஒன்றும் சொல்லவில்லை. ஒருவர் கொட்டாவி விட்டுக்கொண்டு 'சரியாச்சொல்லப்போனா இன்னும் எண்பத்திரண்டு நாள்-அதுக்குள்ள எல்லாம் சரியா போகணும்-நான் குருவாயூரப்பனுக்கு நேர்ச்சை விட்டிருக்கேன்' என்றார்.

பெரும்பாலான மாலைநேரங்களில் அவர்கள் கணக்குகள்தான் போட்டார்கள். இன்னும் எத்தனை தவணை கட்டினால் சீட்டு முடியும். ஓணத்துக்கு இன்னும் எத்தனை நாள். இன்னும் எத்தனை மாதம் தாண்டினால் சம்பளஉயர்வு வரும். ஏன் இன்னும் வீட்டிலிருந்து கடிதம் வரவில்லை. அவர்கள் நடுவே அந்தக்கணக்குகள் எதிலும் சம்பந்தப்படாதவனாக நான் இருந்தேன். என்னை அவர்கள் பெரிதாகப்பொருட்படுத்தவுமில்லை. என் வயது ஒரு காரணம். அதைவிட முக்கியமானது நான் எந்தப்பொறுப்பும் இல்லாதவன் என்பது. அவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் சுமைகளைப்பற்றி மட்டும்தான் பேசிக்கொண்டிருந்தார்கள்.

அவர்கள் அனைவருமே நாணப்பண்ணனின் வாடிக்கையாளர்கள். ஞாயிற்றுக்கிழமை மட்டும்தான் சமையல். மிக அபூர்வமாக என்றாவது ஒருநாள் கோழியோ மீனோ எடுத்துவந்து சமைப்பார்கள். செலவுகள் பகிர்ந்துகொள்ளப்படும். ஆனால் அதில் ஜார்ஜ் மாஸ்டர் கலந்துகொள்ள மாட்டார். அவருக்கு ஒவ்வொரு பைசாவும் முக்கியம். மாதச்சம்பளத்தை அப்படியே வீட்டுக்கு அனுப்பிவிட்டு பக்ஷீஸில் வாழும் வாட்ச்மேன் அவர்.

அறையின் சட்டங்களில் ஒன்று இரண்டுவாரம் வரை ஒருவன் வேலைதேடலாமென்பது. அதுவரை அறையைப் பகிர்ந்துகொள்ள வாடகை இல்லை. காசிருந்தால் சாப்பிடலாம், இல்லாவிட்டால் இரண்டுவேளைச் சாப்பாட்டுக்கு மற்றவர்கள் பணம் கொடுப்பார்கள். இரண்டு வாரம் தாண்டுவதற்குள்ளாகவே எனக்கு ஒரு கடையில் விற்பனையாள் வேலை கிடைத்துவிட்டது.

தேங்காய்நாரிலான பல்வேறுபொருட்களை விற்கக்கூடிய கடை. அவர்களின் சரக்குகள் மும்பையின் புறநகர்களில் எங்கோ இருந்தன. அங்கிருந்துதான் அவை வாங்குபவர்களிடம் செல்லும். நான் இருந்த எட்டடிக்கு எட்டடி கடையின்

உரிமையாளர் முகமது யூனுஸ் என்ற கோழிக்கோட்டு மாப்பிளை. ஒரு கோணத்தில் வைக்கம் முகமதுபஷீரின் தம்பி போல இருப்பார். நான் ஹிட்லர்மீசை வைத்த ஒருவரை உயிருடன் பார்ப்பது அதுவே முதல்முறை. அது மீசை என என் மனம் ஏற்கவே நாலைந்து நாள் ஆகியது. அவரும் மேலுதட்டை முன்னால் நீட்டி மீசையை அசைக்கும் வழக்கம் கொண்டிருந்தார்.

ஆலப்புழாவில் உள்ள ஏதோ சொசைட்டியின் விற்பனை ஏஜென்ஸி அது. யூனுஸ் அதில் பங்குதாரர். அவரது அண்ணன்கள் ஊரில் மரக்கடை வைத்திருந்தார்கள். அவர் அதை ஆரம்பித்து எட்டு வருடங்கள் தாண்டி விட்டிருந்தது. ‘எந்த தொழிலுக்கும் ஒரு தொடக்கம் உண்டு’ என்று சொல்வார். ‘என் அண்ணா தொழில் ஆரம்பித்து பதிமூன்று வருடம் கழித்துதான் சூடுபிடித்தது..’

முஸ்லீமாக இருந்தாலும் எல்லா மாப்பிளைகளையும்போல அவருக்கும் சோதிடத்தில் பெரிய ஈடுபாடு இருந்தது. குருவாயூருக்கு நேரில் சென்று காணிப்பய்யூர் நம்பூதிரியிடம் கொடுத்து ஜாதகத்தை விரிவாகக் கணித்து குறித்து வைத்திருந்தார். அது அவரது மேஜைக்குள்ளேயே இருக்கும். அடிக்கடி அதை எடுத்து நுணுக்கமாக வாசித்து காலண்டரை வைத்து கணக்குபோட்டு பென்சிலால் ஒரு டைரியில் குறித்து வைத்துக்கொள்வார்

என் எதிரே ஒரு மிகமெலிந்த ஆங்கில இந்தியப்பெண். மரியா என்று பெயர். அவள் முன் ஒரு பழங்கால ரெமிங்டன் தட்டச்சு யந்திரம். அவளுக்குப்பின்னால் பீரோ. அதில் பல்வேறு பதிவேடுகள் கணக்கேடுகள். மேலே மூட்டையாக கட்டி வைக்கப்பட்ட பழைய ரசீதுகள். மரியா குதிகால் உயர்ந்த செருப்புகள் போட்டிருப்பாள். பெரும்பாலும் காபிநிற கவுன்கள். காதில் வளையம் தவிர நகைகள் கிடையாது. நான் மும்பையில் கண்ட எல்லா ஆங்கில இந்தியப்பெண்களுக்கும் மரியா என்றுதான் பெயர்.

அவளுக்கும் எனக்கும் பெரிய வேலை ஏதும் இல்லை. அந்தகடையைத் தேடிவந்து தேங்காய்நார் நார்க்கம்பளம் வாங்குபவர்கள் மிகமிக குறைவு. எங்கள் கடை கிட்டத்தட்ட சாலைமேலேயே பிதுங்கி நீண்டிருக்கும். சாலைவழியாகச் செல்பவர்கள் எல்லாம் கடைக்குள்ளேயே நடமாடுபவர்கள் போலத் தோன்றுவார்கள். ஆட்டோக்கள் விடும் கரும்புகை நேரடியாகவே கடைக்குள் வந்து நிறையும். மேலே ஓடிய சிறிய சிறகுகள் கொண்ட மின்விசிறியின் வேலையே சாலையில் இருந்து வரும் புகையையும் புழுதியையும் வெளியே தள்ளுவதுதான்.

காலையில் வந்ததுமே யூனுஸ் அன்றைய கடிதங்களுக்கான குறிப்புகளை எனக்கு வாய்மொழியாக தந்துவிடுவார். என்னுடைய ஆங்கிலம் மீது அவருக்கு நல்ல மதிப்பு. எல்லா கடிதங்களும் ஒரே உள்ளடக்கம் கொண்டவைதான். Sir, we are awaiting your early response.. வகையறா. பணம் பல்வேறு இடங்களில் நின்றுவிட்டிருந்தது. விசாரிப்புகள் பாதியில் அறுந்து நின்றுவிட்டிருந்தன. எங்கோ ஏதோ தேடி வரவிருந்தது.

பத்துமணிக்கு தபால்காரர் வந்ததும் கடிதங்களை பிரிந்த்து கோப்பில்போடுவேன். தேவையானவற்றுக்கு மட்டும் சிறிய குறிப்பு எழுதுவேன். அவ்வளவுதான், வேலை முடிந்தது. நான் எழுதும் கடிதங்களை மரியா டக் டக் என்று மெதுவாக தட்டச்சு செய்வாள். அவளுக்கு உண்மையிலேயே தட்டச்சுப்பயிற்சி இருக்கிறதா என்று எனக்கு சந்தேகம். ஆங்கிலம் பேசக்கூடிய ஒருவருக்கு ஆங்கிலம் சரியாக எழுத வராது என்பதும் ஆச்சரியமாக இருந்தது.

மரியா நாலைந்து கடிதங்களை நாளெல்லாம் அடித்துக்கொண்டிருப்பாள். மிச்சநேரம் வெளியே வெறித்துப்பார்த்துக்கொண்டு தன்னிலையழிந்து மணிக்கணக்காக அமர்ந்திருப்பாள். அவள் ஆங்கில இந்தியப்பெண் அல்ல என நான் ஐயப்பட்டேன். மாநிறம், கறுப்புக்கூந்தல். வெள்ளைக்காரச் சாயலே இல்லை. ஆனால் மும்பையில் ஆங்கில இந்தியர்கள் அப்படித்தான் இருப்பார்கள் என்றார் மாதவண்ணா. ‘பாத்து நடந்துக்கோ. சக்கை அரக்காக்கும் அவளுக.. தொட்டா பின்ன சந்திவரை கேறி ஒட்டிப்போடுவாளுக’

ஆங்கில இந்தியப்பெண்களுக்குத் திருமணமே ஆவதில்லை என்றார் அறைநண்பரான அச்சுதன்குட்டி.அவர்களின் சமூகத்தில்தான் திருமணம் நடந்தாகவேண்டும். அதில் ஆண்கள் மிகக்குறைவு. அவர்களும் எப்படியாவது ஆஸ்திரேலியாவுக்குச் சென்றுவிடுவார்கள். பெரும்பாலான ஆங்கில இந்தியப்பெண்கள் அவர்கள் திரும்பி வருவதற்காகக் காத்திருக்கிறார்கள். அழகில்லாத பெண்களுக்கு அந்தக் காத்திருப்பே வாழ்க்கையாக ஆகிவிடும்.

ஆனால் மரியா என்னிடம் எந்த ஆர்வத்தையும் காட்டவில்லை. அவள் உடம்பில் சதையே இல்லை. மார்பகங்களே இல்லாத பெண்ணை அவ்வளவு நெருக்கமாக அப்போதுதான் பார்க்கிறேன். ஆனால் ஒரு பெண்ணை நாளெல்லாம் பார்த்துக்கொண்டிருந்தால் கொஞ்சம் கொஞ்சமாக அவளிடம் ஒரு அழகு தென்பட ஆரம்பிக்கிறது. பெண்ணாக இருப்பதனாலேயே உள்ள அழகு அது. பெரும்பாலும் அசைவுகளின் நளினமாக அது வெளிப்படுகிறது.

மரியா தாள்களைத் தேடும்போது, பென்சிலை கவனமாகச் செதுக்கும்போது, கூர்ந்து நோக்கி தட்டச்சு எழுத்தை ஆராயும்போது, இரு கைகளாலும் குட்டைத்தலைமயிரை பின்னால் தள்ளி ரிப்பனால் கட்டும்போது, அமர்ந்ததும் கவுனை தொடைக்கு கீழே செருகி முட்டுக்கு கீழே இழுத்து விடும்போது இயல்பான மென்மை வெளிப்படும். அபூர்வமாக அவள் வாய்க்குள் எதையாவது முனகலாகப் பாடும்போது கண்களில் ஒரு கனிவு தெரியும்.

அவளை நான் பார்ப்பதை விரைவிலேயே அறிந்துகொண்டாள். ஆரம்பத்தில் சஞ்சலத்துடன் என் பார்வையை வந்து சந்தித்த அவள் கண்கள் பின்னர் என் ஆர்வத்தை புரிந்துகொண்டன. அதன்பின் அவள் என் கண்களைச் சந்திப்பதே இல்லை. ஆனால் இன்னும் உல்லாசம் கொண்டவளாக ஆனாள். அடிக்கடி பாடிக்கொண்டாள். அதிகநேரம் மேஜைக்குள் காகிதங்களைத் தேடினாள். அவள் கைகள் உள்ளே வெற்றிடத்தை அளைந்துகொண்டிருக்கின்றன என்று எனக்குத் தோன்றும்

நான் மதியம் பன்னிரண்டு மணிக்கே கிளம்பி நாணப்பண்ணனின் கடைக்குச் சென்று இரண்டுமணிக்குத்தான் வருவேன். ஒருமணிநேரம் காத்திருக்கவேண்டியிருக்கும். சாப்பிட்டுவிட்டு வரும்போது மரியா அவளுடைய வண்ணம்பூசப்பட்ட அலுமினிய சம்புடத்தில் கொண்டுவந்த உணவைச் சாப்பிட்டுவிட்டிருப்பாள்.

நான் சாப்பிட எழுந்தபோது அவள் என்னிடம் ஆங்கிலத்தில் 'நீ எங்கே சாப்பிடுகிறாய்?' என்று கேட்டாள்.

'அருகேதான்' என்று சொன்னேன்.

'காத்திருந்து சாப்பிடவேண்டுமோ'?'

'ஆம்-'

'உணவு எப்படி இருக்கும்?'

'மலிவு-'

அவள் புன்னகை செய்து 'தரமானவற்றுக்காக காத்திருப்பதில் அர்த்தம் உண்டு' என்றாள்

நான் மொண்ணையாக 'மலிவு. அதனால்தான் காத்திருக்கிறேன்' என்றேன்

'நமக்கு அடிப்படை உரிமையாக உள்ளவற்றுக்கே நாம் காத்திருக்கவேண்டியிருக்கிறது, இல்லையா?'

மையமாக புன்னகைசெய்துவிட்டுச் சென்றேன். அவள் என்ன சொல்லவந்தாள் என்று சாப்ப்பிட்டு முடித்தபின் புரிந்தது. இந்த நகரில் அபூர்வமான, அருமையான எவற்றுக்காகவாவது யாராவது காத்திருக்கிறார்களா என்ன?

மறுநாள் நான் சாப்பிடக்கிளம்பும்போது மரியா என்னிடம் 'நீ அசைவம் சாப்பிடுவாய்தானே?' என்றாள்

'ஆமாம்'

'சிக்கன்?'

'ஆமாம்' என்றேன். எனக்கு அவள் என்னசெய்யப்போகிறாள் என்று புரிந்து வாயில் எச்சில் நிறைந்தது.

அவள் இன்னொரு அலுமினிய டப்பாவை என்னிடம் நீட்டி 'உனக்கு ஆட்சேபணை இல்லை என்றால்-' என்றாள்.

கோழிக்கறி எங்கள் ஊரிலேயே அபூர்வ உணவு. அதிலும் கோழியைப்பொரிப்பது என்பது நினைத்தே பார்க்கமுடியாதது. நான் எலும்புகளைக்கூட விரும்பிச் சாப்பிட்டேன். அப்படிச் சாப்பிடுவது அவளுக்குத்தெரியக்கூடாது என்று நினைத்தாலும் கொஞ்ச நேரத்திலேயே என்னை மறந்துவிட்டேன்.

அவள் 'பிடித்திருந்ததா?' என்று கேட்டாள். அதை ஏன் அப்படிக் கூர்ந்து பார்த்துக்கொண்டு கேட்டாள் என்று தெரியவில்லை.

தடுமாறியபடி 'ஆமாம்' என்றேன். சட்டென்று நாணப்பண்ணனின் நினைவு வந்தது. அவரது குடும்பமும் அங்கே சமைப்பதைத்தான் உண்கிறது. நாங்களாவது இப்படி எதையாவது சாப்பிட முடியும். அவர்களுக்கு வேறு வழியே இல்லை.

அதற்கு அடுத்த திங்கள் கிழமை எனக்கு மீண்டும் சிக்கன் கொண்டு வந்து தந்தாள். அதை நான் மாதவண்ணனிடம் சொன்னேன். 'டேய் தூண்டிலாக்கும் போடுதா-மயிரே-அது சூண்டையிலே கொருத்து வச்ச சிக்கனாக்கும். தின்னா கொதவளையிலே குத்தி நின்னுபோடும் பாத்துக்க' என்றார்

'நான் என்ன செய்யணும் அண்ணா?' என்றேன்

'அவ அடுத்த தவணை சிக்கன் குடுக்கும்பம் வேண்டாம்னு சொல்லிடு'

'சும்மா வேண்டாம்னு சொல்லணும்- வயிறு செரியில்ல, இப்பம்தான் சாப்பிட்டேன், பிறவு பாக்கலாம் , ஒண்ணும் சொல்லப்பிடாது. வேண்டாம், அம்பிடுதான். அவளுக்கு தெரிஞ்சிரும்' என்றார் அருணாச்சலம்நாடார்

ஆனால் அடுத்த தடவை அவள் சிக்கன் தந்தபோது என்னால் அதைச் சொல்லமுடியவில்லை. அவளுடைய முகத்தில் தெரிந்த கனிவு அதைச் சொல்லவைக்கவில்லை. சிக்கன் சாப்பிட்டதை அவர்களிடம் சொல்லாமல் இருந்துவிட்டேன்.

அவள் என்னிடம் 'நீ மாதுங்கா வந்திருக்கிறாயா?' என்றாள்

'இல்லை' நான் உண்மையில் மும்பையையே அறிந்திருக்கவில்லை. நானறிந்ததெல்லாம் நாலைந்து தெருக்கள் மட்டும்தான்.

*‘மாதுங்காவில் எங்கள் குடியிருப்பு இருக்கிறது. நானும் என் அம்மாவும் மட்டும்தான் இருக்கிறோம்’*

*‘ஓ’*

*‘நீ ஏன் இந்த ஞாயிற்றுக்கிழமை என் வீட்டுக்கு வந்து சாப்பிடக்கூடாது? அம்மா உன்னை அழைக்கச் சொன்னாள்’*

*நான் மூச்சுத்திணறினேன். என்ன பதில் சொல்வது என்று தேடிய என் மூளை அந்தரத்தில் நின்றது.*

*‘நான் உன்னை எதிர்பார்க்கிறேன்’*

*’சரி’ என்றேன்.*

*‘ஞாயிற்றுக்கிழமை நான் இங்கே வருகிறேன். அந்த இனிப்புக்கடை முன் நிற்கிறேன். நீ வந்துவிடு. நாம் பஸ்ஸிலேயே போய்விடலாம்’*

*‘சரி’*

*நான் அதே மூச்சுத்திணறலுடன் நடமாடினேன். ஒருநாள் கழிந்ததும் இது என்ன சில்லறை இம்சை, நடப்பது நடக்கட்டும் என்று அதை மனதிலிருந்தே அழித்தேன். ஞாயிற்றுக்கிழமை காலையில் காத்திருந்தது போல சரியாக வந்து என் குரல்வளையைப்பிடித்துக்கொண்டது அந்த நினைவு.*

*காலையில் பல்தேய்த்துவிட்டு அறையிலேயே அருணச்சலம் நாடார் சுட்ட கோதுமைதோசையை சாப்பிட்டேன். மெல்ல நடந்து என் அலுவலகம் வரை வந்து தூரத்தில் நின்று அதைப்பார்த்துக்கொண்டிருந்தேன். மூடிய கடை கண்மூடித்தூங்கிக்கொண்டிருப்பதுபோலிருந்தது. பகலில் அது சோர்வுடன் எதையோ எதிர்பார்த்துக்கொண்டிருப்பதுபோலிருக்கும்.*

*சற்று நேரத்தில் நான் அவளைக் கண்டேன். இளஞ்சிவப்பு நிறத்தில் புதிய கவுன் அணிந்திருந்தாள். அதன் முகப்பில் செந்நிற ரோஜா போல ஒரு குஞ்சலம். தலையில் சிவப்புநிற ரிப்பன். சிவப்பு நிறமான பை. கைக்குட்டையால் முகவாயில் வியர்வையை ஒற்றியபடி நான்குபக்கமும் சிறிய பதற்றத்துடன் பார்த்துக்கொண்டு நின்றிருந்தாள்.*

*கால்களைப் பெயர்ப்பதற்குச் சற்று விசை தேவைப்பட்டது. அதன்பின் வேகமாகவே நடக்கமுடிந்தது. திரும்பித் திரும்பி சந்துகளில் நடந்து பெரிய சாலைக்கு வந்து மறுபக்கம் தாண்டி கம்பிவேலி இடைவெளி வழியாக ரயில்நிலையத்துக்குள் நுழைந்தேன். எப்போதும் மனிதத்திரள் முட்டிமோதும் ரயில்நிலையம். அதில் நான் என்னை பொருத்திக்கொள்ள ஒரு கச்சிதமான இடைவெளி இருந்தது.*

*அங்கேயே இருட்டுவது வரை அமர்ந்திருந்தேன். ரயில்கள் கூக்குரலிட்டபடி சென்றுகொண்டிருந்தன. இரும்பு அலறுவதுபோல. எவ்வளவு இரும்பு! ஓடி ஓடி தேய்ந்துகொண்டே இருக்கிறது இரும்பு. நவீன நாகரீகம் இரும்பை கண்டுபிடித்தபின்புதான் ஆரம்பித்தது என்று வாசித்திருக்கிறேன். இரும்புவெள்ளம் என்று ஒரு ரஷ்யநாவல். புரட்சியை இரும்பின் எழுச்சி என்கிறார். அலறிகூக்குரலிட்டு முனகி தேய்ந்து கொண்டிருக்கிறது. மொத்த இரும்பே தேய்ந்து மறைந்துவிட்டபின் என்ன ஆகும். என்ன மடத்தனமான சிந்தனைகள் என்று கூடவே ஓர் எண்ணம்.*

*இருளில் திரும்பி நடந்தேன். இனிப்புக்கடைப்பக்கம் போய் அந்த இடத்தைப்பார்த்தாலென்ன என்று தோன்றியது. ஆனால் ஒருவேளை அவள் அங்கே நின்றிருந்தால் என்ன செய்வது? சேச்சே, அதிகபட்சம் ஒருமணிநேரம் நின்றிருப்பாள். இல்லை இரண்டு மணிநேரம். அதற்குமேல் நிற்க முடியாது. திரும்பிச்சென்றிருப்பாள். அவளுக்குப்புரிந்திருக்கும். புரியாமலிருக்கும் அளவுக்கு அவள் முட்டாள் இல்லை.*

*ஆனால் புரிந்துகொள்வது எது? அதுவன்றி இன்னொன்று உள்ளது அகத்தில். அது நம்ப விழைகிறது. தக்கவைத்துக்கொள்ள முயல்கிறது. பிடிவாதமாக எதிர்பக்கம் திரும்பிக்கொள்கிறது. எதையும் கேட்கவும் காணவும் மறுக்கிறது. அவள் இன்னும்கூட அங்கேயே நின்றிருக்கலாம். இருட்டில், மின்னும் கண்களுடன்- என்னால் ஓர் அடிகூட எடுத்துவைக்க முடியவில்லை. திரும்பி அறைக்குச் சென்றேன்.*

*என் அறைக்கு அவள் வந்துவிடுவாளா என்ன? அலுவலகத்தில் என் அறைவிலாசம் கொடுத்திருந்தேன்-இப்போது அவளிடம் விலாசம் இருக்காதென்றாலும் நாளை அவளால் அதை எடுத்துப்பார்க்கமுடியும். நான் நாளை அலுவலகம் செல்லாவிட்டால் கண்டிப்பாக அவள் தேடிவருவாள். அவளுக்கு ஒன்று தெரியும், அவள் என் முன் நிற்கும்போது வலிமை மிக்கவள். அவளுடைய கண்களை கண்டபின் நான் அவளை மறுக்கமுடியாது. ஆம், கண்டிப்பாக வருவாள். என்னால் இனிமேல் அந்த அலுவலகம் செல்ல முடியாது. அவளால் இங்கே வராமலிருக்கவும் முடியாது.*

*இரவெல்லாம் தூங்கவில்லை. எழுந்து சென்று இருளைப்பார்த்துக்கொண்டு நின்றேன். நான் வளர்ந்த ஊர், அம்மா அப்பா எல்லாமே எங்கோ இருந்தன. நான் ஒருபோதும் அங்கே திரும்பிச்செல்லமுடியாதென்பதுபோல. ஆனால் அங்கிருந்து இங்குவரை ஒரே இருட்டு நீண்டு அகன்று பரவியிருந்தது. பசைபோன்ற இருட்டு. கையால் அதை அளையமுடியும் என்று தோன்றியது. அள்ளி அள்ளிக்குடிக்கமுடியும் என்று தோன்றியது.*

*மரியா இன்னும்கூட அங்கேயே நின்றிருக்கலாம். காத்திருப்பு என்பதில் ஒரு நம்பிக்கை மிச்சமிருக்கிறது.*

திரும்பிச்சென்றுவிட்டால் அது கூட இல்லாமலாகிவிடுகிறது. அசட்டுத்தனம். ஏன் இப்படியெல்லாம் சிந்தனை ஓடுகிறது?

மறுநாள் அதிகாலையிலேயே மாதவண்ணனிடம் ஏதும் சொல்லாமல் கிளம்பிவிட்டேன். ரயில்நிலையத்திற்குச் சென்று அங்கிருந்து மின்ரயிலில் பெரிய ரயில்நிலையம் சென்று அங்கிருந்து கிடைத்த முதல் வண்டியில் ஏறிக்கொண்டேன். இரண்டு மணிநேரத்துக்குப்பின் எங்கோ ஒரு சிறிய ரயில் நிலையத்தில் பரிசோதகரால் இறக்கி விடப்பட்டேன். 'சாலா மாதர் சோத்- ' என்று பல்லைக்கடித்தபடி என் கன்னத்தில் ஓங்கி அறைந்தபின் ரயில் நிற்பதற்கு முன்னரே தள்ளிவிட்டுவிட்டார்.

ரயில் சென்றபின் அந்த ரயில் நிலையத்தில் அமர்ந்திருந்தேன். வடக்கே ஔரங்காபாத் செல்லும் ரயில்கள் அவ்வழியாகச் சென்றன. நிறைந்து வழிந்த பெட்டிகளுடன் கனத்து உறுமிச்சென்றன அவை. சென்ற வழிகளில் சிறுநீர் சொட்டி வெயிலில் ஆவியாகியது. ரயில் நிலையம் மிக நீளமானது. அதன் நுனிவரை நடந்தேன். சிமிண்ட் பெஞ்சுகளில் அனேகமாக எவரும் இல்லை. வெயில் இருந்தாலும் காயாதபடி குளிரும் இருந்தது. பெஞ்சில் அமர்ந்துகொண்டு தண்டவாளத்தையே பார்த்துக்கொண்டிருந்தேன்.

கூரிய வாள்போன்ற தண்டவாளம். நேராகப்போடப்பட்டிருந்தால்கூட தொலைவு வரை தெரியும்போது வாளின் வளைவுகூடிவிடுகிறது தண்டவாளத்தில். வெயிலில் அதன் விளிம்பு மின்னியது. அந்த வாள் நினைத்திருக்காத ஒரு கணத்தில் சட்டென்று சுழன்று அங்கிருக்கும் அத்தனை பேரில் தலைகளையும் சீவிவிடும் என்று கற்பனைசெய்தேன்.

எனக்கு நாலைந்து பெஞ்சுக்கு அப்பால் இன்னொருவன் அமர்ந்திருந்தான். அதற்கு மிக அப்பால் இன்னொருவன் இருந்தான். உதிரி உதிரியாக நாலைந்துபேர் இருந்தார்கள். அனைவருமே எங்கும் போகாதவர்கள் போலத்தென்பட்டனர். தண்டவாளத்தை, அப்பால் ஓய்ந்து நின்ற ரயில்களை, கழற்றப்பட்டதனால் கைவிடப்பட்ட வீடுகள் போல நின்ற தனிப்பெட்டிகளைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்

என் அருகே புல்லடர்வுக்கு நடுவே துருப்பிடித்துக்கொண்டிருந்த ஏதோ ஒரு இரும்புப்பொருள் இருந்தது. பெட்டிபோலவும் இயந்திரம் போலவும் தோன்றியது. செங்காவிநிறத்தில் அதன்மீது படிந்த துரு சில இடங்களில் சேறு போல அப்பியிருந்தது. அமைதியாக அவை மட்கி உதிர்ந்து அழிந்துகொண்டிருந்தன.

மனிதர்களின் கால்கள் மிதித்து மிதித்து காலத்தைப்பின்னால் தள்ளிக்கொண்டிருந்தன. எழுந்து எங்காவது செல்லவேண்டுமென நினைத்தேன். ஆம், காசி. ஆனால் அது எங்கே இருக்கிறது? வடக்கேதான். இதுவே வடக்கு. இன்னும் வடக்கு. வடக்கு நோக்கிச் செல்பவர்கள் வேறு வழியில்லாமல்தான் இமையமலையில் சென்று முட்டிக்கொள்கிறார்கள்.

சட்டென்று நான் விசும்பி அழ ஆரம்பித்தேன். அழ ஆரம்பித்தபோதுதான் எனக்கு அழுகை அவ்வளவு தேவைப்படுகிறது என என் மனம் அறிந்தது. அழுது அழுது ஓய்ந்தபோது மொத்தத் தன்னிரக்கமும் இன்னும் கெட்டிப்பட்டிருந்தது. கூடவே பசித்தது. எழுந்து சென்று ஒரு டீயும் பன்னும் சாப்பிட்டேன். ஊருக்குள் சென்றாலென்ன என்று தோன்றியது. ஆனால் அதற்கு கால்கள் மறுத்தன.

திரும்பி வந்து அந்த சிமிண்ட் பெஞ்சிலேயே அமர்ந்துகொண்டேன். அப்பால் அமர்ந்திருந்தவர்களை கூர்ந்து பார்த்தேன். அழுக்குச் சட்டை, கறைகள் கொண்ட பாண்ட். பரட்டைத்தலை. ஒருவன் தலையை இல்லை இல்லை என்பது போல ஆட்டிக்கொண்டே இருந்தான். அப்பால் ஒருவன் காய்ந்தபூவரசு இலைத் தொன்னையில் விற்கப்பட்ட ஒரே ஒரு இட்லியை சிறிய மரக்குச்சியால் கிண்டி துளித்துளியாகச் சாப்பிட்டுக்கொண்டிருந்தான்.

ரயில்கள் சென்று சென்று மறைந்தன. ஒரு தண்டவாளத்தில் ரயில் செல்லும்போது பிற தண்டவாளங்கள் நடுங்கி அதிர்ந்தன. மொத்த தண்டவாளப்பின்னலும் சேர்ந்து ஒரு வகையான சில்ல்லென்ற ஒலியை உருவாக்கின. அதை என்னால் சகிக்க முடியவில்லை. எழுந்து அது காதில்விழாத தூரத்துக்குச் சென்றுவிடவேண்டுமென்று நினைத்தேன். ஆனால் எழுந்திருக்கமுடியவில்லை. நான் அங்கே ஏன் அமர்ந்திருக்கிறேன் என்று கேட்டுக்கொண்டேன். யாராவது பார்த்தால் எதற்காகவோ காத்திருப்பதாக நினைக்கலாம். உண்மையில் எதையாவது காத்திருக்கத்தான் செய்கிறேனா என்ன?

சட்டென்று நாணப்பண்ணனின் கடைக்குவெளியே காத்திருப்பதுபோல உணர்ந்தேன். ரயில்களின்சத்தம் சமையலறைப்பாத்திரங்களின் ஒலி போலக் கேட்டது. இன்னும் எத்தனைபேர் எனக்கு முன்னால். அதோ அந்த அழுக்குச்சட்டைக்காரன். அவனுக்கு முன்னால் நிற்கும் வழுக்கையனையும் சேர்த்துக்கொள்ளலாம். உள்ளே சோறும் குழம்பும் கறியும் தட்டுகளில் விரிகின்றன. வாசனை எழுவதுபோலிருந்தது. மூன்றாவதாக இருந்த ஆள் சாப்பிட்டுவிட்டு கீழே போட்ட தொன்னையை மீண்டும் எடுத்து அதில் ஒட்டியிருந்த துளிகளை கையால் தொட்டு எடுத்து வாயில் வைத்தான். தாடியுடன் கூடிய தாடை அசைந்தது

கோணலாக உள்ளே வந்த ஒரு ரயிலின் தலை சத்தமில்லாமல் திரும்பி நேராக என் நடைமேடைநோக்கி வந்தது. அதன் ஒலி மேலே இரும்புப்பாலத்தில் எதிரொலிக்க உருகிய மெழுகில் சறுக்கி வருவதுபோல சத்தமில்லாமல், மென்மையாக வந்துகொண்டிருந்தது. மூன்றாவதாக இருந்த ஆள் அழைக்கப்பட்டது போல, ஆயத்தமாவது போல எழுந்தான். சட்டைநுனியை நன்றாக இழுத்துவிட்டுக்கொண்டான். ரயிலை நோக்கி விடுவிடுவென நடந்தான்

நிகழ்ந்தபின்னரே என்ன என்று புரிந்தது. அவன் ரயில்முன் பாய்ந்துவிட்டிருந்தான். பதறி எழுந்துவிட்டேன். ஒன்றும்புரியவில்லை. எனக்கு அப்பால் பெஞ்சில் அமர்ந்திருந்தவன் எழுந்து கைகளை தன் விலாவில் இருமுறை வேகமாகத் தேய்த்துக்கொண்டு என்னைப்பார்த்தான். ரயில் என்னைக்கடந்து சென்றது. முழுமையாகவே

தாண்டிச்சென்று அப்பால் பெரிய ஊளையும் கிரீச்சிடலுமாக நின்றது. அதிலிருந்து சிலர் இறங்கி ஓடிவந்தனர். கரிய கோட் அணிந்த இருவர் இறங்கி கையில் இருந்த குறிப்பேடுஅட்டைகளை சுழற்றியபடி நிதானமாக நடந்தனர். நீலச்சட்டை அணிந்த ஒருவன் கைகளை ஆவேசமாக வீசி வீசி சுட்டிக்காட்டினன். அவன் லேசாகக் குதிப்பது போலிருந்தது

ரயிலுக்குக் குறுக்காகப் பாய்பவர்கள் சிதைந்து சின்னபின்னமாவார்கள் என நினைத்திருந்தேன். அந்த ஆளை ரயில் கொஞ்சதூரம் இழுத்துவந்து போட்டிருந்தது. குப்புறக்கவிழ்ந்து மண்ணை அள்ளிப்பற்றியது போலக் தண்டவாளத்திற்கு இப்பால் கிடந்தான். அவனுடைய ஒரு கால் விசித்திரமாக உடைந்து மடிந்திருந்தது. அதன்பின்னர்தான் அவனுக்குத் தலை இல்லை என்பதைக் கவனித்தேன். தலையிருந்த இடத்தில் இருந்து சிவப்புக்குழம்பு சிதறியிருந்தது

அவன் குதித்த இடத்தில் தண்டவாளத்தின் நடுவே எடுத்து வைக்கப்பட்டதுபோல தலை இருந்தது. சிறிய மண்பானை போல. பரட்டைத்தலைக்குக்கீழே வாய் பழுப்புநிற பற்களுடன் லேசாகத் திறந்து வெறித்த கண்களுடன் ஏதோ சொல்ல வருவதுபோல தெரிந்தது.

அந்த தலையின் பார்வையை நான் சிலநாட்களில் மறந்துவிட்டேன். ஆனால் அவன் குதித்தபோது நடுவே இருந்த இரண்டாமன் என்னைப்பார்த்த பார்வையைத்தான் நெடுநாள் கனவுகளில் திரும்பத்திரும்ப கண்டுகொண்டிருந்தேன்.

---

## புறப்பாடு II- 6.நீர்கங்கை

அறையுடன் இணைக்கப்பட்ட கழிப்பறை என்பதை பண்பாட்டுரீதியாக ஏற்றுக்கொள்ள எனக்கு பத்தாண்டுகள் தேவைப்பட்டன. என் பாட்டி நாகர்கோயிலில் அத்தைவீட்டுக்கு ஒரு சிகிழ்ச்சைக்காகச் சென்றவள் மறுநாள் காலையில்தான் சமையலறையை ஒட்டியிருந்த பூசையறைபோன்ற அமைப்பு மலம்கழிப்பதற்குரியதென்பதைக் கண்டுகொண்டாள். உள்ளே சென்றபோதும் அவளுக்குப்புரியவில்லை. சோறுபோட்டுச் சாப்பிடலாம் போலிருந்த பீங்கான் பாத்திரத்தில் மலம் கழிக்கவேண்டும் என்ற தகவல் சொல்லப்பட்டதும் 'அய்யோ பகவதீ ' என்று வெளியே பாய்ந்துவிட்டாள். அந்த மலம் எங்கே செல்லும் என்று கேட்டால் வீட்டுக்கு அடியிலேயே ஒரு கிணற்றுக்குள் என்றார்கள். குடிநீர் அதனருகே இன்னொரு கிணற்றிலிருந்து வருகிறது.

'அய்யய்யோ..திங்கிறதும் வெளிக்குப்போறதும் பக்கத்தில பக்கத்தில..அங்க குசுவிட்டா இங்க சோறு திங்கிறவனுக்குக் கேக்குமாம்..' என்றாள் பாட்டி. 'இனி ஒரு நிமிஷம் என்னால இங்க இருக்கமுடியாதுன்னு சொல்லிட்டேன்..அப்பமே எனக்க சஞ்சிய எடுத்துட்டு எறங்கிட்டேன்ல?' அதன்பின் உயிர்வாழ்ந்த காலம்வரை சொல்லிக்கொண்டிருந்தாள் 'பீக்க மேலே இருந்து ஒரு சீவிதம்..நமக்கு வேண்டாமே'

வேதாந்தியும் வைத்தியருமான பெரியப்பா சொன்னார். 'அதிப்பம் எளையம்மே, மனுஷ சரீரமும் அதுபோலல்லா? இல்ல சொல்லுதேன். நம்ம குடலிலே மேலே சோறு கீளே மலம். எல்லாம் ஒரு பெட்டிக்குள்ள வச்சுல்லா மூடியிருக்கு?'

'எறங்கிப்போடா குருத்துவம்கெட்ட நாறி..டேய் மனுஷனுக்குள்ள சத்தையும் அசத்தையும் பிரிக்கதுக்கு ஆத்மாண்ணு ஒண்ணு இருக்கு..டேய், அது சாட்சாத் பரப்பிரம்மமாக்கும்..'

'பரப்பிரம்மத்துக்கு எல்லாம் ஒண்ணுதானே எளையம்மா'

'நீ படிச்ச வேதாந்தத்தை கொண்டுபோயி வேவிச்சு தின்னுடா மோந்தையா..வந்துட்டன். டேய் பரப்பிரம்மரூபமா இருக்கக்கூடிய எதுக்கும் அன்னமும் மலமும் ஒண்ணுதான்.தீய விட்டா ரெண்டையும் கொளுத்திச் சாம்பலாக்கும். ரெண்டும் விபூதியாயிரும். ரெண்டையும் நுள்ளி நெத்தியிலே போடலாம்..பரப்பிரம்மமா நிண்ணு எரியுற வரைக்கும் அன்னத்த தின்னுற ஜீவி மலத்த தின்ன முடியாது பாத்துக்கோ'

'மண்ணில எல்லாமே அன்னமாக்குமே..மலம் வேற சில சீவனுகளுக்கு அன்னம்'

'டீ வெசாலமே இந்த நாயிக்கு ஒரு எலைபோட்டு பீய வெளம்புடீ..'

அந்தப்புள்ளியில் பேச்சு அவிந்தது. பெரியப்பா 'குருவாயூரம்பல நடையில் ஒருதிவசம் ஞான் போகும்' என்று பாடியபடி வெற்றிலையை எடுத்து நரம்பை நுணுக்கமாக உரித்து எடுக்க ஆரம்பித்தார். நரம்புகளை ஒரே வலையமைப்பாக முழுமையாகவே கீறி எடுப்பது அவருக்குப்பிடிக்கும்.

மும்பையில் அன்று கழிப்பறைகளையே அட்டாச்மெண்ட் என்றுதான் சொல்வார்கள். 'இங்க தாராவியில எங்கியும் அட்டாச்மெண்ட் கெடையாது பாத்துக்க..தோதுபோல போகவேண்டியதுதான்' என்றார் மாதவண்ணன்

எனக்குப்புரியவில்லை. 'என்ன போறது?'

மாதவண்ணன் புரிந்துகொண்டு விளக்கினார். கழிப்பறை என்பது வெளியே ரயிலடியோரம் செல்லக்கூடிய ஒரு பெரிய திறந்த சாக்கடைதான் என்றுமையமாகத் தலையசைத்தேன். அதுவரை அதைப்பற்றி யோசித்ததே இல்லை

'பாம்பேயில திங்கிறது ஈஸியாக்கும். திண்ணத வெளியத்தள்ளுகதுக்கு பாடுண்டு' என்றார் ஜார்ஜ்.

மறுநாள் அதிகாலை அவர்தான் எழுப்பினார். மாதவண்ணனுக்கு அதிகாலை வேலை என்பதனால் அவர் இல்லை.

‘இஞ்சபாரு, இருட்டுக்குள்ள போனாத்தான் மானமா திரும்பி வரமுடியும் பாத்துக்க..கெடந்துறங்கினா பின்ன பஸ்ஸ்டாண்டுக்கு போகணும். பஸ்ஸுக்கூலியும் அங்க பீக்கூலியும் எல்லாம் செலவு..’

பீக்கூலி இல்லாமல் அங்கிருந்த ஐம்பதுக்கும் மேற்பட்ட சந்துகளில் வாழும் மொத்தக்கூட்டமும் அப்பகுதியை வளைத்துச்சென்ற சாக்கடையைத்தான் பயன்படுத்தினார்கள்.அதன்மீது பல பாலங்கள். பாலங்கள் என்று சொல்லமுடியாது. ஓடையைக் கடந்துசெல்லும் குழாய்கள் அவை. தண்ணீர்க்குழாய்கள், தொலைபேசிக்குழாய்கள், வேறு ஏதோ சில குழாய்கள். பெரிய இரு குழாய்களில் ஆண்களும் சிறிய குழாய்களில் பெண்களும் போகலாமென்பது நடைமுறை விதி.

தண்ணீர்க்குழாய் மட்டும்தான் இரட்டையாக இருந்தது, ஆகவே காலுக்குச் சமநிலை இருக்கும். மற்றவை நடந்துநடந்து வழுவழுப்பான வளைவான பரப்புகள். கீழே இரண்டாள் உயரத்தில் கெட்டியான தார் போல சாக்கடை. அங்கே அதன் அகலம் அதிகரித்தமையால் கிட்டத்தட்ட தேங்கி நின்றது. அதன் கரிய சதுப்பிற்குள் சில கரிய ஓடைகள் வளைந்து வழிந்தோடிக்கொண்டிருந்தன. பாலிதீன்குப்பைகள், பலவிதமான பிளாஸ்டிக் பொருட்கள் மிதந்து கிடக்க கரையோரமாக பன்றிகள் உறுமி முட்டிமோதிக்கொண்டிருக்கும்.

இரண்டாள் ஆழமிருக்கும். சென்ற வருடம் அதில் ஒரு பெண் விழுந்து அப்படியே உள்ளே சென்றுவிட்டாள் என்றார் ஜார்ஜ். தீயணைக்கும்படை வந்து கொக்கிபோட்டு அவளை வெளியே எடுத்தார்கள். ‘மனுஷப்பண்ணிய அன்னைகுத்தாலா பாத்தேன்..கறுப்பாட்டு இருந்தா’

அதைச்சொன்னபின் அவர் குழாயின் விளிம்போரம் அமர்ந்துகொண்டார். அவ்வளவு வெளிச்சமிருக்குமென நான் எதிர்பார்க்கவில்லை. சாலைவிளக்குகளின் வெளிச்சம். வானம்கூட செவ்வொளியுடன் இருந்தது.

‘விடிஞ்சுட்டுதோ?’

‘இங்க பாம்பேயில எப்பமும் வானம் செவப்பாத்தான் இருக்கும்’

‘ஏன்?’

‘என்னமோ இங்க செஞ்சு வச்சிருக்கானுக..பணக்காரனுக்கு பிடிச்சிருக்குமோ என்ன எளவோ’

நான் அமரப்போனேன். கால்தடுமாற அக்கணத்தில் உள்ளே இருந்த ஒன்று பதறி எதை எதையோ பற்றிக்கொண்டது.

‘பாத்து’

‘ம்’

அவர் அந்தப்பெண்ணைப்பற்றிச் சொன்னது அப்போது எரிச்சலாக இருந்தாலும் அதைச் சொல்லியிருக்காவிட்டால் அவ்வளவு எச்சரிக்கையாக இருந்திருக்கமாட்டேன் என்று தோன்றியது

‘அந்தக்குட்டிக்க லவ்வறு நமக்க ஆப்பீஸிலே ஃபிட்டறாட்டு இருந்தான்’

‘எந்தக்குட்டிக்க?’ என்று கேட்டதுமே புரிந்துகொண்டேன்

‘இவன் ஆந்திராக்காரன். ராமப்பாண்ணு பேரு. அவ கோவாக்காரி..எங்கயோ டைப்படிச்சிட்டிருந்தா.. நல்ல செவப்பா இருப்பா..மூக்கு நீளமாட்டு இருந்தாலும் பய அவளுக்க மேலே கிறுக்காட்டு அலைஞ்சான். அஞ்சர மணியானா ஆளு பறந்திருவான். ரோட்டு முக்கில போயி நிக்கது. அவ வந்ததும் ரெண்டாளுமாட்டு பஸ்ஸிலே கேறிப்போறது. இங்க லவ்வு செய்யுகதுக்குள்ள வளி பஸ்ஸிலே கேறி நாலு சுத்து சுத்தி எறங்குறதாக்கும்..வேற எங்கயும் எடமில்லல்லா?’

‘ஓ’

‘குட்டிய கிரேன வச்சு தூக்கி எடுக்கத வந்து பார்த்தான். கறுத்த பீயிலே முக்கி எடுத்து ரோட்டிலே போட்டிருக்கு..பெத்த அம்மைகூட அஞ்சடி தள்ளி நிண்ணுதான் எனக்க பொன்னுமோளேண்ணு அவிய பாசையிலே கரையுதா. இவன் அலறிகிட்டே ஓடிவந்து அப்பிடியே நிண்ணுபோட்டான். அந்தால திரும்பிப்போனான்.. ஏளெட்டுநாள் ஆளைக்காணல்ல. பிறவு சோலிக்கு வந்தான். கண்டுபோச்சுல்லா?’

‘பின்ன?’

‘இப்பமும் வட்டாத்தான் இருக்கான். என்னமாம் பேசிக்கிட்டே இருக்கது, சிரிக்கது. திரும்பித்திரும்பி பாக்குதது.. இனியவன பரிசித்த ஆவி நினைச்சாத்தான் ரெச்சிக்கமுடியும்..’

எப்படியும் ஆயிரக்கணக்கானவர்கள் அங்கே மலம் கழித்தார்கள். காலையில் நூறுக்கும் குறையாமல் அதில் அமர்ந்திருப்பார்கள். ஆண்கள் சிகரெட்டோ சுருட்டோ இழுத்துக்கொண்டிருப்பார்கள். சிலர் கனைத்துக்கொண்டும் முனகிக்கொண்டும் இருக்க பெரும்பாலானவர்கள் ஆழ்மான தியானத்திலிருப்பதுபோலத் தோன்றும். குழாய்க்கு பிடிப்பு ஏதுமில்லை. ஆகவே முன்னால் நன்றாகக் குனிந்துகொண்டால்தான் சமநிலை ஏற்படும். சிலசமயம் அந்த

இடைவெளிகள் வழியாகச் சிலர் மறுபக்கம் உள்ள ரயில்நிலையத்துக்குச் செல்வார்கள். மாப் கரோ-மாம் கரோ என்று சொல்லிக்கொண்டு அமர்ந்திருப்பவர்களின் தலையை தொட்டுத் தொட்டு மறுபக்கம் சென்றுவிடுவார்கள்.

நான் ஓரிருமுறை தூங்கிப்போய் தாமதமாகிவிட்டேன். பேருந்துநிலையத்தில் உள்ள கழிப்பறைகளில் எந்நேரமும் பெருங்கூட்டம். மிகச்சிறிய அறைகள். குண்டானவர்கள் அமர்ந்தால் நான்குபக்கமும் சுவர்கள் உடலில் முட்டும். சுவர்கள் முழுக்க எச்சில்கோழையும் அழுக்கும் கலந்த சளி பரவியிருக்கும். மூலைகளில் எச்சிலோடு குவிந்த சிகரெட் குச்சிகள். மலத்தொட்டியில் மலம் கீழே இறங்குவதேயில்லை. அப்பால் அதன் செரிமானத்தொட்டி நிறைந்திருக்கும் போல.

பெரிய அபாயம் வெளியே கழுவுவதற்காக உள்ள காக்கிக் கால்சட்டை அணிந்த மனிதர் தொட்டியில் தண்ணீரை அள்ளி அனைத்துக்கழிப்பறைகளுக்கும் சேர்த்து வீசுவதுதான் சகல மலினங்களும் சேர்ந்து நம் காலை நோக்கி வரும். உடனே எழுந்துவிட்டால் மேற்கொண்டு படாமல் தப்பிக்கலாம். கழிவுத்தொட்டி குபுக் என மேலே எழுந்துவரும்.

அதிகபட்சம் மூன்றுநிமிடம். அதற்குள் வெளியே கதவைத்தட்ட ஆரம்பித்துவிடுவார்கள். ‘அரே பையா-சோட்டு-பையா-ஜல்தி கரோ-அரே ஜல்தி பாய்’

‘ஒண்ணு பாத்தா ஆச்சரியம்தான். இந்த மண்ணு அம்புட்டையும் சீரணிச்சுட்டுல்லா இருக்கு?’ என்றார் மாதவண்ணன்

‘எங்க சீரணிக்குது? அதுக்கு புளிச்ச ஏப்பம் வந்தாச்சுவே-நம்ம போர் வெள்ளத்தை கையிலே எடுத்து மோந்துபாரும்-’

உண்மைதான். ஆயிரக்கணக்கான கழிப்பறைத்தொட்டிகளும் சாக்கடை ஆறுகளும் மண்டிய நிலத்திலிருந்துதான் கிணற்றுநீரும் வந்தது. அள்ளி முகர்ந்தாலே சாக்கடை மலநாற்றம் அடிக்கும். அதில்தான் குளியல் துணிதுவைப்பது எல்லாமே. அதைத்தான் குடிக்கவும் வேண்டும். அதில் நன்னாரி வேரைப்போட்டுவிட்டால் நன்னாரி வாசனையைக்கொண்டு குடித்துவிடமுடியும்.

மும்பையில் வந்திறங்கியபோது எனக்கு எல்லாமே அருவருப்பாகத்தான் இருந்தது. எங்கும் ஒருகணம் கூசிச்சுருங்கிவிட்டு கண்ணைமூடிக்கொண்டு உள்ளே சென்றுவிடுவேன். ஆனால் மாதவண்ணன் உட்பட அத்தனைபேருக்கும் எதிலும் எந்த தயக்கமும் இல்லை. மொத்த மும்பையே அருவருப்பு என்ற உணர்ச்சியை முழுமையாகவே துறந்துவிட்டிருந்தது. தரையில் என்ன கிடக்கிறதென்று பார்த்துக்காலெடுத்துவைக்கக்கூடிய ஒரே மும்பைவாசி நான் என்று நினைத்துக்கொண்டேன்

அதன்பின்புதான் ராவை அறிமுகம்செய்துகொண்டேன். என் அலுவலகத்துக்கு ஒட்டிய அலுவலகம் அவருடையது. அவரது உரிமையாளர் ஒரு குஜராத்தி. சூரத் துணிகளுக்கான தரகுவணிகமோ ஏதோ செய்தார். அலுவலகத்தில் ராவ் மட்டும்தான் இருப்பார். அவர்தான் மேனேஜர். ஒரு பையன் உதவிக்கு இருப்பான். மும்பையில் எல்லா சின்னப்பையன்களும் சோட்டுதான்.

ராவ் ஐம்பதுவயதான கன்னட பிராமணர். சுண்ணாம்புக்கல்லில் செதுக்கப்பட்டவர் போல இருப்பார். மெல்லிய சிவந்த உதடுகள் ஒடுங்கிய மூக்கு நீளமான கழுத்து. வெள்ளைக்காரர் இல்லை என்று தெரிவிப்பவை உடலசைவுகள் மட்டுமே. மெலிந்த சிறிய மனிதர் சோப்புநுரை போன்ற நரைத்த தலைமயிரை பக்கவாட்டில்வகிடு எடுத்துச் சீவியிருப்பார். மீசையற்றமேலுதடும் கன்னங்களும் களிம்புப்பச்சை நிறத்தில் இருக்கும்.

ராவ் எப்போதுமே வெள்ளைச்சட்டை, வெள்ளை பாண்ட்தான். சட்டையை உள்ளே இழுத்துவிட்டு கறுப்பு பெல்ட் கட்டியிருப்பார். முழுக்கையில் பித்தான்களைப்போட்டு மேலே வாட்ச் கட்டியிருப்பார். எப்போதுமே கருப்புநிறமான ஷூக்கள் பளபளவென்றிருக்கும். தினமும் பாலீஷ்போடாமல் அப்படி வைத்திருக்கமுடியாது. சட்டையில் காலரின் பித்தான்களைப்போடக்கூடியவராக அவரைத்தான் நான் முதலில் கண்டேன்.

ராவ் சைக்கிளில்தான் வருவார். அதை எங்கள் அலுவலகத்தின் பக்கவாட்டுத்திண்ணையில் நிறுத்துவார். அவரது அலுவலகத்தில் இடமில்லை. பளபளப்பாகத் துடைக்கப்பட்ட சைக்கிள் பலவகையான குஞ்சலங்கள் அலங்காரங்களுடன் பூம்பூம்மாடு போலிருக்கும். எங்கள் அலுவலகத்தில் குண்டூசி பசை முதலியவற்றை வாங்குவதில்லை. சைக்கிள் நிறுத்துமிடத்துக்கான வாடகைபோல நான் ராவிடம் சென்று அவற்றை வாங்கி வருவேன்.

ராவ் அதிகம் பேசுபவரல்ல. என்னிடம் உபரியாக ஒரு புன்னகை உண்டு. நான்தான் சளசளவென ஏதாவது பேசுவேன். அதிகமும் அன்று உருவாகி வந்த ராஜ்குமாரின் கன்னடதேசிய அரசியலைப்பற்றி. ராவுக்கு அரசியல் கருத்துக்கள் இல்லை. சொல்லப்போனால் கருத்துக்களே இல்லை. ‘ஔதுரீ’ என்று மட்டும் சொல்வார். தமிழ் அவருக்கு நன்றாகவே புரியும். அவரது அம்மா நாமக்கல்காரி.

ராவின் அலுவலகமே அச்சமூட்டும் ஒழுங்குடன் இருக்கும். ஒவ்வொன்றும் அதனதன் இடத்தில் கச்சிதமாக அடுக்கப்பட்டிருக்கும். நாளுக்கு பத்தாயிரம் வாகனங்கள் செல்லும் புழுதிச்சாலையோரம் அவரது அலுவலகத்தில் எதிலுமே தூசுப்படலம் இருக்காது. எங்கள் அலுவலகத்தில் எல்லா பரப்பிலும் தொலைபேசி எண்களை விரலால் எழுதிவைக்கமுடியும். நான் ராவிடம் அதைப்பற்றிச் சொன்னேன். ‘ஔதா?’ என்றார்

மும்பையில் ஜூன்மாதம்தான் மழைக்காலம். ஆனால் அந்தவருடம் டிசம்பரிலேயே பெருமழை. நான்கண்ட முதல் மழை. எங்களூர் இடவப்பாதி கொடுமழையை விட மும்மடங்கு பெரிய பொழிவு. கூரைகள் அருவிகளாக மாறின. நகரமே கரிய தார்ப்பாயால் போர்த்தப்பட்டதுபோல இருண்ட மேகங்களால் மூடப்பட்டது. மொத்த நகரும் ஒரு பெரும் சாக்கடையாக ஆகிவிட்டிருந்தது. எங்கள் குடிசைகளுக்குப்பின்னால் இருந்த சாக்கடை திடீரென்று ஆறாக மாறிவிட்டது. பின்னர் அது நதியாகியது. எங்கள் சந்து ஒரு துணைநதியாக உருவெடுத்து கன்னங்கருமையாக பலவிதமான பிளாஸ்டிக் குப்பைகள்

மட்கிய துணிகள் செத்த எலிகள் என பெருகிச்சென்றது

நினைத்ததுபோலவே இரண்டாம்நாள் தண்ணீர் ஓடுவது நின்று பக்கவாட்டில் நீர் பரவ ஆரம்பித்தது.மூன்றாம் நாள் சாக்கடைநதியில் இருந்து நீர் தெருவுக்குள் ஏறிவரத்தொடங்கியது. எங்கள் குடிசையின் வாசல்விளிம்புவரை நீர் வந்து முட்டிமுட்டிச் சுழித்தது. தரை சில்லென்றாகி நீரில் படுத்திருப்பதுபோல உணர்ந்தேன். நள்ளிரவில் மிகவும் குளிர்ந்தது. ஜார்ஜ் எழுந்து மெழுகுவத்தியை ஏற்றினார். எங்கள் குடிலுக்குள் சாக்கடைநீர் பரவியிருந்தது. அதில் எல்லாருமே நனைந்துகொண்டு படுத்திருந்தோம்

பெட்டிகளை தூக்கி மேலே பரண்மேல் வைத்துக்கொண்டோம். ஒருமணிநேரம் என்ன செய்வதென்று தெரியாமல் யோசித்துவிட்டு மாதவண்ணன் ஒரு வழி கண்டுபிடித்தார். இரண்டு தகரப்பெட்டிகளை காலி செய்து மற்ற பெட்டிகளில் அடைத்துவிட்டு அவற்றை செங்குத்தாக நீரில் நிறுத்தி சன்னல் பலகையைப் பெயர்த்து அவற்றின் மீது பெஞ்சுமாதிரி வைத்தார். பெஞ்சிலேயே அமர்ந்து கொண்டோம். பலகை நன்றாக வளைந்திருந்தது. கீழே கரியசாக்கடை நுரைத்துச் சுழித்துச் சென்றது.

நான் கால்களைத்தூக்கி மேலே வைத்துக்கொண்டேன். உட்கார்ந்த நிலையிலேயே தூங்கிவிட்டேன். சளசளவென ஒரு பெருச்சாளி எங்களை நோக்கி வந்தபோது ஜார்ஜ் அவரது பெரிய பூட்ஸை எடுத்து அதை அடித்தார். ஙீஙீ என்ற ஒலியுடன் நீரில் மல்லாந்து பின் மூழ்கி சற்றுத்தள்ளி எழுந்து நீந்திச்சென்றது. அப்பால் இன்னொரு பெருச்சாளி சுவர் ஓரமாக நீந்தி மேலே ஏற முயன்றுவிழுந்துகொண்டிருந்தது

மறுநாள் அனைவரும் ரயில் நிலையத்திற்குச் சென்று அங்கேயே பகலையும் இரவையும் கழித்தோம். அங்கே ஏராளமானவர்கள் இருந்தார்கள். ஆங்காங்கே அமர்ந்தும் சாய்ந்தும் தூங்கவேண்டியதுதான். நின்றுகொண்டிருந்த ரயில்களில் ஏறி மலம்கழித்தோம். மழை நின்றபோது நீர் வடிந்து தெரு சற்று தெரிய ஆரம்பித்தது. மாதவண்ணன் தொலைபேசியில் விடுப்பு கேட்டபோது அங்கே வசைபாடினார்கள். ஜார்ஜுக்கும் சென்றாகவேண்டும்

திரும்பவந்தபோது வீடுமுடுக்க கரியசேறு களி போலப்பரவியிருந்தது. கணுக்கால் வரை அதில் புதைந்தது. ஆளுக்கொரு அட்டையையும் பலகையையும் எடுத்துக்கொண்டு கூட்டித்தள்ளினோம். நான் சுவரோரமாக ஏதோ கிடப்பதைக் கண்டேன். விசித்திரமான ஒரு பெரிய பூச்சி. அதற்கு உயிர் இருந்தது. அட்டையால் மெல்லத் தொட்டபோது கலைந்தது. புழுக்கள் ஒரு கொத்தாக மாறி திரண்டிருந்தன.

தரையை நன்றாகக் கழுவியபின்னரும் சேற்றுவாடை எஞ்சியிருந்தது. சாராயப்புட்டி ஒன்று கீழே விழுந்து உடைந்ததுபோல ஓர் எரியும் வீச்சம். அது ஏன் என்று கொஞ்சநேரத்தில் புரிந்தது. குடிசைகளுக்கு நடுவே உள்ள சிறிய சந்துகளில் பன்றிகள் செத்து உப்பி அழுக ஆரம்பித்திருந்தன. அங்கிருப்பவர்கள் எவருக்கும் எதையும் சரிசெய்ய நேரமில்லை. குடைகளும் மழைக்கோட்டுகளும் பாலிதீன் சாக்குகளும் கொண்டு வேலைக்குத் திரும்பிவிட்டார்கள்.

சாக்கடைநதி அப்போதும் பாலம் மூழ்கச் சென்றுகொண்டிருந்தது. காலைக்கடன்களுக்கு எங்கேயும் செல்லமுடியாது. மாதவண்ணன் அதற்கான வழியைச் சொன்னார். அது தாராவியில் வழக்கம்தான். அறைக்குள் தாளை விரித்து அதில் மலம் கழித்து சுருட்டிப்பொட்டலம் கட்டிக் கொண்டுசென்று சாக்கடையில் வீசிவிடுவது. அதன்பின் கையில் பொட்டலத்துடன் செல்லும் ஒவ்வொருவரும் அதைத்தான் கொண்டுசெல்கிறார்கள் என்று தோன்ற ஆரம்பிக்கும்.

மழைக்கோட்டுடன் வந்திறங்கிய ராவ் பதற்றமாக இருந்தார். என்னை அழைத்து அவரது அலுவலகத்திலும் தொலைபேசியைப்பார்த்துக்கொள்ளமுடியுமா என்று கேட்டார். நான் ஒப்புக்கொண்டேன். ராவின் அம்மாவை ஆஸ்பத்திரியில் சேர்த்திருந்தார்கள். நான் மூன்றுநாள் அவரது தொலைபேசி அழைப்புகளுக்குக் குறிப்புகள் எடுத்துவைத்தேன். ராவுக்கு அதில் பெரும் மனநிறைவு. தெளிவான குறிப்புகள் என்றார்

ராவ் அன்று அவரே அவரைப்பற்றிச் சொன்னார். அவருக்கு மூன்று அக்காக்கள் ஒரு தம்பி. அனைவரும் பெங்களூரிலும் மைசூரிலும் இருக்க இவர் மட்டும் மும்பையில் அவர்குடும்பத்தில் அதிகம் படிக்காதவர் அவர் மட்டுமே. இண்டர்மீடியட் மட்டும்தான் படிப்பு. ஆனால் அம்மாவைப் பார்த்துக்கொள்ளமுடியாது என உடன்பிறந்தவர்கள் மறுத்துவிட்டார்கள். அவர்களுக்கு எண்பத்தெட்டு வயது. ராவ் அம்மாவை தன்னுடன் கடந்த இருபத்தேழு ஆண்டுகளாக வைத்துப்பார்த்துக்கொள்கிறார்

அவருக்கு எவ்வளவு பிள்ளைகள் என்று கேட்டேன். புன்னகையுடன் திருமணமே செய்துகொள்ளவில்லை என்றார். அவரது குறைவான வருமானத்தில் பாதி மும்பையில் ஒரு வீட்டுக்கான வாடகையாகவே போய்விடுகிறது. மிச்சத்தில் அம்மாவுக்கான மருத்துவச்செலவுகள். அம்மாவால் கடந்த எட்டாண்டுகளாகச் சரியாக நடமாட முடியாது. ராவ் காலையில் எழுந்து தனக்கும் சமைத்து அம்மாவுக்கும் கஞ்சி காய்ச்சி, தண்ணீர் மாத்திரைகளை எடுத்து படுக்கையருகே வைத்துவிட்டு கிளம்பி வரவேண்டும்

'வேலைகிடைத்த நான்குவருடம் பிரம்மசாரியாக அறையைப் பகிர்ந்துகொண்டிருந்தேன்.அப்போது கொஞ்சம் மிச்சம்பிடித்ததனால்தான் இந்த சைக்கிளையும் வாங்கமுடிந்தது. ஒரு டேப்ரிக்கார்டரும் வாங்கினேன். பாட்டு கேட்பதுதான் ஆறுதலாக இருக்கிறது' என்றார் ராவ்.

ஆச்சரியமாக இருந்தது. அவரை சாலையில் பார்த்தால் ஏதாவது ஒரு பள்ளியில் இந்தி ஆசிரியர் அல்லது அரசாங்கக் கம்பவுண்டர் என்று தான் தோன்றும். கண்டிப்பான தந்தையாக சில குழந்தைகளுடன் இருப்பவராகவே நான் அவரை நினைத்திருந்தேன்.

ராவ் எப்படி அவரது ஷூக்கள்கூட அழுக்காகாமல் வருகிறார் என்று கேட்டேன்

ராவ் சிரித்தபடி அது பெரிய விஷயமல்ல என்றார். ஷூக்களுக்கு மேலே பிளாஸ்டிக் காகித உறையை போட்டுக்கொண்டுதான் சைக்கிளில் ஏறுவார். வந்து இறங்கியதும் அந்த உறையை எடுத்து நீரில் அலம்பி வைத்துவிடுவார்

'எங்கள் தெரு முழுக்க சாக்கடை-உடம்புக்கே உறை போடவேண்டும்' என்றேன். 'பின்பக்கம் சாக்கடையில் பன்றிகளும் பெருச்சாளிகளுமாக பிணங்கள் ஓடுகின்றன'

'மா கங்கா-அவள் எல்லாவற்றையும் சுத்தமாக்கக்கூடியவள்' என்றார் ராவ்

'இந்தச்சாக்கடையா கங்கை?'

'நண்பா எல்லா நீருமே கங்கைதான் என்பார் என் அப்பா. அவர் பெரிய கவிஞர். துளு மொழியில் செய்யுள்கள் எழுதக்கூடியவர். கன்னட ஆசிரியராக இருந்தார்' ராவ் சொன்னார் 'மண் என்பதுதான் உடல். நீரோட்டம் அதன் ஆன்மா-நீர் மண்ணை சுத்தப்படுத்திக்கொண்டே இருக்கிறது'

மழைக்காலத்திலகூட மும்பையில் தெருவோரக்கடைகள் இயங்கும். வேறு வழியில்லை. அவர் எனக்கு ஒரு டீ வாங்கித்தந்தார். அவரது அம்மா மறுநாள் குணமாகி வீடு திரும்பிவிட்டாள்.'அம்மாவுக்கு வருத்தம். சாகாமல் வந்துவிட்டேனே என்று. விக்ரமாதித்தனின் வேதாளம் என்று தன்னைப்பற்றிச் சொல்கிறாள்' என்றார்

'நீங்கள் அவளைப்பற்றி வருத்தப்பட்டதுண்டா?';

'ஆரம்பத்தில் கொஞ்சம் கசப்பு இருந்தது. இப்போது எனக்கு வேறு துணையில்லை'

இரண்டே வாரத்தில் வெயில் உறைக்க ஆரம்பித்தது. சாக்கடைசேறு மொத்தமும் காய்ந்து தூசாகி காற்றில் எழுந்து மும்பை மேல் பரவி அரபிக்கடல் மேல் சென்று இறங்கியது. சாக்கடை ஓடை மீண்டும் எல்லைக்குள் ஒடுங்கியது.

'வருஷம்தோறும் இப்பிடி மழைவந்து கழுவல்லேண்ணா இந்த ஊரு நாறி ஊறிரும் பாத்துக்க-இப்பம் கிணறுகளிலே கொஞ்சம் நல்லவெள்ளம் வரும்-'

உண்மையில் குடிநீரில் சாக்கடைவீச்சம் மட்டுப்பட்டு புதுச்சேற்றின் வாசனை வந்து சேர்ந்திருந்தது. நான் இரண்டு வெள்ளைச்சட்டைகளும் ஒரு வெள்ளைபாண்டும் வாங்கிக்கொண்டேன். அவற்றைப்போட்டுக்கொண்டு சென்றபோது ராவ் என்னை நோக்கிப்புன்னகை செய்தார்

ராவுடன் நான் மேலும் நெருங்கினேன். அவர் என்னிடம் சிவராம காரந்தின் நாவல்களை வாசிக்கச்சொன்னார். ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்யப்பட்ட சோமனதுடி நாவலை அவரே கொண்டுவந்து தந்தார். சிவராம காரந்த் எனக்கு அறிமுகமானது அப்படித்தான். காரந்தின் படம் என்னை கிளர்ச்சியுறச்செய்தது. வெண்ணிறச் சருமம், வெண்கூந்தல், வெள்ளை ஆடைகள். ராவுக்கு காரந்தை பிடித்ததில் வியப்பில்லை.

ராவின் அம்மாவுக்கு மேலும் உடல்நிலை மோசமாகியது. ராவ் என்னை தொலைபேசியில் அழைத்து அவரது வீட்டுக்கு வந்து ஒரு கோப்பை வாங்கிக்கொண்டு வந்து அவரது உரிமையாளரிடம் தரமுடியுமா என்று கேட்டார். வழியை அவரே அணுவணுவாக விவரித்தார்.

கண்டுபிடிப்பது கடினமாக இருக்கவில்லை. ராவ் சாலையோரம் இருந்த பழைமையான ஒரு அடுக்குமாடிக்குடியிருப்பின் கீழ்த்தளத்தில் குடியிருந்தார். அங்கே முன்னர் இருந்த ஏதோ மில் அவர்களுடைய தொழிலாளர்களுக்காக கட்டிய குடியிருப்பு. மில்லை பிறகு பூட்டிவிட்டார்கள். அந்த மில் பேரிலேயே குடியிருப்பு அறியப்பட்டது.

மிகப்பெரிய நான்கு கட்டிடங்களின் தொகுதி. கட்டிடங்கள் பாசிபிடித்துக் கருமையாகி நின்றன. மேல்மேலாகத் தெரிந்த பால்கனிகளில் துருப்பிடித்த கம்பியழிகளுக்கு அப்பால் ஓட்டை உடைசல்களும் அழுக்குத்துணிகளும் திணிக்கப்பட்டிருந்தன. வெளியே கட்டப்பட்ட கொடிகளில் துணிகள் காற்றிலாடின. ராவின் வீடு இருந்த டி பிளாக்கின் சுவர் மேலிருந்து கீழே வரை வெடித்து நின்றது. ஒருபகுதி அப்படியே எக்கணமும் சரிந்துவிடுவதுபோல மெல்லச்சாய்ந்திருக்க அனேகமாக எல்லா குழாய்களும் உடைந்திருந்தன

தரையில் உடைந்து சரிந்து பரவியிருந்த கான்கிரீட் பாளங்கள் வழியாகச் சென்றேன். ராவின் வீட்டு எண்ணை சரி பார்த்துவிட்டு கதவைத்தட்டினேன். ராவ்தான் சட்டையில்லாமல் தட்டுசுற்று வேட்டியுடன் கதவைத்திறந்தார். என்னைக் கண்டதும் உதடு சிரிப்பு போல சற்றுக் கோணியது 'வா' என்றார்

ராவின் குடியிருப்பு மொத்தமே இரண்டு அறைகள் கொண்டது. ஒரு கூடம், ஒட்டியே ஒரு சமையலறை. கூடத்திலிருந்து செல்லும் ஒரு கழிப்பறை -குளியலறை. அறையே இருட்டாக ஜில்லென்றிருந்தது. அறையின் சுவர் ஓரமாக இரு கட்டில்கள். ஒன்றில் கிழவி படுத்திருந்தாள். இன்னொன்றில் ராவ் அமர்ந்துகொண்டு எனக்கு ஒரு கூடைநாற்காலியை போட்டார். அமர்ந்துகொண்டேன்

ராவ் 'காபி சாப்பிடுகிறாயா?' என்றார். அவரது மார்பு வெறும் கூடாக இருந்தது. அதன்மேல் வெள்ளைப்புல் போல

மயிர். குறுக்காக பூணூல்.

‘வேண்டாம்..’

‘ஃபைலை கொடுத்துவிடு..நான் அனேகமாக நாளைக்கு வருவேன்’

‘அம்மா..’

‘சாயங்காலம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகவேண்டும்’

கிழவி மெழுகுப்பொம்மை போல படுத்திருந்தாள். வெளுத்துச் சுருங்கி சப்பிப்போன முகம். வாயே இல்லை. மூக்கு அண்ணாந்திருக்க உள்ளே இருந்த முடி தெரிந்தது. மூச்சு ஏறி இறங்கியது

‘மருந்துகொடுத்திருக்கிறார்கள். நல்ல தூக்கம்’

சட்டென்று நான் அதைக் கண்டேன். ராவின் வீட்டுச்சுவர் வழியாக தண்ணீர் அலையலையாக வழிந்து இறங்கிக்கொண்டிருந்தது. அதன் வாடைதான் அது. சாக்கடைவீச்சம். இல்லை மலநாற்றம். மஞ்சள் நிறத்தில் திப்பிதிப்பியாக சுவரில் மலம் வழிந்தது. கீழே ராவ் சுவர் ஓரமாக அது வழிந்தோட சிமிண்டால் விளிம்பு போட்டு ஒரு சிறிய ஓடை போல செய்திருந்தார்.

நான் பார்ப்பதைக் கண்டு ‘மேலே நிறைய குழாய்கள் உடைப்பு..பொதுக்கழிப்பிடங்கள் நேர் மேலே இருக்கின்றன’ என்றார்

‘சரிசெய்யமுடியாதா?’

‘ஒன்றுமே செய்யமுடியாது. இந்தக்கட்டிடத்தையே இடிக்கவேண்டும் என்று நகராட்சி சொல்கிறது. குடியிருப்பவர்கள் முடியாது என்று நீதிமன்றத் தடையுத்தரவு பெற்று போராடிக்கொண்டிருக்கிறார்கள்..’

‘இருந்தாலும்..’

‘வேறுவழி இல்லை. இந்த வாடகைக்கு இங்கே இடம் கிடைக்காது. அம்மாவுக்கு சிகிழ்ச்சைக்கான பணம் இப்போதே பாதி கடன்தான்’

எனக்கு உடம்பு குமட்டி அதிர்வதுபோலிருந்தது. எழுந்து ஓடிவிடவேண்டும் என நினைத்தாலும் என் முகத்தை இறுக்கமாக வைத்துக்கொண்டேன்

‘சமையலறையிலும் வழியும்..மழைக்காலத்தில் கொஞ்சம் அதிகம்..ஆனால் பழகிவிட்டது’

‘நான் கிளம்புகிறேன்’

‘சரி..’ என்றார் ராவ் பின்பு புன்னகையுடன் ‘நரகம் என்பது சொர்க்கவாசிகளின் கழிப்பறைதான் என்று அப்பா சொல்வார்’ என்றார்

நான் ஒன்றும் பேசாமல் வருகிறேன் என்று தலையசைத்தேன். தெருவில் இறங்கியபின் குமட்டலுடன் உடலை உலுக்கிக் கொண்டேன்.

ராவின் வீட்டில் மறு சுவரில் இருந்த ஒரு படத்தை நாலைந்து நாட்கள் கழித்துத்தான் நினைவுகூர்ந்தேன். இருகைகளிலும் அமுதகலசங்களுடன் முதலைமேல் அமர்ந்த தேவி. கங்கையன்னை

---

## புறப்பாடு II – 7, மதுரம்

காசியிலிருந்து டேராடூன் செல்லும் ஹரித்வார் ரயிலில் குளிர்காலத்தில் கூட்டமே இருக்காது. அதுவரை தள்ளுமுள்ளு நிறைந்த ரயிலையே பார்த்துவந்தவன். மொத்தமும் காலியாக ஒரு ரயில் வந்து நின்றபோது உண்மையிலேயே அது ரயில்தானா என்ற சந்தேகம் வந்துவிட்டது.

ரயில் கிளம்புவது வரை அதனருகிலேயே நின்றேன். பெரியவகுப்புகளில் பலர் ஏறிக்கொண்டிருந்தார்கள். பதிவுசெய்யாத பயணிகளின் பெட்டியில் ஒருவர்கூட ஏறவில்லை. ரயில் நினைத்துக்கொண்டு திக் என்று அசைந்தபோது சட்டென்று பாய்ந்து ஏறி உள்ளே சென்று மரபெஞ்சில் அமர்ந்துகொண்டேன். காசியில் வாங்கிய காவித் தோள்பைக்குள் ஒரு சப்பாத்தியைச் சுருட்டி வைத்திருந்தேன். அதை எடுத்து தின்றேன். தண்ணீர் இல்லை. எங்காவது ரயில் நிற்கும்போது குடித்துக்கொள்ளலாம் என்று நினைத்துக்கொண்டேன்.

எண்ணியதுபோல ரயில் உடனே கிளம்பவில்லை. இன்னும் கொஞ்சம் தள்ளிச்சென்று தயங்கி நின்றது. ஆனால் அது ஓடிக்கொண்டிருப்பதுபோல உடலில் அதிர்வு இருந்தது. சன்னல்வழியாகப்பார்த்தபோது அதிவேகமாக ரயில் ஓடுவதுபோலிருந்தது. மறுபக்கம் திரும்பினால் ரயில்நிலையம் அசையாதிருக்க ரயில் நின்றுகொண்டிருந்தது. கண்களின்

மாயம் தலையைச் சுற்றவைத்தது. மறுகணம் அந்த விந்தையை அனுபவிக்க ஆரம்பித்தேன். மாறிமாறிப்பார்த்தேன். வலப்பக்கம் அதிவேகப்பயணமும் இடப்பக்கம் அசைவின்மையும். ஆம், அதுகூட சாத்தியம்தான். நின்றுகொண்டே விரைதல். அல்லது விரைந்தபடியே நின்றுகொண்டிருத்தல்.

ரயில் ஊதியது. மீண்டும் அதிர்ந்தது. அப்போது சளசளவென்று குரல்கள். ஒருகூட்டம் முண்டியடித்துக்கொண்டு ரயிலில் ஏறியது. பன்னிரண்டுபேரும் ஏதோ சரித்திர காலகட்டத்திலிருந்து வந்துநிற்பவர்கள் போலத்தோன்றினார்கள். அனைவருமே பளீரிடும் மஞ்சள் நிறத்தில் பஞ்சக்கச்ச வேட்டி கட்டி அதேநிறத்தில் தலைப்பாகையும் வைத்திருந்தார்கள். செங்காவிநிறமான சால்வை. அதில் ஏதோ இந்தி எழுத்துக்கள் அச்சிடப்பட்டிருந்தன. அத்தனைபேரும் குடுமி வைத்து நெற்றியில் பெரியநாமம் அணிந்திருந்தனர். தென்னிந்திய வைணவர்களின் நாமம் அல்ல, வட இந்தியாவில் போடப்படும் மஞ்சளால் ஆன ப வடிவ நாமம். அனைவர் கையிலும் ஏதோ ஒரு இசைக்கருவி இருந்தது. டோலக்குகள், ஜால்ராக்கள், மிருதங்கம், துடிபோன்ற ஒரு சிறிய வாத்திய, ஆர்மோனியப்பெட்டி, தம்புரா, ஷெனாயைவிட சிறிய நாதஸ்தவரம்.

எங்கோ இசைநிகழ்ச்சிக்காகச் செல்லும் குழு என்று தோன்றியது. அவர்கள் உற்சாகமாகச் சிரித்துக்கூச்சலிட்டு இடம் தேடி என்னருகே வந்தனர். என்னைப்பார்த்ததும் அவர்களில் கறுப்பாக இருந்த ஒருவர் ‘ராதே ஷியாம்!ராதே ஷ்யாம்!’ என்று புன்னகையுடன் கூவினார். என்னைச்சுட்டிக்காட்டி ஏதோ சொன்னார். ஒரு மனிதன் இங்கிருக்கிறான் என்று சொன்னாரென்று பட்டது. மொத்தக்கும்பலும் அந்தப்பகுதியில் சிதறி அமர்ந்துகொண்டது.

கறுப்பர் என்னிடம் இந்தியில் ஏதோ சொன்னார். புன்னகை மட்டும் செய்தேன். இந்தி தெரியவில்லை என்பதை இந்திக்காரர்களிடம் சொல்லிப்புரியவைக்க முடியாது. நம்ப மாட்டார்கள். இந்தி தெரியாதவன் வெள்ளைக்காரனாகத்தான் இருக்கமுடியும் என்ற நம்பிக்கை.

அவர்களில் ஒருவர் ஒரு துணிமூட்டையைப்பிரித்தார். உள்ளே பெரிய பாலிதீன் தாளில் சப்பாத்திகள் சுருட்டி வைக்கப்பட்டிருந்தன. நூறு சப்பாத்திக்கும்மேலே இருக்கும். வயதான ஒருவர் சப்பாத்திகளை எடுத்து அனைவருக்கும் கொடுத்தார். என்னிடம் நீட்டி ‘கிருஷ்ண பிரசாத்’ என்றார்.

மறுக்க நினைத்தாலும் அவரது புன்னகையால் கவரப்பட்டு வாங்கிக்கொண்டேன். அவர் அதற்கு தொட்டுக்கொள்ள ஏதோ கொடுப்பார் என நினைத்தேன். ஆனால் அனைவரும் அப்படியே சாப்பிட ஆரம்பித்தார்கள். சாப்பிட்டபோதுதான் அது இனிப்புச்சப்பாத்தி என்று தெரிந்தது. சப்பாத்திக்குள் வேகவைக்கப்பட்ட பருப்புடன் வெல்லம் கலந்து வைத்திருந்தனர். நெய்வாசனை இருந்தது. நெடுநாட்களுக்குப்பின் சாப்பிடும் இனிப்பு.

சாப்பிட்டு முடிப்பதற்குள் அவர் இன்னொன்று கொடுத்தார். மீண்டும் இன்னொன்று. மூச்சுமுட்ட ஆரம்பித்தபின் நிறுத்திக்கொண்டேன். அவர்கள் கைகழுவிவந்ததும் கூட்டமாக அமர்ந்துகொண்டார்கள். ரயில் வேகமெடுத்துவிட்டிருந்தது. குளிர்காற்று உள்ளே சுழன்றடித்தது. கங்கையின் குளிர்நீரில் விழுந்துச் சுழல்வதுபோலத் தோன்றியது.

எழுந்து சன்னல்களை மூடினேன். ஆனால் பெட்டியில் உள்ள அத்தனை சன்னல்களையும் மூடியாகவேண்டும். என்ன செய்வதென்று தெரியவில்லை. காற்று பட்டு உடலின் உள்ளிருந்த வெப்பம் கரைந்தபோது குளிர் அதிகரித்து உடம்பு வெடவெடவென நடுங்கத் தொடங்கியது. உடம்பை எத்தனை இறுக்கிக்கொண்டாலும் உள்ளே வெப்பத்தை நிறுத்திக்கொள்ள முடியவில்லை.

அவர்கள் குளிருக்கு நன்றாகப்பழகிவிட்டவர்கள். அனைவரும் அமர்ந்ததும் வாத்தியங்களை எடுத்து மடியில் வைத்துக்கொண்டார்கள். ஒரு முதியவர் சட்டென்று உச்சக்குரலில் ‘ஜெய் கனஷியாம! ஜெய் ராதே ஷ்யாம்! போல் ஹரிபோல்!’ என்று கூவினார். சங்கு போன்ற ஓங்காரம் மிக்க குரல். அத்தனைபேரும் ‘ராதே ஷியாம்! ஹரிபோல்!’ என்று எதிர்க்குரல் எடுத்தனர். ஒருவர் மிருதங்கத்தில் டண்ண் என்று அறைந்தார். ஒரு கணநேரம் அமைதி சட்டென்று அததனை குரல்களும் வாத்தியங்களும் இணைந்து பாட ஆரம்பித்தன. ஒரே மனம் அனைத்திலூடாகவும் பாடுவதுபோல

ஸ்ரீ ராதே ராதே ராதே ! பர்சனவாலி ராதே!
ஸ்ரீ ராதே ராதே ராதே ! பர்சனவாலி ராதே!

என்று கூட்டுக்குரல் பாட்டு. ஊடாக அந்தக்கரிய மனிதரின் குரல் நாதஸ்வரத் தொனியுடன் எழுந்தது

நாம் மகாதான் ஹி அப்னோ ! நெஹின் துஸ்ரி சம் பட்டி அவுர் கமானி
சோட் அட்டாரி அடா ஹம் வோ குட்டியா பிரஜ் மகி பனானி!

ஒவ்வொரு வரியையும் திரும்பத்திரும்ப ஏற்றுப் பாடினார்கள். மொத்தக்குரலும் சேர்ந்துகொண்டு பல்லவியை இசைத்தது.

முதல் ஒலியிலேயே என் உடம்பு நடுங்க ஆரம்பித்துவிட்டது. என் உள்ளுக்குள் இருந்த ஒன்று இலைநுனிபோல எப்போதும் அதிர்ந்துகொண்டிருந்தது. அதன்மேல் மழைகொட்டுவதுபோல அந்த உரத்த சத்தம். போதும்போதும் என என் அகம் தவித்தது. எழுந்துபோகலாமா ? சற்று தயங்கியபின் எழுந்து மறுபக்கம் சென்றேன். அவர்கள் என்னைக் கவனிக்கவேயில்லை. அவர்கள் எதையுமே கவனிக்கவில்லை

மூன்றுபெட்டிகள் தள்ளிச் செல்லமுடிந்தது. எங்கும் ஆளில்லை. மூன்றாவது பெட்டியின் சன்னல்களை மூட முயன்றேன். பல சன்னல்களுக்கு மூடியே இல்லை. இரண்டாவது பெட்டிக்கு திரும்பிவந்தேன். அதை முழுக்க மூடமுடிந்தது. பெஞ்சில் குறுகி அமர்ந்தேன். பின்பு படுத்தேன். வாசல்கள் வழியாக குளிர்காற்று வந்தது. எழுந்து சென்று வாசல்களை மூடினேன். ஆனால் இணைப்புப்பகுதியின் இடைவெளி வழியாக குளிர்காற்று சீறி வந்து வெறியுடன்

அனைத்து இண்டு இடுக்குகளையும் ஓங்கி உதைத்து உலுக்கிக் குதறிச் சென்றது. குளிரின் ஒருபகுதியாக அந்தப்பாடல்

என்னசெய்வதென்று தெரியவில்லை. என்னிடம் இருந்த காவித்துண்டால்காதைமூடி தலைப்பாகையாகக் கட்டிக்கொண்டேன். சங்குமார்க் லுங்கியை போர்த்திக்கொண்டேன். ரயிலின் பெஞ்சுக்கு அடியில் சென்று படுத்துக்கொண்டேன். அங்கே குளிர் குறைந்தது. ஆனால் ரயிலின் தடக் தட் அடி நேரடியாகவே காதுக்குள் நுழைந்தது. கூடவே அந்தப்பாட்டு. என்ன தொண்டை. தொண்டைகளினாலான தொண்டை. வாத்தியங்களினாலான தொண்டை. உடம்புக்குள் உறைவதனைத்தையும் அப்படியே குரலாக மாற்றி வெளியே கொட்டுகிறார்கள். இங்கே அவர்கள் மட்டும்தான் .எதற்காகப் பாடுகிறார்கள்?

இரவேற ஏற பாடல் இன்னும் வலுத்தது. அல்லது அவர்களைக் கவனிப்பதனால் அந்த ஓசை வலுக்கிறது. தாகம் என் தொண்டையை கவ்வியது. ரயிலில் ஏறும்போதே தாகமிருந்தது. அந்த வெல்லச்சப்பாத்தி தாகத்தை பலமடங்கு மேலெழுப்பியது. அவர்களிடம் தண்ணீர் இருக்கலாம். ஆனால் எழுந்து சென்று கேட்கத்தோன்றவில்லை. அப்படியே தூங்கிவிட்டால்போதும்

சற்று தூங்கியிருப்பேன். ஆனால் தூக்கத்திற்குள்ளும் தாகத்தையே உணர்ந்தேன். வெயிலில் கங்கை கரையில் அமர்ந்திருக்கிறேன். வியர்த்துவழிகிறது. காசிக்கு வந்திறங்கியபோது இரவு பதினொரு மணி. ரயில்நிலையத்தில் தங்காமல் கங்கைப்படித்துறைக்குச் செல்லலாம் என்று நினைத்தது பெரும் தவறு. நினைத்ததைவிட அதிக தொலைவு. பெரிய தார்ச்சாலையின் இருபக்கமும் கட்டிடங்களெல்லாமே மூடி கிடந்தன. கனத்த பெரும் பசுக்கள் அவற்றின் திண்ணைகளில் ஏறி நின்றும் படுத்தும் அசைபோட்டுக்கொண்டிருந்தன.தெருவெல்லாம் நாய்கள். குளிருக்கு அடிவயிற்றில் மூக்கை வைத்துச் சுருண்டு கிடந்தன. சில நாய்கள் மட்டும் தலைதூக்கி முனகின

கங்கைக்கான வழியை ஒரு போலீஸ்காரரிடம் கேட்டுச் சென்றேன். அதன்பின் வழி கண்டுபிடிப்பது எளிதாயிற்று. கடைகளின் இயல்பு மாறியது, தெருக்களின் அகலம் குறைந்தது. கங்கைக்கரையில் எந்நேரமும் ஆளிருக்கும் என நினைத்திருந்தேன். குளிர்காலத்தில் மொத்தக் காசியுமே அடங்கிவிடும் என்று தெரிந்திருக்கவில்லை. லுங்கியால் போர்த்திக்கொண்டு, என்னைநானே தழுவிக்கொண்டு நடந்தேன். தாகம் ஏறி ஏறி வந்தது. ரயிலில் குடிக்க நீர் கிடைக்கவில்லை. தூங்கி எழுந்தபோது கடும் தாகத்தை உணர்ந்தேன். ஆனால் அதன்பின் காசிவரை ரயில் நிற்கவில்லை. காசி ரயில்நிலையத்தில் கங்கை என்ற சொல்லின் ஈர்ப்பில் தாகம் நினைவுக்கு வரவில்லை.

சாலையோரம் எங்காவது தண்ணீர் கிடைக்குமா என்று பார்த்தேன். ஒரு கடைகூட இல்லை. ஒருகட்டத்தில் தண்ணீர் தவிர எதையுமே நினைக்காமல் நடந்துசென்றேன். சாலை நேராக அஸ்ஸி கட்டத்துக்குச் சென்று இறக்கிவிட்டது. கங்கை! முதலில் பனியில் ஒன்றும் தெரியவில்லை. படிக்கட்டில் எல்லாம் சேறு உலர்ந்த புழுதி. இறங்கிச்சென்றபோது நதி முன்னால் இருக்கிறதா என்றே சந்தேகமாக இருந்தது. நீர் ஓடும் ஒலி இல்லை. காற்று மேலே வரவில்லை. கண்முன்னாலிருந்த பனிப்படலத்தில் கரையோரத்து விளக்குகள் செந்நிறமாகப் பிரதிபலித்தன. ஒரு இளஞ்செந்நிற திரைச்சீலை. விளக்குகளைச்சுற்றி ஒளிரும் மஞ்சள் வட்டம்

படிகளில் இறங்கிச்சென்றுகொண்டே இருந்தபோது நீரை உணர முடிந்தது. பின்பு காலில் நீர் பட்டபின்புதான் கங்கையைப்பார்த்தேன். கரியநீர் காலசைவில் நெளிந்தது. என் கைதொடும் தொலைவுக்கு மட்டும் தேங்கிப்பளபளத்த நீர்தான் நான் முதலில் கண்ட கங்கை. நான் உணர்ந்தது உடலெங்கும் எண்ணங்களெங்கும் நினைவெங்கும் நிறைந்திருந்த தாகத்தை. அள்ளிக்குடிக்க குனிந்ததுமே வாசித்தவையும் கேட்டவையும் நினைவுக்கு வந்தன. உலகிலேயே அதிகமாக மாசுபட்ட நதி. இலஸ்டிரேட்டட் வீக்லியில் அதில் மிதந்துசெல்லும் அழுகிய பிணங்களை படமாகப் பாத்திருந்தேன்

அள்ளிய நீரை கீழே போட்டுவிட்டு மேலேறினேன். கங்கைநீரில் அதிக குளிரில்லை. சொல்லப்போனால் இளம் வெம்மையைக்கூட உணர்ந்தேன். மேற்கொண்டு எங்கே செல்வது என்று தெரியவில்லை. கங்கை வரை வந்துவிட்டேன். இளமைமுதலே மனதில் ஓடிய நதி. கங்கை. இன்னரு நீர்க்கங்கை ஆறெங்கள் ஆறே. ஆனால் மேலே எங்கே செல்வது? கங்கையில் குதித்து நீந்தி மறுகரை செல்லலாம். அங்கே வேறு ஏதோ ஒன்று இருக்கும். ஆனால் அந்த ஆற்றின் மறுகரையே தெரியவில்லை. மறுகரையே அதற்குக்கிடையாதென்பதுபோல கிடந்தது

கரையோரமாகவே நடந்தேன். உயரமான கட்டிடங்களின் அடிப்பகுதிகள் கங்கையின் கரையில் வந்து இறங்கி நின்றன. இடிந்த வாசல்கள், மண்டபங்கள். சில்லிட்ட சேறு கிடந்த படிகள். ஓர் இடத்தில் வெளிச்சம் தெரிந்தது. துணியை இழுத்துக்கட்டிய சிறிய கூடாரம். அதனுள் எரிந்த விளக்கொளியில் கூடாரமே ஒரு கண்ணாடிவிளக்கு போல ஒளிவிட்டது. அதற்குள் நான்குபேர் இருந்தனர். நான்குபேருக்குமே நீண்ட தாடி, அடர்ந்த தலைமயிர். ஒருவர் சடையை பெரிய கொண்டையாக கட்டியிருந்தார். காவி உடைகள்.

அவர்கள் கஞ்சா புகைத்துக்கொண்டிருந்தார்கள் என்பதைக் கவனித்தேன். ஒரே சிலும்பியைக்கொண்டு அனைவரும் மாறி மாறி இழுத்தார்கள். சடைக்கொண்டைக்காரர் ஆழ இழுத்து புகையை உள்ளேயே நிறுத்தி விட்டு சிலும்பியை இன்னொருவரிடம் நீட்டினார். என்னைப்பார்த்தார். கரியபற்கள் தெரிய அவர் சிரித்தபோது மூக்குவழியாக புகைவந்து தாடிமீசையில் பரவியது. பிரியத்துடன் 'ஆயியே பேட்டா..ஆயியே' என்றார்

'பானி..பானி' என சைகை செய்தேன்.

அனைவரும் என்னைப்பார்த்தனர். இளைஞர் சிலும்பியை என்னை நோக்கி நீட்டி 'ஆவோ ஃபையா'' என்றார்

'பானி..'

‘மதராஸி? தமிழ்? தெலுகு ?கன்னடா?’ என்றார் சடைமுடிக்காரர்

‘தமிழ்’

‘தம்பி தோ அங்க தண்ணிதானே அம்மாம் பெருசா ஓடிட்டிருக்கு?’

திரும்பிப்பார்த்துவிட்டு ‘இல்ல..அது’

‘சாக்கடைன்னு நினைக்கிறே? சாக்கடைதான். மனுஷனோட அழுக்கெல்லாம் அதிலே இருக்கு..நீ மனுஷந்தானே? குடிக்க மாட்டியா?’

பேசாமல் நின்றேன்

‘அப்பாலே எதுக்கு காசிக்கு வந்தே? அழுக்கை புடிக்காதவனுக்கு காசி எதுக்கு? அழுக்கைத்தின்னு அழுக்கிலே இரு..அதுமேலே அக்கினிய போடு..இந்தா’

பேசாமல் நின்றேன்

‘பின்ன எதுக்கு நிக்கிறே? ஓடு..டெல்லிக்குப்போ’

அதையே அவர்களுக்கு இந்தியில் சொன்னார். அவர்கள் கூட்டமாக என்னை நோக்கிச் சிரிக்க ஆரம்பித்தனர். கஞ்சா அவர்களை மேலும் மேலும் சிரிக்க வைத்தது. நடுவே இருந்த மண்ணெண்ணைச்சுடரின் செவ்வொளியில் பைத்தியக்களை கொண்ட முகங்களும், பரட்டைத்தாடிகளும், மஞ்சள்பற்களும் ,எரியும் விழிகளும் என்னை நோக்கிச் சிரித்தன. ஒருவரின் ஒரு கண்ணிலிருந்து கண்ணீர் வழிந்துசொட்டியது.

விலகிச்சென்றேன். இந்த தண்ணீரை இவர்கள் குடிப்பார்கள். கஞ்சா எல்லாவற்றையும் எரித்துவிடும். அப்பால் தீ தெரிந்தது. நாலைந்து தீச்சுடர்கள். மறுகணமே அது அரிச்சந்திர கட்டம் என்று புரிந்துகொண்டேன். என் கால்கள் நடுங்க ஆரம்பித்தன. திரும்பி நடந்தேன். மீண்டும் அவர்களைத் தாண்டிச்சென்றேன். அவர்கள் அப்போதும் உரக்கச் சிரித்துக்கொண்டிருந்தார்கள்

படித்துறையை விட்டு மேலே செல்லும் சந்துப்பாதையைப்பார்த்தேன். இங்கே குடிக்கத்தண்ணீர் இல்லை. மேலே சென்றாலென்ன. அங்கே ஒருகடையாவது திறக்கக் கூடும். ஆனால் அதற்கும் மனமில்லாமல் அங்கேயே அமர்ந்துகொண்டேன். லுங்கியை நன்றாகப்போர்த்திச்சுருண்டேன். நீர்வெளி என நினைத்துக்கொண்டு பனித்திரையையே பார்த்துக்கொண்டிருந்தேன். முகத்திரையிட்ட கங்கை.

நன்றாகவே தூங்கிவிட்டிருந்தேன். தூக்கத்துக்குள் நான் எங்களூரின் வெயில் மண்டிய வயல்வெளியில் நடந்துகொண்டிருந்தேன். அறுவடை நடந்துகொண்டிருந்தது. களியல் அறுவடைக்குழு வந்து வயலில் இறங்கிவிட்டார்கள். நூறுபேருக்குமேல் இருக்கும். நல்ல வெயில். வியர்த்து ஊற்றுகிறது. அவர்களுக்கு அது பொருட்டே அல்ல. ஆணும் பெண்ணும் பேசிச்சிரிக்கிறார்கள். ஒருத்தி இன்னொருவனின் கால்நடுவே கையால் அடிக்க அவன் அவளை அடிக்கப்போக மற்றவர்கள் வெடித்துச்சிரிக்கிறார்கள். வரப்பில் நின்று அப்புவண்ணன் அதட்டி கூச்சலிடுகிறார்.

என் மேல் ஏதோ பட நான் விழித்து எழுந்தேன். என்னைச்சுற்றி படித்துறை முழுக்க ஆட்கள். எனக்கு சுற்றும் கால்கள் ஓடிக்கொண்டிருந்தன. இளவெயில் பரவியிருந்தது. அத்தனை வெயில்வந்தபின்னரும் எப்படித் தூங்கினேன்? வெயில் அளித்த வெப்பத்தால்தான்போல. எழுந்து அமர்ந்து அந்தக்கூட்டத்தின் பரபரப்பை பிரமித்துப்பார்த்துக்கொண்டிருந்தேன்.படிகளில் குடைகள் நடப்பட்டிருந்தன. காலைவெயிலுக்குச் சாய்ந்த குடைகளுக்குக் கீழே பண்டாக்கள் அமர்ந்திருக்க முன்னால் குடும்பங்கள் அமர்ந்து பலிச்சடங்குகளைச் செய்துகொண்டிருந்தார்கள்.. ஒரேசமயம் அத்தனை சடங்குகளும் கண்ணுக்குப்பட்டபோது என்னசெய்கிறார்கள் என்பதே கண்ணுப்புப்படவில்லை

படிகளில் சிலர் மொட்டைபோட்டுக்கொண்டிருந்தார்கள். சிலர் இலைத்தொன்னைகளில் இட்லி சாப்பிட்டார்கள். சிலர் பைகளுடன் அமர்ந்திருந்தார்கள். சிலர் தோத்திரநூல்களை வாசித்தார்கள். பூக்குடலைகளுடன் படியிறங்குபவர்கள், தாலங்களில் என்னென்னவோ பொருட்களைக்கொண்டு செல்பவர்கள் குழந்தைகளின் கைகளைப்பற்றிக்கொண்டு கூட்டமாக இறங்கிச்செல்பவர்கள்..ஒரு சிறுகூட்டம் போலோ கங்காமாதாகீ ஜே என்று கூச்சலிட்டபடி இடித்துத்தள்ளிச்சென்றது. கீழே படித்துறையில் நூற்றுக்கணக்கானவர்கள் நீரில் இறங்கிக் குளித்துக்கொண்டிருந்தனர். வெளிறிச்சுருங்கிய கிழட்டு முதுகுகள்.சேலைகளை சுற்றி ஒட்டிக்கொண் பெண்முதுகுகள். தொந்திகள் விலா எலும்புகள், இளமையான குழந்தைத்தோள்கள். குளிரில் கூச்சலிடும் குழந்தைகள். கூசிச்சிரிக்கும் பெண்கள். சிரிக்கும் பற்கள். எச்சரிக்கைக் கூச்சல்கள்.

அப்பால் நதிமுழுக்க படகுகள் ஒன்றுடன் ஒன்று முட்டி நின்றன. தெப்பக்குளத்தில் பொரிக்காக வந்து முட்டிமோதும் சாம்பல்நிறமான பெரிய பொத்தைமீன்கள் போல. குடும்பங்கள் படகில் ஏறி கைகளைப்பற்றிக்கொண்டு தடுமாறிச் சிரித்து கடைசிப்படகில் ஏறினர். படகுகள் மெல்லத்திரும்பி நதிக்குள் சென்றன. உயரத்திலிருந்து பார்த்தபோது தேங்கிய சிறிய நிர் என தோன்றியது. ஆனால் பெரியபடகுகள் கூட விரைவிலேயே அதில் சிறிய பூச்சிபோல ஆயின. அப்பால் மறுகரை தெரியவில்லை. ஒளியுடன் வானம் இறங்கியதுபோல மூடுபனி.

ஒரு படுகிழவரை நான்குபேர் தூக்கிக்கொண்டு வந்தார்கள். வற்றி உலந்து தொய்ந்த சுள்ளிக்கட்டு போலிருந்தார். சுருங்கிய கீழ்த்தாடை விழுந்தமையால் வாய் திறந்திருந்தது. பற்கள் இல்லாத ஓட்டைக்குள் நாக்கு பதைபதைத்தது. மூக்கு வளைந்து மேலுதட்டின்மீது நிழல் வீழ்த்தியது. இருகைகளையும் கூப்பி மெல்ல நடுங்கிக்கொண்டிருந்தார். சுருங்கிய கண்கள் கங்கையையே பார்த்துக்கொண்டிருந்தன. தலைவெடவெடவென ஆடியது

பெரிய குடும்பம். தூக்கிவந்தவர்களுக்கு சராசரியாக ஐம்பது வயதிருக்கும். மேலும் இளைஞர்கள், இளம்பெண்கள், மூத்தபெண்கள் ,குழந்தைகள். விதவிதமான பித்தளைப்போணிகள் துணிப்பைகள் பிளாஸ்டிக் பைகள் டிரங்குப்பெட்டிகள். கிழவரை அவர்கள் கொண்டுசென்று முதல்படியில் வைத்தார்கள். அவரது கால் கங்கையில் அரையடி மூழ்கியிருந்தது. அவர் கைகூப்பி கண்ணீர் விட்டுக்கொண்டிருந்தார். பின்னர் திரும்பி ஒருவரிடம் கையை ஆட்டி ஏதோ சொன்னார். அவருக்கு புரியவில்லை. நாலைந்து முறை சொன்னதும்தான் புரிந்தது

அவரை இறக்கி நீரில் அமரச்செய்தார்கள். அவர் இருகைகளாலும் கங்கையை அள்ளி அள்ளிக் குடிக்க ஆரம்பித்தார். அவர்கள் சுற்றிலும் நின்று பார்த்துக்கொண்டிருந்தார்கள். ஒருவர் 'ஜெயஜெய கங்கா மாதே..' என்றார். மற்றவர்கள் ஏற்று முழங்கினார்கள். தெலுங்கர்கள் என்று தெரிந்தது.

நான் கங்கையில் இறங்கினேன். நீர் இப்போது குளிராக இருந்தது. கடும் குளிர். உடலை நடுக்கி சதைகளை இழுத்து விரைக்கச்செய்த குளிர். ஆனால் ஏன் இத்தனைகுளிரிலும் தாகமெடுக்கிறது? தோலில் பட்ட நீர் உள்ளே உள்ள நெருப்பைத் தீண்டவில்லையா? என்னகுளிர்! யார் பாடிக்கொண்டிருப்பது? பஜனைக்கும்பல் பாடியபடியே படி இறங்கி வந்தது. மத்தளம் ஷெனாய் மணி..

அந்தக்கோஷ்டி பாடிக்கொண்டே இருந்ததைக் கேட்டேன். சில கணங்களில் முழுக்கவே விழிப்பு வந்துவிட்டது. எழுந்து நடந்து அவர்களை அணுகினேன். சற்றுத்தள்ளி நின்று பார்க்கையில் அவர்கள் ஒரே உடலாகவும் ஆகிவிட்டதுபோலிருந்தது. அமர்ந்தபடியே நடனமிட்டனர். பாட்டின் தாளத்துக்கு ஏற்ப முன்னும்பின்னும் நகர்ந்து தோள்களை குழைத்து ஆட்டி. வாத்தியங்களுக்கேற்ப அசைந்து. நெருங்கியபோது ஒவ்வொருவரும் அவர்களில் மூழ்கி இருப்பதும் தெரிந்தது

கோவர்தன் மே ராதே ராதே!
தான்கட்டி மே ராதே ராதே
முகார்பிந்த் பே ராதே ராதே
மோஜன் குண்ட்பே ராதே ராதே!

ராதே ராதே ராதே என்ற உச்சவேக உச்சாடனல் அவர்களைத் தூக்கிச் சுழற்றியது. எங்கெங்கோ வீசியடித்தது. பின்பு அவர்கள் ஒரேசமயம் அந்தச்சுழல்காற்றிலிருந்து நிலத்தில் உதிர்ந்தார்கள். சிவந்த கண்களை விழித்து அந்த இடத்தைப்பார்த்தார்கள். ஆர்மோனியம் மட்டும் தொடர்ந்து பாடியது. தவளை முட்டைகளை இணைக்கும் வெள்ளிச்சரடுபோல அதன் இசை. அந்த விரல்கள் ஆர்மோனியத்தில் தேடின. துழாவின. அது அவருடைய அக ஆழம். பெருமூச்சுகள். ஒருவர் 'ஜெய் ராதேஷியாம்!' என்று சொல்ல மற்றவர்கள் 'ராதே ஷியாம்!' என்றனர்

நான் அவர்களிடமிருந்த பிளாஸ்டிக் குடுவைக்காக கைநீட்டினேன். கரியமனிதர் புன்னகையுடன் அதை எடுத்து என்னிடம் நீட்டினார். நான் தூக்கிக் குடித்தபோது வாயை வைத்துக்குடி என சைகை காட்டினார். குளிர்ந்த துளசிநீர். கூடவே பச்சைக்கற்பூர வாசனை.நீர் என் விரல்நுனிகள் வரை குளிர்ந்து நிறைந்தது.

சட்டென்று கிழவர் ' பகு குங்குரு பாந்த் மீரா ..' என்று உச்சத்தில் ஆரம்பித்தார். அனைத்து வாத்தியங்களும் பொங்கி அவரைச்சூழ்ந்துகொண்டன. அடுத்தவரியில் எல்லா குரல்களும் அவருடைய குரலின் கைகளைப்பிடித்து தொங்கி துள்ளிக்குதூகலித்து கூட ஓட ஆரம்பித்தன. நான் அருகே அமர்ந்துகொண்டேன். 'மீரா கி பிரபு' வந்தபோதுதான் அது மீராபஜன் என்று தெரிந்துகொண்டேன். பீம்பிளாஸி என நான் பின்னர் அறிந்த ராகம், ஒருவேளை நான் இறக்கும்போது கடைசியாக என்னிடம் எஞ்சும் ராகம், அப்போதுதான் என் முன் வந்து நின்றது

அதன்பின் இரவெல்லாம் அந்த பாடல்வெளியில் இருந்தேன். ஒட்டகம் நகரும் பெரும்பாலை மடிப்புகள், மௌனமாக உறைந்த பனிமலைகள், பெருக்கெடுத்தோடும் வண்டலாறுகள், சுமைப்படகுகள் வரிசையாகச்செல்லும் பெருநதிகள், அடுக்கடுக்காக சமைந்த பாறைமலைகள், வெயில் விரிந்த நிலங்கள், பசுமை பொழிந்த சமவெளிகள். நினைவுகள் இனித்தன. இருத்தலே இனித்தது. மரப்பெஞ்சுகள் ,குளிர்ந்த இரும்புச்சுவர்கள், இரும்பின் சீரான தாளம் அனைத்தும் இனித்தன

டேராடூன் வரை பாடிக்கொண்டே இருந்தார்கள். ரயிலின் வழிகள் அனைத்தும் அறிந்தவர்கள்போல ஒரு இடத்தில் கிழவர் 'ஹரிபோல் ஹரிபோல்-போல் ராதாகிருஷ்ண முராரே!' என்று கூவியதும் 'ராதே ஷியாம்! சாந்த் ஷியாம்!' என்று கூவி முடித்துக்கொண்டார்கள். கிழவர் மீண்டும் சப்பாத்திகளை எடுத்தார். எனக்கும் தந்தார் ஆனால் என்னால் சாப்பிடமுடியவில்லை. வேண்டாம் என்றேன்

கரிய மனிதர் என்னிடம் புன்னகைத்து 'தமிழாளா கிருஷ்ணா?' என்றார்

'ஆமாம்'

'நமக்கு நெல்லூர்.. ' என்றார் 'எங்கே போறே கிருஷ்ணா?'

'சும்மா–டேராடூன்'

'நம்ம பேரு பேரு ஆஞ்சநேய கவுடு' என்றார்.

'நீங்க எங்க போறீங்க?'

'ஹரித்வார்–அங்கேருந்து அப்படியே போய்டே இருப்போம். ஜனவரி முடிய வரை கோயில்கோயிலா போறதுதான்–கிருஷ்ணார்ப்பணம்'

தன்னை விரஜர் என்று அவர் சொன்னார். அது எனக்குப்புரியாதபோது பாகவதிகள் என்றார். அதுவும் புரியாதபோது ராதிகாவைஷ்ணவி என்றார்.

'நீங்கள் நாடோடிகளா?'

'நான் தையல்வேலைசெய்றேன் கிருஷ்ணா–ஊர்மேலே மனைவி ரெண்டு குழந்தைங்க இருக்கு'

அவர்கள் அனைவருமே அப்படித்தான். ஆறுமாதம் ஊரில் தொழில் செய்வார்கள். பெரும்பாலும் கைத்தொழில்கள். ஒருவர் நிலக்கிழார் . ஒருவர் எண்ணைக்கடை வைத்திருந்தார். ஆறுமாதம் சம்பாதித்ததை எந்தச்செலவும்செய்யாமல் மனைவியிடம் கொடுத்துவிட்டு கிளம்பிவிடுவார்கள். ஊரிலிருக்கும் ஆறுமாதம் அவர்கள் ஆண். கிளம்பியபின்பு ஆறுமாதம் பெண். ராதை. கிருஷ்ணன் மட்டும்தான் ஆண். அவர்களெல்லாம் கிருஷ்ணனின் காதலிகள். பீதாம்பரம் உடுத்து நாமம் தரித்து வாத்தியத்துடன் கிளம்பி திருப்பதி சென்றால் அங்கியே குழு சேர்ந்துவிடும். பண்டரிபுரம் காசி ஹரித்வார் முதல் உடுப்பி வரைச்சென்று முடிய ஆறுமாதம். அதன்பின் மீண்டும் குடும்பத்தினர்

'எங்க சாப்பிடுவீங்க?'

'விரஜர்களுக்கெல்லாம் அல்லா எடத்திலயும் சோறு கிருஷ்ணா– எவ்ளோ மடம் இருக்கு–அன்னபூரணன் கல்யாணன் கிருஷ்ணன் இருக்கானே கிருஷ்ணா–'

இன்னொருவர் 'சோறு இல்லாட்டி என்ன கிருஷ்ணா? ராமநாமமே பாயசம்.கிருஷ்ணநாமமே சக்கரை– .'அவர் கையைத்தட்டியபடி எழுந்து ஆடியபடி பாடினார்.

'ராம நாம பாயஸக்கே கிருஷ்ண நாம சக்கரே
விட்டல நாம துப்பவ கலசி பாயி சப்பரிசிரோ !'

மற்றவர்கள் கைதட்டி பாடினார்கள். நல்ல குண்டு மனிதர். தொப்பை ததும்பியது. ஆனால் கைவீசலில், இடைநெகிழ்வில் பெண்மை நிறைந்திருந்தது

ஆனந்த ஆனந்தவெம்போ டேகு பந்தாக எரடு டேகு பந்தாக
ஆனந்த மூர்த்தி நம்ம புரந்தர விட்டலன நெனெயிரோ !

ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தம் என்று எனக்குக் கேட்டுக்கொண்டே இருந்தது. அவர்களில் ஒருவரின் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது. உதடுகள் துடித்தன.

ரயில் டேராடூனில் நின்றபோது அவர்கள் வாத்தியங்களை எடுத்துக்கொண்டு இறங்கினார்கள். இளவெயில் விரிந்த ரயில்நிலையத்தின் இன்னொரு ரயிலுக்கான கூட்டம் வந்துகொண்டிருந்தது. நான் அவர்களுடன் செல்ல நினைத்தேன். ஆனால் அவர்கள் அப்படி சேர்த்துக்கொள்ளமாட்டார்கள் என்று உடனே தெரிந்தது.

கவுடு என்னிடம் 'என்ன கிருஷ்ணா?' என்றார் 'ஊரே விட்டு வந்துட்டியா?'

'ஆமா' அவர் என்னை அழைக்கப்போகிறார் என்று நினைத்தேன்.

'தட்டுலே பாயாசம் வெச்சு சாப்பிடு கிருஷ்ணா– தட்டு இல்லேண்ணா பாயசம் ஓடிரும். பாயாசமில்லாத வெறும் தட்டு உதவாது–' கிழவரைச் சுட்டிக்காட்டி 'குரு சொல்வார்–தட்டை திங்காதே. தட்டைப்பழிக்கவும் செய்யாதே. –கிருஷ்ணமதுரம் வெள்ளித்தட்டிலேதானே இருக்கணும்?'

எனக்கு மூச்சடைப்பது போலிருந்தது. அவரது கைகளைப்பற்றிக்கொள்ள விழைந்தேன்.

'கிருஷ்ணார்ப்பணம்–வரட்டா? ராதேஷியாம்!'

'ராதே ஷியாம்–' என்றேன்.

மூட்டைகளை இறக்கியதுமே கிழவர் 'குறையொன்றுமில்லை மறைமூர்த்தி கண்ணா!' என்று உச்சக்குரலில் ஆரம்பித்தார். அத்தனைபேரும் சேர்ந்துகொள்ள மொத்த ரயில்நிலையமே திரும்பிப்பார்த்தது. மூன்றுபேர் அதற்கு மென்காற்று பட்ட தென்னை ஓலை போல நடனமிட்டார்கள். மற்றவர்கள் சூழ்ந்துகொண்டு பாடினார்கள். அப்படியே மிதந்து விலகிச்

சென்றார்கள்.

---

## புறப்பாடு II – 8, சண்டாளிகை

தேவர்களும் அசுரர்களும் பாலாழியைக் கடைந்து அமுதத்தை எடுத்தபோது அதை கலசத்தில் வாங்கி சொர்க்கத்துக்குக் கொண்டுசென்றார் கருடன். அதிலிருந்து நான்குசொட்டுகள் மண்ணில் உதிர்ந்தன. அவை முறையே நாசிக், உஜ்ஜயினி, பிரயாகை மற்றும் ஹரித்வாரில் விழுந்தன. ஹரித்வாரில்தான் முதல் சொட்டு விழுந்தது என்று என்னிடம் சண்டாளிகா தேவி சொன்னாள்.

'ஆகவே இதுதான் பூமியில் உள்ள புனிதத் தலங்களிலேயே புனிதமானது. ஹரியிடம் செல்வதற்கான வாசலே இதுதான்'

வேடத்தை முழுமை செய்துகொண்டிருந்தாள். முகத்தில் இளநீலநிறத்தை ஒரு தூரிகையால் தேய்த்தாள். கண்களின் விளிம்புகளில் ரத்தநிறம். இமைகளின் மீதும் ரத்த நிறம். வாயில் உதடுகள் செக்கச்சிவப்பாக பெரிதாக வரையப்பட்டிருந்தன. உதடுகள் அவ்வளவு பெரியவை அல்ல என்பதை சாதாரண சமயங்களில் கண்டிருக்கிறேன். அவற்றின் வெளிப்பக்கத்தை மிகப்பெரிதாக ஆக்கி எல்லைவரைந்து உள்ளே அடர்சிவப்புநிறம் தீற்றி அப்படி ஆக்கியிருந்தாள். கழுத்தும் நீலநிறம். கைகால்கள் எலலாமே நீலநிறம்.

அந்த நிறம் அவள் உடலில் இருந்து விலகுவதில்லை. வருடக்கணக்காக போட்டுப்போட்டு அவளது தோலில் அது ஊறிவிட்டிருந்தது. மற்றபடி நல்ல வெள்ளைநிறம் கொண்டவள். நல்ல உயரம், சராசரிக்கும் மேல் பருமன். சண்டாளிகை ஒரு சிறிய மரப்பெட்டியில் இருந்து நகைகளை எடுத்து அணிய ஆரம்பித்தாள். எல்லாமே அலுமினிய வார்ப்புநகைகள். பொன்னிறப்பூச்சு கொண்டவை. கைகளில் பெரிய கொத்துவளையல்கள். தோள்களில் நெளிந்த தோள்வளை. கழுத்தில் மாரபில் பாதியை மறைக்கும் பெரிய மணியாரம். காதுகளில் குண்டலங்கள்.

எல்லாநகைகளுமே பாம்பாலானவை. பாம்புகள் பின்னி நெளிந்து முயங்கி உருவான வடிவம் கொண்டவை. மூக்குநடுவே சிறிய பாம்பு புல்லாக்காக தொங்கியது. நெற்றிச்சுட்டியில் படமெடுத்த பாம்பு. சேலைக்குமேல் இடுப்பில் கட்டப்பட்ட ஒட்டியாணத்தில் சிவந்த கற்களை கண்களாகக் கொண்ட பெரிய பாம்பு படமெடுத்து சீறி நின்றது. கட்டைவிரல்கள் தவிர எல்லா கைவிரல்களிலும் நாகமோதிரங்கள். பொன்னிறப்பாம்புகள் ஊர்ந்து ஏறிச் சுருண்ட ஒரு மரம் போல எனக்கு அவள் தோன்றினாள்

'அயோத்யா மதுரா, மாயா
காசீ காஞ்சீ அவந்திகா
புரீ ஸ்ரீமத் துவாரவதீ சைவ
ஸப்தைதா முக்தி தாயிகா.'

என்று என்னைநோக்கிச் சொன்னபடி கிரீடத்தை கையில் எடுத்தாள். அதன் உட்பகுதி அலுமினியநிறத்தில் இருக்க வெளியே பொன்னிறம் கூச்சமேற்படுத்துமளவுக்கு ஜொலித்தது. நூற்றுக்கணக்கான கண்ணாடிக்கற்கள் பதிக்கப்பட்டிருந்தன. சிவப்பு நீலம் மஞ்சள் பச்சை நிறமான கற்கள். அதில் சர்ப்பம் இல்லை. அதை உள்ளே ஊதி உதறி தலையில் வைத்துக்கொண்டாள். அதன்பின்பக்கம் இருந்த ரப்பர்நாடாவை இழுத்து கழுத்துக்குப்பின்னால் கூந்தலுக்குள் போட்டு இறுக்கமாகக் கட்டிக்கொண்டாள். குனிந்தாலும்கூட அது விழாது. நான் அதை கையில் எடுத்துப்பார்த்திருக்கிறேன். எடையே இல்லாமல் காகிதத்தால் செய்யப்பட்டது போலிருக்கும்.

'சப்தபதிகள்னு சொல்லுவா..ஏழு புனித ஸ்தலங்கள். இந்த ஏழிலேயும் ஓர்த்தன் முழுக்காட்டி எந்திரிச்சு சேவிச்சுட்டான்னா அவனுக்கு பெருமாள்பதம் உறுதின்னு பாகவதம் சொல்றது..ஏழிலேயும் முடியலேன்னா ஹரித்வார் ஒண்ணே போரும்..இங்கே வரமுடியலேன்னா இருந்த இடத்திலே இருந்துண்டு ஹரித்வாரை நினைச்சுண்டா போரும்..' இன்னொரு சிறிய பிளாஸ்டிக் பெட்டியில் இருந்து பெரிய பற்களை எடுத்து மேல்பல்வரிசை மீது மாட்டிக்கொண்டாள். வெள்ளியாலானவை போல பளபளத்த உலோகப்பற்கள். இரு வீரப்பற்கள் இரு கதுப்போரத்திலும் வளைந்து நின்றன. இனி அவளால் பேசமுடியாது.

கேசப் புழுதியில் தவழ்ந்து உள்ளே வந்தார். இரண்டு கால்களும் துணியாலானவை போலிருக்கும். சேற்றில் சிறகால் துழாவிச் செல்லும் பொத்தைமீன் போல அந்தக்கால்களைக்கொண்டு புழுதியை அளைந்து அளைந்து முன்னகர்வார். மேலே ஒரு அழுக்கு மஞ்சள்சட்டை, கீழே எந்நேரமும் ஒரு காக்கி அரைக்கால்சட்டை. ஆனால் அவருடைய கைகள் மிகப்பிரம்மாண்டமானவை. கடல்நண்டின் கொடுக்குகள் போல. ஒரு பெரிய பயில்வானைக்கூட கைக்குள் சிக்கினால் அவரால் நசுக்கிப்பிழிந்துவிடமுடியும்.

கேசப் தேவியிடம் இந்தியில் ஏதோ சொன்னார். அவள் கையசைத்து வரும்படி காட்டிவிட்டு பீடத்தில் ஏறி அமர்ந்தாள். களிமண்ணால் செய்யப்பட்ட நான்கடி உயரமான பீடம். அதில் நான்குபக்கமும் ஏராளமான பெரிய பாம்புகள் வாய்திறந்து நிற்பதுபோலச் செய்யப்பட்டிருந்தது. பாம்புகளுக்கு கரிய வண்ணம் பூசப்பட்டிருந்தாலும் வாய் ரத்தச்சிவப்பாக இருந்தது. கண்களில் சிவந்த கண்ணாடிச்சில்லுகள் பதிக்கப்பட்டிருந்தன. பீடத்துக்குப்பின்னால் சுவர். அதில் பிரம்மாண்டமாக ஒரு ஐந்துதலை நாகத்தின் சிற்பம் களிமண்ணால் செய்யப்பட்டு கரிய நிறம் கொடுக்கப்பட்டு பதிக்கப்பட்டிருந்தது. நாகத்தின் நாக்குகள் கம்பிகளால் செய்யப்பட்டு சுழன்று பறந்து நின்றன. நாகத்துக்கு அருகிலேயே நாள்காட்டி மாட்டப்பட்டிருந்தது.

தேவி பீடத்தில் ஏறி அமர்ந்துகொண்டாள். அவள் அமர்ந்திருக்கும் கோலத்தை நான் முன்னர் கோயில்சிலைகளில் மட்டும்தான் பார்த்திருந்தேன். ஒருகாலை தொங்கவிட்டு மறுகாலை நன்றாக மடித்து தொடையுடன் குதிகால் படும்படி வைத்து நன்றாக நிமிர்ந்துநெளிந்து அமர்ந்தாள். என்னிடம் அவள் சைகை காட்டியதும் எழுந்து காகிதக்கூழால் செய்யப்பட்ட இரு கைகள் கொண்ட அமைப்பை எடுத்து அவளுக்குப்பின்னால் வைத்தேன். அது உண்மையில் அவள் உடலில் இருக்காது. பின்னாலுள்ள ஒரு குச்சியில் மாட்டப்பட்டிருக்கும். முன்னாலிருந்து பார்த்தால் தோளுக்குமேல் எழுந்த இரு பொம்மைக்கைகள். அவற்றில் ஒன்றில் ஒரு மழு. இன்னொன்றில் சூலாயுதம்.

இருபக்கமும் குத்துவிளக்கை ஏற்றிவிட்டு வெளியே சென்றேன். அது ஒரே அறைகொண்ட குடிசைதான். ஈச்சமரத்தின் தடியை நட்ட தூண்கள். ஈச்சமரம் வலுவற்றது என்று நினைத்திருந்தேன். ஆனால் அது காய்ந்து மட்காது, முளைத்து வேரோடி உயிருடன் இருப்பதனால் வலிமையை இழக்காது என்று தெரிந்துகொண்டேன். எங்களூரில் கைதை, தாழைச்செடிகளின் தடியை அப்படி நட்டு குடில்கட்டுவார்கள். குடிசைக்குமேல் ஈச்சமரத்தின் இலைகள் கரும்பச்சை நிறத்தில் நுனியில் முட்களுடன் குட்டையாக விரிந்து நின்றன.

ஈச்சை ஓலைகளைப்பின்னி வேயப்பட்ட கூரை. சேற்றைக்குழைத்து கூழாங்கற்களுடன் சேர்த்து வைத்து கட்டப்பட்ட சுவரின் மீது சாணியும் சேறும் கலந்து பூசப்பட்டு மேலே வெள்ளை அடிக்கப்பட்டிருந்தது. கையாலேயே சேற்றையும் வெள்ளையையும் பூசியிருந்தார்கள். அலையலையாக வளைந்த விரல்தடங்கள். குடிலுக்குமேலே ஒரு மஞ்சள்கொடியும் ஒரு காவிக்கொடியும் காற்று இல்லாமல் குச்சிகளில் சோம்பிக்குவிந்திருந்தன. இன்னும் விடிய ஆரம்பிக்கவில்லை. எல்லாமே நீலநிறக்கண்ணாடியில் தெரிவதுபோலிருந்தது. அந்தக்குன்றுக்கே நீலபர்வதம் என்றுதான் பெயர். சண்டிதேவி கோயில் அதன்மீதுதான் இருந்தது.

சண்டிதேவி கோயிலை காஷ்மீர் மகாராஜா கட்டினார் என்று சொன்னார்கள். ஹரித்வாருக்கு வரும் அத்தனை பக்தர்களும் சண்டிதேவிகோயிலுக்கும் வருவார்கள். ஆனால் காலையில் கூட்டமிருக்காது. காலையில் அத்தனைபேரும் கங்கைக்கரையில்தான் குவிந்துகிடப்பார்கள். காலையுணவு சாப்பிட்டபின்பு மானஸாதேவி கோயிலுக்குச் செல்வார்கள். அதன்பின்புதான் சண்டிதேவி. வெயில் ஏறியிருந்தாலும் ஈச்சமரங்களும் உயரமற்ற புதர்மரங்களும் அடர்ந்த குன்றில் நிழலிலேயே நடக்கமுடியும். ஒரே ஓட்டமாக அரைமணிநேரத்தில் குன்றில் ஏறிவிடலாம். ஆனால் பெரும்பாலான பக்தர்கள் வயதானவர்கள். முழங்காலில் கையை ஊன்றி முனகி மூச்சிரைக்க மெதுவாகத்தான் ஏறிச்செல்வார்கள்.

மேலே சென்று சண்டிகோயிலைப் பார்த்தபோது எனக்குப் பெரும் ஏமாற்றம். அதை ஒரு கோயில் என்றே சொல்லமுடியவில்லை. ஒரு காரைக்கட்டிடம். சர்க்கஸ் கோமாளிகளின் கூம்புத்தொப்பி போல கூரை. கூட்டம் முட்டிமோதியது. தேவிதரிசனத்துக்கு பெரிய வரிசை நின்றது. வரிசை என்று சொல்லமுடியாது. கூட்டம்கூட்டமாக நிற்கும் பெரும் குடும்பங்களின் சங்கிலி. பதினைந்து நிமிடத்தில் கீழிறங்க ஆரம்பித்தேன். மேலே ஏறுவதற்கு ஒருவழி இறங்க இன்னொன்று. இரண்டுமே ஒழுங்கற்ற கற்படிகளால் ஆனவை.

படியின் இருபக்கமும் நூற்றுக்கணக்கான சிறிய குடில்கள் அடர்ந்திருந்தன. ஈச்சைக்கூரை போட்டு மண்சுவர் கொண்ட ஆளுயரக்குடில்கள் அவை. எல்லா குடில்களிலும் மேலே காவிக்கொடி பறந்தது. அவற்றின் உள்ளும் புறமும் சாமியார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு தோற்றம். பத்துகிலோவுக்கும் மேல் ருத்ராட்சக்கொட்டைகளை உடலில் அணிந்திருந்த ஒருவரைப் பார்த்தேன். உடலில் நூற்றுக்கணக்கான இடங்களில் உருத்திராட்சக்கொட்டைகளை ஊசியால் குத்தி மாட்டியிருந்தார் ஒருவர். மாட்டில் உண்ணி தொங்குவதுபோலிருந்தது. பிரம்மாண்டமான சடைமுடிக்கட்டுகள். புகையிலைச்சுருள்கள் போல தோளில் பரப்பிப்போடப்பட்ட மட்கிய சடைகள். காவியின் நூற்றுக்கணக்கான வண்ணபேதங்கள்.

அதன்பின்புதான் கவனித்தேன், கணிசமான சாமியார்கள் தொழுநோயாளிகள். அவர்களின் முகங்களில் தெரிந்த வேறுபாட்டை அப்போதுதான் புரிந்துகொண்டேன். மூக்குநுனி கிடையாது. பலருக்கு காதுமடல்கள் இல்லை. முகங்கள் தடித்து அனைத்திலும் ஒரே முகபாவனை நிகழ்ந்திருந்தது. விரல்களற்ற மொண்ணைக் கைகள். மழுங்கிய கால்களில் தோல்செருப்பு போட்டிருந்த சிலர் அவற்றை மேலே முழங்காலுடன் இரும்பு ஸ்பிரிங்கால் இணைத்திருந்தனர். பெரும்பாலானவர்கள் தங்கள் முன் கன்னங்கரேலென பளபளத்த திருவோடுகளை வைத்துக்கொண்டு அக்கறையில்லாதவர்கள் போல அமர்ந்திருந்தார்கள்.

அங்கே யாரும் கஷ்டப்படுவதுபோலத் தோன்றவில்லை. சிலர் பேசிச்சிரித்துக்கொண்டிருக்க சிலர் சிறிய டிரான்ஸிஸ்டர்களை காதில் வைத்து பாட்டுகேட்டுக்கொண்டிருந்தார்கள். மரக்கால்களை கழற்றி முன்னால் வைத்திருந்த ஒருவர் இந்தி நாளிதழ் வாசித்தார். சாலையோரமாகவே மண்ணில் பெரிய சிவலிங்கங்கள் செய்து கரிய சாயம்பூசி மலர்மாலை சூட்டி வைத்திருந்தனர். அருகே வீசப்பட்ட ரூபாய்நோட்டுக்கள். பல இடங்களில் பெரிய சாமி படங்கள் மலர்மாலைபோட்டு சாய்த்துவைக்கப்பட்டு அதன்முன் காணிக்கைபோடுவதற்காக காவித்துணி விரிக்கப்பட்டிருந்தது. பெரும்பாலும் நீலநிறமான சிவன். விஷத்தைக்குடிக்கும் ஒரு பெரிய சிவன் படத்தின் கீழே அந்தச்சாமியார் தன் படத்தையும் ஒட்டியிருந்தார்.

அடுக்கடுக்காக குடில்கள் கீழே இறங்கிக்கொண்டே இருந்தன. ஒரு சின்ன குழியில் பிராந்திக்குப்பிகள் குவிந்துகிடந்தன. பலகுடிசைகளுக்கு முன்னால் சாமி படங்களுடன் சிறிய டேப்ரிக்கார்டரில் பக்திப்பாட்டும் போட்டிருந்தனர். படிகளில் இறங்கியவர்களை குடில்முன் நின்ற சாமியார்கள் கூவிக்கூவி அழைத்தனர். கையில் விபூதி வாரி நீட்டி கூச்சலிட்டார்கள். ஒரு கனத்த வட இந்தியப்பெண் பாராமல் செல்ல , தாடியும் சடைமுடியுமாக புலித்தோல்போன்ற துணியில் வேட்டியும் அணிந்த ஒருசாமியார் விபூதியை அள்ளி ஓங்கியபடி கூச்சலிட்டார். அந்தப்பெண் நின்று நடுக்கத்துடன் கைகூப்பி பத்துரூபாயைக் கொடுத்தாள். அவர் வாங்கமாட்டேன் என்றார். அவள் இன்னொரு பத்து ரூபாய் கொடுத்து அவர் கால்களைத் தொட்டுக் கும்பிட்டு விபூதியை வாங்கிக்கொண்டு சென்றாள்.

நான் அந்தப் படங்களைப்பார்த்துதான் நின்றேன். இரண்டும் நான்கடி உயரமானவை. கண்ணாடிச்சட்டம் போடப்பட்ட பழையபாணி ஓவியங்கள். ஒன்றில் காளி நீலநிறத்தில் ஏராளமான கைகளுடன் வாயிலிருந்து தொங்கிய நாக்கில் ரத்தம் சொட்ட நின்றிருந்தாள். கைகள் முழுக்க ஆயுதங்கள். கீழ் வலக்கையில் சிவனின் தலை. இடக்கையில் ஆம், சிவனின் பிரம்மாண்டமான ஆண்குறி! கீழே தலையற்ற சிவபெருமான் அவள் காலடியில் மல்லாந்து கிடந்தார்.

இன்னொருபடத்தில் சிவன் பிரம்மா மற்றும் தேவர்களின் தலைகளை கழுத்தில் மாலையாகப் போட்டுக்கொண்டு ஒரு பெண்தெய்வம் அமர்ந்திருந்தது. அது காளியா சாமுண்டியா தெரியவில்லை. எலும்புக்கூடு போன்ற உடல். மண்டையோட்டு முகம். தலைமயிர் பாம்புகளாலானது. கண்கள் ரத்தச்சிவப்பாக இருக்க வாயிலிருந்து ரத்தம் மார்பில் சொட்டியிருந்தது. கீழே பெண்குறி திரை விலகியதுபோல திறந்திருக்க உள்ளிருந்து ஒருமுகம் எட்டிப்பார்த்தது. தாடிகொண்ட முகம். பிரம்மா!

திண்ணையில் அமர்ந்திருந்த கேசப் என்னிடம் 'ஆவோ பையா ஆவோ..சண்டிகாதேவி தர்ஷன் இதர் ஹே..' என்று கூவினார்.

அந்தப்படத்தைச் சுட்டிக்காட்டி 'இது யார்?' என்று ஆங்கிலத்தில் கேட்டேன்.

'சண்டாளிகாதேவி..தும் மத்ராஸி?'

தலையசைத்தேன். அவர் தெலுங்கில் ஏதோ கேட்டார்.

'தமிழ்' என்றேன்

கேசப் 'எங்கியே நாடு?' என்றார். அதை அவர் தமிழில் பேசுவதாக நினைத்தார்.

நான் மலையாளத்தில் என்னைப்பற்றிச் சொன்னேன்.
'

'நீ உபாசகன் என்றால் சண்டிகையைத் தரிசிக்காமல் உனக்கு மோட்சம் இல்லை. இருபது வருடம் சண்டி உபாசனை செய்து சண்டியாகவே ஆகிவிட்டவள் தேவி..'

'யார்?'

'உள்ளே இருக்கிறார்..உள்ளே போ..ஆவோ சாப்..ஆவோ பையா'

அந்த இருவரும் நின்றனர். அவர்களிடம் சரளமாக இந்தியில் பேசினார். திரும்பி என்னிடம் 'இருபது ரூபாய்..இருபது ரூபாய் தட்சிணை வை' என்றார்.

'என்னிடம் பணமில்லை'

'இருபது ரூபாய்..' அவர்களிடம் அவர் ஐம்பது கேட்டார். அவர்கள் பேச ஆரம்பிப்பதற்குள் அவர் மேலும் மேலும் பேசினார். ஒருகட்டத்தில் அவர்களில் ஒருவர் நூறு ரூபாயை வைத்துவிட்டு உள்ளே சென்றார். என்னிடம் திரும்பி 'நேரமாகிறது..பூஜை ஆரம்பமாகிவிட்டது..ரூபாயை வை..சீக்கிரம்..வை வை..' என்றார்.

ஒருமந்திரத்துக்கு ஆளானவன் போல நான் ரூபாயை வைத்துவிட்டு உள்ளே சென்றேன். உள்ளே சண்டிகை தேவி பீடத்தில் அமர்ந்திருந்தாள். முதலில் நான் அது ஒரு பெரிய பொம்மை என்றுதான் நினைத்தேன். அவள் அசைந்தபோது என் அகம் திடுக்கிட்டது. அவள் கையசைத்து என்னை அமரும்படி சொன்னாள். தரையில் ஈச்சம்பாய் போடப்பட்டிருந்தது. அதில் ஏற்கனவே இருவர் அமர்ந்திருந்தனர். புதியவர்கள் இருவரும் உடலின் எடையை சமன்செய்து மூச்சு அடக்கி குனிந்து கையூன்றி பின் கால்மடித்து அமர்ந்து முனகிக்கொண்டனர். நான் சற்றுத்தள்ளி அமர்ந்தேன்.

இருபக்கமும் குத்துவிளக்குகள் எரிந்தன. கேசப் குடிலின் வாசலில் இருந்த திரையை ஒரு கயிறைப்பிடித்து இழுத்து கீழே சரித்து மூடினான். சன்னல்கள் இல்லாத ஒரே வாசல்கொண்டகுடில். அதில் அரைஇருட்டு நிறைந்தது. கேசப் வாசலருகே நின்று இந்தியில் உரக்க பேச ஆரம்பித்தார். சண்டிதேவியைப்பற்றிச் சொல்கிறார் என்று மட்டும் புரிந்தது. 'தியான் கரோ' என்று அடிக்கடி சொன்னார். நால்வரும் கைகூப்பினார்கள். நானும் அவர்களைப்பார்த்தபின் கைகூப்பினேன்.

கேசப் ஒரு பித்தானை அழுத்தியதும் அறைக்குள் இசை நிரம்பியது. மத்தளத்துடன் யாரோ ஒரு கிழவர் பாடிய பஜனை. பின்னணியில் பெண்குரல்கள் தொகையறா பாட யாரோ நடனமிடுவதுபோல ஜாலரின் ஒலி.

கேசப் வந்து கீழே இருந்த பித்தளை தாம்பாளத்தில் மலரிதழ்களைக் குவித்து வைத்தார். ஒரு சிறிய தட்டில் கர்ப்பூர வில்லைகளை வைத்து குத்துவிளக்குச் சுடரில் அதைக் கொளுத்தினார். தூபத்தட்டு ஒன்றில் கரிதான் இருந்தது. அதை கையால் விசிறிவிட்டு சாம்பிராணித்தூளைத் தூவியதும் குடில்முழுக்க புகை படர ஆரம்பித்தது.

கேசப் உரத்தகுரலில் 'ஜெய் ஜெய் மா சண்டிகா தேவி! ஜெய் மா காளி தேவி! ஜெய் மா காமமோசனீ தேவி!' என்று கூவினார். கூடியிருந்த இருவர் 'ஜெய் ஜெய் மா!' என்று முனகிக்கொண்டனர்.

கேசப் சற்று விலகியதும் தேவி தன் ஒட்டியாணத்துக்கு அடியில் இருந்த புலித்தோல் போன்ற துணிக்கச்சையை அவிழ்த்தாள். கைகளை முன்னால்கொண்டு வந்து ஒரு கணத்தில் தன் மொத்தச் சேலையையும் இடுப்புக்குமேல் தூக்கி முற்றாக பின்னால் தள்ளிவிட்டள். கால்களை மிக அகற்றி சிற்பங்கள் அமரும் பாவனையில் பீடத்தில் அமர்ந்து ஒரு கையை அபயக்கரமாக வைத்துக்கொண்டாள்.

நால்வரும் 'ஜெய் சண்டி மாதா!' என முனகியபடி கைகூப்பினார்கள். தொடைகள் விரிந்து அவள் பெண்குறி மிகவும் திறந்திருந்தது. ஒரு கணத்துக்குமேல் என்னால் பார்க்கமுடியவில்லை.

கேசப் என்னிடம் 'மகாசக்திஸ்தானம்..மூலாதாரபிந்து..தர்சன் கரோ' என்றார்.

நால்வரும் உரக்க 'மாதாகீ ஜே மாதா கீ ஜே' என்று கூவினர்.

கேசப் அந்த கற்பூரத்தட்டை எடுத்து ஆரத்தி காட்டும்படி அவர்களிடம் சொன்னார். ஒவ்வொருவராக அமர்ந்தபடி முன்னால் நகர்ந்து நடுநடுங்கும் கைகளுடன் கற்பூர ஆரத்தி காட்டினார்கள்.

நான் நடுங்கும் உடலுடன் அமர்ந்திருந்தேன். பற்களை இறுகக் கடித்திருந்தேன். கேசப் என்னிடம் ஆரத்தி காட்டச்சொன்னார். நான் தயங்க அவர் உரக்க 'ஆர்த்தி காட்டணும்..ஆர்த்தி..' என்றார்.

எழுந்து ஆரத்தி காட்டினேன். கண்களை மூடிக்கொண்டு தட்டைச்சுழற்றி கீழே வைத்தேன். எரிந்தபடி ஒரு கற்பூரவில்லை கீழே விழுந்தது.

'அணைக்கூ..அதை அணைக்கூ' என்றார் கேசப்.

ஈச்சம்பாய் கருகுவதற்குள் அதை அணைத்துவிட்டேன். கேசப் அனைவரிடமும் மலரை அள்ளி அவள் பெண்குறியில் போட்டு பூசை செய்யச் சொன்னார். அவர்கள் மெல்ல நடுக்கம் அகன்றவர்களாக மலர்களை அள்ளி வீசி மந்திரங்கள் போல ஏதோ சொன்னார்கள். ஒருவர் தேவியின் கால் பாதத்தில் தன் தலையால் மூன்றுமுறை அறைந்துகொண்டார்.

நான் மூன்றுமுறை மலரை வீசிவிட்டு பின்னால் நகர்ந்து அமர்ந்தேன்.

கண்களைமூடாமல் பார்த்துக்கொண்டே தியானம் செய்யவேண்டும் என்று கேசப் இந்தியிலும் மலையாளத்திலும் சொன்னார். நான் அங்கிருந்து எழுந்தோட ஆசைப்பட்டேன். ஆனால் அதற்கான தைரியம் எனக்கிருப்பதாகத் தோன்றவில்லை.

அரைமணிநேரம் கழித்து வெளியே வந்து வெயிலில் நின்றபோது கண்கூசியது. அங்கிருந்து ஓடிவிடவேண்டும் என்றுதான் முதலில் தோன்றியது. பாய்ந்து பாய்ந்து படியிறங்கி கீழே வந்தேன். மூச்சுமுட்டியது. ஏதாவது குடிக்கவேண்டும் போலிருந்தது. டீ அங்கெல்லாம் மிகக் கொஞ்சமாகவே கொடுப்பார்கள். அதிலும் அகலமான மண்சட்டியில். என் மார்புத்தவிப்புக்கு நிறைய தண்ணீர் தேவைப்பட்டது.

ஒரு சோடா குடித்தேன். பின்பு இன்னொரு சோடா. அதன்பின் படிகளில் ஓரமாக அமர்ந்துவிட்டேன். ஹரித்வார் காசியை விட அழுக்கான நகரம். குப்பைகளை அள்ளும் வழக்கமே இல்லை. அத்தனைபேரும் குப்பைபோடுவதற்காகவே அங்கே வந்தார்கள் என்று தோன்றும். ஆண்களெல்லாருமே எங்குபார்த்தாலும் பான்பராக் துப்பினார்கள்.

அங்கே கண்ணில்படுபவர்களில் முக்கால்வாசிப்பேர் முதியவர்கள் அல்லது நோயாளிகள். மரணம் நிறைந்திருக்கும் காற்று என்று தோன்றியது. எத்தனை இழுத்தாலும் மூச்சு போதவில்லை.

பின்னர் எழுந்து கங்கைக்கரையோரமாகச் சென்றேன். பகலெல்லாம் கங்கை அருகிலேயே இருந்தேன். எதற்காக அங்கே வந்தேன் என்று தெரியவில்லை. அங்கே பார்த்த ஒன்றுமே மனதுக்குப்பிடிக்கவில்லை. திரும்பிவிடலாம் என்று தோன்றியது. ஆனால் எங்கே செல்வது? ஹரித்வாரில் ஏராளமான மடங்கள் உள்ளன என்று சொன்னாகள். ஏதாவது ஒரு மடத்தில் நுழையமுடிந்தால் கொஞ்சநாள் அங்கே தங்கலாம். ஆனால் நான் சுற்றிச்சுற்றி வந்தபோது எந்த மடமும் கண்ணுக்குப்படவில்லை. என்னிடம் பதினைந்து ரூபாய்க்குக் குறைவாகவே இருந்தது. இரண்டுநாட்களுக்குமேல் அங்கே நான் வாழமுடியாது.

பெரிய சிவப்புச்சரிகைத் தலைப்பாகை வைத்த ஒரு வெள்ளைக்காரன் என்னை நோக்கி 'ராம்! ராம்!' என்று புன்னகைசெய்தான்.

நான் 'குட் ஆஃப்டர்நூன்' என்றேன்.

'சகோதரா இங்கே சண்டி மந்திர் எங்கே இருக்கிறது?'

வழிசொல்ல ஆரம்பித்தபோது எனக்கு அந்த எண்ணம் வந்தது.'நான் காட்டுகிறேன்'

'என்னிடம் பணம் இல்லை' என்றான் அவன்.

'பரவாயில்லை. நான் வழிகாட்டுகிறேன்'

அவனை சண்டிகோயிலுக்குக் கூட்டிச்சென்றேன். செல்லும்வழியில் சண்டிகை என்றால் என்ன என்று உடைசல் ஆங்கிலத்தில் சொல்லிக்கொண்டே நடந்தேன். பிரம்மா விஷ்ணு சிவன் மூவருமே காமத்தால்தான் தம் ஆற்றலைப் பெறுகிறார்கள். காமம் அவர்களிடம் அகங்காரமாக ஆனபோது பராசக்தி சண்டியாக வந்து அவர்களின் காமத்தை வேருடன் பிடுங்கிவிட்டாள். அவர்கள் செயலாற்றலை இழந்து அப்படியே விழுந்துவிட்டார்கள்.பிரபஞ்சமே செயலற்றுப்போய்விட்டது. முனிவர்கள் எல்லாம் பராசக்தியிடம் சென்று வேண்டிக்கொண்டார்கள். பராசக்தி மனம் கனிந்து மூன்று தேவிகளாக மாறினாள். அவர்கள்தான் சரஸ்வதி லட்சுமி பார்வதி. அந்த தேவிகள் மூன்று தெய்வங்களிலும் மீண்டும் காமத்தை எழுப்பினார்கள். அவர்கள் செயலூக்கம் கொண்டபோது பிரபஞ்சம் செயல்பட ஆரம்பித்தது.

அவன் மிகத்தீவிரமாக, கண்களைச் சுருக்கியபடி, 'மூன்று தெய்வங்களுக்கும் ஆதிபராசக்திக்கும் என்ன உறவு?' என்றான்.

'அவள்தான் அன்னை-மும்மூர்த்திகளும் பிள்ளைகள்'

'அப்படியென்றால் மூன்று மனைவிகளும் அவர்களின் அம்மாவின் மூன்று பகுதிகளா?'

என்ன சொல்வதென்று தெரியவில்லை. 'ஆனால்-' என ஏதோ ஆரம்பித்தேன்.

'எனக்குப்புரிகிறது' என்றான்.

'மேலே இருக்கும் சண்டிகை கோயில் மிகச்சிறியது. அங்கே சாதாரண மக்கள்தான் போவார்கள். உண்மையில் சண்டிதேவியை தரிசிக்க நினைக்கும் உபாசகர்கள் போகும் ஒரு இடம் எனக்குத்தெரியும்-அங்கே நான் உன்னை கூட்டிச்செல்கிறேன்'.

அவன் தயங்கியபடி 'அபாயகரமான இடமா?' என்றான்.

'கொஞ்சம்'

அவன் யோசித்து 'சரி-ஆனால்-' என்றான்.

'சட்டவிரோதமான விஷயம் அது. ஆனால் அற்புதமான அனுபவம்.'

'நீ என்ன எதிர்பார்க்கிறாய்?'

'நூறு ரூபாய்'

'ஐம்பது'

'நன்றி-மேலே போ-மேலேதான் சண்டி கோயில்'

'நில் நில்-' என்றான். 'நூறே தருகிறேன்'

'பணம் கொடு'

நூறுரூபாய் கையில் வந்தபோது நம்பமுடியவில்லை. எவ்வளவு எளிதாக ! இன்னும் ஒருவாரம் இங்கே இருக்கலாம்.

'அங்கே மீண்டும் ஐநூறு ரூபாய் நீ கொடுக்கவேண்டும்'

'ஐநூறு ரூபாயா?'

'இங்கே இது சட்ட விரோதம். வெள்ளையர்களை உள்ளே விட சாஸ்திர அனுமதியும் இல்லை. நான் சொல்லிப்பார்க்கிறேன்' என்றேன் 'ஆனால் ஐநூறு இல்லாமல் முடியாது'

'சரி' என்றான்.

'அந்தச் சரிகைத்தலைப்பாகை யார் தந்தது?'

'என் குரு-எனக்கு யோக ஞானம் அளித்தபோது இதைக்கொடுத்தார்'

ஏற்கனவே நிறையப் பணம் விட்டுவிட்டான் போல என நினைத்துக்கொண்டேன்.

கேசப் என்னையும் வெள்ளையனையும் பார்த்தபோது முகத்தில் கொஞ்சம் ஆச்சரியம் காட்டினார் .நான் சுருக்கமாக அந்தவெள்ளையனை நான் கவர்ந்து கொண்டுவந்ததைச் சொன்னேன். ஐநூறு ரூபாய் தருவான் என்றேன். ஆனால்

அவனை தனியாக அமரச்செய்யவேண்டும்.

கேசப் சம்மதித்தார். 'கம்' என உள்ளே கொண்டுசென்றார். அதற்குமுன் காசு வாங்கிக்கொண்டார்.

உள்ளே சென்றதுமே வெள்ளையன் 'ஓ மை..' என்று முனகினான்.

ஒருமணிநேரம் கழித்து வெளியேவந்தபோது அவனுக்குக் கண்ணே தெரியவில்லை. தடுமாறி கறுப்புக்கண்ணாடியை மாட்டிக்கொண்டான். முகம் ரத்தமாகச் சிவந்திருந்தது.'Oh..Oh my god..Ya, it is great..Awesome...Phew!'

'You liked it?'

'Incredible! Man , I... I actually screamed out'

'Huh?'

'Is it Shiva?'

அவனை கீழே கொண்டு விட்டேன். நேராகச்சென்று ஒரு கடையில் நுழைந்து சப்பாத்தியும் கீரைப்பருப்புக்கறியும் பப்பட்டும் சாப்பிட்டு ஒரு லஸ்ஸி குடித்தேன். இரவில் நன்றாகவே குளிரும் என்று தெரிந்திருந்தது. ஆனால் மாலைக்குள் படுப்பதற்கான ஒரு இலவச சத்திரத்தைக் கண்டுபிடித்தேன். பெரியதலைப்பாகைகளும் சுருள்வாள் மீசைகளுமாக ஆண்களும், தோள்வரை சங்குவளையல்களை அடுக்கி மூக்கில் பெரிய பாசிமணி புல்லாக்குபோட்ட பெண்களும், முகமெங்கும் பச்சைகுத்தப்பட்ட கிழவிகளுமாக ஒரு பெரிய ராஜஸ்தானிய கும்பல் அதை நிறைத்திருந்தது. அங்கேயே சப்பாத்தி சுட்டுக்கொண்டிருந்தார்கள்.

நான் படுத்ததும் ஒரு கிழவி என்னை எழுப்பி இரண்டு சப்பாத்தியும் ஒரு துண்டு வெல்லமும் தந்தாள். அவர்கள் கலைந்து கலைந்து கூடணையும் பறவைகள் போல சத்தமிட்டு ஒருவழியாக அடங்கி படுத்துக்கொண்டார்கள்.

மறுநாள்காலை நான் அந்தக் கடையில் சாப்பிடச்சென்றபோது கேசப் கீழே இருப்பதைப்பார்த்தேன். அவருக்கு பூரியை பொட்டலம் கட்டிக்கொண்டிருந்தார்கள்.

'நீ என்னுடன் மேலே வா' என்றார்.

'எதற்கு?'

'நீ ராத்திரி எங்கே தூங்கினாய்?'

'சத்திரத்தில்'

'அங்கே திருட்டுப்பயம் உண்டு..சிலசமயம் ஆண்களைப் பிடிப்பவர்களும் வருவார்கள்..எங்களுடன் தங்கு'

'எங்கே?'

'மேலே குடிலில்தான்..அது எங்கள் குடில்தான்' என்றார் கேசப் 'நான் உனக்கு தினம் முப்பது ரூபாய் கொடுக்கிறேன்..'

'நான்..'

'எனக்கு வெள்ளைக்காரர்கள் வேண்டும். ஆங்கிலம் பேச எனக்குத்தெரியாது'

'நான் அவனிடம் காசு வாங்கவில்லை..'

'பொய் சொல்லாதே..நீ காசு வாங்கினால் எனக்கென்ன..வருகிறாயா?'

நாங்கள் மேலே வந்தபோது சண்டிகை நீலம்பாரித்த வெள்ளைச்சருமத்துடன் குளித்துவிட்டு வந்து கூந்தலை காயவைத்துக்கொண்டிருந்தாள். கேசப் அவளிடம் 'இவன்தான்' என்றார்.

'எந்த ஊரு தம்பி?' என்று தமிழில் கேட்டாள்

'நீங்க தமிழா?'

'ஆமா..நாங்க பிராமின்ஸ்'

'ஓ'

'எங்கப்பா ப்ரோகிதர்..சின்னவயசிலேயே அம்மா அப்பா ரெண்டுபேரும் போய்ட்டா..ஜோசியம் சொல்லி

பிழைச்சிண்டிருந்தேன். அப்றம் இப்டி' என்று சுருக்கமாக தன் வாழ்க்கையைச் சொன்னாள்.

'ஜோசியம் படிச்சீங்களா?'

'எங்க? அப்பா ஜோசியம் பாப்பார். அப்ப எங்கியோ நாலு வார்த்தை காதிலே விழுந்தது..பொழைக்கணுமே' என்றாள்
'பூரி சாப்பிடறியா?'

'இல்லை சாப்பிட்டேன்'

பேச ஆரம்பித்ததுமே அவள் மிக நெருக்கமாக ஆகிவிட்டாள் என்பதை ஆச்சரியத்துடன் அறிந்தேன். எல்லா மூத்தபெண்களுக்கும் இருக்கும் அக்கா பாவனை. 'நீ பேசாம ஊருக்குப்போய் படிச்சு வேலைக்கு போ. அம்மா கஷ்டப்படுவாங்க இல்ல?' என்றாள். அதை வெவ்வேறு சொற்களில் மணிக்கு ஒருமுறை சொல்லிக்கொண்டே இருந்தாள்.

கேசப் அவள் கணவன் என்று தெரிந்துகொண்டேன்.'அனாதையா மானங்கெட்டு நின்னப்ப ஆம்புளையா வந்து கைகுடுத்தாரு..ஆளு இப்டி இருக்காருண்ணு நினைக்காதே..இவருகூட வந்தபிறகு ஒத்தன் என் மேலே கைய வச்சான்.. அம்பதுபேர் பாக்க புடிச்சு கசக்கிட்டு போனான். இவரு மண்ணிலே இருந்துண்டு அந்தக்கைய பத்திரமா பாத்துக்கோ ராம்சிங்னு சொன்னாரு. மறுநாள் பிண்டு இருக்கானே, இந்த ஊரிலே பெரிய ரவுடி, அப்ப அவன் சின்னப்பையன், ராம்சிங்கோட ரெண்டு கையையும் வெட்டிக்கொண்டுவந்து இந்தா இந்த மரத்தடியிலே போட்டுட்டு போனான்..நாள்முழுக்க அங்கதான் கெடந்தது கை..நான் தோ இங்க உக்காந்து கையையே பாத்துண்டிருந்தேன். எடுத்து ரெண்டுகையிலேயும் வச்சுண்டு டான்ஸ் ஆடணும்னு தோணித்து தெரியுமா? என்னா பெரிய கை..மலைப்பாம்பு மாதிரி தும்பிக்கை மாதிரி..வெரலெல்லாம் இந்தா தண்டிக்கு வெள்ளரிக்கா மாதிரி..தூக்கமுடியும்னே தோணல்லை' என்றாள்
'அந்தக்கைய எனக்கு நன்னாவே தெரியும்'

'அவன் என்ன ஆனான்?''

'அவனா? அவன் தர்மாஸ்பத்ரியிலே கெடந்து அழுகிச் செத்தான்..'

'கேஸ் ஆகலியா?'

'கேஸா? இங்க எதுக்குமே கேஸில்ல'

கேசப் மலையாளி. தறவாட்டு நாயரும்கூட. தலக்கர கடுத்தா நாயர் கேசவன் நாயர். மாவேலிக்கரை அருகில் திருவோணக்கரை என்று ஒரு ஊர். தினமும் செய்தித்தாள் படிப்பார். ரேடியோவில் கேரள அரசியல் கேட்டுத்தெரிந்துகொள்வார். இடதுசாரி ஈடுபாடு உண்டு. 'நாயனார் யோக்கியனாக்கும். ஆனா எனக்கு எம்.என்.கோவிந்தன்நாயரைத்தான் பிடிக்கும்'

'எப்படி இங்கே வந்தீர்கள்?' என்றேன்.

'ஆறுவயதில் என் அப்பாவும் சிற்றம்மாவும் சேர்ந்து கேகே எக்ஸ்பிரஸிலே ஏற்றிவிட்டுவிட்டார்கள்' என்றார் கேசப். 'ரயில் வந்து நிற்கும் கடைசி இடம் டேராடூன். அங்கிருந்து இதோ இங்கே..எல்லா வித்தையும் படித்துத்தான் இங்கே வாழ்ந்தேன்..இதோ இந்தக் கையால் ஒரு பழையதுணியைக்கிழிப்பதுபோல ஒரு மனிதனின் சங்கை என்னால் அறுக்கமுடியும்'

கேசப்புக்கு என்னிடம் பிரியம் இருந்தது. காரணம் நான் மலையாளி. 'நம்மளைப்போன்ற மலையாளிகள்' என்று அடிக்கடி சொல்வார். சென்ற செப்டெம்பரில்தான் தாதா படா ராஜன் மும்பையில் கொல்லப்பட்டிருந்தார். அதுவும் நீதிமன்றவாசலில் வைத்து.

'படா ராஜனின் பெயர்தெரியுமா? ராஜன் மகாதேவன் நாயர். மாவேலிக்கரைதான் அவருக்கும் சொந்த ஊர்..அவர் ஆள் யார்? சிங்கம்..நன்றிகெட்டத்தனமாக கொலைசெய்துவிட்டார்கள். ஆனால் விடமாட்டார்கள். சோட்டாராஜன் பழிவாங்காமல் இருக்கமாட்டான்' கேசப் கொதித்தார்.

ஒவ்வொருநாளும் மும்பை தாதாக்களைப் பற்றிய செய்திகளை உன்னிப்பாக வாசித்து நினைவில் வைத்திருந்தார். படா ராஜனின் முதன்மைச்சீடர் சோட்டாராஜன் அல்ல இவர்தான் என்று நினைத்துக்கொண்டேன்.

'நாயர் தோற்கக்கூடாது. நாயர் மேல் கையை வைத்தவனின் வம்சத்தை வாழவிடக்கூடாது' பல்லைக்கடித்து செய்தித்தாளை ஆட்டி கேசப் உரக்கச் சொல்வார். பலநூற்றாண்டுக்காலம் குடிப்பகை விரோதத்தை வளர்த்து தலைமுறைதலைமுறையாக மாறி மாறி தலைவெட்டி வாழ்ந்த வம்சத்தின் ரத்த நுரை அது என்று தோன்றியது.

தேவிக்கு கேசப் மீது பயமா பிரியமா மரியாதையா என்று தெரியாத உணர்ச்சி இருந்தது. சண்டிவேடம் போட்டதும் கேசப் சீடனின் பணிவும் ஒடுக்கமுமாக அவள் முன் நிற்பார். அவரே அவளுக்கு பூசையும் தூபமும் காட்டுவார். ஆனால் மற்ற நேரங்களில் அவள் ஒவ்வொரு கணமும் அவருடைய கடைக்கண்பார்வைக்கு ஏங்குபவள் போலிருப்பாள். அவருக்குப் பணிவிடைகள் செய்வாள். அவர் நாளிதழ் வாசிக்கையில் மிகமௌனமாக டீ கொண்டு சென்று அருகே வைப்பாள். இரவில் அவரது மெலிந்த கால்களை டவலை வெந்நீரில் முக்கி துடைத்துவிடுவாள். அவருக்குச் சாப்பாடு

பரிமாறிவிட்டு விலகி கவனித்துக்கொண்டு நிற்பாள். அது தீரத்தீர அக்கணத்திலேயே பரிமாறுவாள்.

அவர் அவளிடம் நேரடியாகப்பேசுவதே குறைவு. பேசினாலும் வேறெங்கோ பார்த்துத்தான். பெரும்பாலும் தலைகுனிந்து ஓரிரு சொற்களில் பேசும் வழக்கம் அவருக்கு உண்டு. 'வேண்டாம்' என்று சொன்னால் வேண்டாம்தான். மறுசொல்லை அவள் சொல்லமுடியாது. அதனால்தான் அவளுக்கு என்மீது ஆதிக்கம் கலந்த உரிமை வந்தது.

'முதல்ல போயி இந்த பரட்ட தலைமுடிய வெட்டு.. தாடிய சிரைச்சுண்டு வா..நீ என்ன சாமியாரா? வளரும் புள்ளை' என்று அதட்டினாள். காலையிலும் இரவிலும் மட்டும்தான் அவள் சாப்பிட முடியும். அப்போது முதலில் எனக்குப் பரிமாறிவிட்டுத்தான் சாப்பிடுவாள். பரிமாறும்போது அவள் ஒருமாதிரி விரிந்துகொண்டே செல்வதாகத் தோன்றும். அள்ளியள்ளி வைப்பாள். 'சாப்பிடு..இப்டிச்சாப்பிட்டா ஒடம்பு கொத்தவரங்கா மாதிரில்ல ஆகும்..' என்பாள். கரண்டியாலேயே மண்டையில் செல்லமாக அடிப்பாள்.

அவளுக்கு புராணக்கதைகள், கொஞ்சம் சுலோகங்கள் தெரியும். தான் ஒரு பிராமணப்பெண் என்பதற்கு ஆதாரமாக அதைச் சொல்லிக்கொண்டிருக்கிறாள் என்று தோன்றும்..'இதெல்லாம் எனக்கு அவ்வளவா பிடிக்கல்லை' என்று ஒருமுறை சொன்னேன்.

'என்ன புடிக்கலை? நான் என்ன ரெக்கார்டு டான்ஸா ஆடறேன்..இது உபாசனை தெரியுமா?'

'ஒண்ணுமில்லை' என்று வேறுபக்கம் பார்த்தேன்.

'உனக்கென்ன தெரியும்? நான் மேடையிலே இருக்கிறச்ச என்னைய அம்பாளாத்தான் நினைச்சுக்குவேன். இந்த உலகையே பெத்துப்போட்ட அம்மாவா நினைச்சுத்தான் அத்தனைபேருக்கும் அருள் புரிவேன்..அதான் எல்லாரும் என் காலிலே விழுறா..மனசு உருகி எத்தனை பேரு அழுறா..எத்தனைபேருக்கு அவா பாவம்லாம் கரைஞ்சாச்சுண்ணு தோணறது..எனக்கு அதெல்லாம் பெரிய புண்ணியமாத்தான் தெரியறது. பிராப்தத்தாலே இந்த மாதிரி எனக்கு அமைஞ்சிருக்கு..'

அந்த வேலைகள் எல்லாமே கேசப்பின் ஜோடனைகள் என நான் நன்கறிந்திருந்தேன். தேவி நேரம் கிடைக்கும்போதெல்லாம் விதவிதமாகப் பேசி அவள் செய்வதை நியாயப்படுத்திக்கொண்டே இருந்தாள்.

நான் இரண்டுவாரம் அங்கே இருந்திருப்பேன். அதற்குள் அங்கே எல்லாமே சலித்துவிட்டது. மாலையானால் படிக்கட்டே மாறிவிடும். எல்லாரிடமும் நல்ல காசு புழங்கியது. அத்தனைபேரும் குடிப்பார்கள். அதன்பின் குழறல்மொழியில் சண்டைகள் கூச்சல்கள். திமுதிமுவென்று ஓடுவார்கள், பொத் பொதென்று விழுவார்கள். சமயங்களில் கட்டிப்புரண்டு சண்டை. கட்டைகளைத் தூக்கி மாறி மாறி அடிப்பார்கள்.

கண்ணெதிரே இருவர் மிருகத்தனமாக அடித்துக்கொண்டாலும் கேசப் அசைய மாட்டார். பீடியை ஆழ இழுத்தபடி சுருங்கிய கண்களுடன் பேசாமல் பார்த்துக்கொண்டிருப்பார். எவருக்கும் உதவுவதில்லை. ஆனால் அவர் 'பஸ்' என்று சொல்லிவிட்டாரென்றால் அவ்வளவுதான் அனைவருமே அமைதியாக முனகியபடி, முணுமுணுத்தபடி கலைந்துசெல்வார்கள்.

கேசப்பை கேசவேட்டன் என்று கூப்பிட ஆரம்பித்தேன். அது அவருக்கு மிகவும் பிடித்திருந்தது அவரிடம் சொல்லிக்கொண்டு கிளம்பவேண்டும் என்று நினைத்தேன். ஆனால் என்னால் அவரிடம் சென்று நேருக்கு நேர் நின்று பேசமுடியாது. அவரும் என் அப்பாவும் அண்ணாவும் எல்லாமே ஒரே வார்ப்புகள். பிறரை ஆட்சிசெய்வதற்காகவே பிறந்தவர்கள். தேவியிடம் சொல்லி சொல்ல வைக்கலாம் என்றால் அது இன்னும் கஷ்டம். அவளே என்னிடம் சொல்லித்தான் அவரிடம் ஏதாவது கேட்டுப்பெற்றாள்.

நான் சாப்பிட்டுக்கொண்டிருந்தபோது தேவி என்னிடம் 'டேய், உங்கண்ணனிடம் ஒரு கடை கிடை வைக்கச்சொல்லுடா..இனிமே இது வேண்டாம்' என்றாள்.

கேசப் அப்பால் திண்ணையில் இருந்தார். அங்கிருந்தே அவர் திரும்பிப்பார்ப்பதை என் முதுகில் உணர்ந்தேன்.

தேவியின் கழுத்தும் கன்னங்களும் புல்லரித்திருந்தன என்று தோன்றியது. கண்களில் நீர் நிறைந்திருந்தது 'என்னாலே இனிமே இதெல்லாம் முடியாது..'

'என்னடீ?' என்றார் கேசப்.

'இனிமே இது முடியாது..இனிமே வேஷம் கட்டி உக்கார மாட்டேன்'

'ஏன்?'

அவள் என்னிடம் மெல்ல 'மூணுமாசமாச்சு' என்றாள்.

அவள் சொல்வதே எனக்குப்புரியவில்லை.

'என்னது?'

'பாத்துட்டேன்..அதுதான்..இந்தவாட்டி மூணுமாசம் கழிச்சு சொல்லலாம்னு இருந்தேன்'

'அதுக்கு?'

'இனிமே என்னால முடியாது..என்னை கொன்னாலும் சரி..என்ன தொழில் வேணுமானாலும் செய்றேன்..மாடா ஒழைக்கிறேன்..'

அவள் பாத்திரத்தை தரையில் வைத்துவிட்டு முகம் பொத்தி அழ ஆரம்பித்தாள். கைகளும் தோளுமெல்லாம் நீலநிறம் பாய்ந்திருந்தன. விசும்பலில் உடம்பு அதிர்ந்தது.

'சரி சரி..பிடிக்கல்லேண்ணா வேண்டாம்..கீழ ஒரு கடைய எடுத்திரலாம்..பைசா எவ்வளவு இருக்குன்னு பாக்கிறேன்' என்றார் கேசப்.

அவள் அதன்பின்னரும் கொஞ்சநேரம் விசும்பிக்கொண்டிருந்தாள். அதன் பின் கண்களைத் துடைத்து என்னை நோக்கி புன்னகைத்து 'தால் வைக்கட்டுமா?' என்றாள்.

'போரும்'என்றேன்.

கேசப் அப்பால் தவழ்ந்து புழுதிவழியாக பாதையில் ஏறி சென்றுகொண்டிருந்தார்.

---

## புறப்பாடு II – 9, காலரூபம்

காசியில் ஒரு படகில் ஏறி மறுகரையில் இருக்கும் காசிமன்னரின் அரண்மனைக்குச் சென்றேன். படகில் நான்மட்டும்தான் போகப்போகிறேன் என்ற பிரமையில் இருந்தேன். சின்ன படகுதான். ஆனால் அந்த குகா இளைஞன் தொடர்ந்து ஆட்களை கூவிக்கூவி ஏற்றிக்கொண்டிருந்தான். ஒருகட்டத்தில் படகின் விளிம்புக்கும் நீருக்குமான இடைவெளி நான்கு இஞ்ச்தான் இருந்தது. ஒரு மார்வாடி குண்டு மனிதர் ஏறியபோது என்பக்கம் படகு மேலெழுந்து அவர் அருகே நீர் உள்ளே கொட்டியது. இறங்கிவிடலாமா என்று நினைத்தேன். அதற்குள் அவன் மோட்டாரை இணைத்திருந்த கயிற்றைப்பிடித்து இழுத்தான். படகு உறுமி மெல்ல அதிர்ந்தது. துடுப்பான் இன்னொரு படகில் ஊன்றி உந்தியபோது படகு மெல்ல தயங்கி நகர்ந்து பின்பு சீராக நடுப்பிரவாகம் நோக்கிச் சென்றது.

சிறிதுநேரத்திலேயே கரை மிகவும் விலகிச்சென்றுவிட்டது. எத்தனையோமுறை படங்களில் பார்த்த காசிப்படித்துறைத்தொகுதி. வரணா முதல் அஸ்ஸி வரை வரையிலான நூற்றெட்டுபடிகள். ராஜபுதன மன்னர்கள் கட்டிய செந்நிறமான அரண்மனைகளின் அடிப்பகுதிகள் பெரும் தூண்கள் போல, கல்லாலான அடிமரங்கள் போல, இறங்கி வந்து சேற்றுப்புழுதியில் ஊன்றியிருக்க மேலே புராதனமான உப்பரிகைகள் மிதந்து நிற்பவை போல நின்றன. அவற்றுக்குமேல் அப்பக்கம் நிற்கும் மரங்கள் மணிமுடிமீது இறகுசூட்டப்பட்டதுபோலத் தெரிந்தன. விதவிதமான பழைய கட்டிடங்கள். பலகட்டிடங்கள் தங்கும்விடுதிகள் என்று தெரிந்தது. சுவர்களில் அவற்றின் பெயர்கள் எழுதப்பட்டிருந்தன.

கற்படிகள் மேலிருந்து சரிந்துவந்தன. அவற்றில் மக்கள் வண்ணக்கலைசலாக ஏறி இறங்கிக்கொண்டிருக்க தூரத்தில் அவர்களின் ஓசைகள் ஒன்றுகலந்து ஒரே ரீங்காரமாக ஒலித்தன. படித்துறைகளில் வெண்ணிறமான காகங்கள் அல்லது புறாக்கள் போன்ற பறவைகள் கூட்டமாக வளைந்து நீர்மேல் பரவிச் சிறகடித்தெழுந்து மீண்டும் சுழன்றிறங்கி மீன்களை பிடித்துக்கொண்டிருந்தன. மூங்கிலால் வளைவு கட்டி மேலே பாய்கள் போட்டு நிழல்கூரை அமைத்த பயணப்படகுகள் இயந்திரங்கள் அதிர நீரில் நகர்ந்தன. அவற்றை ஒட்டியே பறவைகளும் சென்றன.

விதவிதமான படகுகள். வெறுமே சுற்றுலாப்பயணிகளுக்காக விடப்பட்ட அலங்காரப்படகுகள்தான் அதிகம். மறுகரைக்கு சடங்குகளுக்காக ஆட்களை ஏற்றிச்சென்ற படகுகள் பேருந்துகளைப்போல உடல்களை அடைத்து வைத்திருந்தன. அருகே சென்ற படகில் ஒரு பஜனைகோஷ்டி இருந்தது. ஜாலர்களையும் கைத்தாலங்களையும் சிறிய மிருதங்கத்தையும் முழக்கியபடி கங்கா ஜெய் கங்கா ஜெய்ஜெய் கங்கா கங்கா மா கங்கா என்று பாடிக்கொண்டிருந்தனர். நடுவே ஒரு ஆண்குரல் 'ஓஓஓ அமிர்த்வர்ஷினீ ஓ மாயா! 'என வீரிட்டது. காற்று பாட்டை அள்ளி நீரின் மேலேயே விதவிதமாகச் சுழற்றி விசிறி விளையாடியது.

பிறபடகுகளின் ஓட்டத்தால் கிழிபட்ட நீர்ப்பரப்பு அலைகளாக மாறி எங்கள் படகின் விலாவை களக் களக் என அறைந்தது. எங்கள் படகை அந்த அலைகள் மெல்ல ஊசலாட்டின. வளைந்து நெளியும் நீரை பார்த்துக்கொண்டிருந்தேன். குளிர்ந்த இளநீலநீர். இமயத்தின் குளிர். இன்னும்கூட அது அந்தக் குளிரை விட்டுவிடவில்லை. கல்கத்தாவில் கடலை நெருங்கும்போது கூட அந்தக்குளிர் இருக்கும் என்று தோன்றியது. குனிந்தால் நீரைத் தொட்டுவிடமுடியும். ஆனால் நான் நெடுநேரம் தயங்கிக்கொண்டிருந்தேன். ஆற்றுக்குள் செல்லச்செல்ல குளிர் அதிகரித்தபடியே வந்தது. காற்றிலேயே நீர்த்துளிகள் இருந்தன. படகு திரும்பும்போது தண்ணீர் மேலே தெறித்தது. பின்பு நீரை அள்ளி முகத்தில் விட்டுக்கொண்டேன்.

ஆற்றில் மிதந்துவரும் பொருட்களை கவனிக்க ஆரம்பித்தேன். காலைமுதல் எங்கெங்கோ செய்யப்பட்ட பூசையின் மலர்கள்தான் அதிகம். அஸ்ஸி ஆறு என்னும் மாபெரும் சாக்கடையில் இருந்து வந்து கலந்த ரசாயனங்களின் குமிழிகள். துணிகள் மனித உடல்கள் மூழ்கிச்செல்கின்றனவா என்ற துணுக்குறலை உருவாக்கின. நான் வாசித்தறிந்ததுபோல பிணங்கள் ஏதும் செல்லவில்லை. மட்கிய சில மரத்தடிகளையும் பிளாஸ்டிக் பொருட்களையும் பார்த்தபோதெல்லாம் அவை பிணங்கள் என்ற துணுக்குறலை அடைந்தேன்.

தொலைவில் நடு ஆற்றில் ஒரு சேற்றுப்படுகை தீவுபோலத் தெரிந்தது. கரியசேற்றில் செடிகளோ புற்களோ இல்லை. ஆனால் பறவைகள் கூட்டமாக அமர்ந்து எழுந்துகொண்டிருந்தன. படகு மேலும் நெருங்கிச்சென்றபோது அது நகர்வதாகத் தோன்றியது. ஆற்றின் மீது வந்தபின்னர் நகர்வது நிலைத்திருப்பது என்ற பேதமே அற்றுவிட்டது. காசியின் பெரும் படித்துறைக்கட்டிடங்கள் கப்பல்கள் போல மெல்ல நகர்ந்துகொண்டிருந்தன. கங்கை பெரியதோர் ஏரிபோல அசைவற்று நின்றது. உண்மையிலேயே அவை நகர்கின்றன என்று உணர்ந்ததுமே புரிந்துகொண்டேன், அவை எருமைகள்.

படகு அவற்றை நெருங்கியபோது விழிகொட்டாமல் பார்த்தேன். நூறு எருமைகளுக்குமேல் இருக்கும். அவை உடலோடு உடலாக ஒட்டி ஒரே பரப்பாக மாறி மெல்லச்சென்றுகொண்டிருந்தன. அவற்றின் முதுகுகளும் தலைகளும் மட்டுமே மேலே தெரிந்தன. அவை கால்களால் நீந்துவது வெளித்தெரியாததனால் நீரின் விசையால் அவை செல்வதுபோலத்தோன்றியது. ஆனால் அவை மறுகரைநோக்கிச் சென்றுகொண்டிருந்தன. அருகே சென்றபோது அவற்றின் காதுகள் நீரில் அளைவதைக் கண்டேன். காதுகள்தான் துடுப்புகளாக அவற்றை செலுத்துகின்றன என்று கற்பனை செய்துகொண்டேன்.

காசிமன்னரின் அரண்மனைக்கு அப்பால் ஒரு கிராமம் இருந்தது. செங்கல் பாவப்பட்ட அரண்மனைமுற்றத்தில் இருந்து பிரியும் நாலைந்து சாலைகள். அதற்கப்பால் வயல்கள். வயல்களின் மண்ணையே அள்ளி வைத்துக் கட்டியதுபோல குட்டையான வீடுகள். எங்கும் எருமைகள்தான் நின்றன. குட்டிபோட்ட எருமைகளை ஆற்றில் மேயவிடுவதில்லை . அவை கோதுமைவைக்கோலையும் கரும்புத்தாளையும் மென்று தின்றபடி கட்டுத்தறியருகே செவிகள் படபடவென அடிக்க தலையைக்குலுக்கியபடி நின்றன. மிதித்துக்கசக்கப்பட்ட கரும்புத்தாள்களும் வைக்கோல்களும் சாணியுடன் சேர்ந்து எழுப்பிய வீச்சம் எனக்கு என் வீட்டுத்தொழுவத்தின் இனியநினைவை எழுப்பியது.

ஊர் முழுக்க மணல். ஈரம்பட்டதுமே சேறாக மாறி காய்ந்ததும் முழுமையாக உதிர்ந்துவிடும் மிகமென்மையான தூசுமணல் அது. கங்கையின் கரை முழுக்க அதுதான். அப்படியென்றால் கங்கை இங்கெல்லாம் வந்திருக்கிறது. இந்நிலங்களெல்லாம் ஒருகாலத்தில் கங்கையின் வயிற்றுக்குள் இருந்திருக்கின்றன. அடர்பச்சைத்தாள்கள் வெயிலில் பளபளக்க கரும்புக்கூட்டங்கள் செறிந்த வயல்கள் வந்தபடியே இருந்தன. சிறிய ஓடைகளில் நீர் கிளுகிளுத்து சரிந்து வழிந்தோடி சின்ன வரப்புகளை ஊறி நனைத்துப்பரவிக்கொண்டிருந்தது.

ஊரெல்லாம் எருமைகள்தான். நின்றும் கிடந்தும் அசைபோட்ட எருமைகள் பெரிய கண்ணாடிக்கண்களை விழித்து தலைசரித்துப்பார்த்தன. அவற்றுக்கு நான் அன்னியன் என்று தெரிந்திருந்தது. பலத்த மூச்சுடன் தலையை நன்றாகக்குனித்து பின்னால் விலகின. இளம் பெண்ணெருமைகள் தடதடவென துள்ளிச் சுழன்று ஓடி நின்று மோவாயைத்தூக்கிப் பார்த்தன. பெரும்பாலானவை கரியபளபளப்புகொண்ட சிந்தி எருமைகள். எங்களூர் எருமைகள் சருகு நிறத்தில் இருக்கும். விலாவிலெல்லாம் காய்ந்தபுல்போல முடியும் சீமைக்கொன்றை நெற்று போல சப்பி பின்னால் வளைந்த கொம்பும் கொண்டவை. இந்த எருமைகளின் உடல்கள் தாரால் செய்யப்பட்டதுபோலப் பளபளத்தன. கொம்புகள் கன்னங்கரேலென்று பனம்பாளைகள் போல உருண்டிருந்தன.

எருமையின் ஈரமான மூக்கு எனக்கு எப்போதுமே பிடிக்கும். உண்ணியப்பம்போல ஒரு எண்ணைவழியும் சொரசொரப்பு. பழைய விபூதிக்குடுவை போல கரிய பளபளப்பு. எங்கள் எருமை காளியின் மூக்கில் வருடிக்கொண்டே இருப்பேன். மூக்கின் மேலேயோ கீழேயோ வருடுவது அவளுக்குப்பிடிக்கும். மூக்கின்மீது தொட்டால் உடனே கருநீலநிறமான நாக்கு வாழைப்பூ இதழ்போல சுருண்டு மேலே வந்து என் விரலைத் தொடும். புஸ்ஸ் என்று சீறிக்கொண்டு விலகிவிடுவாள்.

காளியை கிடாரியாகத்தான் அப்பா வாங்கிவந்தார். அப்போது அவளுக்கு உடம்பெல்லாம் இன்னும் முடி. செம்பட்டைநிறமான அந்தமுடியை கண்ணைமூடிக்கொண்டு தொட்டால் முடி என்று தோன்றாது. நார் போலிருக்கும். புளியம்பழம் போல கொம்புகள். அப்பு அண்ணாதான் ஓட்டிவந்தார். அவ்வளவு தூரம் நடந்து வந்து, வரும் வழியில் சைக்கிள்கள் மற்ற மாடுகள் நாய்கள் அனைத்துக்கும் பயந்து குதித்து அவளுக்கு எங்கள் வீட்டை நெருங்கும்போதே கழிய ஆரம்பித்துவிட்டது. வீட்டுமுற்றத்துக்கு வந்ததும் துள்ளி ஒரு வட்டமடித்து நின்று பீச்சியடித்தாள். செம்மண்ணில் செதில்களாகத்தெறித்தது. மட்கிய தழைவாடை.

‘அம்மிணியே முற்றம் சாணியடிச்சு மெளுக மருமொவ வந்தாச்சே’ என்றான் தங்கையன்.

‘டேய் நீ போ’ என்று அப்பா சொன்னார். ‘நல்ல காளியாக்கும் அப்பு.நிக்கட்டு’

தொழுவத்தில் ஏற்கனவே செவலையும் வெள்ளையும் மக்ருணியும் நின்றுகொண்டிருந்தன. அவர்களை காளி ஐயமாகப் பார்த்து இங்கேயா என்று அப்புஅண்ணனிடம் கேட்டாள். அவர் புட்டத்தைப்பிடித்து தள்ளி கயிறு நுனியால் தட்டியதும் உள்ளே நுழைந்து சுபாவமாக புல்லுக்கூடை பார்த்தாள். அது நிறைய புதிய வைக்கோல் இருந்ததில் நிறைவடைந்து வாய் நிறைய அள்ளிக்கொண்டாள்.

‘புல்லுகடி கொள்ளாம் அப்பு.நல்ல அக்கினியுண்டு’ என்றார் அப்பா.

காளியை அதன்பின் எப்போதுமே ஒரு பெரிய சூளையாகத்தான் நான் பார்த்தேன். உள்ளே எரிந்துகொண்டிருப்பதை மேலே தொட்டுப்பார்த்தாலே தெரிந்துகொள்ளலாம்.மார்கழிமாதம் கதகளி பார்க்கப்போய் திரும்பிவந்தபோது திறந்துபோட்டுச்சென்ற கதவை அம்மா மூடிவிட்டிருந்தாள். தட்டினால் அப்பாவுக்குக் கேட்கும். வேறுவழியில்லை. பனி கொட்டி மணலெல்லாம் ஈரமாக இருந்தது. தொழுவத்தில் படுத்துக்கொண்டேன். அங்கும் குளிர் சதையைப்பிய்த்தது. காளி படுத்து அசைபோட்டுக்கொண்டிருந்தாள். அவள் வயிறோடு ஒட்டிக்கொண்டேன். சற்றுநேரத்தில்

வெந்நீர்த்தவலையில் ஒண்டிக்கொண்டதைப்போல உணர்ந்தேன். அதன்பின் அவளை கணப்பு போலவே பயன்படுத்திக்கொள்ள ஆரம்பித்தேன்

காளி எதையும் தின்பாள். புல் தவிடு புண்ணாக்கு வைக்கோல் எதிலும் பேதமில்லை. வாழையிலை, வாழைமாணம், தென்னை ஓலை, அன்னாசி ஓலை, கைதை தாழை ஓலைகள் மட்டுமல்ல வேட்டிசட்டை எதுவும் வாயருகே வந்தால் அக்கணமே தின்னப்படும். என்னுடைய அம்பர்வெள்ளை பாலிதீன் சட்டையை அவள் வாயிலிருந்து உருவி எடுத்தபோது பாதி மெல்லப்பட்டிருந்தது. ஒருமுறை கயிறை மென்று அறுத்துவிட்டு வைக்கோற்போர் அருகே சென்று நின்று இரவெல்லாம் தின்று காலையில் பார்த்தபோது வயிறு உப்பி பெரிய பாறை போல இருந்தது. எடை தாளாமல் கால்கள் சற்றுக்கோணலாக ஊன்றப்பட்டிருந்தன. வால் தீனமாகச் சுருட்டி வைக்கப்பட்டிருந்தது. என்ன தப்பு நடந்தது என்று தெரியவில்லையே என்ற பாவனை பெரிய கண்களில் தெரிந்தது.

'அம்மச்சியே, ஒருமணிக்கூர் நேரத்துக்கு தண்ணியக்குடுத்திராதீய..உப்பிரும்..கொஞ்சம் எறங்கட்டு..' என்றான் தங்கையன்.

சங்கிலி வாங்கிக்கொண்டுவந்து கட்டியது அன்றுதான். தொழுவத்தில் நாக்கை வெளியே தொங்கவிட்டு நின்று கால்களை மாற்றி மாற்றி ஊன்றி 'அம்மேய்' என்று முனகிக்கொண்டிருந்தாள். மூத்திரம் பசும் மஞ்சள் நிறத்தில் அடர்த்தியான தைலமாகச் சென்றது. சற்று நேரம் கழித்து கெட்டியாக உருண்டைச்சாணி வெளியே வந்தது. காளி கெட்டிச்சாணி போட்டது அதுவே முதல்முறை. இரண்டு உருண்டைச் சாணி போட்டதும் தங்கையன் 'லோடு எறக்கிப்போட்டு..இனி பயமில்லை' என்றான்.

புளித்த பழந்தண்ணீரும் புண்ணாக்கும்போட்டு குடிக்கக் கொடுத்தோம். அப்படியே மூழ்கி அடித்தட்டிலிருந்த புண்ணாக்கு ஊறலை நக்கித் தின்று மூக்கை நிமிர்த்தினாள். மீசைமுடிகளில் இருந்தும் தாடையிலிருந்தும் தண்ணீர் கம்பிகளாகச் சொட்டியது. கண்ணருகே தவிட்டுப்படலத்தின் கோடு வரையப்பட்டிருந்தது.

'அப்பாடா..உள்ளகெடக்கப்பட்ட வைக்கோலு இனி நிண்ணு எரியும்'

'இப்பிடி ஒரு தீற்றி உண்டா' என்றாள் அம்மா. 'இதெல்லாம் காட்டிலே எப்பிடி வயறு அறிஞ்சு தின்னுது?'

'அம்மிணி காட்டில பச்சப்புல்லுல்லா..காஞ்ச வைக்கோலுக்க காரியம் அதுக்கு மலங்காளியம்மை சொல்லிக்குடுக்கல்லலா?''

காளியின் வயிறு மீண்டும் பீப்பாயாக மாறியது. இம்முறை காலை பதமாக எடுத்து வைத்து அவளே தொழுவத்துக்குச் சென்று படுத்துக்கொண்டாள்

'அப்பாடா அரை மணிக்கூர் நேரத்துக்கானாலும் அக்கினி அணைஞ்சுதே'

காளி எங்கள் வீட்டிலேயே இரண்டுகுட்டிகள் போட்டாள். ஒருகுட்டி பிறந்த இரண்டாம் வாரத்திலேயே செத்தது. எருமைக்குட்டிகள் பிழைப்பது கொஞ்சம் கடினம். காளி கொஞ்சநாள் தொழுவத்து பக்கப்பலகையை சொர்ர் சொர்ர் என்று மணிக்கணக்காக நக்கிக்கொண்டிருந்தாள். மடியில் தொட்டதுமே பால் சீறியடிக்க ஆரம்பிக்கும். யாரும் பார்க்காதபோது நான் செம்பைக்கொண்டுவந்து கறந்து அப்படியே தூக்கிக் குடித்துவிடுவேன். சூடான பச்சைப்பாலின் சுவையை எந்தப் பாலிலும் அறிந்ததில்லை. காய்ச்சிய பாலில் உள்ள மாவுருசி அதில் இல்லை. இளநீர் வழுக்கைபோல ஒரு இயல்பான இனிப்பு அதிலிருக்கும்.

காசியில் எங்கும் ஒரே இனிப்புதான் கிடைக்கும். எருமைப்பாலை பெரிய கடாயில் போட்டு கொதிக்கச்செய்து கிண்டிக்கொண்டே இருப்பார்கள். வற்றிவந்ததும் மாவுச்சர்க்கரையைப்போட்டு மேலும் கிண்டி பசையாக்கி கெட்டியாக்கிக் குவித்துவைத்தால் பேடா தயார். கிலோ கணக்கில் நிறுத்து வாங்கி பாலிதீன்தாள்களில் கட்டிக்கொண்டு சென்றார்கள். காசியின் எல்லா சந்துகளிலும் பால்பேடா கடைகள் இருந்தன. கடைகளை நெருங்கும்போதே முறுகிய எருமைப்பாலின் வாசனை வரும். அருகே சென்றால் அந்த வாசனை வாடையாக மாறி குமட்ட ஆரம்பிக்கும்.

பேடா சாப்பிட்டாகவேண்டும் என்று நான் நூறு கிராம் வாங்கினேன். ஒருவாய்கூட சாப்பிடமுடியவில்லை. திகட்டியது. ஆனால் காசியில் ஐம்பதுபைசாவுக்கு பெரிய கலம்நிறையக்கிடைத்த லஸ்ஸி எனக்குப்பிடித்திருந்தது. காசியில் இருந்தநாட்கள் முழுக்க பகலுணவாக லஸ்ஸிதான் சாப்பிட்டேன். பளிங்குக்கீற்றுகள் போன்ற கெட்டித்தயிர். அதில் சீனிபோட்டு அப்படியே கொடுப்பார்கள். மற்ற ஊர்களைப்போல சலவை யந்திரத்தில் கொட்டிக்கடைந்து நுரைக்கவைப்பதில்லை.

காசி எங்கும் எருமைகள் செறிந்திருந்தன. சுரங்கப்பாதைகள் போல சுழன்று மடிந்து திரும்பி சென்றுகொண்டே இருக்கும் சந்துகளுக்குள் பக்கவாட்டில் திறக்கும் வாசல்களுக்கு அப்பாலெல்லாம் எருமைகள் கட்டப்பட்டிருந்தன. சிலசமயம் சந்துகளுக்குள் செல்கையில் மொத்தவழியையும் நிறைத்துக்கொண்டு எருமைகள் வரும். வீடுகளுக்குள் நுழைந்தால் மட்டுமே அவை செல்ல வழிகொடுக்கமுடியும். நம்மருகே வரும்போது அவை கனிவுடன் விலகி முடிந்தவரை உடலை ஒதுக்கி கடந்துசென்றன.

அருகே வரும்போதுதான் எருமை எவ்வளவு பெரிய மிருகம் என்ற அச்சம் ஏற்படும். அது பழகியமிருகமாக இல்லாவிட்டல், ஒரு காட்டில் தன்னந்தனியாக அதை எதிர்கொண்டால் நம் ஈரக்குலை அதிர்ந்துவிடும். பிரம்மாண்டமான தலை. கருங்கல்லால் ஆனதுபோன்ற நெற்றி. பாறைப்பரப்புபோன்ற முதுகு. குளம்புகள் மண்ணில்

ஊன்றப்படுகையில் பூமி அதிர்வதை காலால் உணரமுடியும். எருமையும் யானையும் பன்றியும் ஒரே வகையானவை. ஆனால் எருமையின் கண்களில் மனிதனுடன் உரையாடும் ஓர் ஒளி உண்டு. மற்ற இரண்டின் கண்களும் விலங்குத்தன்மையால் திரையிடப்பட்டவை. அதற்கப்பால் அவற்றின் ஆன்மா வன்மத்துடன் எச்சரிக்கையுடன் ஒளிந்து நம்மைப்பார்த்துக்கொண்டிருக்கும்.

எருமையின் கண்கள் வழியாக அதன் உள்ளே நுழைந்துவிடமுடியும். காற்றோட்டமான பெரிய கோயில் மண்டபம் போல குளிர்ந்து கிடக்கும் அதன் மனம் என்று தோன்றும். எருமைகள் மண்டிய எங்களூரில் எருமை முட்டி எவருமே செத்ததில்லை. வருடத்திற்கு இரண்டுபேராவது பசுமுட்டி செத்துக்கொண்டிருப்பார்கள். காசியில் எருமைகளை எவருக்குமே பயமில்லை. மூன்று வயது குழந்தைகூட கீழே கிடந்த கம்பை எடுத்து அதை அடித்து விலக்கி வழி உண்டுபண்ணி மேலே செல்வதைக் கண்டேன்.

காசி எப்போதும் இரைந்துகொண்டிருந்தது. எந்நேரமும் அதன் தெருக்களிலும் சந்துகளிலும் மனிதர்களும் வண்டிகளும் விரைந்துகொண்டிருந்தனர். எருமைகள் வேறு ஒரு காலத்தில் அங்கே வாழ்ந்தன. மிக மெதுவாக காலெடுத்துவைத்து ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கி அவை நடந்தன. அவற்றின் குட்டிகள் இன்னும் தள்ளி தனியாக தேவையா இல்லையா என்ற ஐயத்துடன் காலெடுத்துவைத்தன. படிக்கட்டுகளில் ஒவ்வொரு காலாக எடுத்துவைத்து இறங்கும்போது எருமைகளின் வயிற்றுக்குள் திரவங்கள் தளும்பும் ஒலி கேட்டது.

சாலையில் ஒரு குதிரையின் அருகே நின்ற எருமையைக் கண்டு வெகுநேரம் நின்றுவிட்டேன். குதிரை நிலையழிந்து முன்னங்காலை தூக்கி நிலத்தை தட்டிக்கொண்டே இருந்தது. பர் என சீறியபடி தரையை முகர்ந்தது. பிடரியைச் சிலுப்பியபடி திரும்பிப் பார்த்தது. உடம்பைச் சிலிர்த்துக்கொண்டது. நின்ற இடத்திலிருந்து அசையாமலேயே நடந்தது. காதுகள் முன்னும் பின்னும் குவியம் மாற்றிக்கொண்டே இருந்தன. எருமை மண்ணில் செய்து நிறுத்தப்பட்ட சிலை போல, கரியசேற்றுக்குன்று போல அசையாமல் நின்றது. கீழ்த்தாடை மட்டும் மெல்ல அசைபோட கண்கள் சொக்கி பாதிமூடியிருந்தன. வால்கூட எப்போதாவதுதான் அசைந்தது.

காசியில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு காலத்தில் வாழ்ந்தார்கள். காலையில் வந்திறங்கி சடங்குகளைச் செய்துவிட்டு விஸ்வநாதரையும் விசாலாட்சியையும் வணங்கி காலபைரவருக்கும் ஒரு கும்பிடுபோட்டுக்கொண்டு அடுத்த பஸ்ஸைப்பிடித்து செல்பவர்கள்தான் அதிகம். ஆம்னிபஸ்களில் வந்திறங்குபவர்கள் அனைத்துக்கும் சேர்த்து இரண்டுமணிநேரம் ஒதுக்கியிருப்பார்கள். காசியின் வணிகர்களுக்கு காலம் இரண்டாக பகுக்கப்பட்டிருந்தது. காசிவாசிகள் சாமான்கள் வாங்கும் பகல் ஒரு காலம். முற்றிலும் பயணிகளுக்கேயான இரவு இன்னொரு காலம். பெரும்பாலான கடைகளில் சகோதரர்கள்தான் வணிகம் நடத்தினார்கள். காலையில் இருப்பவரால் மாலையைச் சமாளிக்கமுடியாது. படித்துறைகளில் சிலும்பிகளில் கஞ்சாவை ஊதிக்கொண்டிருக்கும் சாமிகளுக்கு பகலா இரவா என்றே தெரியாது. அவர்களின் காலம் கங்கை போல முடிவில்லாதது. ஓடுகிறதா தேங்கிவிட்டதா என்றே சொல்லமுடியாதது.

‘இந்தூருலே நம்மாளுக வந்தா வேவாரம்செய்து அஞ்சுவருசத்திலே ஊர்லே மச்சூடு கட்டிருவானுக சார்’ என்றார் சிவகாசியைச் சேர்ந்த சற்குணம் நாடார். ‘இவனுக உறங்கி எந்திரிக்கவே காலம்பற எட்டு எட்டரையாயிரும்..அப்ப நம்மாளு பாதி ஏவாரத்த முடிச்சிருவான்’ அவர் வந்து இருபதாண்டுகளாகிறது. அதிகாலை ஐந்துமணிக்கே டீக்கடை பாய்லருக்கு விபூதிப்பட்டை போட்டுவிடுவார்.

‘குளிர்நாடுங்கிறதனாலயா?’ என்றேன்.

‘குளிரு இருக்கு..ஆனா இவனுங்களுக்கு இதான்சார் கொண்டாட்டம். பான்பராக்க போட்டு மென்னுட்டு அப்டியே கண்ணமூடி உக்காந்திருவான். அந்தால ஒக்காந்திருக்கான் பாருங்க ரிக்சாக்காரன்..சோட்டாராம்னு பேரு..சவாரி வருதாண்ணு கூப்பிட்டுப்பாருங்க. வரமாட்டான். ஏன்னா இப்பதாம் பீடா பதம் கூடியிருக்கு..’ நாடார் சொன்னார் ‘எல்லாம் காலம்பற கொளுத்த எருமப்பால குடிக்கிறான் சார். எருமைப்புத்திதானே வரும்?’

எருமைகள்தான் அவர்கள் என்பதில் நாடாருக்கு ஐயமே இல்லை. இரண்டாண்டுகளுக்கு முன்னால் காசியில் பெருவெள்ளம் வந்தது. நூறடி உயரத்தில் உள்ள சாலையிலேயே வெள்ளம் பெருகி ஓடியது ‘படித்தொறையிலே கஞ்சாபோட்டுட்டு கிடந்த சாமிகளிலே முக்காவாசி அன்னிக்கே ஆத்தோட போச்சு..ஜலமோச்சம். அதுகளுக்கென்ன இருந்தாலும் செத்தாலும் சமம்..’

ஆற்றங்கரை எருமைகளிலும் கணிசமானவை ஆற்றில் போய்விட்டன என்றார் நாடார். ‘ஏன், எருமை நல்லா நீந்துமே?’

’அத ராத்திரி முன்னங்காலை சேத்து கட்டித்தானே விட்டிருப்பானுக?’

காசியளவுக்கே ஹரித்வாரிலும் எருமைகள் உண்டு. கங்கைக்கரையின் மிருகமே எருமைதான். கங்கையை முதலைமேல் அமரச்செய்திருக்கிறார்கள். யமுனை ஆமைமேல் இருக்கிறாள். எருமைமீதுதானே கங்கை அமர்ந்திருக்கவேண்டும். அப்போதுதானே இரு கைகளிலும் உள்ள அமுதகலசத்துக்குப் பொருள் வரும்? அமுதகலசங்களில் இருந்து வெண்ணிறமான பால் பொங்கிவழிவதாகத்தான் வரைந்திருப்பார்கள்.

ஆனால் எருமை மகிஷாசுரமர்த்தனியின் காலடியில் மல்லாந்து கிடந்தது. பெரிய கொம்புகளும் விழித்த கண்களும் சட்டிசட்டியாக பற்களுமாக. தேவி பெரிய சூலாயுதத்தை அதன் வயிற்றில் ஆழ இறக்கியிருந்தாள். தெறித்த கண்களில் கொலைவெறி. திறந்த வாயில் குருதி நிற நாக்கு. ஹரித்வாரின் கங்கைக்கரையிலேயே ஏராளமான மகிஷாசுரமர்த்தனி கோயில்கள் இருந்தன. பெரும்பாலானவை குனிந்து உள்ளே பார்க்கவேண்டிய அளவுக்கு சிறியவை. கல்லில்

புடைப்புச்சிற்பமாகச் செய்யப்பட்டு செந்தூரவிழுது பூசப்பட்டசிலைகள்.

கேசவேட்டன் ஒரு எருமையை வாங்கினார். நல்ல மூத்த சிந்தி எருமை. கொம்புகளில் ஒன்று சற்று ஒடிந்திருந்தது. பொறுமையாக கீழே கிடந்த கோதுமைவைக்கோலை மென்றுகொண்டிருந்தது. விற்கவந்தவனிடம் கேசவேட்டன் அந்த உடைந்த கொம்பையே ஒரு பெரும் குறையாகச் சொல்லிச் சொல்லி விலையைக்குறைத்தார்.

எருமையின் பின்பக்கம் அதன் குறி பெரிய கரிய வாழைக்கூம்பு போலத் தொங்கியது. கேசவேட்டன் 'டேய் அதை அமுக்கிப்பாரு' என்றார்

நான் அமுக்கினேன்

எனக்கு ஒன்றும் தெரியவில்லை

'பதமா இருக்கா? '

'அப்டீன்னா சூடா இருக்கா'

இளஞ்சூடாகத்தான் இருந்தது. எருமை என் தொடுகையில் உடல் அதிர்ந்து காதுகளை பின்னால் சரித்து வயிற்றை எக்கி அசையாமல் நின்றது. நான் கையை எடுத்ததும் வாலைச்சுழற்றி சிறுநீர் கழித்தது

'நாலஞ்சு பெத்த தாய் எருமைதான் வேணும்.பெத்துமுத்தின எருமைக்கு கூம்பு பெரிசா இருக்கும்.தாயளிங்க அப்பிடிக்காட்டுறதுக்காக டியூபு வச்சு அதில தண்ணிய ஏத்தி வச்சிருவானுக' என்றார் கேசவேட்டன்

எருமையை என்ன செய்யப்போகிறார் என்று எனக்கு புரியவில்லை. எருமையைக் கட்டுவதற்கு சண்டிகோயில் படிக்கட்டில் இடமில்லை. எருமையை வளர்க்கவும் அவரால் முடியாது. அவருக்கு இரண்டுகால்களும் இல்லை. ஒருவேளை என்னை எருமைவளர்க்கச் சொல்லப்போகிறாரோ?

ஆனால் எருமை நான்குநாள் அக்தரின் டீக்கடையிலேயே நின்றது. பின்பக்கம் குவியும் தையல் இலைகள் மட்டும்தான் சாப்பாடு. அவற்றில் சப்பாத்தியும் டாலும் இட்லியும் எல்லாம் ஒட்டியிருப்பதனால் எருமை குதூகலமாக வாலைச்சுழற்றி மென்றுகொண்டே இருந்தது. நாணலால் தைக்கப்பட்ட காய்ந்த பூவரச இலைகள்.

ஐந்தாம்நாள் கேசவேட்டன் இளஞ்சிவப்பு நிறத்தில் சட்டைபோட்டு கைகளை கனத்துருண்ட புஜங்களில் சுருட்டிவைத்து காதில் பீடி செருகி கிளம்பினார். 'டேய் வாடா'

எருமையை கங்கையில் நன்றாகக் குளிப்பாட்டி நிறுத்தியிருந்தான் சோட்டு. மழைக்காலப் பாறைபோல ஈரமாக பளபளப்பாக நின்றது. ஒரு லோடு ஏற்றும் டிரக்குக்குச் சொல்லியிருந்தார் கேசவேட்டன். டாட்டா டிரக். மிகப்பழமையானது. அதன் அடிப்பகுதி முழுக்க தூசுபடிந்து களிமண்ணால் செய்யப்பட்ட யந்திரங்கள் கொண்டது என்ற எண்ணத்தை ஏற்படுத்தியது.

டிரக் டிரைவர் இறங்கி ஒரு பலகையைச் சரிவாக வைத்தான். அதில் அரையடிக்கு ஒரு குறுக்குப்பட்டியல் படிபோல ஆணியால் அடிக்கப்பட்டிருந்தது. சோட்டு ஒரு கை புல்லை எடுத்து எருமைமுன் காட்டினான். எருமை அதை நோக்கி நாக்கை நீட்ட அவன் பின்னால் நகர்ந்து வண்டியில் ஏறிக்கொண்டான். எருமைபலகை அருகே சென்று தயங்கி நின்றது.

டிரைவர் அதன் பின்பக்கத்தை கையால் தட்டினான். ஏறாது என்றுதான் நினைத்தேன். ஆனால் ஹரித்வாரின் படிகளில் ஏறிப்பழகிய எருமை சாதாரணமாக படி ஏறி சோட்டுவிடமிருந்து புல்லை ஆவலாக வாங்கிக்கொண்டது. ஒரு வாய்க்குத்தான் இருந்தது புல்.

நானும் கேசவேட்டனும் டிரைவர் அருகே ஏறிக்கொண்டோம். எங்கே செல்கிறோம் என்று கேட்க விரும்பினேன். ஆனால் கேசவேட்டனிடம் அப்படி கேட்பதை அவர் விரும்புவதில்லை. அதை அவரது முடிவை கேள்விக்குரியதாக்குவதென்றே எடுத்துக்கொள்வார். 'தெரிஞ்சாத்தான் வருவியோ? எரப்பாளி' என்றுதான் சொல்வார்.

ரிஷிகேஷ் செல்லும் சாலையில் நெடுந்தூரம் சென்று பக்கவாட்டில் பிரிந்து சென்றோம். அந்தச்சாலையில் பல வண்டிகளில் எருமைகளைக் கொண்டுசென்றார்கள். அவை வண்டிகளின் அசைவுக்கு ஏற்ப அதற்குள் பழகி சகஜமாக நின்று வேடிக்கைபார்த்தன. கீழே பலர் கூட்டம் கூட்டமாக எருமைகளை ஓட்டிச் சென்றுகொண்டிருந்தார்கள்.

கங்கை வரப்போவது தொலைவிலிருந்தே தெரிந்தது. தூரத்தில் தெரிந்த உயரம் குறைந்த மலைகள்தான் இமயத்தின் தொடக்கம் என நான் அறிந்திருக்கவில்லை. கங்கைக்கு அப்பால் மலையடிவாரம் ஆரம்பித்தது. கங்கை ஆழத்தில் வெண்ணிறமான உருளைக்கற்களுக்கு நடுவே மாலைவெளிச்சத்தில் கண்கூசும் ஒளியலைவுடன் ஓடிக்கொண்டிருந்தது. நீர்வெளி முழுக்க ஏராளமானவர்கள் குளித்துக்கொண்டிருந்தார்கள்.

கங்கை ஓரமாக ஒரு சிறிய கோயில். சுதையால் கட்டப்பட்ட ஒற்றை அறை கருவறைக்குமேல் சிற்பங்களோ அலங்காரங்களோ இல்லாத வெறும்கூம்பு. அதன்மீது ஒரு காவிக்கொடி கட்டப்பட்டு சாய்ந்து நின்று காற்றில் படபடத்தது. கோயிலைச்சுற்றி நிறைய மரங்கள். எல்லா மரங்களிலும் எருமைகள் கட்டப்பட்டிருந்தன. ஆங்காங்கே தறி

அறைந்து அவற்றிலும் எருமைகளைக் கட்டியிருந்தனர். எருமைச்சந்தை போலிருந்தது. நீண்ட ஜிப்பாக்களும் பஞ்சக்கச்ச வேட்டிகளும் அணிந்த மனிதர்கள் அவற்றினூடாக நடமாடினர்.

வேறு டிரக்குகளிலிருந்தும் எருமைகளை இறக்கிக் கொண்டிருந்தார்கள். அவை மற்ற எருமைகளைக் கண்டு ஒருகணம் தயங்கியபின் கவனமாகக் காலெடுத்துவைத்து பலகைவழியாக இறங்கி நின்றன. எங்கள் எருமை இறங்கியதுமே இன்னொரு எருமையை நோக்கிச் சென்று அது தின்றுகொண்டிருந்த வைக்கோலைத் தின்ன ஆரம்பித்தது. அந்த எருமை பின்னகர்ந்து இதை உற்றுப்பார்த்தது. எருமைகள் உறுமியின் தோலில் கோல் இழுபடும் ஒலியில் ஒன்றுடன் ஒன்று பேசிக்கொண்டன. தாகமெடுத்த எருமைகள் அப்பால் நகர்பவர்களைக் கண்டு றே என்று கூப்பிட்டன.

அந்திக்குள் அங்கே ஆயிரம் எருமைகள் வரை வந்துசேர்ந்துவிட்டன. கோயிலுக்கு முன்னால் நான்குபேர் பெரிய குடம்போன்ற தோல்வாத்தியத்துடன் வந்து நின்றார்கள். கோலால் அந்தத் தோலை தேய்த்து தேய்த்து அவர்கள் வாசித்தபோது எருமை ஒன்று தேம்பியழுவதுபோலவே கேட்டது. சிறிய பரப்புள்ள தோல்வாத்தியமொன்றில் சுள் சுள் என ஒருவன் அடிக்கும் ஒலியும் அதனுடன் இணைந்துகொண்டது.

கோயிலுக்குள் தீப ஆராதனை காட்டப்பட்டபோது முன்னால் கூட்டம் நெரிபட்டது. கேசவேட்டன் 'ம்ம்ம்' என உறுமியபோது விலகி வழிவிட்டனர். நான் அவர் பின்னால் சென்றேன். கேசவேட்டன் என்னிடம் அவரைப்பிடித்து தூக்கும்படிச் சொன்னார். நான் தூக்கி கருவறையைக் காட்டினேன். உள்ளே இரு பந்தங்கள் நடுவே ஒரு நடுகல் மாதிரி சிவப்பாக ஏதோ தெரிந்தது. கேசவேட்டன் 'அம்மே மகாமாயே ரட்சிக்கணே' என்றார்.

பூசை முடிந்ததும் பிரசாதம் என ஏதும் தரப்படவில்லை. இருவர் இந்தியில் உரக்க ஏதோ கூறினார்கள். எருமையைக் கொண்டுவந்த ஒவ்வொருவருக்கும் ஆளுக்கொரு காகிதடோக்கன் கொடுத்திருந்தார்கள். அது டிரைவரிடம் இருந்தது. எங்கள் எண் நூற்றி எண்பது. கேசவேட்டன் காந்திகுல்லாய் போன்று கெட்டியான நீலத்துணியின் தொப்பி போட்ட கிழவரிடம் சென்று நிதானமாகப் பேசினார். அவர் உடனே வரிசையை மாற்றிவிட்டார்

'டேய் நம் எருமையைக் கொண்டுவா' என்றார் கேசவேட்டன். 'கோயில் எருமைக்குக்குப்பின் நம் எருமைதான்'

கோயில் முன்னால் முதல் எருமை கொண்டுவரப்பட்டது. அது வெளிச்சத்தைக்கண்டு கொஞ்சம் தயங்கியது. மனிதர்கள் இருப்பதை உணர்ந்ததும் நம்பிக்கையுடன் முன்னால் வந்தது. அங்கிருந்த இருவர் அதன் முன்னங்கால்களில் ஒரு கயிறை திறமையாகச் சுற்றி இறுக்கினர். அதை ஒருவர் பிடித்துக்கொள்ள இன்னொருவர் அதன் மூக்குக் கயிற்றைப்பிடித்து முகவாயை மேலே தூக்கினார்.

நான் படபடப்புடன் நின்றேன். ஓடிவிட நினைத்தாலும் என் கண்கள் அந்தக்காட்சியிலேயே நிலைத்திருந்தன. கோயில் பொறுப்பாளரான கிழவரும் ஐம்பது அறுபதுபேரும் சூழ்ந்து நின்றனர். அவர்கள் அனைவரும் அதைத்தான் தெறிக்கும் விழிகளுடன் பார்த்துக்கொண்டிருந்தனர்.

மூன்றாம் மனிதர் கோயிலை வணங்கினார். பூசாரி உள்ளே சிலையின் காலடியில் இருந்து ஒரு சிறிய கூரிய கொக்கிபோன்ற கத்தியை எடுத்து அவர் கையில் கொடுத்தார். அதை அவர் வாங்கி தலைமேல் வைத்து வணங்கி எருமை அருகே வந்தார்.

மூக்கைப்பிடித்திருந்தவர் எருமையின் கழுத்தை வலப்பக்கமாக வளைத்தார். அதன் குரல்குழாயும் பெரிய ஒரு நரம்பும் புடைத்து வளைந்து தெரிந்தன. 'ஜெய் காளீ! ஜெய் அம்பே!' என்ற கூச்சலுடன் அவர் அந்த நரம்பை வெட்டினார். குழாயிலிருந்து தண்ணீர் சீறுவது போல ரத்தம் பீச்சியடித்து அவர் உடலை நனைத்தது. பைஜாமாவும் ஜிப்பாவும் ரத்தத்தில் நனைந்து உடலுடன் ஒட்டின. எருமை அசையாமல், அந்த வெட்டை விரும்பியது போல கண்களை உருட்டியபடி நின்றது.

கூட்டம் 'ஜெய் மா! ஜெய் காளீ' என்று கோஷமிட்டனர். அவர் எருமையின் தொண்டைக்குழாயை வெட்டினார். சட்டென்று எருமை காற்று இழந்த துருத்தி போல வயிறு அடங்கி தொய்ந்து முன்னகர்ந்தது. அவர்கள் பிடிவிட்டதும் அது குப்புற விழுந்து மூக்கை மண்ணில் ஊன்றிச் சரிந்தது. அதன் கால்கள் வலிப்புகொள்ள ஆரம்பித்தன. உடனே அடுத்த எருமை. அதன் பின் இன்னொரு எருமை. முதல் எருமை இன்னும்கூட துடித்துக்கொண்டிருக்க அதன்மேல் அடுத்த எருமைகளை போட்டார்கள்.

நான்காவது எருமை கேசவேட்டனுடையது. எருமையை அவர்கள் வளைத்துப்பிடித்ததும் கேசவேட்டன் என்னிடம் அவரை தூக்கச் சொன்னார். என் கைகால்கள் நடுங்கிக்கொண்டிருப்பதைக் கண்டு அவர்களில் ஒருவரிடம் தூக்கச்சொன்னார். இருவர் அவரைத் தூக்கிக் கொண்டனர். அவர் அந்த வளைகத்தியை வாங்கிக்கொண்டார். தலைமேல் வைத்து கும்பிட்டார். எருமையின் நரம்பை கையால் நீவி இடம் பார்த்தார். பின்பு ஓரிடத்தில் கத்தியை வைத்தார். எருமை உடல் சிலிர்த்தபடி கால்மாற்றிக்கொண்டது. கத்தியை சட்டென்று இழுக்க குருதி வீசியடித்தது. கேசவேட்டன் அந்த ரத்ததை கைகளால் பிடித்து நெற்றியில் போட்டுக்கொண்டார்

ரத்தம் சீறி அந்தப்பகுதியின் மண் சேறாகியது. அங்கிருந்த அனைவரும் அருவிக்கரையில் நிற்பவர்கள்போல நனைந்திருந்தனர். முதல் எருமை அப்போதும் கண்களை உருட்டியபடி துடித்துக்கொண்டிருந்தது. படுத்தபடியே ஓடுவதுபோல கால்களை அசைத்தது.

எருமைகள் சற்று நேரத்தில் ஆளுயரத்துக்குக் குவிந்துவிட்டன. செத்துப்போன எருமைகளை கயிற்றால் கட்டி ஓர் ஆட்டோ ரிக்‌ஷாவால் இழுத்துக்கொண்டுசென்றார்கள். நான் அதன்பின்னால் சென்றேன். அங்கே மூன்றாள் உயரத்தில்

பிரம்மாண்டமான குழி வெட்டப்பட்டிருந்தது. அப்பால் இன்னொரு குழி. வரிசையாக பல குழிகள். எருமைகளை அருகே கொண்டுவந்து கயிற்றை அவிழ்த்துவிட்டு குழிக்குள் தள்ளினார்கள். ஒன்றுமேல் ஒன்றாக பொத் பொத் என விழுந்த எருமைகளில் சில அப்போதும் காதுகளை அசைத்தன. நாக்குகளால் துழாவின. கண்களை உருட்டின. ஆனால் எந்த எருமையும் குரலை எழுப்பவில்லை.

விடியற்காலையில் கங்கையில் குளித்தோம். அதுவரைக்கும் என் மனம் பிரமித்துப்போய் மரத்திருந்தது. குளித்துவிட்டு கரையேறி தலை துவட்டிக்கொண்டிருந்தபோது உடல் நடுங்க ஆரம்பித்தது. நடுக்கத்தை நிறுத்த முயன்றபோது மூச்சும் மனமும் நடுங்கிக்கொண்டிருப்பதை உணரமுடிந்தது. என் விரல்கள் நடுங்கி ஒன்றுடன் ஒன்று பின்னிக்கொண்டன.

புதிய சட்டையும் பைஜாமாவும் இருந்தன. அணிந்துகொண்டு டிரக்கில் ஏறிக்கொண்டோம்.

'மொத்தம் எண்ணூற்றி நாற்பத்தி நான்கு' என்றான் டிரைவர். 'போனமுறை ஆயிரத்தை தாண்டியது'

ஆறுவருடங்களுக்கு ஒருமுறைதான் அங்கே எருமைப்பலி. போனதடவையும் கேசவண்ணா ஓர் எருமையை பலிகொடுத்தார். அது இவ்வளவு பெரியதல்ல, இது நல்ல பெரிய எருமை. 'காலா- காலா மகிஷ்' என்றான்.

நான் திடுக்கிட்டு 'காலமா?' என்றேன். 'கண்டா?'

'காலா என்றால் கறுப்பு' கேசவேட்டன் மலையாளத்தில் சொன்னார். 'அதனாலேதான் காலன் என்கிறார்கள். மகிஷம் காலனின் வாகனம் இல்லையா?'

இல்லை காலமேதானா? காலம் கருமையானதா? மென்மையான நிதானமான அழகான காலம். பிரியமான காலம்.

'காலம் மரணம் இரண்டும் ஒன்றுதான்' என்று கேசவேட்டன் நான் நினைத்ததைச் சொல்வதுபோலச் சொல்லிக்கொண்டார்.

நான் கண்களை மூடிக்கொண்டேன். டிரைவர் நான் பயந்துவிட்டேன் என்று இந்தியில் சொல்லிச் சிரித்தான்.

'நீ என்னடா சொங்கி மாதிரி இருக்கிறாய்? நீ நாயர்தானே?'

நான் உலர்ந்து தவித்த நாக்கை வாய்க்குள் துழாவிக்கொண்டேன்.

'நான் கழுத்தை அறுத்ததைக் கண்டு பயந்துவிட்டாயா?'

'ம்'

'ஏழு வயசில் இங்கே வந்து விழுந்தபோது என்னை கூப்பிட்டு கூடவே வைத்துக்கொண்டவர் பண்டிபாபா. கருப்பாக ஆறடி உயரமிருப்பார். பீகார்காரர். அவருடன் இருந்ததனால்தான் பட்டினிகிடந்தோ அடிபட்டோ சாகாமல் வாழ்ந்தேன். அவருக்கு நான் மனைவி மாதிரி-இரவில் குடித்துவிட்டு வந்தாரென்றால் கழுவில் ஏற்றுவார். சின்னக்குழந்தை நான்-அலறி அலறி கொஞ்சம் கொஞ்சமாக சரியானேன். ஆனால் பதினைந்து வயதில் முடிவுசெய்தேன். என்னைக்கண்டு மற்றவர்கள் பயப்படாவிட்டால் வாழமுடியாது என்று'

கேசவேட்டனின் முகத்தை இருளில் பார்க்கமுடியவில்லை.

'காய்ச்சல் வந்து பாபா படுத்திருந்தார். அவரது கைகளை துணியால் சேர்த்து கட்டினேன். மார்பின் மீது ஏறி அமர்ந்து அலுமினியத்தட்டை வளைத்து ஒடித்து கூரிய முனையால் கழுத்தை அறுத்தேன். நினைத்ததுபோல அலறவில்லை. பேட்டா பேட்டா என்று கெஞ்சினார். அறுத்துக்கொண்டே இருந்தேன். மொத்தப் படிக்கட்டும் வேடிக்கைபார்த்துக்கொண்டு அசையாமல் இருந்தார்கள். பாதி அறுத்ததும் தட்டு நுனி வளைந்துவிட்டது. அப்பால் சென்று ஒரு புட்டியை உடைத்து கொண்டு வந்து அதைக்கொண்டு மேலும் அறுத்தேன். தயவுசெய், கருணைகாட்டு, விட்டுவிடு என்று கெஞ்சிக்கொண்டே இருந்தார். குரல்வளையை அறுத்து முடித்ததும் மொத்த மூச்சும் வெளியே போய்விட்டது. அரைமணிநேரம் வரை துடித்தார். ரத்தத்தில் அப்படியே நனைந்துவிட்டேன்' கேசவேட்டன் மலையாளத்தில் சொன்னார்.

அவர் முகத்தில் ஒரு எதிர்வண்டிவெளிச்சம் தாண்டிச்செல்வதை பார்த்துக்கொண்டிருந்தேன். குளிர்ந்த காற்று முகத்தை அறைந்துகொண்டே இருந்தது.

'அதோடு நான் வேறு ஆள் ஆனேன். அந்த சின்னப்பையன் அப்படியே மறைந்துவிட்டான். எவனும் என்னைப்பார்த்தால் பயப்படுவான்' கேசவேட்டன் சொன்னார்.

'சாப், ஒரு டீ குடிக்கலாமா?' என்றான் டிரைவர். ஹரித்வார் வந்து விட்டிருந்தோம். ஒருவன் குண்டு பல்ப் எரியும் டீக்கடையை திறந்து வைத்திருந்தான். ஒளிரும் ரத்தம்போல எரிந்த கரியடுப்பில் கெட்டில் அமர்ந்திருந்தது. வண்டி அணைந்தது. கீழே இறங்கியபோது கால் துணிமாதிரி தொய்வதை உணர்ந்தேன்.

டீ குடிக்கும்போது கற்கள் சரிவில் உருள்வதுபோன்ற ஓசையுடன் எருமைக்கூட்டம் ஒன்று கங்கைக்குச்

சென்றுகொண்டிருந்ததைக் கண்டேன். இருட்டில் அவற்றின் கண்கள் மின்னிக்கொண்டிருந்தன.

---

## புறப்பாடு II – 10, உப்பு நீரின் வடிவிலே

ஐம்முதாவி எக்ஸ்பிரஸ் சக்கரங்கள் கொண்ட கரிசல்காட்டுக்கிராமம். சென்னைக்கு வராமலேயே மதுரைக்குச் செல்லக்கூடியது. ஏழெட்டு பெட்டிகள் முழுக்கமுழுக்க தென்தமிழகத்தவர்கள். நான் அந்தப்பெட்டியைநோக்கி ஓடியதும் ஒருவன் என் சட்டையைப்பிடித்து 'கியா?' என்றான்.

'ரயிலு..' என்றேன்

'தமிழாளா?'

'ஆமா..'

'அண்ணாச்சி, அவன் மலையாளத்தான் .பொய் சொல்லுறான்.மூஞ்சியப்பாருங்க'

'டேய் இதில தமிழாளுங்களத்தான் ஏத்துறது..வேற பெட்டிக்குப்போ..பின்னாலபோ'

'அண்ணாச்சி, நான் நாகர்கோயிலாக்கும்' என்றேன்.

'அண்ணாச்சி அவன் பேச்சப்பாருங்க'

'இல்ல ,நான்..'

'வக்காளி, சொல்லிட்டே இருக்கேன்..' என அந்த இளைஞன் கையைச்சுருட்டிக்கொண்டு அடிக்கவந்தான்.

'கைய நீட்டாத..அதுவேற வம்பாயிரும்..டேய் போ'

நான் பின்னால் நகர்ந்தேன். ஆனால் அந்தப்பெட்டிக்குள்தான் கொஞ்சமாவது இடமிருந்தது. மேலும் அத்தனை கெடுபிடி இருக்கும் பெட்டிக்குள் மேலும் அதிகம்பேர் ஏறிக்கொள்ளவும் வாய்ப்பில்லை. திரும்பியவன் அவர்கள் இன்னொருவரைத் தடுத்த கணத்தில் பாய்ந்து ரயிலுக்குள் ஏறிக்கொண்டேன்.

'லே , அந்தா போறாம்லே..பிடிலே பிடிலே அவன'

நான் உள்ளே சென்று இருக்கையின் விளிம்பில் அமர்ந்து கம்பியை பிடித்துக்கொண்டேன். உள்ளே வந்த இளைஞன் என் கையைப்பிடித்து 'எந்திலே..லே எந்தி..சொல்லுதேம்லா? வெட்டிப்பொலிபோட்டிருவேன்' என்றான்.

நான் கெட்டியாகப் பிடித்துக்கொண்டேன். அவன் என்னை இழுத்தபின் சரமாரியாக என் தோளிலும் தலையிலும் அடித்தான். 'தாயளி..எந்திலே..லே எந்திலே'

'லே, என்ன கைய நீட்டுதே? ' என்றார் ஒரு கிழவர்.

'சொன்னாக்கேக்காம ஏறிட்டான்..அண்ணாச்சி அங்க நிண்ணு துள்ளுதாரு'

'எந்தூருவே?'

'நாகர்கோயில்..நான் தமிழாளாக்கும்'

'தமிழாளு இல்லேண்ணு பாத்தாத் தெரியுது..அத விடும்..லே நீ போ'

'இவன்..'

'இருக்கட்டும்லே..ஏறிட்டான்லா? இருந்துட்டு போறான்'

'அண்ணாச்சி.. '

'சம்முவம் கிட்ட நான் சொன்னதாச் சொல்லு..போ..ஏலே போலே'

அவன் என்னை முறைத்துப் பார்த்தபடி சென்றான். மறுபடி என்னை எங்காவது தனியாகச் சந்தித்தால் அடிப்பான் என்று பட்டது.

'தமிளு நல்லா பேசுறிய' என்றார் கிழவர் 'நாகருகோயிலிலே எங்க?'

*‘கொலசேகரம் பக்கம்’*

*‘அது மலையாளமில்லா-சரிதான்-நாங்க மத்த ஆளுகள உள்ள விடுகதில்ல பாத்துக்கிடுங்க-’ கிழவர் சொன்னார் ‘அந்த பெட்டிய உள்ள நவுத்திவை குட்டி-நிண்ணு டேன்ஸுல்லா ஆடுதா?’*

*‘ரயிலு எல்லாருக்கும் பொதுவுல்லா?’*

*‘ஆமா- அதை அந்தால ஆந்திராக்காரன் பொட்டியிலே போயி சொல்லமுடியுமா?’ என்றார் இன்னொருவர். நீளமான பற்களும் முன்வழுக்கையும் கொண்ட கரிய மனிதர் ‘அந்தக்காலத்திலே நாங்கள்லாம் தனியா வருவோம். புள்ளகுட்டியோட பொட்டிபொட்டியா அலைவோம்-போரா குக்கான்னு காறித்துப்புவான். எசமான் புள்ள இருக்குதுங்க எசமான்னு கையெடுத்து கும்பிட்டு கெஞ்சுவோம். கம்பியில புடிச்சா கையிலே காலால உதைப்பான். என் வீட்டுக்காரி கைப்புள்ளையோட பிளாட்பாரத்திலே மல்லாந்து விளுந்தா-’*

*‘வண்டி எடுக்கிறதுக்குள்ள ஏறுறதுக்காக ஓடுவோம்-’ என்றார் கிழவர்.‘தவறி விளுந்து பலபேரு செத்திருக்கானுக’*

*‘கேரளா வளியா வாற வண்டியிலே ஏறவே விடமாட்டானுக-பாண்டி பாண்டீன்னு சொல்லி ஓதைச்சு தள்ளுவானுக. டிக்கெட் இருந்தாக்கூட செக்கரு எறக்கி விட்டு அடுத்த வண்டியிலே வான்னு சொல்லுவான்’*

*‘இந்தமட்டுக்கும் இருந்து சாய்ஞ்சு ஊருபோயி சேருறதுன்னா அது இப்பிடி கெடுபிடியா இருக்கதனாலத்தான் பாத்துக்கிடும்’ என்றார் கிழவர் என்னிடம்.*

*‘ரிசர்வ் பண்ணி போகக்கூடாதா?’*

*‘அந்தமட்டுக்கும் கையில பைசா இருந்தா பின்ன நாங்க எதுக்கு இப்டி இருக்கம்? தம்பி, நாங்கள்லாம் சீட்டு இல்லாம ரயிலேறிப்போனவங்க-இப்ப இந்தமட்டுக்கும் சீட்டுன்னு ஒண்ணு கையில வச்சிருக்கம்’*

*‘அண்ணாச்சி அந்தால எடமிருக்குல்லா?’என்றபடி ஒரு குள்ளமான மனிதர் வந்தார். எல்லாருமே கறுப்பு, ஒல்லி, நீண்ட பற்கள் கொண்டமனிதர்களாக இருந்தார்கள். பெண்களும் அதேபோலத்தான்.*

*‘தம்பி வாங்க-மருதையா?’*

*‘நமுக்கு ஒடங்குடீண்ணே-இங்கிண முறுக்குசுட்டு விக்கிறோம்-செத்த தள்ளினேள்னாக்க காலுக்கும் அமைய எடம் கெடைக்கும்-குண்டிக்கு எடம்குடுத்துட்டு கால அந்தால விட்டுரப்பிடாதுல்லா? ரெண்டும் சேந்துபொறந்ததாக்கும் பாத்துக்கிடுங்க’*

*முன்பதிவுசெய்யப்படாத பெட்டிகளே பத்து இருக்கும். வண்டி கிளம்ப நிறையநேரமிருந்தது. டெல்லிநிலையத்திலேயே வண்டியை ஐந்துமணிநேரம் நிறுத்திவைப்பார்கள். சிறிது நேரத்திலேயே பெட்டி நிறைந்துவிட்டது. உள்ளே இருந்தவர்கள் கதவை உள்ளே சாத்தி தாழிட்டுவிட்டார்கள். அதன்பின் கதவுகள் நான்கும் பத்துபேர் கொண்ட நிர்வாகக்குழுவின் கட்டுப்பாட்டில் வந்தது.*

*‘வாசல்ல கெடுபிடி பண்ணுறாங்கண்ணாச்சீ-உள்ள இம்பிடு எடமிருக்கே’ என்றபடி ஒரு குடும்பம் கடைசியாக ஏறியதும் கதவு மூடப்பட்டது*

*‘அந்தால விட்டா ஆட்டுமந்தைய கொண்டாந்து ஏத்திப்பிடுவானுக பாத்துக்கிடுங்க. பொறமே பெட்டி பள்ளிக்கூடம்மாதிரி ஆயிரும்’’*

*வண்டிக்குள் விளக்குகள் இல்லை. சன்னல்கள் திறந்திருந்தாலும் நல்ல புழுக்கம். அரை இருட்டில் வியர்த்த கரிய முகங்களின் பற்கள் பல இடங்களில் தெரிந்துகொண்டிருந்தன. ‘எப்பம் எடுப்பான்?’*

*‘அவன் வண்டிக்குள்ள எண்ணையும் தண்ணியுமெல்லாம் ஏத்தணும்லா? பன்னிரண்டரைக்கு எடுப்பான். அந்தால நேரா ஆக்ராதான். காலம்பற போபால தாண்டீருவான். மத்தாநாள் காலம்ப்ர ரேணிகுண்டா- அண்ணைக்கு சாயங்காலம் மருதை-ஒரு ரெண்டுமணிநேரம் லேட்டுல்லாம போவமாட்டான் பாத்துக்கிடுங்க-’*

*மேல்வரிசைப்பற்கள் நீட்டிக்கொண்டிருந்த கரியமெலிய மனிதர் இருக்கைகளில் தொற்றி ஏறி மேலே இருந்த பொருள்வைக்கும் பகுதியின் கம்பிகளில் இரண்டு சிறிய ஒலிப்பெருக்கிகளை வைத்துக் கட்டினார்.அவரது முன்னந்தலை சிலும்பி நின்றது. முகம் முழுக்க அம்மைத்தழும்பு. கால்கள் சுள்ளிமாதிரி ஒல்லியாக இருந்தன. இன்னொரு குள்ளமான கரிய மனிதர் கீழே நின்று அவருக்கு உதவினார்.*

*மிட்டாய்ச்சிவப்பு பாலிஸ்டர் புடவை கட்டியிருந்த கரிய இளம்பெண் ‘என்ன மாமா, இம்புடுநேரமா? மாமாக்கு கனேசன் குடுக்கதிலே தெறம பாத்தாது போலுக்கே’ என்றாள்.*

*‘கனேசனுக்கு பின்னு இருக்கு. பிளக்குக் குளி வேணும்லா? தேடீட்டிருக்கான்’ என்றார் குள்ளமனிதர்.*

*‘இன்னும் தேடுறீகளாக்கும்?’*

‘தேடணுமே.உனக்கு தெரிஞ்சு நல்ல பிளக்கு குளி இருக்காட்டீ?’’

‘இருக்கு.ஆனால் அதில இப்பம் கறண்டு இல்ல’

‘கனேசன் குடுத்திருவோம்.கறண்டு வாறப்ப வரட்டு’

அவள் உடம்பில் மெல்லிய புழுதிப்பூச்சு கரிய சருமத்தில் பரவியிருந்தது. அது ஏன் என எனக்கு நன்றாகவே தெரியும், அவள் சிமிண்ட் வேலைசெய்யக்கூடியவள். கரிய ஈறுகளில் இருந்த பெரிய மாட்டுப்பற்கள். கைகளால் வாயை மூடிக்கொண்டு சிரித்தாள்.

அவர் ஒயரை இழுத்து டேப்ரிக்கார்டருடன் இணைத்தார். பெட்டியின் எல்லா பகுதியிலும் ஒரு ஒலிப்பெருக்கி வீதம் கட்டி ரயிலின் மின்விசிறியின் அருகே ஒரு தகரப்பகுதியைத் திறந்து அங்கே ஏதோ செய்து மின்சார இணைப்பு எடுத்துக்கொண்டார்.

‘பானாசோனிக்கா சார்?’

‘ஆமா.’ என்றார் அவர் பேசும் வழக்கமே இல்லாதவர் என்று நினைத்துக்கொண்டேன்.

‘ஸ்டீரியோவாக்கும்.பிரியா படப்பாட்ட போட்டுக்கேக்கணும்.டிங்கு டிங்குண்ணு பொறந்தலையில கேக்குமே’ வழுக்கைத்தலை ஆள் பக்கத்தில் இருந்த ஆளிடம் சொன்னார்.

அவர் ஒரு மஞ்சள்பையில் இருந்து போர்வைகளை எடுத்துக்கொண்டிருந்தார். அவர் பாட்டு எதையும் கேட்பவர் போலத்தெரியவில்லை. மொத்த வாழ்நாளையும் பொறுப்பாக இருப்பதற்காக மட்டுமே செலவழிப்பவர் என்று நினைத்துக்கொண்டேன். அருகே அவரது மனைவி. அவள் பயணத்தை ஒரு வாழ்க்கைச்சிக்கல் என்ற கோணத்தில் அணுகக்கூடியவள். எவர்சில்வர் வாளியை இருக்கைக்கு அடியில் பத்திரமாக வைப்பதில் மூழ்கியிருந்தாள். அதில் இரண்டுநாளைக்குண்டான புளிசாதமோ எலுமிச்சை சாதமோ இருக்கும் என்று தோன்றியது.

‘தம்பி யாரு?’

‘நாகருகோயிலுக்கு போறாராம்’

‘நம்மாளு மாதிரி இல்லியேண்ணு கேட்டேன்’

‘மலையாளத்தான்.’

‘வேற பொட்டி ஓடுதுல்லா?’

நான் அவரது சிறிய கண்களைப்பார்த்தேன். அதில் தெரிந்த விரோதத்தைக் கண்டு கண்களை விலக்கிக் கொண்டேன். அத்தனை கண்களும் என்னையே பார்ப்பதுபோல உணர்ந்தேன். இறங்கி வேறு பெட்டிக்குச் சென்றாலென்ன என்று தோன்றியது. ஆனால் மலையாளிகளுக்கென ஒரு பெட்டி இருக்க வாய்ப்பில்லை. இருந்தாலும் அதில் என்னை தமிழன் என்று சொல்லி ஏறவிடாமல் தடுத்தாலும் தடுப்பார்கள்.

அங்கே இருப்பதன் அசௌகரியத்தை வெல்ல நான் வெளியே பார்க்க ஆரம்பித்தேன். பிளாட்பாரத்தில் ஆட்கள் பிள்ளைக்குட்டிகளுடன் ஓடிக்கொண்டிருந்தனர். பெரிய இரும்புவண்டிகளில் பொதிகளை இழுத்துச்சென்றார்கள். எங்கோ ஒரு ரயில் கிளம்பிச்சென்றது. எங்கோ ஒரு குரல் ஏதோ சொன்னது.

ரயில் கிளம்பியதும் மின்விசிறிகளும் விளக்குகளும் உயிர்கொண்டன. உடனே ஒல்லி ஆள் பாட்டுபோட ஆரம்பித்தார். முதல்பாட்டு ‘குறைதீர்க்கும் விநாயகனே’ அடுத்தபாட்டு ‘நான் செத்துப்பிழைச்சவண்டா!’ பயங்கரக் கைதட்டல், விசில் ஒலி. ஒரு ஒல்லி மனிதர் எழுந்து கைகளை விரித்து லேசாக ஆட மற்றவர்கள் கைதட்டிச்சிரித்தார்கள். அடுத்தபாடல் ‘ஒன்றும் அறியாத பெண்ணோ’ வந்தபோது அனைவரும் அமர்ந்து அதன் ஓங்கிய இசைக்கு தங்களை ஒப்புக்கொடுத்தார்கள். அழுத்தமான குரலில் டிஎம்எஸ் ‘கள்ளும் வெண்மை பாலும் வெண்மை பருகிப்பார்த்தால் தெரியும் உண்மை’ என்றார்

எனக்கு எப்போதுமே பிடித்த ‘நீல நயனங்களில்.’ அவ்வளவு நீளமான நீலம். பாடல்களைப்போட்ட ஒல்லிமனிதர் இருக்கையில் கால்மேல் கால் போட்டுக்கொண்டு கண்களை மூடி சுட்டுவிரலால் காற்றில் தாளம்போட்டு தன்னை மறந்து இருந்தார். அவரது தேர்வில் ஒரு நயம் இருந்தது. பாட்டுகளை சகட்டுமேனிக்குக் கேட்பவரல்ல. எப்போதாவது தற்செயலாக மட்டும் பாட்டு கேட்பவர்கள்தான் சலித்துப்போன பாட்டுக்களை வைத்திருப்பார்கள். ’காதுகொடுத்துக் கேட்டேன் ‘ ‘டிக் டிக் டிக்’ போன்ற பாட்டுகள். அந்தவகை ஒன்றுகூட அவரிடமில்லை

வந்துகொண்டே இருந்தவை கேட்டுகேட்டு சலிக்காத பாட்டுக்கள் . காலத்தை வென்றவை. அவை அனேகமாக இன்னிசைமெட்டுக்கள். ‘பாடும்போதுநான் தென்றல்காற்று’ ‘ஆண்டவன் உலகத்தின் முதலாளி’ ‘விழியே கதை எழுது’ ‘பூமழைதூவி வசந்தங்கள் வாழ்த்த ‘. எல்லாவற்றுடனும் எம்ஜியாரின் முகம் இருந்தது. அங்கே கசக்கி கிழித்து சுருட்டி வீசப்பட்ட எளியமனிதர்களுடன் அவரும் இருப்பதுபோலத் தோன்றியது. அங்கிருந்த ஒவ்வொருவரும் அப்போது அவரை

அங்கே உணர்வதுபோல.

எப்போதுமே எம்ஜியார் எனக்குப்பிடித்தவரல்ல. அவரது படங்களின் செயற்கையான கதை, அவரது கோமாளிபோன்ற முகம் எதிலும் என் மனம் ஒட்டியதில்லை. நான் சத்யனுக்கும் நசீருக்கும் ரசிகன் 'தலைதிரிஞ்சு போச்சு.நல்ல நாயருக்க படம் பிடிக்காது. நாடாரும் மிலேச்சனும் நடிச்சா பிடிக்கும்..என்னத்தச்சொல்ல' என்று அப்பு அண்ணா வருத்தப்படுவார். ஆனால் இப்போது எம்ஜிஆரின் முகம் மனதுக்கு மிக நெருக்கமானவராக இருந்தது.

எம்ஜிஆர் சிரித்துக்கொண்டு மட்டுமே நினைவில் எழுந்தார். சரிதான் என்று கண்ணடித்தார். துள்ளி ஓடினார். கைவீசிச்சுழன்றாடினார். துன்பமே அற்றவராக இருந்தார். அவர் பாடல்களில் எப்போதுமே ஓர் உற்சாகம் இருந்தது. காதல்பாடல்களின் இன்னிசையில்கூட பிரியத்துடன் துக்கம் கலந்திருப்பதில்லை. இந்தவாழ்க்கை, இதன் சேறும் அழுக்கும் குப்பையும் கூளமுமாகக்கூட, மகத்தானதுதான் என்று அவை சொல்கின்றனவா என்ன?

இதோ இந்தக் கரிய மெலிந்த மனிதர்களின் கண்கள் மின்னிக்கொண்டிருக்கின்றன. சிலர் சன்னல்வழியாக பார்த்துக்கொண்டிருக்க அவர்கள்மேல் ஒளியும் நிழலுமாக படபடத்தோடுகின்றது பாடல். சிலர் கண்மூடி தங்களுக்குள் அலைகிறார்கள். சிலர் தாளம்போட்டு பின் அதை விட்டுவிட்டு வேறெங்கோ சென்றுவிடுகிறார்கள். 'சந்த்ரோதயம் ஒரு பெண்ணானதோ'

'அண்ணாச்சி சிவாஜி பாட்டு போடுங்க, புண்ணியமாப்போவும்'

'இருக்கு தம்பி..அண்ணாச்சி போடுவாரு..அம்பிடு கேசட்டு வச்சிருக்காருல்லா? .தம்பி ஆசாரிமாரா பிள்ளமாரா?'

'அண்ணாச்சி, நாம தட்டாம்புள்ளைல்லா'

'சிவாசி பாட்டு கேக்குறப்பமே தெரிஞ்சுது..இருங்க, வருது'

நாலைந்துபேர் சிரித்தார்கள்

'அண்ணாச்சி, நாங்க நாடாக்கமாராக்கும்..நாங்களும் சிவாசிப்பாட்டு கேப்பம்ல' என்றான் மறுபக்கமிருந்து எட்டிப்பார்த்த ஓர் இளைஞன்

'என்னத்தலே நீங்க கேட்டிய? லே ஒரு சிவாசிப்பாட்டு சொல்லு பாப்பம்'

'சோதனைமேல் சோதனை!'

'பாத்தியா? வே, கண்டீராவே உம்மாளு என்ன பாட்டு கேக்கான்னுட்டு'

'அவன் இந்தமட்டுக்கும் என்னடி ராக்கம்மாவ சொல்லாம விட்டான்ல' என்றார் வழுக்கையர். அனைவரும் சிரித்தார்கள்.

'அண்ணாச்சி, நான் நல்லவர்க்கெல்லாம் பாட்டாக்கும் மொதல்ல நெனைச்சேன்..அது இளையராசாபாட்டுல்லான்னு நிப்பாட்டிட்டேன் பாத்துக்கிடுங்க'

'வெளங்கீரும்..'

'வே பாட்டைப்போடும்வே..சும்மா பயக்ககூட சலம்பீட்டு'

முதல் பாடலே 'செந்தமிழ் பாடும் சந்தனக்காற்று' தொடர்ந்து 'சிந்துநதிக்கரையோரம்' 'காதல்ராஜ்ஜியம் எனது' 'மலரே குறிஞ்சி மலரே'. எம்.எஸ்.விஸ்வநாதனின் பாடல்கள் எல்லாவற்றிலும் பலவரிகளின் முந்தானை நுனிகள் காற்றில் பறக்கின்றன. 'பிறந்தபயனை நீஈஈஈ அடைந்தாய்ய்ய்..' பல வரிகளும் ஒருமுறை வெளிநோக்கி ஒலித்து உடனே தன்னை நோக்கியே திரும்பப் பாடிக்கொள்கின்றன. 'தேரினில் வந்தது கண்ணே, கண்ண்ணே தேரினில் வந்தது கண்ணே' அந்த இரண்டாவது முறை குரல் சற்று கொஞ்சுகிறது. அல்லது கெஞ்சுகிறது.

வெற்ம் மனப்படங்கள். இசை எழுப்பும் எண்ணங்களுக்கு எந்த ஒழுங்கும் இல்லை. அந்த இசையின் தர்க்கத்தில்கூட அவை இல்லைஆனால் அவையும் சேர்ந்ததே இசை. அவை இல்லாமல் கேட்டால் இசை என்னவாக இருக்கும்? வெறும் கணக்குவழக்குகளாக இருக்குமோ?

நான் தமிழகத்தைவிட்டு வந்து ஆறுமாதங்கள் ஆகிவிட்டிருந்தன. அந்தப்பாடல்கள் வழியாக எங்களூரில் வாழ ஆரம்பித்தேன். கணம் கணமாக. ஒளிபரவிய ஆற்றுநீர்ப்பரப்பு. காற்றுகடந்த்சுஎல்லும் தென்னைமரக்கூட்டங்கள். பசுமையலைமேல் கொக்குகள் சிறகடிக்கும் வயல்கள். செந்நிற ஓட்டுக்கூரைகள் மீது வெயிலின் வெறிப்பு. குளிர்ந்த இருட்டுக்குள் கொடித்துணிகள் காற்றில் நெளிகின்றன. எருமைகள் கண்மூடி அசைபோடுகின்றன. வாழையிலைக்கிழிசல்களின் கொடித்தோரணங்கள் படபடக்கின்றன. ஒருமண்ணில் ஒருவன் எத்தனை துளிகளில் ஒரேசமயம் வாழ்ந்துகொண்டிருக்கிறான். அவனே அறிவதில்லை

ஒவ்வொரு பாடலுடனும் முகங்களும் இடங்களும் ஒலிகளும் மணங்களும் கலந்திருந்தன.காதல்ராஜ்ஜியம் எனது நானும் ராதாகிருஷ்ணனும் சேர்ந்துபார்த்த மன்னவன் வந்தானடி படத்தின் பாடல். மஞ்சுளா ஒரு குதிரையில் செல்ல சிவாஜி

சேணத்தைப்பிடித்துக்கொண்டு நடப்பார். 'சிவாஜி தலையிலே வவ்வாலு இருக்குடேய்' என்று ராதாகிருஷ்ணன் அவரது வினோதமான பொய்முடியைப்பார்த்து கூவினான். சிவாஜிரசிகளாலான அரங்கே சிரித்தது.

வெளியே வரண்ட காலியான இந்திய மையநிலம் மௌனமாக திரும்பிக்கொண்டிருந்ததுஅன்னிய நிலம். அதை எனக்குள் ஆழ்ந்த துயரம் நிறைந்த கனவாக ஆக்கிக்கொண்டிருந்தவை அந்தப்பாடல்கள்தான். 'மதன மாளிகை, மந்திரமாலைகளாம்' பாடல்களில் கொஞ்சம் துக்கம் கலக்காமலிருந்தால் அவை இனிமையாவதில்லை. துக்கமே இல்லாதபாடல்கள்கூட காலப்போக்கில் அவற்றின்மீது துக்கத்தை திரட்டிவைத்துக்கொள்கின்றன. சிவந்தமண்ணின் 'ஒருராஜா ராணியிடம்' . தொடக்கத்தில் வரும் அந்த 'லாலலா லாலலா லா!' ஒரு திடுக்கிடலை உள்ளுக்குள் ஏற்படுத்தியது. எங்கிருக்கிறேன்!

திடீரென்று ஆச்சரியத்துடன் நினைத்துக்கொண்டேன். அம்மா அப்பாவின் பிரியத்தை, நண்பர்களின் உற்சாகத்தை எல்லாம் உதறிவிடமுடிந்தது. நினைவுகளைக்கூட மனதுக்குள் ஒடுக்கிக்கொள்ளமுடிந்தது. ஆனால் இந்தப்பாடல்கள் அவையனைத்தையும் ஒரேகணத்தில் பேருருவம் கொண்டு எழச்செய்துவிட்டன. தமிழ்மண்ணுடனும் வாழ்க்கையுடனும் என்னை வாழ்நாள் முழுக்க பிணைத்துநிறுத்துபவை இந்தப்பாடல்கள்தான். இந்தப்பாடல்களின் சாலைவழியாகச் சென்று நான் அனைத்தையும் தீண்டிவிடமுடியும்.

சாமியார்கள் இந்தப்பாடல்களின் இனியவதையிலிருந்து எப்படித் தப்பிக்கிறார்கள் என்று நினைத்துக்கொண்டேன். அவர்கள் இவற்றை எந்த ஆழத்தில் புதைப்பார்கள்? இவை விதைகள். பாறைகளைப்பிளந்து வெளிவரும் தளிர்கள். 'திருமாலின் திருமார்பில் ஸ்ரீதேவி முகமே' என்ன ஒரு குழைவு. ரயிலில் இருந்தே வெளியே பறந்து பல கிலோமீட்டர்தூரத்துக்கு குரலின் நுனி நெளிந்துகொண்டிருப்பதுபோல. 'தீபங்கள் ஆராதனை..'

ஊரெங்கும் பூவாசனை வீசவேண்டுமென்றால் ஓணம் வரவேண்டும். அத்தப்பூக்களம். பூக்கொய்ய கூட்டம் கூட்டமாக காலையிலேயே செல்வோம். காட்டுப்பூக்களும் பூக்களே என உணரும் நாட்கள். எல்லா பூக்களுக்கும் ஏதோ ஒரு வாசனை உண்டு என்றறியும் நாட்கள். 'மாலை ராகத்தின் ஆனந்த மயக்கமே மங்கலத் தேன் சிந்தவா!'

'அண்ணாச்சி, பிபிஎஸ் பாட்டு இல்லீங்களா?' என்று ஒரு பெண் வந்து கம்பியைப்பிடித்துக்கொண்டு நின்றபடிக் கேட்டாள். முப்பதுவயதிருக்கும். நல்ல கட்டுமஸ்தான கரிய பெண். நெற்றியில் முடியை காக்கைச்சிறகுபோல வெட்டி விட்டிருந்தாள். காதில் பெரிய வளையங்கள். தலையில் பின்னலைச் சுற்றியதுபோல மல்லிகைப்பூ.

'அவரு எந்தப்படத்தில நடிச்சாருட்டீ? ' என்றார் நரைமீசை. கண்களில் இருந்த சிரிப்பு அவர் நக்கலடிக்கிறார் என்பதைக் காட்டியது

'அவரு எல்லா பாட்டிலயும் நல்லா நடிக்காருல்லா ?' என்றாள்.

'செரிதான்..நாக்குள்ள குட்டி' என்றார் ஒரு கிழவர் சிரித்தபடி

'தனியா நாலு கேசட்டு இருக்கு..போடுதேன். ஆனா எல்லாருக்கும் புடிக்கணுமே'

'மத்தியான்னம் சாப்பிட்டதும் எல்லாரும் கொஞ்சம் அங்க இங்க படுப்பாங்கல்லா? அப்ப போடுங்க'

'இப்பம் போடுலே..குட்டி கேட்டுட்டால்லா?'

பி.பி.சீனிவாசின் பாடல்கள் ஒலிக்க ஆரம்பித்ததும் அவள் தரையிலேயே அமர்ந்துவிட்டள். இருக்கையில் லேசாகச் சாய்ந்து கண்களை கீழே சரித்து அவள் இருந்த விதம் அப்பாடல்கள் ஒரு துளிகூடச் சிந்தாமல் உள்ளே செல்வதற்கானது என்று பட்டது. 'மௌனமே பார்வையாய்..' அழகான பெண்ணே அல்ல. கரடுமுரனான முகம். உருண்ட மூக்கு. ஆனால் அவள் கண்கள் மிகப்பெரியவை. இமைகள் குருவிச்சிறகுபோல மெல்லச்சரிய அவள் சரிந்து அமர்ந்திருக்கையில் மெல்லமெல்ல பேரழகியாகியபடியே வந்தாள். 'எந்தன் பருவத்தின் கேள்விக்கு பதில் என்ன சொல்லடி'

மதியமானதும் பாட்டை நிறுத்திவிட்டு சாப்பிட ஆரம்பித்தனர். நான் அந்த முடிவை யார் எடுத்தார்கள் என்று ஆசரியமாக இருந்தது. எங்கோ எவரோ சோற்றுவாளியை இழுத்திருக்கவேண்டும். வாளிகளின் ஒலி எழுந்ததும் ஒல்லி ஆள் பாட்டை நிறுத்தினார். புளிசாதமும் எலுமிச்சைச் சாதமும் சப்பாத்திகளும் வெளியே வந்தன. கிழவி அவளிடம் 'புளிசோறு திங்கியாட்டீ?' என்றாள்.

'திங்குதேன் அத்தை..நான் ஒண்ணுமே கொண்டுவரல்லை பாத்துக்கிடுங்க..இங்க ரயிலிலே வாங்கிக்கலாம்னு இருந்தேன்'

'இங்க கொண்டுவரணுமானா கதவத்திறக்கணும்லா? ஒருத்தனையும் உள்ளவிடமாட்டானுக நம்மாளுக..டேசன் வந்ததும் கதவச்சாத்தீருவானுக'

'அவங்களும் ஏறணும்லா?'

'அதைப்பாத்தா முடியுமா? விட்டா ஏறி நெருக்கீருவானுக..நாம எப்பிடி மூணுநாளு அந்தமாதிரி யாத்திரபோறது? மனுஷன் கட்டையச்சாய்ச்சு கண்ணமூடாண்டாமா?'

‘தம்பி புளிசோறு இருக்கு-சாப்பிடுதியளா?’ என்றாள் ஒரு பெண்.

நான் திடுக்கிட்டேன்’ நானா?’

‘ஆமா-சோறு கொண்டாரல்ல இல்லியா?’

‘ஆமா’ என்றேன்.

‘தம்பி பாட்டுகேட்டு சொங்கிப்போய்லா இருந்தாரு-சாப்பிடுங்க தம்பி’ என்றார் வழுக்கை

‘கொண்டாங்க’ என்றேன்

பாலிதீன் காகிதத்தில் புளிசோற்றை அள்ளி வைத்தாள். ‘உப்பு தனியா வச்சிருக்கேன்-பத்தல்லண்ணா சொல்லுங்க’

‘நீ எந்தூரு குட்டி?’

’மாமா நமக்கு பணவுடியாக்கும்-’ என்றாள் ‘செல்வீண்ணு பேரு’

‘பணவுடிண்ணா-?’

‘அங்கிண ஒரு கிராமம்-அது என்னத்துக்கு? நம்ம மானம்கெட்ட பொளைப்பு அங்கிணயும் நாறுகதுக்கா?’

‘செரி, எல்லாம் மானம்கெட்ட பொளைப்புதான்- ஊர விட்டு வந்துட்டா பிறவு ஏது மானம் மரியாத? கும்பிச்சூட்டிலே குளுந்த கஞ்சி விளுதா இல்லியாண்ணு பாத்தா போரும்லா?’

‘அத்தைக்கு எந்தூரு?’

‘ராதாபுரம்-பக்கத்திலே உருமாங்குளம்-’

‘விசேசமா போறீங்களோ?’

‘என்னத்த விசேசம்? அங்க ஒரு அஞ்சேக்கர் மண்ணு கெடக்கு-ஒருத்தன் ஏக்கருக்கு மூவாயிரம் குடுக்கான்னு சொல்லுதான். மொட்டப்பால. அதுக்கு நாலு பங்காளிய. நிண்ணுபேசி உண்டானத வாங்கிட்டுப்போனா போன எடத்தில ஒரு எடத்தப்பாத்து வேவாரத்த எடுக்கலாம்னு நினைப்பு-சொரிமுத்தையன் காக்கணும்’

‘டீக்கடையா?’

‘எப்டித்தெரியும்?’

’அத்தையப்பாத்தா தெரியுதே?’ என்று சிரித்தாள்.

‘குட்டி, இந்த ரயிலிலே பாதிபேரு டீக்கடையாக்கும்-’ என்றார் கிழவர். ‘கடை என்னா கடை, சும்மா ரோட்டோரம் அடுப்ப வைக்கிறதுதான்-’

அந்தப்பக்கமிருந்து ஒரு ஐம்பதுவயது பெண் எட்டிப்பார்த்து ‘ஏந்தம்பி, சப்பாத்தி வேணுமா?’ என்றாள் என்னிடம்.

‘இல்ல-புளிசோறு சாப்பிட்டேன்’

‘சப்பாத்தி குடு ஆத்தா-வளரும்பிள்ள-சோத்தில என்ன சத்து?’’

‘நாம இப்பிடி வெறுஞ்சோத்தில புளியவிட்டு தின்னுத்தின்னுதான் இந்தமாதிரி ஒடஞ்சுள்ளி கணககா இருக்கோம். வட இந்திய ஆளுங்க சப்பாத்திய சுருட்டி கடிக்கான்-எப்டி இருக்கான் பாரு-அய்யனாருசெல மாதிரி’

‘அங்க வம்புக உண்டா?’

‘வம்பில்லாத எடமுண்டா? ஆனா கூரை பறக்குற காத்துல எறும்பு பறக்காதுல்லா? ஏது’’

’என்ன செய்வீயோ?’ என்றாள் செல்வி

’எதுக்க முடியுமா? பஞ்சம் பொளைக்கல்லா வாறோம்? போனதுமே ஊரிலே வல்லான் ஆருண்ணு மையமா கணக்குபோட்டுக்கிடுறது. நேரா போயி அவன் காலிலே விழுந்தா அவன் நம்மள பாத்துக்கிடுவான்’

‘நாலு வருசம் முன்ன ஒருத்தன் நம்ம கிட்ட வந்து மாமூலு கேட்டான் அண்ணாச்சி. சின்னப்பய-யாதவாக்கும்- எனக்கே கஞ்சிக்கு வளியில்லேண்ணு சொன்னா கொன்னிருவேண்ணு சொல்லி கத்தியக்காட்டினான். அவனுக்க மூத்தவன

கூட்டிட்டுவாறான். அவன் வாரான் சிந்தி எருமைக்கு கைய வச்சாமாதிரி.நேரா நானும் இவளும் ரெண்டு பிள்ளையளுமாட்டு போயி அப்டியே காலிலே விளுந்துட்டோம். நடு ரோடு பாத்துக்கிடுங்க.பத்து அஞ்ஞூறு ஆளுங்க சுத்தி போய்ட்டுவந்திட்டிருக்கப்பட்ட எடம்.அப்டியே தெகைச்சு நின்னுட்டான். நான் அவன் காலைப்பிடிச்சுகிட்டேன். நீ என் தெய்வம். உன்னை நம்பி இருக்கேன்னு சொன்னேன்.அவன் செரி எந்திரிடான்னான். இப்பம் ஒருத்தன் நம்ம கிட்ட ஒண்ணும் சொல்லமாட்டான்.'

'நாம மனுசன நம்பில்லா வாளுறம்.தொகையலு வச்சுக்கிடுதியா குட்டி?'

'வேண்டாம் அத்த.கத்திரிக்கா வச்சுல்லா அரைச்சிருக்கீஹ? நம்ம தொளிலுக்கு கத்திரிக்கா இருக்கப்பிடாது'

'பிள்ளகுட்டி உண்டுமாட்டீ?'

'ஒரு குட்டி கெடக்கு. அதை ஊரிலே விட்டிருக்கேன்.நாலாப்பு படிக்கு'

'நம்ம குட்டிக ஒண்ணும் நெறமும் சதையுமாட்டு இருக்காதுல்லா? அதாக்கும் மானமா பொளைப்பு போவுது.குட்டி லெச்சணமா இருப்பான்னா அங்க நிண்ணு படிக்கட்டு'

'படிக்கப்பட்ட குட்டியாக்கும் மாமா.அதாக்கும் நானும் கஷ்டப்பட்டு பைசா அனுப்புகேன். அதுக்கு அந்தக்குடும்பத்துக்கே நான் கஞ்சி ஊத்தணும் பாத்துக்கிடுங்க.அதைக்கொண்டா இதைக்கொண்டான்னுட்டு'

சாப்பாடு முடிந்ததும் செல்வி 'மாமா மல்லிகை என் மன்னன் மயங்கும்' போடுங்க' என்றாள்

'அந்தப்படம் நான் பாத்ததாக்கும்.தீர்க்கசுமங்கலி.கே.ஆர்.விசயா முத்துராமன்'

'முத்துராமன் என்ன ஆளாக்கும் அண்ணாச்சீ?'

'ஏன், பெஞ்சாதிய கூட அனுப்புற எண்ணம் இருக்கா.கேக்கான்பாரு'

' குளிர் காற்றிலே தளிர் பூங்கொடி கொஞ்சிப் பேசியே அன்பை பாராட்டுது'. நான் பார்வையைத் திருப்பியபோது பாட்டு போடும் ஒல்லிமனிதரின் கண்களைச் சந்தித்தேன். ஈரமாக இருப்பவைபோலத் தோன்றின. விலக்கிக்கொண்டு மீண்டும் அனிச்சையாக அவரைப்பார்த்தபோது புன்னகை செய்தார். வருத்தம் நிறைந்த புன்னகை என்று தோன்றியது. பெரிய ஒரு துயரத்தில் இருந்து மீண்டபிறகு வரும் புன்னகை. மாபெரும் அவமதிப்பு ஒன்றை நெடுநாள் கழித்து நினைவுகூரும்போது வரும் புன்னகை.

மதியம் எல்லாருமே தூங்கிவிட்டார்கள். நல்ல வெயில் வெளியே. ஆனால் ஜனவரியின் குளிர்காற்றில் வெக்கையே தெரியவில்லை. காற்று தலைமுடியை உடையை அளைந்துகொண்டே இருந்தது, பிரியம் தாளமுடியாததைப்போல. செல்வியும் நானும் அவரும் மட்டும் விழித்திருந்தோம்

'வெள்ளிமணி ஓசையிலே உள்ளமெனும் கோயிலிலே' அவள் பெருமூச்சுடன் நிமிர்ந்து அமர்ந்தாள். நான் அவரையே பார்த்தேன். ஒவ்வொரு பாடலையும் எந்த மனம் கொண்டு தேர்வுசெய்கிறார்? ஒருபாட்டுக்கு மேல் இன்னொரு பாட்டை ஏன் அமைக்கிறார்?

ஒலிநாடா சிக்கிக்கொண்டது. அவர் நிதானமாக அதை வெளியே எடுத்து கையை நடுவில் விட்டுச் சுழற்றி திரும்ப மாட்டினார்

'அண்ணாச்சி என்ன செய்றீக?' என்றேன்

'நமக்கு ஸ்காவஞ்சர் சோலியாக்கும் தம்பி.ஒரு கம்பெனியிலே'

'குடும்பம் எங்க இருக்கு?'

'எல்லாம் நம்ம கூடத்தான்.நம்ம பெரியப்பன் செத்துப்போயிட்டாரு.அதான் ஊருக்குப்போறேன். நல்லதுக்கு போவல்லேண்ணாலும் கெட்டதுக்கு போயிடுறது.ஆளுங்க வேணுமே.நமக்கு நல்லது நடக்கல்லேண்ணாலும் கெட்டது நடந்திரும்லா?''

'இந்தப்பாட்டெல்லாம் நீங்களே எடுத்ததா?'

'நமக்கு இதான் தம்பி பொளுதுபோக்கு.சோறில்லாம இருப்பேன். பாட்டில்லாம இருக்கமுடியாது'

'ஊரெங்கும் மாப்பிள்ளை ஊர்வலம்'. இந்தப்பாடல்கள் உண்மையில் ஏதோ சில சினிமாக்களைச் சேர்ந்தவைதானா? இவற்றுக்கும் சென்ற ஐம்பதாண்டுகளாக இங்கே மனிதர்கள் வாழ்ந்த வாழ்க்கைக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. அவர்களைப்போலப் பேசக்கூடிய, அவர்களைப்போல பாடி ஆடக்கூடிய எவரையுமே நான் கண்டதில்லை. ஆனால் அவர்கள்மீது பலலட்சம்பேரின் கனவுகள் படிந்து கெட்டியாகிவிட்டன. அவற்றுடன் சேர்ந்து மூன்றுதலைமுறைகள் பலகோடி மனநாடகங்களை நடித்துவிட்டார்கள். 'குலமாதர் யாரும் தனியாக வாடும் விதியொன்றும் இல்லை மறவாதே'

சுசீலாவின் குரல். வெண்பட்டு. அல்லது மலைமேலிருந்து கீழிறங்கி ஏறும் செம்பருந்து. அல்லது வெண்கலக்கம்பி. அல்லது இளநீர். 'முத்துச்சிப்பி மெல்லமெல்ல திறந்து வரும்…'

பெருமூச்சுடன் அசைந்து அமர்ந்து செல்வி 'செத்திரலாம்போல இருக்கு …இல்ல அண்ணாச்சி?' என்றாள். அவர் புன்னகைசெய்தார். அவர் மனைவியிடம்கூட அதிகம்பேசுபவர் போலத்தெரியவில்லை. 'மாலைப்பொழுதின் மயக்கத்திலே நான்' என சுசீலா காற்றிலாடும் கொடி போலப் பாட ஆரம்பித்தார்

மாலையில் ஒவ்வொருவராக எழ ஆரம்பித்தனர். சத்தங்கள் சிரிப்புகள் எழுந்தன. ஏதோ ஒரு ஸ்டேஷனில் வண்டி நின்றபோது ஒரே ஒரு டீக்காரர் உள்ளே அனுமதிக்கப்பட்டார். டீ குடித்தபின் நான் அனைவருக்கும் பணம் கொடுத்தேன். கேசவேட்டன் தந்த ரூபாய் என்னிடமிருந்தது. 'ஒரு வடை இருந்திருக்கலாம்' என்றார் பல்நீண்டவர்.

'சும்மா கெடயுங்கோ…வடையத்திண்ணுட்டு ராத்திரி வாயுகுத்துதுண்ணு சலம்புகதுக்கு' என்றாள் அவர் மனைவி

'அண்ணாச்சி, எம்ஜியார் பாட்டு போடுங்க…சாயங்காலத்துக்கு ஒரு இது வேணும்லா?'

'ஒரு பெண்ணைப்பார்த்து நிலவைப்பார்த்தேன்' ஒவ்வொரு பாட்டு முடிந்ததும் கைதட்டல்கள். 'ஒன்று எங்கள் சாதியே ஒன்று எங்கள் நீதியே…உலகமக்கள் யாவரும் ஒருவர் பெற்ற மக்களே' இரவு இருண்டு அடங்குவது வரை எம்ஜிஆர் சிவாஜி பாடல்கள். 'அண்ணாச்சி பாவம் செமினிக்கும் ஒரு நாலு பாட்டு போடுங்க' . உடனே 'இயற்கை என்னும் இனிய கன்னி'

இரவில் பத்துமணிக்கு மீண்டும் சாப்பாடு. உட்கார்ந்தெ இருந்ததனால் பெரும்பாலானவர்கள் அதிகம் சாப்பிடவில்லை. வழுக்கை எழுந்து கழிப்பறைப்பக்கம் சென்று நின்றபின் சுருட்டு வாசனையுடன் திரும்பி வந்தார்.

கிழவர் 'நான் அந்தப்பக்கம் கக்கூஸ்பக்கத்திலே படுத்துக்கிடுதேன் …நமக்கு டாங்கு லீக்கு உண்டு' என்றார்.

அமர்ந்து தூங்குபவர்களுக்கு மட்டும்தான் பெஞ்சு. படுக்க விரும்புபவர்கள் எழுந்துகொள்ள எனக்கு சன்னலோரம் இடம் கிடைத்தது. எல்லாரும் பிளாஸ்டிக் தாள்கள் வைத்திருந்தனர். அதை விரித்து அந்தச்சிறிய இடத்திற்குள் அத்தனை பேரும் படுத்துக்கொண்டார்கள். காலடியிலும் இருக்கைகளுக்கு அடியிலும் வழியிலும் எல்லாம் உடல்கள். ஒரு கணத்தில் பிணங்களை அடுக்கியிருப்பதுபோலத் தோன்றி உடனே தலையை அசைத்து அந்த எண்ணத்தைத் துரத்தினேன்.

ஒல்லிமனிதர் பாட்டை நிறுத்தினார்

'அண்ணாச்சி, பாட்டு போடுங்க…நமக்கு ராத்திரி தூக்கம் வராதுல்ல' என்றாள் செல்வி

'இப்பமா?'

'மெள்ளமா போடுங்கண்ணாச்சி…'

'என்ன பாட்டு?'

'ராத்திரிக்கு ஏ.எம்ராசா இல்லாட்டி கண்டசாலா. வேற பாட்டு நான் கேக்குறதில்ல'

'இரவும் நிலவும் காயுது' என மெல்ல பாட்டு ஒலிக்க ஆரம்பித்தது

' சத்தம் தொந்தரவா இருக்காதா?' என்றேன்

'நம்மாளுக எந்நேரத்திலயும் பாட்டு கேப்பானுக…பாட்டு மட்டும் ஒருத்தனும் வேண்டாம்னு சொல்லமாட்டான். விடியவிடியப்போட்டாலும் கேப்பானுக'

'பிருந்தாவனமும் நந்தகுமாரனும் யாவருக்கும் பொது செல்வமன்றோ' அதன்பின் நான் சற்றும் எதிர்பாராத பாட்டு 'முத்தாரமே உன் ஊடல் என்னவோ'

'அண்ணாச்சி இது ராஜா தானே?'

'ஆமா …கொஞ்சநாள் விட்டுப்போட்டு மறுக்கா வந்தப்ப பாடினது'

'கேட்டு ரொம்பநாளாவுது அண்ணாச்சி' என்றேன்

'இன்னொண்ணு இருக்குல்லா…செந்தாமரையே செந்தேனிதழே' என்றாள் செல்வி.

வெளியே முக்கால்நிலவு கூடவே வந்துகொண்டிருந்தது. நிழலைக்குவித்துப்போட்டதுபோல அடிவானில் மலைகள். ஒளிபெற்ற மேகங்கள் தூக்கத்தில் மிதந்து நின்றன. கீழே நிழலால் வரையப்பட்ட நிலம்.' இரவுக்கு ஆயிரம் கண்கள் பகலுக்கு ஒன்றே ஒன்று'

அமர்ந்தவாறே செல்வியும் தூங்கிவிட்டாள். என்னிடம் 'பாட்டு போரும்ல?' என்றார்

'ம்'

அவர் விளக்கை அணைத்தார். எனக்கு நேர்முன்னால் சன்னலோரமாக அமர்ந்திருந்தார். நான் கம்பியில் தலைசாய்த்தேன். கேட்ட பாடல்கள் எல்லாமே எனக்குள் மீண்டும் ஓட ஆரம்பித்தன. துக்கங்கள் கனவுகள் ஏக்கங்கள் கொண்டாட்டங்கள். சட்டென்று அவையெல்லாம் ஒட்டல்தட்டுகள் என்ற எண்ணம் ஏற்பட்டது. யார் யாரோ வந்து எதையெதையோ வைத்து தின்றுவிட்டுச்சென்றவை. அந்த வாசனைகள் எல்லாமே கலந்த ஒரு வீச்சம் கொண்டவை.

பெருமூச்சுடன் அசைந்து அமர்ந்தேன். வெகுநேரமாகியிருக்கவேண்டும். மீண்டும் பெருமூச்சு விட்டேன். ஏன், இவையெல்லாம் கோயில் தெய்வச்சிலைகள் என்று சொல்லக்கூடாது? பல லட்சம்பேர் பலகோடிப் பிரார்த்தனைகளுடன் கண்ணீர்மல்கி நோக்கி நின்றவை. கைநீட்டி இரந்தவை. அழவேண்டும் போலிருந்தது. ஆனால் அழுகையும் வரவில்லை.

மீண்டும் அசைந்து அமர்ந்தபோது அவரது பார்வையைச் சந்தித்தேன். புன்னகைசெய்தார். நானும் புன்னகைசெய்தேன்

'க்க்கும்' என அவர் கனைத்துக்கொண்டார். ஒருபீடியைப் பற்றவைத்து உள்ளங்கையால் கனலைப் பொத்தி ஓர் இழுப்பு இழுத்தார். ம்க்கும்' என கனைத்தபடி மீண்டும் இழுத்தார். பின்பு அதை வெளியே வீசிவிட்டார். குளிர்காற்றில் குச்சித்தலைமயிர் அசைந்தது

'தம்பி' என்றார் அவர். என்னிடமா என்று நான் அவரைப்பார்த்தேன்

ஏதோ சொல்லவந்தவரால் சொல்லமுடியவில்லை. 'ஒண்ணில்ல' திரும்பி படுத்திருப்பவர்களைப்பார்த்தார் 'பாவப்பட்ட சனங்க தம்பி நாம'

'ஆமா' என்றேன். அவர் என்ன சொல்கிறார் என்றே புரியவில்லை

'ஊரூரா போயி.என்னண்ணு சொல்ல.நம்ம கெதி இதாக்கும்'

நான் அவரை பார்த்து தலையசைத்தேன். இருவரும் சிறிதுநேரம் வெளியே பார்த்தோம் '' இன்னும் பாட்டு இருக்குல்லா அண்ணாச்சி?''என்றேன்

'காலம்ப்ற போடுதேன்' என்றார் அவர் .

---

## புறப்பாடு II- 11 , தோன்றல்

சிறுவயதில் நான் ஒரு கனவுகண்டேன். களமெழுத்துபாட்டில் கரிமணல் செம்மணம் நீலமணல்சேர்த்து மண்ணில் கோலமாகப்பொட்டு வரையப்படும் நாககாளி வடிவம் புள்ளுவர்கள் குடம்தட்டிப்பாட்டு பாடி முடித்து முடியவிழ்த்து ஆட ஆரம்பித்ததும் கலைய ஆரம்பிக்கும். புள்ளுவத்தி தன் கூந்தலாலேயே வண்ணக்கோலத்தை கலைப்பாள். புள்ளுவர் கமுகுப்பூக்குலையால் கலைப்பார். சிலசமயம் பெருங்காற்றுவந்து அப்படியே ஓவியத்தை சுருட்டி அகற்றிச்செல்லும். அப்படி கண்முன் வண்ணமணல்துகள்களாக மாறி மறைந்த ஓர் நாககாளி நீலமும் சிவப்பும் கறுப்பும் வெளுப்புமாக மணல்துளிகள் காற்றிலேறி ஒன்றாகி இணைந்து கண்களில் உயிர் ஊறி எழுந்தாள்.

சித்ரா அச்சகத்தின் மொட்டைமாடியில் படுத்துக்கொண்டிருந்தபோது அந்த கனவை நினைவுகூர்ந்தேன். அச்சகங்களில் புத்தகங்கள் தயாராவதும் அப்படித்தான் என்று பட்டது. சிறுவயதுமுதலே புத்தகங்களுடன் வாழ்ந்தவன். எங்கள் வீடே எங்குபார்த்தாலும் புத்தகங்களாக இருக்கும். ஆனால் அதை எங்கோ எவரோ அச்சுகோர்க்கிறார்கள் அச்சுயந்திரத்தில் ஓட்டுகிறார்கள் என்று என் அகம் உணர்ந்ததேயில்லை. வெறும் ஈயஎழுத்துக்களாக இருப்பவை சேர்ந்து சொற்களாகி சொற்றொடர்களாகி நூலாகி கட்டுண்டு வெளியே செல்லும் அற்புதம் எத்தனை முறைபார்த்தாலும் என்னை பிரமிப்பிலாழ்த்தியது.

சித்ரா அச்சகத்தில் அன்று சில புராணநூல்கள்தான் அச்சாகிக்கொண்டிருந்தன. சைவசித்தாந்தச்சுருக்கம், அறுபத்துமூவர் கதை, திருமூலர் வாழ்க்கை, பன்னிரு சித்தர் வரலாறு, தாயுமானவர் அருளிய சைவஞானம். சாதாரண வாசகர்களுக்காகப்போடப்படும் பெரிய எழுத்து சிறிய நூல்கள். சைவக்கோயில்கள் முன்னால் போட்டுவிற்பார்கள் போல. அட்டைகளும் அங்கேயே அச்சாயின. நான்குவண்ணங்கள் கொண்ட அட்டைகளில் திரும்பத்திரும்ப ஒரு நடராஜர் படத்தின் கட்டையச்சு பயன்படுத்தப்பட்டது. அச்சக உரிமையாளர் அதை பாரம்பரியச் சொத்தாகப் பெற்றிருக்கலாம் என்று நினைப்பேன்

ஜோலார்பேட்டையில் இறங்குவதற்கு பதினைந்து நிமிடம் முன்புகூட அங்கே இறங்கும் எண்ணம் எனக்கிருக்கவில்லை. ஊருக்குத்தான் திரும்பிச்சென்றுகொண்டிருந்தேன். டிக்கெட் மதுரைவரைக்கும் இருந்தது. ஆனால் ஜோலார்பேட்டையைக் கண்டதும் இறங்கத்தோன்றியது. காரணங்கள் ஏதுமில்லை. அந்த ஊர் எனக்கு ஏதோ வகையில் வேண்டிய ஒன்று என்ற பிரமை. ரயில்போனபிறகு ரயில் நிலையம் வெறிச்சிட்டது எனக்கு மனதுக்கு இதமாக இருந்தது. அப்பாடா என்ற நிம்மதியுடன் பெஞ்சில் அமர்ந்துவிட்டேன்.

குளிக்காமல் முகம்கழுவாமல் மூன்று நாட்கள் பயணம். ரயில் வாரங்கலில் ஒரு பகல் முழுக்க நின்றது. அதன்பின்

*ரேனிகுண்டாவில் நான்குமணிநேரம். முடிவில்லாமல் அது வந்துகொண்டே இருந்தது. ஜோலார்பேட்டைக்கு கொஞ்சம் முன்னால் ஒருவர் 'லே தமிள்நாடு வந்தாச்சுலே' என்றார்.*

*ரயில் முழுக்க பரபரப்பு. எல்லாரும் சன்னல்களிலும் வாசல்களிலும் குமுமினார்கள். நான் வாசலுக்குச் சென்றபோது பத்துபேருக்குமேல் அதில் பிதுங்கி நின்றிருந்தனர். 'லே வெளியெ விளுந்து சாவாதீங்கலே' என்றார் கிழவர்*

*'மாமா, விளுந்தாலும் தமிள்நாடுல்லா?'*

*'வக்காளி, தமிள்நாட்டுல சோறில்லேண்ணுதானேலே பஞ்சம்பொளைக்கப்போனே? பேசவந்துட்டான்'*

*தமிழ்நாடு என்று அடையாளம் காண ஏதுமில்லை. ஒரே நிலம். வரண்டபாறைகள் எழுந்த திசைகள். ஆனால் ஒரு சிறிய நிலையத்தில் முதல் தமிழ் எழுத்துக்கள் தெரிந்ததும் மொத்தக்கூட்டமும் 'ஓ' என்று கூச்சலிட்டது*

*'என்னமோ எம்ஜிய்யார் கத்தியோட வாறதக் கண்டதுமாதிரித்தான்' என்றார் கிழவர். ஆனால் அவரும் அங்கேதன் நின்றிருந்தார். அவர் முகமும் மலர்ந்துதான் இருந்தது.*

*'மாமா மனுசனுக்கு சொப்பனம் காண ஒரு மண்ணு வேணுமில்லா?'*

*ஜோலார்ப்பேட்டை என்ற பேரே எனக்குப்பிடித்திருந்தது. ஜோர் என்ற வார்த்தையின் ஏதோ ஒரு வகை நீளவடிவம் அது என்பதுபோல. நின்றுகொண்டிருந்த ஒரு ரயிலில் ஏறி காலைக்கடனைக் கழித்தேன். தண்டவாளம் நடுவே உயரமான சரியாக மூடப்படாத ஒரு குழாயிலிருந்து நீர் கொட்டிக்கொண்டிருந்தது. அதில் நின்று குளித்தேன். உடைகளை மாற்றிக்கொண்டு மேம்பாலம் வழியாக நடந்தபோது சென்னை ரயிலை பார்த்தேன். அங்கே நின்று மூச்சிரைத்துக்கொண்டிருந்தது. ஓடிச்சென்று ஏறிக்கொண்டேன். டிக்கெட் எடுக்கவில்லை. கேட்டால் மதுரை ரயில் என நினைத்து தவறாக ஏறிவிட்டதாகச் சொல்லிக்கொள்ளலாம்.*

*சென்னையில் எங்கே செல்வதென்று ரயிலிலேயே முடிவுசெய்திருந்தேன். எங்களூரில் அச்சுதன் ஆசானின் மகன் நாராயணன் சென்னையில் ரயில்பெட்டித்தொழிற்சாலையில் வேலைபார்த்தார் என்று தெரியும். அந்த இடம் பெரம்பூர் என்றும் நினைவில் இருந்தது. மதியம் வந்திறங்கியவன் மாலைக்குள் ஏராளமானவர்கள் வழியாக நாராயணன் அண்ணனின் குவார்ட்டர்ஸை கண்டுபிடித்துவிட்டேன். ஆனால் நாராயணன் அண்ணன் இல்லை. அவர் ஊருக்குச் சென்றிருந்தார். அவரது நண்பர்கள் இருவர்தான் இருந்தனர். சில கேள்விகள் கேட்டபின் அவர்க்ள் என்னை அங்கே தங்கும்படிச் சொன்னார்கள். இரண்டுநாட்களில் நாராயணன் அண்ணன் வந்துவிடுவார் என்றார்கள்*

*பகலில் பெரம்பூரைச் சுற்றிவரும்போதுதான் சித்ரா அச்சகத்தைப் பார்த்தேன். தொடர்ந்து அச்சகங்கள் கண்ணில் பட்டாலும்கூட மனதில் பதியவில்லை. அச்சக வாசலில் 'பிழைதிருத்துநர் தேவை. ஓய்வுபெற்ற தமிழாசிரியர்கள் விண்ணப்பிக்கவும்' என்று எழுதப்பட்டிருந்தது. அதைத் தாண்டிச்சென்றபின் திரும்பிவந்தேன். சிலநிமிடங்கள் வாசலில் தயங்கி நின்றபின் உள்ளே சென்றேன்.*

*சிவகுருநாதபிள்ளை உள்ளே இருந்தார். வழக்கம்போல வந்ததுமே சட்டையை கழற்றி நாற்காலிக்குப்பின்னால் போட்டிருந்தார். அதன்மீது அங்கவஸ்திரம். கன்னங்கரிய குண்டு உடலும் வழுக்கைத்தலையும் கொண்டவர்.மீசை இல்லாததனால் பெரிய மூக்கு புடைத்துத் தெரியும்.வேட்டியை தொடைவரை சுருட்டி வைத்து கால்களை ஆட்டியபடி மேஜைக்குப்பின் அமர்ந்து வெற்றிலைபோட்டுக்கொண்டிருந்தார். முன்னால் வெள்ளிச்செல்லம் திறந்திருந்தது. அதில் விதவிதமான வாசனைப்பொருட்கள். நிதானமாக ஒரு ரசாயன ஆய்வைச்செய்யும் விஞ்ஞானியின் கவனத்துடன் பாக்கை நறுக்கி வெற்றிலையில் வைத்துக்கொண்டிருந்தார். சுட்டுவிரலில் தொட்ட சுண்ணாம்புடன் என்னை நோக்கி ஏறிட்டு 'யாரு?' என்றார்*

*'புரூப் பாக்க ஆளுவேணும்னு..'*

*'ஆமாம் வேண்டும்'*

*'நான் பாப்பேன்'*

*'தம்பி, நாங்கள் இங்கே சைவசித்தாந்த நூல்களை மட்டும்தான் வெளியிடுகிறோம். அவற்றை சாதாரணமாக பிழைதிருத்த இயலாது. நல்ல ஆழ்ந்த தமிழறிவும் சைவத்தில் அறிமுகமும் தேவை..'*

*'எனக்கு தமிழ் தெரியும்'*

*'என்ன படித்திருக்கிறீர்?'*

*'பி காம்..முடிக்கலை'*

*'தம்பி அதாவது..'*

*'நான் நல்லாவே தமிழ் தெரிஞ்சவன்..சங்க இலக்கியம் கம்பராமாயணம் எல்லாம் பாடம் கேட்டிருக்கேன்..சைவசித்தாந்த அறிமுகமும் உண்டு'*

‘ஓ’ என்று சந்தேகமாகப் பார்த்தபின் ஒரு தாள்கட்டை நீக்கி ‘சரி இதை மெய்ப்பு பார்த்து தாரும், பார்க்கிறேன்’

அது சிவஞானசித்தியாரின் ஓர் உரையின் பதினாறுபக்கம். கடுமையான மொழிநடை. நான் பிழைதிருத்தி வைத்தேன். அவர் அதை எடுத்துப்பார்த்தார். ‘தம்பிக்கு பிழையே கண்ணில் படவில்லையே-இதோ இவை எல்லாமே பிழைதான்-’ என்று சிவந்த பேனாவால் அடையாளமிட்டுக்கொண்டே போனார். ‘ஒற்றுக்குறை உங்கள் பார்வைக்கே வரவில்லையே.’ கூர்ந்து நோக்கி ‘இவையெல்லாம் பிழைகளே அல்ல. என் தம்பி ஏற்கனவே பிழைதிருத்திய படிகள் இவை. ஏன் இவற்றை திருத்தினீர்?’

நான் எட்டிப்பார்த்து ‘அது சிவம் இல்ல சீவம்தான்’ என்றேன் ‘அந்த இடத்திலே சீவம்னுதான் வரும். உயிர்க்குலங்களை சைவத்தில் அப்படிச் சொல்றாங்க. மூலத்தில சீவம்னு இருந்ததை தப்புன்னு நினைச்சு யாரோ சிவம்னு திருத்திட்டாங்க’

அவர் நோக்கி ‘சரிதான்-’ என்றார். பின்னர் உரக்க ‘ சிவமெல்லாம் ஆன்மா உடையதென்றாலும் ஆன்மாவெல்லாம் சிவமாகாதென்பர் ஆன்றவிந்தோர்-’ என வாசித்து ‘அடச்சீ, வெட்டிப்பய-ஏண்டி இத அவந்தானா திருத்தினான்?’ என்றார்

அச்சுகோர்த்துக்கொண்டிருந்த ஐம்பது வயதான பெண்மணி ‘எது?’ என்றாள்

‘கட்டேல போக-ஏண்டி இது -இந்த சிவஞானசித்தி’

‘ஆமா-போனவாரம் முச்சூடும் ஒக்காந்து பாத்தாரே’

’அவன் கண்ணிலே கொள்ளிய வெக்க- வக்காளி, இனி இந்தப்பக்கமா வந்து புக்கு கிக்கு தொட்டான்னாக்க செருப்பாலே அடிப்பேன்னு சொல்லு-’ என்றபின் என்னை நோக்கி ‘என் தம்பிதான்-தமிழாசிரியன் வேறுஎன்ன சொல்ல’ என்றார்

‘எழுத்துப்பிழை எல்லாம் சரியாகத்தான் பாத்திருக்கார்’

‘தம்பி என்ன செய்கிறீர்கள்?’

‘இப்ப சும்மாதான் இருக்கேன்-ஊரவிட்டு இங்க வந்துட்டேன். வேலைதேடுறேன்-’

‘எந்த ஊர்?’

‘நாகர்கோயில்’

‘எப்படி தமிழும் சைவமும் படித்தீர்கள்?’

நான் என் தமிழய்யா பற்றிச் சொன்னேன்.

‘அடாடா-தமிழுக்கு கத்தோலிக்கர்களின் கொடை மிகபெரிது-தம்பி இன்னும்கூட நெல்லையிலும் குமரியிலும் அந்தக் கவிராயர்மரபு இருப்பதால்தான் தமிழ் வாழ்கிறது-நீங்கள் இங்கேயே வேலைபார்க்கலாம்’

எனக்கு அன்றையதேவைக்கு அதிகமாகவே அவர் சம்பளம் கொடுத்தார். மாதம் முந்நூறு ரூபாய். நான் அச்சகத்திலேயே இரவு தங்கிக்கொள்ளலாம் என்றும் சொன்னார். பையை எடுத்துக்கொண்டுவந்து அச்சகத்தில் குடியேறினேன். குளிர்காலமானாலும் சென்னையில் இரவு பன்னிரண்டுமணிவரை பயங்கரமாக வேர்க்கும். மொட்டைமாடிக்குச் சென்று படுத்துக்கொள்வேன். நள்ளிரவில் தானாகவே விழிப்பு வந்ததும் கீழே வந்து இருபெஞ்சுகளைச் சேர்த்துப்போட்டு படுப்பேன்.

அச்சகம் முழுக்க இரவில் பெருச்சாளிகள் ஓடிக்கொண்டிருக்கும். வெளியே ஓடிய சாக்கடையும் அச்சகக் கட்டிடத் தரையும் ஏறத்தாழ ஒரே உயரம். பெருச்சாளிகள் நிறைய வளைபோட்டு வைத்திருந்தன. ‘அடைச்சா அதுங்க வேறு வளையத் தோண்டும். அப்டியே போனா ஊட்டையே தோண்டிரும்-சர்த்தான் உடு’ என்றார் சிவகுருநாதபிள்ளை

நான்கு பெண்கள் அங்கே அச்சுகோர்த்தார்கள். திருமணமாகாத இளம்பெண்கள் எல்லாருமே. தாவணிபோட்டு ஒற்றைச்சடை கட்டி பிளாஸ்டிக் வளையல்களும் பாசிமணி மாலைகளும் போட்ட, கன்னம் ஒட்டியமெலிந்த பெண்கள். வள்ளியும், கஜலட்சுமியும் சேர்ந்து ஒரேசைக்கிளில் வருவார்கள். மாரிச்செல்வி கையில் தூக்குவாளியுடன் தனியாக நடந்து வருவாள். போகும்போது மட்டும் மாரிச்செல்வி பஸ் ஏறிச் செல்வாள்.

சிவகுருநாதபிள்ளையின் மனைவி உமாக்காவும் அச்சுகோர்ப்பார். மற்றபெண்களெல்லாம் எட்டரைக்கே வந்துவிடுவார்கள். ஒன்பது மணிக்கு சிவகுருநாதபிள்ளை குடையுடன் காவடிகட்டி தண்ணீர்குடம் தூக்கிவருபவர் போல இருபக்கமும் ஆடியபடி தோல்பையுடன் நடந்துவருவார். பன்னிரண்டுமணிவாக்கில் உமாக்கா அவருக்கு பித்தளை அடுக்குப்பாத்திரத்தில் சாப்பாட்டுடன் வியர்த்து வழிந்தபடி பெரிய உடலை அசக்கி அசக்கி வந்துசேர்வாள். அவள் நடப்பதற்கான விசை கைகளை அசைப்பதில்தான் வருகிறது என்று தோன்றும். வந்ததும் அவருக்குப் பரிமாறிவிட்டு

அச்சுகோக்க வந்தாளென்றால் அச்சகம் மூடுவதுவரை பரவஎன்று வேலைபார்ப்பாள். அவள் வந்தபின்புதான் உண்மையில் வேலை நடக்கும்.

நான் ஏழுமணிக்கெல்லாம் எழுந்து குளித்து காத்திருப்பேன். பெண்கள் வந்தபின்பு வெளியே சென்று பக்கத்து கடையில் இட்லி சாப்பிட்டு நாளிதழ்களும் வாங்கிக்கொண்டு வருவேன். பெண்கள் வந்தாலும் எழுத்துருக்களை எடுத்து வைப்பது, பெட்டிகளை அடுக்குவது என்று எதையாவது செய்துகொண்டிருப்பார்கள். கூடவே பேசிக்கொண்டும் இருப்பார்கள். நான்குபேரும் சந்தித்த கணம் முதல் ஆரம்பிக்கும் இடைவெளியில்லாத பேச்சு மாலையில் கிளம்புவதுவரை நீடிக்கும். சினிமாதான் அதிகமும். கொஞ்சம் குடும்பச்சண்டைகள்.நால்வரில் மூவர் ரஜினிகாந்த் ரசிகர்கள். ஒருத்தி கமல் ரசிகை.

உமாக்காவுக்கு ஏனோ ஜெய்கணேஷைத்தான் பிடிக்கும். 'அது யாருங்கக்கா?' என்று ஒரு பெண் ஒருமுறை கேட்டுவிட்டாள் என்று பயங்கரமாகக் கோபப்பட்டாள். ஜெய்கணேஷ் அவள் ஒரு தொடர்கதை படத்தில் அற்புதமாக நடித்திருப்பார் என்றாள்:

'அது ஒரு வெட்டி கதாபாத்திரமில்லியா?'

'என்ன வெட்டி? அவன் ஒருத்தனுக்குத்தான் அதிலே கொஞ்சமாச்சும் மனசாட்சீண்ணு ஒண்ணு இருந்திச்சு'

பெண்களின் பேச்சொலி அச்சகத்தின் தட் தடார் ஒலிக்குள் ஒரு கசகசப்பாகக் கேட்டுக்கொண்டே இருக்கும். சிரிப்புகள் வசைகள். மிக அபூர்வமாக குரல்கள் தாழ்ந்து கிசுகிசுவென்று பேச ஆரம்பிப்பார்கள். அப்போது அவர்கள் ஒவ்வொருவரின் முகமும் சிவந்து, பழுத்த இரும்பு தேய்ப்புபெட்டி மாதிரி இருக்கும். கண் ஓட்டைகள் வழியாக செங்கனல் தெரியும். அப்போது வேலைநின்றுவிடும். சிவகுநாதபிள்ளை சத்தம்போட்டதும் கலைந்து திரும்ப வேலைக்கு மீள்வார்கள்.வ் சிலகணங்கள் கழித்து ஒவ்வொருவராக பெருமூச்சு விடுவார்கள்.

கம்பாசிட்டர் வடிவேலு ராயபுரத்தில் இருந்து சைக்கிளிலேயே வருவார். பஞ்சுபோன்ற தலையும் மெலிந்த உடலும் கூனும் கொண்ட மனிதர். இரு கன்னங்களும் கட்டைவிரலால் குத்தி அழுத்தியதுபோல குழிந்திருக்கும். அடிக்கடி கொல்லைப்பக்கம் வழியாக வெளியே சென்று மாதுளைமரத்தடியில் வெளிச்சுவரை ஒட்டி குனிந்து நின்று பீடியை ஆழமாக இழுப்பார். அப்போது துயரமான எதையோ நினைவுகூர்பவர்போலிருப்பார். 'நான்லாம் அந்தக்காலத்திலே டிரெடில்ல மிதிச்சு மிதிச்சு வந்தவன் தம்பி.இப்பல்லாம் கரெண்டு வந்துபோச்சு'' என்பார்

நான் அவரிடம் ஜெயகாந்தனின் டிரெடில் கதையை சொன்னேன். நாளெல்லாம் நடந்துகொண்டிருந்தாலும் எங்கேயுமே போகாமல் நின்ற இடத்திலேயே செத்துப்போன கம்பாசிட்டரின் கதை. வடிவேலுவுக்கு கதை புரியவில்லை. 'சர்த்தான் நமக்கு ஆயிரம் கதை இருக்கே' என்று சொல்லிவிட்டார்

உமாக்கா தூரத்தில் அச்சுகோர்த்தபடி 'ஜெயகாந்தன் அச்சாபீஸ்ல வேலைசெஞ்சிருக்கார் தெரியுமா?' என்றாள்

'அப்டியா?'

'அவரோட வாழ்க்கைய துக்ளக்கிலே எழுதினார்ல.அதில சொல்லியிருந்தார்' என்றாள் 'நாங்க அந்தக்காலத்திலே இருந்த வீட்டுக்கு அந்தப்பக்கம்தான் ஜெயகாந்தன் வீடு. வாக்கிங் போறத நெறையவாட்டி பாத்திருக்கேன்'

ஒரேநாளில் சிவகுருநாதபிள்ளை என்னிடம் அச்சுத்தமிழ் பேசுவதை விட்டுவிட்டார். வக்காளி என்பதை அரைப்புள்ளி போலப் பயன்படுத்திப் பேசப்படும் அவரது பேச்சு எந்த ஊர்ச்சாயல் என்று என்னால் கணிக்கமுடியவில்லை. வந்தினு போயினு என்பார். ஆனால் சென்னைத்தமிழும் அல்ல. பின்னர் தெரிந்துகொண்டேன், அவர் கடலூர் பக்கம். உமாவுக்கு மதுரை. அவர்களுக்கு இருபெண்கள். இருவரும் இரட்டையர். இரண்டுபேரும் பத்தாம்வகுப்பு படித்தார்கள்.

அச்சகத்தின் முக்கியமான மனிதனாக நான் மாறுவதற்கு ஐந்துநாட்கள் கூட ஆகவில்லை. அங்கே அச்சிடப்படும் நூல்களைப்பற்றிக் கொஞ்சமேனும் தெரிந்தவர் சிவகுருநாதபிள்ளைதான். ஆனால் அவருக்கே கொஞ்சம் முன்னேபின்னேதான் ஞானம். அந்த எல்லை தெரியாதபடி கவனமாக நின்று ஆடுவார். தூயதமிழ் அவருக்கு நன்றாகவே கைகொடுத்தது. ஒரு புலவர் படிமம் அவருக்கு வந்தது. 'அவரு கடலாக்குமே' என்று தாள்போடவந்த நாராயணசாமி சொன்னார்

என்னால் சைவநூல்களை ஆரம்பம் முதல் கடைசிவரை படிக்கவும் பிழையிருந்தால் கண்டுபிடிக்கவும் முடிகிறது என்பதை சிவகுருநாதபிள்ளை பலமுறை சோதித்து உறுதிப்படுத்திக்கொண்டார். 'நெசம்மாவே உனுக்கு அல்லாம் புரியுது, என்ன?' என்பார். நான் புன்னகை செய்வேன்.

புத்தகங்களின் கடைசிப்பிரதி நான் சொல்லாமல் வெளியே செல்லக்கூடாது என்று பிள்ளைவாள் ஆணையிட்டுவிட்டார். அத்துடன் அச்சகத்தின் நிர்ணாயக சக்தியாக நான் ஆனேன். உண்மையில் அச்சகம் வடிவேலுவையும் உமாக்காவையும் நம்பித்தான் சென்றுகொண்டிருந்தது. ஆனால் என்னை அவர்களெல்லாம் மிகுந்த பணிவுடன் நடத்தினார்கள்.

அச்சுகோக்கும் பெண்களுக்கு நான் வயதில் மிக இளையவன். அவர்கள் நால்வருக்குமே முப்பதை ஒட்டியவயது. அவர்கள் சம்பாதிக்கும் வரை அவர்களுக்கு வீட்டில் திருமணம் செய்துவைக்கமாட்டார்கள் என்றார் சிவகுருநாதபிள்ளை. 'ஆனா சம்பாரிக்கலேண்ணா எவனும் திரும்பிப்பாக்கமாட்டான்' அவர் சொல்லவருவதென்ன என்று எனக்கு

புரியவில்லை. வாயைத்திறந்து பேசாமல் பார்த்தேன்.

கொஞ்சநாளிலேயே எனக்கு சைவம் சலித்துவிட்டது. பசுபதிபாசம் என்ற அடிப்படைகளைத்தான் திரும்பத்திரும்ப எல்லா நூல்களும் சொல்லின. அதிகபட்சம் ஒரு கட்டுரை. அதுதான் பலநூறு நூல்களாக திரும்பத்திரும்ப அச்சிடப்பட்டு விற்கப்பட்டுக்கொண்டே இருந்தது. ஒன்று, அதைவாசிக்கிறவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. அல்லது அவர்கள் வாசிப்பதே இல்லை.

‘இதைச் சொல்றீங்கதம்பி..வாகாடம், போகர்னு புக்கு போடுவான் பாத்திருக்கீங்களா? ஒரு நாப்பது பச்சிலமருந்து. அவ்ளோதான். நூறுவருசமா அதைத்தான் திருப்பித்திருப்பி போட்டுனே இருக்கான். நம்மாளும் அஞ்சணா அஞ்சுருவாண்ணு குடுத்து சந்தையிலே வாங்கினே இருக்கான்..’என்றார் புத்தகம் வாங்கவந்த பச்சியப்பன். அவர் ஆசிரியர். உபதொழிலாக புத்தகவியாபாரம். புத்தகங்களை ஒட்டுமொத்தமாக வாங்கி பஸ்சில் ஏற்றிக்கொண்டு வெள்ளிக்கிழமை கிளம்பினாரென்றால் சனி ஞாயிறுகளில் கோயில்களில் போட்டுவிட்டு திங்கள் காலை வந்துவிடுவர். முந்தைய விற்பனைக்கான வசூலும் நடக்கும். அவரும் ,நாராயணனும், ராஜமாணிக்கமும் மட்டும்தான் சிவகுருநாதபிள்ளையிடம் புத்தகம் வாங்கினார்கள்.

‘இன்னும் ஒரு அம்பது வருசம் இந்த சித்தமருத்துவ புக்கெல்லாம் இதே சீரா போவும்..நம்மாளு வாங்குவான்’

‘ஏன்?’ என்றேன்

‘எவன் படிக்கிறான்? படிச்சாலும் அந்த மருந்த செஞ்சிர முடியுமா? வலமாப்போற வேம்போட வேரும் வெட்டிவேர் குருத்தும் மூத்தகளுக்கு முட்டையோடே நலமா அரைச்சு நாற்களஞ்சு வேம்பெண்ணை நாலில் ஒண்ணாக்கிண்ணு சும்மா அடிச்சி உட்டா எவனால அதையெல்லாம் போட்டு மருந்தரைக்க முடியும்? பேசாம உள்ளூர் மாட்டாசுபத்திரியிலே போனா அவன் ஊசியக்கீசிய போட்டு மாட்ட காப்பாத்துறான்..’

‘பின்ன எதுக்கு இத வாங்குறானுக?’என்றேன்

‘தம்பி, இத வாங்குறவனுகள்லாம் கிராமங்களிலே இருக்கிற செலபேருதான். ஊரிலே கொஞ்சம் விசயம்தெரிஞ்ச ஆளுண்ணு அவனுக்கொரு பேரு இருக்கும். இந்தமாதிரி நாலஞ்சு புக்கு படிச்சு மனப்பாடமா எடுத்துவிட்டான்னா டீக்கடையாண்ட ஒரு மருவாதி..வேற என்ன?’

‘சைவபுக்கும் அப்டித்தான் வாங்குறானுகளா?’ என்றேன்

‘பின்ன? எந்த ஊரிலயும் ஒண்ணுரெண்டாளு சைவசித்தாந்தப்பளம்னு பேரோட கெடக்கும். களுத்தில கொட்ட, மடியில விபூதி. கொஞ்சம் ஐவேசும் இருந்தா ஊரிலே மருவாதி தன்னால வரும்..அய்யயோ அவாள் சைவப்புலியாக்குமே. ஓடம்பெல்லாம் கோடுகோடா இருக்குமே. சிவபூசை பண்ணாம பச்சைத்தண்ணி பானம் பண்ணமாட்டார்னு ஊரிலே பதறுவானுக. நம்ம மாமா ஒருத்தர் இப்டித்தான் திருப்பாதிரிப்புலியூருலே போயி பளைய ஞானியார் சாமிகளாண்ட தீட்சை வாங்கினு வந்தார். பத்துநாப்பது வருசம் மனுஷன் ஊரையே போட்டு ஆட்டிவச்சார். அத்தைக்கு எந்நேரமும் மொட்டைவசவு. தீட்டு ,ஆசாரம், பூசை அது இதூண்ணு இம்சை.. எவனாம் சிக்கினான்னா ஓடனே எடுத்துடறது..இதே பசுபதிபாசம்தான். பெத்தபுள்ளிங்க மேலே பாசமில்ல. பசுபதிபாசம் மிச்சம்..’

‘சும்மா சொல்வது பிழை’ என்றார் சிவகுருநாத பிள்ளை ‘இது அவசரயுகம். சைவத்தை எளிமையாக அறிமுகம் செய்யக்கூடிய நூல்கள் இவை..பெரிய நூல்களைப்படிப்பவர்கள்கூட—’

‘மண்ணாங்கட்டி..’ என்றார் பச்சியப்பன் ‘ஊருராபோற எனக்குத்தெரியாதா? இதைவிட நல்லாபோற புக்கு என்னது தெரியுமா? காமசாஸ்திரம். எளுவத்திரண்டு பொஸிசன். சந்தைசந்தையா போட்டு விக்கிறானுக்காஞ்ச தென்னமட்டை கணக்கா இருக்கவனுக எல்லாம் பைசா குடுத்து வாங்கிட்டுப்போறானுக. கூடப்போற பெஞ்சாதியப்பாத்தா காஞ்ச வாளமட்டை..அவ என்னத்த பொசிசன் எடுக்கப்போறா?..எளுவத்திரண்டு பொசிசன்..’

‘தேவையில்லாமல் பேசவேண்டாம்’ என்றார் சிவகுருநாத பிள்ளை. முகம் நன்றாகவே சிவந்துவிட்டது

‘சரிதான் நான் எதுக்கு பேசுறேன்? அவனுக்கு எளுவத்திரண்டு பொசிசன் இருக்கு,சைவத்திலே அறுவத்துமூணு நாயன்மாருதானே? அதான் அந்தபுக்கு ஆயிரம் வித்தா சைவம் அம்பது விக்குது..பேசாம இந்த சைவம் அசைவமெல்லாம் ஏறக்கட்டிட்டு நாலு நல்ல புக்கப்போட்டு காசுபாரும்னு சொன்னா கேக்கமாட்டாரு..

‘ஊட்ல பொட்டக்குட்டிகள பெத்துவச்சிருக்கேன்யா..’ என்றார் சிவகுருநாத பிள்ளை

‘அதான் நானும் சொல்றேன்..ரெண்டு பொட்டக்குட்டிக இருக்கே? கையிலே என்ன வச்சிருக்கீர்?’

‘அதுக்காக?’

‘நான் என்ன சொல்ல..என்னப்பா வடிவேலு எப்ப முடிப்பே?

‘கட்டிவச்சாச்சு..’

வடிவேலு என்னைப்பார்த்து புன்னகைசெய்துவிட்டு போனார். சிவகுருநாத பிள்ளை தலைகுனிந்து அச்சிட்ட தாள்களையே பார்த்துக்கொண்டிருந்தார். வடிவேலு சென்றபின் என்னிடம் 'நீ அவன் சவகாசம் அதிகம் வெச்சுக்காதே.படுக்காளிப்பய.என்ன சொல்லினு போறான், பாத்தியா?' என்றார்

'ம்'

'முப்பது வருசம் முன்னாடி எங்க அப்பா இந்த பிரஸ்ஸ எங்கிட்ட குடுக்கிறப்ப டேய் இது தொளிலுல்ல, சரஸ்வதி சேவை.சரஸ்வதி உன்னைய பாத்துப்பாடான்னு சொன்னாரு.அப்பல்லாம் டிரெடில் மிசின்தான்.வடிவேலுவும் அப்பாவும் மட்டும்தான் வேலைக்கு. அப்பா காலத்திலே அச்சடிச்ச பெரியபுராணம் வசனம் இப்பவும் வீட்டிலே இருக்கு.ஒருநாள் கொண்டுவந்து காட்டுறேன், பாரு. ஒத்த ஒரு அச்சுத்தப்பு இருக்காது.சரஸ்வதிபூசையிலே வைக்கணுமானா அந்தமாதிரி புக்கை வைக்கணும். இவன் என்ன கண்டான்? கண்ணெடுத்து ஒரு புக்கை வாசிச்சிருப்பானா? புக்கைவிக்கிறதும் பொகையிலை விக்கிறதும் அவனுக்கு ஒண்ணுதான்'

ஆனால் எனக்கு இரண்டுவாரத்திலேயே தெரிந்துவிட்டது, சிவகுருநாத பிள்ளையின் அச்சகத்தொழில் தரைதட்டி நின்றுவிட்டிருந்தது என்று. அவர் அச்சிட்டுக்கொண்டிருந்த நூல்களெல்லாம் அவரது அப்பாகாலத்தில் ரொக்கப்பணம் கொடுத்து தமிழாசிரியர்களைக்கொண்டு எழுதி வாங்கியவை. அவரது அப்பாவே நாலைந்து நூல்களை எழுதியிருந்தார். எல்லாமே மற்ற புத்தகங்களைப்பார்த்து எழுதப்பட்டவை. அரைநூற்றாண்டுக்கும் மேலாக அதேநூல்கள் அப்படியே திரும்பத்திரும்ப அச்சிடப்பட்டன.

புதியநூல்களுக்கு நான் ஒரு வழி கண்டுபிடித்தேன். நாலைந்து நூல்களில் இருந்து பகுதிகளை எடுத்து ஒன்றாகத் தொகுத்து எழுதி ஒரு புத்தகமாக ஆக்கினேன். சிவகுருநாத பிள்ளை கொஞ்சம் சந்தேகத்துடன்தான் அதை பச்சியப்பனுக்குக் காட்டினார். அவர் உற்சாகமாக 'புதுபுக்கா.பாப்பம்' என்று நூறுபிரதிகள் சேர்த்து வாங்கிக்கொண்டார். சிவகுருநாத பிள்ளை முகம் மலர்ந்துவிட்டது

அதன்பின் நான் அப்படி எட்டு புதிய நூல்களை உருவாக்கினேன். ஒருகட்டத்தில் ஏன் பார்த்து எழுதவேண்டும் என்று தோன்றியது. நானே சொந்தமாக 'சைவசித்தாந்த சிந்தாமணி' என்று ஒரு நூலை எழுதினேன். எண்பது பக்கம். பசுபதிபாசம்தான். கூடவே கொஞ்சம் புதியகதைகளையும் சேர்த்திருந்தேன். 'சைவக்குருமணி' உலகநாதபிள்ளை என்று எனக்குப் பெயர் சூட்டிக்கொண்டேன்

சிவகுருநாத பிள்ளைக்குப்பயம். 'எவனாவது ஏதாவது சொல்லிரப்போறானுக' என்று புலம்பிக்கொண்டிருந்தார். ஆனால் அந்தப்புத்தகம் ஐநூறுபிரதி ஒருமாதத்தில் விற்றுத்தீர்ந்தது. சைவக்குருமணி உலகநாதபிள்ளை மேலும் எட்டு நூல்களை எழுதினார். 'கைவல்யயாத்திரை' ஆயிரம் பிரதிகள் அச்சிடப்பட்டது.

சிவகுருநாத பிள்ளை கொஞ்சம் மனத்தெளிவு கொண்டவராக ஆனார். 'எல்லாரும் இப்டித்தான் புக்க எளுதுறானுகபோல?' என்றார்.

'நான் முழுசா படிச்சுட்டுதானே எழுதறேன்?'

'இல்ல, சைவம் படிச்சு தெளியணும்னா அதுக்கு ஒரு வயசு வேணும்னு சொல்லுவாங்க'

'அது வருசத்துக்கு அஞ்சு வரி படிச்சா.நான் தினமும் படிக்கிறவன்'

சிவகுருநாத பிள்ளை மேலே சர்ச்சை செய்யவில்லை. நான் எழுதிய 'சைவ சூடாமணி' நூலில் அரிஸ்டாடில் மேற்கோள் இருந்ததை சுட்டிக்காட்டி 'இது எப்டி சைவத்திலே?' என்று ஒருநாள் கேட்டார்

'உலகம் முழுக்க இருக்கிற எல்லா ஞானமும் சைவம்தானே?' என்றேன்

'ஆமாமா' என்று அவர் ஒத்துக்கொண்டார்

சித்ரா அச்சகத்தின் கட்டிடம் சிவகுருநாத பிள்ளையின் அப்பா இந்தியாவுக்குச் சுதந்திரம் கிடைப்பதற்கு முன்னால் வாடகைக்கு எடுத்தது. அருகேயுள்ள ஏதோ முப்பாத்தம்மனுக்குச் சொந்தமானது. பின்பக்கம் சுவர் பிளந்து நின்றிருந்தது. இன்னும் நாலைந்து பெருச்சாளிகள் நினைத்தால் சரித்துவிடலாம். அவர் வைத்திருந்த இயந்திரங்கள் அவர் உமாக்காவை கல்யாணம்செய்துகொண்டபோது கிடைத்த சீதனத்தில் வாங்கியவை. எழுத்துருக்களை மாற்றும்படி பச்சியப்பனோ நாராயணனோ கத்த ஆரம்பித்தபிறகுதான் அவரும் உமாக்காவும் அமர்ந்து அதற்கான காசுபற்றி கணக்குபோடுவார்கள். அப்போதுகூட மொத்த எழுத்துக்களையும் மாற்றுவதில்லை. க,ச மாதிரி அதிகமாக பயன்படும் எழுத்துக்களைத்தான் மாற்றுவார்கள். திடீரென்று புத்தகங்களில் சில எழுத்துக்கள் பளிச்சென்று தென்பட ஆரம்பிக்கும்

நான் சிவகுருநாத பிள்ளையிடம் 'நாம வேற மாதிரி புக்கு போடலாமே' என்றேன் 'சமையல் மாதிரி'

'அதுக்கெல்லாம் வேற மார்க்கெட் இருக்கே.' என்றார் அவர். 'மணிமேகலைக்காரன் அடிச்சு குமிச்சுடறானே. நம்ம வேவாரம் கோயிலை நம்பித்தானே'

நான் பச்சியப்பனிடம் பேசிவிட்டு 'சிவ பூசைகளுக்கான சிறப்புச் சமையல்கள்' என்ற நூலை எழுதினேன். நினைவுக்குவந்த எல்லா சமையல்களையும் கொஞ்சம் மாற்றி எழுதிய அந்தநூல் நன்றாகப்போகிறது என்றார்

பச்சியப்பன் மகிழ்ச்சியாக. 'சிவபூசை மூலிகைகள்' 'சிவபூசைக்கான பூக்களும் பலன்களும்' என ஒருமாதத்தில் எட்டு நூல்களை எழுதினேன். எல்லாமே அபிதானசிந்தாமணியில் இருந்து பார்த்து எழுதியவை.

'கொஞ்சம் வேறமாதிரி புக்குகள்கூட போகும்' என்றார் பச்சியப்பன். 'ஜோசியம், மந்திரதந்திரம் இந்தமாதிரி'

'அதெல்லாம் எதுக்கு? ' என்றார் சிவகுருநாத பிள்ளை 'மந்திரமாவது நீறுன்னு சொல்லி வளர்ந்த வாயி'

'அந்த வாயிலே சோறுபோகணுமானா மந்திரம்தான் வேணும்..' என்றார் பச்சியப்பன் 'நீ எளுது தம்பி..இந்தாள் போடலேன்னா நான் வேற பிரஸ்சிலே சொல்லி அச்சடிக்கிறேன்'

உமாக்கா என்னிடம் எழுதச்சொன்னாள். நான் 'வர்ம அடிமுறை' 'மலையாளத்து மாந்த்ரீகம்' ஆகிய இரு நூல்களை எழுதினேன். அச்சில் வந்த என்னுடைய முதல் புனைவுநூல்கள் அவையே. என் பெயர்கள் பெருகின. சங்கரப்பிள்ளை ஆசான், ஆளூர் அச்சுதன், துர்க்கைதாசன். பச்சியப்பன் வாரம் இருமுறை வர ஆரம்பித்தார். அவரது மகனும் வந்து சரக்கு எடுத்துச்செல்வார்.

அச்சகம் கொஞ்சம் தெளிவடைந்தது. இருந்த கடன்களை அடைக்கமுடிந்தது என்றாள் உமாக்கா. புதிய எழுத்துருக்கள் வாங்கப்பட்டன. எந்திரத்தின் பழுதுகள் சரிசெய்யப்பட்டன. உமாக்கா ஒரு சீட்டில் சேர்ந்திருக்கிறாள் என்று என்னிடம் வடிவேலு சொன்னார். 'நல்ல காசு ஓட்டம் இப்ப..இப்டியேபோனா வேற நல்ல மிசின் வாங்கிடலாம்'

எனக்கு சிவகுருநாத பிள்ளை நூறுரூபாய் சம்பளம் ஏற்றிக்கொடுத்தார். அதைப்பற்றி நான் கவலைப்படவும் இல்லை. வாரம் இரண்டுமுறை பஸ்ஸில் ஏறிச்சென்று உயர்தர திரையரங்கில் மெத்தைநாற்காலியில் அமர்ந்து ஆங்கிலப்படம் பார்த்து நல்ல ஓட்டலில் நல்ல சிற்றுண்டி சாப்பிட்டு திரும்பியபிறகும் என்னிடம் காசு மிச்சமிருந்தது. அதை ஊகித்தறிந்த வடிவேல் சாயங்காலம் டீ குடிக்க சிவகுருநாத பிள்ளை வெளியே செல்லும் நேரம் பார்த்து என்னிடம் கடன்கேட்டு பெற ஆரம்பித்தார். அவர் ஏழுமணிக்குத் திரும்பிச் செல்லும்போது வழியிலேயே குடித்துவிட்டுச் செல்வதை நான் பலமுறை பார்த்திருந்தேன். வாங்கிய பணத்தை அவர் திரும்பத்தருவதுமில்லை. ஆனால் என்னால் ஒருவர் கேட்டால் இல்லை என்று சொல்லமுடியாது.

உமாக்கா காலையிலே வர ஆரம்பித்தாள் கிறிஸ்டினா என்ற புதிய பெண் அச்சுகோக்க சேர்த்துக்கொள்ளப்பட்டாள். அச்சகத்தில் சிலசமயம் இரவு பத்துமணிவரைக்கும்கூட வேலை நடந்தது. கட்டுகட்டாக நூல்கள் வெளியே சென்றன.

சிவகுருநாத பிள்ளை பிள்ளை மட்டும் எப்போதும் ஏதோ தப்பு நடக்கிறது என்ற பாவனையில் இருந்தார். புத்தகம் என்ற ஒன்றை சமகாலத்தில் உயிரோடிருக்கும் ஒருவர், அதிலும் நரைதிரை இல்லாத ஒருவர், எழுதமுடியுமென அவரால் ஏற்கமுடியவில்லை. அதில் ஏதோ மோசடி இருக்கிறது என்று தோன்றிக்கொண்டிருந்தது அவருக்கு.

'இதிலே ஏதாவது தப்பு இருந்தா?' என்று ஒருமுறை என்னிடம் கேட்டார்

'தப்புல்லாம் இல்ல..பாத்துத்தான் எழுதியிருக்கு' என்று திடமாகச் சொன்னதும் பேசாமலானார்.

சித்ரா அச்சகத்தின் எல்லா புத்தகங்களும் நியூஸ்பிரிண்டில்தான் அச்சிடப்பட்டன. நியூஸ்பிரின்ட்டுக்கு அன்றெல்லாம் அரசுக்கட்டுப்பாடு இருந்தது. அதை ஊடுருவ டம்மி நாளிதழ்களை சிலர் நடத்திவந்தனர். தினம் இருநூறு பிரதி அச்சிட்டு கோப்புகளுக்கு அனுப்பிவிடுவார்கள். அரசு கோட்டாவில் கிடைக்கும் நியூஸ்பிரிண்டை கறுப்புச்சந்தையில் விற்பார்கள்.எங்களுக்கு நியூஊஸ்பிரிண்ட் தி.மு.க காரரான எழிலரசன் என்ற மயில்சாமி நடத்திய தினஞாயிறு என்ற இதழிலிருந்து வந்தது. ஏராளமான அச்சகங்கள் அதை நம்பி இருந்தன.

காலையில் வடிவேலு தாள் இல்லை என்று சொல்லிவிட்டார். சிவகுருநாத பிள்ளை திகைத்து பேசாமல் அமர்ந்துவிட்டார். அவரது அச்சகவாழ்க்கையில் அப்படி ஒரு நிலையை அவர் சந்தித்ததே இல்லை. உமாக்காதான் நிலைமையைப்புரிந்துகொண்டு முன்வந்தார். மாலைக்குள் பச்சியப்பனின் பையனுக்கு கட்டு கொடுக்கவேண்டும். தொலைபேசியில் பேசியபோது தினஞாயிறு அச்சகத்தில் தாள் இல்லை என்றார்கள். பச்சியப்பனுக்கே தொலைபேசியில் செய்திசொல்லி வழிகேட்டாள் உமாக்கா

பச்சியப்பன் சொன்னார் என்று நான் ஐந்து தெரு தள்ளி இருந்த ஓர் அச்சகத்துக்குச் சென்றேன். மெரினா அச்சகம் சாலையில் இருந்து பிரிந்துசென்ற ஒரு சந்துக்குள் இருந்தது. அதன் மேஜையில் முன்வழுக்கையுடன் குள்ளமான ,சிவப்பான, மனிதர் அமர்ந்திருந்தார். அவர்தான் உரிமையாளர் என்று நினைத்தேன். ஆனால் அச்சகம் ஒரு கிறித்தவப்பெண்ணுக்குச் சொந்தமானது, அவள்தான் அதை நடத்திவந்தாள் என்றும் அந்த மனிதர் அந்த பெண்மணியின் காதலர் என்றும் பின்பு தெரிந்துகொண்டேன்.

பச்சியப்பன் அனுப்பினார் என்று சொன்னதும் உற்சாகமாக என்னை அமரச் சொன்னார். காகிதம் கிடைக்குமா என்று கேட்டேன். தன்னால் முடிவெடுக்கமுடியாது, ரோசம்மாவிடம் கேட்டுச் சொல்வதாகச் சொன்னார். நான் அவசரம் என்றேன். யோசித்துவிட்டு 'நான் வேணுமானா போய் சொல்லிப்பாக்கிறேன்' என்றார்

அவர் வெளியே சென்றதும் நான் மேஜைமேல் இருந்த அச்சுத்தாள் மடிப்புகளை எடுத்து அனிச்சையாக பிழைதிருத்த ஆரம்பித்தேன். நாலைந்து சொற்றொடர்களுக்குப்பின் சட்டென்று எழுந்துவிட்டேன். யாரும் பார்க்கவில்லை என்று அமர்ந்தேன். மூச்சுத்திணறியது. எழுத்துக்களைப் பார்க்கமுடியாமல் பார்வை அலையடித்தது. அது ஒரு பாலுணர்ச்சிக்கதை. நான் வாசித்தபக்கத்தில் ஒருவன் இரண்டுபெண்களிடம் உறவுகொண்டபடி இருந்தான்.

படபடப்புடன் அந்த அச்சகத்தைப்பார்த்தேன். பதினைந்து இளம்பெண்கள் அச்சுகோர்த்துக்கொண்டிருந்தார்கள். இரண்டு கம்பாசிட்டர்கள் வேலைசெய்ய நான்கு யந்திரங்கள் ஓடிக்கொண்டிருந்தன. மேஜைமேல் அந்த நூலின் பிற பக்கங்கள் இருந்தன.

முன்வழுக்கை மனிதர் சைக்கிளை வைக்கும் ஒலி கேட்டு நூலை திரும்ப வைத்தேன்.அவர் உள்ளே வந்து வியர்வைக்கு சட்டையை மேலே தூக்கி விட்டபின் அமர்ந்தார். 'காலம்பர பத்துமணி ஆகல்ல. அதுக்குள்ள வெயில்..என்ன சாப்பிடறேள்?'

'பேப்பர்?'

'அதுகுடுத்திடறேன்..சொல்லிட்டாங்க'

'வெலை?'

'வெலையெல்லாம் இல்ல..ஒருவாரத்துக்குள்ள பேப்பராவே குடுத்திருங்கோ..ஏன்னா வெலைக்கு வித்த விஷயம் நமக்கு சப்ளை பண்றவனுக்குத்தெரிஞ்சா அவன் எகிறிண்டுடுவான்..'

நான் யோசித்து, துணிந்து 'இது..இந்த புக்கு' என்றேன்

'இங்க இதான் அதிகமும் போடுறோம்..நல்லா போகுது' என்றார் 'பச்சியப்பன்கூட இங்கதான் வாங்கிண்டிருக்கார்'

நான் பெண்களைப்பார்த்தபின் 'இவங்களா கம்போஸ் பண்றாங்க?' என்றேன்

'அவங்கள்லாம் படிக்க மாட்டாங்க தம்பி..அப்டியே கம்போஸ் பண்ணிடுவாங்க'

அவர் சொல்வது எனக்குப்புரிந்தது. அச்சுகோப்பவர்கள் எதையும் வாசிப்பதில்லை. வாசித்தால் சித்ரா அச்சகத்தில் அவர்கள் சைவ அறிஞர்களாக அறியப்பட்டிருக்கவேண்டும். மொத்த நூலும் இடவலமாகத் திரும்பிய எழுத்துக்களாக அவர்கள் வழியாகக் கடந்துசெல்கிறது. ஒரு தடம்கூட இல்லாமல்.

'இத எழுதுறது யாரு?'

'நான்தான். நான் கொஞ்சம் கதைகிதை எழுதுவேன்..'

'இதெல்லாம் எப்டி?'

'சும்மா மூர்மார்க்கெட்டு போயி எதாவது இந்தமாதிரி புக்கா வாங்கி அப்டியே தமிழ்ல எழுதிடறதுதான்'

சித்ரா அச்சகத்துக்கு வந்தபின்னர் அச்சுகோக்கும் பெண்களையே பார்த்துக்கொண்டிருந்தேன். எழுத்தறிவே இல்லாமல் வாழ்வதைவிட கொடுமையானது அது என்று தோன்றியது.நாளெல்லாம் எழுத்தில், இலக்கியத்தில் வாழ்க்கை. ஆனால் ஆனால் எந்த அறிவும் இல்லை. சுட்டசட்டி சட்டுவங்கள்.

விற்பவர்களும் அப்படித்தான். சென்னையில் பல இடங்களில் நியூ செஞ்சுரி புத்தகநிலையத்தின் வண்டிகள் நிற்கும். கையில் காசிருந்தால் உடனே ஏறிவிடுவேன். அதிகநேரம் நிற்பவனாதலாலும் என்னுடைய பரட்டைத்தோற்றத்தாலும் சந்தேகப்பட்டு உள்ளே எட்டிப்பார்த்துக்கொண்டே இருப்பார்கள் விற்பனையாளர்கள். சிலசமயம் உள்ளே வந்து அருகே நிற்பார்கள்

'யூரி பாலாயன் எழுதின நாவல் ஏதாவது இருக்கா?'

'இருக்கும் தேடிப்பாருங்க'

'இல்ல..பாத்துட்டேன்..உங்க ஸ்டோரிலே இருக்கா?'

'இல்லீங்க..தலைப்பு எல்லாம் ஞாபகம் வச்சுக்கிடறதில்ல..நீங்களே பாத்துக்கிடுங்க'

சிவந்த அட்டைபோட்ட கனத்த லெனின் ஸ்டாலின் நூல்கள். மார்க்ஸ் வாழ்க்கை வரலாறு. மூலதனம் ஆங்கிலப்பதிப்பு நான்கு பெரும் நூல்களாக. காகிதவாசனையே வேறுமாதிரி இருந்தது. முகந்து முகர்ந்து திரும்ப வைத்தேன். அங்கேயே நின்றுகொண்டிருக்கவேண்டும் என்று தோன்றியது.கையிலுள்ள அத்தனை காசுக்கும் அனைத்துநூல்களையும் வாங்கிவிடவேண்டும் என்று. என்ன ஒரு வடிவமைப்பு. புத்தகங்கள் அல்ல அவை. குண்டுகுண்டு குழந்தைகள் அவை.

உள்ளே ஏறிவந்த இருவர் நாலைந்து புத்தகங்களை எடுத்துக்கொண்டார்கள். தலைப்புகளை ஓரக்கண்ணால் பார்த்தேன். 'பொதுவுடைமைதான் என்ன?' 'புரட்சியின் இடிமுழக்கம்' 'நூறுபூக்கள் மலரட்டும்' .அந்த ஆட்களைப்பார்த்தேன். சிறிய கட்டம்போட்ட வெளிரிநிறச் சட்டை,பாண்ட், வாட்ச். மெல்லிய தொப்பை. அரசூழியர்கள். ஒருவர் ஒரு நூலை பிரித்துப்பார்த்து ஏதோ சொல்ல இன்னொருவர் 'அதானே அப்பவே சொன்னேன் தோழர்?' என்று

விளக்கமளிக்க அவர்கள் நடந்து விலகிச்சென்றார்கள்.

திரும்ப நடந்தபோது மனம் சோர்ந்திருந்தது. பிரம்மாண்டமான கட்டிடங்கள், கிறுக்குபிடித்த யந்திரம்போல இயக்கத்திலிருக்கும் நகரம். கன்னிமாரா ஓட்டல் வழியாக வந்துகொண்டிருந்தபோது முதல்முறையாக அதை ஏறிட்டுப்பார்த்தேன். மதிலுக்கு அப்பால் என்னவென்றே தெரியவில்லை.வெளியே நின்று என்னைப்போலவே நாலைந்து பஞ்சைப்பராரிகள் அந்த ஓட்டலைப்பார்த்துக்கொண்டிருந்தனர். செத்தகாலேஜ் உயிர்க்காலேஜ் பார்க்க கொண்டுவரப்பட்டவர்களாக இருக்கும். சொந்தக்காரர்கள் ஓட்டலின் அருமையை சொல்கிறார்கள். ஏதோ அந்தப்பெருமைக்கு தாங்களும் உரிமையாளர்கள் போல

ஒரு பெரிய கண்டசா கார் மெல்ல வெளிவந்தது. மிதப்பதுபோல சாலையில் சென்றது. அதனுள் இருப்பவர்களைத் தெரியவில்லை. திரும்பி நடக்கும்போதே திட்டம் உருவாகிவிட்டது. நேராக மெரினா அச்சகம் சென்றேன். முன்வழுக்கை இருந்தார். ஓர் அதிதீவிர இந்துத்துவ பத்திரிகையை வாசித்துக்கொண்டிருந்தார்.நான் அதை பலவருடம் தொடர்ந்து வாசித்திருக்கிறேன். என் கட்டுரைகள் சில அதில் வெளிவந்துமிருந்தன.

'என்ன ?'' என்றார் 'இப்ப எங்களுக்கே தாள் பத்தலை'

'அதுக்காக இல்லை' என்றேன் 'நான் அன்னிக்குப் பாத்தேனே அந்தமாதிரி புக்கு ஒண்ணு எளுதிக்குடுத்தா என்ன குடுப்பீங்க?'

அவர் சற்று திகைத்துவிட்டார். கண்களில் உடனே ஒரு தந்திரம் வந்தது 'அப்டிக்கேட்டா..'

'நான் நல்லாவே எழுதுவேன்..அங்க எல்லா புக்கும் நான் எழுதுறதுதான்'

'பச்சியப்பன் சொன்னாரு..ஒரு எரநூறு..'

'ஆயிரம் ரூபாய்னா சொல்லுங்க..எழுதிக்குடுக்கறேன்'

'ஆயிரமா? ஆயிரம்னா..'

'சரி பரவாயில்ல..ஆயிரம்னா எழுதறேன்' என்றேன்

எழப்போனவனை அவர் கையாட்டி அமரச்சொன்னார் 'என்ன அவசரம்..பேசுவோமே? அஞ்ஞூறு போட்டுக்குவோம்''

'ஆயிரம்னா மட்டும்தான்'

ஆயிரத்துக்கே ஒப்புக்கொண்டார். 'நூத்தம்பது அச்சுப்பக்கத்துக்கு கொறையக்கூடாது..வாசிக்கிறாப்ல கதை இருக்கணும்..'

'சரி..'

மொட்டைமாடியில் படுத்திருக்கும்போது என்ன எழுதுவதென்று தெரியவில்லை. நான் அப்படிப்பட்ட எழுத்து எதையும் வாசித்ததுமில்லை. மறுநாள் மூர்மார்க்கெட் சென்று ஒரு புத்தகம் வாங்கிக்கொண்டு வந்தாலென்ன என்று தோன்றியது. அடுத்தக் கணம் இது என்ன கிறுக்குத்தனம் என்றும் தோன்றியது. இல்லை இது எனக்குத்தேவை. இந்தப் பணத்துடன் கன்னிமாராவுக்குள் நுழைந்து ஒருநாள் தங்கவேண்டும். பிரபுக்களைப்போல ஒருநாள் வாழவேண்டும். மனிதனாக நான் எவருக்கும் குறைந்தவனல்ல என்று எனக்கே தெரியவரும். நான் அங்கே வாழ்வதில்லை என்றால் அதற்குக் காரணம் அது எனக்குப்பிடிக்கவில்லை என்பதற்காகத்தான்

ஆமாம், நான். நான் போவது அனுபவத்துக்காக மட்டும்தான். அதை நான் எழுதுவேன். எழுதுவதற்காகத்தான். திரும்பிவரும்போது அங்கே ஒரு குண்டு வைத்துவிட்டு வந்தாலென்ன? குண்டு தயாரிப்பதைப்பற்றி சிந்திக்க ஆரம்பித்தேன். சிவகாசியில் இருந்து வெடிமருந்து வாங்கமுடியும். அதை ஒரு பெரிய பெட்டியில் கொண்டுசென்று இரவிலேயே இணைத்துவிடவேண்டும். அந்த ஓட்டலின் முகப்பில் அதை வைத்து கொளுத்தி..ஆனால் நான் அங்கிருந்து வந்தபின் அது வெடிக்கும்படி எப்படி அமைப்பது? ஒருகட்டத்தில் கற்பனை முன்னகரவில்லை.

கண்களைமுடிக்கொண்டே படுத்திருந்தேன். ஒரு கதை எழுத்வேண்டும். பாலுறவுபற்றி. எப்படி? இவற்றை எல்லாம் யார் வாசிக்கிறார்கள்? யார், சைவசித்தாந்தமும் வாகாடமும் மாந்திரீகமும் வாசிப்பவர்களைப்போல சிலர்தான். இவர்களும் எதையும் செய்யப்போவதில்லை. வாசிப்பவர்களில் பெரும்பாலானவர்கள் செய்யவே முடியாதவற்றைத்தான் வாசிக்கிறார்கள். நடக்கவே முடியாததைத்தான் விரும்புகிறார்கள்.

உலகம் முழுக்க இல்லாதவற்றைப்பற்றித்தான் எழுதிக்குவிக்கப்படுகின்றன. அச்சகங்கள் ஓடிக்கொண்டே இருக்கின்றன. காகிதங்கள் புத்தகங்களாக உருமாறுகின்றன. சொற்கள் இடவல எழுத்துக்களை பிடித்து தங்களை நோக்கித்திருப்பிக்கொண்டே இருக்கின்றன..ஆனால் சிலசமயம் நடந்துவிடுகிறது. கனவுகள் பலிக்காவிட்டாலும் கெட்டகனவுகள் பலித்துவிடும் என்று என் பாட்டி சொல்வாள்..

தூங்கிவிட்டேன். நள்ளிரவின் குளிரில் பாயை எடுத்து இடுக்கிக்கொண்டு கீழே வந்தபோது எழுதவேண்டியது மனதில் வந்துவிட்டது. உடனே சீராகக் கிழிக்கப்பட்ட நியூஸ்பிரின் தாளில் பென்சிலால் வேகமாக எழுத ஆரம்பித்தேன்.எழுத

ஆரம்பித்தாலே எழுத்து பெருகி வருவது எனக்கு எப்போதுமே வழக்கம். சிலநிமிடங்களுக்குள் கதை நடக்கும் இடத்தை, மனிதர்களை கண்முன் காண ஆரம்பித்தேன்

விடிந்தபோது பாதி எழுதிவிட்டிருந்தேன். விட்ட இடம் பற்றிய நினைப்புடன் படுத்து தூங்கி அச்சுகோக்கும் பெண்கள் வந்தபோதுதான் எழுந்தேன். காலைஉணவுக்குப்பின் மீண்டும் எழுதினேன். மதியம் தூங்கியபின் மீண்டும் எழுதி பின்னிரவில் நிறுத்தினேன். மீண்டும் மறுநாள் காலையில் எழுதி மதியம் நாவலைமுடித்துவிட்டேன். பதினைந்து அத்தியாயங்கள்.

ஒருவன் சென்னையில் மாடியறை ஒன்றில் வாழ்கிறான்.நிரந்தர வேலை கிடையாது. அவ்வப்போது எதையாவது செய்து ஏதாவது சாப்பிட்டு இருந்துகொண்டுர்க்கிறான். அவனுடைய அறை அறையே அல்ல. கள்ளிப்பெட்டிமரத்தால் சுவர்கள் அமைத்த ஒரு இடுக்கு. அதனுள் அவனுடைய சிறிய கட்டிலும் ஒரு கள்ளிப்பெட்டியும் வைக்குமளவுக்குத்தான் இடம்.

அவனால் எவரையும் நேரில் பார்த்துப் பேசமுடியாது. எதையுமே கண்களைத் தூக்கிப்பார்க்கும் தைரியமில்லை. சாலையில் தலைகுனிந்துதான் நடப்பான். அவன் வெளியுலகை தைரியமாகப் பார்ப்பது அவன் அறையின் சுவரில் உள்ள விரிசல்கள் வழியாகத்தான். மணிக்கணக்கில் அதன்வழியாக வெளியே சாலையையும் மக்களையும் பார்த்துக்கொண்டிருப்பான். அவனுடைய ஒரே ஆனந்தம் அதுதான்

ஒருநாள் மறுபக்கம் விரிசல் வழியாகப்பார்ப்பவன் அங்கே ஒரு வீட்டில் குடிவந்திருக்கும் பெண்ணைப்பார்க்கிறான். அவள் திருமணமாகி குழந்தைகளுடன் அங்கே வசிக்கிறாள். அவன் அவளைப் பார்க்க ஆரம்பிக்கிறான். நுட்பமாக கவனமாக பார்த்துக்கொண்டே இருக்கிறான்.அவளுடைய உடலை, குளிக்கும்போது நிர்வாணத்தை. ஒருகட்டத்தில் விதவிதமாகக் கற்பனைசெய்ய ஆரம்பிக்கிறான். அவனுடைய கற்பனைகளில் அவளுடன் உறவுகொள்கிறான். பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு இக்கட்டுகளைத் தாண்டி அந்த உறவு நிகழ்கிறது. அதுதான் நாவல்.

நாவலின் முடிவில் அவனுக்குச் சினிமா வாய்ப்பு கிடைக்கிறது. உதவி இயக்குநராக. இருபதுநாள் படப்பிடிப்புக்குச் சென்றுவிட்டு நள்ளிரவில் தன் வீட்டுக்குத் திரும்பி வருகிறான். இருட்டிலேயே படுத்துக்கொள்கிறான். கதவை யாரோ சுரண்டுகிறார்கள். திறக்கிறான், அவள்தான். அவன் பிரமித்து நிற்கிறான். ‘நீ பார்ப்பது எனக்குத் தெரியும்-நீ வருவதற்காகக் காத்திருந்தேன்-என்னால் தாளமுடியவில்லை’ என்கிறாள்.

அவளுடன் அன்றிரவெல்லாம் அவன் உறவாடுகிறான். காலையில் அவன் தூங்கி கண்விழிக்கையில் கதவு திறந்திருக்கிறது. அவள் சூடியிருந்த முல்லைச்சரத்தின் வாசனை அறையில் எஞ்சியிருக்கிறது. பல்தேய்த்துக்கொண்டிருக்கும்போது பார்க்கிறான், அவள் வீட்டில் வேறு ஒரு குடும்பம் இருக்கிறது. அவர்கள் எங்கே என்று கூட்டிபெருக்கவரும் கிழவியிடம் கேட்கிறான். பத்துநாட்களுக்கு முன்னால் அந்தப்பெண் தூக்குபோட்டு தற்கொலைசெய்துகொண்டதாகச் சொல்கிறாள்.

கதையை என் முன்னாலேயெ முன்வழுக்கைக்காரர் வாசித்தார் ‘பிரம்மாதம்-நீங்க நன்னா எழுதறேள்-சீரியஸாக்கூட எழுதலாமே’ என்றார்

‘சீரியஸான்னா?’

‘சீரியஸான்னா-தி.ஜானகிராமன் மாதிரி?’

‘நீங்க அதெல்லாம் படிப்பீங்களா?’என்றேன்.

‘படிப்பேனா? உசிராக்கும்.நான் நேர்லே போய் பாத்து பேசியிருக்கேன்’என்றார் அவர்

‘இங்கதான் இருக்காரா?’

‘நாசமாப்போச்சு-போனமாசம்தான் செத்துப்போனார்-’என்றார்

‘அய்யோ’

‘அநியாயம்-ராயப்பேட்டை ஆஸ்பத்திரியிலே அவருக்கு ஒரு குட்டி ஊசிய தப்பா போட்டுட்டா-அப்டியே போய்ட்டார்-என்னத்தைச் சொல்ல-குபராவ பட்டினிபோட்டு கொன்னாச்சு-இந்தமட்டுக்கும் இவர அறுபதுவயசு வரை விட்டுவச்சிருந்தோமே’

நான் சட்டென்று ஒரு கூச்சத்தை அடைந்தேன். ‘இல்ல-இது’ என் நாவலை இழுத்தேன்

‘ஏன்?’

‘இல்ல-நீங்க இலக்கியமெல்லாம் வாசிப்பீங்கன்னு தெரியாது’

‘அதுக்கென்ன? எல்லாம் எழுத்துதானே?’

*ஆயிரம்ருபாயை அப்படியே தூக்கிக் கொடுத்துவிட்டார். நான் ரூபாயுடன் திரும்பியபோது அதை அப்படியே தூக்கி எங்காவது வீசிவிடவேண்டும் என்று நினைத்தேன். நூறுரூபாய்ச்சுருள்கள். அவை கனமாக சட்டைப்பையில் தொங்கின. அச்சகம் வந்ததும் அதை ஒளித்துவைத்துவிட்டேன்.*

*பிறகு அந்த ரூபாயை நான் எடுக்கவேயில்லைஅதைப்பற்றி நினைக்க என் அகம் விரும்பவில்லை. ஆகவே அதை மறந்துவிட்டேன். மெரினா அச்சகம் பக்கம் நடமாடவுமில்லை. பன்னிரண்டுநாட்கள் கழித்து ஒரு சந்தர்ப்பத்தில் பணத்தை எடுக்கநேர்ந்தது*

*கிறிஸ்டினாவின் அப்பா வேலைமுடிந்து சைக்கிளில் சாலைவழியாக வந்துகொண்டிருந்தபோது யாரோ லாரிக்காரன் அடித்துப்போட்டுவிட்டுச் சென்றிருக்கிறான். அவர் இரண்டுமணிநேரம் அங்கேயே கிடந்து போலீஸாரால் ராயப்பேட்டை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டார். காலையில் செய்தி கிடைத்ததும் அச்சகத்தை மூடிவிட்டு எல்லாரும் பஸ் ஏறி ராயப்பேட்டை சென்றோம்.*

*ராயப்பேட்டை ஆஸ்பத்திரியின் வார்டுகளுக்குள் நாய்கள் நடமாடின. படுக்கைகளின் நடுவே தரையில்கூட நோயாளிகள் படுத்திருந்தார்கள். வெளியெ திண்ணைகளில் கூட தூண்களில் குளுக்கோஸ் புட்டிகளைத் தொங்கவிட்டு நோயாளிகளை படுக்கவைத்திருந்தார்கள். சத்தமும் நெர்சலும் குப்பையும் எச்சிலுமாக பெரிய சந்தைபோலிருந்தது. கிறிஸ்டினாவும் அவள் தங்கை ரெஜினாவும் இருப்பதை நான்தான் முதலில் கண்டுபிடித்தேன்*

*எங்களைக் கண்டதும் கிறிஸ்டினா கதறி அழ ஆரம்பித்துவிட்டாள். அவள் அப்பாவுக்கு நிறைய எலும்புகள் முறிந்திருந்தன. ஏராளமான ரத்தம் வீணாகிவிட்டிருந்தது. ஆனால் அவரை அங்கே கொண்டுவந்துபோட்டு கட்டுபோட்டு பொதுவான சில ஊசிகள் போட்டதைத் தவிர எந்த மருத்துவமும் அதுவரைக்கும் செய்யவில்லை. டாக்டர் என எவரும் வந்து பார்க்கவில்லை. கிறிஸ்டினாவின் அம்மா மௌனமாக மாறி மாறி எங்களைப்பார்த்துக்கொண்டிருந்தாள். அவளுக்கு ஏதோ பிரச்சினை இருப்பது தெரிந்தது. அவள் மனச்சிக்கல் கொண்டவள் என கிறிஸ்டினா பிறகு சொன்னாள்.*

*‘எங்கப்பா போனா எங்களுக்கு யாருமில்லே..எங்கப்பா போனா நாங்க உசிரோட இருக்கமாட்டோம்’ என்று கிறிஸ்டினா கதற ரெஜினா அக்காவைக் கட்டிக்கொண்டு அழுதாள்.*

*‘இருடீ..இப்ப என்ன ஆச்சு..ஏங்க டாக்டரைத்தான் போய் பாக்கிறது..’*

*நானும் சிவகுருநாத பிள்ளையும் டாக்டரைப் போய்பார்த்தோம். அவர் அவசரமாக கிளம்பிக் கொண்டிருந்தார். ‘என்ன பண்ணச் சொல்றீங்க? இங்க என்ன பண்ணணுமே அதைப்பண்ணியாச்சு..எலும்ப கட்டியிருக்கு. புண்ண வச்சு கட்டியாச்சு. ஆண்டிபயாட்டிக் குடுத்தாச்சு..இனிமே வெளியேதான் மருந்து வாங்கணும்..’*

*நான் ‘அவங்க கிட்ட பணமில்ல’ என்றேன்*

*‘அப்ப பாப்பம்’*

*‘இங்கேயே வைச்சு பாருங்க டாக்டர்..’ என்றேன் ‘வேணுமானா—’*

*அவர் என்னைப்பாராமல் ‘ஒரு ரெண்டாயிரம் ரூபா ஆயிரும்’ என்றார்*

*‘ரெண்டாயிரம் குடுத்திடறோம்’*

*‘இப்பவே குடுக்கணும்;’*

*‘ஒருமணிநேரத்திலே குடுத்திடறேன்..’*

*டாக்டரை விட்டு வந்ததும் சிவகுருநாத பிள்ளை ‘சத்தியமா எங்கிட்ட சல்லிப்பைசா இல்ல..’ என்றார். நான் ஏதோ சொல்ல வருவதற்குள் ‘இப்ப கொஞ்சம் காசு வருதுதான். ஆனா க்டன் ஏகப்பட்டது இருக்கு..ஒண்ணொண்ணா இப்பதான் அடைக்கிறேன்..’ என்றார்*

*நான் பேசாமல் நடந்தேன்*

*‘அஞ்சோ பத்தோ குடுத்திடலாம்..’ பின்பு ‘ஒரு நூறு ரூவா வேணுமானா என் கணக்குலே’ என்றார்*

*நான் பஸ்ஸைப்பிடித்து அச்சகம் சென்று பணத்தை எடுத்துக்கொண்டேன். மெரினா அச்சகம் போய் மேலும் ஆயிரத்தைநூறு ரூபாய் வாங்கிக்கொண்டேன். டாக்டரை அவரது அறைக்குள் சென்று கண்டு இரண்டாயிரத்தைக் கொடுத்ததும் கிறிஸ்டினாவின் அப்பாவை உள்ளே கொண்டுசென்றார்கள். கிறிஸ்டினாவின் கையில் ஐநூறு ரூபாயைக் கொடுத்தேன்*

*திரும்ப பஸ் ஏறும்போது உமாக்கா ‘நான் ஒரு முந்நூறு கொண்டாந்திருந்தேண்டா’ என்றாள் ‘அப்றமா ஒரு எரநூறு குடுக்கிறேன். அதுக்கு தெரியாம கொண்டுபோயிக்குடு’ என்ன?*

அன்று இரவு அச்சகத்தில் நானும் சிவகுருநாத பிள்ளையும் உமாக்காவும் இருந்தோம். சிவகுருநாத பிள்ளை என்னிடம் ‘அந்த பணம் ஏது? உண்மையச் சொல்லிடணும்-’ என்றார்

நான் உமாக்காவைப் பார்த்தேன்

‘சொல்லு’

‘உமாக்கா அந்தப்பக்கம் போகட்டும், சொல்றேன்’

‘அவ இருக்கட்டும், சொல்லு’

நான் உமாக்காவைப் பார்ப்பதைத் தவிர்த்தேன். மெல்லியகுரலில் ‘மெரினா பிரஸிலே குடுத்த பணம்’

‘எதுக்கு?’

‘புக்கு எழுத’

‘என்ன புக்கு’

‘செக்ஸ் புக்கு’

சிவகுருநாதபிள்ளை உமாக்காவைப்பார்த்தார். வாய் திறந்திருந்தது

‘சரிதான் அவன் என்னமோ எழுதறான். சம்பாரிக்கறான்- நமக்கு என்ன ?’ என்றாள் உமாக்கா

‘நமக்கு என்னவா? டீ இது நம்ம பிரஸ்ஸுரிஷிமாதிரி எங்கப்பா இங்க இருந்திருககர்-இந்தக்கபோதி-இவன்-’ சட்டென்று கூவியபடி எழுந்தார் ‘‘டேய் வெளியேபோ’

‘இந்தாருங்க-’

‘வாயமுடுடீஎனக்கு என்ன அந்த நாறத்தொழில் பண்ணத் தெரியாமலா இருக்கு? மானமா பொழைக்கிறவண்டீடேய் நாயே, வெளியே போறியா இல்லியா?’

நான் என் பையை எடுத்துக்கொண்டு உடனே கிளம்பிவிட்டேன். நேராக மெரினா அச்சகம் சென்றேன். அங்கேயே தங்கிக்கொள்ளச் சொல்லிவிட்டார் முன்வழுக்கை. ஆனால் மறுநாளே கிளம்பி வேறு ஒரு அச்சகத்தில் சேர்ந்துவிட்டேன்.

மெரினாவுக்காக நான் பாலுறவுக்கதை எழுதவில்லை. என்னால் மேற்கொண்டு அதை எழுதமுடியவில்லை. பதிலுக்கு மூன்று சமையல்நூல்களும் இரண்டு துப்பறியும் நாவல்களும் எழுதிக்கொடுத்தேன்.

இரண்டுவாரம் கழித்து நான் சாப்பிட்டுவிட்டு வரும்போது தெருவில் உமாக்காவைப் பார்த்தேன். தலையில் முந்தானையைப்போட்டுக்கொண்டு அசைந்து அசைந்து நடந்துகொண்டிருந்தாள். இரட்டைமூக்குத்தியைக் கண்டதும் மனம் திடுக்கிட்டது. சந்துவழியாகச் செல்லலாம் என்று நினைத்தேன். ஆனால் அவள் என்னைப்பார்த்துவிட்டு ஒதுங்கி நின்றாள். நான் அருகே சென்றேன்

‘நல்லா இருக்கியாப்பா?’ என்றாள்

‘ம்’ என்றேன்.

‘அந்த வேதக்காரக்குட்டியோட அப்பா பொழைச்சுகிட்டார்-எல்லாம் உம்புண்ணியம்’ என்றாள்.

‘நான் தெரியாம-’

‘அது ஒண்ணும் தப்பு இல்ல-’ என்றாள் ‘சும்மா தப்புசரீண்ணு சித்தாந்தம் பேசீட்டிருந்தா ஒருமாதிரி ஓலந்து வைக்கோலாத்தான் போவணும்-’

நான் திடுக்கிட்டு அவளை பார்த்தேன்

‘அவுங்க அப்பா அந்தமாதிரி மனுஷன்-இவரையும் அப்டியே வளத்துட்டார். சித்தாந்தம்லாம் அவங்க பாத்துக்கிடட்டும். மனுஷனப்பத்தி எழுதினாத்தானே கதை? நீ உன் பாட்டுக்கு ஜெயகாந்தன் மாதிரி தோணினத எழுது- தப்போசரியோ அதெல்லாம் மத்தவங்க கவல-’’

‘இல்லக்கா இது-இது வந்து-’

‘சின்னப்பயதானே நீ-இப்ப இப்டி தோணிச்சு எழுதினே. தோணினத அப்டியே எழுதிக்கிட்டிரு. - ’அடுக்கை கைமாற்றி

'வரட்டா-வெயிலு கொளுத்துது' என்றாள். ஃபோகும்போது என் தலைமேல் லேசாக கையை வைத்துவிட்டுப் போனாள்.

---

## புறப்பாடு II – 12, புரம்

மான்வேட்டைக்குச் சென்றிருந்தபோது வழிதவறி பேச்சிப்பாறை உள்காட்டுக்குச் சென்றுவிட்ட தேவநேசன் பெருவட்டரின் கதையை எனக்கு அப்பு அண்ணா சொல்லியிருக்கிறார். புல்மூடிக்கிடந்த பெரும் குழி ஒன்றில் அவர் விழுந்துவிட்டார். இருபதடிக்குமேல் செங்குத்தாக ஆழம் கொண்ட குழி அந்தக்காலத்தில் யானைபிடிக்க அனுமதி இருந்தபோது வெட்டப்பட்டது. அதன்பின் அப்படியே விட்டுவிட்டார்கள்.

உள்ளே விழுந்த பெருவட்டருக்கு அடி ஏதும் படவில்லை. ஆனால் அடுத்த அரைமணிநேரத்தில் தெரிந்துவிட்டது பிறர் உதவி இல்லாமல் மேலே ஏறுவது சாத்தியமே இல்லை என்று. மேலே இருந்து வந்த வேர்களும் கொடிகளும் எதுவுமே அவரைத் தாங்குவதுபோலில்லை. மண் ஈரமூறிப்போயிருந்தமையால் பிடித்து ஏறமுயன்றாலே இடிந்துவிழுந்தது. எல்லாவழியிலும் முயன்றுபார்த்தார். முடிந்தவரை குரல் எழுப்பி கூச்சலிட்டார்.

அகலமான குழி. முப்பதடி நீளமும் பதினைந்தடி அகலமும் கொண்டது. விழும் யானை பக்கவாட்டில் உரசி அடிபடக்கூடாதென்று அப்படி பெரியதாகவே வெட்டுவார்கள். யானை விழுந்ததும் உள்ளே சுற்றிவந்து ஏறமுயன்று களைப்படையவேண்டும். அதன்பின் பெரிய மரத்தடிகளை இறக்கி யானை மேலேறிவர வழிசெய்வார்கள். பெருவட்டர் உள்ளே சுற்றிச்சுற்றி வந்தார். மழைக்காலத்தில் உள்ளே நிறைய நீர் தேங்கி குளமாகக் கிடக்கும். கோடையாதலால் முழங்காலளவு சேறுதான் இருந்தது. விதவிதமான செடிகள் வளர்ந்து அடர்ந்திருந்தன.

மொத்தம் இருபத்திரண்டுநாள் பெருவட்டர் அந்தக்குழிக்குள் இருந்தார். தேன்தேடிச்சென்றவர்கள் பேசிச்செல்லும் ஒலியைக் கேட்டு அவர் குரல் எழுப்பியதனால்தான் காட்டுசேம்புச்செடிகளுக்கு நடுவே அப்படி ஒரு பெரும் குழி இருப்பதே அவர்களுக்குத்தெரிந்தது. குழிக்குள் பெருவட்டர் நலமாகத்தான் இருந்தார். மேலே தூக்கப்பட்டபோது ஒத்துழைத்தார். உணவு கொடுக்கப்பட்டபோது சாப்பிட்டார். ஒவ்வொருவரையாகக் கட்டித்தழுவி 'ஏசுவே ஸ்தோத்திரம் ஏசுவே' என்று சொல்லி அழுதார். ஒருபாறையில் படுத்து ஒருமணிநேரம் அசந்து தூங்கினார்.

ஆனால் திரும்ப வரும்வழியிலேயே கட்டில்லாமல் பேச ஆரம்பித்தார் என்னென்னவோ சொன்னார். ஆரம்பத்தில் அவர்கள் அவரை சமாதானப்படுத்தவும் அவர்பேசுவதை கவனிக்கவும் முயன்றாலும் கொஞ்சநேரத்திலேயே தெரிந்துவிட்டது. கடைசிநாள் வரை அவர் தூங்கும்நேரம் தவிர பேசிக்கொண்டேதான் இருந்தார். 'எளவு. அதுக்குள்ள மனியன் எல்லா காரியங்களும் அம்பிடு கூர்மையாட்டுல்லா செஞ்சிருந்தான்' என்றார் மீட்பதற்காகச்சென்ற வறுவேல். 'மேல வந்தப்பமில்லா எளகிப்போச்சு'

பெருவட்டர் உள்ளே சென்றதும் முதலில் செய்தது பெரிய சேம்பிலைகளை பறித்து அவற்றை நாணலால் கோர்த்து போர்வைபோல செய்துகொண்டதுதான். அங்கே பெய்துகொண்டிருந்த இளம்தூறலில் இருந்து அவரை அது காத்தது. மழைக்காடுகளில் சாரல் இல்லாத காலமே இருப்பதில்லை. குழிக்குள் உள்ள கிழங்குகளில் சாப்பிட ஏற்றது எது என்பதை கண்டுகொண்டார். அவற்றை அகழ்ந்து எடுத்து ஒருநாளுக்கு ஒருவேளை மட்டும் சாப்பிட்டார். சேம்பிலைகளை பறித்து தொன்னைபோல கோட்டி மண்ணில் குழிபறித்து வைத்தார். அதில் தேங்கிய நீரை குடித்தார். குந்தி அமர்ந்து தூங்கினார்.

'ஏகதேசம் ஒருமாசமுல்லா உள்ள இருந்துபோட்டாரு.' என்றார் அப்பு அண்ணா.'அதுக்கு ஒரு மனக்கட்டி வேணும்-இல்லேன்னு சொல்லப்பிடாது'

'மனக்கட்டி இருந்தா எதுக்கு வெளியவந்ததும் வட்டெளகிச்சு?' என்றேன்.

'அது மாதாவுக்க விருப்பம்.' என்றார் தங்கையன்

அச்சகமாடியில் ஒருநாள் நான் தேவநேசப்பெருவட்டரைப்போல ஆழமான குழிக்குள் அமர்ந்திருப்பதைக் கனவுகண்டேன். எப்படி உள்ளே சென்றேன் என்று தெரியவில்லை. அத்துடன் என்னால் அந்தக்குழியைச்சுற்றி வெகுதூரத்துக்கு என்ன இருக்கிறது என்பதையும் உணரமுடிந்தது. அந்தக்குழி இன்னொரு பெரும் குழியின் உள்ளே இருந்தது. அந்த மாபெரும் குழி ஒரு மலையிடுக்கு. நான்குபக்கமும் நூற்றுக்கணக்கான அடி ஆழத்துக்கு செங்குத்தான பாறை. நானிருந்த குழியே கூட நூறடிக்கும் மேல் ஆழமானது.

நான் அங்கே ஒரு சிறிய குடிசைகட்டியிருந்தேன். ஒரு செம்பு என்னிடமிருந்தது. அதில் தண்ணீர் வைத்திருந்தேன். என்னென்னவோ பொருட்கள் என்னிடமிருந்தன. நுனிசுருண்ட கிழிந்த புத்தகங்கள். ஒருசில குச்சிகள். ஒரு பெரிய சட்டை. யாருடையதென்று தெரியவில்லை. அத்துடன் ஒரு கருகிய தேங்காய். ஆமாம், அது வெட்டப்பட்ட தலைபோல கருப்பாக இருந்தாலும் தேங்காய்தான்.

விழித்துக்கொண்டபோது என் உடம்பு பதறிக்கொண்டிருந்தது. பெருவட்டருக்கு ஏன் வட்டு இளகியது என்று அப்போது புரிந்தது. அத்தனை உணர்ச்சிகளையும் நான் அனுபவித்திருந்தேன். ஆரம்பத்தில் யாரோ உடனே வந்து காப்பாற்றப்போகிறார்கள் என்ற எண்ணம் இருந்தது. பின்பு எவருமே வராமல் போய்விடுவார்களோ என்ற பயம். மெல்லமெல்ல அந்தப்பயம் வளர்ந்து உடலை நடுங்கச்செய்யும் பீதியாக ஆகியது. ஒருகட்டத்தில் எவரும் எப்போதும் வரப்போவதில்லை என்ற உறுதி ஏற்பட்டது.

உடனே அங்கே சாகாமல் வாழ்வதற்கான வழிகளைத் தேட ஆரம்பித்தேன். சாப்பிடுவதற்கு என்னசெய்வது? தண்ணீர்? குளிருக்கு என்ன வழி. எல்லாம் சரியாக மேலும் சில நாட்கள். அதன்பின் எல்லாம் அதேபோல சீராக நடக்கும் என்பது திடப்பட்டது. அதன்பின்புதான் நான் எனக்கு முன்னால் நீண்டு கிடந்த நாட்களைப்பார்த்தேன். முடிவில்லாமல், மறுநுனி தெரியாமல்_ பதைத்து கைகால்கள் துடிக்க விழித்துக்கொண்டது அப்போதுதான்.

எப்போதும் நள்ளிரவில் ஒரு கனவுடன் விழித்துக்கொள்வது வழக்கமாக இருந்தது. குளிரை விதவிதமாக கனவுகளாக்கிக்கொள்வேன். பின்பு விழித்துக்கொண்டு கீழே செல்வேன். எழுந்ததும் மொட்டைமாடியில் நின்றபடி கீழே பார்ப்பேன். சேறுவழிந்த கரிய சாக்கடைத்தடம் போல சாலை கிடக்கும். சிலசமயம் கனத்தமாடுகள் குளம்படிகள் ஒலிக்க கடந்துசெல்லும். வெகுதொலைவில் ரயில் செல்லும் தடதடப்பு கேட்கும். தூங்கும் வனமிருகம்போல ஒரு விசித்திர முனகலுடன், மூச்சுநாற்றத்துடன் கிடக்கும் நகரத்தை அப்போது மேலும் வெறுப்பேன்.

சென்னை எனக்கு ஒவ்வாமையை மட்டுமே அளித்தது. எந்நேரமும் வழிதவறிவிடுவேனோ என்ற பதற்றத்துடன், எதன்மீதாவது இடித்துக்கொள்வேன் என்ற கவனத்துடன் வாழவேண்டிய ஊர். எவரும் எவரையும் ஏறெடுத்துப்பார்க்காத ஊர். சொல்லப்போனால் எந்த நகரத்திலும் நான் நிம்மதியாக உணர்ந்ததில்லை. சென்னையின் கிறுக்குப்பிடிக்கவைக்கும் வெயில் டிசம்பரிலும் கொளுத்தியது. மூச்சடைக்கவைக்கும் தூசு. அழுகிய புண்ணைப்போல நாறும் சாக்கடைகள். சென்னைத்தெருவில் ஒருமுறை மயங்கி விழுந்தேன். ஒன்றரை மணிநேரம் வெயிலிலேயே கிடந்தபோதும் எவரும் குனிந்துபார்க்கவில்லை. நானே விழித்தெழுந்து ஓரமாக நகர்ந்து அமர்ந்தேன். என்னைச்சுற்றி கால்கள் சென்றன.

குமுதம் வழியாக சென்னை எனக்கு நன்றாகவே அறிமுகமாகியிருந்தது. குமுதத்தில் வெளிவரும் பெரும்பாலான கதைகளின் களம் சென்னைதான். தாம்பரம், பூந்தமல்லி, புரசைவாக்கம், மயிலாப்பூர், திருவல்லிக்கேணி எல்லாமே தெரிந்த இடங்கள். பெயர்கள் மட்டுமல்ல அந்த இடங்களின் சித்திரம் கூட மனதில் இருந்தது. நான் வாசித்துக்கொண்டிருந்த எழுத்தாளர்களும் நான் எழுதிய பத்திரிகை அலுவலகங்களும் சென்னையில்தான் இருந்தன.

சென்னைக்கு வந்த நாலைந்துநாட்களிலேயே ஜெயகாந்தனை தேடிச்சென்று பார்த்தேன். மாலை ஆறரை மணி. அவரது மொட்டைமாடியில் முட்டைவிளக்கு வெளிச்சத்தில் இருபதுபேர் இருந்தனர். அவர்கள் மிகச்சாதாரணமாக ஏதோ பேசிக்கொண்டிருந்தனர். ஜெயகாந்தன் ஏதோ கேட்க அவர்கள் ஏதோ சொல்ல சாதாரணமாக போய்க்கொண்டிருந்தது. எவரும் என்னிடம் நான் யார் என்று கேட்கவில்லை. ஜெயகாந்தன் தலைகுனிந்து தன்னுள் ஆழ்ந்து அமர்ந்திருந்தார். ஏற்கனவே புகை ஆரம்பித்திருந்தது.

சிலும்பி சுற்றிவந்தபோது என்னிடம் வேண்டுமா என்றார் ஒரு தாடிக்காரர். பார்வைக்கு ரிக்ஷாத்தொழிலாளர் என்று தோன்றியது. நான் மறுத்தேன். ஒருமணிநேரம் இருந்தேன். ஜெயகாந்தன் எதுவும் விசாரிக்கவில்லை. அங்கே அத்தனைபேர் இருப்பதே அவர் கண்ணுக்குப்படவில்லை என்று தோன்றியது. கிளம்பும்போது எவரேனும் திரும்பிப்பார்ப்பார்கள் என நினைத்தேன். எவரும் கவனிக்கவில்லை. படியிறங்கும்போது வேறு எவரோ ஏறிவந்தார்கள்.

சிலநாட்கள் கழித்து நா.பார்த்தசாரதியை சந்திக்க தீபம் அலுவலகம் சென்றேன். அங்கிருந்த திருமலை நா.பா. அங்கே வருவதேயில்லை என்று சொன்னார். நா.பார்த்தசாரதியின் வீட்டுக்குச் சென்று பெரிய வாசலருகே காத்திருந்தேன். நா.பா. காரை வெளியே எடுக்க கதவைத்திறந்தார். என்னிடம் பதற்றமாக கையசைத்து 'வெலகு_டேய் வெலகுடா' என்றார். நான் விலகி நின்றேன். அவர் ஏதோ முனகியபடி காரில் ஏறிக்கொண்டார். கார் வெளியே சென்றது.

அதன்பிறகு எவரையும் தேடிச்சென்று சந்தித்ததில்லை. பெல்ஸ் சாலையில் கணையாழி என்ற சிறிய பலகை இருந்தது. அதன் முன் நின்று உள்ளே போவதா வேண்டாமா என்று தயங்கியபோது கையில் ஒரு பழைய துணிப்பையுடன் வெளிவந்து சைக்கிளை எடுத்துக்கொண்டு நடந்துசென்ற மெலிந்த மனிதர்தான் அசோகமித்திரன் என நான் அப்போது அறிந்திருக்கவில்லை.

நாலைந்துமுறை கன்னிமாரா நூலகம் சென்றேன். அங்கே நூல்கள் புத்தக அடுக்குகளில் சம்பந்தாசம்பந்தமில்லாமல் அடுக்கப்பட்டிருந்தன. கூடத்தின் ஒரு மூலையில் பழையநூல்களை அழுகிய காய்கறிகளைப் போல குவித்துப்போட்டிருந்தார்கள். அங்கே இருந்த அத்தனை நூல்களே என்னை அச்சுறுத்தின. அவை அடுக்கடுக்காக அமைந்து ஒரு விசித்திரமான கட்டிடத்தின் சுவரைப்போல ஆகிவிட்டிருந்தன. புத்தகங்களுக்கான அரசு மருத்துவமனை அது என்று பின்பு புன்னகையுடன் நினைத்துக்கொண்டேன்.

ஒரே ஒருமுறை சென்னை அருங்காட்சியகத்துக்குள் சென்றேன். ஒருகாவலன் என்னருகே வந்து 'டேய், என்ன? டிக்கெட் எங்கடா?' என்றான். நான் டிக்கெட்டைக் காட்டியதும் சற்றுநேரம் முறைத்துவிட்டு திரும்பிச்சென்றான். தூசுபடிந்து அமர்ந்திருந்த உடைந்த புத்தர்ச்சிலைகள் வழியாகச் சென்றபோது பெரும் நிலைகொள்ளாமையைத்தான் உணர்ந்தேன். அங்கே நிற்கவே முடியவில்லை.

என்னுடைய தோற்றம் என்னை நகரின் பல்லாயிரம் பஞ்சைப்பராரிகளுடன் சேர்த்துவிடுகிறது என்பதை நான் அறிந்திருக்கவில்லை. எவரும் என்னிடம் வழிகேட்பதில்லை. பிச்சைக்காரர்கள் கைநீட்டுவதில்லை. ஆனால் பூங்காக்களில் சிமிண்ட் பெஞ்சில் சென்றமர்ந்தால் சற்று அப்பால் பரட்டைத்தலையும் சிக்குத்தாடியும் அழுக்குச்சட்டையுமாக தூங்கிக்கொண்டிருக்கும் ஆசாமி நிமிர்ந்து என்னை நோக்கி 'பிரதர் பீடி இருக்கா?' என்று கேட்பார். போலீஸ்காரர் என்னைக் கூர்ந்து நோக்கி 'டேய், யார்ரா? எங்கபோறே?' என்பார்.

பகலில் நகருக்குள் செல்வதை நிறுத்திக்கொண்டேன். சாயங்காலம் ஏழுமணிக்கு அச்சகம் மூடப்பட்டபின்பு அப்படியே

*கிளம்புவேன். கரிபடிந்த சட்டையும் பாண்டும். சிலசமயம் முகத்திலேயே கரிமை இருக்கும். பாரிமுனைக்குச் செல்லும் பேருந்தில் ஏறிக்கொள்வேன். அங்கே சென்றபின் வேறு எங்காவது செல்வேன். பெரும்பாலும் திரையரங்குகளுக்குத்தான். எந்தத் திரையரங்கின் பெயரும் நினைவில் நிற்பதில்லை. பேருந்தில்செல்லும்போது கண்ணில்பட்ட திரையரங்கு வாசலில் இறங்கிக்கொள்வேன்.*

*முதல்முறை அப்படி இறங்கிக்கொண்டது தி ப்ளூ லகூன் என்ற சினிமாவுக்காக. அந்த சுவரொட்டியில் இருந்த பெண்ணின் அடர்ந்த புருவங்கள்தான் என்னைக் கவர்ந்தன. வெள்ளைக்காரிகளின் புருவங்கள் அப்படி இருக்காது. இறங்கி சீட்டுக் கொடுக்கும் இடத்தில் நின்றபோதுதான் அதற்கு அவ்வளவு கூட்டம் வந்திருப்பதை கவனித்தேன். நேரமாக ஆக அரங்கின் முற்றமெல்லாம் வண்டிகள். கூச்சல்கள், நெரிசல். டிக்கெட் எடுத்து உள்ளே சென்று அமர்ந்தேன். இருண்ட அமைதியான குளம்போலிருந்தது அரங்கு.*

*திரையில் படம் ஓட ஆரம்பித்தபோது ஏன் அத்தனை கூட்டம் என்று தெரிந்தது. அதில் சில நிர்வாணக்காட்சிகள் இருந்தன. ஆனால் எனக்கு அந்தக்காட்சிகள் எந்த ஆர்வத்தையும் எழுப்பவில்லை. கற்பனை இல்லாதவர்கள்தான் இம்மாதிரி நிர்வாணக்காட்சிகளுக்காக அடித்துப்புரள்வார்கள் என்று தோன்றியது. ஒரு கணநேரத் திகைப்புக்கு அப்பால் அவற்றில் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை.*

*என்னைக்கவர்ந்தது அந்தப்படத்தில் காட்டப்பட்ட அந்த அழகிய தீவுதான். நான் அத்தகைய நீலநிற கடலை எங்குமே கண்டதில்லை. குமரியின் கடல் இளம் எண்ணைப்பச்சைநிறத்தில்தான் பெரும்பாலும் இருக்கும். மழைமேகம் சூழ்ந்திருக்கையில் சாம்பல்நிறம். அபூர்வமாக மதியவெயிலில் கண்ணாடிநீலம். அந்தக்கடல் ஒளிரும் மண்நீலமாக இருந்தது. என்னால் அந்தக்கடல் அலைகளில் இருந்து கண்களையே எடுக்க முடியவில்லை. எங்கிருக்கிறேன் என்ற உணர்வையே இழந்துவிட்டிருந்தேன்.*

*இடைவேளையின்போதும் கண்களைமூடி அந்த நீலக்கடலையே நினைத்துக்கொண்டிருந்தேன். படம்முடிந்து வெளியே வந்து நின்றபோது சட்டென்று பெரும் ஏக்கம் ஒன்று நெஞ்சுக்குள் நிறைந்தது. எங்கே இருக்கிறேன். என்ன வாழ்க்கையை வாழ்கிறேன். இதுவல்ல, இதுவல்ல நான் தேடிவந்தது. இதற்காக நான் கிளம்பவில்லை. மலைகள், ஆறுகள், காடுகள்-இல்லை நீலக்கடல், வெண்மணல், சுழலும் காற்று-இவர்கள் வாழும் இந்த இருண்ட சந்துகளுக்குள் சுருண்டு பதுங்கி வாழவேண்டியவனல்ல நான். நான் செல்லவேண்டிய இடங்கள் தொலைதூரத்தில் இருக்கின்றன. இங்கே, இந்த அழுக்கு உலகில், இந்த மக்களின் நெரிசலில் நான் அடைவதற்கொன்றும் இல்லை. ஈட்டுவதற்கு ஏதுமில்லை.*

*அன்றிரவு மொட்டைமாடியில் படுத்துக்கொண்டு வானத்தையே பார்த்துக்கொண்டிருந்தேன். டிசம்பரில் சென்னையில் மழைபெய்யவேண்டும். அந்த வருடம் மழை தாமதமாகியது. ஆனால் வானில் விண்மீன்களே இல்லை. சிறிய நிலவு மேகங்களின் விளிம்பை ஒட்டி ஒளிவிட்டுக்கொண்டிருந்தது, சருகில் ஒட்டியிருக்கும் மின்மினி போல. சட்டென்று ஏனென்று தெரியாமல் அழுகை பீரிட்டு வந்தது. நெடுநேரம் அழுதுகொண்டிருந்துவிட்டு கீழே வந்தேன். படுத்துத் தூங்கிவிட்டேன்.*

*மறுநாள் நினைத்தபோது வேடிக்கையாக இருந்தது. ஒரு ஆங்கில சினிமாவைப்பார்த்துவிட்டு வந்து அழுதிருக்கிறேன். ஆனால் அன்றுமாலை திரும்பவும் அந்தப்படத்துக்குச் சென்றேன். அந்த நீலத்திலேயே மூழ்கி அமர்ந்திருந்தேன். மீண்டும் மீண்டும் அந்தப்படத்தையே பார்த்தேன். ஒருகட்டத்தில் அந்த நீலக்கடலைத்தவிர எதையுமே பார்க்காதவனாக ஆனேன். நான் அந்தப்படத்தை கண்களால் பார்க்கிறேனா அல்லது அது என் கனவா என்று அப்போது எனக்குத் தெரிந்திருக்கவில்லை.*

*சிலநாட்களுக்குப்பின் அந்தப்படம் அங்கே இல்லை. வேறு ஏதோ ஆங்கிலப்படம். அந்நாளில் ஆங்கிலப்படங்களை வாரமொருமுறை இன்னொரு அரங்குக்கு மாற்றுவார்கள். அது எனக்குத் தெரியவில்லை. அரங்கின் முன் இறங்கி நின்றவன் சிலநிமிடங்கள் கழித்துதான் சுவரொட்டி மாறியிருப்பதை அறிந்தேன். சற்றுநேரம் அதை என் மனம் உள்வாங்கவேயில்லை. பின்பு ஏமாற்றத்தில் மனம் கனத்தது. மனதின் எடை தாளாதவன்போல அங்கேயே அமர்ந்து விட்டேன். சீட்டுக் கொடுக்க ஆரம்பித்துவிட்டார்கள். மிகச்சிலர்தான் படம்பார்க்க வந்திருந்தார்கள்.*

*பின்பு எழுந்து தளர்ந்த காலடிகளுடன் நகரச்சாலைகளில் நடக்க ஆரம்பித்தேன். சென்னையின் நடைபாதைகள் நடப்பதற்குரியவை அல்ல. நடைபாதைக்கடைகள், விதவிதமான கடைச்சாமான்கள், குடியிருப்புகள். அவை இல்லாத இடங்களில் கட்டிட இடிபாடுகள் குப்பைமேடுகள் மூத்திரச்சேறு. ஆனால் என்னைமறந்து நடக்கும் எனக்கு சாலையில் இறங்கிநடக்க துணிவிருக்கவில்லை. நடந்து நடந்து எங்கோ ஓர் இடத்தில் என்னை உணர்ந்தபின் வழிகளை கவனிப்பேன். மீண்டும் நடப்பேன். எங்கே சென்றாலும் பாரீஸ் கார்னருக்கு டிக்கெட் எடுத்து அங்கே இறங்கி அங்கிருந்து பெரம்பூருக்கு பஸ் பிடிப்பேன்.*

*அதன்பின் இரவில் நகரில் நடப்பதை வழக்கமாகக் கொண்டேன். ஏன் நடக்கிறேன் என நான் அறிந்திருக்கவில்லை. நடப்பது ஒரே காரணத்துக்காகத்தான். அந்நேரத்தில் அச்சகத்தின் மாடியில் தனித்திருக்க முடியாது. உடலை அமரச்செய்ய முடியாது. நகர்ந்துகொண்டே இருக்கையில் மனதின் ஓட்டத்தை சற்று தாங்கிக்கொள்ளமுடியும். அமர்ந்திருந்தால் உள்ளே எழும் விசைகளின் வேகம் உடலை தூக்கி தள்ளுவதுபோலிருக்கும்.*

*இரவின் நகரம் வேறுமாதிரியானது. பெரியசாலைகளில் பத்துமணிக்கெல்லாம் வண்டிகள் ஓய ஆரம்பித்துவிடும். இரண்டாம் ஆட்டம் படம் விடும்போது மட்டும் கொஞ்சம் ஒளியும் சத்தமும் சாலைகளில் ஓடும். சாலைகள் அத்தனை அகலமானவை, அவ்வளவு பளபளப்பானவை என்பதை இரவிலேயே காணமுடியும். பிரம்மாண்டமான ஒரு தோல்செருப்பின் வார்போல சாலைச்சந்திப்புகள்-தார்ப்பரப்பில் விளக்குகளின் ஒளி பிரதிபலிப்பதனால் சற்று*

தொலைவில் நின்றுபார்க்கும்போது கன்னங்கரிய ஓடைபோலத் தோன்றும்.

நகரில் இரவில் வேலைசெய்பவர்கள் பலர் உண்டு. பசைவாளியும் சுவரொட்டிச்சுருளுமாக சைக்கிளை நிறுத்திவிட்டு சிறிய ஏணியை சுவரில் சாத்திவைத்து ஏறுபவர்கள் என்னைத் திரும்பிப்பார்த்துவிட்டு ஆர்வமிழப்பார்கள். பழமையான சினிமா அரங்கு ஒன்றின் அருகில் இருந்த சிறிய பெட்டிக்கடைமுன் நின்றிருந்த நாற்பதுவயதுப்பெண் ஒருத்தி 'இந்தாயா' என்று அழைத்தாள். நான் திரும்பியதும் 'போ..போ..போய்னே இரு' என்றாள்.

சில இடங்களில் விளக்குகள் எரிய ஏதோ நடந்துகொண்டிருக்கும். சுமைவண்டிகளில் கொண்டுவரப்பட்ட சாமான்களை உள்ளே கொண்டு சென்று அடுக்கிக் கொண்டிருப்பார்கள். 'இந்தாய்யா, லோடு எறக்க வாறியா? முப்பது வாங்கிக்கோ' என்று ஒருவர் என்னை அழைத்தார். நான் அந்த அழைப்பை உள்வாங்காமல் பார்த்தேன் 'போ போ' என்று கையசைத்துவிட்டுச் சென்றார். என்னுடைய பார்வையைக் கண்டபின் எவரும் என்னிடம் மேலேபேசுவதில்லை.

விடியற்காலையில் ஓரிரு வண்டிகள் ஓட ஆரம்பிக்கும். பால்காரர்கள் செல்வார்கள். மீன்பாடிவண்டிகள் துணிபோட்டு மூடப்பட்ட பெரிய ஐஸ்கட்டிகளுடன் செல்லும். காய்கறியும் பூக்களும் ஏற்றப்பட்ட வண்டிகளை சைக்கிள்போல மிதித்துக் கொண்டுசெல்வார்கள். முதல் பேருந்தில் பாரிமுனைசென்று பெரம்பூருக்கு ஏறிக்கொண்டு அக்கணமே தூங்க ஆரம்பிப்பேன். எப்போதும் நடத்துநர் வசைபாடி இறக்கிவிட்டால்தான் இறங்குவேன். ஆறுமணிக்குப்படுத்து ஒன்பதரைக்குத்தான் எழுவேன். அப்போது அச்சகத்தின் இயந்திரங்கள் தடக் தடக் என்று ஓடிக்கொண்டிருக்கும்.

ஒரு கட்டத்தில் அச்சகத்தில் இருந்து விலகிவிட்டேன். என்னால் காலையில் எழுந்து வேலைசெய்யமுடியவில்லை. பதினொருமணிக்கு மீண்டும் படுத்து தூங்கிவிடுவேன். எழுதுவதும் இல்லை என்றானபோது அச்சக உரிமையாளர் முணுமுணுக்க ஆரம்பித்தார். நேரடியாகவே திட்டினார். கடைசியில் 'இதெல்லாம் இங்க நடக்காது..இது தொழில் செய்ற எடம்..சத்திரமில்ல' என்றார்.

என்னிடம் நானூறு ரூபாய்க்குமேலேயே இருந்தது. அச்சகத்தில் இருந்து பொதிகளை கைவண்டியில் எடுத்து தள்ளிச்செல்லும் சாமியிடம் எனக்குத் தங்க இடம் பார்க்கமுடியுமா என்று கேட்டேன். 'ஏன் சாமி, இங்க தங்கினா என்ன?' என்றார்.

'இல்ல..நான் வேற எடத்துக்குப்போகணும்' என்றேன் 'இவரு சரியில்ல'

'இன்னா வாடக குடுப்பே?'

'அம்பது..இல்லேன்னா அதுக்கும் கொறைவு'

'அம்பதுக்கா? சேந்து தங்கிக்கிறீயா? மேன்சன் இருக்கு'

'எனக்கு தனியா எடம்வேணும்'

'தனியாவா? அம்பதுக்கு..'

'குடிசையா இருந்தாக்கூட போரும்..'

சாமிதான் என்னை அந்த இடத்துக்கு அழைத்துச்சென்று காட்டினார். சேத்துப்பட்டு அருகே ஒரு சிறிய சந்துக்குள் செல்லவேண்டும். கூவத்தின் கரையில் வரிசையாக அமைந்த குடிசைகளினால் ஆன ஒருபக்கம். மறுபக்கம் ஏதோ பெரிய கட்டிட வளாகத்தின் பெரிய சுவர். அதன் மேலே முட்கம்பிகள் சென்றன. குடிசையின் முன்பக்கம் செங்கல்சுவரில் வெள்ளையடித்து ஏதோ விளம்பரம் எழுதப்பட்டிருந்தது. தகரத்தாலான கதவில் சிறிய பூட்டு.

பூட்டைத் திறந்து காட்டிய ஞானராஜ் அந்தக்குடிசையின் உரிமையாளர்.'போனவருசம் வரை நானும் ஊட்டுக்காரங்களும் இங்கதான்சார் குடியிருந்தோம். அப்பாலிக்கி வேற ஊடு பாத்துட்டோம்..எடம் நம்முதுதான். ரேசன் கார்டு எலக்ரிக் கார்டு அல்லாம் இருக்கு. வாடகைக்கு குடுத்திருந்தேன். சோமாறி பைசாகுடுக்காம டபாய்ச்சான்..சாருக்கு தெக்குப்பக்கமா சார்?'

'ஆமா'

'என்ன பண்றீங்க?'

'சினிமாவுக்காக வந்திருக்கேன்' அதை உடனே நம்பிவிடுவார்கள் என நான் அறிந்திருந்தேன்

'ஏகப்பட்டபேரு சினிமான்னு சொல்லினு வாரான் சார்..அங்க உள்ரயே விடமாடான்.. ' உள்ளே குனிந்து நுழைந்து 'புடிச்சிருக்கா பாருங்க..' என்றார் .

உள்ளே ஒரே அறைதான். முன்பக்க செங்கல்சுவரும் வெள்ளையும் எல்லாம் ஒரு 'செட்டப்' என்று தெரிந்தது. உள்ளே தரை கள்ளிப்பெட்டிப்பலகையால் ஆனது. கூவத்துக்குள்ளேயே மரக்கால்களை அடித்து இறக்கி அதன்மேல் பலகைகளை வேய்ந்து உருவாக்கப்பட்ட குடிசை அது. முன்பக்கம் மட்டும்தான் சுவர். பின்பக்கமும் பக்கவாட்டிலும் எல்லாம் மரம்தான்.

‘ஒருத்தர் தாராளமா இருந்துக்கலாம் சார்…ரெண்டுபேருகூட இருந்திருக்கோம்’

அப்போது ஒன்றை அறிந்தேன். சாலையில் தூங்கும் குடிசைவாசிகள் நடுவே நான் அலைந்தபோதெல்லாம் மானசீகமாக அவர்களின் வாழ்க்கையை நடித்துக்கொண்டிருந்தேன். அதில் எனக்கு ஓர் ஈர்ப்பு இருந்திருக்கிறது. திரும்பத்திரும்ப நான் இரவில் அலைந்ததெல்லாமே குடிசைப்பகுதிகளில்தான். அங்கே தங்குவதற்கான முடிவை உடனே எடுத்தேன். நாற்பது ரூபாய் வாடகை. நூறு ரூபாய் அட்வான்ஸ்.

‘பணம் கண்டீசனா வந்திரணும்…அப்பாலிக்கு பேச்சு மாறுற மாதிரி ஆயிரப்படாது’

ஞானராஜ் என்னிடம் சாவியை கொடுக்கும்போது கண்மூடி பிரார்த்தனைபோல ஏதோ சொன்னார். சாமிக்கு ஐந்து ரூபாய் கொடுத்தபின் என்னுடைய துணிப்பையை சுவரில் மாட்டினேன். அறையில் பாய் தலையணை பெஞ்சு என ஏதும் இல்லை.

வெளியே வந்தபோது இருபக்கமிருந்தும் பெண்களும் குழந்தைகளும் வந்து என்னைப் பார்ப்பதற்காக நின்றிருந்தார்கள். தடித்த பெரிய பெண்மணி என்னிடம் ‘எந்தூரு?’ என்றாள்.

‘தெக்க…நாகர்கோயிலு’

‘இங்க என்ன செய்யப்போறீங்க?’ என்றாள் இன்னொருத்தி. கரிய ஈறுகள் தெரிய சிரித்தபோது அவள் அழகாகவே தெரிந்தாள்.

‘சும்மா…வேலை ஏதாவது பாக்கலாம்னு’

‘பாயி தலைகாணில்லாம் வோணும்ல? வாங்கினு வாறது’’ என்றாள் இன்னொருத்தி ‘பொட்டி இல்லியா?’

‘இல்ல’

‘அந்த லெஃப்டுல திரும்பினா ராசமாணிக்கம் கடை இருக்கு. கள்ளிப்பெட்டி விப்பான். ஒண்ணு வாங்கினா உள்ர சாமான் வச்சுக்கலாம்…மேலே ஒக்காரவும் செய்யலாம்’

அவர்களே நான் என்ன செய்யவேண்டுமென்று சொல்ல ஆரம்பித்தனர். பாய் வாங்குவதை விட லாரிக்கடையில் வெட்டி விற்கப்படும் பழைய தார்ப்பாயை வாங்குவது நல்லது என்றும், ஸ்டவ் பழுதுபார்க்கும் அம்மாசியிடம் ஒரு பழைய ஸ்டவ்வை வாங்கிக்கொண்டால் கிருஷ்ணாயில் வாங்கி வைத்துக்கொண்டு தேவையான போது டீ போட்டுக்கொள்ளலாம் என்றும் சொன்னார்கள். மாலைக்குள் நான் ஒருமாதிரியாக குடியமர்ந்துவிட்டேன்.

இரவு வெளியே சென்று ஒரு சாலையோரக்கடையில் இட்லி சாப்பிட்டுவிட்டு வந்தேன். ஒன்பதுமணியளவில் எல்லா குடிசைகளிலும் ஆட்கள் வந்துவிட்டார்கள். ஆண்கள் சாலையோரம் பாய் விரித்து டிரான்ஸிஸ்டர் ரேடியோக்களை மார்பில் வைத்துக்கொண்டு படுத்திருக்க குழந்தைகள் அவர்கள் அருகே விளையாடின. எல்லா குடிசைகள் முன்னாலும் அடுப்புகள் எரிந்தன. சோறு கொதிக்கும் வாசனை வந்தது.

உள்ளே நுழைந்து சட்டையைக் கழற்றும்போதுதான் முதன்முறையாக அங்கிருக்கும் வாடையைக் கவனித்தேன். மதியம் வந்தபோது உள்ளே ஐந்துநிமிடம்கூட இருக்கவில்லை. கள்ளிப்பெட்டிப்பலகையான தரையின் இடுக்குகளுக்கு அடியே கூவத்தின் கரியசேற்றுப்பரப்பு. அதிலிருந்துதான் அந்த நாற்றம் வந்தது. சிலநிமிடங்களுக்குமேல் உள்ளே நிற்கவே முடியவில்லை.

வெளியே வந்து குடிசைவாசலிலேயே அமர்ந்துகொண்டேன். கொசுக்கள் வந்து சூழ்ந்துகொண்டன. ஒரே ஒருமுறை பேச்சிப்பாறை காட்டுக்குள் பன்றிவேட்டையாடும் கும்பலுடன் சென்றிருக்கிறேன். காட்டுசேம்புப் புதர்களுக்குள் ஒளிந்திருக்கும்போதுதான் அந்த அளவுக்கு கொசுக்களை அறிந்திருக்கிறேன். துணி ஒன்றை மேலே போர்த்தியதுபோல கொசுக்கள் வந்து அப்பிக்கொண்டன. முகத்தை தேய்த்துவழித்தபோது கைமுழுக்க கொசுக்கள்.

அங்கிருந்தவர்கள் எவரும் கொசுக்களை பொருட்படுத்தியதுபோலத் தெரியவில்லை. கைகால்களை ஆட்டியும் அடித்தும் கொசுக்களை அனிச்சையாக விரட்டிக்கொண்டு உரத்த குரலில் பேசினார்கள். அவர்களுடைய பேச்சு ஆரம்பத்தில் சண்டை போலக் கேட்டது. பின்னர் அதுவே இயல்பான குரலாகக் கேட்டது.

‘இன்னா சார் கொசுவா?’

‘ஆமா…கொஞ்சம்…’

‘நல்லாவே கொசு கடிக்கும் சார்…தூங்க விடாது…’ வாயில் இருந்த பீடியை எடுத்துக்காட்டி ‘நாலு இளுப்பு இளுத்தேன்னா ஒண்ணியும் தெரியாது. தூங்கிரலாம்’

‘இல்ல வேண்டாம்’

‘வேற பீடி வசிருக்கேன் சார்.. ஒணுமா?’

‘இல்ல வேண்டாம்..பளக்கமில்ல’

‘தண்ணிபோடுவியா?’

‘இல்ல;’

‘அப்பால எப்டி தூங்குறது?’

நான் குழந்தையை காட்டி ‘இது தூங்குதுல்ல?’ என்றேன்.

‘அதுக்கு ஒண்ணும் தெரியாது..மேல பாத்தியா..அவ்ளவும் கொசுக்கடி’

நான் என்னருகே இருந்த குழந்தையை பகலிலேயே பார்த்திருந்தேன். உடம்பெல்லாம் படைபோலிருந்தது வேர்க்குரு என்றுதான் நினைத்திருந்தேன்.

‘மோசமான எடம் சார் இது..இப்ப இப்டி இருக்குன்னு நெனைக்காதே..இப்ப மளை இல்ல..இன்னும் பத்துப்பாஞ்சு நாள்ல மளை வந்திரும்..அப்ப பாரு’ என்றான்.

போனமழையில் அவன் வீட்டுக்குள் தூங்கியிருக்கிறான். குழந்தைகளை எல்லாம் பாலிதீன் கவருக்குள் போட்டு படுக்கவைத்துவிட்டு அவனும் மனைவியும் தார்ப்பாயைப்போர்த்துக்கொண்டு அமர்ந்து தூங்கினார்கள். கூவத்தில் தண்ணீர் ஏறி ஏறி வந்தது. தரையின் பலகையிடுக்கு வழியாக உள்ளே தண்ணீர் வர ஆரம்பித்தது. சின்னக்குட்டியை தூக்கி கள்ளிப்பெட்டி மேல் வைக்கச்சென்ற அவன் மனைவி திடீரென்று எதையோ பார்த்து கத்திவிட்டாள். தரையின் இடுக்கில் ஒரு முகம்

‘முகமா?’

‘ஆமா சார், பொணம். செத்து மெதந்து தண்ணியிலே வந்திருக்கு. நம்ம ஊட்டுக்கு அடியிலே குச்சியிலே தட்டி நின்னிட்டிருக்கு. தண்ணி எந்திரிச்சப்ப மேல வந்து தரையில முட்டிநிக்குது..இன்னா பண்ணச் சொல்றே?’

‘அப்றம்?’

‘இன்னா பண்றது? குச்சி வச்சு ஒரே குத்து கீள தள்ளிட்டேன். அப்டியே தண்ணியோட போச்சு..’

‘வேற எவன் வீட்டிலயாம் போயிருக்கும்..’

‘அதெல்லாம் இல்ல சார்..அப்டியே கடலாண்ட போயிரும்..எங்க போனா என்ன? நம்ம ஊட்ல நொளையாம இருந்தா சரி..இன்னாசொல்றே?’

உண்மையில் அங்கே இருக்கவே முடியவில்லை. கொசுக்கள் சதையை பிய்த்துத் தின்பதுபோலக் கடிப்பதை அப்போதுதான் உணர்ந்தேன். உள்ளே சென்று என் லுங்கியை எடுத்து போர்த்திக்கொண்டேன். துணிவழியாகக் கடித்தபோது இன்னும் அதிகமாக வலித்தது.

அவன் மனைவிதான் காலையில் எனக்கு ஆலோசனைகள் சொன்னவள். கஞ்சிப்பானையை இறக்கி வைத்தாள். கருவாடு வாங்கி குழம்பு வைத்திருந்தாள் ‘சோறு துண்றியா சார்?’

‘வேண்டாம்..இட்லி சாப்பிட்டேன்’ என்றேன்.

‘இங்க சுப்பி ஆயா இட்லி விக்கும். கணக்கு வச்சு குடுக்கும்..’ என்றாள்.

அவர்கள் சாப்பிடுவதைப் பார்த்துக்கொண்டிருந்தேன். எதிரே கார்களும் ஆட்டோக்களும் தூசும் புகையுமாகச் சென்றன. கால்கள் நடந்து கடந்தன. பன்றிகள் சென்றன. அவர்கள் அவற்றைப் பார்க்கவில்லை. பிறரும் அவர்களைப்பார்க்கவில்லை. நடுவே ஒரு பெரிய திரை இருப்பதுபோல. இருசாராரையும் நான் மட்டும்தான் பார்க்கமுடியும்..

கொசுக்கடி தாளமுடியாமல் எழுந்து நடக்க ஆரம்பித்தேன். இரவு தூங்கமுடியும் என்று படவில்லை. கொசுவலை ஒன்று வாங்கலாம். அவர்கள் ஏன் கொசுவலை கட்டிப்படுப்பதில்லை? சாலையில்தான் காற்றோட்டம். அங்கே கொசுவலை கட்டமுடியாது. உள்ளே படுத்தால் புழுக்கம் தாளமுடியாது. சேற்றுக்குநேர்மேலே. நீராவி பாத்திரத்தின்மேல் படுப்பதுபோல. அத்துடன் கொசுவலை என்றால்..

ஆனால் அந்த இரவில் எங்கே சென்று கொசுவலை வாங்குவது? கொசுவலை முப்பது ரூபாயாவது இருக்கும். கையில் பணம் ஓரளவு இருந்தது. அப்போதுதான் ஓடோமஸ் நினைவுக்கு வந்தது. ஒருமுறை நாகர்கோயிலில் தங்கும்போது ஒருபையன் கொண்டுவந்திருந்தான். ஒருகடையில் ஓடோமஸ் ஒரு குழாய் வாங்கிக்கொண்டேன்.

திரும்பவந்தபோது அவர்கள் எல்லாரும் படுத்துவிட்டிருந்தார்கள். சிலகுடிசைகளுக்குள் மட்டும் குடித்துவிட்டு வந்த ஆண்கள் குழறிப்பேசுவதும் பெண்கள் எரிச்சலுடன் பதில்சொல்வதும் கேட்டது. அறைக்கதவை மூடிக்கொண்டு ஓடோமஸை சட்டைக்குமேல் தெரிந்த எல்லா பகுதிகளிலும் தடவிக்கொண்டேன். பாயை விரித்துப் படுத்துக்கொண்டேன். முந்தையநாள் இரவு சரியாகத் தூங்கவில்லை.மெல்ல தூக்கத்தை நோக்கி விழுந்தபோது அந்த முகம் நினைவுக்கு வந்தது. எழுந்து அமர்ந்துவிட்டேன்.

மடத்தனம் என்று தெரிந்தும்கூட தரையின் இடுக்குகளை கூர்ந்து பார்த்தேன். யாரோ அங்கே பிணமுகத்துடன் மல்லாந்து எட்டிப்பார்ப்பதுபோலவே தோன்றியது. வெறும் இருட்டிலேயே என் மனம் பிம்பங்களை உருவாக்கிக் கொண்டது. பாயை எடுத்துக்கொண்டு வெளியே வந்தேன். வெளியே தூங்கிக்கொண்டிருந்தவர்களுக்குமேலே கொசுக்களின் படலம் ரீங்காரமிட்டது

பாயை விரித்து படுத்துக்கொண்டேன். ஓடோமஸ் கொசுக்கடியை தடுத்தது. அல்லது கொசுக்களுக்கு கடிக்க ஏராளமான உடல்கள் இருந்தன. சிலநிமிடங்களில் தூங்கிவிட்டேன். சில்லென்ற தண்ணீர் வழியாக மல்லாந்து சென்றுகொண்டே இருந்தேன். என் தலைக்குமேல் குடிசைகளின் அடிப்பகுதிகள் வந்தன. ஒரு தடியில் முட்டி நின்றேன். எவரோ என்னை உந்தி விட்டார்கள். மீண்டும் குளிர்ந்த நீரில் ஒழுகினேன். இன்னொரு இடத்தில் முட்டிக்கொண்டேன். விழித்து எழுந்து அமர்ந்தேன்.

அந்தப்பிணத்தை யாராவது கண்டுபிடித்தார்களா, இல்லை கடலுக்கே சென்றுவிட்டதா? இந்த நகரின் அத்தனை குப்பைகளும் சாக்கடையும் கடலுக்குத்தான் செல்கிறது. இங்குள்ள ஒவ்வொன்றும் பயன்முடிந்ததும் குப்பையாகிக்கொண்டிருக்கின்றன. மொத்த நகரமே மெல்லமெல்ல கடலை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது.

கொசுக்கள் கொஞ்சம் கொஞ்சமாக கடிக்க ஆரம்பித்தன. பின்பு கடி தாளமுடியாமலாகியது. அப்படியே எழுந்து நடக்க ஆரம்பித்தேன். சாலைகளில் இருந்து பிரியும் சிறியபாதைகளில் குடிசைப்பகுதிகள். பெரும்பாலும் அக்குடிசைகளுக்கு அப்பால் கூவம் ஓடியது. நடக்கும்போது வாயில் கொசுவந்து மாட்டிக்கொண்டே இருந்தது. மேலே சாலைவிளக்குகளின் செவ்வொளிவட்டத்தில் பூச்சிகள் சுற்றிப்பறப்பது அவை புகைவதுபோலத்தெரிந்தது. எல்லாமே ஆளுயரம்கூட இல்லாத குடிசைகள். பெரும்பாலானவை ஓலைக்கூரை போடப்பட்டவை. பனையோலைத்தடுக்குகளைக்கொண்டு சுவர்கள்.

சென்னை ஆர்.எஸ்.எஸ். அலுவலகம் எனக்குத்தெரிந்த இடம். அதைநோக்கிச்செல்லும் சாலைதிருப்பத்தில் வந்தபோதுதான் வழி தவறிவிட்டதை அறிந்தேன். மீண்டும் நடந்து கூவத்தைக் கண்டு அதன் வழியாக நடந்து என் குடிசைத்தெருவை அடைந்தேன். குடிசைகளில் எல்லாம் விளக்குகளை அணைத்திருந்தார்கள். கதவுகள் வெளியே பூட்டப்பட்டிருந்தன.அவற்றுக்குள் எவரும் படுப்பதில்லைபோல. அத்தனைபேரும் சாலையோரமாக படுத்திருந்தார்கள். வரிசையாகப் படுத்து தூக்கத்தில் வரிசை கலைந்து அனைவரும் மேலிருந்து அள்ளிக்கொட்டியவர்கள் போலிருந்தார்கள்.

சிலநிமிடங்கள் அங்கேயே நின்றேன். என்ன செய்வது? அங்கே படுத்துக்கொள்ள வேண்டும் ஆனால் என்னால் முடியும் என்று தோன்றவில்லை. வேறு வழி என்ன என்றும் நான் யோசிக்கவில்லை. திரும்பி மீண்டும் நடக்க ஆரம்பித்தேன். அந்தச்சாலை கூவத்தை ஒட்டியே சென்றது. சாலையோரம் முழுக்க நெருக்கமாக படுத்து தூங்கிக்கொண்டிருந்தனர். சில இடங்களில் மீன்பாடிவண்டிகள் நின்றன. அவற்றில் படுத்து தூங்கினார்கள்.

தூங்குபவர்களைப் பார்த்துக்கொண்டே நடந்தேன். தூக்கத்தில் ஒவ்வொருவருக்கும் ஒரு பாணி இருக்கிறது. பெண்கள் பெரும்பாலும் குப்புறப்படுத்துத்தான் தூங்குகிறார்கள். அதை ஒரு பாதுகாப்பு ஏற்பாடாகவே அவர்கள் கற்றுக்கொண்டிருக்கலாம். ஆடைவிலகுமென்ற அச்சமே தேவையில்லை. ஆண்கள் மல்லாந்து முகத்தின்மேல் கையை வைத்துக்கொண்டு வாய் திறந்து தூங்கினார்கள். குழந்தைகள் ஓடிக்கொண்டிருக்கும் பாவனையில் தூங்கின.

பன்றிகளின் உறுமல்கள். பன்றிகளில் ஒன்று மட்டும் சாக்கடை இடுக்கு வழியாக ஏறி காதுகளை விரைத்து இருபக்கம் பார்த்து மெல்ல உறுமியது. பன்றிக்கூட்டம் சாக்கடைசிதற மறுபக்கம் செல்லும். தூங்கிக்கொண்டிருப்பவர்களின் நடுவே இடைவெளியினூடாக கொழுத்த பன்றி உறுமி உறுமி முகர்ந்து நடந்தது. இருகைகளையும் ஏதுமில்லை என்ற பாவனையில் விரித்துக்கொண்டு கைக்குழந்தை தூங்கிக்கொண்டிருந்தது.

சாலையில் ஒருகணம் அதிர்ந்து நின்றேன். ஒரு குழந்தை இறங்கி கீழே வந்து சாலையோரம் அமர்ந்து விளையாடிக்கொண்டிருந்தது. தரையில் இருந்து எதையோ கூர்ந்து நோக்கி எடுத்து இரு கைகளாலும் வாயில் வைத்துக்கொண்டு திரும்பி என்னைப்பார்த்தது. சாலையில் எவருமில்லை. என்ன செய்வது? குழந்தையைத் தூக்கி மேலே விட்டாலென்ன? ஆனால் தூக்கும்போது என்னை குழந்தைத்திருடன் என நினைத்துக்கொண்டால்? அப்படியே விட்டுச்செல்லவும் மனம் வரவில்லை.

பத்துநிமிடம் வரை அங்கேயே நின்றேன். பின்பு மெல்ல குழந்தையை தூக்கினேன். அது எந்த விதமான எதிர்ப்பும் இல்லாமல் வந்தது. அப்படியே கொண்டுசென்றிருந்தால்கூட வந்திருக்கும். கரிய மெலிந்த குழந்தை. சிக்கான தலைமுடியில் நார் வைத்து கட்டியிருந்தது. இடுப்பில் ஒரு கரிய சரடு. கையில் பிளாஸ்டிக் வளையல்கள். பெண்குழந்தை. அதைத் தூக்கி தூங்கிக்கொண்டிருந்தவர்களுக்கு அப்பால் இருந்த இடைவெளியில் விட்டேன்.

நான் நடக்க ஆரம்பித்தபோது குழந்தை சிணுங்கி அழ ஆரம்பித்தது. பின்பு வீரிட்டது. ஆனால் எவரும் எழுவதைப்போலத் தோன்றவில்லை. சற்று தள்ளி நின்று பார்த்தேன். குழந்தை இரு கைகளையும் விரித்து என்னை நோக்கி எம்பி எம்பி உரக்கக் கூவி அழுதுகொண்டிருந்தது. சட்டென்று பக்கத்திலிருந்த சந்துக்குள் நுழைந்துவிட்டேன். கண்களைமூடிக்கொண்டு சிலகணங்கள் நின்றேன். பின்பு வேகமாக ஓட்டமும் நடையுமாக விரைந்தேன்.

என்னையறியாமலேயே என் குடிசைவாசலுக்கே வந்துவிட்டேன்.

இரவு மீண்டும் மிச்சமிருந்தது. இன்னொரு முறை நடப்பது மட்டுமே ஒரே வழி. இம்முறை எனக்கு இடம் நன்றாகவே தெரிந்தது. நிதானமாக நடந்தேன். சில இடங்களில் நின்றேன். அங்கே கொசுக்கள் வந்து என்னைச்சூழ்ந்துகொள்ளும்வரை நின்றுவிட்டு நடந்தேன். இந்தநகரம் கொசுக்களுக்கானது. அத்தனைகொசுக்களும் சேர்ந்து குடிக்கும் மனிதரத்தம் எவ்வளவு இருக்கும்? அதிகமும் குழந்தைகளின் ரத்தம். இந்த நகரத்தில் சேரிகளில் பிறக்கும் குழந்தைகளில் முக்கால்வாசி சிறுவயதிலேயே செத்துவிடுகின்றன. அக்குழந்தை பிறந்ததற்கு ஒரே அர்த்தம்தான். கொசுக்களுக்கு சில லிட்டர் ரத்தத்தை உற்பத்திசெய்துகொடுத்திருக்கிறது. அவ்வளவுதான்.

அதன் பெற்றோர் வாழ்வதற்கு மட்டும் என்ன அர்த்தம்? உயிரோடிருப்பது என்பது உயிரோடிருப்பதற்கான போராட்டம் மட்டும்தான். ஆனால் நான் இவர்களில் ஒருவனல்ல. என் பையில் இப்போதுகூட பணமிருக்கிறது. இன்றுகூட நான் இங்கிருந்து கிளம்பிவிடமுடியும். ஆனால் எங்குசென்றாலும் எதையோ செய்தாகவேண்டும். மூளையை கசக்கி ஏதோ ஒன்றுக்குள் திருகிச்செருகவேண்டும். மூளை அந்த இடுக்கில் மாட்டிக்கொண்டபின் மிஞ்சிய வாழ்நாளெல்லாம் அங்கேயே கிடக்கவேண்டும்.

ஓர் இடத்தில் சிந்தனைகள் முட்டி நிற்க நின்றேன். மொத்தம் நான்கே தெருக்களைச் சுற்றிச்சுற்றி வந்துகொண்டிருந்தேன் என்று தோன்றியது. ஒரேசாக்கடை எனக்கு இணையாக வந்துகொண்டிருந்தது. நேராக பெரிய சாலைக்கு ஏறினேன். அதன் வழியாகச் சென்றுகொண்டே இருந்தேன். மிகவும் தூரம் சென்றுவிடுவேன் என்ற சந்தேகம் வந்து கால்கள் தயங்கின. ஆனால் பிடிவாதமாக என்னை நானே செலுத்திக்கொண்டேன்.

நடந்து நடந்து ராயப்பேட்டை ஆஸ்பத்திரி வாசலை அடைந்தேன். அங்கே ஒரு தள்ளுவண்டிக்கடையில் பாய்லருக்குப்பின்னால் நிற்பவர் மண்ணெண்ணை விளக்கொளியில் செந்நிறத் தழல் போலத் தெரிந்தார். அங்கே யாருமில்லை. அவர் அருகே ஒரு சிறிய டேப் ரிக்கார்டரில் ‘மடைதிறந்து பாயும் நதியலைநான்!’ என்று சினிமாப்பாட்டு மெல்லிய ஒலியில் ஓடிக்கொண்டிருந்தது. இரண்டுநாய்கள் அருகே கிடந்தன. ஆஸ்பத்திரிமுகப்பின் மஞ்சள் ஒளியில் தரை வினோதமாகத் தெரிந்தது. தரையில் மஞ்சள்நீரைக் கரைத்து ஊற்றியதுபோல. அவர் ‘டீயா சார்?’ என்றார்.

பழையபாலின் புளிப்புவாடை கொண்ட டீ குடித்தேன். மீண்டும் நடந்துகொண்டே இருந்தேன். இந்த இரவில் இப்படி நிலையழிந்து நான் நடப்பது இப்போது நான் மட்டுமே அறிந்த ஒன்று என்னும் எண்ணம் பயங்கரமாக இருந்தது. இப்போது ஒரு காரில் அடிபட்டு நான் செத்தால் எவருக்கும் தெரியாது. அப்படியே தூக்கி ராயப்பேட்டை ஆஸ்பத்திரியில் போட்டுவிடுவார்கள். அங்கே பிணவறையில் இப்போதுகூட ஏராளமான பிணங்கள் கிடக்கும். ஒருமுறை பார்த்திருக்கிறேன். ஐஸ்பெட்டியெல்லாம் இல்லை. சாதாரணப் பெட்டிதான். மேலே மீனுக்கு வைக்கும் ஐஸ்கட்டிகளை உடைத்துப்பரப்பியிருப்பார்கள். பெரும்பாலான பிணங்கள் புன்னகைசெய்வதுபோல அல்லது எதையோ சொல்வதுபோல வாய் திறந்திருக்கும்.

அந்தச் சந்திப்பை அடைந்தபின்புதான் அது கடற்கரைச்சாலை என்று தெரிந்தது. கடற்கரைநோக்கிச் சென்றேன். தார்ச்சாலையின் மீது காற்றில் மணற்துகள்கள் இணைந்து நெளிந்தாடின. மணலாலான தழல் போல. பாலித்தீன் தாள்கள் பல இடங்களில் சிக்கியிருந்து ர்ர்ர்ர் என்று அதிர்ந்துகொண்டிருந்தன. என் உடைகள் பறக்க ஆரம்பித்தன. ஆனால் அவ்வளவாகக் குளிரவில்லை. பின்பு நீரின் துளிகளை காற்றில் உணர்ந்தேன். நாவால் உதடுகளை நக்கியபோது உப்பு தெரிந்தது.

கடற்கரையோரமாக சாலை வரிசையான விளக்குகளுடன் கைவிடப்பட்டுக் கிடந்தது. நடைபாதை முழுக்க ஏராளமான தள்ளுவண்டிகள் சணல்சாக்கால் பொதிந்து கட்டப்பட்ட பொருட்களுடன் நின்றன. அவற்றின் அருகிலேயே உரிமையாளர்கள் படுத்திருந்தனர். வேட்டியையும் லுங்கியையும் தலைக்குமேல் போர்த்திக்கொண்டு பேருந்தின் மீதிருந்து இறக்கிப்போடப்பட்ட பொதிகள் போலச் சுருண்டு கிடந்தார்கள். சாலைக்கும் நடைமேடைக்கும் இடையேயான இடுக்கு முழுக்க பாலிதீன்தாள்கள் அதிர்ந்தன. சுருண்டு தூங்கிக்கொண்டிருந்த நாய்களில் ஒன்று காதுகளை அசைத்தது. நிமிர்ந்து என்னை நோக்கி மூக்கை நீட்டி ர்ர்ர் என்றது. நான் பேசாமல் கடந்துசென்றதும் திரும்ப சுருண்டு இறுக்கிக்கொண்டது.

கடல்மணலிலும் ஆட்கள் படுத்திருந்தார்கள். மூடிக்கட்டப்பட்ட தள்ளுவண்டிகளுக்கு அருகே மணலில் துணியை விரித்து குடும்பமாகப் படுத்துக்கிடந்தனர். குழந்தைகளை அன்னையர் அணைத்துப்பிடித்திருக்க அவை விதவிதமாக கைகால்களை பரப்பி வாயைக்குவித்துக்கொண்டு தூங்கின. தூங்கும்போதுதான் குழந்தைகளின் கைகால்களை இப்படி கவனிக்கமுடிகிறது. குழந்தைக்கைகளை அழகாக ஆக்குபவை மணிக்கட்டுகளும் கணுக்கால்களும்தான். பொத்துபொத்தென்று. பெரியவர்களுக்கு அப்படி இருந்ததென்றால் வீக்கம் என்று அர்த்தம். சின்னக்குழந்தைகள் என்றால் புறங்கைகூடத்தான் மெத்தென்று இருக்கிறது.

அந்தக்காற்றில், மணல் பறக்கும் வெளியில் எப்படித் தூங்குகிறார்கள்? திறந்த வாயுடன். அவர்களில் மிகப்பெரும்பாலானவர்கள் சாத்தூர் விருதுநகர் வாசிகள். நான் ஒருமுறை பேசியிருக்கிறேன். கிராமம் கிராமமாகவே திரண்டு சென்னைக்கு வந்து கடலையும் முறுக்கும் விற்கிறார்கள். அவர்கள் ஊரிலேயே இதேபோல திறந்த வெளியில் தூங்கிப்பழகியவர்களாக இருக்கலாம். அங்கும் இதேபோல காற்றில் புழுதி பறந்துகொண்டிருக்கும்.

கடலோரம் சென்று நின்றேன். கடலில் தூரத்தில் கட்டிடங்கள் தெரிவதுபோல கப்பல்களின் விளக்குகள். கடலலைகள் இருட்டுக்குள் சுருண்டு அருகே வந்து கரையை விசிறியறைந்து மீண்டன. திரும்பத்திரும்ப என் கால்களை அவை எட்டிபிடிக்கமுயல்வதுபோல. இருண்ட தைலம்போன்ற நீர். கூவத்தில் ஓடும் நீரின் அதே கருமை. அலைகளின் நுனியில் மட்டும் வெண்மை. கரியநாயின் பற்களைப்போல. ஆனால் கூவத்திலும் தண்ணீர் விழுமிடங்களில் வெண்ணிறநுரை

இருக்கத்தான் செய்கிறது.

ஈரமணலில் அமர்ந்துகொண்டேன். திரும்பத்திரும்ப நிகழ்ந்துகொண்டிருந்தது கடல். அதையே வெறித்துக்கொண்டிருந்தேன் என்றாலும் அதை அவ்வப்போதுதான் பார்த்துக்கொண்டிருந்தேன். நடந்துசெல்லும்போது பிள்ளைகள் விளையாடும் பந்து வந்து உடம்பில் அறைவது போல ஓர் எண்ணம் பிடரியைத் தாக்கியது. அந்த விசையில் எழுந்து நின்றுவிட்டேன். கைகள் இரண்டும் பதறின. அவற்றை கால்சட்டைப் பைக்குள் செலுத்திக்கொண்டேன். தாடை வெடவெடத்து பற்கள் தட்டிக்கொள்ளும் ஒலி கேட்டது.

அதுதான் சரியான முடிவு என்பதில் நினைக்க நினைக்க உறுதி ஏறியபடியே வந்தது. எல்லாவகையிலும் பொருத்தமானது. அனைத்தையும் முழுமை செய்யவைப்பது. அந்தஎண்ணம் இறுக இறுக என்னுடைய அகம் ஒருமை கொண்டது. கடற்காற்றில் கிடக்கும் பாலித்தீன் தாள்போலத்தான் இதுவரை இருந்தது மனம். எல்லா திக்கிலும் விளிம்புகள் அலையடிக்க கிழிந்து கிழிந்து பறந்துகொண்டிருந்தது. அந்த எண்ணம் பெரிய எடைபோல என்னை நிலைகொள்ளச் செய்தது. அந்த நிம்மதி பெரிய விடுதலையாக இருந்தது.

அத்தனை இதமாக அது இருக்கும் என்பதை அதற்கு முந்தைய கணம்கூட நினைத்திருக்கமாட்டேன். எவ்வளவு வாசித்திருக்கிறேன். எவ்வளவு கேட்டிருக்கிறேன். யோசனை ஓட ஆரம்பித்த நாள்முதல் ஏதேதோ வடிவில் உள்ளே வந்துசென்றிருக்கிறது. அச்சமூட்டுவதாக பிரமிப்படையச்செய்வதாக சற்றும் புரியாத ஒரு முடிவின்மையாக. ஆனால் அப்படி மிக அருகே, பிரியமான ஒருவரின் இருப்பு போல அதை உணர்ந்ததில்லை.

நேராக நீரை நோக்கிச் சென்றேன். அலைகள் தொடையை அறைந்தபோது தள்ளாடினேன். ராதாகிருஷ்ணனை நினைத்துக்கொள்ளவேண்டும். இல்லை, அம்மாவை நினைத்துக்கொள்ளவேண்டும். இடுப்பளவுசென்றுவிட்டேன். நீர் என்னை பின்னால் பிடித்துத் தள்ளியது. கால்பின்ன கீழே விழுந்தேன். வாய்க்குள்ளும் மூக்குக்குள்ளும் உப்பு நீர் சென்றது. தொண்டையில் உப்பு காறலெடுத்து குமட்டியது. தரையில் கையை ஊன்றி எழுவதற்குள் நீர் என்னை முன்னாலிழுத்தது. இருமுறை உருண்டு கால்களை மண்ணில் உதைத்து எம்பி எழுந்துவிட்டேன்.

துழாவிய கால்களுக்குக் கீழே மணல் இல்லாமலாகியது. நீரின் அலைகளுடன் ஏதேதோ மெல்லிய கொடிகளும் சிக்கிக்கொண்டன. என் உடைகள் உடலோடு ஒட்டி அசைவுகளைத் தடுத்து குழப்பின. மொத்த நீர்வெளியும் என்னை அப்படியே தூக்கி மேலேற்றியபோது தொலைவில் கப்பல்களின் ஒளியைக் கண்டேன். மணலில் என்னை வீசி உருட்டியது நீர். மணலை அறிந்ததும் கால்கள் பரபரத்து அதில் ஊன்றிக்கொண்டன. உடல் அதுவே இயல்பாக வளைந்து நீரைத் தவிர்த்து மணலுடன் சேர்ந்துகொள்ள கைகாலிடுக்குகள் வழியாக அலைநீர் பின்வாங்கிச்சென்றது.

எழுந்து கரைநோக்கி ஓடினேன். இடிந்துவிழுந்து நின்ற மணல்விளிம்பில் தொற்றி ஏறி மேலே சென்று காலைத்தொங்கபோட்டுக்கொண்டு மூச்சுவாங்க அமர்ந்தேன். நுரையீரலுக்குள் காற்று கனத்து இறுகி நிற்பதாகத் தோன்றியது. உப்ப் உப்ப் என்று மூச்சை வெளியேற்றினேன். மல்லாந்து படுத்துக்கொண்டேன். கீழே விழுந்துகொண்டே இருப்பதைப்போலத் தோன்றியது. சட்டென்று எழுந்து அமர்ந்தேன்.

நீர்வெளி இப்போது மூர்க்கமாகக் கொந்தளிப்பதாகத் தோன்றியது. பாய்ந்து அலறிவந்து என்னைப் பிடிக்க அது முனைந்தது. அலைவளைவுகள் சரிந்து சரிந்து கீழிறங்க மணல் கொப்புளங்கள் சுருசுருவென மறைய அடுத்த அலை. சட்டென்று பெரியதோர் அலைவந்து என் கால்களைப்பிடித்தது. நான் கால்களை மேலே தூக்கிக்கொண்டேன். எழுந்து நின்று கைகளை ஏனென்றே தெரியாமல் விரித்தேன். திரும்பி ஓட ஆரம்பித்தேன்.

மணலில் பலமுறை விழுந்து எழுந்து மூச்சிரைக்க சாலைக்கு வந்தேன். என் உடலில் இருந்து ஈரமணல் உதிர்ந்தது. நடைமேடையில் நின்று கால்களைத் தட்டி மணலை உதறினேன். ஈரச்சட்டை உடலில் இருந்து உரிந்து பிய்ந்து படபடத்தது. காதுகளுக்குள் தண்ணீர் சென்றதனால் தலை இளநீர் போலக் குலுங்கியது. தலையை வெட்டி வெட்டித்திருப்பி காதுச்சிமிழில் தேங்கிய நீரைச் சிதறடித்தேன். அப்போது தலைசுற்றி குமட்டல் வந்தது. குனிந்து உப்புநீரையும் டீயின் கசப்பையும் வாந்தி எடுத்தேன்.

அங்கே நின்று கடலைப்பார்த்தேன். இருண்ட வானம்தான் தெரிந்தது. சட்டென்று கடல் புன்னகை புரிந்து அடங்கியது. கலங்கரைவிளக்கின் ஒளி மணல்பரப்பை வருடி மேலேறியது. அங்கே நின்று பார்த்துக்கொண்டே இருந்தேன். மீண்டும் கடல்மீது ஒளி துழாவி நகர்ந்தது. பெருமூச்சுடன் நடந்தேன். கடைசிக்கணங்களில் நான் ராதாகிருஷ்ணனை நினைக்கவில்லை. அம்மாவையும் நினைக்கவில்லை. நினைக்க முயன்றேன். அவர்களின் முகங்களே மனதில் எழவில்லை. எனக்குள் இருந்தது என்னைப்பற்றிய பிரக்ஞை மட்டும்தான்.

என்னைப்பற்றி என்றால்? நான் இருக்கிறேன் என்ற நினைப்பு. அதுமட்டும்தான். மிகப்பெரிய ஆச்சரியத்துடன் அதை அப்போது உணர்ந்தேன். நீருக்குள் இறங்கிச்செல்லும்போதுகூட அந்த போதம்தான் இருந்தது, இதோ இருக்கிறேன், இதைச் செய்கிறேன். அந்தப் பிரக்ஞை அழிவதைப்பற்றிய பிரக்ஞை இருக்கவில்லை. நான் என்னும் உணர்வு இல்லாமலாகும் கணம் ஒரு மின்னலாகக்கூட என்னுள் கடந்துசெல்லவில்லை. அந்த அலைகளில் நான் சாகும்போதுகூட நான் இருக்கிறேன் என்றே நினைத்துக்கொண்டிருப்பேன். செத்துப்போய் மேலும் சில கணங்களுக்குக் கூட அந்த போதம் எஞ்சியிருக்கும்.

கலங்கரைவிளக்கக் கட்டிடத்தின் வாசல் திறந்து கிடந்தது. விளக்கு எரிந்தது. இரும்புவாசலருகே ஒரு பெரிய சிவப்பு பிளாஸ்டிக் வாளி காலியாக வைக்கப்பட்டிருந்தது. அதை எடுத்துக்கொண்டு அதுவரை வந்தவரைக் காணவில்லைஉள்ளேயும் சிவப்பு குண்டுவிளக்கு எரிந்துகொண்டிருக்க எவரும் கண்ணுக்குப்படவில்லை. ஏன் செய்கிறேன் என்றே தெரியாமல் உள்ளே சென்றுவிட்டேன்

படிகளில் ஏறும்போதும் எவரும் கண்ணுக்குப் படவில்லை. கீழே எங்கோ ஏதோ விழும் ஒலி கேட்டது. மூச்சிரைக்க படிகளில் ஏறினேன். என் உடைகள் காய்ந்துவிட்டன. உடைகளும் தலைமயிரும் படபடக்க மேலேறியபோது பறந்துகொண்டிருப்பதாகத் தோன்றியது. மேலே விளக்குகள் இருக்குமிடத்துக்கு முன்னதாகவே கதவு பூட்டப்பட்டிருந்தது. சிலகணங்கள் அங்கேயே நின்றேன். பின்பு திரும்பி நடக்க யத்தனித்தேன். உப்பரிகைக்கு அப்பால் வானம் தெரிந்தது. விளக்குகள் அணைந்து அணைந்து எரிய ஒரு விமானம் செல்வதைக் கண்டு அங்கேயே நின்றேன்.

எண்ணங்களின் ஓட்டத்தை காற்றின் வேகம் பிய்த்து பிய்த்து வீசியதுபோல எங்கெங்கோ சென்றுகொண்டிருந்தேன். பிரேம்நசீர் நடித்த கறுப்புவெள்ளைப் படங்களின் காட்சிகள் நினைவில் ஓடின. திருவட்டாறு கோயில்யானை நடக்கும்போது சுருங்கி விரியும் சருமத்தின் கோடுகள். கவிழ்த்துப்போட்ட மாபெரும் உருளிகள். பேச்சிப்பாறை மலைப்பாறைகளின் உருண்ட வளைவுகள். மழையில் அவை மௌனமாக நனைந்தன. நனைந்து நனைந்து கருகின. மழை தழல் போல நின்று ஆடியது. அவை எரிந்து எரிந்து குளிர்ந்தன.

கிழக்கே வானத்தில் சிவப்புத்தீற்றல்கள் விழுந்திருப்பதை கவனித்தேன். எப்போது அது நிகழ்ந்தது என்று யோசிக்கையிலேயே அங்கும் இங்குமாக நிறத்தீற்றல்கள். அவற்றின் வடிவில்லா வடிவை என்னுடைய அகத்தின் வடிவபோதம் அடையாளம் காண்பதற்குள்ளாகவே அவை வடிவம் மாறின. தீக்கனல்போல, செம்பட்டு போல, பிரம்மாண்டமான அரளி இதழ்கள் போல. அல்லது ஏன் இப்படி ஒப்பிட்டுக்கொள்கிறேன். இல்லை, ஒருகணம் கூட இந்த ஒப்பிடும் பிரக்ஞையை தவிர்க்கமுடியவில்லை.

கடலின் மீது ஒளியாலான பாதை ஒன்று உருவாகி கரைநோக்கி வந்தது. நெளியும் செந்நிறச்சரிகையாலான பாதை. மேலே செந்நிறத்தின் இடுக்குகளில் பொன்னிற ஒளி கசிய ஆரம்பித்தபோது அந்த சரிகைப்பாதை மேலும் அகலமாகியது. பொன் உருகி வழியும் அருவிபோலாகியது. பறவைக்கூட்டங்கள் சிறகுகளால் அந்த ஒளியைத் துழாவியபடி திளைத்தன.

பெருமூச்சு விட்டபடி திரும்பிப்பார்த்தேன். எனக்குப்பின்னால் சென்னை மெல்லிய நீலமேகப்படலத்தால் போர்த்தப்பட்டதுபோலத் தெரிந்தது. வெண்நுரையால் செய்யப்பட்டு, செய்த கரங்களால் மெல்ல அள்ளி எடுக்கப்பட்டு, அலுங்காமல் மண்ணில் வைக்கப்பட்டதுபோல. மேலே வானத்தில் மேகங்களின் கோபுரமுகங்கள் பொன்னொளிப்பூச்சு கொண்டன. கீழே மெல்ல மெல்லத் துலங்கி வந்தது பேரெழில் கொண்ட நகரம்.

---

## புறப்பாடு II – 13, காற்றில் நடப்பவர்கள்

சந்தியா அச்சகத்தில் சாலையோரமாக ஒரு பெரிய திண்ணை இருந்தது. பழங்கால வீடு அது. சென்னையில் அத்தகைய தெலுங்குமணம் வீசும் வீடுகள் பல இருந்தன. இரண்டுபக்கமும் திண்ணை. நடுவே உள்ள பள்ளம் வழியாக உள்ளே செல்லும் பாதைக்கு அப்பால் இருண்ட தாழ்வான அறைகள். திண்ணையில் கரிய சிமிண்ட்தரை நெடுங்காலம் பலர் படுத்து புரண்டதனால் உளுந்து போல வழவழப்பாக இருந்தது. வளையோடு போட்ட மேல்கூரை கீழே வந்து பாதி தெருவை மறைப்பதனால் உள்ளே இருந்துபார்த்தால் தெருவில் நடப்பவர்களின் இடுப்புக்குக் கீழேதான் தெரியும். ஆனால் தெருவின் வெக்கையையும் தூசையும் பெருமளவுக்கு தடுத்து உள்ளே ஒரு குளுமையை அதுதான் நிலைநிறுத்தியது.

திண்ணையில் ஒருபக்கம் உரிமையாளரின் ஸ்கூட்டர் நிற்கும். மறுபக்கம்தான் நான் படுப்பேன். கொசுவலை கட்டுவதற்கு சுவரில் ஆணிகள் இருந்தன. தெருப்பக்கம் பச்சைநிறமான மரத்தூண். அதில்தான் தபால்பெட்டியும் தொங்கும். சுவரில் ஒருபிறை. அதில் இரவில் அவசரத்துக்குத் தேவையான தீப்பெட்டியை வைத்திருந்தேன். அதனருகே பச்சைநிறச் சட்டங்கள் கொண்ட சிறிய சன்னல் உள்ளே நோக்கித்திறக்கும். அதற்கு கம்பிகள் இல்லை. மரத்தாலான அழிதான். உள்ளே அச்சக உரிமையாளரின் மேஜையும் பீரோவும் இருந்தன. அதற்கப்பாலுள்ள அறையில்தான் எந்திரங்கள்.

சந்தியா அச்சகத்தை நான் தேர்ந்தெடுத்தமைக்குக் காரணம் நடந்துசெல்லும் தூரத்தில் இருந்த திரையரங்குகள். தேவி திரையரங்கில் தமிழ்படங்கள். காசினோவில் ஆங்கிலப்படங்கள். கெயிட்டியில் அவ்வப்போது படம் போடாமல் மூடிப்போடுவார்கள். தினமும் ஒருபடம் பார்ப்பேன். பெரும்பாலும் ஆங்கிலப்படங்கள். அக்காலத்தில் பத்துவருடம் பழையபடங்கள்தான் இந்தியாவுக்கே வரும்.பெரும்பாலும் மொத்தமாக ஒரு விலைபேசி வாங்கிக்கொண்டுவந்து மூன்றுநாட்களுக்கு ஒருபடம் வீதம் போடுவார்கள். பீட்ஸ் டிராகன், ஹெர்பி ரைட்ஸ் அகெய்ன், சீக்ரெட் கார்டன் என்ன ஏது என்றே தெரியாத படங்கள். யாரோ வெள்ளைக்காரர்கள் ஏதேதோ பேசி மாறிமாறிச்சுட்டுக்கொண்டு ஓடுவார்கள். என்ன நடக்கிறது என ஒருமாதிரி அனுமானிப்பதற்குள் படம் முடிந்துவிடும்.

ஆனால் பாதிக்குமேல் பேய்ப்படங்கள். சுகர் ஹில், ஈவில் ஃபேஸ், ஐலண்ட் ஆஃப் டெத். விசித்திரமான நடமாடும் பிணங்கள் வீடுகளை உடைத்துப்புகுந்து தனியாக இருக்கும் பெண்களை வீல் வீல் என கதறச்செய்து துரத்தி துப்பாக்கிக்குண்டால் சிதறடிக்கப்பட்டு ஒன்று சேர்ந்து மீண்டும் தாக்கும். வெள்ளைக்காரர்களுக்கு பேய்களை துப்பாக்கியால் சுடமுடியாதென்ற அடிப்படை எந்த சினிமாவிலும் புரிபட்டதில்லை. டிராகுலாவைக்கூட துப்பாக்கியால் சுட்டார்கள். அவர் அல்லது அது பறந்து சுவரில் சென்று ஒட்டியபின் சிறகை விரித்து இருளில் செல்வதைக் கண்டபின்னரும் கூட அது என்ன என்பதைப்பற்றி பேசிக்கொண்டு டீ குடித்தார்கள்.

ஆங்கிலப்படம் என்றால் பதினொன்றரைக்கெல்லாம் திரும்பிவந்துவிடலாம். எந்தப்படத்துக்கும் நூறுபேருக்குமேல் வருவதில்லை. வருபவர்கள் நிம்மதியாக அமர்ந்து ஏதோ சிந்தனையிலாழ்ந்து பார்த்துவிட்டு பிரமைபிடித்தவர்களாகத் திரும்பிச்செல்வார்கள். ஒருபடம் மட்டும் அன்று பெரிய அலையைக் கிளப்பியிருந்தது. எண்டர் தி டிராகன். முன்னரே சென்னையில் பல இடங்களில் ஓடிய பிரதியாக இருக்கவேண்டும். நான் பார்த்தபோது மேலிருந்து கீழ்நோக்கி

வெள்ளிக்கோடுகள் பீரிட்டன. அதற்கு அரங்குநிறைய ரசிகர்கள். புரூஸ்லீ திரையில் தோன்றியதும் கைத்தட்டல்கள் விசில்கள். எனக்கு அது சுத்தமாகப் பிடிக்கவில்லை. அவர் இருகைகளையும் நீட்டி நின்று மெல்ல மெல்ல பின்னால் காலெடுத்துவைத்தபோது எனக்கு அவர் பெரிய கடல்நண்டு மாதிரி தோன்றினார்.

அச்சகவேலையை ஏழரை மணிக்கு முடித்தபின் பஸ் ஏறி கடற்கரைக்குச் செல்வேன். எட்டரை மணிக்கு திரும்பிவந்து ஏதேனும் ஓர் ஓட்டலில் நுழைந்து பரோட்டா சாப்பிடுவேன். பரோட்டாவில் பாலை ஊற்றி சீனிபோட்டு சாப்பிடத்தரும் விருதுநகர் கடைகள் பல இருந்தன. தொட்டுக்கொள்ள மிக்சர். அது இரவில் எந்த தொந்தரவும் தராமல் தூங்கச்செய்யும் உணவு. அங்கேயே ஒருரூபாய்க்கு பக்கோடா பொட்டலம் கிடைக்கும். வாங்கிக்கொண்டு நடந்து திரையரங்குக்குச் செல்வேன். எந்தப்படம் என்ன என்றெல்லாம் பார்ப்பதில்லை. ஆங்கிலப்படமாக இருந்தால் போதும். சென்று அமர்ந்து நன்றாகச் சாய்ந்து கண்களை மூடிக்கொண்டு அமர்ந்து படம் தொடங்குவதற்காகக் காத்திருப்பேன். படம் ஆரம்பித்ததும் பகோடாவைப்பிரிப்பேன். மெல்ல இதமாக தளர்த்திக்கொள்வேன்.

எப்படி சினிமாமீது அந்த ஆர்வம் எழுந்தது என்று எனக்கே தெரியவில்லை. மார்த்தாண்டம் கிறித்தவக் கல்லூரியில் புகுமுகவகுப்பில் சேர்ந்தபோதுதான் சினிமா பார்க்க ஆரம்பித்தேன். ஒருநாளுக்கு குறைந்தது இரண்டு சினிமா. நாகர்கோயிலுக்கு வந்தபின்னர் சினிமா ஆர்வம் குறைந்தது. ஒருகட்டத்தில் தமிழ்சினிமாக்களின் சுவரொட்டிகள்கூட சலிப்பூட்டின. சென்னையில்தான் சினிமா மீண்டும் வந்து பற்றிக்கொண்டது. மார்த்தாண்டம் குழித்துறை அரங்குகளில் பார்த்த காலகட்டத்தில் எல்லா சினிமாக்களும் எனக்குப் பிடித்திருந்தன. காட்சிகள் மாறிமாறி வரும் அழகே சினிமாவை ரசிக்க போதுமான காரணமாக இருந்தது.

சென்னையில் நான் ரசித்தது சினிமாவை என்பதைவிட திரையரங்குகளை என்றுதான் சொல்லவேண்டும். நகரத்தின் கருப்பைகள் அவை என்று நினைப்பேன். உள்ளே நுழைந்துகொண்டதும் இதமான அணைப்பு. தனிமை. தமிழ்ப்படங்களை நான் ஏன் வெறுத்தேன் என்று பார்த்தபோது அவை பேச்சாலும் அழுகையாலும் என்னுடைய உள்ளே ஓடிக்கொண்டிருந்த அகத்துடன் உரையாடி அதைச் சிதறடித்தன என்பதனால்தான் என்று தெரிந்தது. ஆங்கிலப்படங்கள் எனக்கு வெறும் காட்சியோட்டம் மட்டும்தான். அவ்வப்போது நான் என் அகத்திலிருந்து வெளியே வந்து விழும்போது திரையில் ஓடிக்கொண்டிருக்கும் சம்பந்தமே இல்லாத நிலக்காட்சி என்னை திகைக்கவைக்கும். ஊசியிலை மரங்கள் அடர்ந்த சாலைகள். பனிபடர்ந்த மலைகள். அடுக்குமாடிவீடுகள். விர்ராங் என்று சீறும் நீளமான கார்கள்.

அவை வேறு ஓர் உலகில் நிகழ்ந்துகொண்டிருக்க நான் இங்கிருந்து அவற்றைப் பார்த்துக்கொண்டிருக்கிறேன் என்பதே எனக்குப் போதுமானதாக இருந்தது. என்னால் அவர்களைப் பார்க்கமுடியும். அவர்கள் என்னை பார்க்கமுடியாது. விசித்திரமான அந்த எண்ணத்தின் பாதுகாப்பு திரையரங்கில் ஒரு இதமான போர்வைபோல சூழ்ந்திருக்கும்.

ஒருவாரம்கூட என்னால் குடிசையில் தங்கமுடியவில்லை. அந்த ஒருவாரத்தில் ஒருநாள்கூட அங்கே இரவு தூங்கவில்லை. பகலில் தூங்கி இரவெல்லாம் அலைந்துகொண்டிருந்தேன். பின்பு வாடகையைக் கொடுத்துவிட்டு சந்தியா அச்சகத்துக்கு வந்துவிட்டேன். அங்கே வாரம் ஒரு ஒரு துப்பறியும் நாவல் எழுதிக்கொடுத்தேன். சாணித்தாளில் நூறுபக்கம்தான். நிறைய துப்பாக்கிச் சண்டைகள் இருக்கவேண்டும். நிறையபேர் சாகவேண்டும். ஆனால் கதாநாயகன் தமிழனாகவும் கதை தமிழகத்தில் நடப்பதாகவும் இருக்கவேண்டும். அச்சக உரிமையாளரான பசவராஜு 'நெறைய கொல்லணும் தம்பி-சுட்டுனே இருக்கணும்-' என்பார்.

மோகன் என்றபேரில் எழுதினேன். என் கதைகளுக்குப் பின்புலமாக சேர்வராயன் மலையை எடுத்துக்கொண்டேன். அங்கே நான் போனதே கிடையாது. அந்தப்பெயர் எனக்குப்பிடித்திருந்தது. அந்த மலையில் குதிரைகளில் என் கதாநாயகர்கள் விரைந்தார்கள். அவர்களை மலையிடுக்குகளில் இருந்து கொள்ளைக்காரர்கள் சுட்டார்கள். பிரபல கொள்ளையன் ஒருவன் அவனைப் பிடிக்கவந்த துப்பறியும் கதாநாயகனிடமிருந்து தப்ப பத்தாம் மாடியிலிருந்து குதிக்கிறான். கீழே சிதறிய சடலம் கிடக்கிறது. மண்டை உடைந்து ரத்தக்குழம்பல். ஆனால் உண்மையில் கொள்ளையன் சாகவில்லை. குதித்தவன் கீழே ஒரு வலையில் விழுந்து தப்பித்துவிட்டான். கீழே உள்ள மாடியிலிருந்து அவனைப்போலவே இருக்கும் ஒருவனைக் கொன்று அந்தச் சடலத்தைத்தான் வீசியிருக்கிறார்கள். அந்தவீடுதியே கொள்ளைக்காரனுடையது.

பசவராஜு பரவசத்துடன் கட்டிப்பிடித்தார். கடைசியில் துப்பாக்கிச் சண்டையில் ஒரு செயற்கைப் பாறையை உருவாக்கி அதனுள் அமர்ந்துகொண்டு பாறையை நகர்த்தி நகர்த்திச் சென்று கொள்ளையர்களைச் சுடும் காட்சியில் பசவராஜு கண்ணீர் மல்கினார். எனக்கு இருநூறு ரூபாய் ரொக்கமாகத் தந்தார். நான் காலையிலேயே கிளம்பி நகருக்குள் நுழைந்து ஒரு பெரிய ஓட்டலில் சிற்றுண்டி சாப்பிட்டேன். ஒரு ஆட்டோவில் ஏறி சும்மா சுற்றிவந்தேன். மீண்டும் பகலெல்லாம் அலைந்தேன். மீண்டும் எதையோ சாப்பிட்டேன். மாலையில் ஒரு ஆங்கிலப்படம் பார்த்துவிட்டு பரோட்டா சாப்பிட்டுவிட்டு திரும்பும் வழியில் இன்னொரு திரையரங்கு. என்னிடம் இருபது ரூபாய் மிஞ்சியிருந்தது. இருபதுரூபாய்க்கு அந்த அரங்கின் மிக உயர்ந்த இருக்கைக்கான சீட்டை எடுத்துக்கொண்டு உள்ளே நுழைந்தேன்.

உப்பரிகையில் மொத்தமே எட்டுபேர்தான் இருந்தோம். அரங்கில் நான் தன்னந்தனியாக இருக்கும் உணர்வைத்தான் அடைந்தேன். கையில் பணமில்லை என்பதே ஆழ்ந்த நிம்மதியை அளித்தது. கால்களை நீட்டிக்கொண்டு தலையை இருக்கையில் சாய்த்து அமர்ந்தவன் தூங்கிவிட்டேன். முந்தைய படத்தின் நிலக்காட்சிகள் கண்களுக்குள் கொஞ்சநேரம் தெரிந்தன. மின்விசிறியின் கறக்கறக் ஒலி கேட்டுக்கொண்டிருந்தது.

படம் ஓட ஆரம்பித்து கொஞ்சநேரம் கழித்து திடுக்கிட்டு எழுந்து திரையைப்பார்த்து சொல்லிழந்து அமர்ந்திருந்தேன். திரை ஒரு பெரிய சதுரவடிவ திறப்பாக இருந்தது. நான் அதனுள் தலைகீழாக விழுந்து சென்றுகொண்டே இருந்தேன். அங்கே உண்மையான மனிதர்களை, உண்மையான பனிப்பாளங்களைக் கண்டேன். சினிமாவில் எனக்கு அப்படி

சிலசமயம் நிகழ்ந்திருக்கிறது. யா. பெரல்மான் எழுதிய பொழுதுபோக்கு பௌதிகம் என்ற நூலில் அதை நான் பிறகுதான் வாசித்து புரிந்துகொண்டேன். திரைக்கும் நாமிருக்கும் இருக்கைக்குமான தூரம் மிகச்சரியான ஒன்றாக அமைகையில் படம் முப்பரிமாணம் கொண்டு மிக அருகே தெரிகிறது. என் ஆழ்மனம் அரைத்தூக்கத்தில் நன்றாகவே திறந்து கிடந்திருக்கலாம். நான் அந்தப் படத்துக்குள் இருந்தேன்.

வின்ட்வாக்கர் என்றபடம். முழுக்க முழுக்க செவ்விந்தியர்கள். வயது முதிர்ந்த ஒரு செவ்விந்தியர் மரணவிளிம்பில் பனிமூடிய குகை ஒன்றுக்குள் இருந்தார். அங்கிருந்து அவர் தன்னந்தனியாக கிளம்பினார். பனிநிலம் கண்ணாடியை உருக்கி ஊற்றிச் செய்ததுபோலிருந்தது. அவரது ஒவ்வொரு காலடியையும் நான் மிகத்துல்லியமாக கண்டேன். அவரது மூச்சை என் மேல் அறிந்தேன். அவர் கரடியுடன் போரிட்டபோது அதன் நகம் கீறிவிடுமென அஞ்சும் அருகாமையில் இருந்தேன். செவ்விந்தியக் கிராமங்கள், செவ்விந்தியர்களின் பூசல்கள், செவ்விந்தியக் குழந்தைகள்.

இருளில் உடலைக் குறுக்கியபடி நடந்தபோது எனக்குள் பனிநிலத்தின் ஒளி அலையடித்துக்கொண்டே இருந்தது. கூர்மையான பனிக்குச்சி ஒன்றை படத்தில் கண்டேன். அதன் நுனியில் கையால் வருடுவதுபோல உணர்ந்தேன். முதுகு கூசியது. ஒரு சவரத்தகடின் கூர்நுனியில் கையால் வருடுவதுபோல. பலமுறை நான் செய்துபார்த்திருக்கிறேன். அப்போது நம் புலன்களெல்லாம் உச்சத்தில் நின்றுகொண்டு உடம்பு மெல்லச் சிலிர்த்தடங்குவது பெரிய அனுபவம். மிகமிகக்கூர்மையான ஒன்று எனக்குப்பின்னால் எப்போதுமிருக்கவேண்டுமென நினைத்துக்கொள்வேன். அது அங்கிருக்கையில் ஒரு கணம்கூட வீணாகச் செல்வதில்லை.

திண்ணையில் பாயைத்தூக்கிப்போட்டிருந்தார் பசவராஜு. கொசுவலையைக் கட்டிக்கொண்டு படுத்தேன். நாளை எழுந்ததும் பனிவெளி பற்றி ஒருநாவல் எழுதவேண்டும் என்று நினைத்துக்கொண்டேன். அந்த நினைப்பே உற்சாகத்தை அளித்தது. இந்த நகரத்திலிருந்து அப்பால், வெகுதொலைவில், எனக்கான ஒரு பூமி உள்ளது. பாலைநிலங்கள், காடுகள், செங்குத்தான மலைகள், உருளும்பாறைகள் கொண்ட மலைச்சரிவுகள், அற்புதமான குதிரைகள், ஒவ்வொருகணமும் வெடித்துவெடித்து ஒளிரும் கணங்களாலான காலம். கண்களை மூடிக்கொண்டு புன்னகையுடன் அந்தப் பனிவெளியைப் பார்த்தேன். காஷ்மீர். இல்லை அங்கே எப்போதும் பனி இருக்காது. அதற்கும் மேலே. இன்னும் உச்சியில் ஏதாவது ஓர் இடம். பனியில் வாழும் மனிதர்கள் எவரென்று பார்க்கவேண்டும்.

வின்ட்வாக்கர். காற்றில்நடப்பவன். காற்றாக நடப்பவன். நடக்கும் காற்று. அந்தப்படத்தில் ஒருவர்கூட வெள்ளையர் இல்லை. அவர்கள் வாழும் மண்ணில் வெள்ளையர் அப்போது வரவில்லையா என்ன? இல்லை அவர்களின் வாழ்க்கைக்குள் வெள்ளையர் ஊடுருவவில்லையா? வெள்ளையர்களும் அவர்களும் ஒரே இடத்தில் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள்ளாமலேயே வாழ்வதுகூட சாத்தியமாகியிருக்கலாம். அவர்கள் வாழும் நிலம் அவ்வளவு பெரியது. சினிமாவில்கூட நிலம் எப்போதுமே ஆளில்லாமல் விரிந்து வெறுமைகொண்டு கிடக்கிறதைத்தான் கண்டேன். ஒரு குதிரைக்காலடிக்காக, ஒரு மனிதக்குரலுக்காக காத்துக்காத்து நூற்றாண்டுகளாக தூங்கிவழியும் மண்.

அங்கே செவ்விந்தியர்கள் வாழ்வதையே வெள்ளையர் அறிந்திருக்காமலிருக்கலாம். வெள்ளையர்களின் நகரங்களும், குதிரைவண்டிகளும், ரயில்களும் புழங்கும் மண்ணின் தலைக்குமேல் குன்றுகளின் மடிப்புகளுக்குள் பனிப்படுகைகளின் ஆழத்தில் செவ்விந்தியர்களின் தோல்கூரையிடப்பட்ட கூம்புவடிவக் குடில்கள் கொண்ட சிற்றூர்கள் இருக்கலாம். நகரும் ஊர்கள். குதிரைகள். கனத்த உடல்கொண்ட பசுக்கள். செவ்விந்தியர்கள் ஓசையில்லாமல் வாழ்வதற்குக் கற்றுக்கொண்ட வேட்டைக்காரர்கள். தங்களை அவர்கள் கண்ணுக்குத்தெரியாதவர்கள் என்று அழைத்துக்கொள்வதுண்டு.

யாரோ ஏதோ பேசும் ஒலி மிக அருகே கேட்டு விழித்து எழுந்து அமர்ந்தேன். கொசுவலையை தூக்கி வெளியே வந்தேன். என்னருகே இருவர் நிழலாக நின்றிருந்தனர். உடல் அனிச்சையாக நடுங்க ‘யாரு? என்றேன்.

‘சாமி..ஒண்ணில்ல சாமி..படுங்க சாமி’ என்று ஒருவன் மெல்லியகுரலில் சொன்னான்.

என் நடுக்கம் தணிய சற்றுநேரமாகியது. நரிக்குறவர்கள் என்று தெரிந்தது. அவர்கள் என்ன செய்துகொண்டிருக்கிறார்கள் என்று பார்த்தேன். ஒருவர் தோளில் ஒரு சாக்கு இருந்தது. இன்னொருவர் சாக்கடையோரம் குனிந்து நீளமான குச்சியால் குத்திக்கொண்டிருந்தார். என்னருகே நின்றவர் கையில் பெரிய டார்ச் விளக்கு இருந்தது. சாக்கடையில் குத்திக்கொண்டிருந்தவர் ஏதோ மொழியில் ஒற்றைச்சொல்லைச் சொல்ல டார்ச் விளக்கைப்பிடித்தவர் சட்டென்று குனிந்து உள்ளே விளக்கை அடித்தார். நான் எம்பி குனிந்து பார்த்தேன். ஒரு பெருச்சாளி மீசை விடைத்த கூரிய முகத்தை மேல்நோக்கித் தூக்கி அசையாமல் நின்றிருந்தது. அடுத்தகணம் எம்பிப்பாய்ந்துவிடும்போன்ற பதுங்கல். கண்கள் இரண்டு பாசிமணிகள் போல தெரிந்தன.

நீளமான குச்சி வைத்திருந்தவர் அதன் நுனியால் அதை குத்தினார். ஓங்கிக்குத்தவில்லை. அதனருகே மெதுவாகத் தூக்கி சட்டென்று ஓர் இறக்கு ‘ரிப் ரிப் ரிப்’ என்ற ஒலியுடன் அதுகுச்சியில் மாட்டி துடித்து நெளிந்தது. பெருச்சாளியின் வாய்க்குள் உள்ள பற்களை அப்போதுதான் பார்த்தேன். அதை அப்படியே மேலே தூக்க இன்னொருவர் அதன் வாலைப்பிடித்து உருவி எடுத்து கீழே கல்லில் இரண்டு முறை ஓங்கி அறைந்தபின் மூட்டைக்குள் போட்டுக்கொண்டார். மூட்டைக்குள் கனமாக இருப்பவை பெருச்சாளிகள் என்பதை நினைக்க ஆச்சரியமாக இருந்தது.

‘எதுக்குங்க?’ என்றேன்.

‘சாமி, இதானுங்க சாப்பாடு’

‘இதுவா?’

'நல்ல டேஸ்டா இருக்கும் சாமி..'

சாக்கு வைத்திருந்தவர் 'கறியிலேயே பெருச்சாளிதான் சாமி டேஸ்டு..ஒருக்கா சாப்பிட்டுப்பாத்தா விட மாட்டே' என்றார்.

'எதுக்கு அவ்ளவு புடிக்கிறீங்க?'

'நாங்க நறைய பேரு இருக்கோம் சாமி..புள்ளகுட்டீல்லாம் இருக்கு சாமி'

அவர்கள் அப்பால் நகர்ந்து சென்றார்கள். நிழல்கள் அசைவதுபோலத்தான் இருந்தது அவர்கள் சென்றது. ஓசையே இல்லை. நான் போர்வையை கடாசிவிட்டு எழுந்து அவர்கள் பின்னால் போனேன்.

'நீ எதுக்குசாமி கூடவே வாரே''

'சும்மா பாக்க'

'இதுல என்ன பாக்கறது?'

சாக்கு வைத்திருந்தவர் அவர்களின் மொழியில் ஏதோ சொல்ல மற்ற இருவரும் பதில் சொன்னார்கள். மிகவேகமாகப் பேசுவது போலிருந்தது. காய் காய் என்று ஒரு சொல் திரும்பத்திரும்ப வருவதுபோலக்கேட்டது.

அடுத்தபெருச்சாளியை குத்தி மேலே எடுத்தபோது 'காமிங்க' என்றேன்.

குத்தியவர் அதை என்னிடம் நீட்டினார் 'சாமி கடிச்சுப்போடும்.கடிச்சா புண்ணு லேசிலே ஆறிடாது'

நான் அதன் முதுகை தொட்டுப்பார்த்தேன். எலியின் முடி மிகமென்மையானது. அதன்முடியைக்கொண்டு ஒருகாலத்தில் ஐரோப்பியப் பெண்களுக்கு புருவத்துக்கான பொய்முடி செய்வார்கள் என்று எங்கோ வாசித்திருக்கிறேன். பெருச்சாளியின் முடி முள்மாதிரியே இருந்தது.

'நகத்துக்கும் வெஷமுண்டு சாமி..'

'பெருச்சாளி புள்ளியாரு வாகனம் தெரியுமில்ல?' என்றேன்.

'ஆமுங்களா?' என்றார் டார்ச் விளக்கு வைத்திருந்தவர். பிள்ளையார் என்பது என்ன என்றே அவருக்குத் தெரிந்திருக்கவில்லை என்று தோன்றியது.

நான் ''ரோட்டோரத்திலே இருக்குமே, யானைமாதிரி தலை உள்ள சாமி..அதோட வாகனம் பெருச்சாளிதான்' என்றேன்.

'ஆமுங்களா?'

அவர் அதை உள்ளே வாங்கவேயில்லை என்று தெரிந்தது. அவர்களுக்கு சம்பந்தமில்லாததை கவனிக்கும் கருவியே அவர்களுக்குள் இல்லை என்று நினைத்துக்கொண்டேன். இந்தநகரத்தில் வாழ்ந்தும் பிள்ளையார் யாரென்றே தெரியாத ஒருவரிடம் சொல்லிமட்டும் என்ன புரியவைக்க முடியும்.

அவர்கள் சென்றபின் திரும்பி வந்து படுத்துக்கொண்டேன். அவர்களுக்கு எலிக்குப் பஞ்சமே இருக்காது. நகரில் கூட்டம்கூட்டமாக நிறைந்திருப்பவை அவை. எலியை உணவாகக் கொள்ள ஆரம்பித்தால் அதன்பின் சாப்பாடு என்பதைப்பற்றிய கவலையே தேவையில்லை. அவர்கள் வீடுகளில் தங்குவதில்லை. உடைகளைப்பற்றிய கவலையே இல்லை.

அப்படியென்றால் அவர்கள் எதற்கு தொழில் செய்கிறார்கள்? பாரிமுனையில் அவர்களின் பெண்கள் விதவிதமான ஊக்குகளை கோர்த்து சங்கிலிமாதிரி தூக்கிக்கொண்டு அலைந்து திரிந்து விற்பதைக் கண்டிருக்கிறேன். முதுகில் கிழிசல்தூளியில் மூக்குவடியும் செம்பட்டைத்தலைக்குழந்தை அமர்ந்து ஆர்வமாக வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கும். நடக்க ஆரம்பித்துவிட்ட குழந்தைகள் ஒவ்வொருவரையாக காலில் தொட்டு 'ஷாமி ஷாமி' என்று பிச்சைகேட்கும். விலகிச்சென்றால் உற்சாகமாக பின்னாலேயே வந்து 'ஷாமி ஷாமி..'

சாமிகள். நான் வாழும் உலகைச்சேர்ந்தவர்கள் எல்லாருமே அவர்களுக்கு ஏதோ ஒருவகை தேவர்கள். தலைக்குமேலே சிறகுடன் பறந்தலையும் தேவர்கள் நம் கண்ணுக்குத் தெரிவதில்லை. நாம் இவர்களின் கண்ணுக்குப்படுகிறோம். இல்லை, ஒருவேளை கிண்டலுக்காகத்தான் அப்படி அழைக்கிறார்களா?

அந்த நாளுக்குப்பின் அவர்கள் என் கண்ணுக்குப்பட ஆரம்பித்துவிட்டார்கள். பாரிமுனையில் பரபரப்பான சாலையின் ஓரத்திலேயே பாலிதீன் தாளாலும் வேட்டியாலும் கூடாரம் கட்டி அவர்கள் குடியிருப்பதை கண்டேன். காலை பத்துமணிக்கு ஆண்கள் உல்லாசமாக சும்மா அமர்ந்திருந்தார்கள். கொண்டை போட்டு அலுமினிய மூக்குத்தி அணிந்த கட்டுமஸ்தான ஒருவர் மண்ணில் கால்நீட்டி அமர்ந்து அதன்மேல் ஒரு குழந்தையை வைத்து தூக்கி தூக்கி கொஞ்சிக்கொண்டிருந்தார். இன்னொருவர் ஒருக்களித்துப்படுத்து சிறிய டிரான்ஸிஸ்டரில்

பாட்டுகேட்டுக்கொண்டிருந்தார்.

அப்பால் நான்கு கிழவர்கள் வட்டமாக அமர்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்களின் குச்சிகள் அருகே வைக்கப்பட்டிருந்தன. ஒரு கிழவி எதையோ கல்லில் வைத்து நசுக்கிக்கொண்டிருந்தாள். இருகுழந்தைகளை ரஜினிகாந்தின் பெரிய முகம் மீது படுக்கவைத்திருந்தனர். காகங்கள் அவர்கள் நடுவே அமர்ந்தும் எழுந்துபறந்தும் சிறகடித்தன. காற்றில் கூடாரத்தின் விலா உப்பி உப்பி அமிழ்ந்தது. ஒரு பிரியமான மிருகம்போல அது அவர்கள் நடுவே நீலநிறத்தில் நின்றுகொண்டிருந்தது.

பரபரப்பாக ஓடுபவர்கள், பேருந்துக்காக காத்திருப்பவர்கள், விற்பவர்கள், கூவுபவர்கள் எவரும் அவர்களை கவனிக்கவில்லை. நான் விலகி நின்று அவர்களையே பார்த்துக்கொண்டிருந்தேன். கிழவர்கள் மிக உயிர்வேகத்துடன் பேசிக்கொண்டிருந்தனர். ஒவ்வொருவர் பேசுவதையும் பிறர் மறித்துப் பேசினர். அப்படி எதைத்தான் விவாதிப்பார்கள் என்று தெரியவில்லை. சட்டென்று ஒன்று தெரிந்தது, அவர்கள் சாலையில் நிற்கும் என்னையும் என் உலகத்தையும் கொஞ்சம்கூட கவனிக்கவில்லை.

காமதேனு என்ற திரையரங்கில் ஓர் ஆங்கிலப்படம் பார்க்க நுழைந்தேன். மிகப்பழைய படம். இரண்டுநாள் இடைவெளிக்காக போட்டிருப்பார்கள் போலும். பழைய ஒரு சுவரொட்டி மட்டும்தான் இருந்தது. நான் சீட்டு வாங்கியபோது என்னைத்தவிர எவரும் இல்லை. உள்ளே சென்று அமர்ந்தபோது ஒருவர் இருப்பதைப் பார்த்தேன். இரண்டாம் ஆட்டத்துக்கு இத்தகைய படங்களுக்கு வருபவர்கள் மிகமிகத் தனிமையானவர்கள், என்னைப்போல.நான் மிகவும் தள்ளி அமர்ந்துகொண்டேன். இன்னொருவர் வந்து மிகவும் தள்ளி அமர்ந்துகொண்டார். மேலும் இருவர் சந்தேகத்திற்குரிய நெருக்கத்துடன் வந்தனர்.

சற்றுநேரத்தில் கலைசலான சத்தம் கேட்டது. பத்திருபதுபேர் கூட்டமாக வாசலில் நின்று பேசியபின் பேசிக்கொண்டும் சிரித்துக்கொண்டும் முன்னிருக்கைகளில் சென்று அமர்ந்தார்கள். எல்லாருமே நரிக்குறவர்கள். ஐந்தாறு பெண்கள், இரண்டு சிறுமிகள், பெண்களின் இடுப்பில் கைக்குழந்தைகள். படம் ஆரம்பமாகும் வரை கத்திப்பேசிக்கொண்டே இருந்தார்கள். எங்களுக்கு மின்விசிறியை போட உள்ளே வந்த ஊழியர் 'தஅங்க என்ன சத்தம்?' என்று அதட்டினார்.

'என்னத்தை புரியுதுண்ணு வாறாங்க?' என்றார் அங்கே இருந்த வழுக்கைத்தலை மனிதர்.

அவருடன் இருந்த இன்னொருவர் 'அதுங்களுக்கு தமிழ்ப்படம் மட்டும் என்னத்தை புரியுது? எல்லாமே படம்தான்..'என்றார்.

ஊழியர் என்னருகே வந்து எனக்கு மட்டும் கேட்கும்படி மெல்ல 'இவனுக மட்டும் புரிஞ்சுதான் இங்கிலீஸு படம் பாக்கிறானுகபோல..' என்றபடிச் சென்றார். எனக்குநானே புன்னகை செய்துகொண்டேன்.

உண்மையில் தலையும் வாலுமில்லாத படம். ஒருவனுக்கு ஏதோ நோய், ஆஸ்பத்திரியில் இருக்கிறான், அவன் மனைவி அவனை நன்றாக பார்த்துக்கொள்கிறாள், ஆனால் அவளுக்கு ஒரு காதலன் இருக்கிறான், அந்தக் காதலனை கணவன் அடிக்கடி சந்திக்கிறான், டாக்டர் என்னவோ சொல்கிறார். கணவன் இறந்துபோனானா இல்லையா என்று படம் முடிந்தபின்னரும் புரியவில்லை.

படம் முடிந்ததும் அவர்கள் கூச்சலிட்டு சிரித்துப்பேசிக்கொண்டே வெளியே சென்றார்கள். நான் வேறுவழியாக வெளியே சென்றபோது வெளியே செல்லும் வாசலின் அருகே அவர்களில் ஒரு அரைக்கிழவி உற்சாகமாக கைகால்களை ஆட்டி நடனமிடுவதைப் பார்த்தேன். இருவர் கைகளைத்தட்டினார்கள். அதன்பின்புதான் அங்கே டீக்கடையில் எம்ஜிஆர் பாடல் ஓடுவதை கவனித்தேன். ஆடலுடன் பாடலைக்கேட்டு ரசிப்பதிலேதான் சுகம் சுகம் சுகம்அவள் ஹா ஹா ஹா என்ற ஒலிக்கேற்ப இடுப்பில் இருந்த பாவாடையைத் தூக்கி தூக்கிக் காட்ட கடையில் இருந்தவர்கள் சிரித்தார்கள்.

நான் அச்சகம் செல்ல வெகுதூரம் நடக்கவேண்டும். இருளில் நடந்துகொண்டிருக்கையில் யோசித்தேன். அழுதுகொண்டோ கவலைகொண்டோ இருக்கும் ஒரு நரிக்குறவரைக்கூட நான் பார்க்கவில்லை. அவர்களுக்குள் பயங்கரமாகச் சண்டை போடுவார்கள். மாறிமாறி கையில் கிடைத்தவற்றை எடுத்து வீசிக்கொண்டு ஆவேசமாக வசைபாடுவார்கள். சண்டைகளில் பெரும்பாலும் பெண்கள் உடைகளைத் தூக்கி காட்டியபடி நடனம்போல ஆடி வலிப்புகாட்டினார்கள். அனால் சில நிமிடங்களிலேயே சிரிப்பு, கூச்சல், நடனம்.

ஒருமுறை ஒரு கிழவி குடுமி வைத்த ஒருவனை நோக்கி பாவாடையைத் தூக்கியபடி 'ச்சோட்! ச்சோட்! ச்சோட்!' என்று கூவியபடி ஓடினாள். அவன் தன் கையிலிருந்த குச்சியை நீட்டி 'லாந்த்! துமிறி லாந்த்' என்று கூச்சலிட்டான். அவள் ஒரு கல்லை எடுத்து எறிய அது சாலையில் வந்து விழுந்தது. ஆட்டோக்காரர் 'நாயிங்க' என்று வளைத்துச்சென்றார். கிழவி ஒன்றும் நடக்காததுபோல அவளுடைய கூடாரத்துக்குத் திரும்பிச்சென்றாள். அவன் ஏதோபாட்டை முனகியபடி திரும்பிநடந்தான்.

மீண்டும் ஒருமுறை என் தெருவிலேயே பெருச்சாளி பிடிக்கவந்தார்கள். இம்முறை வேறு ஒரு குழு. நான்குபேர் இருந்தனர். நாலைந்து பெருச்சாளிகளைப் பிடித்தனர். அவர்கள் அப்பால் செல்வதை கொசுவலைக்குள்ளேயே படுத்து பார்த்துக்கொண்டிருந்தேன். அந்தப் பெருச்சாளியை நான் ஏன் இன்னமும் நினைவுகூர்கிறேன் என்று யோசித்தேன். அதன்முகம் சின்ன நாட்டுநாய்க்குட்டியைப் போலிருந்தது. தலைமேல் வருடினால் நாய்க்குட்டி அப்படித்தான் சொக்கி நிற்கும்.

தூரத்தில் சைக்கிளில் வந்த ஒருவர் அவர்கள் அருகே இறங்குவதைக் கண்டேன். அவர் போலீஸ்காரர் என்று தெரிந்தது. கையில் பெரிய டார்ச் வைத்திருந்தார். சைக்கிளை ஸ்டாண்ட் போடாமலேயே நின்று ஏதோ கேட்டார். சட்டென்று குரலை உயர்த்தி 'டே பொறுக்கித்தாளி!' என்று கூவியபடி டார்ச் விளக்கால் ஒருவன் தலையில் அறைந்தார். உக்கிரமான அடி. அவன் அலறியது சொல்லற்ற மிருகக்குரல் போலிருந்தது. 'ஓடு-ஓடுரா' என்று இன்னொருவனையும் டார்ச்சால் ஓங்கி அறைந்தார். இன்னுமிருவர் 'சாமீ சாமீ-போறம் சாமீ..' என்று கூவினார்கள்.

'ஓடு-நிக்கக்கூடாது, கொன்னிருவேன்' அவர் டார்ச்சை ஓங்கும்போது அவர்கள் அடிவாங்குவதற்காக உடலை வளைத்து கையை சற்றுதூக்கி பதுங்கி நின்றார்களே ஒழிய ஓடவில்லை. ஓடினால் அவரால் பிடிக்கமுடியாது. சைக்கிள் அவர் உடலில் சாய்ந்து நின்றது.

'கைய.. கைய.. கைய ..எடுடா-தடுப்பியா? டேய்' அவன் கையை விலக்க மூன்றாமவனுக்கும் அடி விழுந்தது. அடிபட்டவர்கள் தலையை கையால் பொத்தியபடி குனிந்து குறுகி நின்றனர். மிக வலுவான அடிதான்.

'டேய் வாடா இங்க-வாடான்னா'

'சாமி சாமி'

'வாடா'

அவன் அருகே வந்ததும் அவனையும் ஓங்கி அறைந்தார். அடி சரியாகப்படவில்லை. அவன் வளைந்துவிட்டான் 'டேய் நில்ரா-டே' மீண்டும் அடி.

'ஓடுங்கடா'

அவர்கள் சாக்குகளும் கம்புகளுமாக தலையைப் பொத்திக்கொண்டு சென்றார்கள். சைக்கிளைத் தள்ளிக்கொண்டு போலீஸ்காரர் என்னை நோக்கி வந்தார். நான் சாலையில் நின்றிருந்தேன்.

'என்ன சார்?'

'யார்ரா நீ?'

'இந்த பிரஸ்சிலே வேல பாக்கிறேன்..' என்றேன். 'என்னாச்சு?'

'என்ன ஆவணும்? போய் படுரா'

நான் திரும்பச்சென்று கொசுவலைக்குள் புகுந்தேன். என் உடம்பு மெல்ல நடுங்கிக்கொண்டிருந்தது. எவ்வளவோ சத்தங்கள், ஆனால் மனித உடம்பில் அடிவிழும் ஒலியை மட்டும் மனம் எவ்வளவு நுட்பமாக உள்வாங்கிக்கொள்கிறது.

போலீஸ்காரர் சைக்கிளில் திரும்ப வந்தார். சைக்கிளை சாய்த்து நிறுத்திவிட்டு 'என்ன தம்பி தூங்கிலியா?' என்றார்.

'இல்ல'

'கம்னாட்டிப்பசங்க தம்பி-சும்மா ஒண்ணுரெண்டு போட்டு உட்டாத்தான் ஒளுங்கா இருப்பானுக' என்றபடி என்னருகே அமர்ந்தார். 'நமக்கு இந்த ஏரியாதான் ரோந்து-தம்பி பேரு என்ன?'

என் பெயரைச் சொன்னபடி எழுந்து கொசுவலைக்கு வெளியே வந்து அமர்ந்தேன்.

'கொசு கடிச்சு கண்ணசர முடியாது-என்னா கொசு-முனிசிப்பல்காரன் மருந்தடிக்கிறானான்னா அடிக்கிறான். கொசு எங்க கேக்குது..?' என்றார். 'தம்பிக்கு எந்த ஊரு?' அவர் கை தற்செயலாக என் தொடைமேல் பட்டது. உடனே அது தற்செயலல்ல என்று எனக்குத் தெரிந்தது.

'நாகர்கோயில்'

'இம்மாந்தொலை வந்திருக்கிறீங்க..' என்றார். 'இங்க என்ன பண்றீங்க?'

'பிரஸ்ஸிலே புக்கு எளுதறேன்'

'ஓ-என்னா புக்கு?' இம்முறை கை இயல்பாக என் இடுப்புக்குக் கீழே தொட்டது.

'கைய எடுங்க'

'இருக்கட்டும்'

'கைய எடுரா'

'டேய் என்ன? என்ன பேச்சு?'

'கைய எடுரா-நான் யாரு தெரியும்ல? இங்க அச்சுபோடுற பத்திரிகையில எழுதறவன்-நாறடிச்சிருவேன்'

'சேச்சே என்ன தம்பி-இப்ப என்ன ஆச்சு? சரி உடுங்க'

'போங்க நான் தூங்கணும்'

'அதில்ல-மனசில வச்சுக்காதீங்க'

'போங்கய்யா'

அவர் எழுந்து சென்றார். சைக்கிள் உருளும் ஒலி கேட்டுக்கொண்டிருந்தது. என் மனதில் நிறைந்த கசப்பு என்னை வெகுநேரம் தூங்கவிடவில்லை.

நாலைந்து நாட்கள் கழித்து அவரை டீக்கடையில் பார்த்தேன். 'சௌக்கியமா தம்பி?' என்றார்.

'ம்' என்றேன்.

'தம்பி கோச்சுக்காதீங்க-நான் அத அப்பவே உட்டாச்சுல்ல-டீ சாப்பிடுங்க'

'பரவால்ல'

இரண்டுநாள் கழித்து அவர் இயல்பாக வந்து திண்ணையில் அமர்ந்தார். நான் வெளியே வரவேயில்லை.

'மார்கழி இப்ப வந்திருமே-பனியில இங்க எப்டி படுப்பிக?'

'உள்ள ரூம் இருக்கு-குளிரா இருந்தா அங்க படுக்கலாம்'

'தம்பி ஒண்ணியும் மனசில வச்சுக்காதீங்க-நம்ம பொளைப்பு இது நாறப்பொளைப்பு' என்றார். 'நம்ம பேரு ரத்தினம்-புதுக்கோட்டைப்பக்கம். இங்கதான் டூட்டி-குடும்பம் கோட்டர்ஸிலே இருக்கு-'

நான் சற்று தணிந்தேன். 'எதுக்காக அவங்கள அடிச்சீங்க?''

'நரிக்கொறவக்கூட்டம் தம்பி-'

'திருடுவாங்களா?'

'சேச்சே- திருடல்லாம் மாட்டாங்க. அவனுங்களுக்கு கையிலே காசு ஜாஸ்தி தம்பி. சாப்பாடு அப்டி இப்டி ஆயிரும். ராத்திரி ஓட்டலிலே மிஞ்சினத திம்பாங்க. நாயி எலீண்ணு பிடிச்சு சுட்டுத்திம்பாங்க. அப்றம் எதுக்கு காசு? பொம்புள எதாவது வித்து காசுகொண்டாந்தா அதுக்கு சாராயத்த ஊத்திக்கிடறது. சினிமா பாக்கிறது. அஞ்சு ரூபா கடைச்சா அன்னிக்கே தீத்திரணும். கையில காசு இருந்தா தூக்கம் வராம அலைவானுக. குடிச்சுப்போட்டு ரா முச்சூடும் ஆட்டம்தான். சிந்தாரிப்பேட்டையாண்ட இவங்க எடம் ஒண்ணு இருக்கு-கூவம் பக்கமா-இந்நேரம் ஆட்டம்போட்டு கூத்தடிச்சிட்டிருப்பானுக- நாகரீகம் கெடையாது தம்பி-படிப்பு பண்பு ஒரெளவும் கெடையாது-நம்மள மாதிரி மனுசங்க கெடையாது இவுனுங்க. இந்த பண்ணி பெருச்சாளிமாதிரி ஒரு சீவன்-'

'ஓ-' என்றேன். 'திருடல்லேன்னா எதுக்கு அடிக்கிறீங்க?'

'குளுவக்காரப்பயக்க தம்பி-அதான் ரெண்டு போட்டு உடுறது-ஆனா திருடல்லாம் மாட்டானுக. இவனுக திருட ஆரம்பிச்சா பிறவு போலீஸுகாரன் கோமணம் கட்டிட்டு காசிபோவ வேண்டியதுதான். ஊரிலே இவனுக்குத் தெரியாத சந்துபொந்து கடையாது. ஊருக்குள்ளயே எவனையும் கண்டுபிடிக்கமுடியாது. எவனுக்கும் பேரு ஊரு அட்ரஸு ஒரு எளவும் இல்ல-ஊரவிட்டுபோனான்னா அவ்ளோதான்-ஆனா திருட மாட்டானுக'

'ஏன்?'

'அவனுக திருடுறதில்ல-அவஞ்சாதி பொம்புளைக்குட்டிக காசுக்கும் போறதில்ல-குட்டிகள பாத்திருக்கிகளா? சுள்ளுண்ணு இருப்பாளுக. ஆனா பத்தினிகளாக்கும். எசகுபெசகா எதுனா பேசினா புருசங்காரன கூட்டியாந்திருவாளுக- '

'ஓ'

'இவனுக பொதுவா மனுசங்கள ஒண்ணும் செய்யமாட்டானுக-ஆனா அவங்க பொம்புளையாளுகள தொட்டா விடமாட்டானுக-நாலுவருசம் முன்ன ஒரு ரவுடிக்க சாவிக்கொத்த அப்டியே வெட்டி கொண்டுபோய்ட்டானுக-பாவம் காலம்பற வரை கெடந்து அலறியிருக்கான். யாரும் வாசல தெறக்கல. காலம்பற செத்து குளுந்து

*கெடக்கான்..ஆடறுத்தமாதிரி ரெத்தம்..என்ன ஏதுண்ணு விசாரிச்சா இப்டி’*

*‘பிறவு?’*

*‘என்ன பிறவு? நரிக்குறவனை என்னான்னு கோர்ட்டுக்கு கொண்டுபோறது? அவன் எங்க போனான்னு எங்க போயி தேட? புடிச்சாலும் சாச்சி வேணும்ல?’ குரலைத் தாழ்த்தி ‘தம்பிக்கு இங்க எவ்ளோ குடுக்கிறான்?’*

*‘ஏன்?’*

*‘இல்ல, பாத்தா படிச்சவரு மாதிரி இருக்கீங்க. நல்லா குடுத்தா எதுக்கு இப்டி தங்குறீங்க? நல்ல மேன்சன்ல இருக்கலாம்ல’*

*‘பரவால்ல..குடுக்கிறார்’*

*‘தம்பிக்கு இஷ்டமிருந்தா போலீஸுக்கு ஹெல்ப் பண்ணலாம்ல?’*

*எச்சரிக்கையுடன் ‘என்ன ஹெல்ப்?’ என்றேன்.*

*‘பெரிசா ஒண்ணும் இல்ல..இப்ப பல கேஸையும் ஒருமாதிரி அப்டி இப்டித்தான் போடுவோம்..அதாவது..ஒண்ணில்ல..இப்ப உங்க நகை காணாமப்போச்சுன்னு வைங்க..அதுக்குப்பின்னால தேடிப்போறதுக்கு நமக்கு ஃபோழ்ஸ் இல்லல்ல? அப்ப என்ன பண்ணுவோம்னா பழைய கேடி ஒருத்தன புடிச்சு எவிடென்ஸ் போட்டு உள்ள கோர்ட்டுக்கு கொண்டு போயிடறது..இந்தமாதிரி..’*

*‘எவிடென்ஸா?’’*

*‘அதெல்லாம் நம்மகிட்ட இருக்கும்..களவுகுடுத்தவுங்க இதான் எங்க நகைன்னு சொல்லிட்டாப்போச்சு..மித்தபடி சாச்சிதான் பிரச்சினை’ மெல்ல ‘சாச்சி சொன்னா அதுக்கு தனியா பணம் குடுத்திருவோம்’ என்றார்.*

*‘திருட்டுலயா?’*

*‘திருட்டுல பெரிசா ஒண்ணும் வராது. ஆனா கொலைன்னா நல்லாவே வரும்.. செத்தபார்ட்டியோட ஆளுங்ககிட்ட பேசிக்கூட நல்ல லம்பா வாங்கிக்கிடலாம். பலபேரு இப்ப நல்லாவே சம்பாரிக்கிறாங்க..சில கேசில பெரிய லம்பாக்கூட அடிச்சிடலாம்..’*

*‘பொய்சாட்சியா?’*

*‘சாட்சீன்னாலே அது பொய்யிதான். கொலபண்றவன் சாச்சி வச்சுட்டா பண்றான்? சாச்சீன்னு இருந்தாலும் அது அவனுக்கு தெரிஞ்சவனா சொந்தமாத்தானே இருக்கும்? அவன் வந்து சொல்லுவானா? சட்டத்தில கண்ணால பாத்த சாச்சி இல்லேன்னா தண்டனை கெடையாதுன்னு இருக்கு..நாங்க என்ன பண்றது..எதுக்குச் சொல்றேன்னா, இப்ப நீங்க இந்த ஊரு இல்ல. இங்க ஊருன்னா செலசமயம் பிரச்சினை வரும்..சாச்சியச்சொல்லிட்டு ஊராண்ட போய்ட்டா எவன் கண்டுபுடிக்கிறது?’*

*நான் எழுந்து அமர்ந்துவிட்டேன் ‘யாரு, நானா?’*

*‘இருங்கதம்பி, பதற்றப்படாதீங்க. சொல்றதக் கேளுங்க..சொல்லவேண்டியத நாங்க சரியா சொல்லிக்குடுப்பம். அத அப்டியே அச்சச்சா சொல்லிட்டாப்போச்சு..பெரிய விசயமே கெடையாது. சாச்சி சொல்றது ஒண்ணியும் கிரைம் இல்ல’*

*‘பொய்சாட்சி சொல்றதா?’*

*‘பொய்சாச்சீன்னு உண்டா என்ன? சாச்சி நம்புற மாதிரி இல்லேன்னு வேணுமானா முன்சீப்பய்யா சொல்லலாம்..அதனால என்ன?’’*

*‘அதெல்லாம் வேணாம், நீங்க போங்க’*

*‘தம்பி இப்ப என்ன? பளிபாவம் பாக்கிறீங்களா?’*

*‘ஆமா’*

*‘என்னத்த பாத்தீங்க போங்க..நீங்க ஒருநடை கோர்ட்டுல வந்து பாருங்க..ஒருநாளைக்கு ஆயிரம்பேரு சாச்சி சொல்றாங்க.. அவ்வளவும் பொய்சாச்சி. எனக்கும் இருபத்தாறு வருசம் சர்வீஸாச்சு.. தனக்கு ஒரு பிரச்சினைன்னா போலீசு சொல்லிக்குடுத்த எந்தப்பொய்யையும் சொல்லக்கூடியவங்கள மட்டும்தான் பாத்திருக்கேன். மகாலச்சுமி மாதிரி இருக்கற குடும்பப்பொம்புளைங்க கூண்டிலே ஏறி நின்னு சத்தியம்பண்ணி பொய்ய சொல்லுறாங்க. வாத்தியாரும் டாக்கிட்டரும் சொல்றான். ஏன், வெள்ளவெளேன்னு அய்யமாரு வந்து நின்னு பகவத்கீதை புக்குமேலே அடிச்சு பொய்சொல்லுறான்..இன்னைத்தேதிவரை நியாயம் பேசின ஒருத்தனக்கூட பாத்ததில்ல..’*

'அப்ப அவனுங்கள போய் கூப்பிடுங்க'

'ஏகப்பட்ட ஆளு இருக்கு தம்பி..எங்களுக்கு கேஸும் நெறைய இருக்கு..இப்ப தம்பி படிச்சிருக்கீங்க. கொளப்பமில்லாம தெளிவா பதிலச் சொல்லுவீங்க..அதான் பாத்தேன்..'

'நீங்க போங்க..எங்கிட்ட பேசவேண்டாம்'

'நல்லா யோசிச்சுப்பாருங்க..இங்க ஒருத்தனும் யோக்கியம் கெடையாது'

'அது உங்க நெனைப்பு..எவ்ளவோ பேரு கௌரவமாத்தான் வாழுறாங்க'

'என்ன கௌரவம்? எல்லாம் பயம்..அவ்ளவுதான். இப்ப அஞ்சுபவுனு நகை திருட்டுபோச்சுன்னு பொம்புள வாரா. இன்னொரு நகைய காட்டி இதான் உன் நகைன்னு சொல்லு, இந்தாள செயிலுக்கு அனுப்பு. உன் நகைக்கு பதிலா இந்த நகைய வாங்கிக்கோன்னு அய்யா சொல்றாரு. மாட்டேன், இது என் நகை இல்லேன்னு சொல்ற ஒரு பொம்புளையக்கூட எங்க டிபார்ட்மெண்டில இன்னைத்தேதிவரை நாங்க பாத்ததில்ல' அவர் குரல் ஓங்கியது 'எங்க கொலதெய்வம் மேலெ சத்தியமாச் சொல்றேன் தம்பி, நான் ஒருத்தனையும் பாத்ததில்ல..'

'நான் யோக்கியன்..போருமா?'

'என்னத்த யோக்கியன்? நீங்க மாட்டிக்கிட்டீங்கன்னு வைங்க. தப்பிக்கணுமானா பொய் சொல்லணும்னு சொன்னா சொல்லமாட்டீங்களா? உங்க சாமி மேலே சத்தியமா சொல்லுங்க'

என்னால் அதைச் சொல்லமுடியவில்லை.

'பாத்தீங்களா? சொல்லமுடியாது..பொய்சாச்சி சொல்லக்கூடாதுன்னு ஒருத்தரும் நினைக்கல்ல. ஆனா எதுக்கு வம்புன்னு நெனைச்சு வரமாட்டாங்க..நீங்க தைரியமா வாங்க தம்பி..ஒரு லம்பு வந்தா பிறவு எதுக்கு இந்த பொளைப்பு?'

நான் பெருமூச்சு விட்டேன் '..இல்லே இந்த நரிக்குறவனுங்கள கூப்பிட மாட்டீங்களா?'

'சேச்சே, அவனுக பொய்சாச்சி சொல்லமாட்டங்க தம்பி'

'ஏன்?'

'ஏன்னா அவனுக நரிக்கொறக்கூட்டம்ல? சாமி பொய்சாச்சி சாமீன்னு அதையே சொல்லிட்டிருப்பான். பத்தாயிரவாட்டி சொன்னாலும் ஏறாது. கூண்டிலே ஏறி அதையே சொல்லி களுத்தறுப்பான்..இவனுக மட்டும் சாச்சி சொன்னாங்கன்னா நாட்டிலே வேற சாச்சியே இருக்காதே..என்னா ஒரு வசதி..மத்தவன்னா நீ எதுக்குடா அப்ப அங்க போனேன்னு அக்கூஸ்டுவக்கீலு கேப்பாரு..இவன்கிட்ட கேக்கமுடியாதுல்ல?சாமி எலிபுடிக்கப்போனேன்னு சொன்னா தீந்துதே..நாறத்தாளிங்க , அடிச்சு கொன்னாலும் பொய்யச் சொல்லமாட்டானுக..ஓணான் திங்கிற கூட்டம்'

பெருமூச்சுடன் 'என்னால முடியாது சார்..'

'நல்லா யோசிச்சுச் சொல்லுங்க..வலியவாற மகாலச்சுமிய விடவேணாம்..என் அனுபவத்தில சொல்றேனே, எவன் லச்சுமிய ஒருக்கா வேண்டாம்னு சொன்னானோ பிறவு அவ ஏறெடுத்தும் பாக்கமாட்டா..வரட்டா தம்பி?'

---

## புறப்பாடு II – 14, ரணம்

சென்னையில் அச்சகம் என்பது பெரும்பாலும் பெண்களின் உலகம். அச்சுகோர்க்கும் ஆண்கள் அனேகமாக இல்லை என்றே சொல்லலாம். ஆண்கள் கம்பாசிட்டர் வேலைதான் செய்வார்கள். எடைகூடிய அச்சுப்பலகையை எந்திரத்தில் ஏற்றுவதும் இறக்குவதும், மின்சாரம் நின்றுவிட்டால் அவசரத்துக்கு டிரெடிலை இயக்குவதும் எல்லாம் அவர்கள்தான் செய்யவேண்டும். அது ஆண்மை மிக்கவேலை என்பதனாலேயே அச்சுகோர்ப்பது பெண்மைமிக்கவேலை என்றாகிவிட்டது. அச்சுகோர்க்கும் ஆண்களும் நான் பார்த்தவரை பெண்களின் பேச்சு மற்றும் அசைவுகளைக் கொண்டிருப்பார்கள். அவர்கள் அதிகமாக பெண்களிடம் பேசிக்கொண்டே இருப்பதனால் அப்படி வந்திருக்கலாமென நான் ஊகித்தேன்.

சென்னையில் தியோசஃபிகல் சொசைட்டிதான் பெண்களுக்கு சிறுதொழிலாக அச்சுக்கோப்பை கற்றுக்கொடுக்க ஆரம்பித்தது. பின்னர் அந்தப் பெண்களிடமிருந்து மற்றபெண்கள் கற்றுக்கொண்டு அந்த வம்சம் பெருகியது. அச்சுகோர்க்கும் ஒரு பெண் திடீரென்று இன்னொரு சிறுபெண்ணை கூட்டிவருவாள். அவள் ஆரம்பத்தில் திருதிருவென விழித்துக்கொண்டு பார்த்துக்கொண்டிருப்பாள். பின்பு தலைப்புகள் மட்டும் அச்சு அடுக்குவாள். அதை பெரியவள் சரிபார்த்து திருப்பி அடுக்குவாள். அனேகமாக ஒருமாதத்தில் இவளும் பேசிக்கொண்டே அச்சு அடுக்க ஆரம்பித்துவிடுவாள்.

அச்சுஎழுத்துருக்களில் எப்போதும் மை இருக்கும். கறுப்புவெள்ளைப் புகைப்படம் கழுவும் நீரின் ரசாயனவாடை கொண்ட மை. ஈய எழுத்துக்கள் அடிக்க அடிக்க தேய்ந்து அந்தமையுடன் ஈயமும் இருக்கும் என்றார்கள்.

அச்சுக்கோர்ப்புத்தொழிலின் முக்கியமான பிரச்சினை அந்த மை நக இடுக்குகளில் இருந்து போகாது என்பதுதான். காலப்போக்கில் கையைப்பார்த்தாலே தெரியும், நிரந்தரமாகவே மைக்கறை படிந்துவிட்டிருக்கும்.

ஆரம்பத்தில் எல்லாம் கைகளை உரசி உரசிக் கழுவுவார்கள். சோப்புபோட்டு தேய்ப்பார்கள். கொஞ்சம் கொஞ்சமாக அந்த அக்கறை அகலும். சரஸ்வதியக்கா ஒருமுறை வேகமாக கையை அரைடம்ளர் நீரில் நனைத்துவிட்டுச் சென்று அமர்ந்து தூக்குவாளியைத் திறந்ததைக் கண்டு 'என்னக்கா இது, கையெல்லாம் மை' என்றேன்.

'சர்த்தான் போடா..வயிறு முழுக்க இந்த மைதான் ..அப்றமென்ன' என்றாள்.

'அக்காவுக்கு கொழந்தைகூட மைக்கறையோடத்தான் பொறந்திருக்கு' என்றாள் மாரியம்மாள்.

பெண்கள் சிரித்தார்கள். சரஸ்வதியக்கா சிரிக்கமாட்டாள் என எனக்குத்தெரியும். அவள் நல்ல சிவப்பு நிறம். அவள் குழந்தை கரிநிறம்.

அவர்கள் மீண்டும் சினிமாபற்றிய பேச்சில் இறங்கிவிட்டார்கள். சினிமாபற்றித்தான் அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்று தெரியும். ஆனால் அவர்களுடன் சென்று நின்று அச்சுக்கோப்பு கற்க ஆரம்பித்தபோதுதான் அவர்கள் மிகமிகக் குறைவாகவே சினிமா பார்த்திருக்கிறார்கள் என்று தெரிந்தது. அவர்களுக்குத் தெரிந்ததெல்லாம் அச்சகம் வரும்போது பார்த்த சினிமாச் சுவரொட்டிகள் மட்டும்தான். அவற்றிலுள்ள சிறுநடிகர்களைக்கூட தெரிந்துவைத்திருந்தார்கள். எல்லா நடிகர்களின் அந்தரங்க வாழ்க்கையும் அவர்களுக்குத் தெரியும். பேச்சு முழுக்க அதைப்பற்றித்தான். பெரும்பாலான செய்திகளை மாரியம்மாள்தான் கொண்டுவந்து விவரிப்பாள்.

மாரியம்மாள் மொத்தமே பத்துபடம்கூட பார்த்ததில்லை. அவள் அப்பா சைக்கிள் ரிக்‌ஷா ஓட்டுகிறவர். சின்னப்பெண்ணாக இருந்தபோதே அவள் வேலைக்குப்போக ஆரம்பித்துவிட்டாள். வீட்டுவேலை. அதன்பின் ஒரு அக்கா வழியாக அச்சுவேலை. ஒடுங்கிய கன்னமும் ஆழமான கழுத்துப்பள்ளமும் மூக்கின்மேல் ஒரு மச்சமும் சிறிய கூந்தலுமாக அவள் எல்லா வீட்டுவேலைக்காரப் பெண்களையும் போலத்தான் இருப்பாள். கண்களுக்கு மைதீட்டி அச்சுகோர்க்க வருபவர்கள் அவளும் சரஸ்வதியக்காவும் மட்டும்தான். மாரியம்மாளின் குரல் வெளியே கேட்காது. மெல்லிய குரலில் அடித்தொண்டையில் பேசிக்கொண்டே இருப்பாள். அவள்பேச்சை கேட்டு சிரிப்பதோ பதில்சொல்வதோதான் மேலே எழுந்து கேட்கும். பசவராஜு சத்தம்போடும்போது முகபாவனை மாறாமலேயே மாரியம்மாள் அமைதியாகிவிடுவாள்.

அச்சகங்களுக்கு பொதுவாக விடுமுறை விடுவதில்லை. வேண்டுமென்றால் விடுமுறை எடுக்கலாம், ஆனால் காசு போகும். பெரும்பாலானவர்கள் வருடக்கணக்காக ஒருநாள்கூட விடுமுறை எடுக்காதவர்கள். ஆகவே சினிமா பார்க்க நினைத்தாலும் முடியாது. இரவில் ஒலிச்சித்திரம் கேட்கலாம். ஆனால் அதுகூட அனேகமாக சாத்தியமில்லை. வீடுதிரும்பியதும் தண்ணீர் பிடிப்பது சமைப்பது துவைப்பது என ஏராளமான வேலைகள் இருக்கும். அவ்வப்போது கொஞ்சம் பாட்டுகேட்பதோடு சரி.

அக்காலத்தில் தொலைக்காட்சி கிடையாது. பணக்காரவீடுகளில் கறுப்புவெள்ளை தொலைக்காட்சி உண்டு. அதில் அலையலையாக படம் தெரியும். அந்த தொலைக்காட்சிநிலையம் கடலருகே இருப்பதனால்தான் அப்படி என்ற நகைச்சுவைத்துணுக்கை நான் பலமுறை வார இதழ்களில் பார்த்திருக்கிறேன். நான் சென்னை வந்தபின்னர் ஒரே ஒருமுறை ஒரு ஓட்டலில் கறுப்புவெள்ளை தொலைக்காட்சி ஓடிக்கொண்டிருப்பதைப் பார்த்தேன். மின்சார அழுத்தக்குறைவால் படம் நீர்ப்பிம்பம் போல நெளிந்துகொண்டிருந்தது. செய்தி சொல்லிக்கொண்டிருந்த பெண் வேடிக்கையாக உருமாறிக்கொண்டே இருந்தாள்.

அதை அச்சகத்திற்கு வந்து சொன்னபோது நானே அதை நடித்தும் காட்டினேன். பெண்களெல்லாம் அச்சுகோப்பை நிறுத்திவிட்டு பீரிட்டுச்சிரித்தனர். 'அங்க என்ன சிரிப்பு? ஏண்டி சரசு?'என்று பசவராஜு அதட்டினார். அனைவரும் விதவிதமாக முகபாவனை வழியாக அவரை பழிப்புக் காட்டிவிட்டு வேலையைத் தொடர்ந்தனர். மாரியம்மாள் வாயை ஒருவிதமாக அசைத்தாள். பசவராஜுவுக்கு பெண்களின் உலகில் பழம் என்று பெயர். அவர் வாயை நீட்டி நீட்டி பேசுவதனால். பெண்கள் சிரிப்பை அடக்கிக்கொண்டார்கள்.

ஏன் அவர்கள் அவ்வளவு பேசிக்கொள்கிறார்கள் என்று எனக்கு ஆச்சரியமாகவே இருக்கும். பேச்சு எப்போதும் அதுவரை பேசியதன் தொடர்ச்சியாகத்தான் இருக்கும். ஆகவே எனக்கு என்ன ஏது என்று புரிவதில்லை. மாரியம்மாள் வளவளவென்று பேசக்கூடியவளும் அல்ல. சுருக்கமாகவும் நுணுக்கமாகவும்தான் பேசுவாள். தொடர்ந்து கவனித்தால்தான் எல்லா அர்த்தங்களும் புரியும். ஆனாலும் பகலெல்லாம் பேசுவதற்கு அவளுக்கு விஷயமிருந்தது.

'தாம்பூலத்து சுண்ணாம்பு போட நேரமாச்சு போல..' என்று மோவாயால் சரஸ்வதியைக்காட்டி மாரியம்மாள் சொன்னாள். தாம்பூலம் என்பது சரஸ்வதியின் குழந்தை. ஒரு கிராமத்துக்கதையில் கறுப்புத் தம்பதிக்கு வெள்ளைவெளேரென்ற குழந்தை பிறக்கிறது. கணவன் பஞ்சாயத்துக்குச் செல்கிறான். பஞ்சாயத்துக்காரர் அவனிடம் வெற்றிலை போட்டு துப்பச் சொல்கிறார். பச்சை வெற்றிலையும் வெள்ளைச்சுண்ணாம்பும் மஞ்சள்நிறப்பாக்கும் சேர்ந்து எப்படி சிவப்புநிறமான தாம்பூலம் வந்தது என்று கேட்கிறார். அதேபோலத்தான் குழந்தை என விளக்குகிறார். சரஸ்வதியின் கணவன் மாநிறம். ஆனால் குழந்தை கரிநிறம் என்பது மாரியம்மாள் உத்தேசிக்கும் அர்த்தம்.

சரஸ்வதி பின்பக்கம் சென்றாள். 'டேய் உங்கூர்ல பசு வளக்கிறீங்களா?'

'ஆமா'

'யாரு கறப்பாங்க?'

'நானும் கறப்பேன்..'

'ஆகா..ஆளிருக்கே' எல்லா பெண்களும் சிரித்தனர். நான் புரியாமல் பார்த்துக்கொண்டிருந்தேன். அதன்பின் அவர்கள் பேசிய எதுவுமே எனக்குப்புரியவில்லை.

'என்னது?' என்றேன்.

'இவன் ஒருத்தன் என்னது என்னதுன்னு..டேய் ஒளுங்கா அச்சுபோடுறியா இல்ல கூப்ட்டுச்சொல்லவா?'

அச்சுகோர்த்தல் எனக்குச் சரிவராது என்று அதற்குள் புரிந்துகொண்டுவிட்டேன். எவ்வளவு முயற்சிசெய்தாலும் என்னால் இடவல எழுத்துக்களை திருப்பி கற்பனையில் வாசிக்காமலிருக்கமுடியவில்லை. மொழியை வெறும் அடையாளங்களின் குவியல்களாக ஆக்க முடியவில்லை.

சரஸ்வதியக்கா திரும்பிவந்தாள். மாரியம்மாள் 'யக்கா, கட்டுங்க..' என்றாள்.

'என்னது?'என்றேன்

'ஆவின்' என்றாள் மாரியம்மாள். நான் வாய் திறந்து மாறிமாறிப்பார்த்தேன். சிரிப்புடன் பெண்கள் குலுங்கினார்கள்.

மாரியம்மாள் ஆரம்பித்தாள் 'இவளுக்கு என்னகேடு? இவ மூஞ்சியபாத்தா எனக்கே பேதி புடுங்கினுபோற மாதிரி இருக்கு..கமல் எப்டி சகிச்சுக்குவாரு? கண்ணாடியில பாக்கமாட்டாளா? சொம்மா மேக்கப்பு பவுடருண்ணு அள்ளிபோட்டுனு.. சிமிண்டு. அவளபாத்தா சிமிண்டுல வேலபாக்கிற சித்தா கணக்கால்ல இருக்கா..ஏண்டி அவள சிமிண்டுனு சொன்னா என்னடீ..சிமிண்டுக்கு வந்த வாழ்வ பாத்தியா? ஸ்ரீதேவின்னா அவளுக்கு ஒரு இது இருக்குல்ல? என்னா மாதிரி இருக்கா'

'அவ மூக்கு கூட ஒருமாதிரி பெருசாத்தானே இருக்கு?' என்றாள் அனுராதா.

'மூக்கு பெருசா இருந்தாத்தாண்டி எல்லாமே பெருசா இருக்கும்.. சும்மாவா கமல் அவள ஈரோயினா போட்டு சினிமா எடுக்கறாரு?'

'இளமை ஊஞ்சலாடுகிறதுலே இவதானே?'

'சிமெண்டைப்பத்தி பேசினே உன்னுதுல சிமிண்ட ஊத்தி மூடிருவேன்..ஏண்டி, வாழ்வேமாயத்திலே அவள தேவ்டியான்னுதானே காட்டியிருந்தாரு கமலு? அவமூஞ்சியும் அவளும்..'

அப்படியே மதியம் தாண்டி மாலை ஆகிவிடும். 'நாளைக்கு வந்து வச்சுக்கறேன் இவளே..நீ என்னடி சிமிண்டுக்கு தோஸ்தா? உம்மூஞ்சிகூடத்தான் மாவுல குதிச்ச எலிமாதிரி இருக்கு..'

'போடி'

'நீ போடி..மல்லியப்பூ சிங்காரி..ரோட்ல நிக்காத..அஞ்சுரூவா வச்சுனு ரிக்சாக்கார கபோதி கூப்டிரப்போறான்'

அந்த சினிமா விவாதத்தில் சரஸ்வதியக்கா அதிகம் கலந்துகொள்வதில்லை. அவளுக்கு அதெல்லாம் என்ன ஏது என்று பெரிதாகப்புரியவில்லை என்று தோன்றும். அந்த ஐந்துபேருக்குள் நடந்துகொண்டிருக்கும் விவாதத்தில் தொடர்ச்சியாக உள்ளே இருந்தால்மட்டும்தான் அதை புரிந்துகொள்ளமுடியும். எனக்கே ஓரங்கள்தான் பிடிகிடைக்கும்.

'அவமூஞ்சியும் அவளும்..மூணாம்பிறையாமே..அசிங்கமா பேரு வச்சிருக்கானுக சினிமாவுக்கு..ஏண்டி அவல்லாம் முளுப்பிறைதானே?'புதிய போஸ்டர்களைக் கண்டதும் மாரியம்மாள் மாறிவிட்டாள். 'எலி கத்துறமாதிரி கத்துறா..கீச்சுகீச்சுன்னு. முஞ்சூறு..மூஞ்சியும் அவளும். இந்தக் கமலுக்கு என்ன கேடு? நாட்டிலே பாக்கச்சகிக்கிறமாதிரி மூஞ்சியா இல்ல? பத்துரூவாத்தேவ்டியா மாதிரி இருக்கா..தூத்தெறி'

சரஸ்வதியக்கா எப்போதுமே தாமதமாகத்தான் வருவாள். 'இங்க என்ன தேரோட்டமா நடக்குது ஆடியசைஞ்சு வாரதுக்கு? யம்மா தாயே இது ஆப்பீஸு. தொளிலு நடக்கிற எடம்' என்று பசவராஜு ஆரம்பிப்பார்.

'அண்ணே, கொழந்தை அழுதுச்சுண்ணே'

'அது வாயில ஒரு பப்புருமுண்ட வச்சுப்போட்டு வா..அதெல்லாம் சொன்னா தொளிலுக்காவுமா?'

ஆனாலும் தாமதமாகத்தான் வருவாள். ஒருநாள் அவள் கணவன் வந்துவிட்டான். மாரியம்மாள் சொன்னது போலில்லாமல் அவன் கருப்பாகத்தான் இருந்தான். காக்கி உடைபோட்டிருந்தான். நகரப்பேருந்தில் நடத்துனர்.

'சரசு வரிலேயே நாகப்பா..' என்றார் பசவராஜு.

‘ஊட்லேருந்து அப்பவே கெளம்பிட்டாளே..இன்னாசார் நான் சொல்றது..புள்ளைக்கு ஒடம்புசரியில்ல..அம்மாவுக்கும் காச்சலு. இவதான் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோவணும்.. சொல்லினு போலாம்னு வந்தேன்..அம்மாவுக்கு காச்சலானா நடக்கமுடியறதில்ல..இன்னா சார் நான் சொல்றது . நடக்கமுடியாததனால இந்தமாதிரி என்னையக் கூப்டு இந்தா நாகப்பா உன் பெஞ்சாதி மேனாமினுக்கிக்கிட்ட சொல்லு. அவ கூட்டினு போவட்டும். என்னால முடியாதுன்னு சொன்னா. நான் இவளப்பாத்தா காணும்..இன்னா சார் நான் சொல்றது?. கேட்டா அச்சாபீஸு கெளம்பிட்டான்னு அம்மா சொன்னா. அம்மாக்கு காச்சலு வேற. நடக்கமுடியாது. இன்னாசார்? அப்டியே சைக்கிளை எடுத்தினு இங்கவந்தேன்..அப்பதான் நீ சொல்றே அவ இங்கியும் வர்லேன்னு. இன்னா சார் நான் சொல்றது? அவள பாத்துனுதான் நான் ஆபிஸாண்ட போனும்..எனுக்கு பத்துமணி டூட்டி. எங்க ஆபீசரு ஒருத்தன் இருக்கான் தேவசகாயம்னு பேரு..தெக்குத்தி ஆளு. குண்டா லம்பா இருப்பான்.. இன்னா சார் நான் சொல்றது?’

மேலும் முக்கால்மணிநேரம் கழித்து வியர்த்துவழிந்தபடி சரஸ்வதியக்கா வந்தாள். வரும்போதே கணவனைத் திட்டிக்கொண்டிருதாள் ‘என்னய்யா உனக்கு? நாந்தான் சொன்னேனே. சீட்டுக்காச எடுக்கணும். முருகையனப் பாத்துட்டுதான் வருவேன்னு? அதுக்குள்ள என்ன அத்து விளுதுன்னு கெளம்பி வந்து நின்னிட்டுருக்கே?’

‘முருகையன் சொல்லலியே’

‘ஆமா உங்கிட்ட சொல்றான்..இப்ப என்ன?’

‘புள்ளைக்கு உடம்புசரியில்ல..பாலுகுடிச்சாப்ல அப்டியே வாந்தி..அம்மா சொல்றா அவளுக்கு காச்சலு..அந்த மேனாமினுக்கிகிட்ட சொல்லுன்னு சொல்றா. நான் என்ன சொல்றேன்னா’

‘சரி சரி நீ கெளம்பு..நான் அண்ணன்கிட்ட பர்மிசன் கேட்டுட்டு வந்து ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோறேன்’

‘நீ வேணா அப்றமா..’

யோவ் கெளம்புய்யா’

‘சரி நான் வாறேன் எனக்கு இப்ப பத்துமணிக்கு டூட்டி’

‘யோவ் பொறையிலே செவப்பா ஒரு மாத்திர இருக்கு..அதில பாதிய புட்டு பொடிச்சு பாலோட புள்ளைக்கு குடுத்திட்டு போ..நான் வந்திடறேன்’

‘செவப்பு மாத்திரையா? சின்னதா இருக்குமே’

‘அய்யோ அது கெளவியோட மாத்திர..நீ ஒண்ணியும் செய்யவேண்டாம்..நான் பாத்துக்கறேன்’

‘நான் வேணுமானா..’

‘நீ மொதல்ல போய்யா..’ என்று உள்ளே வந்துவிட்டாள்.

அன்று அவள் கொல்லைப்பக்கம் போனதும் மாரியம்மாள் ‘எங்கியோ எலிசெத்திருக்கே’ என்றாள்.

நான் ‘எங்க? எனக்கு நாறலல?’ என்றேன்.

‘எனக்கு நாறுது..’

அதன்பின் எலி என்ற சொல் அடிக்கடி அடிபட்டது. எலிமூஞ்சி என்றால் அது நடிகையைக் குறிக்கும். எலி என்றால் அது சரஸ்வதியக்காவின் விவகாரம். ஆனால் அது என்ன என்று எனக்குப்புரியவில்லை.

‘எலிசெத்தா அதுவே சொல்லும்..இங்கேருக்கேன் இங்கேருக்கேன்னு..எறும்பு தேடிப்போவும்..வரட்டும்’

எப்டிடீ கண்டுபுடிக்கிறது?’

‘புடிப்போம்..புடிப்போம்..புடிக்காம எங்கபோறம்? வாங்கக்கா..அண்ணன் உங்கள இப்பம்தான் கேட்டாரு’

என்னுடைய கதை ஒன்று விகடனில் வந்தது. நான் அதை அச்சகத்தின் மேஜையில் போட்டிருந்தேன். பசவராஜு ‘என்ன குடுக்கான் கதைக்கு? இங்க இந்தமாதிரி ஒண்ண எளுதி நாவலுன்னு குடுத்து காசு வாங்குறே’ என்றார்.

‘அதுக்காக நீங்களும் விகடனும் ஒண்ணா? சும்மா பெனாத்தப்பிடாது’

அது ஒரு கள்ளஉறவின் கதை. கணவனுடன் இருபதுவருடம் ஒழுக்கமாக வாழ்ந்தபெண் அவன் இறந்துபோனபின்னர் ஒருமாதம் கழித்து தன் பிறந்த வீட்டுக்குப்போய் தன் காதலனின் பழைய படம் ஒன்றை எடுத்துப்பார்க்கிறாள். அதை மார்போடு அணைத்து அழுகிறாள். ‘இவ என்னத்துக்கு அழுறா?’ என்றாள் செல்வி.

‘கொழுப்பு-’ என்றாள் மாரியம்மாள் ‘வேணுமானா அந்தாளை தேடிப்போயி படுத்துக்கிட வேண்டியதுதானே?’

மதியம் சாப்பிடும்போதுதான் சரஸ்வதியக்கா அதை வாசித்தாள். மற்றவர்கள் சாப்பிடும்போது என்னிடம் வந்து ‘என்ன இது , இப்டி எளுதிருக்கே?’ என்றாள்.

‘ஏன்?’

‘அவ என்ன பொம்புளையா இல்ல வேசியா?’

‘என்னக்கா இப்டிச் சொல்றீங்க?’

‘மானமுள்ள பொம்புள ஒருநாளைக்கும் இப்டிச்செய்யமாட்டா- அப்டீன்னா அவ அந்தாளை நெனைச்சுட்டுல்ல இவன்கூட இருந்திருக்கா-தேவ்டியா’

‘அதில்ல-’

‘நீ ஒண்ணும் சொல்லவேணாம்-நல்ல பொம்புள அப்டி ஒருநாளைக்கும் செய்யமாட்டா’ அதற்குள் அவள் கண்கள் கலங்கிவிட்டன. ‘ஒரு தேவ்டியாள வச்சு நீ எல்லா பொம்புளைங்களையும் பாக்கப்பிடாது’

‘அதில்லக்கா’

‘நீ என்ன சொன்னாலும் சரி, இந்தமாதிரி எழுதுறதெல்லாம் தப்பு’ என்று திரும்பிசென்றுவிட்டாள்.

நான் பின்னர் அவள் கண்களைப் பார்ப்பதையே தவிர்த்தேன். அவளும் என்னிடம் பேசாமலானாள். கட்டை வைக்க தேடியபோது என்னருகே நின்றிருந்தவள் கட்டையை என்னை நோக்கி நீக்கிவைத்தாள், என்னைப்பார்க்காமல்.

அதை மாரியம்மாள் கவனித்திருப்பாள். கொஞ்சநேரம் கழித்து தாள் எடுக்க நான் அறைக்குச் சென்றபோது பின்னால் வந்து ‘என்ன போண்டா கூட சண்டையா?’ என்றாள்.

‘இல்லையே’

‘டேய் -நான் எல்லாத்தையும் பாத்தேன்-நீ அவள என்ன சொன்னே?’

‘அய்யோ-நானா?’

‘இல்லேன்னா என்ன சண்ட?’

‘இல்லக்கா-அவங்கதான் என் கதைய தப்புண்ணு சொல்லி பேசாம இருக்கிறாங்க’

என் வாயிலிருந்து திறமையாக விஷயத்தை எடுத்துவிட்டாள் மாரியம்மாள் என சொன்னபின் உணர்ந்தேன். மாரியம்மாள் ‘ஆமா இவ பெரிய பத்தினி-ரயில்வேஸ்டேஷனே நாறுது’ என்றாள்.

‘என்னது?’

‘கேன்டீன் வச்சிருக்கிற ராவு தெனம் போண்டா சாப்புடறாராமே’

நான் அதிர்ந்துபோனேன்.மாரியம்மாள் பேச்சின் ரீதிப்படி அவள் என்ன சொல்கிறாள் என்பது எனக்குப்புரிந்தது. சட்டென்று கடுமையான கோபம் என் தலைக்கு ஏறியது. அப்படியே சென்று கட்டையைத்தூக்கி அவள் தலையில் அறைந்துவிடவேண்டும் போலிருந்தது.

ஆனால் நான் கொந்தளிப்புடன் அச்சுகோர்க்கமட்டுமே செய்தேன். என் கையிலிருந்து பலகை நழுவி அச்சுகோத்தது முழுக்கச் சிதறியது. எல்லாரும் திகைத்து என்னைப்பார்த்தார்கள்.

‘அங்க என்ன? யாரு கீழபோட்டது?’

‘நான்தான்’ என்றேன்.

‘எழுத்து காணாமப்போனா யாரு வாங்குறது? இதெல்லாம்–’

‘யோவ், நான் எழுதறத வச்சு சம்பாரிக்கிறேல்ல, அதில வாங்குய்யா’ என்றேன்.

பசவராஜு திகைத்துப்போனார் ‘இல்ல நான் சொல்லவாறது’

'நீ ஒண்ணும் சொல்லவேண்டாம்.'

பசவராஜு தலைகுனிந்து மெய்ப்பு பார்க்க ஆரம்பித்தார்.

சாயங்காலம் கிளம்பும்போது மாரியம்மாள் என்னிடம் ரகசியமாக 'அப்ப உள்ளுக்குள்ள அதான் நினைப்பு, என்ன?' என்றாள்.

'என்ன நினைப்பு?'

'இல்லேன்னா எதுக்கு கோவம்?'

'என்னடீ?'

'போண்டாக்கு உனுக்கு வயசாகலியே தம்பி'

நான் அவளைத் துரத்திச்சென்று வெட்டிப்போட ஆசைப்பட்டேன். என்ன ஒரு விஷக்கிருமி என்று நினைக்கநினைக்க ஆறவில்லை. இவள் வாழ்க்கையில் வேறு எதைப்பற்றியாவது நினைப்பாளா? யாரைப்பற்றி வேண்டுமானாலும் பழிசொல்வாள். எந்த வாழ்க்கை அழிந்தாலும் கவலையில்லை. நான் கதைகளில்தான் அவளைப்போன்ற பெண்களை கண்டிருக்கிறேன்.

இரவு திண்ணையில் படுத்திருக்கையில் கொதித்துக்கொண்டே இருந்தேன். தூக்கமே வரவில்லை. இரவு வெகுநேரம் கழித்து மிக அந்தரங்கமாக ஒன்றை உணர்ந்தேன். நான் அச்சகத்தில் சரஸ்வதியக்காவை மட்டும்தான் பார்ப்பேன். அதை மாரியம்மாள் கவனிக்காமலிருந்திருந்தால்தான் ஆச்சரியம். அதை நினைத்தபோது மாரியம்மாள் மீது இன்னும் வெறி எழுந்தது.

மறுநாள் மாரியம்மாளை ஏதாவது செய்யவேண்டும் என்று நினைத்துக்கொண்டே இருந்தேன். எதிலாவது மாட்டிவிடவேண்டும். அவமானப்பட்டு அவள் அழவேண்டும். என்ன செய்வது? விதவிதமாக கற்பனைசெய்தேன். ஒவ்வொரு கற்பனையும் என்னை வன்மம் மிக்க களிப்புக்கு ஆளாக்கின.

மாரியம்மாள் வெளியே செல்லும்போது நான் பின்னால் சென்றேன். கையில் ஒரு பிடி எழுத்துருக்கள் இருந்தன. அவற்றை அவளுடைய பையில் அவள் அறியாமல் போட்டுவிட்டு அவற்றை அவள் திருடிக்கொண்டு போய் பையில் போடுவதைப்பார்த்தேன் என்று சொல்லவேண்டும் என்று திட்டமிட்டிருந்தேன். ஆனால் அவள் கொல்லைப்பக்கம் திண்ணையில் காலெடுத்துவைத்து எதையோ செய்வதைக் கண்டு ஓரமாக நின்று பார்த்தேன்.

அவள் முழங்காலில் ஒரு பெரிய ரணம் இருந்தது. வட்ட வடிவமாக குழிந்து விளிம்புகட்டிய ரணம். அதனுள் சதை வெண்மையாக இருந்தது. அதில் அவள் ஏதோ களிம்பை பூசிக்கொண்டிருந்தாள்.

அதைப்பற்றி முன்னரே பலமுறை அவர்கள் பேசிக்கேட்டிருந்தேன். மூன்றுவருடங்களுக்கும் மேலாகவே அந்த ரணம் இருக்கிறது. பலமுறை டாக்டரிடம் காட்டிவிட்டார்கள். ஊசிபோட்டால் கொஞ்சம் குணமாகும். மீண்டும் ஆரம்பிக்கும். ஹோமியோ டாக்டர் சந்தனக்குமார் அது அச்சாபீஸ் ஈயம் அவள் உடலில் ஊடுருவியிருப்பதனால்தான் என்று சொன்னாராம்.

அது உண்மைதான் என்று கம்பாசிட்டர் அருமைராஜ் சொன்னார். அவருக்கும் பல வருடங்களாக இரண்டு ரணங்கள் இருந்தன. 'இந்த தொளிலுக்குண்டான கூலி அது.ஒண்ணும் செய்யமுடியாது' . மாரியம்மாள் வேலைக்குவந்து இருபத்திரண்டு வருடங்களாகின்றன. அச்சாபீஸ் பெண்களில் அவளுக்குத்தான் அதிக அச்சக அனுபவம்.

நான் மெல்ல வெளியே சென்றேன். என்னைக்கண்டதும் அவள் பாவாடையை தாழ்த்தினாள். 'புண்ணா?' என்றேன்.

அவள் முகம் மிகவும் தீ பட்டதுபோலச் சுருங்கியது. கண்களில் ஒரு விநோதமான இடுக்கம். அதைக்கண்டதும் எனக்குள் குரூரமான ஓர் எழுச்சி உருவானது. 'அப்ப இந்த புண்ணு ஆறின பிறகுதான் உனக்கு ஒரு கலியாணம் நடக்கணும் இல்ல?' என்றேன்.

அவள் நடுக்கத்துடன் ஏதோ சொல்ல வருபவள்போல வாய் திறந்தாள். நான் சட்டென்று உள்ளே வந்துவிட்டேன்.

படபடப்பாக இருந்தது. ஒருவரை கொலைசெய்துவிட்டு வந்ததுபோல உணர்ந்தேன். கிளர்ச்சியும் சுயவெறுப்பும் சரிசமமாகக் கலந்த நிலை. சில நிமிடங்களுக்குப்பின் கசப்பு நிறைந்தது. கணம் கணமாக கசப்பு வளர்ந்து சென்றது. அவள் வருவதை எதிர்பார்த்து நின்றேன்.

அவள் நெடுநேரம் வரவில்லை. நேரம் செல்லச்செல்ல என் பதற்றம் ஏறி வந்தது. 'எங்கடிபோனா இவ?' என்றாள் மீனாட்சி.

சரஸ்வதியக்கா திரும்பாமல் 'தூரமோ என்னமோ' என்றாள்:

மீனாட்சி 'இல்லியே' என்றாள்.

‘ஆமா இவ கண்டா’

மேலும் நேரம் சென்றது. நான் பதற ஆரம்பித்தேன். மாரியம்மாள் வந்ததும் அவளிடம் மன்னிப்பு கேட்கவேண்டும் என்று நினைத்துக்கொண்டேன். என்ன பேசுவது? நான் எதையும் உத்தேசிக்கவில்லை என்றா? அது இன்னமும் மோசமாகிவிடும். பகிரங்கமாக கேட்கக்கூடாது. தனிமையில் கேட்கவேண்டும். ஆனால் அவள் அதை நாடகமாக்கிவிட்டால்? என்னை அவமதித்துவிட்டால்?

ஆனால் அதை அவள் இப்போதுகூடச் செய்யமுடியும். வெளியே வந்ததும் என்னை அவமதிக்கமுடியும். ஆனால் அவள் அதை அப்படிச்செய்யமாட்டாள். ஞாபகத்தில் வைத்திருப்பாள். என்னை கவனித்துக்கொண்டே இருப்பாள். சரியான இடம் அமைந்ததும் நஞ்சைக் கக்குவாள். என் மிஞ்சிய வாழ்நாள் முழுக்க நான் அதை நினைத்து எரிந்துகொண்டிருக்கும்படி எதையாவது செய்வாள்.

மாரியம்மாள் உள்ளே வந்தபோது சாதாரணமாக இருந்தாள். ‘என்னடி லேட்டு?’ என்றாள் மீனாட்சி.

‘ம்ம்? தும்மலு..சூப்பரா ஒரு தும்மலு எடுத்துட்டு வந்தேன்’

‘என்ன தும்மலு?’என்றாள் சரஸ்வதியக்கா.

‘பொடியில்ல..மூக்குப்பொடி..அதவச்சா வருமே அது’

பெண்கள் சிரிக்க ஆரம்பித்தார்கள். சிரிப்பு நின்று மீண்டும் ஆரம்பித்தது. பின்பு மீண்டும். நினைத்து நினைத்துச் சிரிக்க அதிலென்ன இருக்கிறதென்று புரியவில்லை. அவள் கண்களைச் சந்திப்பதை தவிர்த்தேன். மதியம் தற்செயலாகச் சந்தித்தபோது கண்கள் நட்புடன்தான் இருந்தன. ‘என்னவே, நல்லா இருக்கீராவே?’ என்றாள்.

ஒருவாரம் வரை எனக்கு ஒரு தவிப்பு இருந்துகொண்டுதான் இருந்தது. பின்பு மறந்துவிட்டேன். ஒருநாள் காலையில் கம்பாசிட்டர் அருமைராஜ் பாய்ந்தோடி வந்தார்.‘மொதலாளி..டேசன்ல அடி..ஓடிப்போங்க..கொலை நடந்திரும்னு தோணுது’

‘என்னடா? என்னடா?’ என்றார் பசவராஜ்.

காண்டீன் நடத்தும் ராவை சரஸ்வதியக்காவின் கணவன் அடிக்கப்போயிருக்கிறான். கம்பியால் தலையில் தாக்க காண்டீன் ஆட்கள் அவனைப்பிடித்து அடித்திருக்கிறார்கள். கையில் கம்பியுடன் கொலைசெய்துவிட்டுத்தான் போவேன் என்று நின்றிருக்கிறான்.

‘ஏண்டா?’

‘இவ, இந்த மிண்ட உள்ள இருந்திருக்கா..ராவ்கூட’

‘ராவுகூடவா..இவளா?’

‘அது ஓடீட்டிருக்கே மொதலாளி நாலுமாசமா’ அருமைராஜ் சொன்னார் ‘நீங்க இப்ப போனீங்கன்னா கொலை நடக்காம பாக்கலாம்..இல்ல கவிச்சிதான்’

பசவராஜ் பயந்து ‘நான் என்னத்தக் கண்டேன்..எனக்கு எதுக்குடா அதெல்லாம்..’ என்று பதுங்கினார்.

‘நான் போயி பாத்துட்டு வாரேன்’ என அருமைராஜ் மீண்டும் கிளம்பினார்.

‘டேய் உள்ள போய்டாதே.. உன்னைபாத்துட்டு இங்க வந்திரப்போறான்’

ஆனால் அருமைராஜ் போகும்போது எல்லாம் முடிந்துவிட்டிருந்தது. கணவன் சரஸ்வதியக்காவை கூட்டிக்கொண்டு சென்றுவிட்டானாம்.

‘அவள அந்தாள் வெட்டிருவான்..இன்னிக்கே பொலி போட்டிருவான்’

‘போலீஸ்ல சொல்லவேண்டாமா?’ என்றேன்.

‘சாவட்டும் சவத்து மிண்ட’ என்றார் பசவராஜ்.

எனக்கு பீதியாக இருந்தது. கொலை நடந்துவிடுமா? கைகள் அச்சில் நகரவில்லை. மாரியம்மாள் என்னிடம் மெல்ல ‘கொன்னிருவான்னு நெனைக்கறியா?’

‘கொல்லமாட்டானா?’

'போண்டாவ எவனாவது தூரப்போடுவானா? அந்தாளுக்கு காஞ்ச வத்தலே அதிகம்..'

நான் அவள் கண்களைப்பார்க்கவில்லை.

'எனக்கு என்னான்னு நெனைக்கிறே..ஆமா , எனக்கு எரியுதுதான். சனியனுக்கு ஒண்ணுக்கு ரெண்டால்ல அமையுது..' அவள் சட்டென்று எல்லா அச்சுக்களையும் தரையில் வீசினாள். முகம் சிவந்து போயிருந்தது. நான் அன்று கண்ட அதே முகச்சுளிப்பு.

அவள் சொன்னது சரிதான். சரஸ்வதியக்கா மீண்டும் வேலைக்கு வரவில்லை, பசவராஜ் காசைக்கொடுத்தனுப்பி வரவேண்டாம் என்று சொல்லிவிட்டார். ஆனால் ஒருவாரம் கழித்து சாலையில் அவளும் கணவனும் குழந்தையுடன் சிரித்துப்பேசிக்கொண்டே செல்வதைக் கண்டேன்.

---

## புறப்பாடு II – 15, நுதல்விழி

சித்ரா அச்சக விலாசத்துக்குச் சென்று என்னைப்பற்றி விசாரித்து கடைசியாக என்னைத்தேடி வந்து பசவராஜுவிடம் பேசிக்கொண்டிருந்தார் அருளப்பசாமி. அப்போது நான் கொல்லைப்பக்கமிருந்த பெஞ்சில் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தேன். 'இதோ வந்திடறேன்' என்று சொல்லிவிட்டு முன்வாசல்வழியாக வெளியே சென்று சந்துவழியாக பின்பக்கம் வந்து அங்கே படுத்துத் தூங்குவது என் வழக்கம். பசவராஜு நான் எங்கோ வேலையாகச் சென்றிருப்பதாகத்தான் நினைப்பார். அதற்குமேல் யோசிக்கும் திறன் அவருக்கு இல்லை. நான் கனத்த தூக்கமுகத்துடன் திரும்பிவருவதைக் கண்டாலும் அவரது மூளையில் கிளிக் ஒலிக்காது.

அருளப்பசாமி பொறுமையாக இரண்டுமணிநேரம் காத்திருந்தார். நான் உள்ளே நுழைந்ததும் பசவராஜு 'இவுருதான்..' என்றார்

'இவரா?' என்றார் அருளப்பசாமி'' சின்னப்பையனா இருக்காரு?'

'நல்லா படிச்சு எளுதுவாரு..' என்றபின் பசவராஜு என்னிடம் 'இவுரு உன்னைய தேடிட்டு வந்திருக்காரு..அப்பவே வந்தாச்சு' என்றார்.

அருளப்பசாமி 'நான் சித்ரா அச்சகம் போனேன்..சிவகுரு உங்கள ஸ்டார் பிரஸ்ஸிலே பாக்கலாம்னு சொன்னார். அவங்கதான் இங்க வரச்சொன்னாங்க' என்றார.

'நீங்க?'

'உங்க புத்தகம் படிச்சேன்..' என்றார். 'அதை வாசிச்சுட்டு உங்கள பாத்தே ஆகணுமுன்னு வந்தேன்'

நான் பீதியுடன் மற்றவர்களைப் பார்த்துவிட்டு 'என்ன புத்தகம்?' என்றேன்.

'பிரம்மவசியமும் மலையாள மாந்திரீகமும்னு ஒரு புத்தகம்..நீங்கதான் அச்சுதன்குட்டிங்கிற பேரிலே எழுதினீங்களாம்'

'ஆமா..அது சும்மா..'

'அதைப்பத்தி உங்ககிட்ட பேசணும்'

'இல்ல..நான் அவரு கேட்டாருன்னு..'

'நல்ல புத்தகம்..அதிலே நமக்கு நெறைய பேச இருக்கு..'

'மாடியிலபோயி பேசலாமே..டேய் குப்பு சாமிக்கும் தம்பிக்கும் டீ அனுப்புரா'

வேறுவழியே இல்லை. நானும் அவரும் மாடிக்குச் சென்றோம். நான் அந்நூலை தொழில்முறை மாந்திரீகரான என்னுடைய பெரியப்பா மகன் பரமேஸ்வரபிள்ளை வெற்றிலைபாக்கு கடையில் எடுத்துவிடும் பீலாக்களின் அடிப்படையில் எழுதியிருந்தேன். எதையாவது என்னிடம் செய்துகாட்டச் சொல்வாரா?

அருளப்பசாமி மெலிந்த வெள்ளை நிற உடலில் நரம்புகள் நீலமாகத் தெரிய சற்றே முன்வளைந்தவராக இருந்தார். மொட்டைபோட்டு பதினைந்து நாளாகியிருக்கும். முடி கறுப்பும் வெள்ளையுமாக முளைத்திருந்தது. தாடி முளைக்க முடியாத முகம். மோவாயிலும் மேலுதட்டிலும் மட்டும் கொஞ்சம் முடி. வெள்ளை வேட்டி கட்டி வெள்ளை மேலாடையை உடலைச்சுற்றி போர்த்தியிருந்தார். ஒரு வெள்ளைத்துணிப்பை. பழைய ஆடை. ஆனால் சுத்தமாகத் துவைக்கப்பட்டது.

அருளப்பசாமிக்கு நல்ல கணீர்க்குரல். தெளிவான உச்சரிப்பு. மகத்தான சொற்பொழிவாளராக ஆவதற்கான உடல்ரீதியான தகுதிகள் கொண்டவர். மேலே சென்றதும் என்னிடம் 'நல்லது, நாம பேசலாமா?' என்றார்.

'இங்க பாருங்க..அந்த புத்தகம்..'

'அதப்பத்தித்தான் பேசணும்னு வந்தேன்.. அதை நான் வாங்கினது சிதம்பரத்திலே..என்ன ஒரு பொருத்தம் பாருங்க. சித் அம்பரம். சித்தமென்னும் வானம்..கையிலே அப்ப பைசா இல்லை. ஒரு பக்தர்ட்ட அந்தப்புத்தகத்தை வாங்கிக்குடுங்கன்னு கேட்டேன். சரீன்னு வாங்கிக்குடுத்தார். சாமி வேற புத்தகம் வேணுமானாலும் வாங்கிக்கிடுங்கன்னார். இல்ல எனக்கு இது ஒண்ணே போரும்னு சொல்லிட்டேன்..'

எனக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. 'அது வந்து..'

அவர் பையிலிருந்து அந்தப் புத்தகத்தை எடுத்தார். 'நான் கேக்கவந்த விஷயம் தோ இந்தப்பக்கத்திலே இருக்கு' என்று பக்கங்களைப் புரட்டினார் '..இதிலே நெத்திக்கண்ணப்பத்தி சொல்லியிருக்கு. நெத்திக்கண்ணுங்கிறது சித்தக்கடலோட சுழீன்னு சொல்றீங்க. விபாசனை மூலம் அதை தெறக்கவைக்கிறதுக்கு ஒம்பது வழி இருக்குன்னு சொல்றீங்க..அதாவது'

அவரது பரபரப்பை பார்த்ததும் எனக்கு சட்டென்று எரிச்சல்தான் வந்தது. '..இதோ பாருங்க சாமி..இதெல்லாம் சும்மா டுபாக்கூர். நான் ஏதோ பொழைப்புக்காக எழுதினேன். அந்த பிள்ளைவாள் அவருபொழைப்புக்காக அச்சடிச்சு வித்தார்..'

'இருந்தாலும்..'

'எனக்கு இதையெல்லாம் பத்தி ஒண்ணுமே தெரியாது. நானே மனசில வந்ததையெல்லாம் புளுகி வச்சேன். அவரு போட்ட அடிமுறை, சமையல் எல்லாமே இந்தமாதிரி புக்குதான்..'

'ஆனா உங்களுக்கு இந்த வார்த்தையெல்லாம் எப்டித் தெரியும்? மந்திரங்கள்லாம் சரியாத்தானே இருக்கு? சுழிமுனை, நாடி எல்லாமே சரியாச் சொல்லியிருக்கு'

'அதெல்லாம் எனக்கே தெரியும். நான் எங்க குடுமபத்திலே உள்ள மாந்திரீகங்க கிட்ட கேட்டு ஞாபகம் வச்சுகிட்டது. ஒண்ணுரெண்டு பழைய சுவடியும் படிச்சிருக்கேன். ஆனா இதெல்லாம் சும்மா.. எனக்கு இதிலே எல்லாம் நம்பிக்கை இல்ல'

'உங்களுக்கு நம்பிக்கை இல்லேன்னா சத்தியம் சத்தியமில்லேன்னு ஆயிருமா?'

'உங்களுக்கு இப்ப என்ன வேணும்? எனக்கு வேற வேலை இருக்கு'

'நீங்க எழுதியிருக்கிற விஷயங்கள் எனக்கு ரொம்பச் சரியா வருதே'

'ஓ' எனக்கு ஆயாசமாக இருந்தது. அவரைப்பார்த்தால் முட்டாள்மாதிரி தெரியவில்லை. ஒருமாதிரி வெள்ளையான ஆளாக இருக்கலாம். 'சாமி, இதையெல்லாம் நம்புறதானா நம்புங்க. உங்க சொந்த விஷயம் அது. எனக்கு நம்பிக்கை இல்லை. நான் இதையெல்லாம் சும்மா கப்சா விட்டேன்..'

'ஆனா நீங்க எழுதினீங்களே'

'சாமி, நான் பக்கா செக்ஸ்புக்கும் எழுதியிருக்கேன்..அதும் எனக்கு ஒரு மயிரும் தெரியாது'

'அதுவேற..இது ஞானம். இது உங்களுக்குத்தெரியாம இருக்கலாம். ஆனா இந்த ஞானம் உங்க குடும்பப்பாரம்பரியமா உங்ககிட்ட வந்திருக்கு..உங்க வார்த்தையிலே உங்கள அறியாம அந்த சத்தியம் வந்து ஒக்காந்திருக்கு'

'சரிதான்..சாமி கௌம்புங்க..நான் வெளிய போகணும்'

'ஒருநிமிசம், நான் சொல்றதச் சொல்லிடறேன். நீங்க இதிலே சகஸ்ரபத்ம சுழிமுனை பத்திச் சொல்லியிருக்கிறத நான் அனுபவபூர்வமா உணர்ந்திருக்கேன். எனக்கு அது நடந்திருக்கு'

'என்னது, நெத்திக்கண்ணு தொறந்திருக்கா?'

'நெத்திக்கண்ணு இருக்குன்னு நான் உணர்றேன்..'

'அப்ப நீங்க திரயம்பகன்..போயி எங்கியாம் ஆசிரமம் கட்டி குறி சொல்லுங்க'

'அதில்ல, தம்பி இங்க பாருங்க..நீங்க எழுதியிருக்கீங்க. புறக்கண்ணை பாக்கிற மனுஷங்களால அகக்கண்ணான நுதல்விழியை பாக்க முடியாதுன்னு. ஆனா மிருகங்கள் பட்சிஜாலங்கள்லாம் பாக்கும்னு..ஞாபகமிருக்கா?'

'உங்க கண்ண பட்சிகள் பாத்துட்டுதாக்கும்?' காக்காய் ஏதாவது அவரைத் துரத்தி கொத்தியிருக்குமென நினைத்தேன்.

'உண்மையிலேயே..உண்மையாவே அப்டித்தான்..பாருங்க' அவர் மொட்டைமாடி விளிம்புக்குச் சென்று பார்த்தார். கீழே செந்நிறமான ஓட்டுக்கூம்புமேல் ஒரு காகம் அமர்ந்திருந்தது. அதை நோக்கி கைநீட்டினார்.

காகம் தலை சரித்துப்பார்த்தது. இருமுறை சிறகை விரித்துச் சுருக்கி சரியாக இடுக்கிக்கொண்டது. பின்பு நாலைந்துமுறை தலையைத்தாழ்த்தி வாலைப்பரப்பி கா கா என்றது. எம்பி எழுந்து சிறகடித்து வந்து எங்கள்

*கட்டிடத்தின் சுவரில் அமர்ந்து அவரைப்பார்த்தது. மீண்டும் எக்கி எக்கி கா கா என்றது. வேறு எங்கோ காகங்கள் கரைந்தன. அவர் அசையாமல் கைகளை விரித்துக்கொண்டு நின்றார்.*

*காகம் மெல்ல எழுந்து அவர் அருகே வந்து தரையில் அமர்ந்தது. கா கா என்று கரைந்தபோது அது ஏதோ சொல்லவருவது போலிருந்தது. பின்பு எழுந்து அவரது கையின் மேல் அமர்ந்துகொண்டது.*

*ஆச்சரியம் தாளாமல் நான் அப்படியே நின்றேன். அது ஏதோ தற்செயல் என்று நம்ப விரும்பினேன். ஆனால் தெளிவாக மூளைக்குத் தெரிந்தது, அங்கே ஒரு அசாதாரணவிஷயம் நடந்துகொண்டிருந்தது. இன்னொரு காகம் வந்து கைபிடிச்சுவரில் அமர்ந்தது. இருகாகங்களும் பேசிக்கொண்டன. அதுவும் அருகே வந்தது. மூன்றாவது ஒரு காகம். இன்னும் ஒன்று.*

*ஐந்து நிமிடங்களில் அவரது நீட்டப்பட்ட கைகளில் நான்கு காகங்கள் அமர்ந்திருந்தன. கீழே தரையிலும் சுவரிலும் கம்பிக்கொடியிலுமாக பதினைந்துக்கும் மேல் காகங்கள். அவை கரைந்தபடியே இருந்தன.*

*‘போதும்..’ என்றேன் ‘எனக்கு ஒருமாதிரி இருக்கு’*

*காகங்கள் சட்டென்று என்னை தாக்க ஆரம்பித்துவிடும் என்ற அச்சம் எனக்கு இருந்ததுதான் என் திணறலுக்குக் காரணம் என உணர்ந்தபோது எனக்கே என் மீது கசப்பு வந்தது.*

*‘நாம கீழே போயிருவோம்..’ என்றார். ‘இல்லேன்னா வந்துகிட்டே இருக்கும்’*

*படிகளில் கீழே இறங்கியபோது மொட்டைமாடியில் காகங்கள் கரைந்துகொண்டே இருந்தன.*

*‘காக்காய்கள இப்டி கூப்பிடுற ஒருத்தர் எங்கூர்ல இருந்தார்னு சொல்லுவாங்க’*

*‘நான் கூப்பிடலை தம்பி..’*

*ஆமாம், அவர் ஒலியே எழுப்பவில்லை.*

*‘அப்ப என்னதான் பண்ணினீங்க?’*

*‘காக்காயைப்பாத்தேன்..எங்கிட்ட வரமாட்டியா கண்ணுன்னு நெனைச்சேன்’ என்றார். ‘என் கண்ணுக்கு நடுவிலே உள்ள நுதல்விழிய அதுக பாத்திருதுக’*

*‘காக்கா மட்டும்தானா?’*

*‘இல்ல..கிளி மைனா எல்லாமே..பசு பண்ணி எல்லாமே நான் பாத்தா நெருங்கிடுது தம்பி..’*

*அது உண்மை என்று எனக்கு உடனே தெரிந்தது. என் கைகள் நடுங்கிக்கொண்டே இருந்தன. கால்சட்டைக்குள் கைகளை நுழைத்துக்கொண்டேன். பையன் டீயுடன் மேலே வந்தான்.*

*‘டீ குடிப்பீங்களா?’*

*‘நான் அதெல்லாம் குடிக்கிறதில்லை..’*

*‘பின்ன?’*

*‘நான் வேகவைக்காத காய்கறிகளையும் பழங்களையும் மட்டும்தான் சாப்பிடுறேன்..கிடைச்சதுன்னா தேங்கா சாப்பிடுவேன்’*

*‘வாழைப்பழம் கொண்டுவரச்சொல்லவா?’*

*‘வேண்டாம்தம்பி..எங்கிட்ட வாழைப்பழம் இருக்கு’ என்று பைக்குள் இருந்து எடுத்துக்காட்டினார்.*

*நான் ஒரு டீயை எடுத்துக்கொண்டேன். ‘அத ஓனர்ட்ட குடு’ என்று பையனை அனுப்பினேன். சாமியை கொல்லைப்பக்கம் அழைத்துச் சென்றேன். அங்கே நீர் வறண்டு நெடுநாளான ஒரு கிணறு உண்டு. அதனருகே ஒரு பெஞ்சு, நான் தூங்குவதற்காக போடப்பட்டது. அதில் அமர்ந்துகொண்டோம்.*

*‘இதான் தம்பி, நான் உங்ககிட்ட பேசவந்தது..ஒரு மாசமா இதெல்லாம் எனக்கு நடக்குதுன்னு தெரிஞ்சுக்கிட்டேன்.. கொஞ்சம் பயமா இருந்திச்சு..அப்றம்தான் உங்க புத்தகத்த படிச்சேன். இதெல்லாம் குப்தயோகம்னு நீங்க சொல்றீங்க’*

*‘இப்பதான் ஆரம்பிச்சதா?’*

*‘இல்ல..எனக்கு சின்னவயசிலேயே எல்லா ஜீவஜாலங்களையும் புடிக்கும்..சின்னவயசிலே எங்கம்மா எனக்கு*

கோழிக்குஞ்சு சூப் வச்சு குடுத்தா. அந்தக்கோழிக்குஞ்ச நான் அதுக்கு முன்னாடி கையிலே எடுத்து கொஞ்சியிருக்கேன். சூப்ப பாத்ததும் அப்டியே மயக்கம்போட்டு விழுந்திட்டேன். முழிச்சபிறவும் உடம்பு நாலஞ்சுநாள் நடுங்கிட்டே இருந்தது. அதுக்கு மேலே என்னால எதுவுமே சாப்பிட முடியலை. நாலஞ்சுநாளிலே சாகிற மாதிரி ஆயிட்டேன். எது சாப்டாலும் வாந்தி. எங்கூர் சித்தவைத்தியர் எனக்கு தேங்காப்பால் குடுக்கச்சொன்னார். அது உடம்புல நின்னதினால பிழைச்சேன்..அப்ப நான் ரெண்டாப்பு படிச்சிட்டிருந்தேன்.'

'அப்றம்..'

'அப்றம் எனக்கு ஸ்கூலுக்குப் போகப் புடிக்கலை..தினம் கௌம்பி ஏரிக்கரை கரட்டுமேடுன்னு சுத்துறது. பட்சிகள் மிருகங்கள் மரங்கள்னு எல்லாத்தையும் வேடிக்கைபாத்துட்டு இருக்கிறது. என்னத்தை பாக்கிறேன்னு தெரியாது. ஆனா பாக்கப்பாக்க புடிக்கும். பரவசமா இருக்கும். கண்ணில கண்ணீரா வரும். பாக்க ஆரம்பிச்சு அப்றம் நிப்பாட்டணுமானா யாராவது என்னை கண்டுபுடிச்சு உசுப்பினாத்தான் உண்டு. சிலசமயம் ரெண்டுநாள்கூட ஆயிரும்..'

ஆச்சரியமாக இருந்தது. மனநோயாளியாக இருந்திருப்பார் என்று தோன்றியது.

'நீங்க நெனைக்கிறது சரி. குற்றாலத்திலே ஒரு ஆசிரமத்திலே கொண்டுபோயி உட்டாங்க. அங்க என்னைய மாதிரி பைத்தியக்காரங்க இருபத்தஞ்சுபேரு இருந்தாங்க. காலம்பற நல்லா எண்ணை தேச்சுட்டு அருவியிலே கொண்டுபோயி ஒருமணிநேரம் நிப்பாட்டுவாங்க. அப்றம் தோட்டத்தில விட்டிருவாங்க. எனக்கு புடிச்சிருந்தது. அங்க தோட்டத்திலே எல்லாமே உண்டு. மேயறதுக்கு மாடுங்க வரும்..நெறைய பூச்சிகள் பறவைகள் எல்லாம் உண்டு. பாத்துகிட்டே இருப்பேன்.. குளிச்சப்பிறவு எல்லாமே பிரகாசமா தெரியும். பட்டாம்பூச்சி ரெக்கையில உள்ள பூப்பொடி கூட தெளிவா தெரியும்..குத்தாலத்திலெ வெயிலு நல்ல அழகா இருக்கும். பச்சையா.. தூரத்திலே மலை. மழைக்காலத்திலெ மலை ஈரமா பளபளன்னு இருக்கும்''

'எவ்வளவு வருஷம் அங்க இருந்தீங்க?'

'என்ன, ஒரு பத்துவருசம் இருந்திருப்பேனா?' என்று என்னைக் கேட்டார் 'அப்பா செத்துப்போனப்பிறவு அண்ணாவால காசு அனுப்ப முடியல.. பணமில்லாம எப்டி என்னைய வச்சுக்கிடுவாங்க? கஷ்டம்ல? அதான் என்னைய போன்னுட்டாங்க. அட்ரஸ் சொன்னாங்க. நானே கௌம்பி சிவகாசிக்கு போனேன்'

'அங்கதான் ஊரா?'

'ஆமா. அப்பா அங்க வாத்தியாரா இருந்தார். அண்ணாவும் வாத்தியார்தான். அம்மாவும் இருந்தாங்க. அண்ணா சொன்னார் டேய் நீ இங்க இருந்தா எம்புள்ளைங்க கெட்டுப்போவும், நீ கௌம்புன்னு..பாவம் அண்ணா..அவருக்கு ரெண்டு பசங்க. ரொம்ப கஷ்டம்..அம்மாவுக்கு வைத்தியம் பாக்க காசு கெடையாதுன்னு சொன்னார். அம்மா என்கூட வர்ரேன்னு சொன்னா. நான் அம்மாவைக் கூட்டிட்டு கௌம்பி விருதுநகருக்குப் போனேன். அங்க ஒரு மளிகைக்கடையிலே வேலைபாத்தேன்..'

'எவ்வளவு வருசம்?'

'அது இருக்கும் ஒரு நாலு வருஷம்..'

'புடிச்சிருந்திச்சா?'

'ரொம்ப புடிச்சிருந்திச்சு..' என்று புன்னகை செய்தார் 'எவ்ளவு சாமான்..மனுஷன் எவ்ளவு சாமான் கண்டுபிடிச்சு வச்சிருக்கான். எவ்ளவு ஆளுங்க வந்து அதையெல்லாம் சந்தோசமா வாங்கிட்டுப்போறாங்க..அந்த ஓனர் ரொம்ப நல்லவர். நாந்தான் காலம்பற அஞ்சுமணிக்கு கடைய தெறப்பேன். ராத்திரி பன்னிரண்டுமணிக்கு மூடி சாவிய நானே கொண்டுபோய்ட்டு காலம்பற வந்திருவேன். அம்மா சந்தோசமா இருந்தாங்க..அப்றம் செத்துட்டாங்க''

'அப்றமாத்தான் கடையிலே இருந்து நின்னுட்டீங்களா?'

'இல்ல..ஒருநாள் ஒரு சாமியாரு வந்து என்னைப்பாத்துட்டே நின்னாரு. சாயங்காலம் வரை நின்னுட்டு எங்கியோ போய்ட்டாரு. நான் கடையச் சாத்திட்டு போறப்ப பின்னால வந்து நீ எங்கூட வாடான்னாரு. போலாம்னு தோணிச்சு. சாவியக் கொண்டுட்டுபோயி ஓனரை எழுப்பி குடுத்தேன். '

'அவரு ஒண்ணும் சொல்லலியா?'

'சாமீன்னுதான் அவரு என்னைய கூப்பிடுவாரு..சாமி இம்புட்டுநாள் நின்னதே அதிசயம்..கௌம்புங்கோ..மிச்ச சம்பளம் நாநூறு இருக்கே..குடுக்கட்டான்னு கேட்டாரு.. சரீன்னு வாங்கிட்டு வெளியே போனேன். அந்த சாமியாரு எச்சியக் கொண்டுட்டு வாறியா, குடுத்துட்டுவாடா கம்னாட்டீன்னு சொன்னாரு. நேரா திருப்பிக்கொண்டுபோயி குடுத்துட்டேன். என்னபண்றது, திருச்செந்தூரு உண்டியலிலே போடவான்னாரு. போடுங்கன்னு சொல்லிட்டு கௌம்பிட்டேன்'

ஆச்சரியப்படுவதை விட்டுவிட்டிருந்தேன். நானறியாத இன்னொரு உலகம்.

'அப்றம் எங்க போனீங்க?'

‘எங்கியோ..அவரு போற எடங்களுக்கெல்லாம் போறதுதான். அவரு சொல்றதச் செய்றது. என்னைய கம்னாட்டீன்னுதான் கூப்பிடுவார்.. திருவண்ணாமலைக்குத்தான் மொதல்ல போனம். அங்க ஒரு நாலுமாசம். அப்றம் சிவசைலம். அப்றம் அப்டியே ஓங்காரேஸ்வர்..காசியிலே கொஞ்ச வருஷம் இருந்தோம்..’

நான் ‘காசியில எங்க?’ என்றேன்.

‘படித்தொறையிலதான்’என்றார். ‘அப்றம் ஹரித்வார், அங்கேருந்து ரிஷிகேஷ்..கொஞ்ச நாள் உத்தரகாசி ருத்ரபிரயாக்னு போனோம்..’

பெருமூச்சுவிட்டேன்.

‘ரிஷிகேசிலே குரு சமாதியாயிட்டார்’

‘குருவா?’

‘ஆமா..அவருதான் சொன்னாரு அவர அப்டிச் சொல்றதுக்கு’

‘அவரு உங்களுக்கு என்ன சொல்லிக்குடுத்தார்?’

‘ஒண்ணுமே சொல்லிக்குடுக்கலை..சேந்து அப்டியே போயிட்டே இருக்கிறதுதான். எங்கியாம் சாப்பாடு கெடைச்சிரும். காலப்புடிச்சுவிடுடா கம்னாட்டீம்பாரு. புடிச்சு விடுவேன்.’

‘கடைசியா என்ன சொன்னாரு?’

‘ஒண்ணும் சொல்லலை. படுத்தாரு..டேய் எங்காலைப்புடிச்சு பத்மாசனத்திலே வைடான்னாரு. வச்சேன். நான் போயிடுவேண்டான்னாரு. அப்டியே என்னையத் தூக்கி கங்கையிலே போட்டிருடான்னாரு. அப்றம் என் தலையிலே கைவச்சு சந்தோசமா இருடா கம்னாட்டீன்னாரு. போய்ட்டாரு’

‘இது எப்ப?’

‘இதுவா இது ஒரு ஆறுவருசமிருக்கும்.. ’என்றார் அருளப்ப சாமி.

‘நீங்க அப்பவே சாமியா?’

‘இல்லியே..நான் நேரா ஊருக்குள்ள வந்தேன். சண்டிகரிலே கொஞ்சநாள் இருந்தேன். அங்கேருந்து அப்டியே கீழ வந்தேன். ஊருரா சுத்துறது’

‘அருளப்பசாமீன்னு ஏன் பேரு?’

‘அது வடலூரிலே ஒரு சாமிபோட்ட பேரு. அவரு பேரு ஒளியப்பர். வடலூர் ராமலிங்கசாமியோட பக்தர். வருசத்திலே தைப்பூசத்தன்னிக்கு மட்டும் வடலூர் வந்திருவார். நான் அங்க போனப்பதான் அவரைப்பாத்தேன்..அவருகூடவே இருந்தேன். அவருதான் டேய் நீ இனிமே அருள்ளப்பண்டான்னார். சரீன்னுட்டேன்..’

நான் அவரையே பார்த்துக்கொண்டிருந்தேன். அவரைப்பற்றி எந்த முடிவுக்கும் வரமுடியவில்லை. மொத்தமே இருபத்தைந்து கிலோ எடை இருக்கமாட்டார். ஆனால் உடம்பில் நல்ல வலு உண்டு என்று கைகளைப்பார்த்தால் தெரிந்தது.

‘சாமி, இப்ப எதுக்கு என்னைத்தேடிவந்தீங்க?’

‘இல்ல இந்த புத்தகத்திலே–’

‘சாமி இது ஒரு குப்பைப் புத்தகம். இதையெல்லாம் நம்பாதீங்க’

‘சரியாப்போட்டிருக்கே’

‘சாமி இதுக்குமுன்னாடி என்னென்ன புத்தகங்கள படிச்சிருக்கீங்க?’

‘நானா’?’

‘ஆமா’

‘ஒண்ணுமே படிச்சதில்லியே’

‘அதான்_’ என்றேன் ‘இதெல்லாம் எல்லா புக்கிலயும் உள்ள விஷயங்கள்தான்_நான் ஒண்ணும் பெரிசா எழுதல்லை’

‘சரி_’என்றார் ‘ஆனா நீங்க சொல்லித்தானே எனக்கு இதெல்லாம் என்னான்னு தெரியுது_அதான் உங்க கிட்ட கேக்கலாம்னு வந்தேன்’

‘என்னது?’

‘இதை நான் முழுசா தெரிஞ்சுகிடணும்_உங்களுக்குத் தெரிஞ்சதை எல்லாம் சொல்லுங்க. நான் வாசிய அடக்கி வசியத்தை எடுக்கிறதுக்கு என்னவேணுமானாலும் செய்யறேன்’

‘எடுத்து?’

‘ஒண்ணுமில்ல’

‘பெரிய ஞானியா ஆகணுமா நீங்க?’

வாயைத்திறந்து ‘அப்டீன்னா?’

‘இந்த ஷிர்டிசாய்பாபா, ரமணர் அந்தமாதிரி’

‘அவங்கள்லாம் இதெல்லாம் பண்ணினவங்களா தம்பி?’

எனக்கு அயர்ச்சியாக இருந்தது. உண்மையிலேயே இவருக்கு அவர்களைப்பற்றி ஒன்றும் தெரியாதா என்ற எண்ணம் ஏற்பட்டதுமே தெரிந்தால் அதை மறைக்கக்கூடியவரல்ல அவர் என்ற எண்ணம் ஏற்பட்டது. மறுகணமே குரூரமான ஒரு சிந்தனை உருவாகியது.

‘சரி, சாமி நான் சில கேள்விகள் கேக்கிறேன்’

‘கேளுங்க_நீங்க எனக்கு குரு மாதிரி’

‘உங்களுக்கு பொம்புளைங்கள புடிக்குமா?’

‘ரொம்ப புடிக்குமே? ஏந்தம்பி இப்டி கேட்டுட்டீங்க?’

பல்லைக் கடித்து என்னை அடக்கிக் கொண்டேன் ‘அவுங்க அழக ரசிப்பீங்களா?’

‘ஆமா_’ முகம் மலர்ந்து ‘எம்புட்டு அழகா இருக்காளுக’

‘எல்லாருமா?’

‘ஆமா_’

‘சரி_பொம்புளைங்களிலே எந்த இடத்த பாப்பீங்க?’

‘எல்லா எடத்தையும்தான்’

‘மார்ப பாப்பீங்களா?’

’ஆமா_பாப்பேன்’

‘புடிக்குமா?’

‘ரொம்ப புடிக்குமே_’

‘பெரிசா இருந்தா புடிக்குமா சின்னதா இருந்தா புடிக்குமா?’

யோசித்து ‘ரெண்டுமே புடிக்கும்’

விளையாடுகிறாரா என்று ஒரு எண்ணம் வந்தது. ஆனால் அப்படி விளையாடினாரென்றால் அவர் மாபெரும் நடிகர்.

‘பொம்புளைங்களோட ஒதடு தொப்புள் எல்லாம் பாப்பீங்களா?’

‘ஆமா’

கடும்சினம் எழுந்து என் தலையில் சில நரம்புகள் நறுநறுத்தன. ‘பொம்புளைங்க கூட படுக்கணும்னு தோணுமா?’

‘எங்கம்மாகூட நான் படுப்பேனே’

‘அதில்ல..வேற பொம்புளைங்ககூட படுக்கணும்னு தோணுமா?’

‘நாந்தான் கோயில் வாசலிலே படுக்கிற ஆளாச்சே?’

‘சாமிக்கு காமமே வந்ததில்லியா?’ என்றேன்.

அவர் என்னைப் பார்த்து ‘லிங்கோத்தாரணத்தைச் சொல்றீங்களா?’ என்று கேட்டார்.

‘ஆமா’

‘அது அடிக்கடி உண்டு..திருவண்ணாமலையிலே மலைய விடிகாலை வெளிச்சத்தில பாத்தப்ப அப்டியே விடைச்சு நின்னுது..குரு பாத்துட்டு ஏண்டான்னார். பரவசமா ஆனாக்க அப்டி ஆயிடுதுன்னு சொன்னேன்..அப்டியே விட்டுரு..அது சிவம்னு சொல்லிட்டார்..அழகா எதைப்பாத்தாலும் சிவோத்தாரணம் உண்டு..கொஞ்சநாளா இல்ல..அதான் நான் கேக்கவந்ததே. அப்டி இல்லாம ஆனபிறகுதான் இந்தமாதிரி நெற்றிக்கண்ணு திறந்திருக்கு..நீங்க உங்க புக்கிலே சொல்றீங்க..’ புத்தகத்தை எடுத்து பக்கங்களைப்புரட்ட ஆரம்பித்தார்.

நான் அதை பிடுங்கி வீசினேன். ‘அதை விடுங்க சாமி..அது ஒரு மண்ணு புக்கு’

‘இல்லே’

‘அதில ஒண்ணுமில்ல..அத எழுதின நான் சொல்றேன். இனிமே நீங்க அதை படிக்கக்கூடாது. இனிமே ஒரு புத்தகமும் படிக்கக்கூடாது’

‘ஒண்ணுமே படிக்கக்கூடாதா?’

‘வேண்டாம்’

‘சரி’ என்றார்.

‘ஏன் தெரியுமா?’

‘ஏன்?’

‘உங்க குரு சொன்னார்ல, சந்தோஷமா இருன்னு’

‘ஆமா’

‘அதான் உபதேசம்..அதுக்குத்தான்’

‘அப்ப இதெல்லாம் ஏன் நடக்குது?’

‘சாமி நீங்க சந்தோஷமா இருக்கீங்க..அதான்’ என்றேன். ‘சந்தோஷமா இருந்தா பட்சிமிருகங்களுக்கெல்லாம் தெரிஞ்சிருமோ என்னமோ’

‘அப்டியா?’ என்றார்.

‘இனிமே எங்க போறீங்க?’

‘தைப்பூசம் வருதே..வடலூர் போகணும்’

‘போங்க..சாப்பிடுங்க, வேடிக்க பாருங்க. ஜாலியா இருங்க’

‘ஜாலியா?’

‘ஆமா’

‘சரி’ என்றார்.

பெருமூச்சுடன் ‘பாக்கலாம் சாமி’ என்றேன்.

அருளப்பசாமி எழுந்துகொண்டார். செல்லும் வழியில் அச்சக யந்திரத்தைப்பார்த்து வியந்து பரவசமடைந்து நின்றார் ‘இது என்னது?’

‘இது அச்சாபீஸ்-இந்த மிஷின்தான் புக்கெல்லாம் அடிக்குது’ ஓர் எழுத்துருவை எடுத்துக்காட்டினேன் ‘இந்த மாதிரி எழுத்துக்களை சேத்துச்சேத்து கட்டைவச்சு அடுக்கி அப்டியே மையிலே தோச்சு தாளிலே பதிச்சா அச்சாயிரும்’

‘நடந்துபோறப்ப செருப்போட தடம் பதியற மாதிரி-’ என்றார்.

ஒவ்வொரு எழுத்தும் யாரோ ஒருவர் நடந்துசென்ற தடம் என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது.

‘டே கஞ்சிவெள்ளம், இது யாரு மொட்ட?’ என்றாள் மாரியம்மாள்.

‘ஒரு சாமி’

‘பாக்க நல்லாத்தான் இருக்காரு-’ அவள் ஏதோ சொல்ல பெண்கள் சிரித்தார்கள்.

அருளப்பசாமி அவரும் சிரித்து ‘நல்ல பொண்ணுகள்-அழகா இருக்காங்க’ என்றார். ‘இவங்கதான் புத்தகம்லாம் அச்சுபோடுறாங்களா’’

‘நாங்க ரூபா நோட்டுகூட அச்சுபோடுவோம்’

‘அப்டியா?’என்றார் அருளப்பசாமி வியந்து.

‘சும்மா ஓட்டுறாளுக சாமி வாங்க’ என அவரை மீட்டு கொண்டுசென்றேன்.

பசவராஜு ‘தம்பி, அந்த நாலாம் ஃபாரத்த பாத்துக்குடுத்தீங்கன்னா அச்சு ஏறும்’ என்றார்.

‘பாப்பம் சாமி’

‘பாப்பம்’ என்று கும்பிட்டு பசவராஜிடம் ‘வாரேன்-சந்தோஷம்’ என்று சொல்லிவிட்டு தோள்பையை தூக்கி மாட்டிக்கொண்டு அருளப்பசாமி கிளம்பினார்.

‘நாலாம் ஃபாரம்னா?’ என்றேன்.

‘அதான்-துடிக்கும் துப்பாக்கி’

நான் தாளை வாங்கிக்கொண்டு பென்சிலை கையிலெடுத்து அமர்ந்தேன். சிலகணங்கள் அதையே பார்த்துக்கொண்டிருந்தேன். சட்டென்று எழுந்து வெளியே சென்றேன். பசவராஜு எந்திரம் அருகே இருந்ததனால் திரும்பிப்பார்ப்பதற்குள் சென்றுவிட்டேன்.

அருளப்பசாமி சாக்கடையோரமாக சென்றுகொண்டிருந்தார். தலையைத் திருப்பித் திருப்பி சாலையை வேடிக்கை பார்த்துக்கொண்டு சென்றார்

‘சாமி-’ என்றேன். அவர் கேட்கவில்லை. மூச்சிரைக்க அவரை நோக்கி ஓடி அவர் அருகே நின்றேன். ‘சாமி’

‘தம்பி’ என்றார்.

‘நானும் உங்ககூட வாரேன்’

‘எங்க?’

‘வடலூர் போகணும்னு சொன்னீங்க?’

‘ஆமா இல்ல?’

‘ஆமா-நானும் வாரேன்-’

அருளப்பசாமி ‘வாங்க தம்பி’ என்றார். நான் என் கையில் பென்சில் இருப்பதை அப்போதுதான் உணர்ந்தேன். தூக்கிப்போடப்போனவன் சட்டைப்பையில் வைத்துக்கொண்டேன்.

---

## புறப்பாடு II – 16, ஜோதி

வடலூரர் எந்தப்பக்கம் என்று எனக்குத்தெரியாது. நெய்வேலியில் என் பக்கத்து வீட்டுக்காரரின் சொந்தக்காரர் ஒருவர் இருந்தார். அவர் பேச்சிலிருந்து அது நெய்வேலி அருகே என்று தெரியும். ஆனால் நெய்வேலி எந்தப்பக்கம் என்று

தெரியாது. என்ன விசேஷமென்றால் அருளப்ப சாமிக்கும் அதெல்லாம் தெரியாது என்பதுதான். நானும் அவரும் நடக்க ஆரம்பித்தபோது அவர் ரயில்நிலையத்துக்குத்தான் போகிறார் என்று நினைத்தேன். அதன்பின்பு அவர் ஒருவேளை பேருந்தில்போக திட்டமிடுகிறாரோ என்ற சந்தேகம் வந்தது. அப்படியென்றால் அவரிடம் பணமிருக்கவேண்டும். என்னிடம் ஒரு பைசாகூட இல்லை.

ஆனால் அருளப்ப சாமி சாலையோரம் நின்ற ஒருவரை நோக்கி வணங்கி 'சாமி, வடலூர்க்கு எப்பிடிப்போகணும்?' என்றார்.

'கடலூரரா? பீச்சாங்கையாண்ட திரும்பு_நேராபோ. ரயில்வேடேசன் வரும்_பாசஞ்சரு உண்டு'

'இல்ல சாமி_ரயிலிலே எல்லாம் போறதில்லீங்க_'

'பஸ்சா_பஸ்ஸுன்னாக்க_'

'பஸ்ஸிலயும் போறதில்லீங்க'

அவர் முகவாயைத் துடைத்தபடி கூர்ந்துபார்த்தார். விளையாடுகிறாரா என்று யோசிப்பதாகத் தெரிந்தது. 'நீங்க எங்க போவணும்?'

'வடலூரு_வள்ளலார் சமாதிக்கு_தைப்பூசம் வருதுலீங்களா?'

'வடலூரரா? அது எங்க இருக்கு? டேய்_'

ஒரு அழுக்குப்பையன் வந்தான் 'இன்னா?'

'இந்த கடலூரு_இல்ல_சாமி எந்தூரு சொன்னீங்க?'

'வடலூரு. வள்ளலாரு சமாதியான ஊரு'

'யாரு?'

வள்ளலாரு_வள்ளலாரு ராமலிங்கசாமி'

'அது யாரு? அவரு அங்க என்ன பண்றாரு?

'சமாதியாயிட்டாரு'

'சமாதின்னா?''

'செத்துட்டாரு'

'ஓகோ_அவரு உனுக்கு இன்னா ஓணும்?'

'சாமிங்க'

ஓடிவிடலாம் போலிருந்தது. சென்னைத்தொலைக்காட்சி நகைச்சுவை போலிருந்தது. ஆனால் மூவரும் தீவிரமாகவே இருந்தனர். 'இந்தா ராஜூ_டைவர கூப்பிடு. சாமி இன்னவோ கேக்குது பாரு'

'இன்னா சாமி?'

'வடலூருக்கு எப்டி போறது?'

'எந்த வடலூரு?'

'வள்ளலாரு சமாதியான எடம்'

'அத்தக் கேக்கிறியா? நீ எப்டிப்போறே?'

'நடந்துதான்_'

'நடந்தா_என்ன பேசுறே?'

'நான் எல்லா எடத்துக்கும் நடந்துதான் போறது_'

ராஜு மற்ற இருவரையும் பார்த்துவிட்டு 'நடந்துபோற வனி எனக்குத்தெரியல்ல சாமி. நான் டாக்ஸி ஓட்டினுதான் போறது..'

'எப்டி போறீங்க?'

'நேரா பாண்டிச்சேரி போயிருபீச்சாண்ட ரோடு இருக்கு பாத்தியா? மகாபலிபுரம் அப்பால அப்டியே பாண்டிச்சேரி..அதுக்கப்பால கடலூர்..அங்கேருந்து நெய்வேலி ரூட்ல போனா வடலூரு' என்றபின் என்னை அரைக்கணம் பார்த்துவிட்டு 'அம்மாந்தூரம் நடந்தா போறே?'

'போயிடலாம் சாமி..தைப்பூசத்துக்குத்தானே போகணும்?'

'பஸ்ஸுக்கு காசு குடுக்கறேன் சாமி..பஸ்ஸிலேயே போயிரு' என்றார் முதல் ஆள்.

'இல்லீங்க..பஸ்ஸிலே போறதில்லீங்க.. இது என்னாது?'

அவர் தன் கையில் இருந்த இரும்புச்சாமானைப்பார்த்துவிட்டு 'லிவரு..மிசினுக்குள்ள உள்ளது..ஏன் சாமி நடந்தேதான் போவணும்னு வெரதமா?'

'இல்லியே..நடந்துபோனா புடிச்சிருக்கு' என்றார் அருளப்ப சாமி 'இத்த வச்சுட்டு என்னா பண்ணுவீங்க?'

'சாமிக்கு காணிக்க குடுத்தா வாங்கிக்குவீங்களா?'

'இல்லீங்க..காசெல்லாம் வாங்குறதில்லீங்க..'

'அப்ப சாப்பிட்டுட்டுப்போங்க சாமி..'

நான் 'சாமி வாழைப்பழம் தேங்கா மட்டும்தான் சாப்பிடுவாரு..'

'அப்ப வாழைப்பழமும் தேங்காவும் வாங்கிக்குடுக்கலாமுங்களா?'

'குடுங்க' என்றார் அருளப்பசாமி.

ராஜு ஓடிப்போய் இரண்டு தேங்காயும் இரண்டுசீப்பு வாழைப்பழமும் வாங்கி வந்தான்.

'இது என்னத்துக்கு? நாங்க ரெண்டுபேருதான்' என்று நான்கு வாழைப்பழத்தை வைத்துக்கொண்டு மிச்சத்தை அவர்களுக்குக் கொடுத்தார் 'நீங்க சாப்பிடுங்க'

'இல்லீங்க சாமி'

'டேய் வாங்குடா..சாமி பிரசாதம் குடுக்குது' என்றார் முதல் ஆள்.

அவர்கள் வாங்கிக்கொண்டார்கள்.

'சாமி புள்ளகுட்டிகள ஆசீர்வாதம் பண்ணணும்'

'எல்லாம் சந்தோசமா இருங்க..நல்லபடியா எல்லாம் நடக்கும்..வரட்டுமா?'

அவர்கள் கைகூப்பியபடி நிற்பதை பார்த்தேன். நாங்கள் திரும்பி நடக்கும்போது பின்பக்கம் 'சிஷ்யனாக்கும்..பாத்தா படிச்சவன் மாதிரி இருக்கான்' என்ற குரல் கேட்டது.

அருளப்பசாமி மிகமெதுவாக நடப்பவர். மதியவெயிலிலும் தென்றலில் நிலவில் உலவுபவர் மாதிரி இருந்தார். அவருக்கு எந்த அவசரமும் இல்லை. எல்லாவற்றையும் ஆர்வத்துடன் வேடிக்கைபார்த்து, பிடித்தவற்றைப்பார்த்து சிரித்து, சிலரிடம் சில கேள்விகள் கேட்டு என்ன ஏது என்று தெரிந்துகொண்டு நடந்தார். நான் கொஞ்ச தூரம் சென்றபின் அவருக்காக காத்திருக்கவேண்டியிருந்தது

கடற்கரைக்கு ஒருமணிநேரத்தில் வந்துவிட்டோம். அந்நேரத்திலும் கடற்கரையில் ஆளிருந்தார்கள். சாலையோரமாக சுண்டல் பொரி கடலை விற்பவர்கள் கூடைகளுடன் அமர்ந்து பேசிக்கொண்டிருக்க காற்று மிதமாக வீசிக்கொண்டிருந்தது.

கடற்கரை ஓரமாக சிறிய சாலை மணல்மூடிக்கிடந்தது. மணல் விலகிய இடங்களுல் தாரின் கருமை தெரிந்தது. மேலும் இரண்டுமணிநேரத்தில் நகரை விட்டு வெளியே வந்துவிட்டோம். மணல்மேடுகள் நடுவே இடங்களுக்கு மூங்கில்நட்டு வேலிபோட்டிருந்தார்கள். இருபக்கமும் காற்றாடிமரக்காடுகள். இலைகளுக்கு அப்பால் ஒளி அலையடிக்கும் கடல்.

மகாபலிபுரத்துக்கு வந்தபோது மாலை நேரம். கடலுக்குமேல் வானம் சிவக்க ஆரம்பித்திருந்தது. சாலையோரமாக ஒரு

சின்ன கோயில் 'சாப்பிட்டிருவோம்-நான் சூரியன் அணைஞ்சபிறகு சாப்பிடமாட்டேன். குரு சொல்லியிருக்காரு' என்றார்.

முழுத்தேங்காயையும் உடைத்துத்தின்று பழத்தையும் சாப்பிட்டோம். அருகே ஒரு பெட்டிக்கடையில் இருந்து வயிறுமுட்ட தண்ணீர் குடித்தபின் கடற்கரைக்குச் சென்று அமர்ந்திருந்தோம். கடல் நிறம்மாறி இருண்டு வானமும் இருள்வது வரை இருந்தோம். அருளப்ப சாமி ஒன்றுமே பேசாமல் இருந்தார். ஒரு கண்ணிலிருந்து மட்டும் கண்ணீர் சொட்டிக்கொண்டிருந்தது.

இருட்டியபின் எனக்கு குழப்பம் ஏற்பட்டது. என்ன உத்தேசிக்கிறார்? கிளம்பப்போகிறாரா, அங்கேயே தங்கவிருக்கிறாரா? 'சாமி போலாமா?'

'ஆ?ஆ?யாரு? என்ன?'

'சாமி இது நாந்தான்-சாமி'

'என்ன? யாரு?'

என்ன இது வம்பு என்று திகைத்து நின்றேன். கொஞ்ச நேரம் கழித்து அருளப்ப சாமி 'அய்யோ-' என்றார்.

'ஏன் சாமி'

'ராத்திரி ஆயிடுச்சே'

'என்ன பண்ணலாம்?'

'ராத்திரி நடந்தாத்தான் நல்லாருக்கும்-ஒம்பது மணிக்குமேலேதானே படுக்க எடம் கெடைக்கும்'

கடலோரச் சாலையில் எப்போதாவது ஒரு லாரிபோவது தவிர சந்தடியே இல்லை. இருபக்கமும் வெறும் உப்புமணல் சதுப்புகள், மணல்மேடுகள், காற்றாடிமரத்தோட்டங்கள். சில இடங்களில் மீனவக்குப்பத்துக்குச் செல்லும் அகலமற்ற வெண்ணிற மணல்பாதைகள் பிரிந்து சென்றன. சாலையோரத்தில் இளநீரும் பதநீரும் விற்பவர்கள் மாலைக்குள் முடித்துக்கொண்டு செல்ல அவர்கள் விட்டுச்சென்ற குப்பைமலைகள் மட்டும் கிடந்தன. டீக்கடைகள்கூட அந்திக்குப்பின் கிடையாது.

பத்தரை மணிவாக்கில்தான் ஒரு சாலையோரக் கோயிலை அடைந்தோம். புதியதாகக் கட்டியிருந்தார்கள். சிமிண்ட் போட்ட முன்மண்டபத்தில் காற்று மணலை அள்ளிக் கொட்டியிருந்தது. சாலைக்கு மறுபக்கம் காற்றாடிமரத்தோப்புக்கு அப்பால் கடலின் அலைகளின் வெண்மை எவரோ இருளில் துணியை வீசி வீசிக்காட்டுவதுபோலத் தெரிந்தது. காற்று உந்தித்தள்ளுவதுபோல வீசியது.

அருளப்ப சாமி துண்டை எடுத்து சிமிண்ட் தரையைத் துடைத்தார். கையை தலைக்கு வைத்து படுத்துக்கொண்டார். 'நல்ல காத்துல்ல?'

'ஆமா, கடல்காத்து'

நான் அமர்ந்துகொண்டேன். மேலே அவர் ஏதோ பேசப்போகிறார் என்று நினைத்தேன். அவர் தூங்கிவிட்டார் என்பது குறட்டை ஒலி கேட்டபோது தெரிந்தது. கடலையே பார்த்துக்கொண்டிருந்தேன். சென்று பார்த்தாலென்ன? ஆனால் அவ்வளவு தூரம் நடந்ததனால் காலும் இடுப்பும் வலித்தது. மல்லாந்து படுத்தேன். எதற்காக இந்தச் சாமியாருடன் இவ்வளவு தூரம் வந்தேன்? ஓரிரு வரிகள்கூட சிந்தித்திருக்க மாட்டேன். அதிகாலையில் அருளப்ப சாமி என் காலைப்பிடித்து 'தம்பி-தம்பி' என்று அழைத்தபோதுதான் விழித்துக்கொண்டேன். என் உடம்பு முழுக்க மணலாக இருந்தது. வாய்க்குள்ளும் மணல்.

'குளிச்சுட்டு கௌம்பலாமே தம்பி'

நல்ல இருட்டாகவே இருந்தது. தலைக்குமேல் நட்சத்திரங்கள் மிக அருகே என்பதுபோலத் தெரிந்தன. இரவில் ஒரு நட்சத்திரம் கூட இல்லை. கடற்காற்றும் இல்லை. நல்ல குளிர். அருளப்ப சாமி பையை எடுத்துக்கொண்டு விடுவிடுவென நடந்தார். நான் பின்னால் சென்றேன்.

சாலையோரம் ஒரு அடிகுழாய் இருந்தது அருளப்ப சாமி வேட்டியையும் மேலாடையையும் கழற்றிவிட்டு கோவணத்துடன் அதன் கீழே அமர்ந்து கொண்டார். 'அடிங்க தம்பி'

நான் அடிக்க நீர்கொட்டியது. அதன் கீழே கிட்டத்தட்ட படுப்பதுபோல குனிந்து அமர்ந்தும் கையால் அள்ளி விட்டுக்கொண்டும் குளித்தார். அங்கேயே மணலை அள்ளி மேலே பூசி நரநரவென்று தேய்த்துக்கொண்டார். குளித்தபின் வேட்டியையும் துண்டையும் நீரில் நனைத்து கும்மி துவைத்தார். பிழிந்து படார் படாரென்று உதறிவிட்டு கொண்டுசென்று இரு மரங்களிடையே கட்டினார். அவை மெல்லியகாற்றில் நெளிந்தன.

கோவணத்துடன் நின்று அவர் தண்ணீரை அடிக்க நான் குளித்தேன். பாண்டை துவைக்கவில்லை. சட்டையை மட்டும் துவைத்துவிட்டு திரும்ப அணிந்துகொண்டேன். அவரது பைக்குள் இன்னொரு வேட்டியும் மேலாடையும் இருந்தன. அவற்றை அணிந்துகொண்டார்.

இருவரும் விடியும்வரை நடந்தபோது முதல் டீக்கடையைக் கண்டோம். அருளப்ப சாமி டீக்கடை நோக்கிச் சென்று கும்பிட்டபடி 'வணக்கம் சாமி, சாமிகளுக்கு தர்மமா டீ குடுப்பீங்களா?' என்றார்.

கடைக்காரர் கிறித்தவ மீனவர் என்று தெரிந்தது. ஏதோ சொல்லப்போகிறார் என்று எண்ணி நான் மானசீகமாக பின்னால் திரும்பி ஓடிவிட்டேன். ஆனால் அவர் கண்கள் சுருங்க பார்த்துவிட்டு 'ரெண்டா சாமி?' என்றார்.

'எனக்கு வேணாங்க..நான் டீல்லாம் குடிக்கிறதில்ல..இந்த சாமிக்கு கேட்டேன்'

'எனக்கும் வேண்டாம்' என்றேன். 'நானும் உங்கள மாதிரி சாப்பிடறேன்'

'அப்டியா தம்பி? அப்ப டீ வேணாங்க' என்றபின் புன்னகையுடன் 'சந்தோசமா இருங்க சாமி..வாரேன்' என்றார்.

'என்ன சாமி, மொதப்போணி..சாமிக்கு குடுக்கலாம்னு நெனைச்சேன்..வேணாண்ணு சொல்றீங்க'

'அப்ப குடுங்க..' என்றார் அருளப்ப சாமி 'குடிக்கிறேன்'

அவர் கொடுத்த இன்னொரு டீயை வாங்கி எனக்குக் கொடுத்தார். டீயை ஊதி ஊதி வெகுநேரம் குடித்தார்.

'சூடா சாமி?'

'ஆமா'

'ஆத்திக்குடுக்கவா?'

அவர் ஆற்றிக்கொடுத்தபின்னரும் ஊதிக்கொண்டிருந்தார். நான் 'சாமி எளநீ பழம் மட்டும்தான் சாப்பிடுவார். சூடான ஒண்ணும் சாப்புடுறதில்லை' என்றேன்.

'அப்டீயா சாமி?'

'இல்லீங்க..டீ நல்லாருக்கு..வாரேன்'

கடைக்காரர் வெளியே வந்து கும்பிட்டார். அருளப்ப சாமி கூட நடக்கும்போது ஆச்சரியத்துடன் நினைத்துக்கொண்டேன். உலகில் இவருக்குக் கிடைக்காத ஏதாவது இருக்குமா என்று. அவரில் எதைத்தான் காண்கிறார்கள்?

பயணம் முழுக்க அருளப்பசாமி அவ்வப்போது பார்ப்பதைப்பற்றி மட்டும்தான் பேசினார். அவருக்கு எல்லாமே ஆச்சரியம்தான். பலூன் விற்பவனைக்கண்டுகூட நின்றுவிடுவார். ஒருவன் ஒரு ஆட்டுக்குட்டியை சைக்கிள்பின்னால் அமரச்செய்து சென்றபோது மகிழ்ச்சி தாளாமல் கைதட்டிச் சிரித்தார். வழியில் தென்பட்ட எல்லா பிள்ளைகளிடமும் சிரித்துப்பேசினார்.

நடுவே சற்றே தீவிரமாக என்னிடம் 'ஏன் தம்பி அப்ப நமக்கு நெத்திக்கண்ணே கெடையாதா? நெஜம்மாவா?' என்றார்

நான் ஒன்றும் சொல்லவில்லை

'அதெல்லாம் யோகத்திலே அமர்ந்தாத்தான் வரும், என்ன?'

'ஆமா'

'சரியான குரு கிடைக்கணும். வாசிய அடக்கணும்'

'எதையாவது எக்குதப்பா அடக்கீரப்போறீங்க..'

'இல்லல்ல..அதெல்லாம் சரியாத்தான் செய்யணும்..அதென்னது?'

ஒருவன் ஒரு பெரிய கண்ணாடியை பைக்கில் பின்னால் அமர்ந்து கொண்டு சென்றான்

அருளப்ப சாமி சாப்பிடுவதற்கு அரைமணிநேரம் முன்புதான் கேட்கவே ஆரம்பிப்பார். அதிகபட்சம் இரண்டுபேர். அதற்குள் தேங்காயும் வாழைப்பழமும் கிடைத்துவிடும். இரண்டுவேளைதான் உணவு. அதில் நேரம் காலமெல்லாம் கிடையாது. பசிக்கும்போது. பெரும்பாலும் காலை பத்துமணிக்குள் ஒருமுறை. மாலை ஆறு மணிக்குள் இன்னொருமுறை. ஒருநாளுக்கு ஒரு தேங்காய், ஏழெட்டு வாழைப்பழங்கள். அல்லது கொய்யாப்பழங்கள்.

அருளப்ப சாமி என்னிடம் சொன்னதை பலமுறை நேரில் கண்டேன். எல்லா உயிர்களும் அவரை அடையாளம் கண்டுகொண்டன. குரைக்கும் தெருநாய்கள் சட்டென்று பக்கவாட்டில் நின்று வாலை விர்ர் என நடுங்கச்செய்தபடி நெளிந்தன. நாய்களின் முகத்தில் சிரிப்பு வரமுடியும் என்று அப்போதுதான் கண்டேன். அவர் பின்னால் தங்கள் எல்லை வரை வந்தபின் அங்கே நின்று ஆதுரத்துடன் முனகிக்கொண்டன. சாலையோரம் கட்டப்பட்டிருந்த பசுக்கள் கயிற்றின் எல்லைவரை இழுத்து அவரை நோக்கிக் குரலெழுப்பின.

சாலையில் இருந்து பிரிந்துசென்ற ஒரு மண்பாதையில் புதிய சிமிண்ட் கோபுரத்துடன் நின்ற கோயிலில் காலையில் சென்று நின்றோம். நான் ஈரச்சட்டையுடன் நடுங்கிக்கொண்டிருந்தேன். உள்ளே அய்யர் சிலைக்கு அலங்காரம் செய்துகொண்டிருந்தார். என்ன சாமி என்று தெரியவில்லை. அருளப்ப சாமி முன்மண்டபத்தில் தூணில் சாய்ந்து காலை தொங்கபோட்டுக்கொண்டு அமர்ந்தார்.

அய்யர் உள்ளிருந்து சீறிக்கொண்டு வந்தார். 'டேய் எந்திரிடா..எந்திரிடா கபோதி..யாரக்கேட்டுடா உள்ள வந்தே?'

'சாமி, பிரசாதம் சாப்பிடலாம்னு வந்தேன்' என்றார் அருளப்ப சாமி.

'வெளியே போடா..பிச்சக்கார கபோதி, மண்டபத்திலே சட்டமா ஏறி ஒக்கார்ரியா? போடா'

'மன்னிச்சுக்கங்க சாமி' என்று அருளப்ப சாமி எழுந்து விலகி நின்றார் 'பிரசாதம் இல்லீங்களா?'

'டேய் போ..போ வெளியே'

'அவரு சாமியாரு' என்றேன்.

'எவண்டா சாமி? இப்டியே கெளம்பிடுறது என்ன? போடா'

'வாங்க சாமி' என நான் அருளப்பரை வெளியே அழைத்தேன்.

'கோவமா இருக்காரு' என்று அருளப்ப சாமி புன்னகை செய்தார். 'வேற எடம் போவம் என்ன?சாமி நாங்க போய்ட்டு வாரோம் சாமி'

சாலைக்கு வந்ததும் எனக்கு ஒரு எண்ணம் வந்தது 'சாமி ஒரு நிமிஷம்..' என்றபின் திரும்பி வந்தேன்.

அய்யர் என்னைக்கண்டதும் 'என்னடா?' என்றார், ஈரக்கையை வேட்டியில் துடைத்தபடி வெளியே வந்தார்.

'Do you know who he is? He is a saint..A great Yogi, and now he is going to put his spell on you..'

'புரியல்லை' என்றார், அதற்குள் முகம் வெளுத்து கைகால்கள் நடுங்க ஆரம்பித்தன.

'அவரு பெரிய ஞானி..பரமஹம்சர்..அதான் பத்திரிகையாளனா இருந்த நான் எல்லாத்தையும் விட்டுட்டு அவரு கூட போய்ட்டிருக்கேன். அவரோட சாபம் உன் குடும்பத்துமேலே விழுந்தாச்சு'

'அய்யோ'

'நாசமா போவப்போறே'

'என்ன பண்றது சாமி? தெரியாம..'

நான் திரும்பி ஓடிவந்து அருளப்ப சாமியுடன் சேர்ந்துகொண்டேன்.

'பிரசாதம் குடுத்தாரா ?'

'இல்லேன்னுட்டார்'

'பாவம்..இப்பதான் வந்திருப்பாரு போல'

கொஞ்சநேரம் எனக்குள் புன்னகை செய்துகொண்டிருந்தேன். அதன்பின் அடப்பாவமே என்று தோன்றியது. இன்னும் கொஞ்ச நேரத்தில் தாளமுடியாத வெட்கம். என்னைப்போன்ற ஒருவன் அருளப்பருடன் செல்வதே தவறு என்று நினைத்தேன். அவர் மீது என்னுடைய அழுக்கை பூசிக்கொண்டிருக்கிறேன். அவரிடம் எல்லாவற்றையும் சொல்லிவிடவேண்டும். ஆனால் சொல்லவும் துணிவு வரவில்லை. கொஞ்ச நேரம் கழித்து சொன்னாலும் சொல்லாவிட்டாலும் சமம்தான் என்று தோன்றியது.

மறுநாள் மதியம் வடலூர் சென்று சேர்ந்தோம். அதற்கு மறுநாள்தான் தைப்பூசம். அங்கே சென்றபின்னர்தான் தைப்பூசநாளில்தான் வள்ளலார் ஜோதியானார் என்று தெரியவந்தது. வடலூர் சிறிய ஊர். அன்று காலை முதலே

கூட்டம் வர ஆரம்பித்திருந்தது. பேருந்துகளை வெகுவாக தள்ளி நிறுத்தி ஆட்களை இறக்கிவிட்டுக்கொண்டு திரும்பிச்சென்றனர். வந்தவர்கள் பெரும்பாலும் குடும்பத்துடன் இருந்தனர். பைகளும் பெட்டிகளுமாக வந்து ஆங்காங்கே திறந்தவெளியிலேயே தங்கிக்கொண்டார்கள். எல்லாருமே வெளியூர்க்காரர்கள். சுற்றுப்புறக் கிராமங்களிலிருந்து அதிகம்பேர் வந்திருப்பதுபோலத் தோன்றவில்லை.

‘சாமி அன்னதானம் நடந்திட்டிருக்கு..போய்ச்சாப்பிடுங்க’ என்று யாரோ சிரித்த முகத்துடன் உபசரித்தார்கள். அக்கணமே எனக்கு பசி கிளம்பியது. சூடான சோற்றின் வாசனை மனதை நிறைத்தது. ஒரு நிமிடம்கூட சோறில்லாமல் இருக்கமுடியாது என்று தோன்றியது.

‘நான் போய் சாப்பிட்டுட்டு வந்திடறேன் சாமி’ என்றேன்.

‘சாப்பிடுங்க தம்பி’

அன்னதானம் வழக்கமாக அதற்கான கொட்டகையில் நிகழும். அன்று திறந்தவெளியில் இலைபோட்டு நூற்றுக்கணக்கானவர்கள் சாப்பிட்டுக்கொண்டிருந்தனர். நான் அமர்ந்ததும் இலைபோட்டு அலுமினிய டம்ப்ளரில் தண்ணீர் வைத்தார்கள். சன்ன அரிசிச்சோறு. பருப்புக்குழம்பு. பீன்ஸ் பொரியல். சோறு என் முன் விழுந்தபோது அப்படி ஒரு ஆசையை அடைந்தேன். அதன் மணம், அதன் நிறம்..ஓரிரு வாய் சாப்பிடுவது வரை வேறு நினைப்பே இல்லை. பின்புதான் நான் சோறு சாப்பிடாமலாகி ஒருவாரம்தான் ஆகியிருக்கிறது என்பதை உணர்ந்தேன்.

சாப்பிட்டுவிட்டு வந்தபோது அருளப்ப சாமியைக் காணவில்லை. எங்கிருக்கிறார் என்று சுற்றிலும் பார்த்தேன். அப்பகுதியில் அவர் இருப்பதுபோலத் தெரியவில்லை. அவர் என்னை விட்டுவிட்டுப்போய்விட்டார் என அறிந்தேன். அவரால் அப்படித்தான் இருக்கமுடியும். அவர் எவருக்காகவும் காத்திருக்கமுடியாது. எதை நம்பியும் வாழமுடியாது. நான் சென்றபோது அங்கே வீசிய காற்று அங்கேயே இருக்கும் என்று நினைப்பதுபோலத்தான்.

எதைநம்பி அந்தமாதிரி ஒரு வெகுளிமனிதரை நம்பி வந்தேன் என்று என்னையே கேட்டுக்கொண்டேன். அவர் காகங்களை வரவழைத்தது என்னை அசைத்துவிட்டது. ஆனால் அது ஒன்றும் பெரிய அமானுட விஷயமாக பிறகு தோன்றவில்லை. மிருகங்களுடனும் பறவைகளுடனும் மனிதர்களுக்கு இருக்கும் உறவுக்கு எவ்வளவோ புரியாத பக்கங்கள் உள்ளன. எங்கள் வீட்டில் வேலைபார்க்கும் சிண்டனின் அப்பா பக்கி மாடுகளுடன் நுட்பமாக உரையாடுவார் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். கொக்குகளை மந்திரம் சொல்லி அருகே வரவழைக்கும் மந்திரவாதிகளைப்பற்றி சொல்லி அறிந்திருக்கிறேன்.

கூட்டத்தில் முட்டிமுட்டி வழிகண்டு அலைந்தபடியே அருளப்ப சாமியைப்பற்றி மட்டும்தான் யோசித்தேன். அவர் ஒரு வெள்ளைமனிதர், அவ்வளவுதான். இயல்பிலேயே அவர் அப்படி. அல்லது சிறுவயதில் அவருக்கு ஏற்பட்ட மனப்பாதிப்பினால் அப்படி ஆகியிருக்கலாம். ஒரு நல்ல உளவியல் நிபுணர் அவருக்கு என்ன நரம்புச்சிக்கல் என்று சொல்லி குணப்படுத்தி சாதாரணமானவராக ஆக்கினால்கூட ஆச்சரியமில்லை. நான் அவரை மிகைப்படுத்தியாகவேண்டிய மனநிலையில் இருந்திருக்கிறேன்.

ஏன்? அதைத்தான் நான் யோசிக்கவேண்டும். எனக்கு நானே கண்டிப்பதுபோல, ஆணையிடுவதுபோல பேசிக்கொண்டேன். நான் யோசிக்கவேண்டியது அதைத்தான். இதுவரை நான் யோசித்ததெல்லாம் எண்ணங்களை அதன்பாட்டுக்கு விட்டுவிடுவது மட்டும்தான். எங்காவது தறிகெட்டு அலைந்து முட்டிநின்று பின்பு திரும்பி வருகிறேன். இனி அப்படி இல்லை. நான் சிந்தித்தாகவேண்டும்.

கால் ஓய்ந்தபின் ஓர் இடத்தில் அமர்ந்துகொண்டேன். இதுவரை என்ன செய்தேன்? எதற்காக இந்த விசித்திரமான வெகுளிமனிதருடன் வந்தேன்? அவருக்கு நான் ஒரு பொருட்டே இல்லை. அவர் வேடிக்கை பார்க்க விரும்பக்கூடியவர், அவ்வளவுதான். வேடிக்கைபார்க்கும் குழந்தைமனதை நரம்புச்சிக்கல் காரணமாக தாண்ட முடியாமலானவர். நான் அவரைத் தொடர்ந்து வந்ததற்கு ஒரே காரணம் சென்னையில் நான் வாழ்ந்த வாழ்க்கைமீது எனக்கிருந்த சலிப்பு.

ஆம், சலிப்பு. அதுதான். சென்னையில் நான் செய்ததெல்லாம் அந்தச் சலிப்பை வெல்வதற்காகச் செய்துகொண்ட தந்திரங்கள் மட்டும்தான். நகரத்தில் அலைந்தது, குடிசையில் தங்கப்போனது, தற்கொலைமுயற்சிகூட அதற்காகத்தான். இவரைப்பார்த்ததும் இவர் என் சலிப்பை வெல்ல உதவுவார் என்று என் மனம் கணக்குப்போட்டது. ஆகவேதான் கிளம்பினேன். அவர் வடலூருக்கு நடந்துதான் செல்லப்போகிறார் என்று தெரிந்ததும் பதற்றம் கலந்த பரபரப்பைத்தான் அடைந்தேன். இந்த ஏழுநாள் பயணத்திலும் நான் அந்த பயண அனுபவங்களை உற்சாகமாக நடித்துக்கொண்டிருந்தேன். நான் சாதாரணமாக நடக்கவில்லை, நடப்பதை உள்ளூர அவதானித்துக்கொண்டிருந்தேன்.

எழுந்து நின்றுவிட்டேன். அந்தக் கண்டுபிடிப்பு என் உடலையே பதறச்செய்தது. நான் எல்லாவற்றையும் நடித்துக்கொண்டிருக்கிறேன். வீட்டைவிட்டுக் கிளம்பியது முதல் ஒன்றைக்கூட நான் முழுமையாக ஈடுபட்டுச் செய்யவில்லை. எதிர்காலத்தில் நான் நினைவுகூரவேண்டிய ஒருவாழ்க்கையை இப்போது வாழ்ந்துகொண்டிருக்கிறேன் என்ற பிரக்ஞை எனக்குள் இருந்துகொண்டே இருக்கிறது. என்னைச்சுற்றி இயல்பாக வாழ்ந்துகொண்டிருந்த எவரும் அவர்களை வேவுபார்க்கும் ஒருவன் உடனிருப்பதை உணரவில்லை.

ஏமாற்றமும் எரிச்சலுமாக நடந்தேன். ‘நடிப்பு நடிப்பு நடிப்பு’ என்ற சொல்லோட்டமாக இருந்தது மனம். கையில் ஒரு பைசாகூட இல்லை. இதைக்கூட நான் வேண்டுமென்றேதான் செய்துகொள்கிறேனா? பணமில்லாமலிருக்கையில் வாழ்க்கை இன்னும் சிக்கலாக ஆகிறது. இன்னும் பெரிய சவால். ஆனால் உண்மையில் எனக்குத்தெரியும், நான் பட்டினிகிடக்கப்போவதில்லை என்று. அதிகபட்சம் இரண்டுமணிநேரத்தில் என்னால் சாப்பாட்டை

சம்பாதித்துவிடமுடியும் என்று. அதை உள்ளூர உறுதிசெய்துவிட்டபின்பு பட்டினியுடன் அடுத்தகணம் என்ன என்று தெரியாமல் அலையும் நாடோடியாக என்னை உருவகித்துக்கொண்டு அலைகிறேன். அயோக்கியன். இல்லை மடையன். இன்னொருவனை ஏமாற்றுவதுதான் அயோக்கியத்தனம். தன்னைத்தானே திறமையாக ஏமாற்றுவது முட்டாள்தனம் மட்டும்தான்.

மாலை அடங்கிக்கொண்டிருந்தது. ஒரு இடத்தில் அப்படியே வெறும்மண்ணில் படுத்துவிட்டேன். அழவேண்டும் போலிருந்தது. ஆனால் அடுத்து இன்னும் விசித்திரமான ஓர் எண்ணம் வந்தது. நல்லவேளை, அங்கே கூடியிருந்த எவருக்கும் நான் இந்தவாழ்க்கையை நடிக்கிறேன் என்று தெரியாது என்று. என்னை ஒரு சுதந்திரமான நாடோடி என்று அவர்கள் நினைப்பார்கள். துறவி என்று நினைப்பார்கள். மறுகணம் அந்த நினைப்பையே கவனித்து இன்னும் கூசினேன்.

அப்படியே தூங்கிவிட்டேன். என்னைச்சுற்றி ஒலித்துக்கொண்டிருந்த மனிதக்குரல்களை வாகனங்களின் இரைச்சலை, கனவுக்குள் கண்டுகொண்டிருந்தேன். கங்கைக்கரை இரைச்சல் அது. கங்கைமீது பெரிய தோணிகள் சங்கொலி எழுப்பின. மனிதர்கள் கூச்சலிட்டுக்கொண்டு அதில் ஏறினார்கள். கங்கை கொந்தளித்தது. படகுகள் பிரம்மாண்டமான அலைகளில் ஏறியிறங்கின. படகுகளில் இருந்தவர்கள் கூச்சலிட்டார்கள். ஒருவர் ஓடிவந்து என்னிடம் ஏதோ சொன்னார். நான் எழுந்துசென்று படகின் சுக்கானைப் பிடித்தேன். படகு சமப்பட்டது.

விழித்துக்கொண்டபோது இருட்டு பரவியிருந்தது. அப்பகுதியே ஒரே சந்தடியாக இருந்தது.சாதாரணமான கிராமத்திருவிழாக்கள் போல என்னென்னவோ விற்கப்பட்டன. என்னென்னவோ தின்னப்பட்டன. எதிரும்புதிருமான திசைகளில் மனிதக்கூட்டங்கள் உற்சாகமும் பரபரப்புமாக அலைந்தன. ஒலிபெருக்கிகளில் என்னென்னவோ சொல்லப்பட்டன. காற்று வீசியபோது தூசி எழுந்துபறந்தது.

என்னைச் சூழ்ந்துசென்ற கூட்டம் வழியாக அனிச்சையாக நானும் நடந்தேன். வடக்கத்திக் கோயில்களை நினைவுபடுத்திய ஒரு கட்டிடம்தான் சத்தியஞானசபை. வளைவுவளைவான வாசல்கள். மாடியாக எழுந்த கோபுரம். உள்ளே செல்லாமல் வெளியே நின்றுகொண்டேன். உள்ளே சென்று இந்த மக்கள் என்ன சத்தியஞானத்தை அறியப்போகிறார்கள்? அங்கே ஒருரூபாய்க்கு கைப்பிடி விபூதியை விற்று அதுதான் சத்தியஞானம் என்று சொன்னால் அதை வாங்கப்போகிறார்கள். சட்டென்று சிரிப்பும் வந்தது, அங்கே எங்கோ நான் எழுதிய சைவசித்தாந்த மெய்ஞானநூல்கள் விற்கப்பட்டுக்கொண்டிருக்கும்.

வள்ளலார் கோயிலுக்குச் சென்றபோதும் அருகே செல்லவேண்டுமெனத் தோன்றவில்லை. சாதாரணமான ஒரு கிராமத்துச் சிவன்கோயில்போலத் தோன்றியது. ஆனால் கோயிலாக இல்லாமல் கட்டிடமாகவும் இருந்தது. கருவறைக்கு முன்னால் திரையிடப்பட்டிருந்தது. அங்கே ஏதோ செய்துகொண்டிருந்தார்கள். இருபக்கமும் நூற்றுக்கணக்கானவர்கள் வரிசைகட்டி காத்து நின்றார்கள். சிலர் இரு கைகளையும் இறைஞ்சுவதுபோல விரித்து வேண்டிக்கொண்டார்கள். சிலர் முணுமுணுவென ஜெபித்தார்கள்.

திரைவிலகியது. உள்ளே கரியமேனி கொண்ட சிவாச்சாரியார் ஒருவர் இருந்தார். உள்ளே ஒரு விளக்கு தெரிந்தது. யாரோ 'அருட்பெரும் சோதி! தனிப்பெருங்கருணை!' என்று உச்சத்தில் கூவினார்கள். கூட்டம் சேர்ந்து அதைச்சொல்ல ஒருபெரிய அலைபோல அந்தக் கூட்டு முழக்கம் என்னைச்சூழ்ந்தது. நான் அந்தச்சுடரைப்பார்க்கையில் அது சம்பந்தமில்லாமல் எரிவது போலிருந்தது. ஆனால் என் மனம் சிந்தனையில்லாமல் கல்போல கிடந்தது.

வள்ளலார் ஏற்றிவைத்த ஜோதி. அதை இன்றுவரை அணையாவிளக்காக வைத்திருக்கிறார்கள்.அதைத்தான் வழிபடவேண்டும் என்று அவர் சொல்லியிருக்கிறார். பிரபஞ்சம் முழுக்க நிரம்பியிருக்கும் ஆற்றல் என்பது ஒரு பெரும் சோதியாக அவருக்குத் தெரிந்தது. மண்ணிலும் விண்ணிலுமுள்ள எல்லா சோதிகளும் அதன் வடிவமே என்று உணர்ந்தார். அதன் அடையாளமாக ஒரு தீபத்தை ஏற்றிவைத்து அதை வழிபடும்படி அறிவுறுத்தினார். அவரே ஏற்றிவைத்த தகரவிளக்கு அங்கே இருக்கிறது. ஆனால் அதுதானா, இல்லை இன்னும் விலைமதிப்புள்ள அலங்கார விளக்காக மாற்றிவிட்டார்களா? கொஞ்சநாளில் அதை பொன்னாலான விளக்காக ஆக்குவார்கள். அதன்பின் அந்தச் சுடரையே ஒரு கற்சிலையாக ஆக்கினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

என் மனதின் சலிப்புதான் சொற்களாக மாறிக்கொண்டிருக்கிறது என்றுபட்டது. அங்கே ஏதோ வழிபாடுகள் ஆரம்பித்தன. நான் கூட்டத்தை விலக்கி வெளியே சென்றேன். வள்ளலார் கடைசியாக உள்ளே சென்று மறைந்த வாசல் நிரந்தரமாகப் பூட்டப்பட்டிருக்கிறது. அருகே உள்ள சன்னலை தைப்பூசத்தன்று மட்டும் திறப்பார்களாம். அதற்குத்தான் அத்தனை கூட்டம். அதன்வழியாக எதைப்பார்ப்பார்கள். வள்ளலார் அங்கே சென்று மறைந்தார் என்பார்கள். வள்ளலாரின் இல்லாமையை அங்கே பார்ப்பார்கள். அது அவ்வளவு புனிதமானதா என்ன?

எல்லாவற்றையும் விட பெரும் கும்பல் சென்றுகொண்டிருந்த திசையில் சென்றேன். அது சமைலறை. அருகே பெரிய பெட்டிகள் வைக்கப்பட்டிருந்தன. வந்திருந்தவர்கள் காணிக்கையாகக் கொண்டுவந்திருந்த அரிசியையும் காய்கறிகளையும் அவற்றுக்கான பெட்டிகளில் போட்டுக்கொண்டிருந்தார்கள். நான் அங்கே நின்றபடியே பார்த்தேன். அப்பால் பெரிய தகரப்பாத்திரங்கள் கோட்டையடுப்பு மீது அமர்ந்து கொதித்துக்கொண்டிருந்தன. கீழே செந்நெருப்பு கொப்பளித்துக் கொண்டிருந்தது. விறகுக்குவியல்கள். சட்டைபோடாத சமையற்காரர்கள். விதவிதமான பாத்திரங்கள்.

'இன்னிக்குதான் இப்டி வெளியே சமையல்..' என்றார் ஒருவர்.

அதைப்பார்க்க என்னைப்போலவே ஒரு கூட்டம் நின்றுகொண்டிருந்ததை உணர்ந்தேன். இருளுக்குள் நெருப்பைப்பார்ப்பது ஈர்ப்பு மிக்கதாக இருந்தது. கண்களை திருப்ப முடியவில்லை.

‘இதுவும் அங்க உள்ள இருக்கிற தீயக்கொண்டாந்து கொளுத்தறதுதான்…’ என்றார் இன்னொருவர்.

‘எந்தத் தீ?’ என்றேன்.

‘வள்ளலாருசாமி நூறுவருசம் முன்னாடி அவரு கையால கொளுத்தின அடுப்பு தம்பி.அன்னியிலே இருந்து இன்னிக்கு வரை அணையாம அந்த அடுப்ப வச்சிருக்காங்க.அந்தத் தீதான்’

சட்டென்று திரும்பிப்பார்த்தபோது அத்தனை தழல்களும் சேர்ந்து நடனமாடுவதுபோலத் தோன்றியது. சுடர்களின் அசைவில் தாள ஒருமை இருப்பதுபோல.

‘எங்கப்பாரு சொல்வாரு, வள்ளலாரு இங்க இருந்தப்ப இந்த எடம் இப்டி இல்ல. சரியான முள்ளுக்காடு.அன்னிக்கெல்லாம் இங்க பெருசா வெள்ளாமை கடையாது. பம்புசெட்டுல்லாம் இல்லல்ல? கமலையேத்தம்தான். கெணத்தில தண்ணி இருந்தா உண்டு, இல்லேன்னா இல்ல. வள்ளலாரு இங்க குடிசபோட்டு தனியா இருந்தாரு. ஊர்ல ஒரு வீட்ல இருந்து வாரத்துக்கு ஒருவாட்டி அஞ்சுகைப்பிடி அரிசியும் ஒரு கருணைக்கெழங்கும் கொண்டுவந்து குடுப்பாங்க. அதைத்தான் சாப்பிட்டு இருந்திருக்காரு’

‘கருணைக்கெழங்கா?’

‘அதான் யோகிகள் சாப்பிடுவாங்க. யோகம் பண்ணினா வர்ர மூலச்சூடுக்கு கருணைக்கெழங்குதான் சாப்புடணும்.அதான் அதை கருணைக்கெழங்குன்னு சொல்றங்க’ அந்தவரி என்னுடைய புத்தகத்திலும் எழுதப்பட்டிருந்தது என நினைத்துக்கொண்டேன்.

‘அப்பதான் பெர்ரிய பஞ்சம் வந்திச்சு. பட்டினி தாங்காம சோத்துக்கத்தாழையயும் கொட்டிக்கிழங்கையும் சாப்பிட்டாங்கன்னு எங்கப்பாரு சொல்வார். நெறையசனம் செத்துப்போச்சு. நெறையபேரு ஊரவிட்டே போய்ட்டாங்க. கிராமம்லாம் ஆளில்லாம காலியாயிடுச்சு.. தாதுவருசத்துப் பஞ்சம்னு சொல்லுவாங்க’

‘எடைக்காடர் காலத்திலயும் ஒரு பஞ்சம் வந்திச்சே’ என்றார் ஒரு கிழவர்.

‘அது மொத பஞ்சம்.எடைக்காடர் கதை தெரியும்ல? ’ பேசுபவர் ஒரு நாட்டுவைத்தியர் என அதற்குள் ஊகித்துவிட்டிருந்தேன்.

‘எடைக்காடருக்கு தெரிஞ்சுபோச்சு பஞ்சம் வரப்போகுதுன்னு. அவருக்கும் நம்ம வள்ளலாருசாமி மாதிரி ஊருக்காரங்கதான் பிடியரிசி குடுத்திட்டிருந்தாங்க. அவரு அவங்ககிட்ட கேட்டு ஒரே ஒரு ஆட்டுக்குட்டி வாங்கிக்கிட்டாரு. அதை நாலுநாள் பட்டினிபோட்டுட்டு தழையோட நாலு எருக்கம் எலையும் சேத்துக் குடுத்திருக்காரு. அது சாப்பிட்டுட்டு தலசுத்தி விளுந்துட்டுது.’

‘வெஷமுல்ல?’’

‘‘ஆனா அவரு விடாம குடுத்திருக்காரு.மறுபடியும் குடுத்தாரு. கொஞ்சம் கொஞ்சமா பழக்கினபிறவு எருக்கம் எலைய மட்டும் குடுத்து அத வளக்க ஆரம்பிச்சாரு. பிடியரிசீல பாதிய எடுத்து செம்மண்ணோட சேத்துக் கொழைச்சு குடிசைக்கு சுவரு கட்டினாரு.பஞ்சம் வந்தப்ப எல்லாரும் ஊரைவிட்டு போய்ட்டாங்க. எடைக்காடர் அங்கியே இருந்தார். காட்டில வேற எந்தத் தழையும் இல்ல. எல்லாமே மழையில்லாம கருகிப்போச்சு. எருக்கு வாடாதுல்ல. இவரோட ஆடு மட்டும் எருக்கெலையத் தின்னுட்டு கொளுப்பா இருந்திச்சு. ஆட்டுப்பாலைக் கறந்துக்குவார். சுவரில கொஞ்சத்த உடைச்சு அந்த அரிசிய எடுத்து பொடிச்சு ஆட்டுப்பாலிலே கலந்து குடிப்பார். பன்னெண்டு வருசம் பஞ்சம் முடிஞ்சு ஊருக்கு ஆளு திரும்ப வந்தப்ப பாத்தா எடைக்காடர் நல்லா ஆரோக்கியமா குடிசையிலே இருந்திட்டிருக்காரு’

‘சுவரிலே எதுக்கு வைக்கணும்?’

‘இல்லேன்னா எறும்பு தேடிவந்திராது? டேய், காட்டில ஒண்ணுமில்லேன்னா எறும்பு எங்க போவும்? கூட்டம் கூட்டமா தேடி அலையும்ல?’

‘ஆமா’

நான் ‘வள்ளலாரு பஞ்சத்திலதான் இந்த அடுப்ப ஆரம்பிச்சாரா?’ என்றேன்.

‘ஆமா தம்பி.பஞ்சம் தாளாம செத்துடலாம்னு ஒரு அம்மா நாலு புள்ளைங்கள தூக்கீட்டு காட்டுக்கு வந்திருக்கு.அங்கதான் சாமி குடிலுகட்டி இருந்திருக்காரு. சாமி எம்புள்ளைங்கள காப்பாத்துங்கன்னு அந்தம்மா காலில விளுந்திருக்கு. சாமி அவங்களுக்காக அவரு கையில இருந்த அரிசியையும் கருணைக்கெழங்கையும் போட்டு கஞ்சி காய்ச்சுறதுக்காக அடுப்பு மூட்டியிருக்கார். அப்ப மூட்டின அடுப்புதான்’

‘வேற மாதிரி கேள்விப்பட்டேனே’ என்றேன்.

‘இது எங்கப்பாரு சொன்ன கதை.அவங்கப்பாரு சாமிய நேரில பாத்து வைத்தியம்லாம் கத்துக்கிட்டிருக்காரு’

'ஓ'

'அன்னிக்கு ஆரம்பிச்ச அன்னதானம். நூறுவருசமா அடுப்பு அணைஞ்சதேயில்ல.. அப்பல்லாம் தெனம் ஐயாயிரம் பத்தாயிரம்னு வந்து சாப்பிட்டிருக்காங்க.. ஆனா அந்தக்காலத்திலே இந்தமாதிரி அரிசிச்சோறெல்லாம் இல்ல. கம்பு கேழ்வரகு கெழங்கு கீரை எல்லாத்தையும் ஒண்ணாசேத்து கஞ்சி வைப்பாங்க..அதான்'

'அதெல்லாமே காணிக்கையா?'

'காணிக்கை விளாட்டியும் சாமி குடுப்பாரு..அவரு அகண்ட சச்சிதானந்தத்த நேரில பாத்தவருல்ல? இது என்ன சும்மா எரியற அடுப்பா? யோகசக்தியால எரியற அடுப்புல்ல?'

சட்டென்று எனக்கு உடம்பு சிலிர்த்தது. இது என்ன அசட்டுத்தனமான சிலிர்ப்பு என நானே நினைத்துக்கொண்டாலும் அந்த உணர்வெழுச்சி என்னை மூடிக்கொண்டது. மேற்கொண்டு அந்தக்குரல்களைக் கேட்கமுடியாது என்று பட்டது. மெல்ல முன்னகர்ந்து தரையிலேயே அமர்ந்துகொண்டேன். எரியும் தீச்சுவாலைகளை விழிவிரிய பார்த்துக்கொண்டு அமர்ந்திருந்தேன்.

'எங்கள் வேள்விக் கூட மீதில்
ஏறுதே தீ! தீ! '

என்ற வரி நினைவுக்கு வந்தது. எங்கே பெரிய நெருப்பைக் கண்டாலும் முன்னர் எப்போதோ மனப்பாடம் செய்த பாரதிபாடல்களில் இருந்து அந்த வரி நினைவுக்கு வருவதுண்டு. ஆனால் அப்போது அந்த உணர்வுக்கொந்தளிப்பின் வடிவமாக இருந்தது. ஆவேசமாக மனதில் அதைச் சொல்லிக்கொண்டே இருந்தேன். ஒருகட்டத்தில் அந்த ஒருவரியை மட்டுமே சொல்வதை உணர்ந்து அடுத்த வரியை நினைவுகூர்ந்தேன். நினைவுக்கு வரவில்லை.

பெருமூச்சுடன் எழுந்து நடந்தேன். கூட்டம் இன்னும் பெரிதாகிவிட்டிருந்தது. வாயுவிளக்குகள் சீறி எரியும் பொரிகடலை விற்பனைச்சாலைகள். மண்ணெண்ணைத் திரி புகை கக்கி எரியும் பேரீச்சம்பழ வியாபாரிகள். வளையல், பலூன், மரப்பொம்மை வியாபாரங்கள்..சட்டென்று அருளப்ப சாமியைக் கண்டேன். ஒரு மரப்பாச்சிக் கடை முன் நின்றுகொண்டிருந்தார்.

முதல்கணம் பரபரப்புடன் கையைத் தூக்கிவிட்டேன். அதன்பின் கையை தாழ்த்தி பார்த்துக்கொண்டே நின்றேன். அவர் சிரித்துக்கொண்டே ஒவ்வொரு பொருளாக எடுத்து கூர்ந்து பார்த்து திரும்ப வைத்தார்.

நான் திரும்ப நடந்தேன். அன்றிரவே அங்கிருந்து கிளம்பினேன். நாலைந்துநாளில் நாகர்கோயிலுக்கு வந்துவிட்டேன்.

---

## புறப்பாடு II – 17, பின்நின்றவர்

மதுரையை ரயில் தாண்டியபிறகுதான் நான் விழித்துக்கொண்டேன். அதுவரை எந்த சுயபோதமும் இல்லாமல் தூங்கியிருக்கிறேன் என்பது அப்போதுதான் தெரிந்தது. எச்சில் என் தோளிலும் மடியிலுமாக வழிந்திருந்தது. சன்னலோர இருக்கை என்பதனால் நன்றாகவே சாய்ந்துகொள்ள முடிந்தது. கால்களை நீட்டி சோம்பல் முறித்தேன். எதிரே இருந்த தெற்றுப்பல்காரர் 'நல்ல தூக்கம் என்ன தம்பி?' என்றார்.

'ஆமா..' என்றேன். 'பாத்துக்கங்க' என்று சொல்லிவிட்டு சென்று முகம் கழுவி கழிப்பறை சென்றுவந்தேன்.

'இப்ப இனிமே டீக்காரன் எவனும் வரமாட்டான். சிலசமயம் கோயில்பட்டில ஏறுவான்'

'கோயில்பட்டியா? மதுர தாண்டியாச்சா?'

'எப்பவோ தாண்டியாச்சே..விருதுநகர் வந்திட்டிருக்கு தம்பி..நீங்க மதுரையில எறங்கணுமா?'

'இல்ல..திருநவேலி'

'திண்ணவெலியிலே எங்க?'

'நாகர்கோயில் போகணுங்க..'

'அப்ப என்ன? பேசாம படுத்து இன்னொருவாட்டி நல்லா தூக்கத்தப்போடுங்க'

'பரவால்ல'

'தம்பிக்கு நாகருகோயிலிலே எங்க?'

'அந்தப்பக்கம், கேரளா சைடு'

‘நெனைச்சேன்…சோலியா போனீங்களோ?’

‘ஆமா’

‘என்ன தொளில் செய்றீங்க?’ என்றார். ‘எதுக்குக் கேக்கிறேன்னா கையில பை பெட்டி ஒண்ணியும் காணுமே?’

அவரைப்பற்றி நான் உடனே புரிந்துகொண்டேன். தாழ்வுணர்ச்சி கொண்டவர். அவரது தோற்றம் காரணமாக இருக்கலாம். குள்ளமான வெளிறிய உருவம். துவைத்துச் சிவந்த வேட்டி சட்டை, மஞ்சள்பை. வாழ்க்கையில் எதையுமே அடையாதவர். அதனால் வந்த தாழ்வுணர்ச்சியாக இருக்கலாம். அல்லது தாழ்வுணர்ச்சியாலேயே எதையும் அடையாதவராக இருக்கலாம். தன் வாழ்க்கையை தன்னிடமிருந்தே மறைக்க மிதமிஞ்சி பிறரது வாழ்க்கையில் ஈடுபடுகிறார். எல்லாவற்றையும் கேட்டுத்தெரிந்துகொள்கிறார். நினைவில் அவற்றைப்பெருக்கி பிறரிடம் பேசுகிறார். வம்புகளைச் சொல்பவர் என்பதனாலேயே அவருக்கு பிறர் செவிகொடுப்பதை ஒருவகை முக்கியத்துவமாக கருதிக்கொள்கிறார். அவரது கண்களின் ஒளி வம்புக்காரர்களுக்கே உரியது. ஆர்வமும் மனவிலக்கமும் தந்திரமும் அசட்டுத்தனமும் சரிசமமாக கலந்த முகபாவனைகள்.

நான் ‘தொளிலெல்லாம் இல்லீங்க’ என்றேன்.

‘அப்பால?’

‘படிச்சிட்டிருக்கேன்’

ஓ..என்னா படிக்கிறீங்க?’

‘பிகாம்’

‘பெரிய படிப்புல்லா? அப்பாம்மா என்ன பண்றாங்க?’

என் மனதுக்குள் ஒரு புன்னகை மலர்ந்தது. ‘அப்பா எங்கூட இப்ப இல்லீங்க…’

‘ஓகோ’ என்றார் கவனமான கண்களுடன் சாதாரணமான குரலில். ‘இப்பல்லாம் வூட்டுக்குப்பெரியவங்க பலபேரு அப்டித்தான்…கண்ட மாதிரி தொடுப்பு வச்சுக்கறது…’

‘ரெண்டு தொடுப்புங்க…’

‘ரெண்டா?’

‘ஆமா…செவப்பி கருப்பீன்னு ரெண்டுபேரு’

‘உங்கம்மா போட்ட பேரு போல இருக்கு’

‘ஆமாங்க.. அப்பா எந்நேரமும் அவங்ககூடத்தான் இருக்கிறது. வீட்டுக்கு சாப்பிடுறதுக்கு மட்டும்தான் வருவார். அவங்கள கொஞ்சுறது, அவங்ககிட்ட பேசிட்டே இருக்கிறது. காலம்பற குளிப்பாட்டிக்கூட விடுறாருன்னா பாத்துக்கிடுங்க’

‘அய்யய…என்ன தம்பி இது?’

‘என்னங்க பண்றது? அவருக்கு அதெல்லாம் புடிச்சிருக்கு…’

அவர் என்னை கூர்ந்துபார்க்க ஆரம்பித்தார்.

‘ஆனா அப்பாவுக்கு வேலை இருக்கறதனால வீடு ஒருமாதிரி போவுதுன்னு வைங்க.. ’

‘அம்மா இருக்காங்கல்ல?’

‘இருக்காங்க…சின்னவயசிலே அம்மாவுக்கு யாரோ சூனியம் வச்சுட்டாங்க’

‘என்ன தம்பி சொல்லுறீங்க?’

‘ஆமாங்க…அப்ப அம்மாவுக்கு பதினெட்டு வயசு…நல்ல அழகா இருப்பாங்க. அப்ப அவுங்க வீட்டிலே ஒருத்தரு வந்து தலைமறைவா தங்கியிருக்காரு. பெரீய மலையாள மாந்திரீகர்’

‘ஆமாமா, அவனுங்கள்லாம் பெரிய மாயாஜாலக்காரனுக…சொள்ளமாடன் கதையிலே சொல்லியிருக்கே’

‘இவுரு நம்பூதிரி…எளங்குளத்து சங்கரன் நம்பூதிரீண்ணு பேரு…கொஞ்சம் வயசானவரு…அவருக்கு ஏகப்பட்ட சிஷ்யனுங்க கேரளத்திலே உண்டு. அம்மாவோட ரெண்டாவது அண்ணாக்குகூட மந்திரத்திலே ரொம்ப பிரியம்…அதான் பெரியவர

கூட்டிட்டு வந்து தங்கவச்சிருக்காரு. அப்ப கேரளா சர்க்காரு பெரியவருக்கு தலைக்கு வெலைவச்சிருந்த காலம்'

'எதுக்கு?'

'ஆள அடிக்கிற மந்திரம் செஞ்சா விடுவாங்களா? ஒரு இது இருக்குல்ல?'

'ஆமா..பின்ன மயித்துகதுக்கா சர்க்காருன்னு வச்சிருக்கான்..அதெல்லாம் சர்க்காரு விடாது பாத்துக்கிடுங்க..'

'ஆமாங்க..அப்ப எங்கம்மா அவர பாத்திருக்கு. எங்கம்மாவுக்கு என்னமோ மந்திரம்போட்டுட்டு போய்ட்டாரு..இப்ப முப்பது வருசமா அந்த கட்டுக்குள்ளதான் கெடக்கு'

'என்ன பண்ணுது?'

'ஒண்ணும் உபத்திரவம் கெடையாது..எப்ப பாத்தாலும் என்னமாம் தாள எடுத்து வச்சு படிச்சினே இருக்கிறது'

'ஓகோ'

'ராப்பகலா படிப்புதான் போங்க..ஊடு முழுக்க இருக்கப்பட்ட தாளையெல்லாம் சேத்துவச்சு அது கெடக்கு மலைமாதிரி'

'இது அந்தமாதிரித்தான் தம்பி..எங்க வடக்கூரு சித்தப்பாகூட அப்டித்தான். அவருபாட்டுக்கு ஏதாவது கம்பு கட்டைன்னு எடுத்து வச்சு செதுக்கீட்டே இருப்பாரு..பத்துநாப்பது வருசமா இதான் சோலி'

'எளவு சாவட்டும்னு விடலாம்னாக்க நமக்கு தம்பி ஒருத்தன் கெடக்கான். அவனுக்கும் அந்த சீக்குல்லா?

'நீங்க ரெண்டுபேரா?'

'ஆமா..இவனுக்கும் அம்மைட்ட இருந்து தொத்தியிருக்கு..இவனும் ராப்பகலா ஒக்காந்து படிச்சினே இருக்கிறது..'

'தம்பிக்கு நாவருகோயிலுல்லா?'

'ஆமா'

'ஆனா பேச்சு ஒரு மாதிரி இருக்கு..அதான்'

'அது ஊருரா கொஞ்சநாளு சுத்தினேன்லா, அதாக்கும்'

'ஊருசுத்தினா சித்தப்பன மாமான்னு கூப்பிட்ர முடியுமா? நானும் பலதண்ணி கண்டவந்தான்..ஆனா நம்ம பேச்ச விடுகதில்ல..இது நம்ம அப்பனுக்க குண்டித்தடம் மாதிரில்லா?'

'பின்ன..'

'தம்பி என்ன செய்யுதான்?'

'இப்பம் வீட்டிலதான் இருக்கான்..ஒருமாதிரி படிச்சிட்டிருந்தான்.. எஸெல்ஸியிலே நல்ல மார்க்கு உண்டு.. காலேஜுக்குப் போனான். அங்க படிச்சிட்டிருப்பதான் ரொம்ப களண்டுபோச்சு'

'பெறவு?'

'சொன்னா கேக்கிறதில்ல. வீட்டுக்கு வாறதில்ல..எந்நேரமும் என்னெளவையோ ஒக்காந்து படிக்கிறது..எங்கியாம் போயி ஒக்காந்து மரம் மட்டைன்னு பாத்துக்கிட்டிருக்கது'

'மத்தது உண்டோ?' கையை கொக்கி மாதிரி காட்டி 'குட்டிகள்?'

'அதெல்லாம் ஒண்ணில்ல..அதுக்கெல்லாம் இவனுக்கெங்க ஊற்றமிருக்கு..? கேனப்பய..ஒருநாள் அப்பா என்னமோ கேட்டாருண்ணு சொல்லி நேரா போயி அவன் கூட்டுக்காரங்ககூட தங்கியிருக்கான்..'

'இருப்பானுகளே..சேக்காளிங்க இருப்பானுகளே..தம்பி நல்லா கேட்டுக்கிடுங்க சேக்காளிதோசம் மூதேவிதோசத்தைவிட கெடுதலு'

'ஆமா..அங்க என்னமோ அடிதடி ஆச்சுண்ணு சொல்லி கெளம்பி வந்துட்டான்'

'அடிதடியெல்லாம் உண்டா? நல்லாருக்கே'

'அடிதடிக்கு இவனுக்கெங்க கோப்பு? சும்மா சகவாசம்தான்..வந்தவன் கொஞ்சநாளு ஒருமாதிரி மப்பா இருந்தான். ஒரு

மூணுமாசம். அப்பதான் இவனுக்க கூட்டுகாரன் ஒருத்தன் பனையிலே இருந்து விளுந்து செத்தான்’

‘பனையிலே என்னத்துக்கு ஏறினான்? தொளிலோ?’

‘தொளில் ஒண்ணும் இல்ல அண்ணாச்சி- எல்லாம் கொளுப்புதான். ராத்திரி போயி ஆத்தங்கரையிலே புதைச்சுபோட்டிருக்கிற ஊறல எடுத்து குடிக்கிறது. மப்புல என்னாம் செய்யவேண்டியது. ஆத்தங்கரையிலே ஒத்தக்கரும்பனை நின்னிருக்கு. இடிவிளுந்து மொட்டைகருகின பனை- இந்தா நிக்கே இந்தமாதிரி’

‘அசிங்கம்-மொட்டப்பனமரத்திலே மூதேவி உண்டுண்ணுல்லா சொல்லு-’

‘அதிலே உச்சிவரைக்கும் ஏறிக்காட்டுறேன்னு அந்தப்பெய வாது வச்சிருக்கான். கேறினா அஞ்சுரூவான்னு இவன் சொல்லியிருக்கான். நல்ல இருட்டு பாத்துக்கிடுங்க. மப்பும் உண்டு. அவன் சரசரன்னு மேலே ஏறினானாம். இருட்டுல மேலே ஏறிப்போய்ட்டே இருந்தவன் நுனி வரைக்கும் போய்ட்டான். மேக்கொண்டு ஏறுறதுக்கு பனை இல்லைங்கிறது தெரியாம அப்டியே மேலே ஏறியிருக்கான்-’

‘அய்ய’

‘இருட்டுல புடிச்சு ஏறியிருக்கான் அண்ணாச்சி’

‘பிறவு?’

‘இவன் என்ன சொல்லுதான்னா அவன் இருட்டபுடிச்சு மேலே ஏறி அப்டியே காணாமப்போய்ட்டான்னு’

‘அப்பம் வட்டுல்லா?’

‘ஆமா-பின்ன வட்டில்லாம? இவன் ஒரு முப்பதுநாளு வீட்டுக்குள்ள ரூமை அடைச்சுக்கிட்டு இருந்தான். கேட்டா இருட்டுன்னு சொல்லுதான்’

‘என்ன இருட்டு?’

‘அண்ணாச்சி அவன் வாய்க்குள்ள இருட்டு இருக்காம்-’

‘தம்பி எல்லா வாய்க்குள்ளயும் இருட்டுதானே? இதென்ன கூத்தாட்டு இருக்கு?’

‘சொன்னா கேக்காண்டாமா அண்ணாச்சி? வாய்க்குள்ள டார்ச்ச அடிச்சு காட்டி பாருலேன்னா நான் வாய மூடினபெறவு இருட்டு இருக்கேங்கிறான். வயத்துக்குள்ளயும் காதுக்குள்ளயும் இருட்டா இருக்காம்-’’

‘செரிதான், எளகி மறிஞ்சாச்சு’

‘ஆமா-பின்ன நவரக்கிழி, நாசியம்னு எல்லா சிகிச்சையும் உண்டு. ஒண்ணும் கேக்கல்ல-ஏன் தெரியுமா?’

‘ஏன்?’

‘பிரச்சினை வட்டில்ல-வேற’

‘என்னது?’ என்றார் முகம் வெளிறிவிட்டது.

‘அதான் அண்ணாச்சி, உங்க வயசுக்கு நீங்க எவ்ளவோ கண்டிருப்பீக. நான் சொல்லி தெரியவேண்டியதில்ல. அறியாப்பயக்க கிட்ட சொன்னா சும்மா ரீலு சுத்துகான்னுதான் சொல்லுவானுக’

‘நாம பலதும் கண்டவனாக்கும் தம்பி-இப்ப கேட்டீங்கன்னா–’

‘இவனுக்கு எழுத்து வாதையாக்கும். ராப்பகலா எழுதுகான்- எப்பம் பாத்தாலும் எளுத்துதான். அப்டி என்னதான் எளுதுகான்னு பாத்தாக்க ஒண்ணுமில்ல. காலம்பற போயி ரூம்புக்குள்ள பாத்தாம் ஒரு எளுத்துகூட இல்ல. எல்லாம் வெள்ளத்தாளாக்கும்’

‘பேனா வச்சா எளுதுகான்?’

‘ஆமாண்ணாச்சி-ஒருநாளுக்கு அரக்குப்பி மை ஆயிடும்லா? பிறவு நான் நல்லா பாக்க ஆரம்பிச்சேன். ராத்திரி எளுதுறப்ப ஆரிட்டயோ பேசுறமாதிரி சத்தம். சட்டுன்னு கதவத்தெறந்து உள்ள போனா இவந்தான் பெருச்சாளி மாதிரி முளிக்கான்-ஆருமில்ல. சரீடேன்னு ஒருநாள் கதவு ஓட்டை வளியாட்டு பாத்தேன்’

அவர் என் கண்களை பீதியுடன் பார்த்தார்.

'உள்ள ரெண்டாளு அண்ணாச்சி'

'ய்யோ' என்று சற்று எழுந்தே விட்டார்.

'ஆமண்ணாச்சி-இவன் இருந்து எளுதுகான். பொறத்தால ஒரு ஆளு நடந்துக்கிட்டே இருக்கான். சாதா நடை இல்லண்ணாச்சி. இந்த கெட்டிப்போட்ட நரி சுத்திவருமே அந்த நடை. நெலைகொள்ளாம ஒரு நடை..'

'ஆராக்கும்? 'அவர் மூச்சு போதாமல் மெல்ல கேட்டார்.

'தெரியல்ல-அறிஞ்ச ஆளு இல்ல-வேற..'

'எப்டி வந்தாரு?'

'அதாக்கும் நானும் பாத்தது. பாத்துக்கிட்டே இருந்தா அவரு திரும்பினப்ப கண்ண பாத்துட்டேன். அண்ணாச்சி இந்த எருமைக்கெல்லாம் ராத்திரி இருட்டுலே கண்ணு மின்னும்லா?'

'ஆமா'

'அதேமாதிரி நீலமா மின்னிச்சு அண்ணாச்சி அந்தாளு கண்ணு'

அவர் அமைதியாக பார்த்தார்.

'அந்தால ஓடி நேரா ஆலங்கோடு ஆசானுக்க கிட்டபோயி அப்டியே காலில விளுந்துட்டேன். ஆசானே என்னையும் என் தம்பியையும் நீங்கதான் ரெட்சிக்கணும்னு சொல்லி நெலைவிளிச்சு அழுதேன்'

அவர் தலையசைத்தார்.

'அவருதான் சொன்னார், அது யாருண்ணு'

'யாரு?'

'அத வெளியச் சொல்லப்பிடாது அண்ணாச்சி'

'ஓ'

'அவன் எளுதி வச்ச ஒரு தாளை எடுத்துக்கோ. நடுராத்திரி பன்னிரண்டுமணிக்கு கெளம்பி நேராட்டு நடந்து போயிரு. வந்தவரு உன்பின்னால வந்திருவாருண்ணு சொன்னாரு'.

'பிறவு?'

'நான் அதேமாதிரி அவன் எளுதின தாளு ஒண்ண எடுத்து வச்சுகிட்டேன். அதில ஒண்ணுமில்ல அண்ணாச்சி வெள்ளத்தாளாக்கும். ராத்திரி பன்னிரண்டு மணிக்கு சஞ்சிய எடுத்துக்கிட்டு வெளிய எறங்கி இருட்டுக்குள்ள நடந்தேன்'. அவரை கூர்ந்து நோக்கி 'எனக்க பொறத்தால அவரு வாற சத்தம் கேட்டுது..'

இடைவெளிவிட்டேன்.

'நடக்குற சத்தம்னா அது இல்ல. நின்னு கேட்டா சத்தம் கெடையாது. திரும்பிப்பாத்தா ஆளும் இல்ல. ஆனா.. நான் கால வைக்கிறப்ப ஒரு சத்தத்துக்கு பதில் ரெண்டு சத்தம் கேட்டேன்-அச்சொட்டு அண்ணாச்சி. அப்டியே சிலுத்துப்போச்சு..

அவர் பெருமூச்சுவிட்டார்.

'அந்த காகிதத்தப்பாத்து அதில எளுதியிருக்கிற ஊருக்குப் போயி நடுச்சாமத்தில தனியா போயி அந்த காகிதத்த அந்த தீர்த்தத்திலே போட்டு முஙகி எந்திரிச்சு திரும்பிப்பாக்காம ஓடிவந்திருன்னாக்கும் ஆலங்கோடு ஆசான் சொன்னது. நான் அதை எடுத்து வாசிச்சுப்பார்த்தா திருவட்டாறு ஆறுண்ணு எளுதியிருந்தது'

அவர் கண்ணிமைக்காமல் கேட்டுக்கொண்டிருந்தார்.

'அண்ணாச்சி கேக்குறியளா?'

'ஆ-ஆமா-சொல்லுங்க'

'திருவட்டாறிலே போயி ஆதிகேசவன் கோயிலிலே தங்கினேன்-நீங்க திருவட்டாறு வந்திருக்கியளா?'

'எங்க நம்ம பொளைப்பே-நான் இந்தா மருதைகோயிலுக்குக்கூட..'

'திருவட்டாறு கோயில் மண்டபம் அப்டியே நெல்லையப்பர் மண்டபம்தான்னு வையிங்க. ஊர்த்துவ வீரபத்ரன் அகோரவீரபத்ரன் காளி கூளின்னு பல செலைங்க. எல்லாம் எட்டடி பத்தடீன்னு கன்னங்கரேல்னு இருக்கும்_நான் ஒருநாலஞ்சுபேரோட நடுவிலே படுத்துக்கிட்டேன். ராத்திரி எந்திரிச்சு ஆத்தில காகிதத்த போட்டிரணுமுன்னு நினைச்சுகிட்டேன்_ஆனா நல்லா தூங்கிட்டேன். பாத்தா யாரோ காலால ஓதைச்சு எளுப்பிவிட்டாங்க. எந்திரிச்சு பாத்தா சுத்தி எல்லாரும் தூங்கிட்டிருக்கானுக. சரீண்ணு எந்திரிச்சு வேட்டியக் கட்டிக்கிட்டிருந்தப்ப பலபேரு என்னைய பாக்குற மாதிரி இருந்திச்சு. சுத்திச்சுத்திப்பாக்குறேன்_அண்ணாச்சி சொன்னா நம்ப மாட்டீங்க_செலைகளோட கண்ணெல்லாம் உசிரோட என்னைய பாக்குது அண்ணாச்சி. வீரபத்ரரு கால தூக்கி என்னைய மிதிச்சிருக்காரு_காலு நல்லா நீண்டிருக்கு'

சிலகணம் அமைதி. அவர் அசைந்து அமர்ந்தார்.

'இத உங்கள மாதிரி கொஞ்சம் விஷயம்தெரிஞ்ச ஆளுகளிட்டதானே சொல்லமுடியும்? சத்தியமா இத நான் பாத்தேன்_சரீண்ணு ஆதிகேசவா பெருமாளேன்னு மனசில நினைச்சுக்கிட்டு எறங்கி கீளே போனேன். ஆனால் அங்க ஆறு இல்ல'

'ஆ_ஆறு இல்லேன்னா?'

'ஆத்தில ஒரு சொட்டு தண்ணி இல்ல அண்ணாச்சி_காலியா கெடக்கு. அந்தமட்டும் இந்தமட்டும் நடந்தாச்சு. ஒரு சொட்டு தண்ணி கெடையாது_என்ன செய்றது?'

'டாமிலே செக்கு போட்டுட்டானோ'

'என்னெளவோ யாரு கண்டா? ஓடி அந்தால கரைக்கு வந்தா எனக்கு முன்னால ஆரோ போற மாதிரி_இருட்டுல ஆளு தெரியல்ல. ஆனா ஆளுக்கு பத்துபத்தர அடி உசரமிருக்கும்_அண்ணாச்சி அப்பதான் நான் நினைச்சுக்கிட்டேன். ஊர்த்துவ வீரபத்ரருக்கு பக்கத்தில நின்ன அகோர வீரபத்ரர எந்திரிச்சி பாக்கிறப்ப காணுமேன்னு'

'_அதுவா? ' என்று மிக மெல்ல கேட்டார்.

'சொள்ளமாடன்லாம் ராத்ரிசஞ்சாரத்துக்குப் போவும்லா அண்ணாச்சி?

'ஆமா'

'நீங்க பாத்திருக்கேளா?'

'இல்ல நான்_எங்க மாமா ஒருத்தரு பாத்திருக்காரு_வாசுதேவநல்லூர்லே அவருக்கு–

'அப்றம்தான் தாள எடுத்துப்பாத்தேன். அண்ணாச்சி அதில இப்ப என்ன எளுதியிருந்ததுன்னு நெனைக்கிறீய? பாத்தேளா, ஊகிச்சுப்போட்டீக. அண்ணாச்சி காசீன்னு போட்டிருந்திச்சு'

'ஓகோ' என்று சுரத்தே இல்லாமல் சொன்னார்.

'நான் வீரபத்ர சாமியப் பாக்குறப்ப என் பின்னால மத்தவரு காலடிச்சத்தம் மறைஞ்சிட்டுது பாருங்க. நான் பஸ்ஸிலே ஏறினப்ப எனக்குப்பின்னாடி அவரு நிக்கிற மாதிரி ஒரு இது_பிறவு எங்க போனாலும் அவரு பின்னாடி உண்டு. இந்த நாயி பூனை பண்ணி இதுக்கெல்லாம் அவர கண்ணுல தெரியும்_மனுசங்களுக்கு தெரியாது. ஆனா அப்டியும் சொல்வீர முடியாது. திருவனந்தபுரத்திலே ஒரு போலீஸ்காரன் என்னைய அடிக்கவந்தான். வந்தவன் அப்டியே தெகைச்சு நிக்கிறான்_கண்ணு முளிச்சு கோலிகணக்கா நின்னுபோச்சு. அப்டியே திரும்பி ஓடியே போய்ட்டான்'

'ஏன்?'

'ஏன்னு நான் என்னத்த கண்டேன் அண்ணாச்சி_உங்கள மாதிரி வெவரம் தெரிஞ்சவுங்க சொன்னா புரிஞ்சுக்கிடலாம்'

'அது மத்தவராக்கும்'

'அப்டியா அண்ணாச்சி? சத்தம் காட்டாம பின்னாடி வந்து நிக்கிறாரு இல்ல?'

'ஆமா_அது அந்தமாதிரி ஐட்டங்களுக்க சொபாவம்லா?'

'எங்க விட்டேன்? நேராட்டு காசி_நான் ரயிலிலே டிக்கெட்டு எடுக்கல்ல பாத்துக்கிடுங்க. ஒருத்தன் நம்ம கிட்ட டிக்கெட்டு கேக்கமாட்டான். பாப்பான் அப்டியே பீதியடிச்சு பின்னாடி நவுந்திருவான். நேரா காசிக்கு போனேன். போய் எறங்கினா என்னையப் பாத்துமே ஒரு சாமியாரு வந்து ஒரு பிடி விபூதிய அள்ளி குடுத்தாரு. சாமீன்னு கும்பிட்டேன். பின்னாடி நிக்கிறவரு யாரு அண்ணனான்னு தமிழ்ல கேட்டாரு. நான் ஒண்ணுமே சொல்லல. நேரா போயி கங்க்கைகரையிலே நின்னேன். ரெண்டுகரையும் முட்டி கங்கை அப்டியே கடலு மாதிரி போய்ட்டிருக்கு. அண்ணாச்சி கங்கைய பாத்திருக்கேளா?'

*‘ஆம எங்க? நாம இங்க தாம்ரர்ணியே..’*

*‘ஒரு அம்பது இல்ல நூறு தாமிரர்ணி வெள்ளத்தை நெனைச்சுக்கிடுங்க அதான் கங்கை’ என்றேன். ‘அப்டியே பாத்துட்டே இருந்தேன். கப்பலுமாதிரி போட்டெல்லாம் சங்கூதிக்கிட்டு பொக விட்டுகிட்டு போய்ட்டிருக்கு அண்ணாச்சி. ராத்திரி ஆயிடுச்சு..நடுராத்திரி வரைக்கும் காத்திருந்தேன். நல்லா இருட்டியாச்சு. படித்தொறையிலே நல்ல இருட்டா இருந்த எடத்தப்பாத்துப்போயி வேட்டிசட்டைய களட்டீட்டு கையில அந்த காகிதத்தோட எறங்கீட்டேன். அண்ணாச்சி, சத்தியமா நான் சொல்றத சாதாரணமா ஒருத்தனும் நம்பப்போறதில்ல..ஆனா இது சத்தியம்..கங்கையிலே தண்ணியே இல்ல அண்ணாச்சி..’*

*‘இல்லேன்னா?’*

*‘இல்லேன்னா என் கணுக்காலுக்குக் கூட தண்ணிவராது பாத்துக்கிடுங்க. சித்திரையிலே தாமிரவருணி ஓடுமே அதுமாதிரி..மணலில்ல, சேறு. எப்டி முங்கிறது? நடந்து நடந்து போறேன். நடு ஆத்துக்கு வந்தாச்சு. இந்தால காசியில இருக்கப்பட்ட கோபுரம் கோட்டையெல்லாம் சின்னதா ஆயாச்சு. ஆனா தண்ணி கணுக்காலுக்குமேலே ஏறல்ல. எப்டி முங்கறது..?’*

*அவர் என்னைக் கூர்ந்து நோக்கிக்கொண்டு பேசாமலிருந்தார்.*

*‘அந்தக்கரைக்குப் போய்ட்டேன் அண்ணாச்சி. அப்றம் அப்டியே திரும்பிவந்தேன். கரையில ஏறி ஒக்காந்தப்ப அளுகையா வந்திட்டுது. என்னத்தச் சொல்ல? என்னாண்ணு திரும்பிப் போக? செத்திரலாம்னு நினைச்சேன். ஆனால் கங்கையில நான் சாகணுமானாக்கூட தண்ணி கெடையாதே. அப்டி ஒக்காந்தா என் பக்கத்திலேயே அவரும் ஒக்காந்திருக்கிற மாதிரி ஒரு இது..அண்ணாச்சி, அந்தால போற குடும்பம் ஒண்ணு அங்க இருந்த பிச்சக்காரங்களுக்கும் சாமிகளுக்கும் சில்லறைய குடுத்திட்டுப் போனாங்க. நான் இருந்த எடத்தில நான் மட்டும்தான். ஆனா அவங்க எனக்கு இருபத்தஞ்சு பைசா போட்டுட்டு பக்கத்தில ஆளில்லாத மண்ணிலயும் இருபத்தஞ்சு பைசா போட்டுட்டு போனாங்க..அண்ணாச்சி கேக்கிறியளா?*

*‘ம்’*

*‘காகிதத்த எடுத்துப்படிச்சா அதில ஹரித்துவார்னு எளுதியிருந்தது. நேரா அங்க போனேன். காசியிலயே கங்கையில கணுக்காலுக்குமேலே தண்ணி இல்லேன்னா ஹரித்துவாரிலே என்னாண்ணு இருக்கும்? அந்தால ரிஷிகேஷ் போனேன். அங்கயும் இல்ல. சரீன்னு அங்க இங்க அத்து அலைஞ்சுட்டு ஒருநாள் வண்டி ஏறி நேரா மெட்ராஸுக்கே வந்துட்டேன். மெட்ராஸிலே ஏது தண்ணி? கூவம்தான். கோவம் வந்து அந்த தாளச் சுருட்டி கூவத்திலே எறிஞ்சாச்சு. சனியன் நாசமாப்போவட்டும், எக்கேடோ ஒளியட்டும்னு எல்லாத்தையும் மறந்துட்டு அங்கிணயே ஒரு வேலைக்குச் சேந்துட்டேன்’*

*‘என்னவேல?’*

*‘அரிசீல கல்லுபொறுக்குற வேலை அண்ணாச்சி’*

*‘கல்லப்பொறுக்கறதா?’*

*‘கையால இல்ல. மிசினு பொறுக்கும்..நயம் அரிசீல அரிசிமாதிரியே கல்லு இருக்கும்லா? அதை பொறுக்கி எடுக்கிறதுக்குன்னு ஒரு மிசினு உண்டு. பொம்புளையாளுக வேலைபாப்பாங்க. அரிசிக்கடைக்காரன் நம்மகிட்ட கொண்டாந்து அரிசியக்குடுப்பான். நாம கல்லப் பொறுக்கி சுத்தம்பண்ணி குடுத்தா அத அவன் நயம் அரிசீன்னு விப்பான். அந்தக்கல்லை எல்லாம் கம்பெனிக்காரங்க ரைஸ்மில்லுகாரனுக்கு வித்திருவான்’*

*‘அது எதுக்கு?’*

*‘என்னண்ணாச்சி கேக்குறீக? மறுபடியும் அரிசீல கலக்கணும்ல? அதுக்கு நயம் வெள்ளைக்கல்லுக்கு எங்க போவான்? அதேகல்லுதான் திரும்ப எங்க கிட்ட வந்துசேரும். மறுபடி பொறுக்குவோம். அண்ணாச்சி நெறைய கல்லு பல தலைமொறையா இப்டி சுத்திக்கிட்டே கெடக்கு தெரியுமா?’*

*அவர் வெளியே பார்த்தார்.*

*‘திருணவேலி இன்னும் வரலே அண்ணாச்சி..சொல்றத கேளுங்க..நான் கூவத்தில கிளிச்சு எறிஞ்சேன்லா, அந்த காகிதம் ஒருநாளைக்கு எனக்கு போஸ்டிலே வந்திட்டுது..போஸ்டிலயான்னு கேக்காதீங்கண்ணாச்சி. தபால பிரிச்சா அதே காகிதம். அதில ஒண்ணுமே எளுதல்லை. என்ன செய்றது சொல்லுங்க’*

*அவர் அசைந்து அமர்ந்தார். கண்கள் அசைந்துகொண்டே இருந்தன.*

*‘என்னைய வேலையிலே இருந்து போகச்சொல்லிட்டாங்கண்ணாச்சி.. என்னையப்பாத்தா பொம்புளையாளுங்களுக்கு பயமா இருக்காம். என் பின்னாடி செலசமயம் ரெண்டு நெழல் விழுதுன்னு சொல்றாளுக. நாலஞ்சுபேரு பாத்திருக்காளுக’*

அவரைக் கூர்ந்து நோக்கிக்கொண்டு சொன்னேன் ‘ஒருநாள் ராத்திரி தாளை எடுத்துப்பாத்தா எங்க ஊரு பேரு எளுதியிருக்கு. சரீண்ணு கெளம்பிட்டேன்’ சட்டையில் இருந்து காகிதத்தை எடுத்து ‘பாருங்கண்ணாச்சி-இதான் தாளு’

‘இல்ல-’

‘சும்மா பாருங்கண்ணாச்சி-’

‘வேண்டாம் தம்பி’

‘பாருங்கண்ணாச்சி-’. மேலும் நீட்ட அவர் விலகி அமர்ந்தார்.

‘வேண்டாம் தம்பி’ என்று உடைந்த குரல்.

‘.வெள்ளையாத்தான் தெரியும்-உங்க குடும்பத்தில இதமாதிரி பிரச்சினை இருந்தாத்தான் எளுத்து தெரியும்’

‘இல்லதம்பி-வேண்டாம்-நான் இப்ப மருந்து சாப்பிட்டுட்டிருக்கேன்-சித்தா மருந்து’

‘இப்ப ஊருக்கு போறேன்-ஊரிலே தம்பி எப்டி இருக்கானோ என்னமோ- இவரு வேற கூடவே வாறாரு-’ பின்னால் கைகாட்டி ‘படுபாவி, என்ன நெனைச்சிட்டிருக்காருண்ணு ஆருக்குத் தெரியும்?’

அவர் பின்னால் பார்த்துவிட்டு என்னைப்பார்த்தார்.

‘நம்ம கையிலே என்ன இருக்கு அண்ணாச்சி? அவரு போற வளியிலே நாம போறம்-நேரா போயி கன்யாகுமரி கடலிலே எறங்கினா நாமளும் எறங்கீரவேண்டியதுதான்’

அவரையே கூர்ந்து நோக்கிக்கொண்டு அமர்ந்திருந்தேன். என் கண்களைப் பார்ப்பதைத் தவிர்த்தார். கைநகங்களைப் பார்த்தார். மஞ்சள்பையைத் திறந்து ஒரு சிறிய கணக்குபுத்தகத்தைப் பிரித்து நுணுக்கமாக வாசித்தார். மீண்டும் என்னைப்பார்த்தார்.

சங்கர்நகர் வந்தது. எல்லாரும் எழுந்தார்கள். அவர் பரபரவென்று பையில் எல்லாவற்றையும் வைத்துக்கொண்டு எழுந்தார்.

‘அண்ணாச்சி, என்ன சொல்லாம போறீக?’

‘போய்ட்டு வாறேன் தம்பி’ என்று என்னைப்பாராமல் சொல்லிவிட்டு கூட்டத்தில் கலந்து இறங்கினார்.

சன்னல்வழியாகப் பார்த்தேன். ‘அண்ணாச்சி என்னது அவரு ஒங்ககூட வாறாரு’ என்று சொல்லலாமென வாயெடுத்தேன். பாவம் வேண்டாம் என்று தோன்றியது.

---

## புறப்பாடு II- 18,கூடுதிர்வு

என் அப்பா வீட்டைவிட்டு முதல்முறையாக கிளம்பிச் சென்றபோது அவருக்கு ஒன்பது வயது. பாட்டியை நோக்கி கையை ஓங்கி ‘ச்சீ போடி!’ என்று பல்லைக்கடித்துச் சொல்லிவிட்டு இடுப்பில் ஒற்றைத்துண்டு மட்டும் அணிந்தவராக படியிறங்கி ஓடி ஆற்றுக்குச்செல்லும்பாதையில் கைதைப்புதர்களுக்குள் புகுந்து காணாமலானார். பாட்டி அதைப் பெரியதாக எடுக்கவில்லை. வந்துவிடுவார் என்றுதான் மாலை வரை நினைத்திருந்தாள். இரவில்தான் கொஞ்சம் கவலை வந்தது. பக்கத்துவீடுகளிலும் கோயில்களிலும் தேடிப்பார்த்தாள். காணவில்லை என்று ஆனபோது திகில் ஏற்பட்டது. ஒருமாதம் கழித்துத்தான் அப்பா கிடைத்தார். அதற்குள் பாட்டிக்கு ஊரில் தீராத அவச்சொல் உருவாகிவிட்டிருந்தது

வாழ்நாள் முழுக்க அப்பாவுக்கும் பாட்டிக்கும் இடையே கண்களின் சந்திப்பே இருந்ததில்லை. அவர்கள் நேருக்குநேர் பேசிக்கொண்டதை நான் பார்த்ததே இல்லை. அப்பாவின் காதில் விழுமபடி சுவரை நோக்கி பாட்டி சொல்லும் சிலவரிகளுக்கு பாட்டியின் காதில் விழும்படி அப்பா பதில்சொல்வார். இருவரும் வெவ்வேறு திசைகளைப்பார்ப்பார்கள். அவர்கள் இருவருக்கும் உடனடி முன்னிலை போல அம்மா நின்றுகொண்டிருப்பாள். இருவரும் கோபம் கொள்ளும்போது அம்மாவைத்தான் திட்டுவார்கள்

எங்கள் வீட்டின் உள்ளறையில் உயர்தரமான பனையோலைப்பாயும் மெத்தையும் போர்வையும் சுருட்டப்பட்டு கொடியில் தொங்கும். அது பாட்டிக்குரியது. அதைப் பார்க்கும்போதெல்லாம் ‘பாட்டிக்க பாயி’ என்று சின்னவயதில் நான் சுட்டிக்காட்டுவேன். அதுதான் எனக்கு பாட்டி என்றாலே நினைவுக்கு வரும் இருப்பு.பாட்டி எங்கள் வீட்டுக்குவருவது வருடத்தில் அதிகபட்சம் இருமுறை. வந்த அன்றுகாலை அந்த சுவர்நோக்கிய உரையாடல் நடக்கும். அதிகம்போனால் மறுநாளே அது சண்டையாகி பாட்டி கிளம்பி சென்றுவிடுவாள்.

என் அப்பாஅடிமுறை வித்வான் சங்குஆசானின் மகன். அவர் அப்பா கைக்குழந்தையாக இருக்கையிலேயே மறைந்தார். அதன்பின் பாட்டிக்கு மேலும் பலபிள்ளைகள். அவர்களில் இரண்டுபேர் தங்கினர். தம்பி அப்பாவை விட ஐந்துவயது இளையவர். தங்கை எட்டுவயது சின்னவள். அப்பா அவரது நினைவறிந்த நாளிலேயே அந்த வீடு தனக்குரியதில்லை

என்று கண்டுகொண்டார். அவர் தன் அப்பாவை கண்டதே இல்லை என்றாலும் அவரது மகன் என்ற அடையாளத்தை கெட்டியாகப்பிடித்துக்கொண்டார். யாராவது கேட்டால் தன்னை வயக்கவீட்டு சங்குஆசானின் மகன் என்றுதான் சொல்வார். ஆசானை அனேகமாக எவருமே ஞாபகம் வைத்திருக்கவில்லை என்ற போதிலும்.

அப்பா ஒருமுறை தன் தம்பியை மூர்க்கமாகத் தாக்கினார். நெற்றி உடைந்து ரத்தம் கொட்டியது. தம்பி தாக்குதலை வாங்கிக்கொண்டு 'அண்ணா அடிக்காதே அண்ணா' என்று கத்திக்கொண்டு அண்ணாவைநோக்கித்தான் ஓடி வந்தான். தன்னைவிட மிகவும் மூத்த அண்ணனின் நல்லெண்ணத்தையும் அன்பையும் ஈட்டுவதற்காக ஏங்கிய சிறுவன். அப்பா பயந்துவிட்டார். சற்றுமுன்புதான் கோயிலில் இருந்து வந்த சர்க்கரைப்பாயாசத்தை தம்பிக்கு அம்மா ஊட்டிவிடுவதை அப்பா பார்த்திருந்தார். அவர் கோயிலிலேயே சாப்பிட்டிருப்பார் என்று பாட்டி நினைத்திருந்தாள். அப்பா கோயிலுக்குப்போகவில்லை. வயலுக்குத்தான் போயிருந்தார். கோபத்தை அடக்கிக்கொண்டு சிலநிமிடங்கள் பேசாமல் நின்றபின் புல்செதுக்கியை கையிலெடுத்து மீண்டும் வயல்பக்கமாகச் செல்ல அவர் கிளம்பியபோதுதான் தம்பி அவரைநோக்கி ஏதோ சொல்லிக்கொண்டு ஓடிவந்தான். அப்பா புல்செதுக்கியின் இரும்புநுனியால் ஓங்கி அடித்தார்.

ரத்தத்தை கண்டதும் அப்பா திகைத்து நின்றார். திண்ணையிலிருந்த பாட்டி கூச்சலிட்டுக்கொண்டு இறங்கி ஓடிவருவதைக் கண்டதும் அப்பா வெளியே பாய்ந்து ஓட ஆரம்பித்தார். ஆற்றங்கரை வழியாக தோட்டங்களுக்குள் புகுந்து ஓடி ஆற்றூர் சென்றிருக்கிறார். குழித்துறை சிவன்கோயிலின் முகப்பில் கிடந்தவருக்கு அங்கே பிரசாதம் கிடைத்திருக்கிறது. அங்கிருந்து மீண்டும் ஓடி நெய்யாற்றங்கரைக்குச் சென்றார். அங்கிருந்து பாறசாலைக்கோயிலுக்குச் சென்றார். பாறசாலையில் பெரிய ஊட்டுபுரை உண்டு. அங்கேயே சமையலுக்குக் குற்றேவல்செய்துகொண்டு சாப்பிட்டுக்கொண்டு தங்கிவிட்டார்.

பாட்டிக்குத் தெரிந்தவர்கள் எல்லாம் கோயிலைச் சேர்ந்தவர்கள்தான். யானைக்காரன் பிறுத்தா நாயர் பாறசாலைக்கு வரும்போது அப்பா அங்கே சமையல்பாத்திரங்கள் கழுவுவதைக் கண்டார். அப்படியே கையோடு பிடித்து யானைமேல் ஏற்றி திரும்பக்கொண்டுவந்தார். ஊரே அப்பா யானைமேல் அமர்ந்து திரும்பி வந்ததை தெருவில்கூடி நின்று வேடிக்கை பார்த்தது. ' திரும்பிவந்தா ஆனைப்புறத்திலே வரணும்னு ஒரு சொல்லு உண்டு பாத்துக்கோ' என்று சித்தப்பா சொன்னார்.

அப்பா அதன்பின்பு பெரும்பாலும் கோயிலிலேயே தங்கிக்கொண்டார். கோயிலில் இருந்து வீட்டுக்கு குடும்ப உரிமையாக எட்டு கட்டி சாதம் கொடுக்கப்படும். அதில் ஒன்றை காலையிலேயே வாங்கி பாதியைச் சாப்பிட்டுவிடுவார். மிச்சத்தை வாழையிலையில் சுருட்டி எடுத்துக்கொண்டு நடந்து மார்த்தாண்டம் மிஷன் பள்ளிக்கூடம் செல்வார். மாலையில் கோயிலில் கிடைக்கும் பிரசாதத்தைச் சாப்பிட்டுவிட்டு மண்டபத்திலேயே தூங்கிக்கொண்டார். உடைகளும் படிப்புக்கான பணமும் பாட்டியால் யாரிடமாவது கொடுத்தனுப்பபடும். இல்லாவிட்டால் அப்பாவே தோட்டத்தில் புகுந்து தேங்காய் பறித்து கடைகளுக்குக் கொடுத்து பணம் வாங்கிக்கொள்வார்.

பாட்டி காலையில் ஆற்றில் குளித்து ஈர உடையும் கையில் துளசியும்பூவுமாக காலையில் கோயிலுக்குச் சாமிகும்பிட வரும்போது அப்பா மண்டபத் தூண்களில் ஒளிந்து கொள்வார். பாட்டி அப்பாவை அவர் தன்னைப்பார்ப்பதற்கு முன்னதாகவே பார்த்துவிட்டிருப்பாள். ஆனால் தலைதிருப்பிப்பார்ப்பதோ கண்களால் அப்பாவைத் தேடுவதோ கிடையாது. வீட்டுக்குச் சென்றபின் கோயில் காவலரை வரவழைத்து 'அவன் முட்டில என்னது காயம்? ஓடுறப்ப விழுந்தானா? மேலக்கோணம் வைத்தியர் குடுத்த எண்ணை இருக்கு.போட்டுக்கச் சொல்லு.நான் குடுத்ததாச் சொல்லாதே' என்பாள்.

அப்பாவின் தம்பியும் தங்கையும் அப்பாவின் மீது பெரும் பிரியத்துடன் இருந்தார்கள். அவர் வீட்டில் இல்லாத வாழ்க்கை வாழ்வது அந்தக்கவற்சியை மேலும் அதிகரித்தது. அவர் சாலையில் செல்லும்போது இருவரும் வேலியில் ஒளிந்து நின்று பார்த்தனர். அவர் அவர்களிடம் ஒரு வார்த்தைகூடப் பேசுவதில்லை. 'வெட்டுபோத்து போறதுமாதிரியாக்கும் போக்கு.நானும் தங்கச்சியும் அண்ணாண்ணு விளிப்போம். திரும்பிப்பாக்காம போவார். மறுபடியும் அண்ணாண்ணு விளிப்போம். கோவத்தோட திரும்பினருண்ணா ஒற்றை ஒரு ஓட்டம்.அப்ப்டி ஒரு பயமாக்கும்'

அப்பாவும் பாட்டியும் மாநிறம். ஆனால் இரு சின்னக்குழந்தைகளும் நல்ல வெள்ளைநிறம். அப்பா இருவரையும் வெள்ளாரங்கல்லுகள் என்றுதான் சொல்வார். ஒருமுறை தம்பிக்கு கடுமையான விஷக்காய்ச்சல் வந்து குலசேகரம் மிஷனாஸ்பத்திரியில் கொண்டுசென்று வைத்திருந்தார்கள். அப்பா எட்டுநாட்களும் ஆஸ்பத்திரி திண்ணையிலேயே அரைப்பட்டினியுடன் அமர்ந்திருந்தார். ஆனால் உள்ளே சென்று ஒருமுறைகூட தம்பியைப் பார்க்கவில்லை. 'உள்ள போயி பாருடா' என்று சொன்ன பங்கிப்பாட்டியிடம் 'போடி.அடிச்சு பல்ல எளக்கீருவேன்' என்றார் அப்பா 'எளக்குகதுக்கு எனக்கினி பல்லு இல்லியே மக்களே' என்று சொல்லி பங்கிப்பாட்டி போனாள்.

அப்பா முதல்முயற்சியிலேயே மெட்ரிகுலேஷன் பரீட்சையில் வென்றார். அந்தசெய்தியை பாட்டியிடம் சொல்வதற்காக தம்பியை கையசைத்துக் கூப்பிட்டார். 'டே வெள்ளாரங்கல்லு.வாடா இங்க' தம்பி அருகே வந்ததும் 'உனக்க அம்மை இருக்காளாடா வீட்டிலே?' என்றார்

'இருக்காங்க.ஏடு படிக்காங்க'

'அந்த ஏட்டை அவள கட்டையிலே ஏத்துறப்ப சேத்துவச்சு கொளுத்தணும்.நீ போயி நான் பாஸாயிட்டேன்னு சொல்லு. இனிமே எனக்கு ஆருக்க பிச்சையும் தேவை இல்லை. இத்தனைநாள் போட்ட சோற்றுக்கு உண்டான காசை சம்பாதிச்சு குடுத்திடறேன்னு சொல்லு.போ'

‘அண்ணா-

‘டேய் போடா’

அதைச் சொன்னபோது ‘நல்லது, அந்த மூச்சுக்கனம் இருந்தா எங்க போனாலும் பொழைச்சுக்கிடுவான்_ ஆதிகேசவன் துணை இருக்கட்டும்’ என்று பாட்டி சொன்னாள்.

அப்பா திருவட்டாறிலிருந்து கிளம்பி குலசேகரம் சென்று ஒரு மாடியறையை வாடகைக்கு எடுத்து அதில் தங்கினார். அன்று திருவிதாங்கூர் அரசில் வேலைபார்ப்பவர்களுக்கு அடிப்படை ஆங்கிலம் கட்டாயம் தெரிந்திருக்கவேண்டும் என்று ஓர் அரசாணை வந்திருந்தது. பிரவர்த்தியார் என்னும் கிராமஅலுவலர்கள், திருவிதாங்கூர் நாயர் பிரிகேட் போலீஸ்காரர்கள், அலுவலகக் குமாஸ்தாக்கள் ஆங்கிலம் கற்றுக்கொள்ள அலைந்தார்கள். அப்பா தன்னுடைய அறையில் ஆங்கில வகுப்பு ஆரம்பித்தார். அதற்கு பதினைந்துபேர் வந்தார்கள். இதுபோக இரண்டுபேருக்கு வீட்டுக்குச் சென்று ஆங்கிலம் கற்றுக்கொடுத்தார்.

அப்பா மல்மல் வேட்டியும் சட்டையும் வாங்கிப் போட்டுக்கொண்டார். சட்டைப்பித்தான்களை வெள்ளியில் செய்து மாட்டிக்கொண்டார். ஏகாதசிக்கு கோயிலுக்கு வந்து மண்டபத்தில் கால்மேல் கால் போட்டு அமர்ந்திருந்தார் ‘என்னடே தங்கப்பா நீ தெளிஞ்சுபோட்டியே’ என்றார் காவலர் வாமதேவன்

‘தெளியணுமே மாமா_கொஞ்சநாள் கண்ட கண்ட எருமையெல்லாம் வந்து கலக்கின குளமாக்குமே_தெளியாம முடியுமா?’ என்றார் அப்பா.

தீபாராதனைக்கு வந்த பாட்டியைக் கண்டதும் கால் மேல் காலை வைத்துக்கொண்டு உரக்கப்பேசிக்கொண்டிருந்தார் அப்பா. பாட்டி எதுவும் நடக்காததுபோல உள்ளே சென்றாள். கும்பிட்டுவிட்டு திரும்பும்போது வாமதேவனை சைகையால் அழைத்துவிட்டு முன்னால் சென்றாள்

‘சொல்லுங்க அம்மிணி’

‘டேய் காலுக்குமேலே காலு எந்த ஆம்புளைக்கும் ஏறும்_ஏத்தின கால எறக்காம இருக்கப்பட்டவன் ஆணத்தம் உள்ள ஆம்புள_’

‘சரி அம்மிணி’

‘அத அந்த மண்டபத்தில நின்னு மூணுதடவ சத்தமா சொல்லு_உனக்கு நாலணா தாறேன்’

மெல்லச் சிரித்தேன். சித்தப்பா ‘இவனுக்கு அந்த மூப்புகொணம் உண்டா அண்ணி?’ என்றார்

‘என்ன கொணமோ? வீணாப்போனவன்_ என்னத்தை எடுக்கிறதுக்காக புறப்பட்டு போறானோ? கேட்டா ஒண்ணும் சொல்லுறதில்ல_நீ கொண்டுபோயி கேட்டுப்பாரு’ அம்மா சொன்னாள்

சித்தப்பா திரும்பும்போது ‘டேய் வாடா’ என்றார். நான் கூடவே போனேன். அவர் மாமியார் வீட்டுக்கு வந்திருந்தார்

‘நீ என்னத்துக்காக்கும் ஓடிப்போறே?’ என்றார் ‘உனக்கும் அப்பாவுக்குக்கும் என்ன சண்ட?’

‘சண்டையெல்லாம் ஒண்ணுமில்ல’

‘எனக்க கிட்ட வெளையாடாதே_எனக்க அண்ணனுக்க சொபாவம் எனக்கு நல்லாவே தெரியும்_கரடி தங்கப்பன்னு பதினாறுவயசிலேயே பேருவாங்கினவராக்கும்’

‘சித்தப்பா, நான் முதல்ல வீட்ட விட்டு போனது அப்பா திட்டினதினாலத்தான். ஆனா இப்ப போனது அதனால இல்ல’

‘அந்த மத்த பய செத்துப்போன துக்கத்தினாலயா?’

‘போனது அதனாலத்தான் சித்தப்பா_ஆனா துக்கத்தினால இல்ல’

‘பின்ன?’

‘தெரியல்ல_இங்க இருக்கமுடியல்ல, அவ்வளவுதான்’

‘எங்கெங்க போனே?’

நான் ஒன்றும் சொல்லவில்லை

‘நாடு நாறியிருக்கு கேட்டியா? நீ பங்கரப்பிச்சக்காரனா நெய்வேலியில நம்ம ஜான் ஜெஸ்டினுக்க மச்சினனைத் தேடிப்போயி பைசா வாங்கியிருக்கே’

‘அதை திருப்பி குடுத்தாச்சு’

‘அவன் என்னமோ உன்னைய கரைசேத்தவன் மாதிரில்லாடே சொல்லீட்டு திரியுதான்?’

பேசாமல் தலைகுனிந்து வந்தேன்

‘நான் சொல்லுதேண்ணு நினைக்காதே. நீ சாகித்ய வாசிப்புள்ளவன். உனக்கே எல்லாம் தெரியும். நான் இப்பம் வந்தது அண்ணனைப்பாக்கிறதுக்காக்கும்.என்னை பாத்ததும் நேரா எறங்கிபோயி விளையிலே நிக்கிறாரு.முகம்பாத்து ஒரு வார்த்த எங்கிட்ட பேசினதில்ல.தெரியுமா?’

‘ம்’

‘நான் சன்னலுவழியா பாத்துகிடுவேன்னு அவருக்கும் தெரியும்.எப்பமும் இப்டித்தான்.பத்து இருபது வருசமாட்டு இப்டியாக்கும்.அண்ணிக்கிட்ட ஒரு மணிக்கூர் பேசிட்டு நான் போவேன்.என்ன சொன்னேன், எதுக்கு வந்தேன்னு கேக்கமாட்டாரு. அண்ணி சொன்னா ஒரு உம் கூட சொல்லமாட்டாரு.ஆனா எனக்கு துணையா சொடலமாடசாமி இருக்கிற மாதிரி எப்பமும் இருந்திருக்காரு.அந்த நெனைப்பு எனக்குண்டு. நான் பதினொண்ணில தோத்தப்பம் ஈஸ்வரபிள்ளை சாரு வந்து என்னைப்பாத்தாரு.டே, உனக்க அண்ணன் சொன்னான் நீ கவலைபட்டுதேண்ணு.வந்து உனக்கு ஆறுதல்சொல்லி பாஸாக்க வைக்கணும்னு சொல்லி அம்பது ரூவா கைநீட்டம் குடுத்தான் பாத்துக்கோன்னு சொன்னாரு.அன்னைக்கு நான் கோயில் மண்டபத்திலே ஏறி இருந்து அளுதேன்.’

நான் அவரைப்பார்த்தேன். சாதாரணமாகச் சொல்லிக்கொண்டிருந்தார்

‘எப்பமும் எனக்கு ஒப்பம் உண்டு ஆளு. வலிய ஏலா சண்டையிலே சட்டம்பி வில்சன் என்னைய அடிப்பேன் கொல்லுவேன்னு நாலுமுக்கிலே வச்சு சொன்னான். நான் பயந்து வீடுவிட்டு வரல்ல. அன்னைக்கு சாயங்காலம் வில்சன் வீட்டுக்குப்போயி லே வில்சா, நீ ஆணா இருந்தா கொல்லவோ அடிக்கவோ வேண்டாம், இனி ஒரு வார்த்தை அவனைப்பத்தி பேசிப்பாரு. தாயோளி உன்னையும் உன் குடும்பத்தையும் வெட்டி நாலுமுக்கிலே வைப்பேன்லேன்னு சொல்லியிருக்காரு. சொன்னா செய்யுத ஆளாக்கும்.வீடு கேறி வந்து ஓராள் அப்பிடிச் சொன்னா எந்தக் கேடியும் நடுங்கிருவான்.என்னைப்பாத்தா அவன் பத்து வருசம் வழிமாறி நடப்பான், பாத்துக்க’

நான் பெருமூச்சு விட்டேன்

‘சில ஆளுக அப்பிடியாக்கும்.நான் என்ன சொல்ல?’ சித்தப்பா சொன்னார் ‘அவங்க சொல்லாம விட்ட வார்த்தையெல்லாம் நாம சொர்க்கத்தில போறப்ப சொல்லுவாங்கண்ணு தோணுது.அதுக்கு நாமளும் அவங்ககூட சொர்க்கத்துக்குப் போகணும் பாத்துக்க.நரகத்துக்குப் போறமாதிரி நாம நடந்துக்கிடக்கூடாது.கேட்டியா?’

அவர் சென்றபின் தனியாகத் தலைகுனிந்து நடந்து வந்தேன். அவரிடம் என்ன சொன்னாலும் அவர் எனக்கும் அப்பாவுக்குமான முரண்பாடாக மட்டுமே அதை எடுத்துக்கொள்ளப்போகிறார். நான் கிளம்பிச்சென்ற நான்காவது நாள் அப்பாவை ஆஸ்பத்திரியில் சேர்க்கவேண்டியிருந்தது. நான்குநாளும் எதுவுமே பேசாமல் வழக்கம் போல எல்லா வேலைகளையும் செய்துகொண்டு இருந்திருக்கிறார். ஆனால் சரியாகச் சாப்பிடுவதில்லை. சாப்பாட்டுத்தட்டுமுன் அமர்ந்தால் கையால் அளைந்துகொண்டே இருப்பார், பிறகு எழுந்துசென்றுவிடுவார். அம்மா ‘சாப்பிடல்லியா?’ என்று கேட்டால் ‘எடுத்துட்டு போடி நாயே’ என்று கத்துவார்.

வாழைக்குமுன்னால் விழுந்துகிடந்தவரை தூக்கி எடுத்து மயக்கம் தெளியவைத்தபின் குலசேகரம் ஆஸ்பத்திரியில் சேர்த்தார்கள். ரத்த அழுத்தம் அபாயகரமாக ஏறியும் இறங்கியும் அலைக்கழித்தது. மூன்றாம் நாள் திரும்பினாலும் அடுத்த ஏழுமாதத்தில் பதினெட்டுமுறைக்குமேல் ஆஸ்பத்திரியில் சேர்க்கவேண்டியிருந்தது. நன்றாக மெலிந்து வெளிறிவிட்டார்.

‘வாயத்தெறந்து ஏதாவது பேசவைங்க.சாவமாட்டாரு’ என்றார் டாக்டர் செல்வின்

நாராயணன்போத்தியிடம் அம்மா ‘என்னமாம் சொல்லுதாரா போத்தியே?’ என்று அழுதுகொண்டே கேட்டார்

‘அதெல்லாம் ஆனை மாதிரியாக்கும் வெசாலமே.ஆனைக்கு நோவிருந்தா அலறாது, சவிட்டாது.கண்ணில மட்டும்தான் நோவு தெரியும்’

‘எனக்கு பயமா இருக்கு போத்தியே’

‘எனக்கும் பயம்தான்..பாப்பம். இவன் சாவப்பிடாதுன்னு விதியிருந்தா பய திரும்பி வருவான்’

நான் நள்ளிரவில் திரும்பிவந்தேன். நாகர்கோயிலில் இருந்து திருவனந்தபுரத்துக்குத்தான் பேருந்து இருந்தது. குழித்துறையில் இறங்கினேன். சாலையில் நாய்களன்றி உயிரசைவே இல்லை. கடுமையான பசி. அதுவரை பசிபற்றிய நினைப்பே இல்லாமலிருந்தேன். நெல்லையில் இருந்து நாகர்கோயில் வரும்வரைக்கும் திரும்பத்தான் வேண்டுமா என்ற எண்ணம் மட்டும்தான் இருந்தது. நெல்லையில் இருந்து வேறெங்காவது சென்றுவிடலாமா என்று பேருந்துகளின் ஊர்ப்பெயர்களைப் பார்த்துக்கொண்டே இருந்தேன். ஒருகட்டத்தில் அனிச்சையாகவே நாகர்கோயில் பேருந்தில் ஏறி அமர்ந்துவிட்டேன். அனிச்சை என் அகம் செய்த பாவனை என உடனே அறிந்தேன்

உண்ணாமலைக்கடையில் சாலையோரம் ஒரு மாமரம் நின்றிருந்தது. பருவம்தவறி அது காய்த்திருப்பதைக் கவனித்தேன். அப்போது பரவ ஆரம்பித்திருந்த உயரமில்லாத ஒட்டுமாமரம். கீழே கிடந்த கல்லை எடுத்து வீசி ஒரு மாங்காயை வீழ்த்தினேன். அதைத்தின்றுகொண்டே நடந்தேன். திருவட்டாறு வந்தபோது ஆற்றில் இறங்கி தண்ணீர் குடித்தேன். புளிப்பு அமிலமாகத் திகட்டி வாயில் எழுந்தது

திருவரம்புக்குள் நுழைந்தபோது பின்னிரவின் ஓசைகள் கேட்டுக்கொண்டிருந்தன. தொலைவில் திற்பரப்பு அருவியின் மெல்லிய ஒலி.வீட்டை நெருங்குவதற்குள்ளேயே ஹு ஹு என்ற தீனமான ஒலியுடன் டைகர் கால்நகங்கள் தரையில் பிராண்ட பாய்ந்து ஓடிவந்தது. ஒரே பாய்ச்சலில் என்மீது தாவியது. நிலைதடுமாறி கோயில்சுவரைப்பற்றிக்கொண்டேன். டைகருக்கு என்னசெய்வதென்றே தெரியவில்லை என்று தோன்றியது. அதனுள் பொங்கிய வேகத்தை அதன் உடலால் தாளமுடியவில்லை. துள்ளியது. சுற்றிச்சுற்றி ஓடியது. எம்பிக்குதித்தது. வீட்டைநோக்கி அதிவேகத்தில் ஓடி அதே வேகத்தில் திரும்பி வந்தது

குனிந்து அதன் முகத்தைப்பார்த்தேன். என் மூக்கையும் கன்னங்களையும் அதன் வெம்மையான நாக்கு வந்து வருடி வருடிச் சென்றது. நாய்கள் முத்தம் கொடுக்கும். ஆனால் பாடல்களில் வருவதுபோல முத்தமழை சொரியும் என்று அப்போதுதான் உணர்ந்தேன். அதை இறுக அணைத்துக்கொண்டேன். ங்ங்ங் என்றது. துள்ளிமறிந்தது

வீட்டுக்கதவை தட்ட பலமுறை கையை எடுத்தேன். தட்டமுடியவில்லை. உள்ளே பனையோலை விசிறி அசையும் ஒலிக்காக, கட்டிலில் புரண்டுபடுக்கும் ஒலிக்காக, கமறும் ஒலிக்காக செவிகூர்ந்தேன். கேட்கவில்லை. ஆனால் அதற்குள் கதவு உள்ளே திறக்கும் ஒலி. அண்ணா என்னைப்பார்த்ததும் திகைத்து நின்றார். பின்னர் ‘நாயே!’ என்றபடி ஓங்கி என் கன்னத்தில் அறைந்தார். பொத்தியபடி சுவரில் சாய்ந்து அமர்ந்தேன்

‘நாயே நாயே..போடா போய்ச்சாவுடா’ என்று சொல்லியபடி அண்ணா என்னை அறைந்துகொண்டே இருந்தார். ஆனால் அறை என் கைகளிலும் தோள்களிலும் இலக்கில்லாமல் பட்டது

அம்மா வந்து அப்படியே பார்த்துக்கொண்டு நின்றாள். தங்கை மண்ணெண்ணை விளக்கை ஏற்றிக்கொண்டுவந்து அம்மாவின் பின்னால் நின்றாள். பின் ஒளியில் அம்மா கோயிலுக்குள் தெரியும் யட்சி சிலை மாதிரி இருந்தாள்.

சமநிலையுடன் இருந்தது துணைக்குவந்து தங்கியிருந்த பங்கஜாட்சி மாமிதான்.‘ என்ன இது? அவனை உள்ள கூப்பிடுடேய் உள்ளவாடேய் ராஜா போதும்..நிப்பாட்டுடேய் உள்ள வா..விசாலம் நீ கஞ்சியோ சோறோ இருக்காண்ணு பாரு..ராத்திரி கொஞ்சம் சோறிலே வெள்ளம் விட்டு வச்சேன்..ஒரு சம்மந்தி அரைக்கேன்’

கஞ்சி குடிக்கும்போது என்னைச்சுற்றி அம்மாவும் தங்கையும் இருந்தார்கள். அண்ணா மூச்சுவாங்க நின்றுவிட்டு சட்டென்று திரும்பி அறைக்குள் சென்றுவிட்டார். ஆவேசத்துடன் கஞ்சியைக் குடித்தேன். அம்மா அதைக்கண்டு சட்டென்று ‘எனக்க மக்களே’ என்று விம்மிவிட்டாள்.

அப்பாவை ஆஸ்பத்திரியில் வைத்திருந்தார்கள். மீண்டும் ரத்த அழுத்தம். ‘பாதிசெத்தாச்சு மக்களே..நீ இன்னும் ஒரு மாசம் வரல்லேண்ணா ஆளை பாத்திருக்க மாட்டே’ . தங்கையைப்பார்த்தேன். அவளும் அழுதுகொண்டிருந்தாள்

‘மூத்தவன் நீ போனதிலே இருந்து மனுஷனா இல்ல பாத்துக்கோ. எப்பமும் கிறுக்கன மாதிரி இருக்கான்’

அன்று தூங்கமுடியாதென்றுதான் நினைத்திருந்தேன். ஆனால் சாப்பிட்டு முடித்ததுமே படுத்து உடனே தூங்கிவிட்டேன். காலையில் எழுந்தபோது என்னை சுற்றி அம்மாவும் தங்கையும் மண்ணெண்ணை விளக்கு எரிய அப்படியே அமர்ந்திருப்பதையும் அப்பால் பங்கஜாட்சி மாமி தூங்கிக்கொண்டிருப்பதையும் கண்டேன்.அம்மா பெருமூச்சுவிட்டு ‘டீ குடிக்கிறியாடா மக்களே?’ என்றாள்

எங்கே சென்றிருந்தேன், எப்படி வாழ்ந்தேன் எதையும் என் வீட்டில் எவருமே கேட்கவில்லை. குலசேகரம் போவதற்காக நின்றிருந்தபோது தங்கையன் மெம்பர்தான் அருகே வந்து ‘வந்தாச்சா? என்னவாக்கும் டிரிப்பு? பாம்பே உண்டுமா?’ என்றார்

'என்னத்த டிரிப்பு? இங்கிண குண்டிநிக்காம போற பயக்கள்லாம் செய்யுகது ஒண்ணுதான்-டேபிள்கிளீன்!' என்றான் சவரக்கடை கண்ணன்.

தலைகுனிந்து பேசாமல் நின்றிருந்தேன். குலசேகரம் செல்லும்போது சன்னலோர இருக்கை கிடைத்தது. மார்பு படபடவென்று அடித்துக்கொண்டே இருந்தது. அப்பா கண்டிப்பாக ஒன்றும் சொல்லப்போவதில்லை. திரும்பிப்பார்த்தாலே அதிகம்.

அப்பாவின் முகமே என் மனதில் எழவில்லை. நான் அவர் முகத்தைப்பார்த்ததைவிட உடம்பைப்பார்த்ததே அதிகம். நரைத்த மயிர்மண்டியமார்பு. கனத்த கைகள் முடிநிறைந்து இருப்பதனால்தான் அவருக்கு கரடி என்றே பெயர். அவர் சிறுவயதில் என்னை சிலசமயம் அடித்திருக்கிறார். அடிக்கவரும்போது அவரிடம் எழும் அந்த மூர்க்கத்தைக் கண்டு நான் மனம்செயலிழந்து நின்றுவிடுவேன்.

அப்பாவின் கைகள் கொலைகாரனின் கைகள்.அவர் கொல்லக்கூடியவர் என்று எனக்கு உள்ளூரத்தெரியும். கொல்லநேரவில்லை என்றால் அது விதியால் மட்டுமே. கொலைத்தொழிலில் திளைத்திருந்த ஒரு வம்சத்தின் கடைசிக்கண்ணி அவர். என்றும் ரத்தக்கவிச்சி மாறாத குடும்பம். அப்பாவின் பெரியமாமா ஒருவர் ஒரு தேங்காய் எண்ணிக்கையில் குறைகிறது என்பதற்காகக் கோபம் கொண்டு அரிவாளால் மருமகனைச் சீவி எறிந்திருக்கிறார்

ஆனால் மறுநாள் என் நினைவில் நீடிப்பது அப்பாவின் கைகளின் தொடுகை மட்டுமே. காய்த்த கனத்த கரங்களின் உறுதி. அவர் என்னைத் தொட்டது மிகக்குறைவு. தொட்ட தருணங்கள் ஒன்றுகூட என் நினைவிலிருந்து அழியவில்லை. காய்ச்சலின்போது. கையில் வாதம் வந்தபோது சிகிழ்ச்சை செய்தபோது. ஒருமுறை ஆடும் தென்னைமரத்தடிப்பாலத்தில் ஒரு கணம் என் மனம் நடுங்க கால்கள் நிலைபதறின. பின்னால் வந்துகொண்டிருந்த அப்பா அவரது கையை என் தோளில் வைத்தார். கால்கள் நிலைகொண்டதும் எடுத்துவிட்டார். நெடுநாட்கள் அந்த கைவெம்மை அங்கேயே இருந்தது

அப்பா நோயாளிகள் நிறைந்த வார்டில் தனிமையாகப்படுத்திருந்தார். சுற்றிலும் இருப்பவர்களிடமிருந்து வெகுவாக விலகி. ஜன்னல் வழியாக எதைப்பார்க்கிறார் என்று தெரியவில்லை. அண்ணா இரவே கிளம்பி நடந்தே குலசேகரம் சென்று அவரை எழுப்பி நான் திரும்பி வந்ததைச் சொல்லிவிட்டிருந்தார். நாங்கள் வரும் ஓசை கேட்டதும் திரும்பிப்பார்த்தார்

அசைவிழந்து நின்றேன். அப்பாவின் கண்கள் பழுத்திருந்தன. முகம் வெளிறி, மூக்குக்குச் சுற்றும் ஆழமான கோடுகள் விழுது, கண்களின் அடித்தோல் கருகி வேறு எவரோ போலிருந்தார். முள்ளம்பன்றி முடிபோல கருமையும் வெள்ளையும் கலந்த ஒருவாரத்தாடி. மார்பு மெலிந்திருக்க நரம்பு வேர்கள் புடைத்த கைகள் கூட்டி வைக்கப்பட்டிருந்தன

அப்பாவின் தலை மெதுவாக நடுங்கியது. கழுத்துச்சதைகள் இழுத்துக்கொண்டன. உதட்டை கடித்தபின் பார்வையை விலக்கிக் கொண்டார். அம்மாவிடம் என்னை கண் காட்டி 'சாப்பிட்டானா?' என்றார்

'ம்' என்றாள்

நின்றுகொண்டே இருந்தேன். ஆனால் அப்பா கண்களை மூடிக்கொண்டுவிட்டார்.

மாலையிலேயே அப்பாவைக் கூட்டிச்சென்றோம். காருக்கு அவரே நடந்து சென்றார்.பாத்திரங்கள் இருந்த பையை எடுத்துக்கொண்டேன். அப்பா காரில் ஏறும்போது அவரது கை என் தோளில் படிந்தது. திடுக்கிட்டு அவர் முகத்தைப்பார்த்தேன். அவர் வேறு எதையோ பார்த்தார். உள்ளே அமர்ந்ததும் கை விலகியது. முன்னிருக்கையில் ஏறிக்கொண்டேன்.

என் மனதுக்குள் உக்கிரமான கூச்சலுடன் கண்ணீருடன் நாடகக் காட்சிகள் ஓடின. அவர் காலில் விழுவதுபோல. இனி ஒருகணமும் அவரைவிட்டுப்பிரிவதில்லை என்பதுபோல. ஆனால் வெளியே வெறுமே பார்த்துக்கொண்டிருந்தேன். எவருமே பேசவில்லை. வீட்டுக்குச் சென்றதும் அப்பா இறங்கி நேராக தொழுவத்துக்குச் சென்று சிவப்பியையும் கருப்பியையும் தடவிக்கொடுக்க ஆரம்பித்தார்

இரண்டே நாட்களில் எல்லாம் சாதாரணமாகிவிட்டது. என்றென்றும் நான் அங்கேயே இருந்துகொண்டிருப்பவனைப்போல, இனி எப்போதும் இருந்துகொண்டிருக்கப்போகிறவனைப்போல. வெயில் வெறித்த மதியங்களில் கோயில் வாசல் கல்படிகளில் அமர்ந்து மடியில் ஒரு புத்தகத்துடன் ஆற்றையே வெறித்துக்கொண்டிருந்தேன். மணலை அள்ளி சருகுகள் மீது பெய்யும் காற்றின் சீறல் ஒலி. நீரின் நீலநிற அலைகள் மேல் எழுந்து எழுந்து அமரும் கொக்குகள்.

'என்ன பிரச்சினை உனக்கு?' என்றார் சித்தப்பா 'நீ டிகிரிய எழுதினா என்ன? அரியர்ஸ் ரெண்டு இருக்கு. ஒரு செமஸ்டர், எல்லாமா சேத்து மார்ச்சில எழுதிரலாமே'

‘ம்’

‘ஒரு டிகிரி இந்தக்காலத்திலே லேசுபட்ட விஷயம் இல்ல. அது இருந்தா என்ன பிரயோசனம்னு தெரியல்ல-இல்லேன்னா அதுக்க குறவு ரொம்ப பெரிசாக்கும்’

‘ம்’

‘நீ என்ன நினைக்கிறே சொல்லு’

பெருமூச்சுடன் ‘ஒண்ணுமில்ல’ என்றேன்

‘இங்க இருக்கபிடிக்கலியா?’

என்னை விட மிகச்சிறிய சட்டை போலிருந்தது வீடு. ஆனால் அதை எப்படி அவரிடம் சொல்வது என்று தெரியவில்லை

‘வேணுமானா நீ நாகர்கோயிலிலே நம்ம கோவாலகிருஷ்ணன் வீட்டிலே போயி நில்லு. அவ உனக்க அக்காதானே? அங்க நின்னு பரீட்சை எழுது’

‘ம்’

‘பொறப்பட்டு போறது எளுப்பம்-போனவன் ஒருநாளும் திரும்பி வந்து அமைய முடியாது’ என்றார் சித்தப்பா. ‘-உனக்க அப்பா நான் ஒம்பதில படிக்கிறப்ப ஒருநாள் எனக்க ஸ்கூலுக்கு வந்தாரு- அப்ப இங்கிலீஷ் டியூஷனெல்லாம் இல்லாம ஆயிட்டுது. வேலை இல்லை. கொஞ்சநாள் என்னென்னமோ செஞ்சு ஒப்பேத்தினாருஎனக்கு ஆளுவந்து சொன்னாங்க, ஆரோ தேடிவந்திருக்காருன்னு. வந்து பாத்தா அண்ணா. மாமரத்தடியிலே நின்னுட்டிருக்காருபழைய கம்பீரம் ஒண்ணும் இல்ல. பக்கத்திலே போனேன். ‘என்னண்ணா?’ ன்னு கேட்டேன். என்னை திரும்பியே பாக்கல்ல. தலைகுனிஞ்சு கொஞ்சநேரம் நின்னுட்டு மெதுவா ‘உனக்க அம்மைக்கிட்ட நான் கேட்டேன்னு ஒரு விஷயத்த போயி சொல்லு’ன்னு சொன்னாரு’

பேசாமல் பார்த்து நின்றேன்

‘அவருக்க முகம் மட்டுமில்ல உடம்பே சிவந்து போயிருக்கதா தோணிச்சு.’இப்பம் கொஞ்சம் கஷ்டமாக்கும். வேலைக்கு அப்ளை பண்ணி ஒண்ணும் செரியாகல்லஒரு ஆறுமாசம் எனக்கு வீட்டிலே சோறு த்ரமுடியுமான்னு கேட்டுச் சொல்லு’ன்னு சொன்னாரு. எனக்கு என்ன சொல்லுகதுண்ணே தெரியல்ல. ‘செரிண்ணா’ன்னு சொன்னேன். சாயங்காலம் அம்மைக்கிட்ட சொன்னப்ப ‘இது அவனுக்க வீடு. அவனுக்க சோறு’ண்ணு மட்டும் சொன்னாங்க’

‘வந்து சாப்பிட்டாரா?’

‘வீட்டுக்கு வரல்லை-கோயிலுக்குப்பக்கத்தில உள்ள மடத்தில கொண்டுபோயி குடுக்கச் சொன்னாரு. கொண்டுபோனேன். தட்ட வச்சு சோறு விளம்பினேன். சோறில கைய வைக்கல்ல-அப்டியே பாத்திட்டிருந்தார். பிறகு கைய உதறிட்டு எந்திரிச்சு போய்ட்டாரு-சாப்பிடவேயில்ல’

‘பிறவு?’

‘பிறவு அவரு மதுரைக்குப் போனதா கேள்விப்பட்டேன். மதுரையிலே ரேஷன்கடையிலே வேலைபாக்கிறப்பதான் சர்க்கார்வேலை கிடைச்சுது’

பேச்சிப்பாறை பேருந்து சிவப்பாக மரங்களிடையே தோன்றியது ‘நான் வாறேண்டே-நாளைக்கே போறேன்-இவ இங்கதான் இருப்பா. பிள்ளைக்கு நாப்பத்தெட்டு முடிஞ்சா வந்தாப்போருமுன்னு சொன்னேன்-வரட்டா?’ என் பையில் ஐந்து ரூபாய்த்தாளை வைத்துவிட்டு ஏறிக்கொண்டார்

அதற்குமேல் பதினாறுநாட்கள்தான் வீட்டில் இருந்தேன். ஒருநாள் வழக்கம்போல சொல்லாமல் கிளம்பி நாகர்கோயில் சென்று அக்காவுடன் கொஞ்சநாள் இருந்தேன். பெங்களூர் சென்று அக்காவின் தம்பியின் லாரி கடையில் கொஞ்சநாள் வேலைபார்த்தேன்.பெங்களூர் சென்றேன். மீண்டும் அக்காவீட்டுக்கே வந்தேன். அதன்பின் ஒருநாள் மீண்டும் கிளம்பிவிட்டேன். இம்முறை காவியுடை அணிந்த துறவியாக.

பதினொரு மாதம் கழித்து காவியைக் கழற்றிவிட்டு காசர்கோட்டில் தொலைபேசித்துறையில் வேலைக்குச் சேர்ந்தேன். அதன்பின்னும் நிலையின்றி அலைந்துகொண்டேதான் இருந்தேன்

மூன்றாம்முறை கிளம்பியபோது உள்ளூரத் தெரிந்திருந்தது, மீண்டும் அந்த வீட்டுக்குப்பிள்ளையாக திரும்பி வரமாட்டேன் என்று. அதன்பின் மூன்று முறைதான் வீட்டுக்கு வந்தேன். வேலைகிடைத்தபின் அதைச் சொல்லி சாமான்களை கொண்டு செல்வதற்காக ஒருமுறை. அம்மா இறந்தபின் ஒருமுறை. அப்பா இறந்தபின் கடைசியாக. மூன்றுமுறையும் இரவு தங்கவில்லை.

அப்பாவின் சிதைமுடல் சடங்குக்குப்பின் அன்றே காசர்கோட்டுக்கு கிளம்பியபோது கோயில்முக்குச் சாலையில் நின்று வீட்டை திரும்பிப்பார்த்தேன். தெள்ளத்தெளிவாகத் தெரிந்தது, அந்த வீடு எப்போதைக்குமாக என்னிடமிருந்து விலகிச்சென்றுவிட்டதென்று. அதை அப்பாவும் உணர்ந்திருந்தார் என்று நினைத்துக்கொண்டேன். கடைசியாக நான் கிளம்பிச்சென்றபோது அவர் கவலைப்படவேயில்லை

[புறப்பாடு முற்றும்]

---

## புறப்பாடு – கடிதங்கள் 1

அன்பு ஜெயமோகன்,
இற்றைவரை வெளிவந்த "புறப்பாடுகள்" அனைத்தையும் (உ.வே.சா. அவர்களின் மொழியில்) "மாந்தி" மகிழ்கிறேன். உங்கள் பட்டறிவும், நூலறிவும், மொழியறிவும், கலையழகும் வியக்கத்தக்கவை. புறவய நோக்கிற்கும், நேரிய வார்ப்புக்கும், எளிதச்சுவைக்கும் உங்கள் "புறப்பாடுகள்" தலைசிறந்த எடுத்துக்காட்டுகள். குறிப்பாக "தோன்றல்," "சண்டாளிகை," "காற்றில் நடப்பவர்கள்" போன்றவற்றில் ஏனைய சிறப்புகளுடன் எளிதச்சுவை மேலோங்கியுள்ளது. தொடரட்டும் உங்கள் "புறப்பாடுகள்!".

மணி வேலுப்பிள்ளை
–
அன்புள்ள ஜெ,

புறப்பாடு I ஒரு சுவாரசியமான அனுபவத்தொடராக இருந்தது. அனுபவங்களில் தன்னிச்சையாகக் கூடிவரும் ஆழமும் காணப்பட்டது. அதிலும் இரண்டு கட்டுரைகள் நுட்பமானவை. ஒன்று, கோயில்கொண்டிருப்பது. அதில் இந்துபூசாரியும் கிறித்தவப்பூசாரியும் பேசிக்கொள்ளும் அந்த சுபாவமான தன்மை மிக நுட்பமான இடம். அதேபோல கருத்தீண்டல். அந்தக்கதையில் ஒருவரின் கனவுக்குள் இன்னொருவர் கைநீட்டி தொடுவது அற்புதமான இடம்.

அந்த இரு இடங்களின் நுட்பமான தளம் புறப்பாடு II முழுக்கவே இருந்துகொண்டிருந்தது. இரண்டாம்பகுதிக்கதைகளில் உதிரி அனுபவங்களை தொகுக்கக்கூடிய உள்ளோட்டம் வெளியே தெரியாமலேயே ஓடுவதுதான் அதன் சிறப்பு என்று தோன்றியது. 'எண்ணப்பெருகுவது' தனிமையின் காத்திருப்புதான் என்று தெரிந்த பின்புதான் சட்டென்று ஒருவர் எழுந்து ஏன் தற்கொலை செய்துகொண்டார் என்பதே தெரியும். அதுவும் கூட காத்திருப்புதான். கதையின் தொடக்கத்தில் சாப்பிடுவதற்குக் காத்திருந்த அதே வரிசையில் காத்திருக்கிறார்கள்.

ரணம் அச்சகத்தில் நடக்கிற கதையில் வழிதவறிப்போகிற அந்தப்பெண் ஏன் கதையில் ஒருபெண் காதலனை நினைக்கும்போது அப்படி எதிர்க்கிறாள் என்ற கேள்விதான் எனக்கு முக்கியமானதாகத் தோன்றியது. 'கற்புடன்' இருப்பவள் வழிதவறுவதைப்பற்றியே நினைத்துக்கொண்டிருக்கிறாள். மற்றவள் இப்படி இருக்க விரும்புகிறாளா என்று நினைத்துக்கொண்டேன். அதில் பெண்களுடைய அந்தரங்கமான பேச்சுலகை எழுதியிருந்தீர்கள். தமிழிலே அனேகமாக இதுதான் முதல்முறை என்று நினைக்கிறேன்.

எல்லா கட்டுரை-கதைகளைப்பற்றியும் நிறையவே சொல்லலாம். வாழ்த்துக்கள்.
செம்மணி அருணாச்சலம்

---

## புறப்பாடு – கடிதங்கள் 2

புறப்பாடு முற்றிற்று என்றாலும் இறுதிப் பகுதி கனம் மிக்கது. எடை எந்த நிமிர்வையும் கூனச் செய்துவிடும். அனைத்து பகுதிகளையும் படித்த பின் இறுதிப் பகுதியை கண்ணீர் சிந்தாமல் படிப்பது ஒரு சவால். அலைகழிப்பு மிக்கது என்றாலும் புறப்பாடு III என ஒன்று வருமா என அந்த ரணத்திற்காகவும் வதைக்காகவும் காத்திருக்கிறேன்.

கிருஷ்ணன்.

கிருஷ்ணன்,

புறப்பாடு என்ற தலைப்பில் இனிமேல் கட்டுரைகள் இல்லை. வீடுதுறந்து வெளியே செல்லுதல் என்றே புறப்பாடு என்ற சொல்லை உத்தேசித்தேன். அது முழுமையடைந்துவிட்டது.

மூன்றாம் முறை சென்றது துறவியாக. அந்த அனுபவங்களில் மிகச்சிலவே புறவயமானவை. தியானம் யோகம் பயின்றது, தவறாகசெய்தது, மீண்டும் யோகத்தின் தவறுகளில் சிக்கி மூளைச்சிக்கல் வரை சென்று மீண்டது, நூற்றுக்கணக்கான போலிகள் நடுவே உண்மையான ஒளிமிக்க வைரங்களைக் கண்டது, இமையமலை, கங்கைக்கரை, திருவண்ணாமலை என மகத்தான அனுபவங்களின் ஒளியும் அதைச்சூழ்ந்திருந்த இருளும்ஸ.

அது வேறு ஒரு அனுபவமண்டலம். இதில் வராது. எழுதலாம். எழுதாமலே போகலாம்.

ஜெ

Dear Jeyamohan Sir,

How are you doing?

This is Sajeev writing from the US. (Originally from Thuckalay).

I started reading your Purappadu-II series on your blog. Wow! It is just amazing. I am sure these experiences made you the powerful and expressive writer you are!.

You write about your experiences and the thought processes in such vivid details. I am curious about one thing. When you use various metaphors to describe certain past life events, were those really thoughts that ran through your mind while experiencing those events, or are those thoughts that comes to your mind now (as you sit to write and think about those past events)?

It seems like you could witness your own mind and its thoughts even while you were going through such distressing experiences.

Thanks for your time!

Regards,
Sajeev Nair

அன்புள்ள சஜீவ்

உண்மையில் இதை எழுத ஆரம்பித்தது ஒரு தற்செயல். ஒரு நண்பனைப்பற்றி அஜிதனிடம் சொன்னேன். அவனுக்காக அந்த நினைவை எடுத்தேன். அன்றே எழுத ஆரம்பித்தேன். இந்தத் தொடரே அவனுக்காக எழுதப்பட்டது எனலாம். அவன் அந்த வயதில் இன்று இருக்கிறான்.

அனுபவங்களை காலவரிசைப்படி சொல்லமுடியாது. சொன்னால் அதில் இருப்பது புறவயமான காலம். கடிகாரக்காலம். அது அர்த்தமற்றது. அகவயமான காலத்தில் அனுபவங்கள் எப்படி சுருட்டி வைக்கப்பட்டிருக்கின்றன என்பதே முக்கியமானது.

அதை வெளியே எடுக்க ஒரே வழி மிகவலுவான மையச்சரடு ஒன்றை தொட்டு இழுப்பதே. அது இழுத்துவரும் அனுபவங்களே அகக்காலத்தின் வரிசையை அமைத்துவிடுகின்றன. நான் ஏதாவது ஒரு நினைவை கைபோன போக்கில் எழுத ஆரம்பிப்பேன். அந்த அனுபவத்தின் சாரமாக ஓடும் சரடு என ஒன்று தென்படும். அது எந்தெந்த விஷயங்களைக் கொண்டுவருகிறதோ அதை எழுதிச் செல்வேன். அதன் வழியாக அப்போது, அதாவது எழுதும் கணத்தில், ஒரு மெய்மையை அடைந்ததும் முடிப்பேன்.

உதாரணமாக நாணப்பண்ணனின் கடைக்குமுன் காத்திருப்பதை எழுதியதுமே மும்பையில் எல்லாருமே காத்திருப்பதாகத் தெரிய ஆரம்பித்தது. எழுதிக்கொண்டிருக்கும்போதே ரயில்நிலையத்தில் பார்த்த அந்த தற்கொலை, அதைக்கண்டு என்னைத் திரும்பிப்பார்த்தவனின் கண்கள் நினைவில் வந்தன. சாப்பாட்டுக்குக் காத்திருப்பது போல அல்லவா மரணத்துக்கும் காத்திருந்தார்கள் என்று தோன்றியதும் கதை முடிந்துவிட்டது.

அவன் ஏன் சட்டென்று எழுந்து தற்கொலை செய்துகொண்டான் என நானே இதுவரை யோசித்துக்கொண்டிருக்கிறேன். காத்திருப்பின் சுமை முதுகை முறித்த ஒரு கணம் என தோன்றியது. காத்திருந்ததே மரணத்தைத்தானோ என இன்னொரு முறை.

ஜெ

---

## புறப்பாடு – கடிதங்கள் 3

அன்புள்ள ஜெயமோகன்,

புறப்பாடு தொடர் படித்து வருகிறேன்.

எத்தனையோ வாழ்வியல் அனுபவங்களை படித்தும் கேட்டதுமுண்டு.

இந்தப் பதிவுகள் பலருக்கு பல விதத்திலும் ஒரு சிகரமாக இருக்கப் போகின்றன.

முழுதும் முடிந்த பின்னர் ஒரு மிக நீண்ட உணர்வுக்குறிப்பு எழுத திட்டம்.

ஆனால் முதலில் சொல்ல வேண்டுவது முதலில்.

ஐம்பது வயதின் அனுபவங்களோடு முப்பது நாற்பது வருடங்கள் பின்னோக்கிப் பார்த்து எழுதும்போது, இயற்கையாக நிகழ்ந்து விடக்கூடிய, இப்போதைய அறிவும் அனுபவமும் தற்குறிப்பாக நிகழ்வுகளை ஆராயும் எந்த சாத்தியங்களும் தென்படா வண்ணம், அந்த வயதுக்கே உரிய அறியாமையும், அலைக்கழிப்பும், உணர்ச்சிகளும் மிக எழுதுகிறீர்கள். இது ஒரு அரிய எழுத்து சாதனையென எண்ணுகிறேன்.

பற்பல சம்பவங்களில் என்னை நான் கண்டதுபோல் உங்கள் வாசக நண்பர்கள் அனைவரும் தங்களைக் காண்பார்கள்.

பதற்றமுடன் ஒவ்வொரு நாளின் விடிகைக்கும் காத்திருக்கும்,

சரவணன்
சிங்கப்பூர்

ஜெ,

புறப்பாடு வாசித்து முடித்ததும் இருத்தல் என்பது அலைந்துகொண்டிருக்கும்போது மட்டும்தான் தெரியவருமோ என்ற எண்ணம் ஏற்பட்டது. ஒவ்வொரு கதையும் ஒவ்வொரு வாசலைத் திறந்தன. சாதாரணமாகத் தெரிந்த காற்றில் நடப்பவர்கள் கூட யோசிக்கும்போது ஆழமான அர்த்தங்களைத் தந்தது. கலைஞனின் மனம் நாடோடிகளை அடையாளம் காண்கிறது. கண்ணாடிக்கு அப்பால் அவர்கள் இருக்கிறார்கள். ஆனால் காண்பவன் கலைஞன் மட்டுமே. காலை பத்துமணிக்கு ரேடியோ கேட்டுக்கொண்டு சும்மா கிடக்கும் நரிக்குறவர் ஒரு பெரிய படிமம் ஜெ. அவர் அப்படி இருப்பதனால்தான் அவரால் பொய்சாட்சி சொல்லமுடியவில்லை. அவர் ஜெயிக்க ஒன்றும் சாம்ராஜ்யங்கள் இல்லை. கடவுளிடம் அவர் பேரம்பேசவேண்டியதில்லை. கண்ணாடிக்கு இந்தப்பக்கம் நின்று அவரைப்பார்த்து ஏங்குகிறான் கலைஞன் இல்லையா?

புரமும் அபாரமான கட்டுரை. புரம் என்றால் அது வானில் உள்ள நகரம். ஆனால் இங்கே பாதாளத்தில் இருக்கிறது. கட்டுரை முழுக்க எல்லாமே எக்ஸிஸ்டென்ஷியலிச படிமங்கள். abyss , labyrinth என்று வந்துகொண்டே இருக்கின்றன. மரணமும் தூக்கமும் மாறி மாறி நிறைந்துள்ளன. ஆனால் கடைசிவரி எல்லா எக்ஸிஸ்டென்ஷியலிச கருப்புப்பார்வையையும் தாண்டி ஒளியைப் பார்த்துவிடுகிறது. அது நீங்கள் இன்று பார்க்கும் பார்வை என்று நினைத்துக்கொண்டேன்.

எல்லா கட்டுரை/கதைகளைப்பற்றியும் சொல்லிக்கொண்டே போகலாம்.

சண்முகம்

---

## புறப்பாடு – கடிதங்கள் 4

ஜெயமோகன்,

புறப்பாடு இரு பகுதிகளும் ஒன்றையொன்று நிறைத்துக்கொண்டன. புறப்பாடு II கொஞ்சம் எளிமையானதாகவும் நேரடியானதாகவும் இருந்தது. அதிலுள்ள அனுபவங்கள் எனக்கும் கொஞ்சம் கொஞ்சம் உண்டு. நஸ்டால்ஜியா பிடிக்கக்கூடியவர்களுக்கு ரொம்பவே பிடிக்கும். புறப்பாடு II அபூர்வமான அனுபவங்கள். நானும் உங்கள் வயதை ஒட்டியவன் என்பதனால் எழுபது எண்பதுகளில் தமிழகத்தில் இருந்த பஞ்சகாலத்தைப்பற்றியும் பஞ்சம்பிழைக்க தமிழர்கள் கூட்டம் கூட்டமாக போய் அவமானப்பட்டதைப்பற்றியும் தெரியும். நான் ராணுவத்திலே இருந்தபோது லடாக்கில்கூட சாலை தமிழர்கள்தான் போடுகிறார்கள் என்பதைக் கண்டிருக்கிறேன். லோனாவாலாவிலேயே தமிழர்கள் வேலைசெய்வதை கண்டிருக்கிறேன். இவர்கள் ஏன் தமிழ்நாட்டிலேயே வேலைபார்க்கக் கூடாது, ஏன் இங்கே வந்து மானத்தை வாங்குகிறார்கள் என்றுதான் அன்றெல்லாம் நினைப்பேன்.

அந்த வாழ்க்கை வழியாக நீங்கள் கடந்துசென்ற அனுபவங்கள் எல்லாம் அருமையாக உள்ளன. எதையும் மறைக்காமல் எழுதியிருக்கிறீர்கள். கோழைத்தனமும் தப்பித்துக்கொள்வதும் அந்த வயதுக்கு உரியவைதானே. ஹீரோயிசமெல்லாம் கதைகளிலேதான். அல்லது அப்படியெல்லாம் ஹீரோவாக இருப்பவர்கள் பகத் சிங் மாதிரி பிறகு பெரிய ஹீரோவாக அறியவருவார்கள். நீங்கள் எல்லாவற்றையும் சாட்சியாகப் பார்த்துக்கொண்டிருக்கக்கூடிய எழுத்தாளராக இருந்திருக்கிறீர்கள்.

குமார் முருகேசன்

---

## புறப்பாடு-கடிதங்கள் 5

ஆசிரியருக்கு ,

ஓட்டப்பந்தயத்தில் வெடி சத்தத்திற்கு முன்னால் உள்ள கணங்களும் , நீச்சலில் குதிப்பதற்கு முன்னால் உள்ள கணங்களும் சில வினாடிகள் தான் என்றாலும் , நாம் எண்ணுவதைவிட முக்கியமானவை, போட்டியில் நமது இடத்தையே தீர்மானிப்பவை . இக்கணத்தில் செய்ய வேண்டியவை குறித்து பயிற்சியும் திட்டமிடலும் பெரும் பங்கு

வகிக்கும் , அக் கணங்களில் நமது மன நாடகமும் உச்சகட்டமானவை. பல முறை அடையாள வெடி சுடுவதற்கு முன்பே சில வீரர்கள் ஓடத் துவங்குவதையும், எச்சரிக்கப் பட்டு மீண்டும் போட்டி துவக்கப் படுவதையும் நாம் பார்த்திருக்கிறோம். துவக்க கணங்கள் அவ்வளவு எடை கூடியது. எய்யக் காத்திருக்கும் நாண் அது, எய்த பின் கேட்கும் விசையொலி எய்பவனுக்கு முன்பே கேட்கும்.

புறப்பாடும் அவ்வாறே , நாட்கள் சில தான் (நான்கு மாதங்கள்) என்றாலும் அவ்வயதில், அந்நாட்கள் சூடேறியவை , ஒரு ஆயுள் அனுபவம் சில மாதங்களில் வாய்க்கப் பெறும். புறப்படும் முன்பே புறப்பட்ட பின் உள்ள வாழ்வையும் சாவையும் நாம் மனதில் முழுமையாக ஒரு வாழ்வு வாழ்ந்திருப்போம். நம்மில் வெளியேற உத்தேசிக்காதவர்களோ, தற்கொலைத் திட்டம் இடாதவர்களோ, அதன் பிறகான உலகத்தை கற்பனை செய்யாதவர்களோ அனேகமாக இல்லை எனலாம்.

இந்த நான்கு மாதங்களுக்குள் எவ்வளவு நிலங்கள்- மலை ,வனம் , சாக்கடை , தேரிக்காடு என . எவ்வவளவு மனிதர்கள் – விடுதி நண்பர்கள், தோழர் , கையீரம் தாய், பசு, பன்றிகள் என . எவ்வளவு அனுபவம் – கட்டிடப் வேலை ,எழுத்து , திரை அரங்கு,கல்லூரி , நாகமணி துரத்தப் படுத்தல் என.

எல்லாவற்றிற்கும் மேல் என்னவொரு தரிசனம் -( 'எனக்கு என்ன தோணுது தெரியுமா? அவனையும் உம்மையும் கர்த்தருக்கு ஒரேமாதிரித்தான் பிடிக்கும்'- கோயில் கொண்டிருப்பது)

இதில் உள்ள கனவும் -

('எனக்கு வெள்ளத்தில முங்கிப்போற மாதிரி இருந்தது. சூடான வெள்ளம். மூக்கும் வாயும் எல்லாம் வெள்ளம் கேறிப்போச்சு. அப்பமாக்கும் கைய நீட்டி உனக்க காலைப் பிடிச்சேன்ஸ தலைக்குமேலே நீங்க ரெண்டாளும் நீந்தி போனிய.'

'ரெண்டாளும்னா? ஆரு?'

ஜான் குழம்பி அவன் சொன்னதை அவனே கவனித்து என்னைப்பார்த்தான். பின் பார்வையைத் திருப்பி. 'நீயும் மேரியும்' என்றான்- கருந்தீண்டல் )

அசலும்- ("மொத்த நகரையும் பின்பக்கம் நின்று பார்த்துக்கொண்டிருந்தேன். நூற்றுக்கணக்காக வீடுகளின் பின்பகுதிகள். கதவோ சன்னலோ அற்ற சிமிண்ட் பரப்புகள். செங்கல்பரப்புகள். ஓலைத்தட்டிப்பரப்புகள். எல்லா வீடுகளும் அப்பகுதியை அருவருத்து திரும்பிக்கொண்டவை போலிருந்தன. வீடுகளின் அந்தரங்கக் கழிவுறுப்புகள் போல ஓட்டைகள் திறந்திருந்தன"- துறக்கம்)

வாசிப்பவனுக்கு ஒரு நிகர் வாழ்வைத் தருவது உறுதி . துறக்கம் படிக்கும் போது என் மீதே சேரும் சகதியும் அப்பிக் கொண்டன. எப்போது தான் எனக்கு குளிக்க சந்தர்பம் கிடைக்கும் என அடுத்த வரி அடுத்த வரியாகப் பாய்ந்து கொண்டிருந்தேன் , ஒரு கிழவி ஒரு குளத்தை அடையாளமாகச் சொல்லும் போது சற்று ஆசுவாசப் பட்டேன், அச்ச உணர்வை விட அருவருப்பு மேலோங்கியது, என்றாலும் குளிக்காமல் அப்பகுதியை விட்டது ஏமாற்றமளித்தது.

இத்தொடரில் நேரடியான பட்டென மிளிரும் வரிகள் , வாக்கியங்கள் இல்லை , ஆனால் ஓடும் தெளிந்த நீரோடையில் வெட்டியெடுக்கப் படாத பட்டை தீட்டப் படாத பளபளக்கும் வைரம் மௌனமாக ஒளிர்கிறது.

புறப்பாடு (I) – ஆயத்தம் பயணத்தை விடப் பெரிது.

-கிருஷ்ணன்

8

அன்புள்ள ஜெயமோகன் அவர்களுக்கு

அறம் வரிசை கதைகள்
விஷ்ணுபுரம்
புறப்பாடு

இவை மூன்றும் என்னை தூக்கி வேறு உலகுக்கு செலுத்தியது போல வேறு எந்த எழுத்தும் ஆட்கொண்டதில்லை.

புறப்பாடு முதல் தொகுப்பில் வரும் என்று நான் நினைத்த பகுதியை நேற்று தான் படிக்க நேர்ந்தது. (லிங்கம்) மிகவும் சிறப்பாக இருந்தது.

இந்த மூன்றில் புறப்பாடு தான் மிகப்பெரிய தாக்கத்தை என்னுள் ஏற்படுத்துகிறது. புறப்பாடு அதன் நேரடித் தன்மையினால் பட்டவர்த்தனமாக என்னுள் அறைகிறது.

இன்னும் இது குறித்து நிறைய எழுதலாம். ஆனால் உள்ளே ஏற்படும் அனுபவத்தை சொற்களால் வடிக்க முடியவில்லை; வடித்தால் அது சாதாரணமாக ஆவதால் அந்த அனுபவத்தை ஒரு விதத்தில் கொச்சைப்படுத்துவது போல

தோன்றுகிறது.

மேலும் உங்களை இந்த மாதிரி ஈமெயில் வாயிலாக தொந்தரவு செய்யக் கூடாது. நீங்கள் தான் எழுதணும். நான் படிக்கணும். அது தான் ஞாயம். அது தான் நல்லூழ்

ஸ்ரீதர்

88

அன்பின் ஜெ எம்,

தோழனின் மரணம் இளமையில் உங்களை ஆழமாகப்பாதித்ததைப்பலமுறை நீங்கள் குறிப்பிட்டுப்படித்திருக்கிறேன்; அந்தத் தோழனுடன் கொண்ட நட்பையும் அவனது மரணத்தின் தாக்கத்தையும் விவரிக்கும் புறப்பாட்டுப்பதிவுகள்-லிங்கம்,எள்- மயிர்க்கூச்சலிடச்செய்து விட்டன.

உங்கள் இழப்பின் ஆழத்தைஸ, அந்தக்கணத்தில் உங்களுக்குள் நேர்ந்த ஒவ்வொரு நொடியின் வேதனையையும் வெகு துல்லியமாக- மிகவும் கூர்மையான நுணுக்கத்துடன் காட்சிப்படுத்தியிருக்கிறீர்கள்.

அத்தகைய அனுபவங்கள் , பலருக்கும்- ஏன் எல்லோருக்குமே ஒவ்வொரு வகையில் நேர்ந்திருந்தாலும் கூட- அவரவர் இழப்புக்களை அசைபோட்டுப் பயணிக்க முடிகிற வகையில் வாசிப்பவர்களுக்கு அவற்றைக்கடத்த முடிவது உங்கள் எழுத்தால் சாத்தியமாகிறது.

தங்கள் வாழ்வில் இது போல் இழப்பால் பெற்ற அனுபவங்களையெல்லாம் ஒருசேர நினைவுகூர வைத்துக் கலங்கடித்து விடுகிறது புதிய புறப்பாடுஸ

எம் ஏ சுசீலா